

எம்பெருமானார் — ஸ்ரீபெரும்பூதூர்

(தாமுகந்த திருமேனி)



ஸ்ரீ நம்மாழ்வார்

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ப்ரபந்நஜநகூடஸ்தரான

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

திருவாய்மொழி.

மூன்றாம் பத்து

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியரால்

எல்லார்தமக்கும் இன்பம்பயக்குமாறு எளியநடையில் தெளிய எழுதப்பட்ட

திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.

———(o)———

தாதுவருஷ திருவாடிப்பூரம்.

1936.

காஞ்சீ. அண்ணங்கராசாரியர் இயற்றிய நூல்கள்

திருப்பல்லாண்டு உரை
பெரியாழ்வார் திருமொழி உரை
திருப்பாவை உரை
நாச்சியார் திருமொழி உரை
பெருமாள் திருமொழி உரை
திருச்சந்தவிருத்தம் உரை
திருமாலை உரை
திருப்பள்ளியெழுச்சி உரை
அமலனாதிபிரான் உரை
கண்ணி நுண்சிறுத்தாம்பு உரை
பெரிய திருமொழி உரை
திருக்குறுந்தாண்டகம் உரை
திருநெடுந்தாண்டகம் உரை
நான்கு திருவந்தாதிகளின் உரை
திருவிருத்தம் உரை
திருவாசிரியம் உரை
பெரிய திருவந்தாதி உரை
திருவெழுகூற்றிருக்கை உரை
சிறிய திருமடல் உரை
பெரிய திருமடல் உரை
இராமாநுச நூற்றந்தாதி உரை
திருவாய்மொழி உரை
திருவாய்மொழி நூற்றந்தாதி உரை
த்ரமிடோபநிஷத் ஸங்கதி உரை
த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி உரை
த்ரமிடோபநிஷத் ஸாரம் உரை
ஆயிரம் பாசுரங்களுக்கு ஸம்ஸ்க்ருத
ச்லோக-தண்டக-மொழிபெயர்ப்பு
நித்யாநுஸந்தான வுரை.
முகுந்தமாலை வியாக்கியானம்
ஸ்தோத்ர ரத்நம் ஷை
ஸுதர்சந சதகம் ஷை
ஸ்ரீரங்கராஜஸ்தவம் ஷை
வரதராஜஸ்தவம் விரிவுரை
ஸ்ரீஸ்தவம் விரிவுரை
அதிமாநுஷஸ்தவம் விரிவுரை
ஸ்ரீவைகுண்டஸ்தவம் விரிவுரை
ஸுந்தரபாஹுஸ்தவம் விரிவுரை
கத்யத்ரயம் விரிவுரை
ஸ்ரீகுணரத்நகோசம் விரிவுரை
வரவரமுநிசதகம் விரிவுரை
வைராக்யபஞ்சகம் விரிவுரை
தேசிகமங்களம் விரிவுரை
சேஷாவதாரச் சிறப்பு
நமஸ்காரதத்வம்-ஷை விஜயத்வஜம்
ப்ரணவாதிகார தத்வம்
ஸ்தோத்ரவ்யாக்யாந சோதநம்
வாத்ஸல்யார்த்த விவரணம்
சேட்லூரர் மாயமயக்கம்
விதவாவபந வித்வம்ஸநம்
பாதுகா ஸஹஸ்ராவதார தத்வம்
வாத்ஸல்ய விஜயத்வஜம்
பரதுக்கதுக்கித்வ பரமார்த்தரக்ஷா
வ்யாமோஹப்ரசமௌஷதம்
திருப்புட்குழிஸ்வாமி வைபவம்
அத்யமேச்லோகார்த்த தத்வம்
உபதேச ரஸாயனம்-ஷை ஸாரம்
கூரத்தாழ்வான் வைபவம்
அண்ணாவைபவச்சுருக்கம்
ஸத்ஸம்ப்ரதாயப்படி
பகவத் கீதையமுதம்
வாதிபீகரவிஜயம்
ஸத்யநாராயணஸ்த்ரம்
ஸத்யநாராயணஸத்ர ஸத்யப்ரதாபம்
பிழைதிருத்தப் பேரின்பம்
ஸ்ரீவசனபூஷண ஸாரம்
ஆசார்யஹ்ருதய ஸாரம்
திவ்யப்ரபந்த வைபவவிவேக:
உபந்யாஸ ரத்நமாலா
தர்க்க சாஸ்த்ர ஸர்வஸ்வம்
ரஸிக புதரஞ்சனம்
காஞ்சீ ஹஸ்திகிரி வைபவம்
பரிபந்திபஞ்சுபங்கீ
ரக்ஷாவிலோசந ப...காசிகா
யாத்ரா ஸ்தோத்ராம்ருதம்
ஸ்ரீராமாயண தண்டகம்
பிள்ளையந்தாதி உரை
வேதாந்த்யக ஸர்வஸ்வம்
சாஸ்த்ரஜ்ஞாந சாணபலகம்
பரமார்த்த பரித்ராணம்.
அம்ருத லஹரீ
ஜகத்குருஸ்துதி ரத்நம் 6.
ஹயக்ரீவ சதகம், கருடவிம்சதி கோபால
பஞ்சசத் முதலிய ஸ்தோத்ரங்கள் 24.
உபாக்யாந ரத்நமாலா 16.
பாலபோத ரஸாயநம்.
அத்யமே ச்லோகார்த்த தத்வப்ரதிஷ்டா
சாரீரக ஸர்வஸ்வம்.

கிடைக்குமிடம் :—**P. R.** ஆராவமுதய்யங்கார்,
44, நாராயண முதலிவீதி; ஜி. டி. மதராஸ்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழி—மூன்றாம்பத்து.

முதல் திருவாய்மொழி—முடிச்சோதியாய்.

அவதாரிகை:—கீழ்த் திருவாய்மொழியைத் தலைக்கட்டுமிடத்தில் ஆழ்வார் "பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல் மருளில் வண்குருகூர் வண் சடகோபன்" என்று தம்மைப்பற்றிச் சொல்லிக்கொண்டார்; அதாவது—எம்பெருமான் விஷயத்தில் தமக்கு அஜ்ஞானம் ஒன்றுமில்லை யென்பதாகச் சொல்லிக் கொண்டார். இப்போது பாசுரம் தொடங்கும்போதே தமக்கு ஒரு அஜ்ஞானம் உள்ளதென்று காட்டுகிறார்.

அஜ்ஞானம் நான்கு வகைப்படும்;—ஒரு வஸ்துவைப்பற்றி அடியோடு தெரிந்து கொள்ளாமையும், நிச்சயமாகத் தெரிந்து கொள்ளாமல் ஸந்தேஹமாகத் தெரிந்து கொள்ளுதலும், விபரீதமாகவே நிச்சயித்துத் தெரிந்து கொள்ளுதலும், உள்ளபடி தெரிந்து கொண்டதை மறந்து போதலும்—ஆக நால்வகைப்பட்ட அஜ்ஞானங்களுள் ஸந்தேஹரூபமான அஜ்ஞானம் தமக்குள தென்பதை இங்குக் காட்டிக் கொள்ளுகிறாராழ்வார்.

கீழே தமக்கு மருள் இல்லையென்று சொல்லிவிட்டு இப்போது மருள் உள்ளதாகச் சொல்வது பொருந்துமோ எனின்; நம் போல்வார்க்குக் கருமம் காரணமாக வுண்டாகின்ற மருள் ஆழ்வார் தமக்கு இல்லை என்றதத்தனை யொழிய, விஷய வைலக்ஷண்யத்தினால் வருகிற அஜ்ஞானமும் இல்லையென்றதன்று. எம்பெருமானுடைய வடிவழகிலே யீடுபட்டு 'பிரானே! உனது முகச் சோதியே முடிச்சோதியாய் மலர்ந்ததுவோ? திருவடியின் சோதியே நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?' என்று கேட்பதற்குறுப்பான ஸந்தேஹம் ஆழ்வார்க்கு விளைந்ததென்றால் இந்த அஜ்ஞானம் புருஷார்த்த கோடியில் சேருவதாகுமன்றோ. "ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவை யெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியும் காண்க.

நம்முடைய அஜ்ஞானம்போலன்றிக்கே இப்படி மிகவும் விலக்ஷணமான அஜ்ஞானம் ஆழ்வார்களுக்கு உண்டாவதே அவர்களுடைய சிறப்புக்குங் காரணமாக நிற்கும். விலக்ஷண விஷயத்திலே கலக்கங்கொள்ளாதே தெளிந்தே நிற்பார்களாகில் அவர்களுக்கொரு ஏற்றமில்லையாகுமே.

கீழ்த் திருவாய்மொழியில் திருமாலிருஞ் சோலைமலையை அநுபவித்த ஆழ்வார் அந்தத் திருமலையில் ஏகதேச மென்னலாம்படியாய், கற்பகத்தரு கப்புங்கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற்போலே நிற்பவரான அழகருடைய வடிவழகை யநுபவித்து, வேதங்களும் வைதிகர்களும் ப்ரஹ்மருத்ராதி தேவர்களுங் கூட நிலையிட மாட்டாதபடி இருக்கிற விருப்பை அநுஸந்தித்து இனியராகிறார் இத்திருவாய்மொழியில். ... ... (*)

முடிச்சோதியாய் உனதுமுகச்சோதிமலர்ந்ததுவோ? *
அடிச்சோதிநீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ? *
படிச்சோதியாடையொடும் பல்கலனாய் * நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே. (க)

திரு மாலே	ச்ரிய:பதியான எம்பெருமானே!,	நின் பைம் பொன் கடி சோதி	உனது விசாலமாயும் ஸ்ப்ருஹணீயமாயு மிருக்கின்ற திருவரையின் காந்தியானது
உனது முகம் சோதி	உன்னுடைய திருமுக மண்டலத்தின் ஜ்யோதிஸ்ஸானது (உயர்முகமாக வளர்ந்து)	படி சோதி ஆடையொடும் பல் கலன் ஆய்	இயற்கையான சோதியையுடைய பீதாம்பரமென்ன பலவகைப்பட்ட ஆபரணங்களென்ன ஆகிய இவையாய்
முடி சோதி ஆய்	திருவபிஷேக ஜ்யோதிஸ்ஸாய்	கலந்ததுவோ	வியாபித்ததோ?
மலர்ந்ததுவோ	விகஸிதமாயிற்றோ?	கட்டுரை	தெரியவருளிச் செய்ய வேணும்.
அடி சோதி	திருவடிகளின் காந்தியானது		
நீ நின்ற தாமரை ஆய் அலர்ந்ததுவோ	நீ யெழுந்தருளியிருக்கும் ஆஸன பத்மமாய்ப் பரவியதோ?		

* * * [முடிச்சோதியாய்.] திருமாலிருஞ்சோலை யழகருடைய திவ்ய அவயவங்களுக்கும் திவ்ய பூஷணங்களுக்கு முண்டான மிக்க பொருத்தத்தைக் கண்டு உள்குழைந்து பேசுகிறார். இவ்வடிவழகைக் கண்டவளவிலே தமக்கொரு ஸந்தேஹம் விளைந்தபடியை விண்ணப்பஞ் செய்து, பிரானே! இந்த ஸந்தேஹந்தீரமறுமாற்றமருளிச் செய்யவேணுமென்று அபேக்ஷிக்கிறார்.

உனதுமுகச்சோதி முடிச்சோதியாய் மலர்ந்ததுவோ? = திருமுக மண்டலத்தின் காந்திஸமூஹம் மேல்முகமாகக் கிளர்ந்து கிரீட ஜ்யோதிஸ்ஸாக ஆயிற்றோ? என்பது கேள்வி. உண்மையில் திருமுக மண்டலத்திற்குமேல் திருவபிஷேகமென்று தனியே இல்லை; திருமுகச் சோதிதான் மேலே படர்ந்து திருமுடியாகத் தோற்றுகிறது என்கை இங்கு ஆழ்வார்க்கு விவக்ஷிதம். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் இப்பாசுரத்தின் முதலடியை ஒரு சிறுச்லோகமாக அருளிச் செய்தார்; அதாவது—கிரீடசூடரத்நராஜி ராதிராஜ்யஜல்பிகா । முகேந்துகாந்திருந்முகம் தரங்கிதேவ ரங்கிண: = கிரீடசூடாத்நராஜி: ஆதிராஜ்ய ஜல்பிகா, முகேந்துகாந்திருந்முகம் தரங்கிதேவ ரங்கிண:” என்பதாம்.

திருமுடியில் நின்றும் திருவடியிலே கண்வைத்தார்; அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ? என்கிறார். ஆஸனபத்மமென்று கீழே தனியே ஒன்று இல்லை; கீழ் நோக்கிக் கிளர்ந்த திருவடியின் தேஜ:புஞ்ஜமே ஆஸனபத்மமாகத் தென்படுகின்றது என்கை இங்கு விவக்ஷிதம்.

அர்ச்சாவதாரங்களில எம்பெருமானுடைய திருவடிகளுக்கு ஆதாரமாக ஒரு பத்மபீடம் அமைந்துளது; அதுவே ஆஸந பத்மமெனப்படுகிறது. மேல் நாலாம் பத்தில் "தண்டாமரை சுமக்கும் பாதப்பெருமானை" என்றருளிச் செய்திருப்பதும் இங்கு அநுஸந்தேயம். ஆழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்திலருளிச் செய்த "ஸஜ்ஷகமடகல்பை: ஸுந்தரஸ்யாங்க்ரிபத்மே ஸதத ஸுஜாதஸ்ய பரதாரவிந்தே ஸம்போஜலக்ஷ்மிரபிஸம்பரிணம்யமேஜ ஷ்டாம் தஸ்மின் பராஜிதமிதே ப்ரஸபா விஹதி" ஸௌந்தர்ய மார்த்தவ ஸௌகந்த ரஸப்ரவாஹை: ஏதேஹி ஸுந்தரபுஜஸ்ய பதாரவிந்தே, அம்போஜடம்ப பரிரம்பணமப்யஜைஷ்டாம் தத்வை பராஜிதமிமே ப்ரஸபா பிபர்த்தி." என்ற ச்லோகமும் நோக்கத்தக்கது.

[படிச்சோதியாடையொடும்இத்யாதி.] இங்கு இரண்டுவகையான நிர்வாஹமுண்டு; படிச்சோதி(யானது)பல்கலனும் கலந்ததுவோ? நின்பைம் பொற்கடிச்சோதி ஆடையாய்க் கலந்ததுவோ? என்று இரண்டு கேள்வியாகவைத்து ஒரு நிர்வாஹம். அன்றியே, நின் பைம் பொற்கடிச்சோதி(யானது) படிச்சோதியாடையாயும் பல்கலனும் கலந்ததுவோ? என்று ஒரு கேள்வியாகவே வைத்து மற்றொரு நிர்வாஹம். முதல் நிர்வாஹத்தில், படிச்சோதி யென்பது எழுவாயாக நிற்கும்; இரண்டாவது நிர்வாஹத்தில் அது ஆடைக்கு விசேஷணமாக நிற்கும். தேவரீர் தனியே திருவாபரணங்களும் பீதாம்பரமும் சாத்திக் கொண்டிருக்கவில்லை; திருமேனி யொளியும் கடிப்ரதேசத்தின் ஒளியும் பரவித் திருவாபரணங்களாயும் திவ்ய பீதாம்பரமாயும் புலப்படுகின்றனவத்தனை—என்ற உத்ப்ரேக்ஷை பின்னடிகட்குத் தேர்ந்த பொருள். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "கடீகாஞ்சி ஸம்வாஹிவா தம்ய நீவீ ஸுவஸ்த்ரகாம்ஜீ கஞ்சாவாதோஜவ — கடிகாந்தி ஸம்வாதி சாதுர்ய நீவிலஸத்ரத்நகாஞ்சீ கலாபாதலேபம்" என்றருளிச் செய்தது இப்பின்னடிகளைத் தழுவியதென்க.

இப்பாட்டில் ஆழ்வார் தமது திருவுள்ளத்தில் தோன்றின ஸம்சயங்களை விண்ணப்பம் செய்தார்; ஸம்சயங்கள் இரண்டு கோடிகளை யுடையனவாயிருக்குமாதலால் ஒவ்வொரு வாக்யத்தையும் திருப்பியும் யோஜித்துக் கொள்ளவேணும். உனது முடிச்சோதி முகச்சோதியாய் மலர்ந்ததுவோ என்பதாகவும் ஆக்கவேணும். இங்ஙனமே மற்ற அடிகளிலுங் கொள்க. இத்தால் பலித்தது என்னென்னில்; ஒவ்வோரழகில் ஈடுபடுங்காலத்தில் அஃதொன்றே சிறந்ததாய்த் தோன்றி நிற்குந்தன்மை தெரிந்தவாறு. கடி—வடசொல். இடுப்பு ... (க)

கட்டுரைக்கில்தாமரை நின்கண்பாதம்கைபொவ்வா *
சுட்டுரைத்தநன்பொன் உன்திருமேனியொளியொவ்வாது *
ஒட்டுரைத்திவ்வுலகுன்னைப் புகழ்வெல்லாம்பெரும்பாலும் *
பட்டுரையாய்ப்புற்கென்றே காட்டுமால்பரஞ்சோதி! (உ)

பரம் சோதி	பரஞ்சோதி யுருவனே!,	உன் திருமேனி ஒளி ஒவ்வாது	உனது திவ்யமங்கள விக்ரஹ காந்திக்கு ஒப்பாகமாட்டாது;
கட்டுரைக்கில்	சொல்லப் புகுந்தால்	இ உலகு	இவ்வுலகிலுள்ளோர்
நின் கண் பாதம் கை	உனது திருக்கண் திருவடி திருக்கைகளுக்கு	ஒட்டு உரைத்து	த்ருஷ்டாந்தம் சொல்லி
தாமரை	தாமரைப்பூ	உன்னை புகழ்வு எல்லாம்	உன்னைத் துதிப்பதெல்லாம்
ஒவ்வா	உவமையாகப் போராது;	பெரும்பாலும்	மிகவும்
சுட்டு உரைத்த நன் பொன்	நெருப்பிலிட்டுச் சுட்டு உரை கல்லில் உரைக்கப் பட்டும் மாற்றுயர்ந்த பொன்னானது	பட்டுரை ஆய்	நிரர்த்தக சப்தமாகி
		புற்கென்றே காட்டும்	அவத்யாவஹமாகவே தலைக்கட்டும்.

* * * [கட்டுரைக்கில்] அழகருடைய வடிவழகுக்கு ஒப்பாகப் போருவன இல்லாமையாலே, அவ்வழகைப்பற்றி உலகத்தார் சொல்லும் துதிமொழிகள் சிறக்கேடாகவே தலைக்கட்டுமென்கிறார்.

கட்டுரைக்கில்—வருணிக்கப் புகுந்தால் என்றபடி. அழகை நெஞ்சினாலும் கண்களாலும் ஆர அநுபவிக்க வேண்டுமேயொழிய, உபமானமிட்டு வாய் கொண்டு பேசுவது கூடாது என்பது இதில் தொனிக்கும். திருக்கண் திருவடி திருக்கை முதலிய அவயவங்களுக்குத் தாமரையை உவமையாகக் கவிகள் பேசுகின்றார்களெனினும் இது சிறிதும் பொருந்தாத த்ருஷ்டாந்தமே என்பது முதலடியின் கருத்து. இங்கு, „[illegible] ॥" என்ற ஸுந்தர பாஹுஸ்தவ ச்லோகம் அநுஸந்தேயம். இப்பாசுரத்தை யுட்கொண்டதே அது.

சுட்டுரைத்த நன்பொன் உன்திருமேனியொளி ஒவ்வாது—தேவரீருடைய அப்ராக்ருதமான திருமேனியின் ஸமுதாய சோபைக்கு, சுட்டுரைத்த நல்ல பொன்னை ஒப்பாகச் சொல்லுதலும் பொருந்ாது என்றபடி. நீலமேக ச்யாமளனான எம்பெருமானுக்குப் பொன்னை உவமை கூறுதற்கு ப்ரஸக்தியேயில்லாதிருக்க, அப்ரஸக்தப்ரதிஷேதம் இங்கு எதுக்குப் பண்ணுகிறது என்று சிலர் நினைக்கக்கூடும்; "பொன்னிவர்மேனி" என்றும் "கனபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்தன்" என்றும் சொல்லுகிற கணக்கிலே அழகருடைய திருமேனி பொன்னிறமாகவே விளங்குதலால் ப்ரஸக்த ப்ரதிஷேதமே இங்குப் பண்ணுகிறது என்க. „[illegible]

ணீயாம்ஸ ணீயஸாம் । ஸநாதநம் ஸூர்யஸமம் விதாத்ரு ஸர்வஸ்ய ஸாரம் ।" "யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரம் ஈஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம்" இத்யாதி ப்ரமாணங்களைக் கொண்டும் நிர்வஹிப்பர். ஹிரண்யவர்ணையான பிராட்டியின் சேர்க்கையாலுண்டான நிழலீட்டாலே எம்பெருமானும் ஹிரண்மயனாகத் தோற்றுவனென்ப.

எம்பெருமானுடைய திருமேனி நிறத்திற்கும் அவயவ சோபைகளுக்கும் பொருத்தமான உவமானங்கள் உலகில் இல்லாதிருக்கச் செய்தேயும் அவரவர்கள் சிற்சில உவமைகளைக் கூறிப்புகழ்வதானது, ஏதோ நெஞ்சிற்பட்டதைச் சொன்னவளவாய் அவத்யமாகத் தலைக்கட்டுமத்தனையொழிய வேறில்லை என்பன பின்னடிகள்.

"புற்கென்றே காட்டுமால்" என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—

"இவன் ப்ரதிபந்நத்தைச் சொன்னால், விஷயத்தில் ஸ்பர்சியாதேயிருக்குமாகில் அக்குத்தைக்குப் புன்மையே காட்டும்படி என்னென்னில்; ரத்நமறியாதானொருவன் 'குருவிந்தக் கல்லோடு ஒக்குமிது' என்றால், அவ்வளவாகவிறே இவனுக்கு இதில் ப்ரதிபத்தி; அவ்வழியாலே அதுக்கு அவத்யமாமிறே; அப்படியே இவன் பண்ணும் ஸ்தோத்ரம் இக்குத்தைக்கு அவத்யமாயே தலைக்கட்டும்." என்பனவாம்.

பரஞ்சோதி! என்ற விளி இப்பாட்டிற் சொன்ன அர்த்தத்தை நிலைநாட்டுதற்காம். தாமரை முதலியவற்றை உவமையாகக் கூறுதல் தகாதென்று தெரிந்தும் இவ்வாழ்வார் தாமும் பிறரும் பலவிடங்களில் தாமரை முதலியவற்றையே உவமை கூறுதல் ஏன்? என்னில்; என்செய்வது! வாளா இருக்க முடியவில்லை; எம்பெருமானை வருணித்தே போதுபோக்க வேண்டியிருக்கிறது. வருணிப்பதென்று வாயெடுத்தால் தாமரை முதலியவற்றைப் பேசியே யாகவேண்டி வருகிறது. பேசுவதும் அநுதபிப்பதும், அநுதபிப்பதும் பேசுவதுமாயே காலங்கழிக்கவேணுமிறது. ஆத்ம ஸமர்ப்பண விஷயம்போலே இதுவுமொன்றென்க. ... (உ)

பரஞ்சோதிநீபரமாய் நின்னிகழ்ந்துபின் * மற்றோர்
பரஞ்சோதியின்மையின் படியோவிநிகழ்கின்ற *
பரஞ்சோதிநின்னுள்ளே படருலகம்படைத்த * எம்
பரஞ்சோதி! கோவிந்தா! பண்புரைக்கமாட்டேனே. (௩)

பரம் சோதி } பரஞ்சோதியான பெருமானே!
நீ பரம் ஆய் } நீயே ஸர்வோத்க்ருஷ்டனாயிருக்க
நின் இகழ்ந்து பின் } உன்னைத்தவிர
மற்று ஓர் பரம் சோதி இன்மையின் } வேறொரு பரஞ்சுடர் இல்லாமையாலே
படி ஓவி நிகழ்கின்ற } உபமானமில்லாதபடியிருக்கின்ற

பரம் சோதி நின்னுள்ளே	'பரம் ஜ்யோதிஸ்' என்று உபநிஷத்துக்களில் ஓதப்பட்டுள்ள உன்னுடைய ஸங்கல்பத்துக்குள்ளே	கோவிந்தா	நீர்மைக்கு எல்லையில்லாதவனே!
படர் உலகம் படைத்த	விசாலமான வுலகங்களைப் படைத்த	பண்பு	உனது ஸ்வரூப ஸ்வபாவங்களை
எம் பரம் சோதி	எம்பரஞ்சுடருடம்பனே!	உரைக்க மாட்டேன்	வருணிக்க சக்தனல்லேன்.

* * * [பரஞ்சோதி நீ பரமாய்.] ஆழ்வீர்! உலகர் ஒட்டுரைத்துப் பேசுவதெல்லாம் எனக்கு நிறக்கேடாக முடிகின்றதேயன்றிப் புகழ்ச்சியாக ஆகின்றதில்லை யென்கிறீர்; மயர்வற மதிநலமருளப் பெற்ற நீர் அழகாகப் பேசலாமன்றோ; எனக்கு நிறக்கேடாகாதபடிக்கு நீர் பேசலாமே என்ன; என்னுமாகாதென்கிறார்.

உலகில், வடிவழகிலோ செல்வத்திலோ சிறிது ஏற்றமுடைய ஒருவனைக் கண்டால், 'அப்பா! உன்னைப்போன்ற தேஜஸ்வி ஒருவனில்லை; உன்னைப் போன்ற செல்வன் எங்குமில்லை' என்று புகழ்வது உலக வியற்கையாக வுள்ளது; அப்படியல்லாமல் 'எந்த வுலகத்திலும் எந்த வ்யக்தியிடத்திலும் இப்படிப்பட்ட தேஜஸ்ஸு இல்லை' என்று திண்ணமாய்ச் சொல்லும்படியாகத் தேஜ: பூர்த்தியுள்ளது தேவரீர் பக்கலிலே யாகையாலே ஒப்புயர்வற்ற பரஞ்சோதியாயிருக்கின்றீர்; உலகங்களை யெல்லாம் ஸங்கல்ப ஏகதேசத்திலே ஸ்ருஷ்டித்து, அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட லோகத்திலுடைய ஸ்வபாவம் தேவரீர்க்குத் தட்டாதபடி நிற்கிற தேஜோநிதியே! கோவிந்தனென நீர்மைக்கு எல்லை காணவொண்ணாதபடியிருக்கிற பரம ஸௌலப்யனே! எந்தக் குணந்தான் என்னாற் சொல்லலாகும்? மேன்மைக்கு எல்லை கண்டாலும் நீர்மை தரை காணவொண்ணாமே யிராநின்றதே! எதுவும் அநுபவித்துப்போமித்தனை யொழிய, பாவியேன் வாய்கொண்டு பேச நிலமாக இல்லையே! என்று தவிக்கிறார்.

இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"* நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச் சொல் * என்று நெஞ்சால் நினைக்க வொண்ணாதது சொல்லத்தானே போகாதிறே." ... ... (௩)

மாட்டாதேயாகிலும் இம்மலர்தலைமாஞாலம் * நின்
மாடாயமலர்புரையும் திருவுருவம்மனம்வைக்க *
மாட்டாதபலசமய மதிகொடுத்தாய் * மலர்த்துழாய்
மாட்டேநீமனம்வைத்தாய் மாஞாலம்வருந்தாதே? (௪)

மலர் தலை	திருநாபிக்கமலத்தைத் தலையிடமாகக் கொண்டு தோன்றிய	நின் மாடு ஆய	உன்னுடைய ஸ்வரூபத்தைப் பற்றியதான
இம் மா ஞாலம்	இப்பெரிய வுலகமானது	மலர் புரையும் திரு உருவம்	பூப்போலழகிய திவ்ய மங்கள விக்ரஹத்திலே

மனம் வைக்க மாட்டாதே ஆகிலும் } ஈடுபட முடியாதபடி யிருக்கச் செய்தேயும்

(அதற்குமேலே)

மாட்டாத பல சமயம் மதி கொடுத்தாய் } தெளிவுக்குக் காரணமாகமாட்டாத பல வகைப்பட்ட பாஹ்ய குத்ருஷ்டிமத ப்ரசாரமும் பண்ணிவைத்து மோஹ ஜநகனுமானாய்;
(அவ்வளவுமல்லாமல்)

மலர் துழாய் மாட்டே நீ மனம் வைத்தாய் } (இவ்வுலகத்தைத் திருத்திப் பணி கொள்ளும் வழியில் நோக்கம் செலுத்தாமல்) திருத்துழாய் மலர் முதலிய ஸ்வகீய போக்ய வஸ்துக்களின் அநுபவத்திலேயே நீ ஊன்றி யிருக்கின்றாய்;

மா ஞாலம் வருந்தாதே } (இப்படியாகில்) பெரிய இவ்வுலகம் இழந்தே போகாதோ ?.

* * * [மாட்டாதேயாகிலும்.] "கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே" என்றார் கீழ்ப்பாட்டில். அது, புத்தி பூர்வகமாகச் சொல்லமாட்டாமையைத் தெரிவித்தபடி. அழகருடைய அழகு தானே பேசுவிக்கப் பேசுகிறாரிதில்.—இம்மலர்தலை மாஞாலம் நின்மாட்டாய மலர்புரையும் திருவுருவம் மனம் வைக்க மாட்டாதேயாகிலும், மாட்டாத பலசமய மதி கொடுத்தாய்—என்கிற வரையில் ஒரு வாக்கியம். இவ்வுலகமானது இயற்கையாகவே தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தில் நெஞ்சைச் செலுத்தமாட்டாதது; அதற்குமேலே தேவரீரும் அறிவைக் கெடுக்கவல்ல பல மதாந்தரங்களையும் பிரவர்த்தனம் செய்துவைத்தீர் என்றபடி. ஒன்றோடொன்று சேராத பலபல அவைதிகமதங்களை தேவரீர் உலகில் பிரவர்த்திப்பித்ததனால் ஏற்கனவே பகவத் விஷயத்தில் ருசியற்ற ஜனங்கள் பின்னையும் இதர விஷயங்களில் மண்டி மாண்டுபோவதற்கு வழி செய்ததாயிற்று என்றவாறு.

மலர்த்துழாய் மாட்டே நீ மனம் வைத்தாய் = கெட்டுப்போகிற ஜனங்களை மீட்பதிலேயாவது தேவரீருடைய திருவுள்ளம் ஊற்றமுற்றிருந்தால் குறையில்லையாகும்; பாழும் ஜனங்களைத் தேவரீர் கவனியாமல், திருமேனியிலுள்ள திருத்துழாய் மாலை முதலிய போக்ய வஸ்துக்களிலே தேவரீர் ப்ராவண்யம் கொண்டிராநின்றது. இப்படியாகில், மாஞாலம் வருந்தாதே? = உலகமெல்லாம் தேவரீரை இழந்து போகவேண்டியதுதானே. விபரீத மதங்களை உலகில் பரவச் செய்யாதிருந்தால் அவ்வளவாக ஜனங்கள் கெட்டுப்போக ப்ரஸக்தியிராது; "வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவையவைதோறு அணங்கும் பலபலவாக்கி" என்னும்படியாகப் பலசமய பேதங்களையுண்டாக்கி வைத்தீர்; அதனால் ஜனங்கள் பலவகையாகப் பாழ்பட நேர்ந்தது; பாழ்பட்டாலும் திருத்தும் வழியிலே தேவரீர் ஊக்கங் கொண்டிருந்தாலாவது நன்றாகும்; அதுவுமில்லாமே ஸ்வபோக்யதையை யநுபவிப்பதிலேயே தேவரீர் ப்ரவணராயிருக்கையாலே இவ்வுலகம் இழந்தே போகவேண்டியதாயிற்றே! என வருந்திக் கூறியவாறு.

அழகருடைய வடிவழகிலீடுபட்டுப் பேசப்புகுந்த ஆழ்வார் திடீரென்று இவ்விக்ஷபத்தை இங்கு எதுக்கு அருளிச் செய்கிறாரென்று சங்கை பிறக்கக் கூடும். கேண்மின்; அழகருடைய பரம போக்யதையானது எம்பெருமான் றன்னையும் அஸ்தமிதாந்ய ஹாவனாக்கி யீடுபடுத்திக் கொள்ளுமது என்பதைத் தெரிவிக்கவே இப்பாசுரம் வந்ததென்க. மலர்த்துழாய் என்றது திவ்யபூஷண திவ்யாயுதாதி ஸகல போக்ய வஸ்துக்களுக்கும் உபலக்ஷண மென்றுணர்க.

மலர்த்துழாய் மாட்டே பின்பாதிக்கு வேறொரு வகையாகவும் பொருள் கூறலாம்; [மாஞாலம் வருந்தாது]—இவ்வுலகம் கஷ்டப்படாதபடிக்கு, [மலர்த்துழாய் மாட்டே நீ மனம் வைத்தாய்] ஒரு திருத்துழாயளவிலே நீ விருப்பங் கொண்டாய் என்க. ஸகல ஜனங்களும் எளிதான வொரு திருத்துழாய் கொண்டு நம்மை ஆராதித்து உய்வு பெறட்டுமென்று திருவுள்ளம்பற்றினாய் என்றபடி. இது ரங்கராமாநுஜஸ்வாமி பணித்தபடி.

மலர் தலை மாஞாலம்—விசாலமான இடங்களையுடைய பெரிய பூமண்டலத்திலுள்ள ஜனங்கள் என்றபடி. திருநாபிக் கமலத்தைத் தலையாக [பிறப்பிடமாக]வுடைய மாஞாலம் என்னவுமாம். இரண்டாமடியில், மட்டு என்பதை 'மாட்டு' என நீட்டிக்கிடப்பதாகக் கொண்டு, மதுஸ்யந்தியான மலர்போன்ற திருவுருவம் என்றும் பொருள் கொள்வர். ... ... (௪)

வருந்தாதவருந்தவத்த மலர்கதிரின்சுடருடம்பாய் *
வருந்தாதஞானமாய் வரம்பின்றிமுழுதியன்றாய் *
வருங்காலம்நிகழ்காலம் கழிகாலமாயுலகை *
ஒருங்காகவளிப்பாய்! சீர் எங்குலக்கவோதுவனே? (௫)

வருந்தாத	ப்ரயத்ந ஸாத்யமல்லாத [ஸ்வாபாவிகமான]
அரும் தவத்த	அருமையான தவத்தின் பலனாக வந்ததோ என்னலாம்படியான
மலர் கதிரின்	பரப்பின கிரணங்களையுடைய
சுடர் உடம்பு ஆய்	தேஜோமய திவ்யமங்கள விக்ரஹயுக்தனாய்
வருந்தாத ஞானம் ஆய்	ஸ்வாபாவிக ஜ்ஞாந யுக்தனாய்
வரம்பு இன்றி	எல்லையில்லாதபடி
முழுது இயன்றாய்	எங்கும் வியாபித்திருப்பவனே!
வரும் காலம் நிகழ்காலம் கழிகாலம் ஆய்	எதிர்காலம் நிகழ்காலம் இறந்தகால மென்கிற மூன்று காலங்களுக்கும் நிர்வாஹகனாய்
உலகை	உலகங்களை
ஒருங்கு ஆக	ஒருபடிப்பட
அளிப்பாய்	ரக்ஷிக்குமவனே!
சீர்	(உன்னுடைய) திருக்குணங்களை
எங்கு	எங்கே
உலக்க	முடிய
ஓதுவன்	சொல்லுவேன்?

* * * [வருந்தாத.] நாட்டாரிழவு பற்றிய கீழ்ப்பாட்டு ப்ரஸங்காத் ப்ரஸ்துதமத்தனை; மூன்றாம் பாட்டோடு இப்பாட்டுக்கு நேரே ஸங்கதி காண்க.

"கோவிந்தா! பண்புரைக்க மாட்டேனே" என்று சொல்லுவானேன்? நீர் ஸகல விலக்ஷணராகையாலே நம்மை நீர் பேசமாட்டீரோ வென்று எம்பெருமான் திருவுள்ளமாக, எம்பெருமானே! என்னை நீ விலக்ஷணனாக்கி வைத்தாலும் உன் சுடர்ப்பொலிவை ஓர் எல்லையிலே நிறுத்திவைத்தாயில்லையே; எங்ஙனே நான் பேசுவது? என்கிறார்.

வருந்தாத அருந்தவத்த மலர்கதிரின் சுடருடம்பாய் = எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹம் எப்படிப்பட்டதென்றால் [வருந்தாத] ஒரு ப்ரயத்நத்தினால் ஸித்தமன்றிக்கே ஸ்வஸங்கல்ப மாத்ரத்தினால் பரிக்ருஹீதம். இன்னமும் எப்படிப்பட்டதென்னில், [அருந்தவத்த] பக்த ஜனங்களின் தவப்பயனே என்னலாம்படி யிருக்கும். இன்னமும் எப்படிப்பட்டதென்னில், [மலர்கதிரின்] எங்கும் பரந்த வொளியை யுடையது. ஆக இப்படிப்பட்ட திருமேனியையுடைமை முதலடியால் சொல்லப்பட்டது. "வருந்தாத ஞானமாய்" என்றது, நம்மைப் போல் ப்ரயாஸப்பட்டு ஞானம் ஸம்பாதிக்க வேண்டாதே "ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பலக்ரியா ச" என்கிறபடியே எம்பெருமான் இயற்கையாகவே விசாலமான ஞானம் படைத்தவனென்றவாறு.

[வரம்பின்றி இத்யாதி.] ஸர்வவ்யாபகனாய் முக்காலங்களிலும் உலகங்களை ஒருபடிப்பட ரக்ஷித்தருளுமவனே! உன்னுடைய ஸ்வரூப விளக்கமென்ன ஞான விளக்கமென்ன, உன்னுடைய ஸர்வவ்யாபகத்வமென்ன, ஸர்வரக்ஷகத்வமென்ன ஆகிய இவற்றாலுண்டான சிறப்பை ஏதோ ஏகதேசம் சொல்லுமத்தனையல்லது முடியச்சொல்லுவது எங்ஙனே? என்றாராயிற்று. உலக்க—முடிய.()

ஓதுவாரோத்தெல்லாம் எவ்வுலகத்தெவ்வெவையும் *
சாதுவாய்நின்புகழின் தகையல்லால்பிறிதில்லை *
போதுவாழ்புனந்துழாய் முடியினாய்! பூவின்மேல் *
மாதுவாழ்மார்பினாய்! என்சொல்லியான்வாழ்த்துவனே? (௩)

ஓதுவார் ஒத்து எல்லாம்	அத்யயனம் செய்கிறவர்களை யிட்டு நிரூபிக்கப் படுகின்ற ஸகல வேதங்களும்
எவ்வுலகத்து எவ்எவையும்	மற்றும் பல வுலகங்களிலுமுண்டான பலவகைப்பட்ட சாஸ்த்ரங்களும்
சாது ஆய்	(பொய் கலவாமல்) உள்ளபடியே சொல்லுகின்றனவாகி
நின் புகழின் தகை அல்லால்	உன்னுடைய குண கீர்த்தனத்தில் தத்பரங்கள் என்கிற இவ்வளவல்லாமல்
பிறிது இல்லை	வேறில்லை; [ஒன்றையும் பூர்த்தியாகச் சொல்வனவல்ல என்றபடி.]
போது வாழ்	பூக்கள் விளங்கப் பெற்ற
புனம்	நல்ல நிலத்திலுண்டான
துழாய் முடியினாய்	திருத்துழாய் மாலையை திருமுடியிலணிந்துள்ளவனே!
பூவின் மேல் மாது வாழ் மார்பினாய்	தாமரைப்பூவில் தோன்றிய பெரிய பிராட்டியார் வாழுமிடமான திருமார்பை யுடையவனே!
என் சொல்லி	எத்தைச் சொல்லி
யான் வாழ்த்துவன்	நான் துதிப்பேன்?.

* * ‡ * [ஓதுவார்.] எம்பெருமானைத் துதிக்க அவதரித்த வேதங்களும் பகவத்குண கீர்த்தனத்தில் அந்வயம் பெற்றவத்தனையே யொழிய வேறில்லை; ஆக, வேதங்களின் கதியே அதுவாகும்போது, நான் பேசித்தலைக்கட்டுவதென்று ஒன்றுண்டோ என்கிறார். [ஓதுவாரோத்து] ஓத்து என்று வேதத்திற்குப் பெயர்; ஓதுவார்களை யிட்டு நிரூபிக்கப்படுவன வேதங்கள்; (எங்ஙனே யென்னில்;) ஆதர்வணம், தைத்திரீயம், காண்வம் என்று வ்யபதேசங்கள் விளைந்திருப்பதானது [illegible] மாகும். ஆசார்ய ஹ்ருதயத்தில்—"ஓதுவாரோத்தாகையாலே ஆதர்வணாதிகள் போலே இதுவும் பேர் பெற்றது" என்ற விடமும் அவ்விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கன.

எவ்வுலகத்து எவ்வெவையும் = ப்ரமாண பூதங்களான சாஸ்த்ரங்கள் இந்நிலவுலகத்தில் இருப்பதுபோல் மற்றும் பல வுலகங்களிலுமுண்டே; ஸ்வர்க்க லோகத்திலும் ப்ரஹ்ம லோகத்திலும் ஆங்காங்குள்ளாருடைய ஞான வளவுக்குத் தக்கபடியே பிரமாணங்கள் பரந்திருக்கும். ஸ்ரீராமாயண மென்கிற ஒரு க்ரந்தத்தை யெடுத்துக் கொள்வோம்: இது இவ்வுலகில் ஸங்க்ரஹப்படியாயும் ப்ரஹ்மலோகத்தில் விஸ்தாரப்படியாயு மிருப்பது ப்ரஸித்தம். இங்ஙனமே மற்றுங்காண்க. ஆக இப்படிப்பட்ட ச்ருதிதிஹாஸ புராணாதிகள் யாவும் [சாதுவாய் நின்புகழின் தகையல்லால் பிறிதில்லை] உன்னுடைய புகழை வருணிப்பதில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதுதவிர வேறில்லை; ஒரு குணத்தையும் முற்றமுடியச் சொன்னபாடில்லை என்றவாறு. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"உன்னுடைய கல்யாணகுண விஷயமான வித்தனை போக்கிப் புறம்பு போயிற்றில்லை; விஷயந்தன்னை எங்கு மொக்க விளாக்குலை கொண்டதுமில்லை."

பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்—"ஆம்நாயாநாம் அஸீம்நாமபி ஹரிவிபவே வர்ஷபிந்தோரிவாப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபோ ந து கபலநத:—ஆம்நாயாநாம் அஸீம்நாமபி ஹரிவிபவே வர்ஷபிந்தோரிவாப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபோ ந து கபலநத:" என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம் (இதன் கருத்தாவது—) மேகமானது மற்ற விடங்களில் மழை பெய்வதுபோல் கடலிலும் பெய்கிறது; அந்த மழைத்துளியினால் கடலுக்குச் சிறிதும் ஆதிக்ய முண்டாவதில்லை; பின்னை என்னென்னில்; மண்ணிலே மழை பெய்தால் அந்த மழைத்துளியானது ஸ்வஸ்வரூபங் கெட்டு மண்ணாய்ப் போகிறது; அதுவே கடலிற் பெய்தால் அப்படி உரு மாறாதே ஸ்வரூப லாபத்துடனே கிடக்கிறது. அதுபோல, எல்லா வாக்குக்களும் பகவத்வைபவம் தவிர மற்ற விஷயங்களில் சென்றால் ஸ்வரூபம் குலைந்து கெடும்: பகவத்வைபவத்தைப் பேசப்புகுந்தால் ஸ்வரூபம் நிறம் பெற்றிருக்கும் என்கிற இவ்வளவேயன்றி, பகவத்வைபவத்தைக் கபளீகரிக்கை வேதங்களுக்கும் அஸாத்யம் என்றவாறு.

[போதுவாழ் இத்யாதி.] திருத்துழாய்மாலை முதலியவற்றாலுண்டான அழகைப்பற்றியோ, திருமார்பிலே பிராட்டி திகழ்வதனாலுண்டான அழகைப் பற்றியோ யாதும் யான் பேசத் திறமையுடையே னல்லேன் என்றபடி. ... (சு)

வாழ்த்துவார்பலராக நின்னுள்ளேநான்முகனை *
மூழ்த்தநீருலகெல்லாம் படையென்றுமுதல்படைத்தாய்! *
கேழ்த்தசீரரன்முதலாக் கிளர்தெய்வமாய்க்கிளர்ந்து *
சூழ்த்தமரர்துதித்தால் உன்தொல்புகழ்மாசூணாதோ? (எ)

வாழ்த்துவார் பலர் ஆக	துதிப்பவர்கள் பலருண்டாவதற்காக,	அரன் முதலா	சிவன் முதலான
மூழ்த்த நீர் உலகுஎல்லாம் படை என்று	'காரண ஜலமான ஏகார்ணவத்துக்குள்ளே லோகங்களை யெல்லாம் உண்டாக்குவாயாக' என்று சொல்லி	அமரர்	தேவர்கள்
		கிளர் தெய்வம் ஆய் கிளர்ந்து	மிகுந்த சக்தியையுடைய தெய்வங்களாகத் தோன்றி
நின்னுள்ளே	உன்னுடைய ஸங்கல்பத்திலே	சூழ்த்து	ஒவ்வொருவிஷயங்களைப் பற்றிக் கொண்டு
நான்முகனை	பிரமனை	துதித்தால்	தோத்திரம் பண்ணினால்
முதல் படைத்தாய்	முந்துற ஸ்ருஷ்டித்தவனே!	உன்	உன்னுடைய
		தொல் புகழ்	நித்ய ஸித்தமான கீர்த்தி
கேழ்த்த சீர்	சிறந்த (ஞானமுதலிய) குணங்களையுடைய	மாசூணாதோ	அவத்யம் பெற்றதாகாதோ?.

* * * [வாழ்த்துவார்.] ஞானத்திற் சிறந்த பலபேர்கள் திரண்டு ஏத்தினாலும் அதுவும் பகவத் குணங்களுக்குத் திரஸ்காரமாகவே தலைக்கட்டு மென்கிறார். ["வாழ்த்துவார் பலராக"] இதில் ஆக என்பதை வினை யெச்சமாகக் கொண்டு, 'உன்னைத் துதிப்பவர்கள் பலர் உண்டாவதற்காக' என்று பொருளுரைப்பர் பலர்; பட்டர் அங்ஙனன்றியே ஆக என்றவிதனை வியங்கோள் வினைமுற்றாகக் கொண்டு "வாழ்த்துகின்றவர்கள் பலபேர்கள் இருக்கட்டுமே" என்று பொருளுரைப்பராம். எத்தனை பேர்கள் திரண்டு வாழ்த்தினால்தா னென்ன? வேதங்களிற் காட்டிலும் ஏற்றமாகத் துதிக்கவல்லார் யாருமிலரே? என்பது பட்டர் நிர்வாஹத்தின் கருத்து.

[நின்னுள்ளே இத்யாதி.] பெருமானே! உன்னாலே ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரமனாலே ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களா உன்னுடைய திருக்குணங்களை வருணிப்பதற்கு உரியார்? „[illegible]—சங்கராத் ஜ்ஞாநமந்விச்சேத்." என்றபடி சிவபிரான் ஞானத்திற் சிறந்தவனேயாயினும் அவனுமுட்பட மற்றும் பல அமரர்களும் திரண்டு ஏத்தினாலும் அவத்யமேயாகு மென்றாராயிற்று.

சூழ்த்து—ஒவ்வொருவர் ஒவ்வொரு குணத்தை வருணிப்பதாக வைத்துக் கொண்டு என்றும், திரள்திரளாகக் கூடி என்றும் பொருள்படும். ... (எ)

மாசூணாச்சுடருடம்பாய் மலராதுகுவியாது *
மாசூணாஞானமாய் முழுதுமாய்முழுதியன்றாய் *
மாசூணாவான்கோலத்து அமரர்கோன்வழிப்பட்டால் *
மாசூணாவுனபாத மலர்ச்சோதிமழுங்காதே? (அ)

மாசு உணா	அவத்யம் சிறிது மில்லாமல்
சுடர்	சோதிமயமான
உடம்பு ஆய்	திருமேனியை யுடையனாய்
மலராது குவியாது	ஸங்கோச விகாஸங்களற்று
மாசு உணா	(ஸம்சயம் விபரீதம் முதலான) அவத்யமில்லாத
ஞானம் ஆய்	ஞானத்தை யுடையையாய்
முழுதும் ஆய்	ஸகல பதார்த்தங்களுக்கும் நிர்வாஹகனாய்
முழுது இயன்றாய்	அவை யெல்லாம் உன் பக்கலிலே வர்த்திக்கும்படி அவற்றுக்கு ஆச்ரயமானவனே!
மாசு உணா வான் கோலத்து அமரர்கோன்	குற்றமற்ற அப்ராக்ருதமான ஜ்ஞாநாதி பூஷணங்களை யுடையனாய் தேவர்களுக்குக் கோமானாகிய பிரமன்
வழிப்பட்டால்	(உன்னைத்) தோத்திரம் பண்ணினால்
மாசு உணா உன பாதம் மலர் சோதி	குற்றமற்ற உனது பாதாரவிந்தத்தின் தேஜஸ்ஸானது
மழுங்காதே	குறைபுற்றதாகாதோ?

* * * [மாசூணாச்சுடர்] கீழ்ப்பாட்டில் சொல்லப்படாத அர்த்தம் இப்பாட்டில் என்ன சொல்லப்படுகிறதென்று விமர்சிக்கவேணும். அரன் முதலான அமரர்கள் ஏத்தினும் அவத்யம் என்றது கீழ்ப்பாட்டில்; அமரர்கோன் ஏத்துவதும் அவத்யம் என்கிறது இப்பாட்டில். அமரர்கோனென்று இந்திரனுக்குப் பெயராகப் பலரும் நினைக்கக்கூடும். சிவபிரானைச் சொன்னபிறகு அவனிலும் கீழ்ப்பட்டவனான இந்திரனை யெடுத்துரைக்க ப்ரஸக்தி யில்லாமையாலே இந்திரனென்கிற பொருள் ஏலாது. அமரர்களனைவர்க்கும் நான்முகன் கோனாதலால் அந்த நான்முகனை இங்கு விவக்ஷிப்பதாக நிர்வஹிப்பாருண்டு; கீழ்ப்பாட்டில் "அரன்முதலா" என்றிருப்பதனாலே நான்முகனும் அவ்விடத்திலேயே ஸங்க்ரஹிக்கப்பட்டவனாகக் கூடுமென்று திருவுள்ளம்பற்றிய பட்டர் இங்கு அமரர் கோன் என்பதற்கு விலக்ஷணனாய் உத்ப்ரேக்ஷாஸித்தனான ஒரு பிரமனைப் பொருளாகப் பணிப்பராம். ப்ரஸித்தனான பிரமன், ப்ரஹ்ம பாவனை கர்ம பாவனை என்ற இரண்டு பாவனைகளையு முடையனாயிருப்பன்; இப்படியல்லாமல் ப்ரஹ்ம பாவனை யொன்றையே யுடையனான வொரு பிரமன் இருப்பதாக வைத்துக் கொள்வோம்; அவன் ஏத்தினாலும் அவத்யமேயாகும் என்கிறார் இப்பாட்டால்—என்பது பட்டருடைய திருவுள்ளம்.

[மாசூணாச்சுடருடம்பாய்] எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹம் எப்போதும் எவ்விதத்திலும் மாசு ஏறப்பெறுவதில்லை யென்க. ஸ்ரீராமக்ருஷ்

ஞதி அவதாரங்களில் பரிக்ரஹிக்கப்பட்ட திருமேனிகளில் மாசு ஏறினதுபோல் தோற்றினாலும் அது அபிநயமாத்திரமே யென்க; மநுஷ்ய ஸஜாதீயமாகக் கொண்ட திருமேனியாகையாலே மநுஷ்ய சரீர தர்மமான மாசு ஏறப் பெறுவது குற்றமன்று. அப்படியே அர்ச்சாவதாரங்களில் பரிக்ரஹிக்கப்படுகிற திரு மேனிகளில் திருமஞ்சனம் ஸமர்ப்பிக்கப் பெறாத காலங்களில் தென்படுகின்ற மாசும் ஆக்ஷேபிக்க வுரியதன்று.

" மலராது குவியாது " என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி :—

"* அரும்பினையலரை என்னும்படியாயிருக்கும்; 'யுவாகுமார:' என் கிறபடியே ஏககாலத்திலே இரண்டவஸ்தையும் சொல்லலாயிருக்கை." என்றுள்ளது. இத்தால், யௌவநமும் கௌமாரமும் எம்பெருமானிடத்தில் குடி கொண்டிருப்பதாகக் கூறினமை விளங்கும். நம்பிள்ளை உதாஹரித்த பெரிய திருமொழிப் பாசுரத்தில் அரும்பு என்றது கௌமார நிலைமையைக் கூறினபடி; அலர் என்றது யௌவன நிலையைக் கூறினபடி என்றும் கூறுவர். இங்கு உதா ஹரிக்கப்பட்ட யுவாகுமார: என்ற பிரமாணம் ருக்வேதத்தில் (அஷ்ட. 2-8-25) அத்யயநம் பண்ணப்பட்டு வரும் வாக்கியம், வைதிக பதபாடத்தில் "யுவா அகுமார:" என்று பதவிபாக முள்ளது. தேசிகன் பரமபத ஸோபானத்தில் ஒன்பதாவது பர்வத்தின் தொடக்கத்தில் "அகுமாரயுவாவாய்" என்றும், பாது காஸஹஸ்ரத்தில் * 1. 'அகுமாரயுவா—அகுமாரயுவ:' என்றும் (இங்ஙனமே யாதவாப்யுதயாதிகளிலும்) அருளிச் செய்யக் காண்கிறோம். வைதிக பதபாடம் பிரபலமாக வுள்ளது. இவற்றை யெல்லாமடியொற்றி யுவா அகுமார: என்றே கொள்ளத்தகும். நம்பிள்ளை திருவுள்ளமும் இதனில் வேறுபட்டதன்று. நநு, இங்ஙனே பதவிபாகமாயின் 'கௌமாரமின்றியே யௌவனமாத்திரமே யுள்ள வன்' என்று பொருளாகுமே; நம்பிள்ளை திருவுள்ளம் அப்படியில்லையே என்று சங்கிக்க வேண்டா; அகுமார: என்பதற்கு ஈஷத்குமார: [ஸ்வல்பம் கௌமார முள்ளவன்] என்று பொருள்: "தத்ஸாத்ருஶ்யமபாவஶ்ச தத்அந்யத்வம் தத்அல்பதா। அப்ராஶஸ்த்யம் விரோதஶ்ச நஞர்தா: ஷட் ப்ரகீர்திதா:" என்பர் வையாகரணர். குமார பருவம் கழியத்தக்கதாய் யௌவன பருவம் வந்து குடி புகத்தக்கதான நடுப்பருவத்தைச்சொன்னவாறு. இனி, (யுவாகுமார:) என் றெடுத்த பிரமாணத்தில் யுவா குமார: என்றே பதவிபாகம் விவக்ஷிதமென்னில், அந்தப் பிரமாணம் ருக்வேதத்திலுள்ளதன்றியே வேறிடத்ததாயிருத்தல் வேண் டும். இவ்விஷயத்தில் ப்ராமாணிக ப்ராஜ்ஞர்கள் பரிசீலனை செலுத்துக. (ரு)

மழுங்காதவைந்நுதிய சக்கரநல்வலத்தையாய் *
தொழுங்காதல்களிறளிப்பான் புள்ளூர்ந்துதோன்றினையே *
மழுங்காதஞானமே படையாகமலருலகில் *
தொழும்பாயார்க்களித்தால் உன்சுடர்ச்சோதிமறையாதே? (சு)

* 1. பராகபத்ததி—17.

தொழும் காதல்	தொழவேணுமென்கிற காதலையுடைய
களிறு	கஜேந்திராழ்வானை
அளிப்பான்	காப்பதற்காக,
மழுங்காத வை நுதிய சக்கரம் நல் வலத்தையாய்	மழுங்குதலில்லாத கூர்மை பொருந்திய வாயையுடைய சக்கரப் படையை அழகிய வலத் திருக்கையிலுடையையாய்
புள் ஊர்ந்து	பெரிய திருவடியை வாஹனமாகக் கொண்டு
தோன்றினை	(மடுவின் கரையிலே) வந்து தோன்றினாய்; (இஃது ஒக்கும்;) (இப்படியல்லாமல்)
மழுங்காத ஞானமே படை ஆக	அமோகமான ஸங்கல்ப ரூப ஜ்ஞானமே கருவியாக
மலர் உலகில்	விசாலமான வுலகத்திலே
தொழும்பு ஆயார்க்கு	அடியவர்கட்கு
அளித்தால்	உதவினால்
உன்	உன்னுடைய
சுடர் சோதி	சிறந்த தேஜஸ்ஸு
மறையாதே	குன்றி விடாதோ?

* * * [மழுங்காத.] எம்பெருமானது ஸௌலப்யாதிசயத்தில் ஈடுபட்டுப் பேசுகிற பாசுரமிது. எம்பெருமானுடைய திருவவதாரங்களுக்கு மூன்றுவகையான பிரயோஜனங்கள் பேசப்பட்டுள்ளன: "𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 । 𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 = பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே." என்று சிஷ்டர்களைக் காத்தல், துஷ்டர்களைத் தொலைத்தல், அறநெறியைத் தாபித்தல் என மூவகைப்பட்ட காரியங்களுக்காக எம்பெருமான் அப்போதைக்கப்போது திருவவதாரங்கள் செய்தருள்வதாகச் சொல்லப்பட்டது. இங்ஙனம் மூவகையாகச் சொல்லப்பட்டுள்ள பிரயோஜனங்களை ஆராய்ந்து பார்க்குமளவில் மூன்றுஞ் சேர்ந்து ஒரே பிரயோஜனமாகத் தேறும்; "பரித்ராணாய ஸாதூநாம்" என்பதனாற் சொல்லப்பட்ட ஸாதுஜந ஸம்ரக்ஷணமாகிற காரியம் துஷ்ட நிக்ரஹத்தையும் தர்மஸம்ஸ்தாபநத்தையும் உறுப்பாகக் கொண்டதாதலால் ஸாதுபரித்ராணமென்பதொன்றே அவதார ப்ரயோஜநமென்றதாகும். ஸாதுக்களை ஸம்ரக்ஷிக்க வேண்டில் அதற்காக எம்பெருமான் அவதாரம் செய்ய வேணுமோ? ஸகலஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களையெல்லாம் ஸங்கல்ப லவலேசத்தாலே நிர்வஹித்துப் போருகின்ற பரம சக்தியுக்தனான எம்பெருமான் அந்த ஸங்கல்பத்தைக் கொண்டே ஸாது பரித்ராணமும் செய்தருளக் கூடாமையில்லையே; "மஹர்ஷிகள் வாழ்க; ராவணாதிகள் மாள்க." என்று பரமபதத்தில் வீற்றிருந்தபடியே ஸங்கல்பிக்குமளவால் தலைக்கட்டமாட்டாத காரியமில்லையே; அப்படியிருக்க, எதுக்கு நாட்டில் பிறந்து படாதன படவேணும்? என்று பலர் சங்கிப்பதுண்டு: அந்த சங்கைக்குப் பரிஹாரமாக இராநின்றது இப்பாசுரம்.

ஸாதுக்களை ரக்ஷிப்பதாவது என்ன? என்று ஆராயவேணும்: அவர்களது அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைக் குறையறக் கொடுத்தருள்வது

தானே அவர்களை ரக்ஷிப்பதாவது. ஸங்கல்பத்தாலே அநிஷ்ட நிவ்ருத்தியைச செய்து முடிக்கக் கூடுமாகிலும் இஷ்ட ப்ராபணம் ஸங்கல்ப மாத்ர ஸாத்ய மாகாது; ஏனென்னில்; எம்பெருமானை நேரில் ஸேவிக்கப் பெறவேணுமென்றும், அவனைத் தழுவிமுழுசிப் பரிமாற வேணுமென்றும், குதூஹலங் கொண்ட அடியார்களின் இஷ்டத்தை எங்ஙனே ஸங்கல்பத்தினால் தலைக்கட்ட முடியும்? நேரில் எழுந்தருளி ஸேவை ஸாதித்தேயாக வேண்டுமன்றோ.

இவ்விஷயம் ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய ஒரு வார்த்தையினால் நன்கு விளங்கும்: முதலையின் வாயிலகப்பட்டுத் துடித்து 'ஆதிமூலமே!' என்று கதறின அவன், அக்கூக்குரல் கேட்டு அரை குலையத் தலைகுலைய மடுவின் கரையிலே வந்து நின்ற எம்பெருமானை நோக்கி "[illegible] [illegible] தவ=ஸாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந!, காஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ." என்றான். [என்றேனுமொருநாள் அழிந்தே போகக் கூடியதான இந்த உடலைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நான் கதறினேனில்லை; எம்பெருமானே! உன்னை நேரில் ஸேவித்து உன்றன் பொன்னடிகளில் இத்தாமரை மலர்களைப் பணிமாறுவதற்காகவே கதறினேன் என்றான்.] இப்படிப்பட்ட பக்த சிகாமணிகளின் ஆசையை ஸங்கல்பத்தினால் தலைக்கட்டுதல் எங்ஙனே ஸாத்யமாகும்? ஒருநாளுமாகாது. இவ்விஷயம் இப்பாசுரத்தில் அருளிச் செய்யப்படுகிறது.

"மழுங்காத வைநுதிய சக்கரநல்வலத்தையாய்!" என்ற விளியின் கருத்தாவது—பரமபதத்திலிருந்து கொண்டே திருவாழியாழ்வானை ஏவி முதலையை முடித்திடவல்ல ஆற்றல் உனக்கு உண்டு என்று காட்டுவதாகும். அப்படியிருந்தும் புள்ளூர்ந்துவந்து பொய்கைக்கரையின்கண் காட்சி தந்தது எதற்காகு வென்ன, அக்காரணம் இரண்டாமடியிற் கூறப்படுகிறது. களிற்றுக்குத் தொழும் காதல் என்ற அடைமொழி கவனிக்கத்தக்கது. கஜேந்திராழ்வான் தொழவேணுமென்று கொண்ட காதலை நிறைவேற்றுதற் பொருட்டே புள்ளூர்ந்து தோன்றினை என்றவாறு.

அவதரித்தே செய்யத்தக்க காரியம் ஸங்கல்பத்தினால் செய்யப்போகாது என்பது பின்னடிகளிற் பேசப்பட்டது. [மலருலகில் தொ[illegible] மும்பாயார்க்கு மழுங்காத ஞானமே படையாக அளித்தால், உன் சுடர்ச்சோ[illegible]தி மறையாதே?] மழுங்காத ஞானமென்று பகவத் ஸங்கல்பத்தைச் செ[illegible]ல்லுகிறது. இருந்தவிடத்தேயிருந்து ஸங்கல்பத்தைக்கொண்டே ரக்ஷி[illegible]பபார்க்கில் 'அடியார்க்காக ஓடிவந்து உதவுமவன்' என்கிற ப்ரஸித்தியா[illegible] லுண்டாகும் தேசு மறைந்தொழியுமன்றோ?

திருவரங்கம் ெ[illegible] [illegible]பாரிய ே[illegible]ாயிலில் பெரிய திருவத்யய நோத்ஸவத்தில் இப்பாட்டை ஸேவியாநின்ற அ[illegible]ரையர் "உன் சுடர்ச்சோதி மறையாதே" என்ற

வளவிலே கோஷ்டியிலிருந்த சிற்றாட் கொண்டா னென்கிற ஸ்வாமி 'மறையும் மறையும்' என்றாராம்.

தொழும்பு—அடிமை; ஆயார்க்கு—ஆனார்க்கு; அடிமையானவர்களுக்கு என்றவாறு. ... ... (௯)

மறையாயநால்வேதத்துள்நின்ற மலர்ச்சுடரே *
முறையாலிவ்வுலகெல்லாம் படைத்திடந்துண் டுமிழ்ந்தளந்தாய் *
பிறையேறுசடையானும் நான்முகனுமிந்திரனும் *
இறையாதலறிந்தேத்த வீற்றிருத்தலிதுவியப்பே (௧௦)

மறை ஆய	மறை பொருள்களை யுடையவையான	உமிழ்ந்து	(பிறகு) வெளிப்படுத்தி
நால் வேதத்துள் நின்ற	நான்கு வேதங்களுக்கும் உள்ளுறை பொருளாய் நின்ற	அளந்தாய்	(வாமன மூர்த்தியாய்) அளந்து கொண்ட பெருமானே!
மலர் சுடரே	விகாஸத்தையுடைய சோதிவடிவானவனே!	பிறை ஏறு சடையானும்	சந்திரகலை தங்கிய சடையை யுடையனான சிவபிரானும்
முறையால்	முறைப்படி	நான்முகனும்	நான்முகக்கடவுளும்
இ உலகு எல்லாம்	இவ்வுலகங்களை யெல்லாம்	இந்திரனும்	தேவேந்திரனும்
படைத்து	ஸ்ருஷ்டித்து	இறை ஆதல் அறிந்து ஏத்த	நீயே ஸர்வஸ்வாமி யென்னுமிடத்தை யுணர்ந்து துதிக்குமாறு
இடந்து	(பிரளயத்திலே புக்கு) இடந்தெடுத்து	வீற்றிருத்தல் இது	எழுந்தருளியிருக்கு மிருப்பு
உண்டு	(மஹாப்ரளயத்திலே) திருவயிற்றிலே வைத்து நோக்கி	வியப்பே	ஆச்சரியமோ?

* * * [மறையாய] பிரமன் முதலானோரும் உன் சேஷித்வத்தை யறிந்து ஆச்ரயிக்குமாறு நீ யிருக்குமிருப்பு ஆச்சரியமோ வென்கிறார். "மறையினுள் நின்ற" என்றாவது "நால்வேதத்துள் நின்ற" என்றாவது சொன்னால் போதுமே; 'மறையாய நால்வேதம்' என்பானேன்? என்னில்; கேண்மின்; வேதம் என்றாலும் மறை என்றாலும் பர்யாயம் எனினும் அர்த்தசக்தியில் வாசியுண்டு; வேதம் என்றால் விளங்கக்காட்டுவது என்று பொருள்; மறை என்றால் மறைத்துக் காட்டுவது என்று பொருள். ஆஸ்திகராயிருப்பார்க்குத் தன் அர்த்தங்களை வெளியிட்டுக் காட்டுதலால் வேதம்; பாஹ்யராய் நாஸ்திகரா யிருப்பார்க்கு மறைத்தலால் மறை; ஆகவே, மறையாய நால்வேத மென்றது தகுதியே. "துஷ்ப்ரக்ருதிகளுக்கு மறையாய் ஸத்ப்ரக்ருதிகளுக்கு வேதமாயிருக்கும்" என்றார் பெரிய வாச்சான்பிள்ளையும்.

முறையால்—உலகுக்கெல்லாம் ஸ்வாமியான முறைமையினால்; (அல்லது) பர்யாயந்தோறும்.

பின்னடிகட்கு நட்டு ஸ்ரீஸூக்தி காண்மின் ;—"ஒருவன் ஒரு குழமணனைப்பண்ணி அதின் கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி, அதின் தலையிலே காலைவைத்து 'இது என்னை வணங்கிற்று' என்று இறுமாந்திருக்குமாபோலே 'நன்மைப்புனல் பண்ணி நான்முகனைப் பண்ணி' என்கிறபடியே உன்னாலே மனையப்பட்ட ப்ரஹ்மாவும் அவனாலே ஸ்ருஷ்டரானவிவர்களும் உன்னை யேத்த அத்தாலே இறுமாந்திருந்தாயென்றால் இது உனக்கு ஏற்றமோ? ஹாஸ்யமாய்த் தலைக்கட்டு மத்தனையன்றோ."

வியப்பே—வியப்பன்று என்றபடி. ... ... (கo)

வியப்பாயவியப்பில்லா மெய்ஞ்ஞானவேதியனை *
சயப்புகழார்பலர்வாழும் தடங்குருகூர்ச்சடகோபன் *
துயக்கின்றித்தொழுதுரைத்த ஆயிரத்துளிப்பத்தும் *
உயக்கொண்டுபிறப்பறுக்கும் ஒலிமுந்நீர்ஞாலத்தே (கக

வியப்பு ஆய	(அத்யந்த) ஆச்சர்யகரமானவை	தொழுது	ஸேவித்து
வியப்பு இல்லா	(தன்னிடத்து) ஆச்சர்யகரமாகப் பெறாதவனும்	துயக்கு இன்றி	அவத்ய மென்பதின்றியே
மெய் ஞானம் வேதியனை	மெய்யுணர்வுக்கிடமான வேதங்களால் பேசப்படுபவனுமான பெருமானை,	உரைத்த	அருளிச் செய்த
		ஆயிரத்துள்	ஆயிரத்தினுள்ளே
		இ பத்தும்	இத்திருவாய்மொழி
சயம் புகழார் பலர் வாழும்	ஜயசீலமான புகழையுடைய பல நல்லார் நவிலுமிடமான	ஒலி முந்நீர் ஞாலத்து	ஒலிமிக்க கடல்சூழ்ந்த நிலவுலகத்தில்
தடம் குருகூர்	பெரிய திருநகரிக்குத் தலைவரான	உய கொண்டு	(உள்ள ஸம்ஸாரிகளை) உஜ்ஜீவனப்படுத்தி
சடகோபன்	ஆழ்வார்	பிறப்பு அறுக்கும்	ஸம்ஸார ஸம்பந்தமற்றவர்களாக்கும்.

* * * [வியப்பாய] இத்திருவாய்மொழிக்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார்.

வியப்பாய வியப்பில்லா = வேறோரிடத்திலே கண்டால் ஆச்சரியப்படத் தக்கவை யெல்லாம் இங்கே கண்டால் 'இது என்ன ஆச்சரியம்' என்று உபேக்ஷிக்கும்படியாயிருக்கு மென்க. உலகத்தில் ஒருவன் ஒருவனுக்கு நாலு பசுக்கள் கொடுத்தானென்றால் அது ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கும்; பெருமாள் ஒருவனுக்குப் பதினாயிரம் பசுக்கள் கொடுத்தாரென்றாலும் ஆச்சரியப்படுதற்கு விஷயமில்லையே. ஸ்ரீராமாயண—அயோத்யா காண்டத்தில் முப்பத்திரண்டாம் ஸர்க்கத்திற் கூறப்பட்டுள்ள த்ரிஜட வ்ருத்தாந்தம் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

மெய்ஞ்ஞான வேதியனை = உள்ளது உள்ளபடியே பிரதிபாதிக்குமதான வேதத்தினால் போற்றப்படுபவன் என்க. சயப்புகழார் = ஜயம் என்ற வடசொல்

சய மெனத் திரிந்தது; ஸம்ஸாரத்தை வென்று அதனால் புகழ்பெற்றவர்கள் [விரக்தர்கள்] பலர் வாழுமிடமாம் திருக்குருகூர்.

துயக்கு இன்றித் தொழுது உரைத்த ஆயிரம்—எந்த அர்த்தத்திலும் ஸந்தேஹ வுணர்ச்சியும் விபரீத வுணர்ச்சியு மின்றிக்கே ஸகலார்த்தங்களையும் ப்ரத்யக்ஷீகரித்துப் பேசின ஆயிரம். அதில் இப்பதிகம் கடல்சூழ்ந்த மண்ணுலகில் அஸத்கல்பராக வுள்ளவர்களை உஜ்ஜீவிப்பித்து ஸம்ஸாரஸம்பந்த மற்றவர்களாக்கும் என்றாயிற்று.

உயக்கொண்டு—உய்யக்கொண்டு. ... ... (கக)

அடிவரவு:—முடி கட்கிளைக்கில் பரஞ்சோதி மாட்டா, வருந்தா ஓதுவார் வாழ்த்துவார் மாறுண, மழுங்கா மறையா வியப்பா முந்நீர்.

முதல் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன்
அடிவாரந் தன்னி லழகர்—வடிவழகைப்
பற்றி முடியு மடியும் படிகலனும்
முற்று மனுபவித்தான் மூன்.

முடி ஆர்	கொடுமுடிகள் நிறைந்த	முடியும்	கிரீடமும்
திருமலையில்	திருமாலிருஞ்சோலை மலையில்	அடியும்	சிலம்பும்
மூண்டு நின்ற	மண்டியனுபவித்த	படி கலனும்	திருமேனியிலுள்ள மற்ற ஆபரணங்களுமாகிய
மாறன்	ஆழ்வார்,		
அடிவாரம் தன்னில்	திருத்தாழ்வரையிலே	முற்றும்	முழுமையும்
அழகர்	அழகருடைய	மூன்	முற்காலத்தில்
வடிவு அழகை பற்றி	திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தைப்பற்றி	அனுபவித் தான்	அநுபவித்துப் பேசினார்.

* * * கிளரொளியிளமை யென்கிற கீழ்த்திருவாய்மொழியினால் திருமாலிருஞ்சோலைமலையில் ஈடுபாடு கொண்டிருந்த ஆழ்வார், அத் திருமலையின் அடிவாரத்திலே எழுந்தருளியுள்ள அழகருடைய வடிவழகிலே ஊன்றி திவ்யாவயவ திவ்ய பூஷணங்களை நன்கு அனுபவித்து ஆழ்வாரருளிச் செய்த திருவாய்மொழி இது என்றதாயிற்று. ... ... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஸாச்லிஷ்டாகல்பம் அநுபமஸௌஷமம் நிஸ்ஸீமதீப்தம்
ஸ்வாந்தஸ்வாதுஸ்வதேஹம் ஸுகபஜநபதம் மண்டிதாங்கம் மஹிஷ்யா ।
ஸ்தோத்ராக்ராந்தகீர்த்திம் மலிநிமரஹிதௌஜ்ஜ்வல்யம் இஷ்டௌபவாஹ்யம்
வீதாச்சர்யத்ரிணேத்ரப்ரப்ருதிஸுரநுதிம் [illegible] ॥

1. அங்கை : ஸாச்லிஷ்டாகல்பம். * முடிச்சோதியாய்.* தனது திவ்யாவயவங்களே திவ்யாபரணங்களாகப் பொருந்தப் பெற்றவன் என்கை.

2. அநுபமஸௌஷமம். * கட்டுரைக்கில்தாமரை * உவமைக்குத்தகாத திவ்ய சோபையை யுடையவன்

3. நிஸ்ஸீமதீப்தம். * பரஞ்சோதிநீபரமாய்.* எல்லையில்லாதபடி ஜ்வலித்துக் கொண்டிருப்பவன். (தீப்திம் என்பதும் பாடம்; அப்போது, பஹுவ்ரீஹியாகும்.)

4. ஸ்வாந்தஸ்வாதுஸ்வதேஹம். * மலர்த்துழாய்மாட்டே நீமனம்வைத்தாய்.* தன் திருவுள்ளத்தையும் ஈடுபடுத்தவல்ல திருத்துழாயை யணிந்த திருமேனியை யுடையவன்.

5. ஸுகபஜநபதம். * வருந்தாதவருந்தவத்த.* எளிதாக பஜிக்கக் கூடியவன்.

6. மண்டிதாங்கம் மஹிஷ்யா. * பூவின்மேல் மாதுவாழ்மார்பினாய்.* ஸ்ரீமஹாலக்ஷ்மியினால் அலங்கரிக்கப்பட்ட திருமார்பை யுடையவன்.

7. ஸ்தோத்ராக்ராந்தகீர்த்திம். * சூழ்த்தமார் துதித்தால் உன் தொல்புகழ்மாசூணாதே * யார் துதித்தாலும் நிரக்கேடாம்படியான புகழையுடையவன்.

8 மலிநிமரஹிதௌஜ்ஜ்வல்யம். * மாசூணாச் சுடருடம்பாய்.* அழுக்கற்ற விளக்கம் பொலிந்த திருமேனியை யுடையவன்.

9. இஷ்டௌபவாஹ்யம். * புள்ளூர்ந்து தோன்றினையே.* பெரிய திருவடியாகிற இஷ்ட வாஹனத்தை யுடையவன்.

10. வீதாச்சர்யத்ரிணேத்ரப்ரப்ருதிஸுரநுதிம். * பிறையேறு சடையானு மித்யாதி.* முக்கண்ணன் நான்முகன் ஆயிரக்கண்ணன் முதலான அமரர் புகழ நிற்பது வியக்கத்தகாதபடி யுள்ளவன்.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை முடிச்சோதியாய் என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார் [சித்ரஸௌந்தர்யவித்தம் வக்தி] அற்புதமான அழகு நிரம்பியவனாக அருளிச் செய்தார்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஆத்யே த்ருதீயஶதகஸ்ய வநாத்ரிநாத:
ஆபாதமௌள்யவயவாபரணாபிரூப்யம் ।
ப்ரஹ்மாதிவாகவிஷயம் ச மஹாநுபாவம்
ஸம்ஸ்துத்ய ஹ்ருஷ்யதி ஸஹஸ்ரஜிஹ்வஶம்ஸம் ॥

(கருத்து.) மூன்றாம்பத்தின் முதல் திருவாய்மொழியில் ஆழ்வார் திருமாலிருஞ்சோலை யழகருடைய பாதாதிகேசாந்தமான அழகையும் திருவாபரண ஸௌந்தரியத்தையும், பிரமன் முதலானோருடைய துதிக்கும் எட்டாத பெருமேன்மையையும் பேசியருளினார் என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—••◈••—

மூன்றாம்பத்து—இரண்டாந்திருவாய்மொழி, முந்நீர்ஞாலம்படைத்த.

———(o)———

அவதாரிகை:—மிக்க தாஹங்கொண்டவன், நல்ல தீர்த்தம் ஸமீபத்திருக்கச் செய்தே வாய் மூடிக்கிடந்தால் துடிக்குமாபோலே, ஆழ்வாரும், தமக்குப் பரமபோக்யமான விஷயம் ஸமீபத்ததாய்த் தமக்கு ஆசையும் மிக்கிருக்கச் செய்தே, விஷயத்தின் பெருமையாலே அது தம்மால் அநுபவிக்க அஸாத்யமாகவே, 'ப்ரக்ருதி ஸம்பந்தம் காரணமாக நம்முடைய கரணங்கள் ஸங்குசிதங்களாயிருக்கையாலன்றோ பகவத் விஷயத்தை நாம் பரிபூர்ணமாக அநுபவிக்க முடியாமல் துவள்கிறோம்' என்று கொண்டு வருத்தமுற்றவராய், எம்பெருமான் விசாலமான திருவுள்ளங்கொண்டு செய்தருளின காணகளேபர ப்ரதானமும், ஜகத்தில் அப்பெருமான் பண்ணின பலபல திருவவதாரங்களும் என்னளவில் பயன்பட வில்லையே!; நான் ப்ராக்ருத ஸம்பந்தம் கழிந்து எம்பெருமானைப் பெற்று முற்றாட்டாக அநுபவித்து ஆனந்திக்க அவகாசமில்லை யாகிறதே!' என்று நினைந்து நைந்து உள் கரைந்துருகியிருக்க, அவ்வளவிலே எம்பெருமான், அவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களும் இழக்க வேண்டாதபடி தான் திருவேங்கட மலையில் நின்றருளினபடியைக் காட்டி ஆழ்வாரை ஒருவாறு ஸமாதா

ணப்படுத்தத் திருவுள்ளங் கொண்டு, 'ஆழ்வீர்! நீர் ஏன் துவள்கின்றீர்? நம்மைப் பூர்ணமாக அநுபவிக்க முடியாமைக்குக் காரணம் கரணஸங்கோசமென்று நீர் நினைக்கின்றீர் போலும்; அங்ஙனம் நினைக்கவேண்டா; கரணஸங்கோசமில்லாதவர்களான அமரர்களும் நம்மை அநுபவிக்குமிடத்து, அவர்களும் உம்மைப்போலவே யன்றோ துவள்வது; விஷயம் அளவிட முடியாததாகையாலே பரிபூர்ணாநுபவம் செய்ய முடியவில்லையே யென்கிற தளர்ச்சி உம்மோடு அமரர்களோடு வாசியற அனைவர்க்கும் பொதுவானதே காணும்; அதுபற்றி நீர் தளரவேண்டா; நீர் நினைத்தபடியெல்லாம் நம்மோடு பரிமாறலாம்படி நாம் வடக்குத் திருமலையிலே நின்றருளியில் கிட்டி யநுபவித்து மகிழ்வீர்' என்ன; ஆழ்வாரும் ஒருவாறு ஸமாதான மடைந்தவராய் இனிமையோடே தலைக்கட்டுகிறார். (பத்தாம்பாட்டில் இனிமை காணத்தக்கது.)

பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கையில் பகவத்விஷய காலக்ஷேபம் நடவாநிற்க, இத்திருவாய்மொழி வந்தவாறே சிராமப்பிள்ளை கேட்டார்;—ஆழ்வார் இப்போது பரமபதாநுபவத்தை ஆசைப்பட்டிருந்தாராகில் அது ஒரு தேச விசேஷத்திலே சென்று அநுபவிக்க வேண்டியதாகையாலே இங்குக் கிடைக்கவில்லையே! என்று துடிக்கலாம்; இப்போதோ இவர்க்குப் பரமபதாநுபவம் விவக்ஷிதமாக இல்லை; ராமக்ருஷ்ணாதி அவதாரங்களில் அநுபவிக்க ஆசை கொண்டிருந்தாலும் அவை ஒரு காலவிசேஷத்திலே கழிந்துவிட்டனவே! என்றுவது துடிக்கலாம்; இப்போது அவதாரங்களில் அநுபவாபேக்ஷை சென்றதாக இல்லாமையாலே அந்தத் துடிப்புக்கும் அவகாசமில்லை; கீழே நடந்த திருவாய்மொழியோ * முடிச்சோதியாய் * என்பது; அழகர் திருமலையிலே அனுபவிக்க இழிந்தவரிவர் என்பது அதனால் ஸ்பஷ்டமாகின்றது: அர்ச்சாவதாரத்திலுண்டான அநுபவாபேக்ஷை தலைக்கட்டாமற் போகக் காரணமில்லையே; மேன்மேலும் மனோரதப்படி அனுபவிக்கலாமே; இழந்து நோவு படுகைக்குக் காரண மென்கொல்?—என்று.

அதற்கு பட்டர் அருளிச் செய்த ஸமாதானம்:—ஆழ்வார் அநுபவிக்க ஆசைப்பட்ட விடம் பரமபதமாறு லென்ன? வ்யூஹமாறுலென்ன? விபவாவதாரமாறுலென்ன? அர்ச்சாவதாரமாறுலென்ன? அதுபற்றி ஒரு வாசியில்லை. தர்மியின் ஐக்யத்தாலே விஷயம் எங்கும் ஒருபடிப்படப் பூர்ணமாகவேயுள்ளது. அர்ச்சாவதாரங்களை நாமெல்லாரும் அனுபவிப்பது போலன்றே ஆழ்வார் அனுபவிப்பது. அங்கும் விஷயத்தைப் பூர்ணமாக அனுபவிக்க ஆசைப்பட்டார்; அது அஸாத்யமானமையாலே தளர்ந்தார்—என்று.

முந்நீர்ஞாலம்படைத்த எம்முகில்வண்ணனே *
அந்நாள்நீதந்த ஆக்கையின்வழியுழல்வேன் *
வெந்நாள்நோய்வீய வினைகளைவேரறப்பாய்ந்து *
எந்நாள்யானுன்னை யினிவந்துகூடுவனே. (க)

மூந்நீர் ஞாலம் படைத்த	கடல் சூழ்ந்த இவ்வுலகை ஸ்ருஷ்டித்தவனும்	வெந்நாள்	(உணர்ச்சி யுண்டான பின்பு) பரிதாபமயமான நாளிலே
எம் முகில் வண்ணனே	மேகத்தின் தன்மை போன்ற தன்மையை யுடையவனுமான எம்பெருமானே!	நோய் வீய	வியாதிகள் தீரும்படி
அந்நாள்	அந்த ஸ்ருஷ்டி ஸமயத்தில்	வினைகளை	கரும பந்தங்களை
நீ தந்த	நீ கொடுத்தருளின	வேர் அற பாய்ந்து	வேர்ப்பற்றோடே அறுத்துத் தொலைக்கப் பெற்று
ஆக்கையின்	சரீரத்தினுடைய	யான்	அடியேன்
வழி	வழியிலேயே	உன்னை	(மஹோபகாரகனான) உன்னை
உழல்வேன்	நடந்து கெட்டுத் திரிகின்றேன்;	இனி என்நாள் வந்து கூடுவன்.	அடையப் பெறுவது இனி என்றைக்கோ?

* * * [மூந்நீர்ஞாலம்.] உன்னை யடிபணிந்து உய்வதற்காக நீ தந்தருளின சரீரத்தைக் கொண்டு உன்னைப் பணியாமல் அவ்வுடலின் வழியே யொழுகி அநர்த்தப்பட்டேன்; நான் உன்னை என்று ஸேவிக்கப் பெறுவது என்று ஆர்த்தராய்க் கூப்பிடுகிறார்.

மூந்நீர் = ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் [மழை நீர்] என்னும் மூன்று வகை நீரை யுடையது எனப் பண்புத் தொகைபன்மொழியாகிய காரணப் பெயரென்பது பழைய கொள்கை. இதனை மறுத்துக் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்; ஆற்று நீரென்பது மழைநீரே யாகையாலும், இவ்விரண்டு மில்லாத போது ஊற்றுநீரு மில்லையாகையாலும் இவற்றை மூந்நீரென்று சொல்வது பொருந்தாதென்று சொல்லி வேறு பொருள் கூறுகின்றார்; அதாவது—முச்செய்கையையுடைய நீர் மூந்நீரென்பதாம். முச்செய்கையாவது—மண்ணைப் படைத்தலும் மண்ணை யழித்தலும் மண்ணைக் காத்தலுமாம். நீரினின்று நிலம் பிறந்ததென வேதமோதுதலால் படைத்தலும், நீரின்றி உலகம் பிழையாதாதலால் காத்தலும், இறுதியில் நீரினால் மூடப்பட்டு உலகம் அழிதலால் அழித்தலும் ஆக முத்தொழில்களும் கடலுக்கு உரியனவாம். நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவே. நம்பூர்வாசாரியர்கள் மூன்றுவகை நீரையுடையதென்னும் பொருளையே ஆதரிப்பர். இவ்விடத்து ஈட்டிலும் இப்பொருளே யுள்ளது. முந்நீர் என றன்னகரமாகப் பாடமோதிப் பழைய நீர் என்றுரைத்திருப்பது முண்டு. ஆதியிற் கடவுள் நீரையே படைத்தாரென்று நூல்கள் கூறும். „அபஏவ ஸஸர்ஜாதௌ—அப ஏவ ஸஸர்ஜாதௌ." என்கிற மநுஸ்ம்ருதிப்ரமாணமும் இங்கு ஈட்டில் உபாத்தம்.

எம்முகில் வண்ணனே! = எம்பெருமான் உலகங்களைப் படைத்ததெல்லாம் ஆழ்வார் தமக்காகவே யென்று கொண்டிருக்கின்றமை எம் என்பதனால் தொனிக்கும், முகிலுக்கும் எம்பெருமானுக்கும் ஸாம்யம் நிறத்தினால் மாத்திர

மன்று; தன்மைகள் பலவற்றுமுண்டு: சில தன்மைகளை இங்குக் குறிப்பிடுவோம்;—

1. பெய்யவேண்டு மிடத்தளவுஞ்சென்று பெய்யும் மேகம்; எம்பெருமானும் "வந்தருளியென் னெஞ்சிடங்கொண்ட வானவர் கொழுந்து" என்றும் "[illegible]—பத்ப்யாம் அபிகமாச்சைவ." என்றுஞ் சொல்லுகிறபடியே ஆங்காங்குச் சென்றருளி அநுக்ரஹிப்பன்.

2. மின்னலுள்ள காலம் நீர் நிரம்பியிருக்கும் மேகம்; எம்பெருமானும் மின்னல்போன்ற பிராட்டியோடு கூடியிருக்குங் காலத்திலே க்ருபாரஸம் விஞ்சப் பெற்றிருப்பன். "இவள் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்ற முமுக்ஷுப்படி திவ்ய ஸூக்தியுங் காண்க.

3. மொண்ட இடத்திலும் பெய்யும் மேகம்; தனக்கு உபதேசித்தவர்களுக்கும் உபதேசிக்குமவன் எம்பெருமான்: வஸிஷ்டாதிகளுக்கும் ஜ்ஞாநப்ரதாநம் பண்ணினனிறே ஸ்ரீராமபிரான். சித்திரகூடத்திலே வஸிஷ்டன் பெருமாள் பக்கலில் சில தர்ம ஸூக்ஷ்மங்கள் கேட்கப் பெற்றானாயிற்று. "[illegible] ... [illegible]" [ஸ்ரீராமா! உன்றன் தந்தைக்கும் நான் ஆசாரியனாகையாலே என் சொல்வழியே நீ நடக்கக்கடவை; மீறி நடக்கலாகாது.] என்று செருக்கிக் கிளர்ந்த வஸிஷ்டனையும் வாய் மூடுவித்தார் பெருமாள் சில தரும மருமங்களைச் சொல்லி.

4. பெய்யப்பெறாத காலத்திலே வறக்கும் மேகம். எம்பெருமானும் த்ரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப்பெறாத குறைக்காக "ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி" [பரிபவப்பட்டுக் கதறின பாஞ்சாலிக்கு நான் அப்போது தூரஸ்தனாயிருந்த துயரம் கடன் வளர்ந்த துயரம்போல் எனது நெஞ்சைவிட்டு நீங்கலது] என்று நெஞ்சுலர்ந்து பேசினானிறே.

5. இன்ன காலத்திலே மேகம் பெய்யுமென்று அறுதியிடவல்லார் ஆருமில்லை: பெய்யவேண்டிய காலத்தில் பெய்யாதொழியவும், பெய்வதற்கு ஸம்பாவனை யில்லாத காலத்தில் அசிந்திதமாக வந்து பெய்யவுங் கடவது மேகம். எம்பெருமான் படியுமப்படியே; "வந்தாய் போலே வாராதாய் வாராதாய் போல் வருவானே" என்றது காண்க. த்ரௌபதிக்கு ஆபத்திலே வந்து முகங்காட்டாதொழிந்தான். அபேக்ஷாநிரபேக்ஷமாகத் * தாவியன்றுலக மெல்லாம் தலைவிளாக் கொண்டான்.

6. 'வனத்திடரை ஏரியாக வெட்டியாயிற்[illegible] மழை பெய்தாக வேணும்' என்று நிர்ப்பந்தித்து விளைப்பிட வொண்[illegible] மேகம்; எம்பெரு

மான்படியும் இங்ஙனேயாம்; * பெண்ணுலாஞ் சடையினனும் பிரமனும் (உன்னைக்) காண்பான் எண்ணிலா ஊழியூழித் தவஞ் செய்தார் வெள்கிநிற்ப, விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கு அன்றருளை யீந்தவனிறே.

7. ஜலஸ்தல விபாகமின்றியே பெய்யும் மேகம். எம்பெருமானும் நீசர் உத்தமர் என்னும் வாசியின்றியே அருள் பொழிவன். [[illegible] [illegible].] "வேடன் வேடுவிச்சி பக்ஷி குரங்கு சராசரம் இடையர் தயிர்த் தாழி கூனி மாலாகாரர் பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர் அவன் மகன் அவன் தம்பி ஆனை அரவம் மறையாளன் பெற்ற மைந்தன்" (ஆசார்ய ஹ்ருதயம்.) என்னும்படியிறே பகவத் விஷயீகாரம் பெற்றவர்களிருப்பது.

8. „ [illegible]
ஹைமே கர்ஜதி சாதி ந வர்ஷதி வர்ஷாதி வர்ஷாஸு நிஸ்ஸ்வநோ மேக:" [மேகம் சரத்காலத்தில் வெறுமனே கர்ஜித்துப் போய்விடும், மழை பெய்யாது; பெய்யுங் காலத்தில் ஆடம்பரமறப் பெய்யும்.] எம்பெருமான் குசேலனுக்கு அருள் செய்தபடி இங்ஙனேயிறே.

9 விராடபர்வ காலக்ஷேபத்திற்கு வரும் மேகம்; பகவத்விஷய காலக்ஷேபங்களிலே வந்துநிற்பன் எம்பெருமான்: ஸ்ரீசைலேசதயாபாத்ர மென்று வந்தானிறே ஸ்ரீரங்கநாதன் பெரிய ஜீயர் கோஷ்டியிலே.

10. சுக்திகளிற் பெய்து முத்தாக்கும் மேகம்;—அடியார்க்கு இன்ப மாரியாகிய எம்பெருமானுடைய கடாக்ஷ தாரையும் ஆழ்வாராசார்யர்களிடத்தே ப்ரவஹித்து மிக்க பயன் விளைக்குமிறே.

11. "விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்" இத்யாதிப்படியே தூதுவிடப்படும் மேகம்; எம்பெருமான்றானும் * இன்னார் தூதனென நின்றான்; * கோதை வேலைவர்க்காய் மண்ணகலங் கூறிடுவான் தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான்.

12. „ [illegible] [illegible]
பர்ஜந்ய! ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாகமர்க்கவ்ருக்ஷாணாம் பூர்வபத்ரேஷு ஸம்ஶய:." [மழை பெய்ய எல்லா மரங்களும் தளிர்க்கும்; எருக்கிலை போல்வன வீழ்ந்தொழியும்.] ஆகவே. மழை சிலர்க்குத் தீங்கு; சிலர்க்கு நன்மை. எம்பெருமான்படியு மப்படியே. "கஞ்சன்நாள்கவர் கருமுகில் லெந்தாய்!" "தாயர்மகிழ ஒன்னார் தளர." "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்" இத்யாதி.

13. "எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்" என்கிறபடியே பயிர்கள் வேறுபுகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும் மேகம். "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று அநந்யகதிகளால் ப்ரதீக்ஷிக்கப்படுவன் எம்பெருமான்.

14. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய்தூஉம் மழை" (திருக்குறள்) என்கிறபடியே அன்னத்தின் அபிவிருத்திக்கு ஹேதுவாகையாலே போகஸாதநமாயும், விடாய்தீரப் பருகப்படுகையாலே ஸ்வயம் போக்யமாயுமிருக்கும் மேகம்; "உவாயொவெயகெவ தஷிஹ தவ தசவ்ட—உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம்" என்கிறபடியே ப்ராபகனும் ப்ராப்யனுமிறே எம்பெருமானிருப்பது.

15. எத்தனை கண்ணநீர் விழவிட்டாலும் விருப்பமில்லாதவன்று வாளாகிடக்கும் மேகம; பரதாழ்வான் "ஸஹிஸ ஸசிவெவஸாய-ஃ ஶிரஸா யாவிதொ மயா ॥ ஹ்ராதுஶிஷ்யஸ்ய தாஸஸ்ய ஹ்ரஸாதம் கதுமஹஸி — ஏபிச் ச ஸசிவைஸ் ஸார்த்தம் சிரஸா யாசிதோ மயா, ப்ராதுச் சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்துமர்ஹஸி" என்று பலருடனே சித்ரகூடபர்வதத்திலே போந்து கண்ணநீரை விழவிட்டு வேண்டின விடத்தும் "ஸகாரஉகவாவெஷுவ" என்று மநோரதம் தலைக்கட்டப் பெறுமலே மீண்டானிறே.

இங்ஙனே மற்றும்பல உவமைப் பொருத்தங்களும் கண்டு கொள்க.

அந்நாள் நீதந்த ஆக்கையின் வழியுழல்வேன் = கரணகளேபரங்களையிழந்து இறகொடிந்த பக்ஷிபோலே கிடந்த காலத்து, உன்னை யடிபணிந்து உஜ்ஜீவிக்கைக் குறுப்பாக நீ கொடுத்தருளின தேஹத்தைக் கொண்டு வாழகில்லாமல், தேஹம் செல்கிற வழியே நாளும் செல்பவனானேன்; நீ எண்ணின எண்ணம் மாறுபாடாகப் பலித்ததுகாண் என்றவாறு.

பின்னடிகளின் கருத்து:—உன்னைப் பிரிந்து தரிக்க கில்லாமல் செல்லுகிற நாளில், பிரிந்து நோவுபடுகைக்கிடான பாவங்களை வேரறுத்து உன்னடி சேர்ந்து உய்வது என்றைக்கோ? ... ... (க)

வன்மாவையமளந்த எம்வாமனா * நின்
பன்மாமாயப்பல்பிறவியில் படிகின்றயான் *
தொன்மாவல்வினைத் தொடர்களைமுதலரிந்து *
நின்மாதாள்சேர்ந்து நிற்பதெஞ்ஞான்றுகொலோ. (உ)

வல்	வலிமைதங்கிய
மா	பெரிய
வையம்	பூமியை
அளந்த	(மஹாபலியிடத்தில் பிக்ஷை பெற்று) அளந்து கொண்ட
எம் வாமனா	எமது வாமன மூர்த்தியே !
நின் பல் மா மாயம்	உனது திருவிளையாடலுக்குக் கருவியான, குண வேற்றுமையாலும் காரிய வேற்றுமையாலும் பலவகைப்பட்ட பெரிய மாயையாகிய பிரகிருதி மூலமான
பல் பிறவியில்	தேவர் முதலிய பலவகைப் பிறப்பில்
படிகின்ற	பொருந்தி வாழ்கின்ற
யான்	நான்,
தொல்	பழமையான
மா	பெரிய
வல்	உறுதியான
வினை	பாவங்களினுடைய
தொடர்களை	அநுபந்தங்களை
முதல் அரிந்து	வேரோடே அறுத்து
நின்	(ப்ராப்யனான) உன்னுடைய
மா தாள்	சிறந்த திருவடிகளை
சேர்ந்து	அடைந்து
நிற்பது	நிலை பெற்றிருப்பது
என்று கொல்	என்றைக்கோ ?

* * * [வன்மாவையமளந்த] ஜலஸ்தல விபாகமில்லாமல் எல்லார் தலைமேலும் நீ திருவடிகளை வைத்தருளின காலத்தையும் தப்பின நான் இனி உன் திருவடிகளில் வந்து சேர்வது என்றைக்கோ வென்கிறார். இங்கே ஈட்டின் அவதாரிகை பரமபோக்யம். அதாவது—" உம்முடைய உடம்பு கொண்டு நாமிருந்தவிடத்தே வந்துகிட்ட மாட்டிற்றிலீராகில், நம்முடம்பைக் கொண்டு நீரிருந்தவிடத்தே வந்து கிட்டினோமே ; வாமன வேஷத்தைக் கொண்டு மஹாபலி முன்னே வந்து நின்றோமே ; அங்கே கிட்ட மாட்டிற்றிலீரோ வென்ன அதுக்கும் தப்பினே னென்கிறார் " என்று.

மிகக் கடினமான பூமிப்பரப்பை யெல்லாம் மெல்லிய திருவடிகளாலே அளந்து, அந்தச் செயலாலே என்னை யீடுபடுத்திக் கொண்ட வாமன மூர்த்தியே! யாவரையும் மயக்க நீ வைத்த மூலப்ரக்ருதியிலே தேவ மநுஷ்யாதி ரூபத்தாலே பலவகைப்பட்ட பிறப்புக்களில் சிக்கிக்கொண்டே கிடக்கிற நான், ஸர்வேச்வரனான உன்னாலும் அறுக்க முடியாதபடியான பாபத் தொடர்ச்சிகளை முதலிலே யறுத்து உன்னுடைய திருவடிகளைச் சேர்ந்து நான் நிலை பெறுவது என்றைக்கோ என்றாராயிற்று.

இப்பாசுரத்தின் இனிமையே வடிவெடுத்த ஆறாயிரப்படி காண்மின் ;— " இப்படி நீதந்த உபகரணத்தைக் கொண்டு பின்னையும் நான் ஸம்ஸார ஸமுத்ரத்திலே போய்விழுமளவில் என்னை யெடுத்தருளுகைக்காக இங்கே புகுந்தருளினாய்; பின்னையும் உனக்கெட்டாததொரு படி நான் அந்த ஸம்ஸாரமாகிற கடலினுள்ளே போய் அழுந்தா நின்றேன். இப்படி இக்கடலிலே யழுந்துகைக்கு ஹேதுவாய் அநாதிஸித்தமாய் மஹாபலவத்தாயிருந்த என்னுடைய பாப பரம்பரைகளை முதலரிந்து உன்னுடைய நிரவதிக போக்யமான திருவடிகளை நான் சேர்ந்து பின்னையொரு காலமும் பிரியாதே நிற்பது என்றோ வென்கிறார்." (உ)

கொல்லாமாக்கோல் கொலைசெய்துபாரதப்போர் *
எல்லாச்சேனையும் இருநிலத்தவித்தவெந்தாய் ! *
பொல்லாவாக்கையின் புணர்வினையறுக்கலறா *
சொல்லாயானுன்னைச் சார்வதோர்சூழ்ச்சியே. (ரு)

கொல்லா	கொல்லுகைக்குக் கருவி யல்லாமல்	பொல்லா	துன்பங்களுக்குக் காரணமான
மா	குதிரையை நடத்துவதான	ஆக்கையின்	சரீரத்தினுடைய
கோல்	சாட்டையே கருவியாக	புணர்வினை	சம்பந்தத்தை
கொலை செய்து	(எதிரிகளை) முடித்து	அறுக்கல் அறா	அறுக்க எண்ணினாலும் அது அறுபடாது;
பாரதம் போர்	பாரத யுத்தத்தில்	யான்	(இதிலே அகப்பட்ட) நான்
எல்லாச் சேனையும்	(பூமிக்குச் சுமையாயிருந்த) எல்லாப் படைகளையும்	உன்னை	(ஸர்வ சக்தனான) உன்னை
இரு நிலத்து	இப்பெரிய பூமியில்	சார்வது	கிட்டுவதாகிய
அவித்த	தொலைத்த	ஓர் சூழ்ச்சி	ஒருபாயத்தை
எந்தாய்	ஸ்வாமியே !,	சொல்லாய்	சொல்லியருள்.

* * * [கொல்லாமாக்கோல்.] ஸ்ரீவாமன மூர்த்தியான காலத்தில் தப்பினவர்களையும் விஷயீகரிப்பதற்காக ஸ்ரீக்ருஷ்ணனாய் வந்து அவதரித்த காலத்திலும் தப்பினேனென்கிறார்.

பாரதப்போரில் பஞ்ச பாண்டவர்களே எதிரிகளை முடித்தார்கள் என்று அவிவேகிகள் நினைப்பர்கள்; அவர்களை வியாஜ மாத்திரமாக வைத்துக் கொண்டு கண்ணபிரானே பூமியின் பாரங்களைத் தொலைத்தருளினன் என்பது உண்மை: அப்போது கண்ணபிரானது திருக்கையில் ஒரு கோல் இருந்தது; அதுதான் துரியோதனாதியரைக் கொலை செய்யக் கருவியாயிருந்தது. அதனை ஆழ்வார் இங்குக் "கொல்லாமாக் கோல்" என்கிறார். கொல்லுகைக்குக் கருவியாக அல்லாமல் குதிரையை நடத்தக்கடவதான முட்கோலாலே கொலை செய்ததாக அருளிச் செய்கின்றார். இங்கு உணரவேண்டிய விஷயமாவது :—கண்ணபிரான் பள்ளிகொண்டிருக்கும்போது துரியோதனனும் அர்ஜுநனுமாகப் படைத்துணை வேண்டிவந்தார்கள். துரியோதனன் தான் மஹா ப்ரபுவாகையாலே திருமுடிப் பக்கத்திலே யிருந்தான். அர்ஜுநன் திருவடிவாரத்திலேயிருந்தான். கண்ணபிரான் பள்ளியுணர்ந்து எழுந்தவுடனே திருவடிவாரத்தில் அர்ஜுநனை முந்துறமுன்னம் கடாக்ஷிக்கும்படியாயிற்று. பிறகு துரியோதனனையும் பார்த்தான். இருவரையும் குசலப்ரச்நம் பண்ணிவிட்டு 'நீங்கள் இங்கு வந்த காரியம் என்ன?' என்று கேட்கையில், துரியோதனன் 'நான் முன்னே வந்தேன்; என் காரியமே முக்கியமாகச் செய்ய வேணும்' என்ன; அது கேட்ட கண்ணபிரான் 'நீ முன்னம் வந்திருக்கலாம்; ஆனாலும் நான் முன்னம் பார்த்தது

அர்ஜுநனையே; அது கிடக்கட்டும்: உங்களுடைய அபேக்ஷிதம் இன்னதென்று சொல்லிக்கொள்ளுங்கள்' என்ன; 'இப்போது நடக்கப்போகிற யுத்தத்திற்குத் துணை செய்ய வேண்டும்' என்று இருவரும் அபேக்ஷிக்க; முந்துறமுன்னம் இவ்விடம் வந்தானென்கிற காரணம் பற்றித் துரியோதனனுக்கும், முந்துற முன்னம் காணப்பட்டானென்கிற காரணம் பற்றி அர்ஜுனனுக்கும் ஆக இருவர்க்கும் நான் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேனென்று தெரிவித்து, "நவகோடி நாராயணர்களை ஒருவன் கொள்ளுவது, என்னை யொருவன் கொள்ளுவது; அந்த நாராயணர்கள் நல்ல வல்லமையுடன் போர் புரியக் கூடியவர்கள்; நான் ஒரு காரியமும் செய்ய மாட்டேன்" என்று கண்ணபிரான் சொல்ல, 'ஒரு காரியமும் செய்யமாட்டேனென்கிற கண்ணனைக் காட்டிலும் மிக வல்லவர்களான நாராயணர்களே நமக்கு இருக்கத்தகும்' என்றெண்ணிய துரியோதனன் அவர்களை வேண்டினான்; ஒரு காரியமுஞ் செய்யாவிடினும் கண்ணபிரானுடைய பக்ஷபாதமே நமக்குப் பாங்கு என்றெண்ணிய அர்ஜுநன் கண்ணனை வேண்டினன். பிறகு பீஷ்மர் முதலானோர் துரியோதனனது மூடத்தனத்திற்கு மிகவும் மனம் நொந்து "மூர்க்கா! இப்படியுஞ் செய்வாயோ? இனி அநுதபித்துப் பயனில்லை; கண்ணனிடம் கடுக ஓடிச் சென்று நீ ஆயுதமெடுத்துக் காரியம் செய்யாமல் வெறுமனே யிருக்க வேணுமென்று உறுதி பெற்றுக்கொள்" என்று சொல்லியனுப்ப, அவனும் ஓடிவந்து அங்ஙனமே வேண்டி உறுதிபெற்றுக் கொண்டானாதலால் கண்ணபிரானது கையிலிருந்த கோல் எதிரிகளின் கொலைக்கு உபகரணமன்றியே குதிரையை நடத்துகிற கோலாகவே யிருந்ததென்று இங்கு ஆழ்வார் அருளிச் செய்தாராயிற்று.

எல்லாச்சேனையும் அவித்த = "சத்ரு ஸேனையோடு பாண்டவ ஸேனையோடு வாசியற பூபாரமான ஸமஸ்த ஸேனையையும் நசிப்பித்த" என்பது பன்னீராயிரப்படி. ஈட்டு ஸ்ரீஸூக்தி:—"தூர்வர்க்க மடையத் திரண்டதிறே உபய ஸேனையிலும். இங்கே நாலைந்து பேரும் அங்கே ஒன்றிரண்டு பேரு மொழிய முடித்துப் பொகட்டானாயிற்று." (இங்கே நாலைந்து பேரென்றது தர்ம புத்ராதிகளை; அங்கே ஒன்றிரண்டு பேரென்றது அச்வத்தாம க்ருபாசார்ய க்ருதவர்மாக்களை.)

பொல்லாவாக்கையின் புணர்வினை அறுக்கல் அறு = 'புணர்வினை' என்றதை முழுச் சொல்லாகக் கொள்வது முண்டு. புணர்-வினை என்று இரண்டு சொல்லாகக் கொள்வதுமுண்டு. முழுச்சொல்லாகக் கொள்ளுமளவில், [புணர்வு இன் ஐ] என்று கொள்க. இன் - சாரியை; ஐ - இரண்டனுருபு. புணர்வை என்றபடி: சரீர ஸம்பந்தத்தை என்றதாயிற்று. 'அறுக்கலறு' என்றதற்கிணங்கப் 'புணர்வு' என்று முதல் வேற்றுமையாகவே யிருக்க வுரியது. இரண்டாம் வேற்றுமையாகச் சொன்னது வார்த்தைப் பாடு. இனி, புணர் - வினை என்று பிரிக்குமளவில் 'ஒன்றோடொன்று பிணைந்திருக்கிற பாபங்கள்' என்றவாறு. சரீரத்திற்கு மூலமான பாபங்களைச் சொன்னபடி.

அறுக்கல் அறு = இராவணன் தலைபோலே முளையாநிற்கும்.

யானுன்னைச் சார்வதோர்சூழ்ச்சி சொல்லாய் = சிறையிலே கிடப்பாரைப் போலே ப்ரக்ருதியோடே பிணையுண்டிருக்கிற நான், ஒரு தேச விசேஷத்திலே நித்யஸூரிகள் அநுபவிக்கவிருக்கிற வுன்னைக்கிட்டி வாழ்வதற்குறுப்பான ஒரு உபாயமருளிச் செய்யவேணும். "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: — அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:" என்று சொல்லி ஈரக்கையாலே தடவியருள வேணுமென்கை. ... (ரு)

சூழ்ச்சிஞானச் சுடரொளியாகி * என்றும்
ஏழ்ச்சிக்கேடின்றி யெங்கணும்நிறைந்தவெந்தாய் *
தாழ்ச்சிமற்றெங்கும்தவிர்ந்து நின்தாளிணைக்கீழ்
வாழ்ச்சி * யான்சேரும் வகையருளாய்வந்தே. (௬)

சூழ்ச்சி	(எல்லாவற்றையும்) சூழ்ந்து கொள்ளுகிற	மற்று எங்கும்	உன்னைத்தவிர எந்த விஷயத்திலும்
சுடர் ஒளி	மிகவும் விலக்ஷணமான	தாழ்ச்சி தவிர்ந்து	கால் தாழ்ந்திருப்பதை விட்டு
ஞானம் ஆகி	ஞானத்தை யுடையையாய்	நின் தாள் இணை கீழ்	உனது உபய பாதங்களின் கீழே
என்றும்	எக்காலத்திலும்	வாழ்ச்சி	வாழ்ந்திருக்குமிருப்பை
ஏழ்ச்சி கேடு இன்றி	விகாஸமும் ஸங்கோசமு மில்லாமல்	யான் சேரும் வகை	யான் அடையும் விதத்தை
எங்கணும்	எவ்விடத்திலும்	வந்து	(என்கண் முன்னே) வந்து தோன்றி
நிறைந்த	வியாபித்திருக்கின்ற	அருளாய்	அருளிச் செய்யவேணும்.
எந்தாய்	எமது ஸ்வாமியே!,		

* * * [சூழ்ச்சிஞானம்] பெருமானே! அவதாரங்களுக்குத் தப்பினேன் என்பது மாத்திரமேயோ? எல்லாரையும் ரக்ஷிக்கைக்காக நீ ஸர்வ வ்யாபியாயிருக்கிற இருப்பும் எனக்குக் கார்யகரமாகவில்லையே, நான் உன்னைப் பெறும் வழி நீயே பார்த்தருள வேணுமென்கிறார். ஸமஸ்த சேதநரையும் உன் பக்கலிலே சூழ்த்துக் கொள்ளவற்றான அத்யந்த விலக்ஷண ஜ்ஞானத்தை யுடையையாய், ஸங்கோச விகாஸங்களொன்றுமின்றியே என்றைக்கும் எவ்விடத்தும் வியாபித்து என்னை அடிமை கொள்வதற்காக விருக்கிறவனே! உன் திருவடிகளொழியப் புறம்புண்டான விஷயங்களில் நசை யெல்லாமற்று உன்றன் பொன்னடிகளில் பரம போக்யமான கைங்கரியத்தை நான் பெறும்படி இன்னுமோர் திருவவதாரம் பண்ணியாகிலும் செய்தருளவேணும் என்கிறார்.

சூழ்ச்சி ஞானச் சுடரொளியாகி என்றது ஸாபிப்ராயம்; எல்லாரையும் சூழ்த்துக் கொள்ளவற்றான உன்னுடைய திவ்ய ஜ்ஞானமும் என்னைச் சூழ்த்துக் கொள்ளமாட்டாதொழிந்ததே! என்றபடி. என்றும் ஏழ்ச்சிக் கேடின்றி யெங்

களும் நிறைந்த வெந்தாய்! என்றதும் ஸாபிப்ராயம்; எல்லா விடத்திலு முண்டான எல்லாவற்றிலும் பூர்ணமாக வியாபித்திருந்தும் என்னை அகப்படுத் திக் கொள்ளமாட்டாதொழிந்தாயே! என்றபடி. ... ... (௯)

வந்தாய்போலே வந்துமென்மனத்தினை *
சிந்தாமல்செய்யாய் இதுவேயிதுவாகில் *
கொந்தார்காயாவின் கொழுமலர்த்திருநிறத்த
வெந்தாய் * யானுன்னை யெங்குவந்தணுகிற்பனே. (௰)

வந்தாய் போலே வந்தும்	(ப்ரஹ்லாதன் கஜேந்திரன் முதலானோர்க்கு) வந்து தோன்றினாப் போலே வந்தாகிலும்
என் மனத்தினை	எனது நெஞ்சை
சிந்தாமல்	சிதிலமாகாதபடி
நீ செய்யாய்	நீ செய்வதில்லை;
இதுவே	உதவி செய்யாமை யாகிற இதுவே
இது ஆகில்	இப்படியே நீடித்திருக்குமாகில்,

கொந்து ஆர் காயாவின் கொழு மலர் திரு நிறத்த எந்தாய்	கொத்துக்கள் நிறைந்த காயாவினுடைய செழுமைதங்கிய பூவின் நிறம்போன்ற நிறத்தையுடைய ஸ்வாமியே!
யான்	(இப்படிப்பட்ட அழகை அநுபவித்தே தரிக்க வல்ல) அடியேன்
உன்னை	உன்னை
எங்கு	எவ்விடத்து
வந்து அணுகிற்பன்	வந்து கிட்டவல்லேன்,

* * * [வந்தாய்போலே.] கீழ்ப்பாட்டில் "நின்தாளிணைக்கீழ் வாழ்ச்சி யான் சேரும் வகையருளாய் வந்தே" என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் "ஆழ்வீர்! வந்தருளவேணும் வந்தருளவேணு மென்னாநின்றீர்; ஒருகால் வந்து (இராமனாய்) பதினோராயிரமாண்டு இருந்தோம்; மற்றொருகால் வந்து (க்ருஷ்ணனாய்) நூற்றாண்டிருந்தோம். இன்னமும் வருவதென்றால் அது ப்ரயாஸமாயிருக்கிறது காணும் என்ன; அதுகேட்ட ஆழ்வார், 'பிரானே! அவ்வவதாரங்கள்போலே எனக்காகவும் வந்து நிலைநின்று ஸேவை ஸாதிக்கத் திருவுள்ளமானால் அழகியது; அது செய்யத் திருவுள்ளமில்லையாகில் ஆனைக்குத் தோற்றினாப்போலேயும் ப்ரஹ்லாதனுக்குத் தோற்றினாப்போலேயும் எனக்கு மொருகால் தோற்றியருளியாகிலும் உதவவேணு மென்கிறார்.

வந்தாய்போலே வந்தும் என்றது ப்ரஹ்லாத கஜேந்த்ராதிகளுக்கு வந்தாப் போலேயாகிலும் வந்து என்றபடி. ஆனைக்கு அருள் செய்ததுபோலே எனக்கும் அருள் செய்து என் ஆர்த்தியைப் பரிஹரிக்கின்றிலை; இப்படி உதவாமையாகிற இதுவே நித்தியமாய்ச் செல்லுமாகில், நான் என்னுடைய முயற்சியினால் உன்னை வந்து சேருகை யென்று ஒரு பொருளுண்டோ? இனி உன்னுடைய வடிவழகைக் காணப்பெறாதே இழந்து போமித்தனையன்றோ! என்றாராயிற்று. (௰)

கிற்பன்கில்லேன் என்றிலன்முனநாளால் *
அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன் *
பற்பல்லாயிரம் உயிர்செய்தபரமா * நின்
நற்பொற்சோதித்தாள் நணுகுவதென்ஞான்றே. (௬)

முனம் நாளால்	முற்காலமெல்லாம்
கிற்பன் என்றிலன்	நன்மைகளைச் செய்ய வல்லேனென்கிற இசையும்கொண்டிலேன்;
கில்லேன் என்றிலன்	தீமைகளைச்செய்யமாட்டேனென்கிற தவிர்தலும் கொண்டிலேன்; (ஸுக்ருதங்களைச் செய்யாதவனையும்துஷ்க்ருதங்களையே செய்பவனையும்)
அற்பம் சாரங்கள் அவை	க்ஷுத்ர விஷயங்களையே
சுவைத்து	அநுபவித்து
அகன்று ஒழிந்தேன்	உன்னைவிட்டு நீங்கிக் கிடந்தேன்.
பல் பல் ஆயிரம் உயிர்	எண்ணிறந்த ஜீவராசிகளை
செய்த	நினைத்தபடி உண்டாக்கவல்ல
பரமா	ஸமர்த்தனே !
நின்	உன்னுடைய
நல் பொன் சோதி தாள்	விலக்ஷணமாய் அழகிய ஒளியுருவான திருவடிகளை
நணுகுவது	நான் கிட்டுவது
எஞ்ஞான்று	என்றைக்கு ?

* * * [கிற்பன்கில்லேன்] பிரானே ! இதற்கு முன்புள்ள காலமெல்லாம் உன் திருவடிகளைச் சேருகைக்கு உறுப்பாயிருப்பதொரு ஸுக்ருதத்தை செய்ததுமில்லை, துஷ்க்ருதங்கள் தவிர்ந்ததுமில்லை; எதையும் தோன்றினபடிச் செய்து திரிந்தேன்; இப்படிச் செய்து திரிந்து மிகவும் அற்பமான விஷய ரஸங்களைப் புஜித்து உன் திருவடிகளுக்குப் புறம்பாகியே அகன்றொழிந்தேன். அனந்த கோடி ஜீவராசிகளுக்குக் கரணகளேபரப்ரதானம் பண்ணி நடத்திப் போருகின்றவுனக்கு என்னை யொருவனையும் உன் திருவடிகளுக்கு உரியேனும்படி பண்ணியருளுகை அரிதான காரியமோ? அங்ஙனே திருவுள்ளம் பற்றியருளலாகாதோ ? இந்த மஹாபாக்யம் என்றைக்கு நேருமோ என்கிறார்.

கிற்பன்கில்லேன் என்றிலன்— கிற்பன் என்றிலன், கில்லேன் என்றிலன் என்று அந்வயிப்பது. பெரியோர்கள் சில காரியங்களைச் செய்யவேண்டும்படியாக விதிப்பார்கள்; சில காரியங்களைச் செய்யவேண்டாவென்று மறுப்பார்கள். செய் என்று விதிக்கும் காரியங்களை 'அப்படிச்செய்கிறேன்' என்று சொல்லுவதும், செய்யவேண்டாவென்று மறுக்கும் காரியங்களை 'செய்வதில்லை' என்பதும் சாஸ்த்ர வச்யர்களுக்குக் கடமையாகும். இந்தக் கடமையை நான் தவறிவிட்டேனென்கிறார் இங்கு முதலடியில். த்வம் மே என்று எம்பெருமான் சொன்னால் ஆமாம் என்று நான் இசைந்திருந்ததுமில்லை, 'அஹம் மே' என்று சொல்லாமலிருந்ததுமில்லை என்றபடி. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;— "ஆழ்வீர்! பகவத் விஷயத்தில் வந்தால் இச்சைக்கு மேற்பட ஓர் ஆயாஸமின்றிக்கே, பேற்றில் வந்தால் அபுநராவ்ருத்திலக்ஷணமோக்ஷமாயிருக்கும்; அதுக்கீடாக ஒன்றைச் செய்யவல்லீரே ? என்றால், ஓம், அப்படி செய்கிறேன் என்றிலன். 'இதர

விஷய ப்ராவண்யமாகிறது - ஆயாஸம் கனத்துப் பேற்றில் ஒன்று இன்றிக்கேயிருக்கும், அத்தைத் தவிர வல்லீரே? என்னில், ஓம், தவிருகிறேன் என்றிலன்." —என்று.

நிற்பன்—செய்ய நிற்பன்; நில்லேன்—செய்ய நில்லேன். ஸுக்ருதத்தைச் செய்ய நிற்பன் என்னவேணும்; துஷ்க்ருதத்தைச் செய்யநில்லேன் என்னவேணும்; இரண்டுமில்லை - என்றவிதனால், அக்ருத்யகரணமும், க்ருத்ய அகரணமும் தம்மிடத்தில் பூர்த்தியாக வுண்டென்று காட்டினபடி. இவ்விடத்தில், "நிற்பன் கீழ்நாள்களென்கையாலே ஸாதநத்ரய பூர்வாப்யாஸமுமல்ல" என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையின் பொருளும் உணரத்தக்கது.

அற்பசாரங்களவை சுவைத்து அகன்றொழிந்தேன்—பெருமானே! உன் திறத்தில் ஈடுபடவொட்டாமல் தடை செய்வதற்கு நீ காட்டிவைத்தவை அபாரமாகவுண்டே; அவற்றில் ரஸபாகம் சிறிதுமில்லை; முள்ளிப்பூவில் ரஸம்போலே அற்பம் இருக்கலாம்; அப்படிப்பட்ட விஷயங்கள் ஒன்றல்ல இரண்டல்ல; பலபலவுள்ளன; அவற்றிலே கால் தாழ்ந்து * அலம் புரிந்த நெடுந்தடக்கைக்கும் எட்டாமே அகன்று போனேன் அநாதிகாலமாக - என்கிறார். இங்கே நம்பிள்ளை வீட்டில்—"தன் நாவில் பசை கொடுத்து புஜிக்க வேண்டும்படியிருக்கிற விஷயங்கள் தோறும் கால்தாழ்ந்து" என்றுள்ளது. (ஒருநாய் ஒரு சுஷ்கமான எலும்பைப்பற்றிக்கொண்டு வெகுநேரம் கடித்துப்பார்த்தது; அதில் யாதொரு பசையுமில்லை; ஆனால் அதிகமாகக் கடித்ததனால் தன் பல்லிலிருந்தே ரத்தம் பெருகத் தொடங்கிற்று. அந்த ரத்தத்தைப் பருகி அந்த நாய் இன்புற்றதாம். ஆயினும் அது இந்த மருமத்தைத் தெரிந்துகொள்ள மாட்டிற்றில்லை; எலும்பிலிருந்தே ஏதோ ரஸம் பெற்று புஜித்ததாக நினைத்துவிட்டது. இஃது இங்கு நினைக்கத்தக்கது. இதைத் திருவுள்ளத்திற்கொண்டே "தன் நாவில் பசை கொடுத்து புஜிக்க வேண்டும்படி யிருக்கிற" என்றருளிச் செய்தார்போலும்.

பற்பல்லாயிரமுயிர் செய்த பரமா !— இப்போது இந்த விளிக்குக் கருத்து என்னென்னில்; புதிது புதிதாக விலக்ஷண ஸ்ருஷ்டிகளைச் செய்யவல்ல வுனக்கு, என்னுடைய அபோக்யதையை மாற்றி போக்யதையை யுண்டாக்குதல் அரிதோ? என்று காட்டுகிறபடி. உன்னுடைய பரம போக்யமான திருவடியை நான் விரைவில் கிட்டுமாறு செய்தருளாய் என்கிற ப்ரார்த்தனை ஈற்றடிக்கு உள்ளுறை.

"சக்திமானான நீ கிட்டுவிக்குமதொழிய, என்னைப் பார்த்தால் கிட்ட விரகில்லையென்று கருத்து" என்பது பன்னீராயிரம். .... (௬)

எஞ்ஞான்றுநாமிருந்திருந்து இரங்கிநெஞ்சே *
மெய்ஞ்ஞானமின்றி வினையியல்பிறப்பழுந்தி *
எஞ்ஞான்றுமெங்கும் ஒழிவறநிறைந்துநின்ற *
மெய்ஞ்ஞானச்சோதிக் கண்ணனைமேவுதுமே. (௭)

நெஞ்சே! — மனமே
இருந்து இருந்து — நிரந்தரமாக
இரங்கி — வருந்தி
மெய் ஞானம் இன்றி — யதார்த்த ஞானமில்லாமையாலே
வினை இயல் பிறப்பு — பாபங்களின் பலனாக சேர்ந்த ஜன்மங்களிலே
அழுந்தி — ஆழங்காற்பட்டு
நாம் — (இதுவே யாத்திரையாக இருக்கின்ற) நாம்,
எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவு அற நிறைந்து நின்ற — எல்லாக் காலத்திலும் எல்லாப் பொருள்களிலும் ஒன்றும் விடாமே பரிபூர்ணமாக வியாபித்து நிலைபெற்றிருக்கின்றவனும்
மெய் ஞானம் சோதி — விசதமான ஜ்ஞானப்ரகாசத்தையுடையவனுமான
கண்ணனை — ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவை
எஞ்ஞான்று மேவுதும் — என்றைக்குக் கிட்டக் கடவோம்.

* * * [எஞ்ஞான்றுநாம்.] கீழ்ப்பாட்டில் "மின்னற்பொற் சோதித்தாள்" என்று திருவடியின் பரம போக்யதையின் ப்ரஸ்தாவம் வரவே அந்தத் திருவடி விஷயத்தில் நெஞ்சுக்கு ஒரு பதற்றம் உண்டாயிற்று; அதுகண்ட ஆழ்வார் நெஞ்சை நோக்கி, 'கெடுவாய்! உனது நிலைமையை ஆராயாது நல்லதை யாசைப்பட்டால் அது உனக்குக் கிடைக்குமோ?' என்கிறார்.

"எஞ்ஞான்று நாம்" என்றவிடத்து, 'எஞ்ஞான்று' என்றும் பிரிக்கலாம் 'எஞ்ஞான்றும்' என்றும் பிரிக்கலாம். பூருவாசாரியர்களுக்கு இரண்டையும் உடன்பாடே. 'எஞ்ஞான்று' என்று பிரித்தால் 'மேவுதும்' என்ற வினைமுற்றோடே அந்வயிக்கும். எஞ்ஞான்று மேவுதும்- என்றைக்கு அடைவோம்? என்றைக்கும் அடைய வழியில்லையென்பது குறிப்பு. 'எஞ்ஞான்றும்' என்று கொண்டால் பக்கத்திலேயே அதற்கு அந்வயமாகும். எப்போது இரங்கி என்றவாறு. இப்பக்ஷத்தில் 'மேவுதுமே' என்றவிடத்து ஏகாரம் எதிர்மறையாய் மேவமாட்டோமென்றவாறுமாம். இதனை வடநூலார் காகாக்ஷிகோளகந்யாயமென்பர்.

நல்ல ஞானமின்றிக்கே அஜ்ஞாநவிசேஷங்களையும் துஷ்கர்மவிசேஷங்களையும் பிறப்பிக்கின்ற ஸம்ஸாரத்திலே அழுந்திக் கிடக்கிற நாம், நெஞ்சே! காலமுள்ளதனையும் ஓயாமல் துக்கப்பட்டுக்கிடப்பது தவிர, ஸர்வஜ்ஞனும் ஸர்வவ்யாபகனுமான பெருமானைக் கிட்டி மகிழ்வதற்கு ப்ரஸக்தியுண்டோ? என்றவாறு. .... (எ)

மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன் *
ஓவுதலின்றி உன்கழல்வணங்கிற்றிலேன் *
பாவுதொல்சீர்க்கண்ணா என்பரஞ்சுடரே *
கூவுகின்றேன்காண்பான் எங்கெய்தக்கூவுவனே. (அ)

துன்பம் மேவு — பலவகைத் துயர்களை விளைக்கவல்ல
வினைகளை — பாவங்களை
விடுத்தும் இலேன் — (தவம் முதலியவற்றால்) போக்கடித்துக் கொண்டேனுமில்லை;

ஓவுதல் இன்றி	இடையறாமல்	என்	எனது விருப்பத்திற் குரிய
உன் கழல்	உனது திருவடிகளை	பரஞ்சுடரே	மேலான ஒளியுருவனே
வணங்கிற்றி லேன்	பணிவதும் செய்தி லேன்;	காண்பான்	(உன்னைக்) காணும் பொருட்டு
பாவு	எங்கும் பரவிய	கூவுகின்றேன்	கூப்பிடுகின்றேன்;
தொல்	இயற்கையான	எங்கு எய்த கூவுவன்	எங்கே கிட்டுவதாகக் கூப்பிடுவேன்!.
சீர்	திருக்குணங்களையுடைய		
கண்ணா	கண்ணபிரானே!		

* * * [மேவுதுன்பவினைகளை.] எம்பெருமானே! உன்னைப் பெறுகைக்கு நான் ஏதேனும் ஸாதநாநுஷ்டாநம் பண்ணியிருந்தேனாகில் அந்தப் பற்றாசுதன்னை வைத்துக் கொண்டாவது 'ஏன் நமக்கு இன்னமும் இரங்கி யருளவில்லை?' என்று நான் கரைந்து கூப்பிடலாம்; நானோ ஒரு ஸாதநாநுஷ்டாநமும் பண்ணாதவன் அப்படியிருந்தும், ஸாதநங்களை நிறைய அநுஷ்டித்துப் பலன் கைபுகப் பெறாதவன் கிடந்து துடிக்குமாபோலே நானும் துடித்துக் கதறுகின்றேனே! இது என்ன! என்று தமக்குத்தாமே விஸ்மயப்பட்டுக்கொள்ளுகிறார்.

மேவுதுன்பவினைகளை விடுத்துமிலேன்—நாம் செய்கிற தீவினைகளை நல்வினைகளினால் போக்கிக்கொள்ளவேணுமென்பது நூற்கொள்கை; "யஜ்ஞேந பாபமபநுததி" என்று உபநிஷத்துக் கூறியுள்ளது. நானோ பாவங்களை மாத்திரஞ் செய்தேனேயன்றி அவற்றைப் போக்கவல்ல நற்கிரியை யொன்றுஞ் செய்திலேன். எள்ளில் எண்ணெய்போலவும் கட்டையில் நெருப்புப்போலவும் இவ்வாத்மாவோடு பிரிக்க முடியாதபடி பொருந்தியிருப்பனவும் பலபல துன்பங்களை விளைப்பனவுமான பாபங்களை விஹிதகர்மாநுஷ்டானத்தாலே போக்கிக்கொண்டேனில்லை.

ஓவுதலின்றி உன்கழல் வணங்கிற்றிலேன்— உன் திருவடிகளை நிரந்தரமாக பஜிப்பதும் செய்திலேன் என்கிறார். முதலடியினாலேயே இவ்வர்த்தம் ஏற்பட்டுவிட்டாலும் ஆழ்வார் தம் ஆர்த்தியின் கனத்தினால் விவரித்துக் கூறுகிறாரென்று கொள்க. இங்கு ஓவுதலின்றி என்பதை மத்யமதீபமாகக் கொண்டு முதலடியோடும் இரண்டாமடியோடுங் கூட்டி நிர்வஹிப்பர் **எம்பார்**; இப்போது, ஓவுதலின்றி என்பதற்கு ஒய்வு இல்லாமையினாலே என்று பொருள். எனக்குள்ள அவகாசமெல்லாம் தீவினைகளைச் செய்வதற்கே சரிப்பட்டுப்போயின; ஒரு நல்வினை செய்யவும் அவகாசங் கிடைக்கவில்லை; ஆதலால்—என்றபடி. "கண்ணாலப் பெண்டாட்டிக்கு உண்ண அவஸரமில்லை என்னுமாபோலே இந்த்ரியங்களுக்கு இரையிட்டுத் திரிந்தேனித்தனை; எனக்கு ஒன்றும் ஹிதம் பார்த்திலேன்" என்கிற சுட்டு ஸ்ரீஸூக்தி பரம போக்யம்.

பாவு தொல் சீர்க்கண்ணா!—நான் அயோக்யனாயிருந்தாலும் உனது திருக்குணங்களை நினைக்குங்கால் மேல் விழுந்தாகிலும் புஜிக்கவேண்டும்படியிராநின்றதே!, விடமுடியவில்லையே! என்செய்வேன்! என்கிற ஆர்த்தி சொல்வடிவத்தி

லே தோன்றுமாறு காண்க. பாவுதல்—பரவுதல்; பக்தர்களின் கோஷ்டிகளில் மாத்திரமன்று; சத்ருக்களின் கோஷ்டிகளிலும் பரவிய புகழ்படைத்தவனென்பர். .... (அ)

கூவிக்கூவிக் கொடுவினைத்தூற்றுள்நின்று *
பாவியேன்பலகாலம் வழிதிகைத்தலமருகின்றேன் *
மேவியன்றாநிரைகாத்தவன் உலகமெல்லாம் *
தாவியவம்மானை எங்கினித்தலைப்பெய்வனே. (கூ)

கொடு வினை	கொடியபாவங்களுக்குப் பிறப்பிடமாகிய	மேவி	திருவுள்ளமுவந்து
தூற்றுள் நின்று	(நுழைந்தால் வெளிப்பட முடியாத) புதர் போன்ற ஸம்ஸாரத்தில் அகப்பட்டு நின்று	ஆ நிரை	பசுக்கூட்டங்களை
		காத்தவன்	ரக்ஷித்தவனும்,
பல காலம்	அநேக காலம்	உலகம் எல்லாம் தாவிய	(த்ரிவிக்ரமனாய்) உலகங்களையெல்லாம் அளந்தவனுமாகிய
வழி திகைத்து	வழி தெரியாமல் சுழன்று	அம்மானை	ஸ்வாமியை
அலமருகின்றேன்	வருந்திக் கிடக்கின்ற	இனி	இனி
பாவியேன்	மஹாபாபியான நான்,	கூவி கூவி	பல்காலும் கூப்பிட்டு
அன்று	முன்பொருகால்	எங்கு	எங்கே
		தலைப்பெய்வன்	கிட்டுவேன்?

* * * [கூவிக் கூவி.] ஸ்ரீக்ருஷ்ணனாயும் ஸ்ரீவாமநனாயும் அவதரித்து உலகுக்குப் பண்ணின அநுக்ரஹத்திற்குத் தப்பின நான் இனி யுன்னைப் பெறுதற்கு வழியுண்டோவென்று க்லேசந்தோற்றப் பேசுகிறார். பிரானே! நான் இருக்குமிடமோ ஸம்ஸாரம்; இதுவோ தூறுமண்டிக்கிடக்கிறது; இங்கிருந்து கிளம்ப வழியில்லை; இருந்தவிடத்தில் நின்றும் பலகாலும் கூப்பிடாநின்றேன். நீ ஆபத்துக்கு உதவுபவனல்லையாகில் நான் இவ்வளவு கூப்பீடுசெய்யமாட்டேன்; திருவாய்ப்பாடியில் பசுக்களெல்லாம் பெருமழையில் நோவுபட்டகாலத்தில் ஒன்றின்மேல் ஒரு துளி விழாதபடி ஒருமலையைத் தூக்கியெடுத்து ரக்ஷித்தாய்; அங்ஙனம் ஒரு ஊர்க்கு உதவினமாத்திரமன்றிக்கே எங்குமொக்க எல்லார் தலைகளிலும் திருவடியை வைத்தருளினாய்; அன்று நான் எந்த மூலையிலே கிடந்தேனோ? அப்படி ஸர்வஸ்வதாநம் பண்ணின காலத்திலும் தப்பின நான் இனி எங்கே கிட்டப்புகுகிறேன்? அஸாத்யமான விஷயத்தில் நாம் நசை பண்ணுவது வீண் என்று தெரிந்தும் வாளா இருக்கமாட்டிற்றிலேன்; கூப்பீடே போதுபோக்காகவிருக்கின்றேன் என்றாராயிற்று.

"கொடுவினைத் தூற்றுள் நின்று" என்ற விடத்திற்கு ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;— "கூப்பீடுகேட்டு இரங்கியெடுப்பதாக ஈச்வரன் கை நீட்டினால், நீட்டின கை வாங்கவொண்ணாத நிலத்திலே யிருந்தாயிற்றுக் கூப்பிடுவது."

பாவியேன் என்ற விடத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை:— "ஸ்ரீஜநகராஜன் திருமகள் ஸ்ரீவால்மீகி பகவானாச்ரம பரிஸரத்திலே கூப்பிட்டாப்போலே, சிலர் ஐயோவென்னக் கூப்பிடுகிறேனே?." .... (௯)

தலைப்பெய்காலம் நமன்றமர்பாசம்விட்டால் *
அலைப்பூணுண்ணும் அவ்வல்லலெல்லாமகல *
கலைப்பல்ஞானத்து என்கண்ணனைக்கண்டுகொண்டு *
நிலைப்பெற்றென்னெஞ்சம் பெற்றதுநீடுயிரே. (௧௦)

நமன் தமர்	யமபடர்கள்	பல் கலை ஞானத்து என் கண்ணனை	பலவகைப்பட்ட சாஸ்த்ரங்களாலே அறியத் தக்க எனது கண்ணபிரானை
தலைப்பெய் காலம்	வந்து கிட்டுங்காலம்	கண்டுகொண்டு	காணப்பெற்று
பாசம் விட்டால்	காலபாசத்தை வீசினால்	என் நெஞ்சம்	எனது மனமானது
அலைப்பூண் உண்ணும்	(அப்போது) அலைச்சல் படுகையாகிற	நிலை பெற்று	நிலைநிற்கப்பெற்று
அ அல்லல் எல்லாம் அகல	அந்தத் துயரமெல்லாம் நீங்க,	உயிர்	ஆத்மாவும்
		நீடு பெற்றது	நித்யத்வத்தைப் பெற்றதாயிற்று.

* * * [**தலைப்பெய்காலம்.**] கீழ்ப்பாட்டில் ஆழ்வார்க்கு ஓடின நிலைமையைக்கண்ட எம்பெருமான் 'இவரை நாம் ஒருவாறு ஸமாதானப் படுத்தாவிடில் இவர் முடிந்தே விடுவர்போலும்' என்றெண்ணித் தான் வடக்குத் திருமலையில் நிற்கும்படியைக் காட்டியருள, ஆழ்வாரும் கண்டு தரித்து, அந்தத் தரிப்பை இப்பாசுரத்தில் வெளியிடுகிறார். இப்பாட்டில் முன்னடிகட்கு இரண்டுவகையான நிர்வாஹம்.;- இவ்வுயிர்விட்டு நீங்குங்காலத்தில் யமபடர்கள் வந்து கிட்டிப் பாசத்தை வீசினால் அப்போது உண்டாகும் துயரம் பொறுக்க வொண்ணாததாயிருக்கும்; அந்தத் துயரம் நமக்கு நேர வொண்ணாதபடி எம்பெருமான் தன் காட்சியைத் தந்தருளினபடியாலே தரிப்புப் பெறலாயிற்று—என்பது ஒரு நிர்வாஹம். மற்றொரு நிர்வாஹமாவது—இங்கு யமதூதர்களால் நேரும் நலிவைச் சொன்னது-அந்தத் துயரத்தோடு ஒத்ததான பகவத்விச்லேஷ வ்யஸநத்தைச் சொன்னவாறு; அது தொலையும்படி எம்பெருமானை ஸேவிக்கப்பெற்றேனென்கிறார் என்பதாம்.

ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;- "அத்தோடு ஸஜாதீயமான அல்லல் என்று எம்பார் அருளிச்செய்வது. (அதாவது) அவ்வோபாதி க்லேசம் போருமாயிற்று பகவத் விச்லேஷத்தால் வருமது இவர்க்கு. அன்றிக்கே, பகவத் அலாபமேயான பின்பு யமவச்யதையும் வந்ததேயன்றோ வென்று அந்த யமவச்யதை போம்படியாக என்று ஆண்டான் நிர்வஹிக்கும்படி."

அலைப்பு ஊண்— துக்காநுபவம். "அவ்வல்லலெல்லாம்" என்றவிடத்து எல்லாமென்பதனால் விவக்ஷிதத்தை ஆறாயிரப்படியில் பிள்ளான் காட்டியருளுகிறார்—"அவனுடைய ஸர்வேச்வரத்வத்துக்கு வைகல்யம் வருகிறது என்றுள்ள

மஹாபயமும்'' என்று. ''किं तु त्वदग्रे शरणागतानां पराभवो नाथ न तेऽनुरूपः - கிம் து த்வதக்ரே சரணாகதாநாம் பராபவோ நாத ந தேநுரூப:'' என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தி இங்கு நினைக்கத்தகும்.

கலைப்பல் ஞானத்து— பல கலைகளாலும் அறியப்படுபவன் என்றபடி. ஈற்றடியை, ''என்நெஞ்சம் நிலைபெற்று உயிர் நீடுபெற்றது'' என்று அந்வயித்துக் கொள்க. பெற்று என்றது எச்சத்திரிபு; நிலைபெற என்றபடி. .... (க0)

உயிர்களேல்லா வுலகமுமுடையவனை *
குயில்கோள்சோலைத் தென்குருகூர்ச்சடகோபன் *
சேயிரில்சோல்லிசைமாலை ஆயிரத்துளிப்பத்தும் *
உயிரின்மேலாக்கை ஊனிடையோழிவிக்குமே. (கக)

எல்லா உயிர்கள்	ஸகல ஜீவராசிகளையும்
எல்லா உலகமும்	எல்லா உலகங்களையும்
உடையவனை	உடைமையாகக்கொண்டுள்ள எம்பெருமானைக் குறித்து
குயில் கொள் சோலை தென் குருகூர் சடகோபன்	குயில்களையுடைய சோலைகள் சூழ்ந்த அழகிய திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாரருளிய

செயிர் இல்	குற்றமற்ற
சொல்	சொற்களையுடைத்தாய்
இசை	இசையோடு கூடின
மாலை	தொடையையுடைய
ஆயிரத்துள்	ஆயிரத்திலும்
இ பத்தும்	இப் பத்துப்பாட்டும்
உயிரின் மேல்	ஆத்மாவின்மேல் வந்தேறியான
ஊன் இடை	மாம்ஸமயமான
ஆக்கை	சரீரத்தை
ஒழிவிக்கும்	போக்குவிக்கும்.

* * * [உயிர்கள்] இத்திருவாய்மொழி கற்பார், தம்மைப்போலே நோவுபடாதே ஸம்ஸார விமோசனம் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார்.

''உயிர்களெல்லா வுலகமுமுடையவனை'' என்று இப்போது சொல்லுவதானது எம்பெருமானுக்கு நித்யஸித்தமாகவுள்ளபடியைச் சொல்லுகிறதன்று; ஆழ்வாரைத் தரிக்கச் செய்ததனால் எம்பெருமானுக்கு விலக்ஷணமானவொரு புகர் உண்டாயிற்று; அதாவது, இப்போதுதான் அவன் எல்லாவுலகையும் எல்லாவுயிரையும் உடையவனாய் ஆகப்பெற்றதுபோல் விளக்கமுற்றான்; அவ்விளக்கத்தை நோக்கி ஆழ்வார் அருளிச்செய்கிறபடி.

இங்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்கிறார் காண்மின்;—''இவர் தரித்தவாறே அவன் எல்லாவுயிர்களையும் எல்லா லோகங்களையும் உடையவனானான்; ஸர்வரக்ஷகனுக்கு ரக்ஷ்யத்திலே ஒன்று குறையிலும் ரக்ஷகத்வம் குறைபட்டதாமிறே.''

குயில்கோள் சோலை = இதுவரையில் ஆழ்வார் உருவிக்கிடந்தமையால் அங்குள்ள சோலையிற் குயில்களும் உருவிக்கிடந்தன; இவர் தரித்தவாறே, திருநகரியும் தரித்து அங்குண்டான சோலைகளும் தரித்து அவற்றிலுள்ள குயில்களும் அழகாகக் கூவத் தொடங்கினவென்க.

செயிர்—குற்றம்; சொற்குற்றம் பொருட்குற்றம் முதலியன இல்லாத என்றபடி. இப்பத்துப் பாசுரமே ப்ரக்ருதிஸம்பந்தத்தைப் போக்குமென்றது—எம்பெருமான் திருவுள்ளத்தில் உகப்பையுண்டுபண்ணி அவ்வழியாலே ஸமீஹித ஸித்தியைப் பெறுவிக்குமென்றபடி. .... (கக)

இரண்டாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸங்கொசிதஸ்வகரணஸ்ய ஹரிம் யதெஷ்டம்
ஸம்ஜெநவா ஹதிகி விளசதிஷ்டாரிஃ|
ஆஶ்வாஸிதஸ்து ஹரிணா ஸ்வஹதொஎவ
ஹொஷெஷஶக்திரிதி தத்தயிதம் ஷிதீயெ ||

(கருத்து.) 'எம்பெருமானை நாம் யதேஷ்டமாக அநுபவிக்க முடியாமலிருப்பதற்குக் காரணம் நம்முடைய கரணஸங்கோசம்' என்று நினைத்து மிகவும் தளர்ச்சியடைந்த ஆழ்வார் எம்பெருமானால் ஆச்வாஸப்படுத்தப்பட்டார்; 'ஆழ்வீர்! நம்மைப் பரிபூர்ணமாக அநுபவிக்க முடியாமைக்குக் காரணம் நமது பெருமையின் அளவிடமுடியாமையேயல்லது உமது கரணஸங்கோசமன்று காணும்' என்று தெரிவித்து எம்பெருமான் ஆச்வஸிப்பித்தானென்க. இரண்டாந் திருவாய்மொழியில் இவ்விஷயம் அருளிச்செய்யப்பட்டது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

𑌸𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌚 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌹𑍃𑌤𑌧𑌰𑌣𑌿𑌭𑌰𑍋𑌽𑌨𑌨𑍍𑌯𑌭𑍋𑌗𑍍𑌯𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑍍𑌮𑌃
𑌸𑌿𑌨𑍍𑌧𑍋𑌤𑍍𑌥𑌨𑍍𑌨𑍀𑌲𑌰𑍂𑌪𑍋 𑌨𑌿𑌰𑌵𑌧𑌿𑌰𑌸𑌦𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌰𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌃 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍋 𑌨𑌿𑌖𑌿𑌲𑌵𑌸𑍁𑌮𑌤𑍀𑌗𑍋𑌪𑌨𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃
𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍍𑌯𑌾 𑌯𑌮𑌪𑌰𑌵𑌶𑌤𑌾𑌂 𑌮𑍁𑌷𑍍𑌣𑌨𑍍 𑌲𑍋𑌕𑍈𑌕𑌨𑌾𑌥𑌃 ॥

1. லோகாந் ஸ்ரஷ்டா. * முந்நீர்ஞாலம் படைத்த * உலகங்களை யெல்லாம் படைத்தவன்.

2: லோகாந் க்ராந்தா ச. * வன்மாவையமளந்த. * உலகங்களை யெல்லாமளந்தவன்.

3. ஹ்ருததரணிபர:- * கொல்லாமாக்கோல் கொலை செய்து * பாரதப் போரில் எல்லாச் சேனையையும் தொலைத்துப் பூமி பாரத்தை அபஹரித்தவன்.

4. அநந்யபோக்ய அங்க்ரியுக்ம:- * தாழ்ச்சிமற்றெங்குந் தவிர்ந்து நின் தாளிணைக்கீழ் வாழ்ச்சி யான் சேருபவகை. * அந்யபரரன்றிக்கே பக்தரானவர்களுக்கு போக்யமான திருவடியிணைகளையுடையவன்.

5; சிந்தோத்யந்நீலரூப:- * கொந்தார் காயாவின் கொழுமலர்த்திருநிறத்த வெந்தாய்!- என் மனத்தினை நீ சிந்தாமல் செய்யாய். * காயாம்பூப்போன்ற திருநிறத்தைச் சிந்தையிலே பிரகாசிக்கச் செய்பவன்.

6. நிரவதிரஸதஸ்வாங்க்ரி: * நின் நற்பொற்சோதித்தாள் நணுகுவதென்ஞான்றே. * தன் திருவடிகளைப் பெறுவது எப்போது என்று ஆவலுடன் விரும்பும்படியான ப்ரேமத்தை விளைக்கின்ற திருவடிகளையுடையவன்.

7. அத்யக்ஷமூர்த்தி:- * எஞ்ஞான்று மெங்குமொழிவற நிறைந்துநின்ற மெய்ஞ்ஞானச் சோதிக்கண்ணன். * எப்போதும் எங்கும் வியாபித்துநின்று நிர்வாஹம் செய்பவன். (அன்றிக்கே) யோகிகளுக்கு எங்கும் ப்ரத்யக்ஷிக்கலாம்படியான மூர்த்தியையுடையவன்.

8. நித்யோபாஸ்ய ஸ்வபாத:- * ஒவுதலின்றி யுன்கழல் வணங்கிற்றிலேன் என்று குறைபடவேண்டும்படி எப்போதும் ஸேவ்யமான திருவடிகளையுடையவன்.

9. நிகில வஸுமதீ கோபநஸ்வாங்க்ரிவ்ருத்தி:- * உலகமெல்லாம் தாவிய வம்மானை * உலகங்களையெல்லாம் திருவடிகளாலளந்து ரக்ஷித்தருளுமவன்.

10. மூர்த்தி ப்ரதீத்யா யமபரவசதாம் முஷ்ணந். * நமன்தமர்பாசம் விட்டால். * தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவை ஸாதிப்பித்து அதனல் யமபாரவச்யத்தைப் போக்குமவன்.

11. லோகைகநாத:- * உயிர்களெல்லாவுலகமுமுடையவன். * இப்படிப்பட்ட எம்பெருமான் [ப்ரைக்ஷி] இரண்டாந் திருவாய்மொழியில் ஆழ்வாரால் அநுபவிக்கப்பட்டானென்றபடி.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

முன்ன மழகரெழில் மூழ்குங் குருகையர்கோன்
இன்னவள வென்ன வெனக்கரிதாய்த்து—என்னக்
கரணக் குறையின் கலக்கத்தைக் கண்ணன்
ஒருமைப் படுத்தா னொழித்து.

பதவுரை.

முன்னம்	இதற்குமுந்திய திருவாய்மொழியில்
அழகர்	திருமாலிருஞ் சோலையழகருடைய
எழில்	வடிவழகிலே
மூழ்கும்	ஆழங்காற்பட்ட
குருகையர் கோன்	ஆழ்வார்
இன்ன அளவு என்ன எனக்கு அரிது ஆய்த்து என்ன	'இது இவ்வளவென்று பரிச்சேதிக்க என்னால் முடியவில்லையே!' என்று தளர்ச்சியடைய,
கண்ணன்	எம்பெருமான்
கரணம் குறையின கலக்கத்தை	(ஆழ்வார்க்குக்) கரண ஸங்கோச நிபந்தனமென்று உண்டான கலக்கத்தை
ஒழித்து	போக்கி
ஒருமைப்படுத்தான்	ஆச்வஸிப்பித்தான்.

*** *முடிச்சோதியாய் என்கிற கீழ்த்திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலையழகருடைய வடிவழகில் ஆழங்காற்பட்ட ஆழ்வார் 'அந்தோ! இவ்வழகு முதலியவற்றை நாம் பரிபூர்த்தியாக அநுபவிக்க முடியவில்லையே, இதற்கு என்ன காரணமிருக்கும்; நம்முடைய கரணக்ராமங்கள் ஸங்குசிதங்களாயிருக்கையாலே அதுகாரணமாகவன்றோ பூர்ணாநுபவம்செய்ய முடியவில்லை; அந்த கரண ஸங்கோசம் இல்லாதிருக்கின்ற நித்ய முக்தர்களிலே ஒருவனாக நானிருந்தால் பரிபூர்ணாநுபவம் பண்ணலாமே' என்று அலமந்திருக்க, அதுகண்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! நம்மைப் பரிபூர்ணாநுபவஞ் செய்ய முடியாமைக்குக் காரணம் கரணஸங்கோசமன்று காணும்; அஸங்குசிதமான கரணங்களையுடையவர்கள் தாமும் நம்மைப் பரிபூர்ணாநுபவம் செய்வது அருமையே; விஷயம் மஹத்தாகையாலே பூர்ணாநுபவம் செய்யப்போகிறதில்லையேயொழிய வேறு காரணமன்று' என்று தெரிவித்து ஆழ்வாரைத் தேற்றுவித்தபடியை இவ்விரண்டாந் திருவாய்மொழி சொல்லிற்றுகிறது என்று அருளிச்செய்தாராயிற்று.*

ஆழ்வார் இங்ஙனே கலங்கினதாகவும் அதற்கு எம்பெருமான் இப்படி ஸமாதானம் பண்ணினதாகவும் மூலத்தில் ஒரு பாசுரத்திலும் காணக்கிடைக்கவில்லையே; அப்படியிருக்க இப்படியருளிச்செய்வது எதுகொண்டு? என்று சிலர் சங்கிக்கக்கூடும். நுட்பமாக இதனைக் கண்டறியவேணும். கீழ்த்திருவாய்மொழியில் அழகருடைய வடிவழகிலீடுபட்டுப் பேசத்தொடங்கிய ஆழ்வார் எத்தனை பாசுரங்களும் அப்படியே பேசிக்கொண்டு போதுபோக்கலாமன்றோ; அதை விட்டு, மிக்க ஆர்த்தியுடன் இந்தத்திருவாய்மொழி ஆரம்பமாகியிருக்கிறது.

திடீரென்று ஆர்த்திக்கு யாதுகாரணம் என்று ஆராய்ந்தால் ஒருகாரணம் கண்டு பிடித்தாகவேண்டும். அதையே நம் ஆசாரியர்கள் கண்டுபிடித்துப்பேசினார்கள். பத்தாம் பாட்டில் "நிலைப்பெற்று என்னெஞ்சம் பெற்றதுநீடுயிரே" என்றிருப்ப தனால் ஒருவாறு ஆழ்வார் ஸமாதான மடைந்ததாக ஏற்படுகிறது. எம்பெருமான் என்ன தெரிவித்து ஸமாதானப்படுத்தினான் என்று ஆராய்ந்து அதனையும் ஆசாரியர்களே கண்டுபிடித்து வெளியிட்டருளினார்கள் என்றுணர்க. * * (22)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து — மூன்றாந் திருவாய்மொழி — ஒழிவில்காலம்.

அவதாரிகை.

எம்பெருமானே! உன்னை யநுபவிப்பதற்கு இடையூறான பிரகிருதியைப் போக்கித் தரவேணுமென்று கீழ்த்திருவாய்மொழியில் பிரார்த்தித்த ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நம்மோடுபரிமாறுவதற்கு அந்தப்பிரகிருதி உமக்கு இடையூறன்றுகாணும்; அநுகூலமேயாகும். இந்த ப்ரகிருதியோடே கூட உம்மை அடிமைகொள்ள வேணுமென்று விரும்பியன்றோ நாம் திருமலையிலே நிற்கிறது; நீர் இங்கேறப் போந்து அடிமைசெய்து வாழலாமே' என்று தான் திருவேங்கடமலையில் நின்றருளுகிறபடியைக் காட்டியருளக்கண்டு ஸமாதானமடைந்தவராய் அத்திருமலையப்பன் திருவடிகளிலே எப்போர்ப்பட்ட வடிமைகளுஞ் செய்ய வேணுமென்று பாரிக்கிறார் இத்திருவாய்மொழியில். .... (*)

ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி *
வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம் *
தெழிகுரலருவித் திருவேங்கடத்து *
எழில்கொள்சோதி எந்தைதந்தைதந்தைக்கே. * (க)

தெழி குரல் அருவி	கம்பீரமான ஓசையையுடைய அருவிகள் பொருந்தின	நாம்	அடியோம்
திரு வேங்கடத்து	திருவேங்கடமலையில்	ஒழிவு இல்	ஓய்வில்லாத
எழில் கொள்	நிறம்பெற்ற	காலம் எல்லாம்	காலம் முழுவதும்
சோதி	தேஜஸ்ஸையுடைய	உடன் ஆய்	கூடவேயிருந்து
எந்தை தந்தை தந்தைக்கு	எமது குலநாதனை பெருமானுக்கு,	மன்னி	ஸகல அவஸ்தைகளிலும் பிரியாதுநின்று
		வழு இலா	குற்றமற்ற
		அடிமை	கைங்கரியங்களை
		செய்ய வேண்டும்	பண்ணக்கடவோம்.

* * * [.ஒழிவில்] திருவேங்கடமுடையானுக்கு எல்லாவடிமைகளும் செய்யப் பெறவேணுமென்று மநோரதிக்கிறார். பின்னடிகளை முன்னே அந்வயித்துக் கொண்டு பிறகு முன்னடிகளை அந்வயித்துக்கொள்வது.

"காலமெல்லாம் அடிமை செய்யவேண்டும்" என்றாலே போதுமாயிருக்க, ஒழிவில் காலமெல்லாம் என்று விசேஷித்துக் கூறினதற்குச் சில ஆசாரியர்கள் ஒரு விசேஷார்த்தம் கூறுவர்களாம்; அதாவது—இனிமேல்வரும் காலங்களில் மாத்திரம் கைங்கரியம் செய்யவிரும்புகிறாரல்லர்; கீழ்க்கழிந்த காலங்களிலும் கைங்கரியம் செய்யவிரும்புகிறார் என்று. கழிந்துபோனகாலத்தை மீட்கமுடியாதாதலால் இந்த அர்த்தம் எங்ஙனேபொருந்துமெனில்; கீழ்க்கழிந்த காலத்திலும் கைங்கரியம் செய்ய வேணுமென்று பாரிக்கிறாராகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து யாதெனில்; 'அந்தோ! கீழே வெகுகாலம் வீணாகக் கழிந்து விட்டதே! என்கிற இழவு நெஞ்சிற்படாதபடி அதனைமறந்து ஆனந்தமயமாகக் கைங்கரியம் பண்ணப் பாரிக்கிறா ரென்பதுவேயாம். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;— "ஒழிவில் காலமெல்லாமென்று கீழேகழிந்த காலத்தையுங் கூட்டி அடிமைசெய்யப்பாரிக்கிறாரென்று இங்ஙனே அதிப்ரஸங்கம் சொல்லுவாருமுண்டு; அதாகிறது, கீழ்க்கழிந்த காலத்தை மீட்கையென்று ஒரு பொருளில்லையிறே........ கீழ்க்கழிந்த காலத்திலிழவு நெஞ்சிற்படாதபடி மறப்பிக்கையேயிறேயுள்ளது." என்று. அஸ்மதாசார்யரான அழகியமணவாளச்சீயர் ஒரு கோடைத்திருநாளிலே பேரருளாளன் திருமுற்றத்திலே இப்பாசுரத்தைப் பரக்கஉபந்யஸித்தருளா நிற்கையில் ஈட்டிலுள்ளபடியே அருளிச்செய்துவிட்டு மற்றொருபடியாகவும் அருளிச் செய்யக் கேட்டதுண்டு. (அதாவது) "மாதவத்தோன்புத்திரன் போய் மறிகடல்வாய் மாண்டானை, ஓதுவித்ததக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்றும், "பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும், இறைப்பொழுதில் கொணர்ந்துகொடுத்து" என்றும் சொல்லுகிறபடியே என்றைக்கோ இறந்தொழிந்த உயிர்களையும் மீட்டுக்கொணர்ந்து கொடுக்கவல்லமை வாய்ந்த எம்பெருமான் திருவுள்ளம் பற்றினால் கழிந்தகாலத்தையும் மீட்டுக் காட்டிக்

கொடுக்க சக்தனாகையாலே அந்த அந்தகாலங்களிலே கைங்கரியம் செய்யப் பாரிப்பதும் ஒருபடி பொருந்தலாம் என்று. இது ஸஹோக்தியாக அருளிச் செய்தபடி.

உடனாய் என்பது ஸகல தேசங்களிலும் விடாதே தொடர்ந்து அடிமை செய்யவேணுமென்கிற பாரிப்பைக்காட்டுகிறது. இங்குச் சிலர் சங்கிப்பதாவது—திருவேங்கடமுடையானுக்கன்றோ இங்கு அடிமை செய்யப்பாரிப்பது; அப்பெருமான் நியதமாக ஒரு தேசவிசேஷத்திலேயே எழுந்தருளியிருப்பதனால் 'ஸகலதேசங்களிலும் விடாதே' என்று இங்குச் சொல்வதற்கு ப்ரஸக்தியில்லையே என்று. இதற்கு ஸமாதானமாவது—புறப்பாடு கண்டருளிப்பலவிடங்களுக்கும் எழுந்தருள்வதுண்டாகையாலே அவ்விடமொன்றும் தப்பாமே எங்கும் அடிமை செய்யப்பாரித்தலில் குறையில்லையென்க. (ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில்) "ஸ்ரீரங்கராஜ கரகம்ரித சாகிகாப்ய: லக்ஷ்ம்யா ஸ்வஹஸ்தகலிதச்ரவணவதம்ஸம்" என்கிற ச்லோகத்திற்படியே பரோக்ஷமான புறப்பாடுகளுமுண்டே அர்ச்சாவதாரப் பெருமானுக்கு; அப்போதும் விடாதே தொடர்ந்து அடிமைசெய்ய விரும்புவதும் இங்கு விவக்ஷிதம். மன்னி என்பதனால் பெருமானும பிராட்டியுமாய்த் திரையை வளைத்துக்கொண்டிருந்தாலும் அப்போதும் படிக்கம் குத்துவிளக்கு முதலியனபோலே நின்று அந்தரங்கமான அடிமைகளைச்செய்ய வேணுமென்ற விருப்பம்விளங்கும்.

முதலடிக்கு ஒரு ஐதிஹ்யமருளிச்செய்கிறார்; "ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் இத்திருவாய்மொழிபாடப்புக்கால் 'ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்' என்று இங்ஙனே நெடும்போதெல்லாம் பாடி, மேல்போகமாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவராம்" என்று. இதனால், அரையர் ஆழ்வாருடைய நிலைமையை அப்படியேயடைந்து கைங்கரியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டைக்காட்டினரென்பது பெறப்படும்.

வழுவிலாவடிமை = வழுவாவது விச்சேதம்; ஒரு கைங்கரியத்திலும் விச்சேதம் கூடாது என்றபடி. எம்பெருமான் திறத்தில் ஈடுபட்டவர்கள் எத்தனைபேருண்டோ, அத்தனைபேரும் தனித்தனியே செய்கிற கைங்கரியங்களையெல்லாம் தாமொருவரே செய்ய மனோரதிக்கிறபடி. ஸ்ரீவசநபூஷணத்திலருளிச்செய்யப்பட்ட இளையபெருமாளது கைங்கரிய ஸாம்ராஜ்யம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. "வழுவிலாவடிமை" யென்றதற்கு மற்றொருவகையாகவும் பொருள்கூறலாம்; ஸ்வபோக்யதாபுத்தி கலசியிருக்கை கைங்கரியத்திற்கு வழு; அஃதில்லாமை சொன்னபடி. "கைங்கரியத்தில் களையறுக்கிறது" இத்யாதி முமுக்ஷுப்படி ஸ்ரீஸூக்தியும் அவ்விடத்து மணவாளமாமுனிகள் வியாக்கியானமும் காணத்தக்கன. "மற்றைநங்காமங்கள்மாற்று" என்றதும் காண்க.

செய்யவேண்டும்நாம் = கைங்கரியம் செய்வதிற்காட்டிலும், செய்யவேணுமென்கிற பாரிப்பு நிலைநின்றிருந்தாலும் போதும் என்கிற சாஸ்திரார்த்தம் தெரிவிக்கப்படுகிறது. எம்பெருமானார் ஸ்ரீவைகுண்டகத்யத்தில்—"கைங்கரியத்தில்

ஆசையை வளர்த்திக் கொண்டு போரவேணும்'' என்றகருத்துப்பட அருளிச்செய் திருப்பதுங்காண்க.

தெழிகுரலருவி—"கைங்கரியருசியுடையீர்! அடிமைசெய்ய வாருங்கோள்'' என்று அழைக்கின்றதுபோலும் திருமலையருவி. திருமலையில் ஸம்பந்தமுள்ள தெலலாம் ஆழ்வார்க்குப் பரமோத் தேச்யமாகையாலே அருவியையும் வருணிக் கிருர். திருமங்கையாழ்வார் அஹோபிலக்ஷேத்திரத்தை அநுபவிக்கும்போது "சிலைக்கைவேடர் தெழிப்பு அறாதசிங்கவேள்குன்றமே'' என்கிருர்; க்ஷேத்ரயாத்திரை போகிறவர்களை வழி பறிக்கிற வேடருடைய ஆரவாரமும் உத்தேச்யமாகா நின்றதென்ருல் இந்தத்திருஅருவியின் ஓசை உத்தேச்யமாகச் சொல்ல வேணுமோ?

பரமபதம் திருப்பாற்கடல் முதலானவிடங்களிலே எம்பெருமான் எழுந்தருளியிருப்பது மீனுக்குத் தண்ணீர் வார்த்தாப்போலேயிருக்கையாலே எம்பெருமானுடைய சோதி அவ்விடங்களில் குன்றியேகிடக்கும்; திருமலை அங்ஙனன்றியே இடக்கை வலக்கையறியாதார்க்கும் எளிதாக முகங்காட்டுமிடமாகையாலே "திருவேங்கடத் தெழில்கோள்சோதி'' என்கிருர். இங்குஈட்டு ஸ்ரீஸூக்தி பரமபோக்யம்; அதாவது—

"[வேங்கடத் தெழில்கொள்சோதி] * வானோர் சோதியையும் * நீலாழிச் சோதியையும் வ்யாவர்த்திக்கிறது: வானோர்சோதி பகல்விளக்குப்பட்டிருக்கும். நீலாழிச்சோதி கடல்கொண்டுகிடக்கும். வேங்கடத் தெழில்கொள்சோதி குன்றத்திட்ட விளக்காயிருக்கும். *திருவேங்கடம் மேயவிளக்கிறே.''

எம்பெருமானுர் இத்திருவாய்மொழி அருளிச்செய்யும்போது அந்தக் காலக்ஷேபகோஷ்டியில் நூற்றுக்கணக்காக எழுந்தருளியிருந்த சிஷ்யர்களை நோக்கி, "ஆழ்வார் பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலேயிருந்து நித்திய கைங்கரியம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுண்டோ?'' என்று வினவியருள, குளிரருவிவேங்கடமாகையாலேயெல்லாரும் குளிர்க்கு அஞ்சி விடை கூறுதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து 'அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்ருர்; அது கேட்டு உகந்த எம்பெருமானுர் 'நீரொருவரே ஆண்பிள்ளை' என்று போரப்பொலியக் கொண்டாடித் தழுவியருளி விடைகொடுத்தருளினர்; அதுமுதலாக அனந்தாண்பிள்ளை என்று அவர்க்கு ப்ரஸித்தியாயிற்று என்ற இதிஹாஸம் இங்கு அறியத்தக்கது.

கூரத்தாழ்வான் பெரும்பாலும் இப்பாசுரத்தின் பொருளையே திருவுள்ளத்திற்கொண்டு வரதராஜஸ்தவத்தில்—"[illegible] | [illegible] | [illegible] = அசேஷதேசாகிலகாலயோகிநிஷ[illegible] அஹம் த்வவஸ்தா ஸ்வகில்ஸ்வநங்யதி:, அசேஷதாஸ்யைகரதிஸ் ததாசரங் கரீச! வர்த்தேய ஸதா த்வதந்திகே.'' என்கிற ச்லோகத்தை யருளிச்செய்தார். ஆழ்வார்க்குத் திருவேங்கடமாமலையில் சென்ற பாரிப்பு ஆழ்வானுக்குத் திருவத்திமாமலையிற் சென்றதாய்த்து. .... (க)

எந்தைதந்தைதந்தை தந்தைதந்தைக்கும்
மூந்தை * வானவர் வானவர்கோனொடும் *
சிந்துபூமகிழும் திருவேங்கடத்து *
அந்தமில்புகழ்க் காரேழிலண்ணலே. (உ)

வானவர்	நித்யஸூரிகள்	அந்தம் இல் புகழ்	முடிவில்லாத புகழையுடையவனும்
வானவர் கோனொடும்	தங்களில் தலைவரான ஸேனைமுதலியாரோடுகூட	கார் எழில்	நீலநிறத்தழகுடையனுமான
சிந்து	தூவின	அண்ணல்	எம்பெருமான்
பூ	புஷ்பங்கள்	எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் மூந்தை	எம்குலநாதன்.
மகிழும்	செவ்வி குன்றாதிருக்கப்பெற்ற		
திருவேங்கடத்து	திருமலையில்		

* * * [எந்தை தந்தை தந்தை.] திருநாட்டிலே சென்று எம்பெருமானுக்கு அடிமை செய்வதன்றோ எல்லார்க்கும் ஸ்வரூபம்; அப்படியிருக்க, நீர் இந்நிலத்தில் திருமலையிலே அடிமைசெய்ய விரும்புவது என்? என்ன; திருநாட்டிலுள்ள நித்தியமுக்தர்களுங்கூட இத்திருமலையிலேவந்து அடிமைசெய்யக் காண்கையாலே நானும் இங்கே அடிமைசெய்யக் குறையென்? என்கிறார்.

எம்பெருமானுடைய ஸர்வேச்வரத்வத்தை ஆழ்வார் வாயாரப்பேசுகிறார் எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் மூந்தை என்று. இங்கே நம் ஆசாரியர்கள் அருளிச்செய்யும் அழகியவார்த்தை ஒன்றுண்டு; ஆழ்வார் ஜீவாத்மலக்ஷணமான சேஷத்வத்தை நிரூபிக்கும்போது "அடியாரடியார் தம்மடியார் தமக்கடியாரடியார்" என்று மிகவும் கீழே இறக்கிக்கொண்டுவருவது போலவே, பரமாத்மலக்ஷணமான சேஷித்வத்தை நிரூபிக்கும்போதும் "எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும் மூந்தை" என்று மேலேமேலே ஏற்றிப்பேசுகிறாரென்று.

வானவர் என்றுதொடங்கி அங்குள்ளாரும் இங்கே போந்து அடிமை செய்யும்படியை அருளிச்செய்கிறார். எம்பெருமானிடத்தில் மேன்மை நீர்மை என்கிற இரண்டுவகையான குணங்களும் உள்ளன; மேன்மை காண்பது பரமபதத்திலே; நீர்மைகாண்பது இந்நிலத்திலே. மேன்மையைக் காட்டிலும் நீர்மையே சிறந்ததாகையாலே அதனைக்காண அங்குள்ளாரும் இங்கேவருகிறார்களாயிற்று. * கானமும் வானரமுமான விவற்றுக்கு முகங்கொடுத்துக் கொண்டு நிற்கிற ஸௌசீல்ய குணத்தையநுஸந்தித்து ஈடுபட்டவர்களாய் ஸ்ரீஸேநாபதியாழ்வான் தொடக்கமான நித்தியஸூரிகள் திருவேங்கடமுடையானை ஸேவிக்கவிரும்பி திவ்யபுஷ்பங்களை யெடுத்துக்கொண்டு இங்கேவருகிறார்கள்; அப்புஷ்பங்களைத் திருமலையப்பனுடைய பாதாரவிந்தங்களில் யதாக்ரமமாக ஸமர்ப்பிக்க சக்தராகாதபடி சீலகுணத்திலே உருகி நிற்கிறார்களாதலால் அவர்களது கைகளிலிருந்து புஷ்பங்கள் அவசமாகவே சிந்துகின்றனவாம்; அப்படிச்சிந்தின புஷ்பங்கள் செவ்விகுன்றாமல் விகாஸமும் பரிமளமும் மல்கி விளங்குகின்றனவாம் திருமலையின் நிலமிதியாலே. அப்படிப்பட்ட திருமலையில் அந்தமில்புகழ்பெற்றுவிளங்காநின்றான் எம்பெருமான்.

அந்தமில் புகழ் என்றவிடத்து ஈடு காண்மின்;—“ஸ்ரீவைகுண்டத்தில் புகழுக்கு அந்தமுண்டுபோலே; அப்ராக்ருதமான விக்ரஹத்தோடே அவ்வடிவை யநுபவிக்கப்பாங்கான கரணங்களையுடையராய்க்கொண்டு கிட்டினார்க்கு அநுபவயோக்யனாயிருக்கையாலே புகழ் ஸாவதியாயிருக்கும் அங்கு; இங்கு ஆனையும் கோளரியும் பொன்மணியும் முத்தமும் பூமரமுமானவற்றுக்குத் தன்னைக் கொடுத்துக்கொண்டு நிற்கையாலே புகழுக்கு அந்தமில்லையிறே.” .... (உ)

அண்ணல்மாயன் அணிகொள்செந்தாமரைக்
கண்ணன் * செங்கனிவாய்க் கருமாணிக்கம் *
தெண்ணிறைச்சுனைநீர்த் திருவேங்கடத்து *
எண்ணில்தொல்புகழ் வானவரீசனே. (௩)

அணி கொள்	அழகுபொருந்திய
செம் தாமரை கண்ணன்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடையவனும்
செம் கனி வாய்	சிவந்த கனிபோன்ற அதரத்தையுடையவனும்
கரு மாணிக்கம்	நீலரத்னம்போல் திருமேனி விளக்கத்தையுடையவனும்
தென் நிறை சுனை நீர்	தெளிவையும் நிறைவையுமுடைய சுனைநீர் பொருந்திய

திரு வேங்கடத்து	திருமலையில்
எண் இல் தொல் புகழ்	எண்ணிறந்த நித்திய கல்யாண குணங்களையுடையவனும்
வானவர் ஈசன்	நித்தியஸூரிகட்குத் தலைவனுமான எம்பெருமான்
அண்ணல்	நமக்குஸ்வாமியும்
மயன்	ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவனுமானவன்.

* * * [அண்ணல்மாயன்,] ஆழ்வீர்! திருமலையில் அடிமைசெய்யவேணுமென்று நீர் பாரிக்கின்றீர்; இஃது உமக்கு வாய்க்குமோ வென்ன; எண்ணிறந்த நித்யஸித்தபுருஷர்களெல்லார்க்கும் தன்னை அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறொரு பரமோபகாரகனல்லனோ அவன்; அன்னவன் நமக்கும் தன்னைத்தந்தருளுமென்கிறார்.

[எம்பெருமான் ஸ்வாநுபவத்தை நமக்குத் தந்தருள்வன் என்பது இப்பாசுரத்தில் கூறப்பட்டிருக்கவில்லையே என்னவேண்டா; எண்ணில் தொல்புகழ் வானவரீசனே என்ற ஈற்றடியில் இக்கருத்து உறைந்துநிற்கும். நமக்குத் தந்தருளாதொழிந்தானாகில் தொல்புகழுடைமை தேறுமோ என்றவாறு.]

அண்ணல் என்றதற்குப் பொருளருளிச் செய்யாநின்ற நம்பிள்ளை “குறிஞ்சி நிலத்தில்தலைமகனென்னுதல், ஸர்வஸ்வாமி யென்னுதல்” என்றருளிச் செய்துள்ளார். அண்ணலென்கிறசொல் பொதுவாக ஸ்வாமியைச் சொல்லக் கடவதென்றும், சிறப்பாகக் குறிஞ்சி நிலத்தலைமகனைச் சொல்லக்கடவதென்றும் தமிழர் கூறுவர். இரண்டுவகையான பொருளும் அவ்விடத்திற்கு ஒக்கும். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலமென்க. தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தில் இருபதாவது சூத்திரத்தின் உரையில், அண்ணல் என்பதற்கு முல்லை நிலத்தலைவன் என்ற பொருளும் கூறப்பட்டுளது.

மாயன் = ஆச்சரியமான வடிவழகு முதலியவற்றை யுடையவன் என்றபடி. அவற்றில் ஒன்றை யெடுத்துரைக்கிறார் அணிகொள் செந்தாமரைக் கண்ணன் என்று. "இக் கண்ணழகுடையவனுக்கு வேறொரு அலங்காரம் வேண்டா" என்னும்படி யிருப்பதாய், தனக்குத் தானே ஆபரணமாய், விகாஸம் செவ்வி குளிர்த்தி நறுமணங்களினால் தாமரையை ஒருவகைக்கு ஒப்பாகக் கொள்ளுமதான கண்ணழகை யுடையவன் என்க. அடியார்களை முந்துற முன்னம் திருக்கண்களாலே கடாக்ஷித்து, பிறகு சோதிவாய்திறந்து வார்த்தை சொல்லுவாராதலால், திருக்கண்ணுக்கு அடுத்தபடியாகச் செங்கனிவாயை அநுபவிக்கிறார். * அபிமத ஜநசாபாநுபந்த வேகத்தாலே அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து விம்மி வெளிவிழுகின்ற அவ்யக்த மதுர மந்தஹாஸ விலாஸந்தன்னை அநுபவித்து அருளிச்செய்கிற வார்த்தை இது.

செங்கனிவாய் என்றதன் வியாக்கியானத்தில் (ஈட்டில்) "முறுவலாலே யாயிற்று இவரை யெழுதிக்கொண்டது" என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுதலால் "அணிகொள் செந்தாமரைக்கண், என் செங்கனிவாய்" என்று பாடம் நம்பிள்ளை திருவுள்ளம்பற்றியதாகுமென்று அழகியமணவாளச்சீயர் (அஸ்மதாசார்யர்) அருளிச்செய்யக் கேட்டிருக்கை. என் என்றோ எம் என்றோ வருகிற விடங்களில் இங்ஙனம் வியாக்கியானிப்பது வழக்கமாதலால் இந்த ஊஹம் உரியதே.

கருமாணிக்கம்=இதனால் திருமேனியை நினைக்கிறது; உவமையாகுபெயர்.

தெண்ணிறைச்சுனைநீர் = இங்குப் பன்னீராயிரப்படி யுரைகார ரொருவர் மாத்திரம் "தெண்ணிறச் சுனைநீர்" என்று பாடங்கொண்டு 'தெளிந்த நிறத்தை யுடைய' என்று பொருள் பணிக்கின்றார்; மற்ற வியாக்கியானங்களில் நிறை என்ற பாடமே கொள்ளப்பட்டது. இப் பாடத்தில் "நிறைசுனை" என இயல்பாகவேண்டியிருக்க "நிறைச்சுனை" என்று சகர மிரட்டித்தது எங்ஙனே யென்னில்; நிறை என்பதை வினைப்பகுதியாகக் கொள்ளாமல் முதனிலைத் தொழிற் பெயராகக்கொண்டு 'நிறைதலையுடைய' என்று பொருள்கொள்ளுமளவில் வல்லொற்று மிகுதல் பொருந்துமென்ப. .... (ங)

ஈசன்வானவர்க்கென்பன் என்றால் * அது
தேசமோ திருவேங்கடத்தானுக்கு ?
நீசனேன் நிறைவொன்றுமிலேன் * என்கண்
பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே. (ச)

வானவர்க்கு	நித்யஸூரிகளுக்கு	நீசனேன் நிறைவு ஒன்றும் இலேன் என் கண்	கடைகெட்டவனும் குணபூர்த்தியற்றவனுமான என் விஷயத்தில்
ஈசன்	தலைவன்		
என்பன்	என்று சொல்லுவேன்;		
என்றால்	இப்படிச்சொன்னால்		

பாசம் வைத்த	ஆசாபாசத்தை வைத்தருளிய	திரு வேங்கடத்தானுக்கு	திருவேங்கடமுடையானுக்கு
பரம் சுடர் சோதிக்கு	நிரவதிக ஜ்யோதிர்மய திவ்யமங்கள விக்ரஹயுக்தனை	அது தேசமோ	நான் சொன்னவது ஒரு பெருமையோ?

* * * [ஈசன்வானவர்க்கு.] "எண்ணில் தொல்புகழ்வானவரீசன்" என்றார் கீழ்ப்பாட்டில்; அதனால், நித்யஸூரிகளுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுத்தானென்பதை ஓரேற்றமாக அருளிச்செய்தார்; மிகவும் நீசனை என்பக்கலிலே பாசம்வைத்திருக்குமப் பெருமானுக்கு அது ஓர் ஏற்றமோ என்கிறாரிப்பாட்டில்.

'வானவர்க்கு ஈசன்' என்று சொல்லுகிறவிது திருவேங்கடத்தானுக்குத் தேசமோ வென்கிறார். * கானமும் வானரமும் வேடுமானவிவற்றுக்கு முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறவன் நித்யஸூரிகட்கு முகங்கொடுக்கிறானென்பது எங்ஙனே ஏற்றமாகும்? * அயர்வறுமமரர்களதிபதியென்கை ஸ்ரீவைகுண்டநாதனுக்கு ஏற்றமாகுமத்தனை யல்லது திருவேங்கடமுடையானுக்கு ஏற்றமாகாது காணும்.

அஃது ஏற்றமன்றாகில், பின்னை எதைத் திருவேங்கடமுடையானுக்கு ஏற்றமாக நீர் நினைக்கின்றீர்? என்ன; அதற்கு விடையளிக்கின்றார்போலும் பின்னடிகளால். "ஜயந்தாக்ஷ: க்ஷத்ரஹூஸ்திரஸ்யாபவஹஸ: க்ருதவோ தோஷாநீ ஸாரவாரவஸோ வஞ்சநபர: | ந்ருசம்ஸ:பாவிஷ்ட: = அமர்யாத: க்ஷுத்ரச் சலமதிரஸூயாப்ரஸவபூ: க்ருதக்நோ துர்மாநீ ஸ்மரபரவசோ வஞ்சநபர:, ந்ருசம்ஸ: பாபிஷ்ட:" இத்யாதிப் புடைகளிலே ஆளவந்தார்போல்வார் அருளிச்செய்கிற கணக்கிலே மிகவும் நிஹீநனை என் திறத்தில் ஆசாபாசம் வைத்து அதனால் புகர்படைத்திருக்கின்ற எம்பெருமானை வானவரீசனென்பது என்ன பெருமை! என்றாராயிற்று.

என்கண்பாசம்வைத்த என்பதற்கு வேறுவகையாகவும் பொருளுரைப்பர்; தன் விஷயமான பாசத்தை என் பக்கலிலே [எனக்கு] உண்டாக்கின என்று.

சோதியாகி எல்லாவுலகும்தொழும் *
ஆதிமூர்த்தியென்றால் அளவாகுமோ? *
வேதியர் முழுவேதத்தமுதத்தை *
தீதில்சீர்த் திருவேங்கடத்தானையே.

வேதியர் முழுவேதத்து அமுதத்தை	வைதிகர்களால் ஓதப்படுகிற ஸகல வேதங்களிலும் பரமபோக்யனாக ப்ரதிபாதிக்கப்படுபவனும்	தீது இல் சீர்	தீது ஒன்றுமில்லாத திருக்குணங்களையுடையனுமான
		திரு வேங்கடத்தானை	திருமலையப்பனைக் குறித்து,

சோதி ஆகி	சோதிமயமான திரு மேனியையுடையனாய்	மூர்த்தி என்றால்	ஸர்வேச்வரன் (இவன்) என்று நான் சொன்னால் (அது)
எல்லா உலகும் தொழும்	உலகத்தவர்களெல்லாராலும் தொழப்படுபவனாய்	அளவு ஆகுமோ	ஒரு பெருமை யாகுமோ?
ஆதி	ஸகலஜகத்காரண பூதனான		

* * * [சோதியாகி.] நீசனான எனக்குத் தன்னைத் தந்தவனுக்கு நித்யஸூரி நிர்வாஹகத்வம் ஒரேற்றமோ வென்றார் கீழ்ப்பாட்டில்; என்னிலும் தாழ்ந்தவர்களைத் தேடிப் பெறமாட்டாதே யிருக்கிறவனுக்கு, எனக்குத் தன்னைத் தந்தானென்கிற விதுதான் ஓர் ஏற்றமோவென்கிறாரிப்பாட்டில்.

"எல்லாவுலகுந் தொழும் ஆதிமூர்த்தி" என்று இவர் கீழே சொல்லியிருந்தாலன்றோ இப்போது * எல்லாவுலகுந்தொழுமாதிமூர்த்தி யென்றாலளவாகுமோ? * என்று சொல்லலாம்; கீழ்ப்பாட்டில் அப்படியொன்றுஞ் சொல்லியிருக்கவில்லையே; மூன்றும் பாட்டில் "வானவரீசனே" என்று சொல்லியிருந்ததனால் நான்காம் பாட்டில் "ஈசன்வானவர்க்கென்ப னென்றால் அதுதேசமோ?" என்று சொன்னது பொருந்திற்று; இங்கு அங்ஙனம் பொருத்தமில்லையே! என்கிற சங்கைக்கு நம்பிள்ளை அருளிச்செய்கிற பரிஹாரத்தின் அழகைக் காண்மின்; — "கீழே * நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்றாரே தம்மை; — தாழ்வுக்குத் தம்மை எல்லாரிலுமவ்வருகாகச் சொன்னாரே; தாம் தொழுதபோதே எல்லா லோகங்களும் விழுக்காட்டாலே (ஸயூதஸ) தொழுததாயிற்று. 'எல்லாவற்றுக்கும் மேல்படி அமிழ்ந்தது' என்றால், கீழ்ப்படி அமிழ்ந்தது என்று சொல்லவேண்டாவிறே." என்பவை ஈட்டு ஸ்ரீஸூக்திகள். இதனால் தேறினது என்னவென்றால், "நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே" என்று கீழ்ப்பாட்டில் கூறியதில் * எல்லாவுலகுந் தொழுமென்கிற அர்த்தம் ஸித்தமாகவேயுள்ளது என்று காட்டினபடி. ஒரு கலாசாலையில் மிகவும் மூடனானவொருவன் பரீக்ஷை தேறிவிட்டானென்றால் மற்றையோர்கள் தேறினார்களென்பது எப்படி ஸித்தமோ அப்படியே ஆழ்வார்தாம் தொழுதமை சொன்னவளவில் எல்லாவுலகும் தொழுதமை சொன்னபடியேயாகுமென்க. என் கண் பாசம் வைத்தது ஓரேற்றமோ? என்றபடியாயிற்று முன்னடிகளால்.

இது ஏற்றமன்று என்றுசொல்லலாம்படி இப்போது ஆழ்வார் அருளிச்செய்கிற குணோத்கர்ஷம் ஏதென்னில்; தீதில் சீர்த்திருவேங்கடத்தான் என்ற சொல்லின் ஆழ்பொருளைக் காணவேண்டும். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி—எல்லாவுலகுந்தொழும் என்றதிற்காட்டில் தீதில்சீர் என்றவிடத்திலேற்றம் என்னென்னில்; என்னை விஷயீகரித்தானென்றவிது ஓரேற்றமோ? என்னில் தாழ்ந்தாரைத் தேடிக் கிடையாமையாலே பட்டினிவிட்டு 'ஆஸயா யக்ஷிவா ராத்ரௌ:' என்கிறபடியே அவஸர ப்ரதீக்ஷனாயிருக்கிறவனுக்கு.? * நீசனேன் நிறைவொன்றுமிலேனென்ற

இவருடைய குற்றத்தை குணமாகக்கொண்டு ஸ்வீகரித்து, இவருக் கவ்வருகு குற்றமுடையாரைத் தேடிக் கிடையாமலே நிற்கிறானாயிற்று." என்பதாம்.

நீதில்சீர் என்ற விசேஷண ஸ்வாரஸ்யத்தை ஆழ்ந்து அறிந்து நம்பிள்ளை யருளிச் செய்துள்ள அர்த்த விசேஷம் மிகவும் ரஸிக்கத்தக்கது. சீர்க்குத் தீதில்லாமை எப்போது தேறுமென்னில் * நீசனேன் நிறைவொன்று மிலேனென்று சொல்லுகிற இவரைக் காட்டிலும் மிகவும் நீசனை ஒரு வ்யக்தியைத் தேடிப்பிடித்தால் தான் தேறும்; உண்மையில் அப்படிப்பட்ட வ்யக்தி உலகத்தில் கிடையாமையாலே எம்பெருமானுக்குக் கிடைக்கவில்லை; கிடைக்காவிடினும், என்றைக்காவது அப்படிப்பட்டவொரு வ்யக்தி கிடைக்காமற் போகுமா என்கிற நசையினால் திருமலையில் வீற்றிருக்கலும் சயனிக்கலும் மின்றிக்கே நின்று கொண்டே தத்வேஷண ஜாகரூகதையைக் காட்டுகிறானாம் திருவேங்கடமுடையான். அதை ஆழ்வார் அநுஸந்தித்து இப்பாசுரம் அருளிச் செய்கிறார் இடீர்.

வேதியர் முழுவேதத்தமுதத்தை = வேதியர்களென்று வேதமோதுகிறவர்களைச் சொல்லுகிறது. அத்யயநம் செய்பவர்களையிட்டு நிரூபிக்கப்படுவன வேதங்கள். (அங்ஙனே யென்னில்;) ஆதர்வணம் தைத்திரீயம், காண்வம் என்று வ்யபதேசங்கள் விளைந்திருப்பதானது அத்யேத்ருவ்யபதேசமாகும். ஆசார்யஹ்ருதயத்தில் "ஓதுவாரோத்தாகையாலே ஆதர்வணாதிகள் போலே இதுவும் பேர்பெற்றது" என்றவிடமும் அவ்விடத்து வியாக்யான ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கன. ஆக, வேதியர்களையிட்டு நிரூபிக்கப்படுவனவான ஸகல வேதங்களிலும் பரமபோக்யபூதனாயிருக்கின்ற எம்பெருமான் வேதாதிகார மற்றவர்களுக்கும் எளியனாய்த் திருமலையில் ஸேவை ஸாதிக்கின்றானென்றாராயிற்று.

வேங்கடங்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும் *
தாங்கள்தங்கட்கு நல்லனவேசெய்வார் *
வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன
லாங்கடமை * அதுசுமந்தார்கட்கே. (௬)

வேங்கடத்து	திருமலையிலே	முற்றவும்	ஸகலபாபங்களும்
உறைவார்க்கு	நித்யவாஸஞ்செய்தருளுகிற பெருமானுக்கு	மேம்	வெந்துபோயின வென்னும்படி அழிந்துவிடும்;
நம எனல் ஆம் கடமை அது	நம: என்று சொல்லுவதாகிற அந்தக் கடமையை		(இப்படி பாவங்கள் தொலையவே)
சுமந்தார்கட்கு	வஹிக்கின்றவர்களுக்கு	தாங்கள்	அடியவர்களான தாங்கள்
கடங்கள்	அநுபவித்தேதீர்க்கவேண்டிய (பூர்வக்ருத) பாபங்களும்	தங்கட்கு நல்லனவே	தங்கள்ஸ்வரூபத்திற்குத் தகுதியானவற்றையே [கைங்கரியங்களையே]
மேல் வினை	(ப்ரக்ருதிவாஸனையாலே) இனிவிளையக்கூடிய பாவங்களும் (ஆகிய)	செய்வார்	செய்யப்பெறுவர்கள்.

* * * [வேங்கடங்கள்.] இப்பதிகத்தில் முதற்பாட்டில் கைங்கர்யம் பிரஸ்தாவிக்கப்பட்டது; (அதன்மேல் நான்கு பாசுரங்கள் ப்ராஸங்கிகங்கள்.) முதற்பாட்டோடு இப்பாட்டிற்கு ஸங்கதி கொள்ளலாம். பிரதிபந்தகங்களான கருமங்கள் பலகிடக்க அடிமை செய்வது எங்ஙனே ஸாத்யம்? என்று சங்கைபிறக்க, அடிமைசெய்வோமென்று இசையவே அவைதானே தொலையுமென்கிருரிப்பாட்டில்.

கடம் — கடன்; மகரனகரப்போலி. கடன்கள் வேம் = பிராமணன்பிறக்கும்போதே மூன்றுவகையான கடன்களோடு பிறக்கிருனென்று வேதம் ஓதுகின்றது. யஜுர்வேதத்தில் ஆருவது காண்டத்தில் மூன்ருவது ப்ரச்நத்தில்— “ஜாயமாநோ வை ப்ராஹ்மணஸ்த்ரிபிர் ருணவா ஜாயதே, ப்ரஹ்மசர்யேண ருஷிப்யோ யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய:, ஏஷ வா அந்ருணோ ய: புத்ரீ யஜ்வா ப்ரஹ்மசாரிவாஸீ” என்றுள்ளது. ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் கடன்பட்டவனுகியே ஜனிக்கின்ருனென்றும், வேதாத்யயனம் முதலியவற்ருல் ரிஷிகளின் கடனையும், யஜ்ஞங்களால் தேவர்களின் கடனையும், ஸந்தான ஸமுத்பாதநத்தினல் பித்ருக்களின் கடனையும் தீர்ப்பதென்றும் இதில் கூறப்பட்டுளது. இம் மூவகைக் கடன்களையும் தீர்க்காமல் மோக்ஷத்தில் ருசிவைத்தால் அது கிடைக்காதென்றும் நரகமே பலிக்குமென்றும் மநு ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டுள்ளது; “ருணாநி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயேத் । அநபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமாநோ வ்ரஜத்யத: = ருணுநி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயேத், அநபாக்ருத்ய, மோக்ஷம் து ஸேவமாநோ வ்ரஜத்யத:.” என்பது மநு மஹர்ஷியின் வசனம். இதன் பொருள்:— மூன்று கடன்களையும் தீர்த்துவிட்டு, பிறகு மனத்தை மோக்ஷத்தில் ஊன்றவைக்கவேணும், கடன்களைத் தீர்க்காமல் மோக்ஷத்தை விரும்பிஞலோ அதோகதியையே அடைந்திடுவான் — என்பதாம். வேங்கடத்துறைவார்க்கு நம: என்று சொல்லிவிட்டால் அம்மூன்று கடன்களும் தீர்க்கப்பட்டனவாகவே ஆய்விடும் என்கிருர்.

மெய்ம்மேல் வினைமுற்றவும் என்றவிடத்திலும் வேம் என்கிற வினைமுற்று அந்வயிக்கும். சரீர ஸம்பந்தமடியாக நேருகின்ற பாவங்களத்தனையும் தொலைந்து போம் என்றபடி. மெய்—சரீரம். இனி, மெய் என்பதைத் தனியே பிரித்து, மேல்வினை முற்றவும் வேம், (இது) மெய் - ஸத்யம் என்றுரைத்தலுமாம். கடங்கள் என்பதனல் வேதத்திற் கூறப்பட்ட மூவகைக் கடன்களைக் கொள்ளாமல், பாவங்கள் என்றே பொருள்கொள்ளுதலும் நன்று. பாவங்களானவை பூர்வாகங்களென்றும் உத்தராகங்களென்றும் இருவகைப்படும். எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு புத்திபூர்வகமாகப் பண்ணும் பாவங்கள் பூர்வாகங்களாம். பிறகு ப்ரக்ருதி பாரவச்யத்தாலே ப்ராமாதிகமாக நேரும் பாவங்கள் உத்தராகங்களாம். இங்கு; கடங்கள் என்றது பூர்வாகங்களைச் சொல்லும்; மேல்வினை என்று உத்தராகங்களை ஸ்பஷ்டமாகவே சொல்லும். இவையிரண்டும் வேம் என்கிறவிதனல், சாரீரக மீமாம்ஸையில் நான்காமத்யாயத்தில் முதல்

பாதத்தில் ''தத³தி⁴க³ம உத்தரபூர்வாக⁴யோரஶ்லேஷவிநாஶௌ தத்³வ்யபதே³ஶாத்'' என்கிற ஸூத்ரத்தின் பொருள் பேசப்பட்டதாகும்.

மெய் = ''வேதநூல் ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே'' என்றார் திருமழிசைப்பிரான். வேதம் சொல்லுவதடங்கலும் ஸத்யமாயிருக்கு மத்தனையல்லது அல்பமும் பொய் கலசாது. சாந்தோக்ய உபநிஷத்தில் வைச்வாநரவித்யையில் ''தத்³யதை²ஷீகாதூலமக்³நௌ ப்ரோதம் ப்ரதூ³யேதைவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந꞉ ப்ரதூ³யந்தே.'' என்று சொல்லியிருப்பது பழுதுபடாதென்றவாறு.

எத்தனையோ ஜன்மங்களில் ஸஞ்சிதங்களாய் மலைமலையாகக் குவிந்துகிடக்கும் பாவங்கள் நம்முடைய ஸ்வல்ப ஆநுகூல்யத்தில் தொலைந்திடுமோ என்று சிலர் சங்கித்தார்களாம்; அவர்களுக்கு, பட்டர் ரஸோக்திகளுடன் ஒரு இதிஹாஸமெடுத்துரைத்தாராம்: இராமபிரான் கடலரசனை நோக்கி மூன்று நாள் தரைக்கிடை கிடந்து தைந்யம் காட்டிநின்றார்; அவ்வளவில் கடலரசன் முகங் காட்டாதொழியவே சீறிச் சிவந்து அக்கடல்மீது அம்பு தொடுத்துநின்றார், அதுகண்டு கடலரசன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து விநயம்தோற்ற நின்றவாறே 'உனக்காக அம்பு தொடுத்தேன்' என்றுரைக்க வெட்கப்பட்டு, 'உன் விரோதிகளைச் சொல்லு, அவர்கள்மீது இவ்வம்பைச் செலுத்துகிறேன்' என்றுசொல்லி, அப்படியே அவன் தனது விரோதிகளிருக்குமிடம் குறிப்பிட அங்கே அவ்வம்பைச் செலுத்தி உபகாரஞ் செய்தாரென்று ஸ்ரீராமாயணத்திற் காண்கிறோம். [பட்டர் இவ்விடத்தை உபந்யாஸஞ் செய்கிறபோது திருஷ்டாந்தமாகச் சொன்ன ஒரு சிறு கதை யுண்டு; அதாவது — தலையில் மயிரின்றி யிருப்பானொருவன் நெற்களத்திற்கு ப்ரபுவாய் அங்கு இருந்தபோது, சதுரனான ஒரு யாசகன் அங்கேவந்து அவனை நோக்கி 'நீர் குழலைப் பேணாமல் இங்ஙனே காரியஞ் செய்கிறீரே, இப்படியுஞ் செய்யலாமோ? குழற் கற்றை தும்பும் தூசுமாக ஆய்விடுகிறதே!' என்று அநுதபிப்பான்போலப் புகழ்ந்து பேசினான். அது கேட்டு உவந்து அவன் 'எதற்காகவந்தீர்!' என்று வந்தவனை வினவ, அவனும் 'விசேஷமொன்றுமில்லை; மஹாப்ரபுவைக் கண்டு போகவந்தேன்' என்ன, 'ஆனால் ஒரு நெற்கோட்டையைக் கொண்டுபோம்' என்று எடுத்துக்கொடுத்தனுப்பினான்; அவன் அதனைக் கொண்டுபோம்போது எதிரே ஒருவன் வந்து 'இது எங்கே பெற்றது?' என்று வினவ, அதற்கு அவன் 'அதோ அந்த நெற்களத்தில் மொட்டைத்தலையனிருக்கிறானே, அவன் தந்தான்' என்று விடைகூறினன். அதுகேட்ட வழிப்போக்கன் உடனே களத்தண்டை வந்து அந்த ப்ரபுவை நோக்கி 'இன்னான் உம்மை வைது போகின்றனனே' என்று கோள்சொன்னான். அது கேட்டலும் அவன் 'அடா! என் நெல்லையுங்கொண்டு என்னையும் வைது போகிறாயா?' என்று சினந்து, முன்புதந்த நெற்கோட்டையைப் பறித்துக்கொள்ளக் கருதி அவனைத் தொடர்ந்தோடினன். அவன் அவ்வாறு ஓடிவருவதைத் திரும்பிப்பார்த்த இந்த சதுரயாசகன் அவன் அருகில்வந்த வளவிலே

'ஐயோ, குழல்கள் அலைய அலைய ஓடிவருகின்றீரே'! என்று மீண்டும் புகழ்ந்தான். அதுகேட்டலும், அந்த நெல்லுடையான் மிகவும் மகிழ்ச்சி கொண்டு 'ஒன்று மில்லை, இன்னம் ஒரு நெற்கோட்டை கொண்டுபோகச் சொல்லவந்தேன்' என்று சொல்லி அவனைத் திருப்பியழைத்துக் கொண்டுபோய் மீண்டும் ஒரு நெற்கோட்டை கொடுத்தனுப்பினான் என்பதாம். இதனால், உலகிற் பேதையர்களான மனிதர்கள் தங்கட்குச் சிறிதும் பொருந்தாத விஷயங்களைப் பிறர் தங்கள் மேலேறிட்டுச் சொல்லித் துதித்தாலும் அவை தமக்குத் தகுதியல்லனவென்றெண்ணி நாணங்கொள்ளாமல் அத்துதி மொழியை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு மனமுவந்து, அவ்வாறு துதித்தவர்க்கு மிகுதியாகப் பொருள் வழங்குவர் என்பது தெரிவிக்கப் பட்டது. எம்பெருமானுக்கு ஸ்தவ்யன் என்றும், ஸ்தவப்ரியன் என்றும் (ஸஹஸ்ரநாமத்தில்) இரண்டு திருநாமங்களுள. ஸ்தவ்ய:— ஸ்தோத்ரஞ் செய்ய உரியவர்; எந்தக்குணங்களையிட்டு எப்படிப் புகழ்ந்தாலும் அவை பொய்யாகாமல் பொருத்தமாகவே யிருக்கப் பெற்றவர் என்றபடி. ஸ்தவப்ரிய:— யாராலும் எந்தப்பாஷையாலும் எவ்வகையாலும் செய்யப்படும் ஸ்தோத்ரங்களைச் சொற்பிழை பொருட்பிழை யிருந்தாலும் குணங்களைச் சொல்வதாக எண்ணி அன்புடன் அங்கீகரிப்பவர் என்றபடி. (இது பட்டர்பாஷ்யத்திலுள்ள அர்த்த விவரணம்.) ஆகவே, அற்ப மனிதர்களிடத்திற்போல எம்பெருமானிடத்தில் நாம் ஏலாதவற்றையிட்டுப் புகழவேண்டுவதில்லை; நம்முடைய வாக்கில் ஸ்வல்பம் புகழுரை வந்த மாத்திரத்திலே எம்பெருமான் பரமத்ருப்தியடைந்து நம் அபராதங்களை யெல்லாம் பொறுத்தருளிப் பல நன்மைகளைச் செய்தருளக்கூடு மென்பதில் ஸந்தேகமில்லை. ஆனதால், "வேம்கடங்கள், மேல்வினை முற்றவும் —(இது) மெய்" என்றருளியது மிகப் பொருந்து மென்க.

பாவங்கள் தொலைவதற்காகச் செய்யவேண்டிய காரியம் கனத்திருக்குமோவென்ன, அப்படியொன்றுமில்லை யென்கிறார் தங்கட்கு என்று தொடங்கி. தாங்கள் தங்களுக்கு நன்றான கைங்கரியத்தைப்பண்ண வமையும்; விரோதிதன்னடையே விலகும் என்பது கருத்து. அவரவர்கள் தத்தம் மனத்திற்குத் தோன்றியபடியே செய்ய வமையும் என்று இவ்விதமாக இரண்டாமடிக்குப் பொருள் கொள்ளலாகாது; வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்' என்கிற அதிகாரியைக் குறித்துச் சொல்லுகையாலே. தாங்கள்—விஷயாந்தரங்களில் விரக்தராய்க்கைங்கரிய ருசியுடையரா யிருக்குமவர்கள். தங்கட்கு—இப்படிப்பட்ட ருசியுடையரா யிருக்கிற தங்களுக்கு. நல்லனவே செய்வார்—தங்கள் ஸ்வரூபத்தோடு சேர்ந்த கைங்கரியத்தையே பண்ணுவார். செய்வார் என்கிறவிதனை வினைமுற்றாகக்கொள்ளாமல் வினையாலணையும் பெயராகக் கொண்டு 'தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்பவர்களாயும், வேங்கடத்துறைவார்க்கு நம வென்னலாங்கடமையது சுமந்தவர்களாயு மிருக்கின்ற ஸத்துக்களுக்கு கடன்களும் மேல்வினை முற்றவும் வேம்' என்றும் அந்வயிக்கலாம். செய்வார் என்பதை வினைமுற்றாகவே கொண்டால், இப்பாசுரத்தை இரண்டு வாக்கியார்த்தமாகக் கொள்ளவேணும். வேங்கடத்துறைவார்க்கு என்று தொடங்கி, பின்னடிகளையும் முதலடிகளையும் அந்வயி

த்து ஒரு வாக்யார்த்தமாக முடித்திட்டு, 'தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார்' என்பதை இரண்டாவது வாக்யார்த்தமாக அந்வயிப்பது.

"நமோ வென்னல்" என்கிறபாடம் பெரியோர் வழங்குமதன்று. 'நம வென்னல்' என்றே கொள்க. "இராமாநுசாய நமவென்று" என்ற ஆர்த்திப் பிரபந்த ஸ்ரீஸூக்தியும் காணத்தக்கது. என்னலாங்கடமையது — என்கிற ஸுலபமான வுபாயத்தை என்றபடி. சுமந்தார்கட்கு என்றது எம்பெருமானுடைய அபிப்ராயத்தாலாம். பக்தர்களின் வாக்கில் நம: என்கிற ஒருசிறிய சொல்வந்தாலும் இதை மலையாக நினைப்பனும் எம்பெருமான். ஆனதுபற்றியே பட்டரும் ஸ்ரீகுணரத்ந கோசத்தில் "ககௌஷிஜைஷி ஹாரம் வஹஸே" என்றார். இங்கு ஹாரம் (பரம்) வஹதே என்றது குறிக்கொள்ளத்தக்கது. இங்கு "ஹூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம" என்கிற வேதவாக்கியத்தைப் பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் எடுத்துக் காட்டினர். "நம உக்திம் தேஹூயிஷ்டாம் விதேம" என்கிற அந்வயத்தில்நோக்கு; நம:என்கிற சொல்மாத்திரத்தை [அத்யந்தகௌரவமாகிய] உனக்கு மிகவும் கனத்ததாகச் செய்யக்கடவோம் என்று பொருள். இப்படி அந்வயிப்பது பிசகு என்றும், 'ஹூயிஷ்டமான நம உக்தியை' என்றே அந்வயிக்க வேணுமென்றும் இதர ஸம்ப்ரதாயஸ்தர்கள் சொல்லுவார்கள், அவர்களுடைய ஸம்பிரதாயத்திற்குத் தலைவரான ஸாக்ஷாத் ஸ்வாமி இயற்றிய வியாக்யானத்திலும் (இப்பாசுரத்தினுரையில்) "ஹூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம என்கிறபடியே ஈச்வரபுத்தியாலே இத்தைச் சுமையாகச் சொல்லுகிறார்" என்றெழுதியிருப்பது நோக்கத்தக்கது. .... (சு)

சுமந்துமாமலர் நீர்சுடர்தூபங்கொண்டு *
அமர்ந்துவானவர் வானவர்கோனொடும் *
நமன்றெழும் திருவேங்கடம்நங்கட்கு *
சமன்கொள்வீடுதரும் தடங்குன்றமே. (எ)

மா	சிறந்த
மலர்	புஷ்பங்களையும்
நீர்	தீர்த்தத்தையும்
சுடர்	தீபத்தையும்
தூபம்	தூபத்தையும்
சுமந்து கொண்டு	ஏந்திக்கொண்டு
வானவர்	தேவர்கள்
வானவர் கோனொடும்	தங்கள் தலைவனோடு கூட

அமர்ந்து நமன்று	அநந்யப்ரயோஜனராய் வணங்கி
எழும்	உஜ்ஜீவிக்குமிடமான
திருவேங்கடம்	திருவேங்கடமென்கிற
தடம் குன்றமே	பெரிய திருமலையே
நங்கட்கு	நமக்கு
சமன் கொள் வீடு	பரமஸாம்யாபத்திரூபமான மோக்ஷத்தை
தரும்	அளிக்கும்.

* * * [சுமந்துமாமலர்.] நமக்கு அபேக்ஷிதமான அடிமைகளெல்லாம் பெறுதற்குத் திருவேங்கடமுடையானை ஆச்ரயிக்க வேண்டுவதில்லை, திருமலையின் ஆச்ரயணமே போதுமென்கிறார். வானவர் வானவர்கோனொடும் மாமலர் நீர்சுடர் தூபம் சுமந்து கொண்டு அமர்ந்து நமன்று எழும் திருவேங்கடம்

தடம் குன்றம் நங்கட்குச் சமன்கொள்வீடுதரும் — என்று அந்வயக்ரமம். மா என்பது மலர்க்கு மாத்திரம் விசேஷணமன்று, நீர்சுடர் தூபங்கட்கும்விசேஷணம். புஷ்பம் தீர்த்தம் தீபம்தூபம் ஆகிய இவை மிகச்சிறந்தவஸ்துக்களாகத் தேடி ஸம்பாதிக்கப்படவேண்டு மென்கிறதன்று; பக்தியின் கனத்தாலேயாகுஞ் சிறப்பு விவக்ஷிதம். சுமந்து என்றதும் அதுபற்றியே யென்க. இவ்விடத்தில் ஒரு இதிஹாஸம் அருளிச்செய்கிறார். அதாவது—ஸ்ரீஜகந்நாதத்தி லெம்பெருமான் செண்பகப்பூவை உகந்துசாத்திக் கொள்வது வழக்கமாயிருந்ததனால் சில ராஜகுமாரர்கள் எம்பெருமானுக்குச் செண்பகப்பூ ஸம்பாதித்து ஸமர்ப்பிக்க வேணுமென்று கடைவீதியேறச் சென்றனர்; அங்குப் பூவெல்லாம் விற்றுப்போய் ஒரே ஒரு பூமாத்திரம் மிகுந்திருந்தது. விலை கொடுத்து வாங்கவந்த ராஜகுமாரர்கள் செல்வச்செருக்குடைய வர்களாதலால் ஒவ்வொருவரும் இப்பூவைநாமேபெற்றுப்போய்ஸமர்ப்பிக்க வேணுமென்ற ஆவல்கொண்டவராகி மேன்மேலும்விலையை ஏற்றிக் கொண்டேவந்தார்கள்; கடைசியாக அளவற்ற விலைகொடுத்து ஒரு ராஜபுத்திரன் அதைவாங்கிப் பெருமாளுக்குச் சாத்த அன்றிரா அவனுடைய கனவிலே எம்பெருமான் காட்சி தந்து 'நீ இட்டபூ எனக்குக் கனத்துச் சுமக்கவொண்ணாததாயிருக்கிறது' என்றருளிச் செய்தான் என்பதாம். இதனால், எம்பெருமானுக்கு அன்புடன் எதையிட்டாலும் அது அவனுக்கு அலப்யலாபமா யிருக்குமென்பது போதரும்.

வானவர் வானவர் கோனொடும் = நித்யஸூரிகளையும், ஸ்ரீஸேநாபதியாழ்வானையும் சொல்லிற்றாகவுமாய். தேவர்களையும் நாமுகனையும் சொல்லிற்றாகவுமாம். அமர்ந்து என்றது அநந்யப்ரயோஜநத்வத்தின் அமைதியைச் சொன்னபடி. தேவதைகளுக்கு ப்ரயோஜநாந்தர பரத்வம் ப்ரஸித்தமாயிற்றே; அவர்களுக்கு அநந்யப்ரயோஜநத்வம் பொருந்துமோ என்கிறசங்கையை நம்பிள்ளை தாமே பரிஹரிக்கிறார் — "ப்ரஹ்மாதிகளைச் சொல்லிற்றானபோது, அவர்கள் ப்ரயோஜநாந்தரபரரே யாகிலும் அவர்களையும் அநந்யப்ரயோஜநராக்குமாயிற்று இது தன்னின் ஸ்வபாவம்' என்று. நமன்று — நம: என்று சொல்லி என்றபடி. " *துயரறுசுடரடி தொழுதெழு என்கிற தம்வாஸனை அவர்களுக்கு முண்டென்றிருக்கிறார்" என்பது ஈடு.

சமன்கோள்வீடு என்பதற்கு இரண்டுவகையாக நிர்வாஹமுண்டு. "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று உபநிஷத்திற் சொல்லுகிறபடியே எம்பெருமானோடு ஸாம்யாபத்திரூபமான மோக்ஷமென்பது ஒரு நிர்வாஹம். ஸ்வஸ்வரூபத்திற்கு ஸமமாக [அநுரூபமாக] இருப்பதைக் கொண்டிருக்கிற மோக்ஷம் - கைங்கரியரூபமான மோக்ஷம்—என்பது மற்றொரு நிர்வாஹம். சமன்—சமம்; மகரனகரப்போலி. சமமென்றது ஸமமென்றபடியாய் ஸாம்ய மென்றதாகும். திருமலை எம்பெருமானுக்கு எப்படி சேஷப்பட்டிருக்கிறதோ அப்படியே நாமும் சேஷப்பட்டிருக்கும்படியாகச் செய்து கொடுக்கு மென்பதும் ஒரு நிர்வாஹம். ஸ்வசேஷத்வ ஸமாந சேஷத்வத்தைத் தருமென்றதாயிற்று.

குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன் *
அன்றுஞாலம் அளந்தபிரான் * பரன்
சென்றுசேர் திருவேங்கடமாமலை *
ஒன்றுமேதொழ நம்வினையோயுமே. (அ)

குன்றம் ஏந்தி	(கோவர்த்தன) மலையைக் குடையாகத் தாங்கிநின்று
குளிர் மழை	குளிர்ந்த பெருமழையை
காத்தவன்	தடுத்தவனும்
அன்று	முன்பொருகாலத்தில்
ஞாலம் அளந்த பிரான்	உலகங்களை யளந்த பிரபுவுமாகிய
பரன்	எம்பெருமான்
சென்று சேர்	வந்து சேர்ந்தவிடமான
திருவேங்கடம் மா மலை ஒன்றுமே	திருமலை யொன்றை மாத்திரமே
தொழ	தொழப்பெறில்
நம் வினை	நமது வினைகள் யாவும்
ஓயும்	தொலைந்திடும்.

* * * [குன்றமேந்தி] எம்பெருமானுக்கும் பரமப்ராப்யமான திருமலைதான் நமக்கும் பரமப்ராப்யம்; அது நமக்கு ஒரு பலனையளிக்க வேணுமென்பதில்லை; ஒரு பலனையும் தாரா தொழியினும் அதுவே நமக்கு ப்ராப்யமாகக் கடவது — என்கிறார்.

குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன் =. திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்களெல்லாரும் கண்ணபிரானுடைய அற்புத சரிதைகளைக்கண்டு இவனே நம் குலக்கொழுந்து, இவன் சொற்படி நடப்பதே நமது கடமை' என்று நிச்சயித்திருந்தார்கள். இருக்கையில் சரத்காலம் வந்தது; அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவதுபோல் இந்திரனுக்குப் பூசைசெய்யப் பலபல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜைப்பொருள்களையும் அமைப்பதைக்கண்டு கண்ணபிரான் 'ஓ பெரியோர்களே! இவை எதுக்காக? என்றான்- அதற்கு அவர்கள் 'அப்பா! தேவேந்திரனுடைய அநுக்ரஹத்தினால் காலங்களில் தகுதியாக மழைபெய்து அதனால் பசுக்களும் நாமும் சுகமே வாழ்கின்றோம்; இனி எப்போதும் அந்த இந்திரன் நம்மை இப்படியே ரக்ஷிக்க வேணு மென்கைக்காக அவனுக்கு வருஷத்திற் கொருமுறை பொங்கலிடுவதுண்டு; அதற்காக இவையெல்லாம் சேர்த்து வைத்தோம' என்றனர். கண்ணன் அது கேட்டு 'நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கின்றோமோ அதற்கன்றோ பூஜை செய்யவேணும்; இக் கோவர்த்தன மலையன்றோ பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; இந்திரனால் நமக்கு என்ன பிரயோஜன முண்டு? இதை யெல்லாம் நீங்கள் இந்தமலைக்கே பலியிடுங்கள்' என்ன; இடையர்கள் அப்படியே செய்யத் துணிந்து மலைக்கே பலியிட்டவளவில், கண்ணபிரான் தான் அம்மலையில் ஆவேசித்து அவற்றை யெல்லாம் தானே அமுது செய்திட்டான். பின்பு பூஜையிழந்த இந்திரன் சீற்ற முற்றுத் தன் பரிஜனங்களான மேகங்களை யழைத்து 'இடைக்குலத்துக்குப் பெருந்தீங்கு விளையும்படி விடாமழை பெய்யுங்கள்' என்று சொல்லிக் கட்டளையிடவே அம் மேகங்கள் அப்படியே வந்து ஏழுநாள் விடா மழை பெய்ய இடையரும் பசுக்க

ளுமெல்லாம் கதறிக் கண்ணனையே சரணமடைய, கண்ணபிரான் அபயமளித்து மலையைப் பிடுங்கிக் குடையாகத் தூக்கித் தாங்கிக் கோகுலத்தைச்சேர்ந்த ஸகல பிராணிகளையும் அதன்கீழ் அழைத்துக் கொண்டு சிறிதும் அபாயமின்றிக் காப்பாற்றியருளினன் என்ற வரலாறு இங்கு உணரத்தக்கது. (ஏழுநாள் இடைவிடாது கல்மாரி பெய்தும் யாருக்கும் எவ்விதபாதையும் நேரிடாமையைக் கண்ட இந்திரன் பராத்பரனான ஸ்ரீக்ருஷ்ணனுடைய மஹிமைக்குவியந்து கீழிறங்கிவந்து பணிந்து அபராத க்ஷாமணம் பண்ணிக்கொண்டு கோவிந்தாபிஷேகமும் நடத்தி விட்டுப்போய்ச் சேர்ந்தானென்பதுமுணர்க.)

விபவாவதாரத்தோடு அர்ச்சாவதாரத்தோடு வாசியற எஞ்ஞான்றும் மலையே ரக்ஷகமென்று சாடேக்தியாக இங்கு அருளிச்செய்வர்கள்.

அன்று ஞாலமளந்தபிரான்—ஒரு ஊர்க்கு உதவினமை கீழே சொல்லிற்று; உலகுக் கெல்லாம் உதவினமை இதனால் சொல்லுகிறது. *தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக் கொண்ட த்ரிவிக்ரமாவதார சரிதம் ப்ரஸித்தம்.

இப்படிப்பட்ட பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை யொன்றுமே தொழ நம் வினை ஓயும். உள்ளே எழுந்தருளி யிருக்கிறவன் தானும் வேண்டா, திருமலையாழ்வாரே போதும் என்கை. ... . (அ)

ஓயும்மூப்புப் பிறப்பிறப்புப்பிணி *
வீயுமாறுசெய்வான் திருவேங்கடத்
தாயன் * நாள்மலராம் அடித்தாமரை *
வாயுள்ளும்மனத்துள்ளும் வைப்பார்கட்கே. (கூ)

திரு வேங்கடத்து ஆயன்	திருமலையில் வாழ்கிற ஸ்ரீகிருஷ்ணன்	ஓயும் மூப்பு	ஓய்வைவிளைக்கின்ற கிழத்தனமென்ன
தாமரை நாள் மலர் ஆம்	அப்போதலர்ந்தசெந்தாமரைப்பூப்போன்ற	பிறப்பு	பிறவியென்ன
அடி	திருவடிகளை	இறப்பு	மரணமென்ன
வாய் உள்ளும்	வாக்கினுள்ளும்	பிணி	வியாதியென்ன (ஆகிய இவை)
மனத்துள்ளும்	நெஞ்சினுள்ளும்	வீயும் ஆறு	தொலையும் வகை
வைப்பார்கட்கு	வைத்துக்கொள்பவர்களுக்கு	செய்வான்	செய்தருள்வன்.

* * *—*[ஓயு மூப்பு.] திருமலையென்றே நம் வினை ஓய்வதற்குப் போதுமென்றார் கீழ்; அந்தத் திருமலைதானும் பூர்த்தியாக வேணுமென்பதில்லை, அதில் ஏகதேசமேபோது மென்கிறாரிப்பாட்டில். (இங்கு ஏகதேச மெகிறன் வார்த்தையினால் விவக்ஷிக்கிறது திருமலையப்பனை. திருமலையில் ஸம்பந்தத்தைப் பற்றியாயிற்று ஸ்ரீநிவாஸனும் உத்தேச்யனாவது. திருமங்கையாழ்வார் "வடமாமலையுச்சியை" என்று ஸ்ரீநிவாஸனைத் திருமலையின் ஏகதேசமாகவே கூறினர்.)

பிணி வீயுமாறு செய்வான் திருவேங்கடத்தாயன் நாண்மலராமடித்தாமரை வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கு மூப்புப் பிறப்பு இறப்பு ஓயும்- என்றும்அந்வயிப்பது. வியாதி முதலிய கருமபலன்களைத்தொலைத்தருள்வதற்காகத் திருமலையிலே எழுந்தருளி நிற்கிற பெருமானுடைய, 'நாட் பூமலர்ந்தது' என்னலாம்படி ஸுகுமாரமான திருவடித் தாமரைகளை நெஞ்சினால் நினைத்து வாயினால் துதிக்குமவர்களுக்கு ஜன்ம ஜராமரணாதிகள் ஓயும் என்கை.

ஓயும் என்பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் 'ஓயும் மூப்பு—ஓய்வை விளைவிக்கின்ற மூப்பு' என்று மூப்புக்கு அடைமொழியாக்கி யுரைப்பர் பன்னீராயிரவுரைகாரர். திருவேங்கடத் தாயனானவன் (தனது) நாண்மலராமடித் தாமரையை வாயுள்ளும் மனத்துள்ளும் வைப்பார்கட்கு, ஓயுமூப்புப் பிறப்பிறப்புப் பிணிகளை வீயுமாறு செய்வான் — என்கிற அந்வயக்ரமம் இவர்க்கு விவக்ஷிதம்.

இப்பாசுரத்தின் ஆறாயிரப்படி:- "திருவேங்கடமுடையானன்றோ ப்ராப்யம், திருமலையே ப்ராப்யமென்று சொல்லுவா னென்னென்னில், திருவேங்கடமுடையானுடைய ப்ராப்யத்வமும் திருமலையோடுள்ள ஸம்பந்தத்தாலே வந்ததாதலால் திருமலையே ப்ராப்ய மென்கிறார்" என்பதாம். நம் ஆசிரியர்கள் பாசுரங்களில் மிகவும் ஆழ்ந்து பொருள் கண்டுபிடிக்கும் சதிர் வாசாமகோசரம்.

வைத்தநாள்வரை எல்லைகுறுகிச்சென்று *
எய்த்திளைப்பதன்முன்னம் அடைமினோ *
பைத்தபாம்பணையான் திருவேங்கடம் *
மொய்த்தசோலை மொய்பூந்தடந்தாழ்வரே. (௧0)

(பாகவதர்களே !)

வைத்த	(உங்களுக்குச்) சங்கற்பித்துவைத்த
நாள்	ஆயுட்காலத்தினுடைய
வரை	அளவான
எல்லை	எல்லையானது
குறுகி	அணுகி
எய்த்து இளைப்பதன் முன்னம்	(அதனால் நீங்கள்) மிகவும் தளர்ச்சியுடையவதற்கு முன்னே,
சென்று	(திருமலையை நோக்கிச் சென்று)
பைத்த பாம்பு அணையான்	படமெடுத்த ஆதிசேஷனைப்படுக்கையாகக்கொண்ட பெருமானது
திருவேங்கடம்	(அத்) திருமலையில்
மொய்த்த சோலை	நெருங்கினசோலைகளும்
மொய் பூ தடம்	நெருங்கின புஷ்கரிணிகளுமுள்ள
தாழ்வர்	திருத்தாழ்வரையை
அடைமின்	அடையுங்கள்.

** * * [வைத்தநாள்வரை.] பரம போக்யமான திருமலையையே பரம ப்ராப்யமாகப் பற்றுங்களென்று பிறர்க்கு உபதேசிக்கிறார். எம்பெருமான் சேதநர்களுக்குக் கரணகளேபரங்களைக் கொடுத்து ஆயுளையும் அருளுகிறான்; இவை எதற்காகவென்னில், திருமலை முதலான திருப்பதிகளிலே சென்று வழிபாடு செய்வதற்காகவேயன்றி வேறொரு காரியத்திற்காகவன்று. ஆயினும், உலகர்*

உடலில் வலிவுள்ள காலங்களில் விஷயாந்தரங்களிலே மண்டிக்கிடந்து, திவ்ய தேச வழிபாடுகளைப்பற்றிப் போகப்போகப் பார்த்துக்கொள்வோம் என்று பதற்றமற்று ஆறியிருந்து விடுகிறார்கள்; பார்த்துக்கொண்டிருக்கும்போதே பல வகைகளிலும் தளர்ச்சிவந்து சேர்கின்றது; அப்போது திவ்யதேச வழிபாட்டை நெஞ்சிலும் நினைக்க ப்ரஸக்தியில்லையாகிறது. அங்ஙனம் ஆகாமே திருமலையைப் பணிமின் என்றாராயிற்று.

எம்பெருமானுக்குப் பரமபோக்யமான சயனமாகத் திருவனந்தாழ்வான் இருக்கவும் அவனையும் விட்டுத் திருமலையில் வாஸம் மிகவும் ருசித்தது என்பதை மூன்றாமடி காட்டும். கீழ் முதற்பாட்டில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட கைங்கர்யத்தைச் செய்யுமவர்கள் ஆயாஸமின்றிக்கே மிகவும் இனிதாகச் செய்வதற்குப் பாங்கான விடம் திருமலை என்பதைக்காட்டும் ஈற்றடி. .... (க0)

தாள்பரப்பி மண்தாவியவீசனை *
நீள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல் *
கேழிலாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே. (கக)

தாள் பரப்பி	திருவடியைவிரித்து	கேழ் இல்	ஒப்பற்றதான
மண் தாவிய	பூமியெல்லாம் அளந்துகொண்ட	ஆயிரத்து	ஆயிரத்தில்
ஈசனை	எம்பெருமானைக்குறித்து	இப் பத்தும்	இத்திருவாய்மொழியை
நீள் பொழில்	உயர்ந்த சோலைகளையுடைய	வல்லவர்	ஓதவல்லவர்கள்
குருகூர்	திருக்குருகூரில்(அவதரித்த)	ஞாலம் புகழ	உலகம் யாவும் கொண்டாடும்படி
சடகோபன்	ஆழ்வார்	வாழ்வு எய்தி	வாழ்ச்சி பெற்று (அந்த வாழ்ச்சி ஒருநாளும் குன்றாமே)
சொல்	அருளிச்செய்த	வாழ்வர்	விளங்குவர்.

* * * [தாள்பரப்பி.] இத் திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் உலகமெல்லாங் கொண்டாடும்படியான வாழ்ச்சியைப் பெறுவரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார்.

இப்பதிகம் திருவேங்கடமுடையானைக் கவிபாடினதாயிருக்க "தாள்பரப்பி மண்தாவியவீசனை" என்றது என்னென்னில்; எல்லாரையும் திருவடிகளின் கீழேயிட்டுக்கொள்ளுகைக்காக நிற்கிற நிலையாலும், * கானமும் வானரமுமான வற்றுக்கும் முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறபடியாலும் திருவேங்கடமுடையானை உலகளந்தபெருமானாகச் சொல்லப் பொருத்தமுண்டென்பர் ஆசிரியர்கள்.

[வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழவே.] 'ஞாலம்புகழ வாழ்வர்' என்றாவது, 'ஞாலம்புகழ வாழ்வெய்துவர்' என்றாவது அருளிச்செய்தால் போதுமே; 'வாழ்வெய்தி வாழ்வர்' என்றவிது புநருக்தியாகவுள்ளதேயென்று சிலர் சங்கிக்கக்கூடும்: பெறுகிற வாழ்வு இவ்வாத்மாவுள்ளதனையுமாகும் என்று காட்டுகிற

தாஸ்யபரமே புருஷார்த்தமில்லை; கைங்கர்ய ஸாம்ராஜ்யமாகிற வாழ்வைப்பெற்று எக்காலும் அந்த வாழ்வுடனே யிருக்கப் பெறுவர்கள் என்றவாறு. "ஞாலம் வாழ்வெய்திப் புகழ வாழ்வர்" என்று அந்வயித்துப் பொருள்கொள்வதுமுண்டு; அப்போது சங்கைக்கு உதயமேயில்லை. .... (கக)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாந் திருவாய்மொழி முற்றிற்று.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஒழிவிலாக் கால முடனாகி மன்னி
வழுவிலா வாட்செய்ய மாலுக்கு — எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த மிக்ககலஞ் சேர்மாறன்
பூங்கழலை நெஞ்சே புகழ்.

பதவுரை.

ஒழிவு இலா காலம்	ஸதாகாலமும்
உடன் ஆகி மன்னி	கூடவேபிரியாதபொருந்தியிருந்து
மாலுக்கு	ஸர்வேச்வரனுக்கு
வழு இலா	வழுவின்றிக்கே
ஆள் செய்ய	அடிமை செய்யுமாறு
எழு சிகரம் வேங்கடத்து பாரித்த	ஓங்கின சிகரங்களையுடைய திருமலையிலே மனோரதித்த
மிக்க கலம் சேர் மாறன்	மஹாகுண சாலியான ஆழ்வாருடைய
பூ கழலை	பொலிவுற்ற திருவடிகளை
நெஞ்சே	மனமே !
புகழ்	போற்றுவாயாக.

* * * * ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் திருமலையப்பனுக்கு அநவரதம் அத்தாணிச் சேவகம் செய்யவேணுமென்று மிக்க மனோரதம் கொண்ட சிறந்த நற்குணங்கள் நிரம்பிய ஆழ்வாரது திருவடித்தாமரைகளைத் துதிக்குமாறு நெஞ்சுக்கு உரைத்தாராயிற்று. .... (உ௩)

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ராவிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஸத்வோத்கர்ஷாத் ஸுதீப்தம் ச்ரமஹரவபுஷம் ஸ்வாங்கபர்யாப்தபூஷம்
தேஜிஷ்டம் நீசயோகாத் ப்ரணமிதபுவநம் ஸக்ததாம் பாவகம் தத் |
ப்ராப்த்யர்ஹஸ்தாநமம்ஹ: ப்ரசமநவிஷயம் [illegible]
[illegible] ||

1. ஸத்வோத்கர்ஷாத் ஸுதீப்தம். * திருவேங்கடத்து எழில்கொள் சோதி. * திருமலையின் நிலைமையாலே மிக்க மேம்பாடு பெற்றவன்.

2. ச்ரமஹரவபுஷம். * காரெழிலண்ணலே. * கண்டாருடைய விடாயைப் போக்கவல்லவனுமாய்க் காளமேகம்போன்ற வடிவுடைத்தவன்.

3. ஸ்வாங்கபர்யாப்தபூஷம். * அணிகொள் செந்தாமரைக்கண்ணன் செங்கனிவாய்க் கருமாணிக்கம். * தனது திவ்யாவயவங்களையே போதுமான திருவாபரணங்களாகவுடையவன்.

4. நீசயோகாத் தேஜிஷ்டம். * நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண்பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதி. * தண்ணியனானவனோடே கலந்து பழகுவதனால் ஒளிமிக்கவன்.

5. ப்ரணமிதபுவநம். * எல்லாவுலகுந்தொழுமாதிமூர்த்தி. * தொழுவித்துக்கொள்ளப்பட்ட ஸகலலோகங்களையுமுடையவன்.

6. ஸக்ததாம் பாவகம். வேங்கடங்கள் இத்யாதி. * வணங்கினவர்களை அதிபாவநராக்கிப் பரிசுத்தப்படுத்துமவன்.

7. ப்ராப்த்யர்ஹஸ்தாநம். * திருவேங்கடம் நங்கட்குச்சமன்கொள்வீடு தரும். * பரமஸாம்யாபத்திரூபமான ப்ராப்தியைத் தருதற்கு அர்ஹமான இருப்பிடத்தையுடையவன்.

8. அம்ஹப்ரசமநவிஷயம். * திருவேங்கடமாமலையொன்றுமே தொழ நம்வினைபோயுமே. * ப்ராப்தி விரோதிகளான பாவங்களைப் போக்கவல்லதான இருப்பிடத்தையுடையவன்.

9. பந்தவிச்சேதிபாதம். * ஒயு மூப்பு இத்யாதி. * ஸம்ஸாரபந்தத்தை யறுத்தொழிக்கவல்ல திருவடிகளையுடையவன்.

10, சக்ராபியாநக்ஷமசுபவஸதிம். * எய்த்திளைப்பதன்முன்னமடைமினோ. * விரைந்துசென்று அடையத்தக்கதான அழகிய வாஸஸ்தானத்தை யுடையவன்.

11. லம்பித அர்ச்சாபிமுக்க்யம். * தாள்பரப்பி மண்தாவியவீசனை. * எல்லார் தலைகளிலும் ஒருங்கே திருவடியைவைத்த அந்த ஸௌலப்யம் தோன்றத் திருமலையில் வாழ்கையாலே ஆராதனத்திற்கு எளியன்.— ஆக இப்படிப் பட்ட எம்பெருமானை * ஒழிவில்காலத்தில் ஆழ்வார் பஜித்தார் என்றதாயிற்று.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑌯𑍇 𑌸𑌕𑌲𑌾𑌸𑍍𑌵𑌵𑌸𑍍𑌥𑌾
𑌸𑍍𑌵𑌾𑌹𑍍𑌯𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌵𑌿𑌧𑌦𑌾𑌸𑍍𑌯𑌰𑌸𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌵𑍆𑌂𑌕𑌟𑌾𑌦𑍍𑌰𑌿𑌨𑌿𑌲𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌂𑌸𑌃
𑌨𑌿𑌸𑍍𑌸𑍀𑌮𑌶𑍀𑌲𑌗𑍁𑌣𑌵𑍈𑌭𑌵𑌦𑍃𑌕𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 ॥

(கருத்து.) மூன்றாந் திருவாய்மொழியில் ஆழ்வார் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸகலவிதமான அடிமைகளையும் செய்யவிருப்பங்கொண்டவராகி (அந்த விருப்பத்தோடுகூடத்) திருவேங்கடமுடையானது எல்லைகடந்த சீலகுணத்தையும் வெளியிட்டருளினாரென்கை.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி மூன்றும்பத்து.

நான்காந்திருவாய்மொழி-புகழுநல்லொருவன்.

அவதாரிகை:— கீழ்த்திருவாய்மொழியில் "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம்" என்று எம்பெருமானுக்கு ஸர்வ தேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸகலவிதமான கைங்கர்யங்களையும் செய்யப்பெறவேணுமென்று மநோரதங்கொண்ட ஆழ்வாருடைய பாரிப்பைக் கண்ட எம்பெருமான் ஆழ்வார்க்குத்தான் அவர் விருப்பத்தின்படியே செய்வதற்கு அநுகூலமாக எல்லாப் பொருள்களிலும் பிரவேசித்து எங்கும் நிற்கின்ற நிலையைக் காட்டிக் கொடுத்தான். அதுகண்ட ஆழ்வார், பெருங்காற்றில் வீழ்ந்த பழங்களைப் பொறுக்கியெடுத்துக்கொள்ளக் கருதுமவர்கள் 'அந்தப் பழத்தை எடுப்போமா? இந்தப்பழத்தையெடுப்போமா?' என்று அலமந்து கிடப்பதுபோல, அத்தைச் சொல்லுவேனோ? இத்தைச் சொல்லுவேனோ? என்று அலமந்து, எங்கும் எல்லாவகைப்பொருளாயும் தோன்றுகின்ற அப்பெருமானுக்கு வாசிகமான கைங்கர்யத்தைச் செய்ய நினைத்து 'ஸகலகல்யாண குணங்களுக்கும் கடலான அவ்வெம்பெருமானுடைய தன்மையை யான் என்னவென்று சொல்லுவேன்?' என்று நிர்வேதத்துடனே அவனது ஸர்வாத்மத்வத்தைப்பேசுகிறார் இத்திருவாய்மொழியில்.

எம்பெருமானுக்குள்ள திருநாமங்களில் அநந்தன் என்பதும் ஒரு திருநாமம். 'அந்தமில்லாதவன்' என்பது அதன் பொருள். அந்தமாவது பரிச்சேதம். உலகில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் மூன்று வகையான பரிச்சேதங்கள் உண்டு; அவை—தேச பரிச்சேதம், கால பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் எனப்படும். உலகில் காணப்படும் பொருள்கள் யாவும் இம்மூன்று வகைப்பட்ட பரிச்சேதங்களையுடையனவாகவேயிருக்கும். எந்தப்பொருளை யெடுத்துக்கொண்டாலும் 'இது இன்ன இடத்திலுள்ளது, மற்றோரிடத்தில் இல்லை' என்றும், 'இது இன்ன காலத்திலுள்ளது, மற்றொருகாலத்திலில்லை' என்றும், 'இது இன்ன வஸ்துவாக வுள்ளது, மற்றொரு வஸ்துவாக இல்லை' என்றும் சொல்லக்கூடியதாகவே யிருக்குமாதலால் (எம்பெருமான் தவிர) ஸகல பதார்த்தங்களும் த்ரிவித பரிச்சேத ஸஹிதங்களாகவே யிருக்கும்; எம்பெருமானொருவனே த்ரிவித பரிச்சேதரஹிதனாயிருப்பன். எங்குமுள்ளவனாய் எப்போதுமுள்ளவனாய் எல்லாப்பொருள்க

னும் தானுயுள்ளவனுய் இருக்கையாலே இது பற்றியே அனந்தன் எனப்படுகி முன். இவற்றுள் ஒன்றான வஸ்துபரிச்சேத ராஹித்யம் நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மிகவும் உள்ளீடாயிருப்பது. ஏனென்னில்; சரீராத்ம பாவத்தைக்கொண்டே இந்த வஸ்துபரிச்சேதராஹித்யத்தை நிர்வஹிக்கவேண்டும். சரீரங்களைச்சொல்லும்படியான சப்தங்கள் சரீரியளவும் செல்லக்கடவனவாதலால், எம்பெருமான் எல்லாப்பொருள்களுக்கும் அந்தர்யாமியாதலால் எந்த வஸ்துவைச்சொல்லுகிற சப்தமும் எம்பெருமானளவுஞ்சென்று பர்யவஸிக்குமென்பது வேதாந்த ஸித்தாந்தம். இதனை ஆழ்வார் முந்துறமுன்னமே "உடன்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்" என்று சுருக்கமாகக் காட்டியருளினார். அது தன்னையே இத்திருவாய்மொழியில் விஸ்தரித்து அருளிச்செய்கிறார் என்றுணர்க. .... ※

புகழுநல்லொருவனென்கோ பொருவில்சீர்ப்பூமியென்கோ ※
திகழுந்தண்பரவையென்கோ தீயென்கோவாயுவென்கோ ※
நிகழுமாகாசமென்கோ நீள்சுடரிரண்டுமென்கோ ※
இகழ்விலிவ்வனைத்துமென்கோ கண்ணனைக்கூவுமாறே. (க)

கண்ணனை	(உலகத்து எல்லாப் பொருள்களையும் தனக்குச் சரீரமாகவுடைய) எம்பெருமானை
புகழும்	(வேதங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றால்) புகழ்ந்து கூறப்பெற்ற
நல்	விலக்ஷணமான குணங்கள் முதலியவற்றையுடைய
ஒருவன்	ஒப்பற்றவன்
என்கோ	என்று சொல்வேனோ?
பொருவு இல் சீர்	ஒப்பில்லாத சிறப்புகளையுடைய
பூமி என்கோ	பூமியென்று சொல்வேனோ?
திகழும்	விளங்குகிற
தண்	குளிர்ச்சியான
பரவை என்கோ	நீர்நிலையென்று சொல்வேனோ?
தீ என்கோ	அக்கினியென்பேனோ?
வாயு என்கோ	காற்று என்பேனோ?
நிகழும் ஆகாசம் என்கோ	எங்குமுள்ளதான ஆகாசமென்பேனோ?
நீள் சுடர் இரண்டும் என்கோ	மிக்க வொளியையுடைய (ஸூர்யன் சந்திரன்) என்ற இரண்டு சுடர்களுமென்பேனோ?
இகழ்வு இல்	இகழப்படுதலில்லாத [வேண்டும் பொருள்களாகக் கைக்கொள்ளுதற்கு உரிய]
இவ் அனைத்தும் என்கோ	இவையெல்லாப் பொருள்களுமென்பேனோ?
கூவும் ஆறு ஏ	(எம்பெருமானைச்) சொல்லியழைக்கும் விதம் (என்னே) [யான் இன்னதென்று உணரேன் என்றபடி].

※ ※ ※ [புகழுநல்லொருவன்.] எம்பெருமான் ப்ரபஞ்சஸ்ருஷ்டிக்குக் காரணமான பஞ்சமஹாபூதங்களையும், அந்தப்பூதங்களினால் இயன்ற பொருள்களையும் தனக்குச்சரீரமாகக் கொண்டு விலக்ஷணமான குணங்களோடு ஆழ்வார்க்கு

ஸேவைதந்தருளியதனால், அத்தகைய நிலைமையை ஸேவிக்கப்பெற்ற ஆழ்வார் அப்பெருமானை இப்படிப்பட்ட தன்மையையுடையவனென்று கூறுதற்கு இயலாமல் நினைத்து நிற்கின்றார். "கண்ணனைக் கூவுமாறே" என்று, முடிக்குஞ்சொல் இன்றி விட்டிருக்கிறார்; அதனை வருவித்து உரைத்துக்கொள்க. விதமென்றபொருளையுணர்த்துகின்ற ஆறு என்ற சொல் வருமிடங்களில் முடிக்குஞ்சொல் கூறப்படாது எஞ்சிநிற்பதை இலக்கியங்களிற் காணலாம்: இது இசையெச்சம்.

புகழும் நல்லொருவன் = வேதம் முதலியவற்றால் புகழப்பெற்றும், சேதநாசேதனங்களைக்காட்டிலும் பரமவிலக்ஷணனுமாயும் தோன்றும்ஒப்பற்ற எம்பெருமான் என்றபடி. என்கோ என்பதை என்கு ஓ என்று பிரிக்க, 'என்' என்னும் பகுதியினடியாப்பிறந்த தன்மையொருமை எதிர்காலவினை முற்று 'என்கு' என்பது. இதில் 'கு' விகுதி காலத்தையும் இடத்தையும் காட்டும். [நன்னூல்-பதவியலில் பதினெட்டாவது சூத்திரமும் வினையியலில் பன்னிரண்டாவது சூத்திரமும் காண்க]. என்கோ என்பவற்றிலுள்ள ஓகாரங்கள் ஸந்தேஹப்பொருளில் வந்தவை.

ப்ருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் என்கிற பஞ்சபூதங்களையும் இப்பாட்டில் உத்பத்திக்ரமேண கூறாமல் மஹாப்ரளய காலத்தில் லயிக்கும் முறைப்படி கூறியுள்ளார். "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத: ஆகாஶாத்வாயு:" இத்யாதி உபநிஷத்வாக்யங்களினால் உத்பத்திக்ரமம் அறியத்தக்கது. "ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே ஆபஸ்தேஜஸி லீயந்தே" இத்யாதி உபநிஷத் வாக்யங்களினால் அவற்றின் லயக்ரமம் அறியத்தக்கது. பொறுமை முதலிய குணங்களையுடைய பூமியாகவும், அந்தப் பூமியைக்கொண்டு காரியங்கொள்ளும்போது அதனுடைய கடினத்தன்மையை நெகிழ்த்துக் கொள்ளுதற்கு உரிய ஜலமாகவும், அந்த ஜலம் நிறைந்து நெகிழ்ச்சி மிகுந்தால் அந்த நெகிழ்ச்சியை நீக்கி வலிக்கப் பண்ணித்தரும் அக்நியாகவும், அந்த அக்நி மிகவும் உறைதலால் அதனைத் தணித்தற்கு உரிய காற்றாகவும், இந்த நான்கு பூதங்களும் தங்குவதற்கு இடத்தைத் தருகின்ற ஆகாசமாகவும் இவ்வாறு லோக ஸ்ருஷ்டிக்குக் காரணமான இந்த ஐம்பெரும் பூதங்களையும் எம்பெருமான் தனக்குச் சரீரமாகக் கொண்டு நிற்கும் வகையை முதலிற் கூறினார்—"பொருவில்சீர்ப்பூமியென்கோ" என்று தொடங்கி "ஆகாசமென்கோ" என்னுமளவாக.

"தீள்சுடரிரண்டுமென்கோ" என்று ஸூர்ய சந்திரர்களைக் கூறியது—பஞ்சபூதங்களினாலாகிய மற்றை உலகத்துப் பொருள்கட்கெல்லாம் உபலக்ஷணம். இங்குக் கூறிய பூமி முதலிய பொருள்கள்யாவும் மற்றையுள்ளார்க்குத் தோன்றுவதுபோல் வெறும் பொருள்மாத்திரமாகத் தோன்றாது எம்பெருமான் வடிவமாகவே இவ்வாழ்வார்க்குத் தோன்றுகின்றதனால் ஒன்றையும் ஹேயமாகக்

கொள்ளாமல் ததீயஸ்வாகாரத்தாலே அனைத்தையும் உபாதேயமாகவே ஆழ்வார் கொண்டார் என்பது "இகழ்வு இல் இவ்வனைத்து மென்கோ" என்பதனால் பெறப்படும். ஆசார்யஹ்ருதயத்தில் (இரண்டாம் பிரகரணத்தில் முடிவான சூர்ணையில்) "ததீய மென்னில் விட்டகலவும் ததீய மென்னில் இகழ்வு அறவும்" என்றருளிச்செய்திருப்பது இங்கு நினைக்கத்தக்கது.

"பத்ப்யாம் பூமி:" என்ற புருஷஸூக்தத்தின்படி பூமியானது எம்பெருமானது திருவடிகளில் தோன்றிய சிறப்பையுடையதும், பொறுமை முதலியவற்றையுடையது மாதலால் "பொருவில் சீர்ப் பூமி" என்றும், ஜலமானது பூமியின் வன்மையை நெகிழ்த்திக்கரும் தன்மையையுடையதாதலால் "திகழும் பரவை" என்றும், ஆகாசமானது மற்ற நான்கு பூதங்களும் தன்பக்கல் ஒடுங்குமளவும் தான் அழியாது நிற்றலாலும், மற்றைப் பூதங்கட்கு முன்னே தோன்றி அவைதன்னிடத்துத் தங்கும்படி தான் இடங்கொடுத்தலாலும் "திகழும் ஆகாசம்" என்றும் கூறினர் என்றும் விசேஷார்த்த மருளிச்செய்வர். ... (க)

கூவுமாறறியமாட்டேன் குன்றங்களனைத்துமென்கோ*
மேவுசீர்மாரியென்கோ விளங்குதாரகைகளென்கோ*
நாவியல்கலைகளென்கோ ஞானநல்லாவியென்கோ*
பாவுசீர்க்கண்ணனெம்மான் பங்கயக்கண்ணனையே. (உ)

பாவு சீர் கண்ணன்	பரம்பின திருக்கல்யாண குணங்களையுடைய க்ருஷ்ணனென்ற திருநாமமுடையவனும்	விளங்கு தாரகைகள் என்கோ	பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களென்பேனோ?
பங்கயம் கண்ணன்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடையவனும்	நா இயல் கலைகள் என்கோ	நாவினால் முயற்சியோடு உச்சரிக்கப்படுகின்ற கல்விகளென்பேனோ?
எம்மானை	எமது தலைவனுமாகிய எம்பெருமானை	ஞானம் நல் ஆவி என்கோ	அர்த்த ஞானத்திற்குக் காரணமான நல்ல சப்தங்கள் என்பேனோ?
குன்றங்கள் அனைத்தும் என்கோ	மலைகள் எல்லாமும் என்று சொல்வேனோ?	கூவும் ஆறு	(எம்பெருமானைச்) சொல்லும் விதத்தை
மேவு சீர் மாரி என்கோ	(கண்டார்) விரும்பும்படியான சிறப்பையுடைய மழை யென்பேனோ?	அறிய மாட்டேன்	அறிகின்றேனில்லை.

* * * [கூவுமாறு.] கீழ்ப்பாசுரத்திற் கூறிய பஞ்சபூதங்களின் காரியப்பொருளாக எம்பெருமானை இந்தப்பாசுரத்தில் ஆழ்வார் அநுபவிக்கிறார். குன்றங்கள் முதலியவை எம்பெருமான் வடிவமாகவே ஆழ்வார்க்குத் தோற்றுதலால் "பங்கயக் கண்ணன்" என்றதனோடு "குன்றங்களனைத்தும்" என்பன முதலியவற்றோடு வாசியில்லாமல் இவர் ஈடுபடுகின்றனரென்க. குன்றம்—பூமிதத்துவத்தின் காரியம். "பூமியினுடைய காடிந்யம் ஓரிடத்திலே திரண்டாற்போலேயாய்ப் பூமிக்கு

ஆதாரமாயிருக்கிற பர்வதங்களென்பேனோ" என்பது பட்டர் ஸ்ரீஸூக்தி. மாரி—ஜலதத்துவத்தின் காரியம். உலகெல்லாம் அதற்கு உதவியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடக்கற்கு ஏதுவாகிய சிறப்பையும், வடிவழகினாலும் குளிர்ச்சியினாலும் கண்டாரெல்லாராலும் விரும்பப்படுந்தன்மையையும், எம்பெருமானது திருமேனிக்குப் போலியாகும் பெருமையும் பெற்றிருத்தலால் "மேவுசீர் மாரி" என்றார். தாரகைகள் — அக்நிதத்துவத்தின்காரியம். ஒளியுள்ள பொருள்களெல்லாம் அக்நிதத்துவத்தின் காரியமென்பது நூல்துணிபு. கலைகள்—வாயுதத்துவத்தின் காரியம். சப்தங்கள் ஆகாசத்தின் குணமெனப்படினும் அவை செவிப்புலனாகுந்தன்மை வாயுவின் உதவியினாலேயே ஆகவேண்டியிருத்தலால் கலைகள் வாயுவின் காரியமாகும். உயிரின் முயற்சியினால் தோன்றும் வாயுவே முயற்சியின் வேறுபாட்டால் வெவ்வேறெழுத்துக்களாக நாவினால் உச்சரிக்கப்பட, அவ்வெழுத்துக்கள் பதங்களாகவும் அப்பதங்கள் வாக்கியங்களாகவும் அவ்வாக்கியங்கள் சாஸ்த்ரங்களாகவும் என இவ்வாறு நாவினால் தோன்றுகின்ற எழுத்துக்களே சாஸ்த்ரங்களாகின்றமையாதலால் 'நாவியல் கலைகள்' எனப்பட்டது. ஞான நல்லாவி—ஆகாசதத்துவத்தின் காரியம். ஞானமாவது பொருள்களை உள்ளபடி அறிதல்; ஆவி என்னும் உயிரின் பெயர் ஆகுபெயராய் உடலைக் குறித்து நிற்கும். ஆகவே 'ஞான நல்லாவி' என்பதற்கு 'அறிவுக்கு உடலான ஓசைவிசேஷங்கள்' என்று பொருள் கொள்ளவேண்டியதாயிற்று. உடலுக்குள் உயிர் தங்கி நிற்றல் போலச் சப்தங்களில் அர்த்த ஞானம் தங்கி நிற்றலால் ஞானத்துக்குச் சப்தங்கள் உடலாகும். "பல்வகைத் தாதுவினுயிர்க்கு உடல்போல், பல சொல்லாற் பொருட்கு இடனாக...செய்வன செய்யுள்" என்றது இங்குக்காணத்தக்கது.

"ஆவியென்று லக்ஷணையாலே சரீரத்தைச் சொல்லுகிறது. ஞானத்துக்கு சரீரமென்று ஜ்ஞாநஸாதகமான சப்தத்தைச் சொல்லுகிறது" என்ற பன்னீராயிரப்படி காண்க.

ஆழ்வார் மயர்வற மதிநலமருளப்பெற்று எல்லாப்பொருள்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல நன்றாக உணர்ந்திருந்தும் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றபடி தம் பக்தியினால் பரவசப்பட்டிருத்தலால் எம்பெருமானது தன்மையைப்பேச இயலாமல் "கூவுமாறு அறியமாட்டேன்" என்கிறார். இனி, எம்பெருமானது விபூதிகள் இவ்வளவென்று ஓரளவுபட்டிராமையால் அவற்றை முற்றவும் சொல்லமாட்டாது இங்ஙனம் கூறுகின்றாரெனினும் அமையும். .... (௨)

பங்கயக்கண்ணனென்கோ பவளச்செவ்வாயனென்கோ*
அங்கதிரடியனென்கோ அஞ்சனவண்ணனென்கோ*
செங்கதிர்முடியனென்கோ திருமறுமார்வனென்கோ*
சங்குசக்கரத்தனென்கோ சாதிமாணிக்கத்தையே. (௩)

சாதி மாணிக்கத்தை	நல்ல சாதியான [ஆகரத்தில் தோன்றிய] கருமாணிக்கம் போல விளங்குகின்ற திருமேனியையுடைய திருமாலை	அஞ்சனம் வண்ணன் என்கோ	மைபோலுங் கருநிறத்தையுடையவனென்பேனோ?
பங்கயம் கண்ணன் என்கோ	செந்தாமரைக் கண்ணனென்பேனோ?	செம் கதிர் முடியன் என்கோ	சிவந்த ஒளியையுடைய கிரீடத்தையுடையனென்பேனோ?
பவளம் செம் வாயன் என்கோ	பவளம்போலச் சிவந்த வாயையுடையவன் என்பேனோ?	திரு மறு மார்வன் என்கோ	பிராட்டியையும் ஸ்ரீவத்ஸ மென்னும் மறுவையுமுடைய திருமார்பையுடையவனென்பேனோ?
அம் கதிர் அடியன் என்கோ	அழகையும் ஒளியையுமுடைய திருவடிகளையுடையவனென்பேனோ?	சங்கு சக்கரத்தன் என்கோ	சங்க சக்கரங்களையுடையனென்பேனோ?

* * * [பங்கயக்கண்ணன்] எம்பெருமான் ப்ரபஞ்ச சரீரனாயிருக்கும்படியை முதலிரண்டு பாசுரங்களிற் கூறிய ஆழ்வார், இந்தப் பாசுரத்தில் தனக்கு உரிய திருமேனியோடு சேவைஸாதிக்கின்ற அப்பெருமானை அநுபவிக்கிறார். இவ்வாறு அநுபவித்துக் கூறியதற்குக்காரணம்—எம்பெருமான் ஜகத்தை சரீரமாகக் கொண்டுநிற்கும் நிலையும் தனக்கு உரிய திருமேனியைக் கைக்கொண்டு நிற்கும் நிலையும், இவ்விரண்டும் ஆழ்வார்க்கு ஒத்திருக்கையாலென்க.

ஆழ்வார், தம்மைக் கடாக்ஷித்துத் தம்மோடு முதலுறவு பண்ணின திருக்கண்களின் அழகிலீடுபட்டு முதலில் "பங்கயக் கண்ணன்" என்றார். அந்தக்கண்ணோக்குக்குத் தப்பினாலும் தப்பவொண்ணாத புன்முறுவலையுடைய வாயழகிலீடுபட்டுப் 'பவளச் செவ்வாயன்' என்றார். அந்த நோக்கத்திலும் புன்சிரிப்பிலும் ஈடுபட்டவர் தோற்றுவிழும் நிலமாகிய திருவடிகளிலீடுபட்டு "அங்கதிரடியன்" என்றார். அத்திருவடிகளில் வீழ்ந்தவர் அநுபவிக்கின்ற வடிவழகிலீடுபட்டு "அஞ்சனவண்ணன்" என்றார். அவ்வாறு அநுபவிக்கும் வடிவழகையுடையவன் ஈடும் எடுப்புமில்லாத ஈசன் என்பதை விளக்குகின்ற திருமுடியினழகிலீடுபட்டுச் "செங்கதிர்முடியன்" என்றார். திருமுடியினால் விளங்குகின்ற ஸ்வாமித்வத்தைக் கண்டு 'இப்பெரியோனை நாம் எவ்வாறு நெருங்குவது!' என்று கருதிப் பின் வாங்காதபடி எப்போதும் அப்பெருமானது திருமார்பிலேயிருந்து புருஷகாரஞ்செய்யும் தாயான பிராட்டியின் ஸம்பந்தத்தைக் கருதிச் "திருமறுமார்வன்" என்றார். பெருமானும் பிராட்டியுமான இச்சேர்த்திக்கு என்ன தீங்கு வருகிறதோவென்று பொங்கும் பரிவினால் பயசங்கை கொள்ளுகின்ற அடியார்களுடைய அச்சத்தைத் தவிர்ப்பனவான திவ்யாயுதங்களைக் கருதி 'சங்கு சக்கரத்தன்' என்றார்.

"[சாதிமாணிக்கத்தை.] சோவியன்றிக்கே ஆகரத்திலே பிறந்த நன்றான மாணிக்கம்போலே நிர்த்தோஷமாய் ஸ்வதஸ்ஸித்தமான வடிவழகுடையவனை" என்பது ஈடுமுப்பத்தாறாயிரம்.

டீறு—ஸ்ரீவத்ஸமென்கிற மயிர்ச்சுழி. .... (ஙு)

சாதிமாணிக்கமென்கோ சவிகொள்பொன்முத்தமென்கோ*
சாதிநல்வயிரமென்கோ தவிவில்சீர்விளக்கமென்கோ*
ஆதியஞ்சோதியென்கோ ஆதியம்புருடனென்கோ*
ஆதுமில்காலத்தெந்தை அச்சுதனமலனையே. (ச)

ஆதும் இல் காலத்து	(என்னிடத்து) யாதொரு உபாயமுமில்லாத காலத்திலே	சாதி நல் வயிரம் என்கோ	சாதியில் தோன்றிய சிறந்த வஜ்ரரத்னமென்பேனோ?
எந்தை	என்தந்தைபோலப் பாதுகாக்க ஒருப்பட்டவனும்	தவிவு இல் சீர் விளக்கம் என்கோ	அழிதலில்லாத ஒளியையுடைய விளக்கு என்பேனோ?
அச்சுதன்	(பின்பு ஒருகாலும் என்னை அந்த நிலையினின்று) நழுவவிடாதவனும்	ஆதி	எல்லாப்பொருள்கட்கும் முந்தியிருப்பதாய்
		அம்	அழகியதான
அமலனை	(அங்ஙனம் பாதுகாத்தலைத்) தன்பேறாகக் கொள்பவனுமான எம்பெருமானை	சோதி என்கோ	தேஜோமயமான திருமேனியையுடையவனென்பேனோ?
		ஆதி	தலைவனாகிய
சாதி மாணிக்கம் என்கோ	———;	அம்	(ஆனந்தம் முதலிய குணங்களால்) இனியவனை
சவி கொள் பொன் என்கோ	ஒளியையுடைய பொன் என்பேனோ?		
சவி கொள் முத்தம் என்கோ	நீரோட்டமுள்ள முத்து என்பேனோ?	புருடன் என்கோ	பரமபுருஷன் என்பேனோ?

* * * [சாதிமாணிக்கம்.] ஒருவன் எம்பெருமானை நினைப்பதற்கு எனக்கு ஒருபாயம் சொல்லவேணும் என்று ஒருபெரியோரைக்கேட்க, அதற்கு அவர் 'நான் உனக்கு அது சொல்லுகிறேன், நீ எனக்கு அவனை மறப்பதற்கு ஒருபாயம் சொல்லவல்லையோ?' என்றாராம். அதற்குக் கருத்து—உலகத்துப் பொருள்கள் யாவும் பெயரையும் உருவத்தையும் பெற்று வழங்கப்பெறுவது எம்பெருமான் அவ்வப்பொருள்களில் பிரவேசித்து நிற்பதனாலேயாதலால், ஏதேனும் ஒரு பதார்த்தம் தோற்றும்போதும் ஞானிகட்கு அவனை முன்னிட்டுக்கொண்டே தோற்றுமென்பது. இவ்வாறு எல்லாப்பொருள்களும் எம்பெருமானது ஸ்வரூபத்தைப் பெற்றிருந்தாலும் "யத்யத்விபூதிமத்ஸத்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவவா। தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஸஸம்பவம்॥" [உலகத்திலே சிறந்து தோன்றும் பொருள்கள் யாவும் எனது தேஜஸ்ஸின் அம்சத்தினாலுண்டானவை]

என்று கீதையில் கண்ணபிரான் பாராட்டிக் கூறியிருத்தலால் சிறந்தனவாகிய மாணிக்கம் முதலியவைகளில் அவ்வெம்பெருமானது அம்சமிருக்கின்றதென்பது கருதி ஆழ்வார் இத்திருப்பாசுரத்தில் எம்பெருமானை மாணிக்கம் முதலிய சிறந்தபொருள்களாகப் பாராட்டியநுபவிக்கின்றாரென்க. ஆதியஞ்சோதி யென்பது முதல் எம்பெருமானை நேரே சொல்லுகின்றது.

மாணிக்கம்—நவமணிகளுள் ஒன்று. (நவமணிகளாவன—கோமேதகம் நீலம் பவளம் புஷ்பராகம் மரகதம் மாணிக்கம் முத்து வைடூரியம் வைரம் என்பன.) சாதிமாணிக்கம் என்றது—சிறந்த ஆகரத்திற் பிறந்ததும் குற்றமற்றதும் இயற்கையழகையுடையதும் பெருவிலையுள்ளதுமான மாணிக்கம் என்றபடி. [சவிகொள் பொன்முத்தம் என்கோ] சவிகொள் பொன் என்கோ, சவிகொள் முத்தம் என்கோ என்று கூட்டுக. ஸவி என்னும் வடசொல் சவி யென்றாயிற்று. பொன்னுக்குச் சவி உயர்ந்த மாற்று. முத்துக்குச் சவி நீரோட்டம்.

ஆதியஞ்சோதி என்பதற்கு—காரியப்பொருள்கட்கெல்லாம் தான் முந்தியதாய், என்றும் ஒருபடிப்பட்டதாய், ஸூர்யன் முதலிய சுடர்களெல்லாவற்றினும் விஞ்சிய ஒளியையுடையதான பரமபதம் என்றும் பொருள் கூறலாம். [அம்புருடன்.] புருஷனுக்கு அழகானவன்—உலகத்து உயிர்களைப்போலக் கருமவசத்தினால் தோன்றி க்ஷணிகமாக நிற்கும் ஆனந்தம் முதலிய குணங்களையுடையவனாகாமல் இயற்கையாகவே எப்போதும் இருப்பனவான ஆனந்தம் முதலிய குணங்களையுடையவனென்க.

[“ஆதுமில்காலத்து எந்தை அச்சுத னமலனையே.] எனக்குத் தன்னைப்பெறுகைக்கு முதலொன்றுமில்லாத காலத்திலே தான் எந்தையான முறையை எனக்கு அறிவித்து, பின்பு ஒருகாலமும் நழுவவிடாதே ரக்ஷித்து என்பக்கலிலே ஒரு ப்ரயோஜனங்கொண்டன்றிக்கே நிர்ஹேதுகமாகத் தன் பேறாக ரக்ஷித்தவனை” என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. இனி, ஆதும் இல் காலத்து—எல்லாம் அழியும் ப்ரளயகாலத்திலே, எந்தை—எமது தந்தைபோல்பவனாய், அச்சுதன்—(எல்லாப்பொருள்களையும் நழுவவிடாது (தன்பக்கல் ஏறிட்டுக்கொண்டு) பாதுகாப்பவனாய், அமலனை—(அவை தன்னிடத்திலிருந்தாலும் அவற்றின்) குற்றம் தன்னிடத்துச் சேரப்பெறாதவனான எம்பெருமானை என்றும் பொருளுரைப்பர். ஆசார்யஹ்ருதயத்தில்—“உறக்கம் தலைக்கொண்டபின்னை” இத்யாதியான (சஙு) சூர்ணையில் “ஆதுமில்காலத்தெந்தையான” என்றவிடத்திற்கு வியாக்கியானம் செய்தருளா நின்ற மணவாளமாமுனிகளும் இங்ஙனே பொருளருளிச் செய்துள்ளார். .... (ச)

அச்சுதனமலனென்கோ அடியவர்வினைகெடுக்கும்*
நச்சுமாமருந்தமென்கோ நலங்கடலமுதமென்கோ*
அச்சுவைக்கட்டியென்கோ அறுசுவையடிசிலென்கோ*
நெய்ச்சுவைத்தேறலென்கோகனி யென்கோபாலென்கேனோ. (ரு)

(எம்பெருமானை)

அச்சுதன் என்கோ	அச்சுதன் என்பேனோ?
அமலன் என்கோ	அகில ஹேய ப்ரத்ய நீகன் என்பேனோ?
அடியவர்	தன்னடியார்களது
வினை	புண்ணியபாப மென்கிற இரு வினைகளையும்
கெடுக்கும்	போக்குவதும்
நச்சு	(இனிமைபற்றி) விரும்பப்படுவதுமான
மா மருந்தம் என்கோ	சிறந்த ஔஷதமென் பேனோ?

நலம் கடல் அமுதம் என்கோ	நல்லபாற்கடலில் தோன்றிய அம்ருத மென்பேனோ?
அ சுவை கட்டி என்கோ	அந்த அம்ருதத்தின் உருசியையுடைய கருப்புக் கட்டி யென்பேனோ?
அறு சுவை அடிசில் என்கோ	அறுவகைச் சுவையும் நிரம்பிய உணவு என் பேனோ?
நெய் சுவை தேறல் என்கோ	நெய்போலுஞ் சுவையையுடைய தேன் என்பேனோ?
கனி என்கோ	பழமென்பேனோ?
பால் என்கேனோ	பால் என்பேனோ?

* * * [அச்சுதனமலனென்கோ] எம்பெருமான் நலம் நிறைந்த பண்டங்களாக இருக்குந்தன்மையை ஆழ்வார் இப்பாட்டில் பாராட்டிக் கூறுகின்றார். "ஸர்வகந்த: ஸர்வரஸ:" என்ற உபநிஷத்து இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

புண்ணியமும் பாவமும் பிறப்பிற்கே ஹேதுவாகி உயிரைப் பந்தப்படுத்துவதில் பொன் விலங்கும் இரும்பு விலங்கும் போலத் தம்முள் ஒத்திருக்கின்றமையால் அவ்விருவகைவினையும் அடங்க "வினைகெடுக்கும்" என்று பொதுப்படக் கூறினார். எம்பெருமான் பரமபதத்தில் இருந்தானேயாகிலும் அடியவர் இடர்ப்பட்டமாத்திரத்தில் அரைகுலையத் தலைகுலைய ஆனைக்கு அருள்செய்தாற்போல ஓடிவந்து அவர்கள் துன்பத்தைப்போக்குவானென்ற கருத்தும் அடியவர் வினை கெடுக்கும் என்ற விடத்தில் தோன்றும். உடற்பிணியைத்தீர்க்கும் மருந்தினும் உயிர்ப்பிணியாகிய வினையைத் தீர்க்கும் வேறுபாடு விளங்க 'வினைகெடுக்கும் மருந்தம்' என்றார். கைப்பு முதலிய அருசியையுடைய மருந்தினும் வேறுபாடு விளங்க 'நச்சுமருந்தம்' என்றார். மாமருந்தம் என்றது—காற்றுப்பட்ட மாத்திரத்தில் நோய்தீர்க்கவல்லதாய், ஏகமூலிகையாய், ஒருமுறையில்தானே பிணியைப்போக்கவல்லதாய், அபத்தியஞ்செய்தாலும் தீமையை உண்டாக்காததான மஹௌஷதம் என்றபடி. எம்பெருமான் பரம்பரையாகத் தன்னடியாரடியார் முதலியோர்க்கு அடியவரானாரையும் பாதுகாத்தலும், தன்னையடைந்தார் எதைவேண்டினாலும் தானேயளிப்பவனாதலும், தன்னை ஒருகால் சரணமடைந்தார்க்கும் அபயமளிப்பவனாதலும், தன்னடியவர் அபுத்தி பூர்வமாகச் செய்யும் பாவங்களையெல்லாம் க்ஷமிப்பவனாதலும் காண்க. மாமருந்தம் என்ற விடத்திற்கு வியாக்கியானமருளிச்செய்யுமிடத்து (ஈட்டில்) — "மேல்காற்றிலே காட்ட நோய்தீருமாயிருக்கை" என்றுள்ளது. உலகில் வியாதிகளுக்கெல்லாம்

மேல் காற்றுப்பட்டால் அபிவ்ருத்தியாகுமென்பர்; அதற்கு எதிர்த்தட்டாயிருக்கும் இந்த மாமருந்து என்ற கருத்தும் உணரத்தக்கது.

நலங்கடலமுதம் என்றவிடத்தில், கடல் என்பதை அமுதத்திற்கு இயற்கையடைமொழியாக்கி, கடலைக்கடையாமலே கிடைத்த சிறப்பையுடைய அமிருதம் என்று விசேஷப்பொருளுரைப்பர்.

அறுசுவை—கைப்பு தித்திப்பு புளிப்பு உவர்ப்பு துவர்ப்பு கார்ப்பு என்பவை. "நெய்ச்சுவைத்தேறல்" என்னுமிடத்தில், நெய்—மிருதியான, சுவை—சுவையையுடைய, தேறல் என்றும், சுவை என்பதை நெய் தேறல் என்ற இரண்டற்கும் அடைமொழியாக்கி, சுவையையுடைய நெய் யென்கோ? சுவையையுடைய தேறல் என்கோ? என்றும், நெய்ப்பையும் சுவையையுமுடைய தேறல் என்றும் பொருளுரைப்பர்.

நச்சுமருந்தம்—வினைத்தொகை. மருந்தம் என்பதில், அம்—சாரியை. (௫)

பாலென்கோ நான்குவேதப்பயனென்கோ* சமயநீதி
நூலென்கோ நுடங்குகேள்வியிசையென்கோ* இவற்றுள்நல்ல
மேலென்கோ வினையின்மிக்கபயனென்கோ* கண்ணனென்கோ
மாலென்கோமாயனென்கோ வானவராதியையே. (௬)

வானவர் ஆதியை	தேவாதி தேவனான எம்பெருமானை
பால் என்கோ	பால் என்பேனோ?
பயன் நான்கு வேதம் என்கோ	(பிரமாணங்களுக்குள்) சிறந்ததான நால் வேதங்களென்பேனோ?
சமயம்	வைதிக மதத்தைத் தெரிவிக்கின்ற
நீதி	முறைமையையுடைய
நூல் என்கோ	(இதிஹாஸ புராணங்களாகிற) சாஸ்திரங்கள் என்பேனோ?
நுடங்கு	(கேட்டவர்களை) ஈடுபடுத்துகின்ற
கேள்வி	(செவியிற்) கேட்டலையுடைய
இசை என்கோ	ஸங்கீதமென்பேனோ?
இவற்றுள்	கீழ்ச்சொன்ன வேதம் முதலிய எல்லாவற்றினும்
நல்ல	சிறந்த
மேல் என்கோ	மேன்மையுடையது என்பேனோ?
வினையின்	(செய்கின்ற) முயற்சியைக் காட்டிலும்
மிக்க	மிகப் பலமடங்கு மேம்பட்டுவிளைகின்ற
பயன் என்கோ	பலன் என்பேனோ?
கண்ணன் என்கோ	(உனக்கு நான் இருக்கிறேன், நீ அஞ்சவேண்டா என்று சரமச்லோகத்தினால் அபயமளித்த) ஸ்ரீகிருஷ்ணன் என்பேனோ?
மால் என்கோ	அடியவர் திறத்து வியாமோஹமுடையவனென்பேனோ?
மாயன் என்கோ	ஆச்சரியமான குணசேஷ்டிதங்களையுடையவனென்பேனோ?

* * *—[பாலென்கோ] வேதம் முதலியவையான இயலும் இசையுமாயுள்ள சப்த ராசிகளை எம்பெருமான் தனக்கு விசேஷணமாகப் பெற்றிருக்கின்றபடியைக் கூறுகின்றாரிப்பாட்டில். வேத முதலியன தன்னையுணர்த்த, தான் அவற்றால் உணரப்படுபவனாதலால் எம்பெருமானுக்கு வேதம் முதலியன விசேஷணமாகும். கீழ்ப்பாசுரத்திற் கூறிய எம்பெருமானது இனிமை பின்னும் தோன்றியதனால் பாலென்கோ என்றார். "கண்ணனென்கோ" என்பதுமுதல் எம்பெருமானது தானான தன்மையையுணர்த்தும்.

"நான்கு வேதப் பயனென்கோ" என்பதை 'பயன் நான்கு வேதமென்கோ' என்று கூட்டிப் பொருள்கொள்ள வேணுமென்று ஆசிரியர்களின் கொள்கை; வேதம் முழுவதும் எம்பெருமானது ஆராதனத்தின் தன்மையையும், ஆராதிக்கப்படுகின்ற அந்த எம்பெருமானது தன்மையையுமே உணர்த்துவதாகி வேறொன்றையுணர்த்தாமையால், வேதத்தின் பயன் [ஸாரமான பொருள்] எம்பெருமான்—என்று கூறுதற்கு இடமில்லை: ஆகையால், பயனாகிய நான்கு வேதம் என்று கூட்டி, பிரமாணங்களுக்குள் சிறந்ததான நான்கு வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவன் என்று பொருள் கொள்வது உசிதம். இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—

"[நான்கு வேதப்பயனென்கோ.] நாலுவகைப்பட்ட ப்ரமாணஜாதத்தில் ஸாரபூதமான வேதமாகிற ப்ரயோஜனமென்பேனோ? வேதத்திலே வேறேயும் ஓர் அம்சம் ஒருவனை ஸ்துதிக்கிலிறே நான்கு வேதத்தில் பயனென்கோ என்ன வேண்டுவது; அங்ஙனன்றியே, வேதந்தான் ஆராதன ஸ்வரூபம் சொல்லுமிடமும் ஆராத்யஸ்வரூபம் சொல்லுமிடமுமாய்க் கட்டடங்க இவனையே சொல்லுகையாலே வேதத்தில் நாலுமூலைக்கும் ப்ரயோஜனமல்லாதவிடமில்லை; *வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:* என்றானிறே."—என்பது. பிரமாணங்களுள் வேதம் ஸாரமென்பதற்குக் காரணம்—நித்தியமாய் அபௌருஷேயமாய் [எழுதாக்கிளவியாய்], பிரமித்தல் முதலியகுற்றங்கட்கு இடமில்லாது நிற்றலாமென்க. இனி, முதலடியில் நான்கு வேதம் என்பதனை மத்திம தீபமாக்கி, நான்கு வேதம் பாலென்கோ—நான்கு வேதங்களிலுமுள்ள சாகைமுதலிய பிரிவுகள் என்பேனோ? நான்கு வேதம் பயன் என்கோ—நான்கு வேதங்களினாலும் தேர்ந்து அறியப்படும் பொருள் என்பேனோ? என்று உரைப்பாருமுளர்.

வேதப்பொருளில் ஸந்தேஹம் தோன்றிய விடங்களில் பொருளை நிர்ணயிப்பதற்கு உபப்ருஹ்மணமாய் [வேதப்பொருளைப் போஷிப்பதாய்] நிற்றலால் இதிஹாஸபுராணங்கள் சமயநீதி நூல் எனப்பட்டன. இனி, சமயம்—கொள்கையை நாட்டுவதற்குரிய, நீதி—நியாயங்களை விளக்குவதான, நூல்—மீமாம்ஸா சாஸ்த்ரம் என்றும் உரைப்பர். எல்லாம் சொல்லவேணுமென்று தொடங்கிய ஆழ்வார் பக்திபாரவச்யத்தினால் மேலே செல்லமாட்டாமையால் 'இவற்றுள்

நல்ல மேலென்கோ' என்று கூறியொழிந்தார். "இவற்றுள் நல்ல மேலென்கோ" என்பதற்கு—கீழ்க்கூறிய வேதம் முதலியவற்றுக்குள் தோன்றும் சிறந்த போக்கியதை யென்பேனோ? என்று பொருள் கூறுவாருமுளர். கலநெல்லை விதைத்து நூறாயிரங்கலமாக விளைத்துக் கொள்வாரைப்போலே அற்ப முயற்சியினால் பெரும்பயனைக் கொடுத்தற்கு உரியவன் என்பார் "வினையின் மிக்க பயன்" என்றார்; எம்பெருமான் 'மனப்பூர்வமான அன்பு இல்லாமல் போலியன்போடு என்னையடைந்தாரையும் நான் ஒருபோதும் கைவிடேன்' என்று கூறுபவனாதலால் அப்பிரானை இவ்வாறு கூறுதல் ஏற்கும். எம்பெருமான் பிரமன்முதலிய எல்லாத் தேவர்கட்கும் தான் தலைவனாக இருந்தும் அடியவர்க்கு எளியவனாகித் தூது போதல் ஸாரத்யஞ் செய்தல் முதலிய இழிதொழில்கள் செய்ததுபற்றி மாயன் என்றார். ... ... (சு)

வானவராதியென்கோ வானவர்தெய்வமென்கோ*
வானவர்போகமென்கோ வானவர்முற்றுமென்கோ*
ஊனமில்செல்வமென்கோ ஊனமில்சுவர்க்கமென்கோ*
ஊனமில்மோக்கமென்கோ ஒளிமணிவண்ணனையே. (எ)

ஒளி மணி வண்ணனை	பிரகாசமுள்ள மாணிக்கம்போன்ற வடிவையுடைய பெருமானை	வானவர்	அந்த வானவர்கட்கு
வானவர் ஆதி என்கோ	நித்யஸூரிகட்குத் தலைவன் என்பேனோ?	முற்றும் என்கோ	(இதுவரையிற் கூறப்படாத) எல்லாமும் என்பேனோ?
வானவர் தெய்வம் என்கோ?	அந்த நித்தியஸூரிகளால் கதியென்று பற்றப்படும் தெய்வமென்பேனோ?	ஊனம் இல்	என்றும் அழிதல் இல்லாத
		செல்வம் என்கோ	செல்வமென்பேனோ?
வானவர் போகம் என்கோ	அந்த நித்யஸூரிகளால் அநுபவிக்கப்படுகின்ற பொருள் என்பேனோ?	ஊனம் இல் சுவர்க்கம் என்கோ	ஒருநாளும் நசிக்காத ஸ்வர்க்கபோகமென்பேனோ?
		ஊனம் இல் மோக்கம் என்கோ	விலக்ஷணமான மோக்ஷமென்பேனோ?

* * * [வானவராதி.] எம்பெருமான் ஐச்வர்யம் முதலிய புருஷார்த்தங்களையுடையவனென்பதை இப்பாட்டிலருளிச்செய்கிறார். "வானவர் தெய்வம், வானவர் போகம், வானவர் முற்றும்" என்று வருவதனால் 'வானவராதி' என்பதற்கு—கீழ்ச்செய்யுளிற்போல ப்ரஹ்மாதி தேவர்கட்குத் தலைவன் என்று பொருள் கொள்ளாது நித்யஸூரிகட்குத் தலைவன் என்று பொருள் உரைக்கப்பட்டது. எம்பெருமான் ப்ரஹ்மாதி தேவர்களைப் படைத்தல் முதலியன செய்வதன்றி "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன்" என்றபடி எல்லாமுமாக இருப்பது நித்யஸூரிகட்கே யென்க. வானவர் போகமென்கோ என்பதற்கு அவ்வானவர்கட்கு ஆராதனையினாலுண்டாகிய பயனை

பேரின்பம் என்பேனோ? என்றும், வானவர் முற்றுமென்கோ என்பதற்கு—அவ்வானவர்கட்கு ஸகலவகையான ரக்ஷணமும் என்பேனோ? என்றும் உரைக்கலாம்.

ஊனமில் செல்வம்—சிலநாள்நின்று வற்றுவதல்லாமல் எந்நாளும் அழியாத ஸம்பத்து. ஊனமில் சுவர்க்கம்—சிலநாளிருந்து புண்ணியப்பயனொழிந்தபிறகு தள்ளுறும்படியானதல்லாமல் கல்பகாலம்வரையில் அழிவின்றி வாழும் சுவர்க்கம். ஆத்மாவையநுபவித்தல் மாத்திரத்தையுடைய கைவல்யமென்னும் மோக்ஷத்தினும் வேறுபாடு விளங்க, பரமாத்மாவான எம்பெருமானை யநுபவித்தலையுடைய பரமபுருஷார்த்தமாகிற மோக்ஷத்தை 'ஊனமில் மோக்கம்' என்றார். .... (எ)

ஒளிமணிவண்ணனென்கோ ஒருவனென்றேத்தநின்ற*
நளிர்மதிச்சடையனென்கோ நான்முகக்கடவுளென்கோ*
அளிமகிழ்ந்துலகமெல்லாம் படைத்தவையேத்தநின்ற*
களிமலர்த்துளவனெம்மான் கண்ணனைமாயனையே. (அ)

அளி மகிழ்ந்து	உயிர்களைப் பாதுகாத்தலை விரும்பி	ஒளி மணி வண்ணன் என்கோ	பிரகாசமுள்ள மாணிக்கம் போன்ற வடிவையுடையவனென்பேனோ?
உலகம் எல்லாம்	எல்லா உலகங்களையும்	ஒருவன் என்று	ஒப்பற்ற கடவுள் என்று
படைத்து	ஸ்ருஷ்டித்து	ஏத்த நின்ற	(தன்னுடைய அடியவர் யாவரும்) துதிக்கும்படி நின்ற
அவை	அவ்வுலகங்களெல்லாம்	நளிர் மதி சடையன் என்கோ	குளிர்ந்த பிறைச்சந்திரனைத் தனது சடைமுடியிலேயுடைய ருத்திரன் என்பேனோ?
ஏத்த நின்ற	(தன்னைத்) துதிக்கும்படி நிற்கின்ற	நான்முகன் கடவுள் என்கோ	பிரமதேவனென்பேனோ?
களி மலர் துளவன்	தேனையும் பூவையுமுடைய திருத்துழாய்மாலையையணிந்தவனும்		
எம் மான்	எமக்குத் தலைவனும்		
மாயனை	மாயங்களையுடையவனுமாகிய		
கண்ணனை	கண்ணபிரானை		

* * * [ஒளிமணிவண்ணன்.] இந்தவுலகில் பிரதானரான சிவனையும் பிரமனையும் எம்பெருமான் தான் உடைமையாகப் பெற்றிருத்தலை ஆழ்வார் இந்தப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார். வடிவழகில் மிக்க ஈடுபாட்டினால் "ஒளிமணிவண்ணனென்கோ" என்று பின்னும் கூறினார். "ஒருவனென்றேத்த நின்ற நளிர்மதிச்சடையனென்கோ" என்றவிடத்திற்கு நம்பிள்ளையீடு;— "இவன் ஜகத்துக்கு ப்ரதாநனென்று அவிவேகிகள் ஏத்தும்படியாய்க் குளிர்ந்த மதியையும் சடையையுமுடைய ருத்ரனென்பேனோ" என்று.

மஹாப்ரளயத்தில் ஆத்மவர்க்கங்கள் யாவும் உருமாய்ந்து மூலப்ரக்ருதியிலே லயித்துக்கிடக்க, எம்பெருமான் 'இவ்வுயிர்கள் நம்மையறிந்து ஈடேறவேணும்' என்று தனது திருவுள்ளத்திலெழுந்த பெருங்கருணையால் தன்னையடைவதற்குத்

கருவியாகக் கைகால் முதலிய உறுப்புக்களோடு அவ்வுயிர்களைப் படைத்தா னென்பது நூல் துணிபாதலால் "அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்து" என்றார். ஏத்த என்று மேல்வருவதனால், 'உலகமெல்லாம்' என்பது உலகத்து உயிர்வர்க்கங்களையே காட்டும். எம்மான் என்பதற்கு—என்னைத் தேவதாந்தரங்களுக்கு ஆட்படவொட்டாது தன்னிடத்தே அடியவனாம்படி செய்தவன் என்று கருத்துக் கொள்ளலாம். மாயன்—வெண்ணெய் களவாடுதல் முதலிய ஆச்சரியமான தொழில்களையுடையவன் என்று உரைப்பர்.

நளிர்மதிச்சடையன் என்பதில் அடங்கிய கதை:—சந்திரன் தக்ஷமுனிவரது புத்திரிகளாகிய அச்சுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் மணஞ்செய்துகொண்டு அவர்களுள் ரோஹிணி யென்பவளிடத்தில் மிகவும் காதல் கூர்ந்து அவளுடனே எப்போதும் கூடிவாழ்ந்திருக்க, மற்றை மகளிரின் வருத்தத்தை நோக்கி முனிவன் அவனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தால் சந்திரன் பதினைந்து கலைகளுங் குறைந்து மற்றைக் கலையொன்றையும் இழப்பதன் முன்னம் சிவபிரானைச் சரணமடைய, அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக் கலையைத் தன் தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்து வரும்படி அநுக்ரஹித்தனன் என்பதாம்: திருப்பாற்கடல் கடைகையில் அதில் நின்று உண்டான பலபொருள்களுடனே விஷமும் பிறைச்சந்திரனும் தோன்ற, திருமால் அவற்றுள் விஷத்தைச் சிவபிரானுக்குக் கொடுத்து உண்ணச் சொல்லி அதனால் அப்பிரானுக்கு வெப்பமுண்டாகாமல் தணிந்திருத்தற் பொருட்டு உடனே சந்திரனையுங் கொடுக்க, அதனை அப்பெருமான் சிரமேற் கொண்டான் என்றும் வரலாறு கூறப்படும்.

'ஏத்தநின்ற சடையன்' என்றும், 'படைத்து ஏத்த நின்ற ஆளவன்' என்றும் அந்வயிக்கும். .... (அ

கண்ணனைமாயன்றன்னைக் கடல்கடைந்தமுதங்கொண்ட*
அண்ணலையச்சுதனை அனந்தனையனந்தன்தன்மேல்*
நண்ணிநன்குறைகின்றானை ஞாலமுண்டுமிழ்ந்தமாலை*
எண்ணுமாறறியமாட்டேன் யாவையும்யவருந்தானே. (௰)

கண்ணனை	(அடியார்க்கு எளியனாய்) க்ருஷ்ணனாகத் திருவவதரித்தவனும்	அண்ணலை	பெருமையையுடையவனும்
மாயன் தன்னை	ஆச்சரியமான குணஞ்செயல்களையுடையவனும்	அச்சுதனை	(தன்னையடைந்தவரை) ஒருபோதும் நழுவவிடாதவனும்
கடல் கடைந்து	பாற்கடலைக் கடைந்து	அனந்தனை	அளவிட முடியாத ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையவனும்
அமுதம் கொண்ட	அம்ருதத்தையெடுத்து (த் தேவர்கட்கு)க் கொடுத்த	அனந்தன் தன்மேல் நண்ணி	திருவனந்தாழ்வான் பொருந்தி [மீது

நன்கு உறைகின்றானை	நன்றாகக் கண்வளர்ந்தருள்பவனும்	எண்ணுமாறு	(இத்தன்மையனென்று) நினைத்துக் கூறும் வகையை
ஞாலம்	பிரபஞ்சத்தை	அறிய மாட்டேன்	அறிகின்றேனில்லை;
உண்டு	(பிரளயகாலத்தில்) வயிற்றில் வைத்துப் பாதுகாத்து	யாவையும்	எல்லாவகைப்பட்ட அசேதனப் பொருள்களும்
உமிழ்ந்த	(அந்தப் பிரளயம் நீங்கியவுடனே) வெளிப்படுத்திய	யவரும்	எல்லாவகைப்பட்ட சேதனப்பொருள்களும்
மாலை	வாத்ஸல்ய முடையவனுமான திருமாலை	தானே	அந்த எம்பெருமான் தானேயாவன்.

* * * [**கண்ணனை மாயன் தன்னை.**] எம்பெருமானுடைய விபூதிகளைத் தனித் தனியே சொல்லிமுடித்தல் முடியாத காரியம்; சுருக்கமாகச் சொல்லில், சேதனப்பொருள்களும் அசேதனப் பொருள்களுமாகிய எல்லாமும் அவனுடைய விபூதிகளேயாம்—என்கிறது இப்பாசுரம்.

பகவத்கீதையில் தனது விபூதிகளை அர்ஜுநனுக்குப் பரக்கச் சொல்லிவந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் "நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே." [எனது விபூதிகளின் பரப்புக்கு ஒரு எல்லையில்லை] என்று கூறியதுபோல, இவ்வாழ்வாரும் கீழே எம்பெருமானது விபூதிகளிற் சிலவற்றைக் கூறிவந்து "எண்ணுமாறு அறியமாட்டேன்" என்று இங்குக் கூறுகின்றாரென்க. "கடல் கடைந்து அமுதங்கொண்ட அண்ணல்" என்றதனால் தனது திருவடிகளை விரும்பியடைந்தார்க்கு அன்றி வேறுபயனை வேண்டுவார்க்கும் தன்னடைப்பு கோலவும் அவர்கள் வேண்டியபடி நன்மைபுரிபவன் எம்பெருமான்—என்பது பெறப்படும்.

நன்கு உறைகின்றானை = நாச்சிமாராலும் எழுப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிறவனை என்றுரைப்பர். அண்ணல்—பெருமை; அதனையுடையவன்; ஆண்பாற்சிறப்புப்பெயர். அனந்தன் என்ற திருநாமம் எம்பெருமானுக்கு வழங்குதல்போலவே ஆதிசேஷனுக்கும் வழங்கும். எம்பெருமானை அனந்தனென்றற்குக் காரணம் இப்பதிகத்தின் அவதாரிகையில் விரித்துரைக்கப்பட்டது காண்க. ஆதிசேஷனை அனந்தனென்பது அடிமைத்தன்மையில் எல்லை நிலையிலிருப்பவன் [எம்பெருமானுக்கு அடிமை செய்வதில் யாவரினும் விஞ்சிநிற்பவன்] என்பது பற்றியென்க.

யாவையும் என்றதனால் அசேதனப்பொருள்களையும், யவரும் என்றதனால் சேதனப்பொருள்களையும் குறித்தார். உம்மைகள்—முற்றுப் பொருளன. விசேஷணம் விசேஷ்யம் என்ற இரண்டிடத்திலும் வேற்றுமையுருபை விரிப்பது வடமொழி நடை.

கடல்கடைந்து அமுதங்கொண்ட வரலாறு:—முன்னொருகாலத்தில் இவ்வண்டகோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்திற் சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி, அவளால் ஒரு பூமாலை பிரசாதிக்கப்பெற்ற ஒரு வித்யாதரமகள் மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கை வீணையில் தரித்துக்கொண்டு பிரமலோக வழியாய் மீண்டு வருகையில், துர்வாசமுனி எதிர்ப்பட்டு அவனை வணங்கித் துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள். அதன் பெருமையையுணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவதயானையின்மேற் பவனி வந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அப்பூமாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல்வைத்தவளவில் அம்மதவிலங்கு அதனைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் கீழெறிந்து காலால்மிதித்துத் துவைத்தது. அது கண்ட முனிவன் கடுங்கோபங்கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச்செருக்குற்ற நினது ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக்கடவன' என்று சபிக்க, உடனே தேவர் செல்வம்யாவும் ஒழிந்தன. ஒழியவே, அசுரர் வந்து பொருது அமரரை வெல்வாராயினர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக்கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணைக்கொண்டு, மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகி என்னும் மகாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டித் திருப்பாற்கடலைக்கடைந்து அமிருதத்தை எடுத்துத் தேவர்கட்குக்கொடுத்தனனென்பதாம்.

பிரமன் முதலிய ஸகலதேவர்களுமுட்பட யாவும் அழிந்துபோகின்ற யுகாந்தகாலத்திலே ஸ்ரீமஹாவிஷ்ணு அண்டங்களையெல்லாம் தன் திருவயிற்றில் வைத்து அடக்கிக்கொண்டு சிறுகுழந்தைவடிவமாகி ஆதிசேஷனது அம்சமானதொரு ஆலிலையின்மீது பள்ளிகொண்டு யோகநித்திரைசெய்து அந்தப்பிரளயம் நீங்கினவாறே அவைகளை முன்போலவே வெளிகாண உமிழ்வனென்பது ஞாலமுண்டுமிழ்ந்த வரலாறு.

யவரும் என்றவிடத்து 'எவரும்' என்பதே சுத்தபாடமென்று சிலர் போராடுவர்; இதைப்பற்றி "உயர்வறவுயர்நலமுடையவன் யவனவன்" என்றவிடத்து யாமுரைத்தது காண்க. .... (௯)

யாவையும்யவருந்தானய் அவரவர்சமயந்தோறும் *
தோய்விலன்புலனைந்துக்கும் சொலப்படானுணர்வின்மூர்த்தி *
ஆவிசேருயிரினுள்ளால் ஆதுமோர்பற்றிலாத *
பாவனையதனைக்கூடில் அவனையுங்கூடலாமே. (௰)

உணர்வின் மூர்த்தி — ஞானஸ்வரூபமாக இருக்கின்ற எம்பெருமான்

யாவையும் — எல்லா அசேதனப் பொருள்களும்

யவரும் — எல்லாச் சேதனர்களும்

தான் ஆய் — தானேயாகியும் [சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாகத்தான் பிரவேசித்திருந்தும்]

அவர் அவர் சமயம் தோறும் — அந்தந்தச் சேதனர்கட்கு உரியனவான (சுகம் துக்கம் முதலிய நிலைமைகளில்

தோய்வு இலன் — (அவர்களைப் போலத் தனக்கு) யாதொரு கலப்பும் இல்லாதவன்;

புலன் ஐந்துக்கும் சொலப்படான் — பஞ்சேந்திரியங்களின் அறிவுக்கும் விஷயமாகச் சொல்லப்படாதவன்; [ஐம்புலன்களாலும் அறியப்படாதவனென்றபடி.]

(ஆத்மாக்களுக்கு உள்ளேயிருந்தும் அவைகளுடைய சுகதுக்கங்கள் எம்பெருமானைச் சேராமட்டா என்றது எவ்வாறு பொருந்துமெனின்.)

ஆவி சேர் உயிரின் உள் — உடம்பைப் பொருந்திய ஆத்மாவினுடைய ஸ்வரூபத்திலே

ஆதும் — (சரீரத்தைச்சார்ந்த இளமை முதலிய தன்மைகள்) எதிலும்

ஓர் பற்று இலாத — ஒரு ஸம்பந்தமும் இல்லையென்கிற

பாவனை — எண்ணமானது

அதனை கூடில் — அந்த ஆத்மாவுக்குத் தகுமென்று தோன்றினால்

அவனையும் — அந்த எம்பெருமானுக்கும் (சேதநர்களின் சுகதுக்கங்கள் சேரா என்கிற இதுவும்).

கூடல் ஆம் — தகும்.

* * * [யாவையும்யவரும்.] உடலுக்கு உள்ளேயிருக்கிற உயிர்கட்கு அந்த உடலைச்சார்ந்த இளமை நரை திரை முதலிய வேறுபாடுகள் தட்டுவதில்லையென்று எண்ணம் மனத்திற்படுமாயின், எம்பெருமான் சேதநா சேதநங்களோடு கலந்திருந்தாலும் அவற்றின் சுகம் துக்கம் முதலிய நிலைமைகள் அவ்வெம்பெருமானுக்குத் தட்டாவென்பதும் நன்கு விளங்குமென்பது இப்பாசுரத்தின் தாற்பரியமாகும். ஆத்மாக்களுக்கு உடம்பைச்சேர்ந்த இளைப்பு பருமை முதலியன கூடாவிட்டாலும் அவ்வுடம்பைச்சார்ந்த சுகதுக்கங்கள் தோன்றுவதுபோல, ஸர்வேச்வரன் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாய் நிற்கும்போது அசேதநங்களின் பரிணாமம் கூடாவிட்டாலும் ஆத்மாக்களின் சுகதுக்கங்கள் முதலியவை கூடவேண்டாவோ வென்னில்;—குற்றவாளியும் சிறைகாணவந்த ராஜகுமாரனும் ஆகிய இருவரும் சிறைச்சாலையில் இருந்தனரேயாயினும் குற்றவாளி மாத்திரம் வருந்திநிற்க, அச்சிறையிலிருத்தலாலாகிற வருத்தம் அரச குமாரனுக்கு நிகழாதவாறுபோல, ஆத்மாவும் பரமாத்மாவும் உடலிற் புக்கிருந்தனரேயாயினும் ஆத்மா கருமத்தினால் கட்டுப்பட்டுச் சுகதுக்கங்களையநுபவித்து நிற்க எம்பெருமான் தன்னிச்சையினாலே புக்கிருப்பதனால் அந்தச் சுகதுக்கங்களையநுபவியாமல் நிற்பனென்க.

"யாவையும் யவருந்தானாய்" என்று வந்ததனால் "அவரவர் சமயந்தோறும்" என்றவிடத்தில் "அவையவை சமயந்தோறும்" என்றும் உபலக்ஷணத்தினாற்

கொள்க. அவரவரென்ற அடுக்கு சேதநருடைய பன்மையைப்பற்றி. சமயம்—உரியனவாக ஏற்பட்டுள்ள முறைமை. அவரவர் சமயம்—சேதநர்களின் கருமங்கள்; அவையவைசமயம்—அசேதநங்களின் இளைப்பு பருத்தல் முதலிய பரிணாமங்கள். புலன்—புலம்; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து இந்திரியவுணர்ச்சிகள்: இச்சொல் இங்கு இலக்கணையால் மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் பஞ்சேந்திரியங்களையுணர்த்திற்று. 'புலனைந்துக்குஞ் சொலப்படான்' என்றவிடத்தில், சொல்லுதல்—அறிதலாய், ஐம்பொறிகளால் அறிய முடியாதவனென்று பொருளுரைப்பினுமாம். ஐந்துக்கு—உருபு மயக்கம்.

பின்னிரண்டடிகட்கு—, ஆவி—உயிரை, சேர்—அடைந்துள்ள, உயிரினுள்—பரமாத்மாவினிடத்தில், ஆதும் ஓர்பற்று இலாதபாவனையதனை—புறம்பே வேறொன்றிலும் சிறிதும் செல்லாத [இடையறாமல் அப்பிரானிடத்தே செல்லுகின்ற] பக்தியை, கூடில்—அடைந்தால், அவனையும் கூடல் ஆம்—அப்பரமாத்மாவையுங் கூடலாம். என்பதாகவுரைப்பாருமுளர்; உபாயாந்தரங்களிலுண்டான பற்றுமுழுவதும் விடுதலாகிற ப்ரபத்தியை மேற்கொண்டால் அப்பரமபுருஷனையுங்கூடலாமென்பதாக உரைப்பாருமுளர்; வேறுபொருள் எதிலும் பற்று இல்லாதபாவனையை [அந்யஸ்ப்ருஹையை]க் கூடினால் அவனைக்கூடலாமென்றும் உரைப்பாருளர். எம்பெருமானார் இப்பொருள்களையெல்லாம் தள்ளினர்; இந்தப் பதிகத்தில் எம்பெருமான் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாய் நிற்கின்ற தன்மையைக் கூறுவதனால் அதற்கு ஏற்ப, எம்பெருமான் வியாபித்திருக்கிற சேதநாசேதநங்களில் தோஷங்கள் அவ்வெம்பெருமானுக்குத் தட்டமாட்டாவென்பதைக் கூறவேண்டுவது முக்கியமாதலால் முந்தின பொருளே சிறப்புடையதென்பது எம்பெருமானார் திருவுள்ளமாம்.

உளனால் = ஆல்—அசை. பாவநா என்ற வடசொல் பாவனையெனத் திரிந்தது. 'பாவனையதனை' என்றதில் அது—பகுதிப்பொருள்விகுதி. ... (௧௦)

கூடிவண்டறையுந்தண்டார்க் கொண்டல்போல்வண்ணன்தன்னை *
மாடலர்பொழிற்குருகூர் வண்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் இவையுமோருபத்தும்வல்லார் *
வீடிலபோகமெய்தி விரும்புவரமரர்மொய்த்தே. (௧௧)

வண்டு	வண்டுகள்	மாடு	சுற்றுப்பக்கங்களில்
கூடி	மொய்த்து	அலர்	மலர்ந்த
அறையும்	(மதுபானத்தினாலுண்டான களிப்பினால்) ரீங்காரஞ்செய்கின்ற	பொழில்	சோலைகளையுடைய
		குருகூர்	திருக்குருகூரிலவதரித்த
தண் தார்	குளிர்ந்த மாலையையுடைய	வண்	ஔதார்யத்தையுடைய
கொண்டல் போல் வண்ணன் தன்னை	காளமேகச்யாமளனைக்குறித்து,	சடகோபன்	நம்மாழ்வார்
		சொன்ன	பாடியருளிய

பாடல் ஓர் ஆயிரத்துள்	ஒப்பற்ற ஆயிரம் பாசுரங்களுள்	வீடு இல போகம் எய்தி	இடைவிடுதலில்லாத [நிரந்தரமான] பகவதநுபவத்தைப்பெற்று
இவை ஒரு பத்தும்	இந்தப்பத்துப் பாசுரங்களையும்	அமரர்	நித்யஸூரிகளால்
வல்லார்	அறியவல்லவர்	மொய்த்து	நெருங்கி
		விரும்புவர்	விரும்பப்படுவர்.

* * * [கூடிவண்டறையும்.] இந்தப்பத்துப்பாசுரங்களையும் ஓதினவர்கள் இடைவிடுதலில்லாத பகவதநுபவத்தை [நித்யகைங்கர்யத்தை]ப் பெற்று நித்யஸூரிகளால் விரும்பப்படுவர்கள் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. மஹாஜ்ஞாநவான்களான நித்யஸூரிகள் "இருள்தருமா ஞாலமான இந்தப் பிரபஞ்சத்திற் பிறந்தும் நம்மைப்போன்று நன் ஞானத்தைப் பெற்று எம்பெருமானை இவ்வாழ்வார் அநுபவிக்கின்றனரே!" என்று நம்மாழ்வாரிடத்துத் தாம் கொண்ட பேரன்பினால், ஆழ்வாரருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதினவர்களிடத்திலும் ப்ரீதி கொண்டு ஸர்வேச்வரனையும் விட்டு இவர்களை நெருங்கி ஆதரிப்பரென்க.

ஆழ்வார்தாம் இந்த லீலாவிபூதியை எம்பெருமானுடைய ஸ்வரூபமாக எண்ணி ஈடுபட்டதனோடு நில்லாமல் அதனை யாவரும் அநுஸந்திக்கும்படி செந்தமிழ்ப்பாடலினால் பாடியருளித் தந்த மஹோபகாரகராதலால் வண்சடகோபன் என்றார்.

வீடுஇலபோகம் = வீடு—'விடு' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். இல—இன்மையினடியாய்ப் பிறந்த எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம். போக: என்னும் வடசொல் போகமெனத்திரிந்தது. விரும்புவர் என்ற பயனிலைக்கு வல்லார் என்பது செயப்படுபொருள். அமரர் வல்லாரை விரும்புவர் என்றபடியாகும். ... ... (கக)

நான்காந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

𑌭𑍂𑌤𑍈𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌭𑍂𑌤𑍈𑌃 𑌶𑍁𑌭𑌨𑌿𑌜𑌵𑌪𑍁𑌷𑌾 𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌮𑌦𑍍𑌭𑌿𑌃 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑍈𑌃
𑌪𑌥𑍍𑌯𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑍈𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑍁𑌖𑌸𑍁𑌘𑌟𑌾𑌶𑍇𑌷𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍈𑌃
𑌨𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑍈𑌃 𑌪𑍁𑌮𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌜𑌗𑌦𑌧𑌿𑌪𑌤𑌿𑌭𑌿𑌶𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑍌𑌘𑍈𑌃
𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌦𑍋𑌷𑍈𑌰𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌨𑌿𑌖𑌿𑌲𑌤𑌨𑍁𑌤𑌯𑌾 𑌸𑌂𑌵𑍃𑌤𑌸𑍍𑌤𑌾𑌵𑌦𑌿𑌷𑍍𑌟𑌃 ॥

[நான்காவது பாதத்தின் முதலிலுள்ள ஜுஷ்டம் என்பது ஒவ்வொரு த்ருதீயாந்தவிசேஷணங்களோடும் அந்வயிக்கும். பூதை: ஜுஷ்டம், தத்கார்ய பூதை: ஜுஷ்டம், நிஜவபுஷா ஜுஷ்டம் என்றிங்ஙனே கண்டு கொள்க.]

1. பூதை:ஜுஷ்டம். * பொருவில்சீர்ப்பூமியென்கோ.* பூமிமுதலிய பஞ்சபூதங்களோடும் கூடியிருந்துள்ளவன். (சரீரசரீரிபாவத்தில் நோக்கு.)

2. தத்கார்யபூதை:. * குன்றங்களனைத்துமென்கோ. * பூமி முதலிய பூதங்களின் காரியங்களான பர்வதம் முதலியவற்றோடு கூடியிருந்துள்ளவன்.

3. சுபநிஜவபுஷா. * பங்கயக்கண்ணனென்கோ. * அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தோடுகூடியவன்.

4. தீப்திமத்பி: பதார்த்தை:. * சாதிமாணிக்கமென்கோ. * மாசற்ற மாணிக்கம் பொன் முத்து முதலியவற்றோடு கூடியுள்ளவன்.

5. பத்த்யாஸ்வாதோபபந்நை:. * கச்சமாமருந்தமென்கோ. * ஹிதங்களாயும் மதுரங்களாயுமிருக்கிற ஔஷதம் அமுதம் முதலியவற்றோடு கூடியுள்ளவன். [முதல்பாதத்தின் முடிவிலுள்ள (பதார்த்தை:) என்பது காகாக்ஷிந்யாயத்தாலே இங்கும் அந்வயிக்கும்.]

6. ச்ருதிமுகஸுகடாசேஷ சப்தப்ரபஞ்சை:. * நான்குவேதப்பயனென்கோ * ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணம் முதலியவற்றோடும் கூடியுள்ளவன்.

7. நாநாகாரை: புமர்த்தை:. * மனமில் செல்வமென்கோ * பலவகைப்பட்ட ஐச்வர்ய ஸ்வர்க்கமோக்ஷபுருஷார்த்தங்களோடு கூடியுள்ளவன்.

8. ஜகததிபதிபி:. * ஒருவனென்றேத்தநின்ற நளிர்மதிச்சடையனித்யாதி.* உலகில் பிரதானரான சிவன் பிரமன் முதலானோரோடு கூடியுள்ளவன்.

9. சேதநஅசேதநஓகை: ஜுஷ்டம். * யாவையும் யவருந்தானே. * சேதநாசேதநஸமூஹங்களோடும் கூடியுள்ளவன்.

10. தோஷை: அஜுஷ்டம். * அவரவர் சமயந்தோறும் தோய்விலன் * சேதநாசேதநபதார்த்தங்களிலுள்ள தோஷங்களின் பற்று இல்லாதவன்.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை ஸகலஜகதாகாரனுகப் பெருமகிழ்ச்சியோடு ஆழ்வார் அநுபவித்தருளினார் நான்காந்திருவாய் மொழியில்.... .... (*)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.

ஸர்வம் ஜகத் ஸ்வவபுஷைவ விலோக்ய ஶௌரிம்
தத்வாசிநஶ்ச ஸகலாநபி ஶப்தராஶீந்।
தாந் ஸம்பூதஜாதிகலிதாந் கதயந் பதார்த்தாந்
தாஸ்யம் அகார வசஸைவ ஹ்ருதிஸ்த்திதேஶ

(கருத்து) ஆழ்வார் இந்த நான்காந்திருவாய் மொழியில், ஸகல ஜகத்தையும் எம்பெருமானுடைய வடிவமாகவே கண்டும், உலகத்திலுள்ள அவ்வோ பதார்த்தங்களைச் சொல்லக்கடவ ஸகல சப்தராசிகளையும் எம்பெருமானுக்கு வாசகங்களாகவே கண்டும், பஞ்ச பூதங்களென்ன அவற்றின் காரியப் பொருள்களென்ன இவற்றை யெல்லாம் எம்பெருமானைவே பேசி, இங்ஙனம் பகவத் விஷயத்தில் வாசிகமான அடிமையைச் செய்தருளினார் என்றதாயிற்று. ... . (*)

திருவாய்மொழி நூற்றந்தாதி.

புகழொன்றுமால் எப்பொருள்களுந் தானய்
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க—மகிழ்மாறன்
எங்கு மடிமைசெய இச்சித்து வாசிகமாய்
அங்கடிமை செய்தான்மொய்ம் பால்.

புகழ் ஒன்று மால்	கீர்த்தி பொருந்திய ஸர்வேச்வரன்	அடிமை செய இச்சித்து	தொண்டு செய்ய விரும்பி
எப்பொருள்களும் தான் ஆய் நிகழ்கின்ற நேர் காட்டி நிற்க	ஸகலபதார்த்தங்களும் தானேயாய் இருக்கின்றபடியைக் காட்டி நின்றவளவில்	மொய்ம்பால்	*மயர்வறமதிநல மருளப் பெற்ற சீர்மையினாலே
மகிழ் மாறன்	(அதனால்) மகிழ்ச்சி கொண்ட ஆழ்வார்	வாசிகம் ஆய் அடிமை செய்தான்	வாய்மொழியினாலாகிய கைங்கரியத்தைச் செய்தார்.
எங்கும்	எவ்விடத்தும்		

கீழ் *ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் கைங்கர்ய மநோரதங்கொண்ட ஆழ்வாருடைய பாரிப்புக்குத் தகுதியாக எம்பெருமான் தானே எங்கும் எல்லாப் பொருள்களுமாய் நிற்கின்ற படியை ஆழ்வார்க்கு ஸேவை ஸாதிப்பிக்க, ஆழ்வாரும் எம்பெருமானுடைய விபூதியுள்ள இடங்களிலெல்லாம் காயிக கைங்கரியம் செய்யவிரும்பி, அது செய்ய இயலாமல் எம்பெருமானுடைய ஸர்வாத்மத்வத்தைப் பேசும்முகத்தால் வாசிக கைங்கரியத்தை இத்திருவாய்மொழியில் செய்தருளினார் என்றதாயிற்று. .... (உச)

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—மூன்றாம்பத்து,

ஐந்தாந்திருவாய்மொழி—மொய்ம்மாம்பூம்பொழில்.

அவதாரிகை :—ஆழ்வார் கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானை மிகவும் அற்புதமாக அநுபவித்தார். அந்த அநுபவத்தினால் அபரிமிதமான ஆனந்தத்தையடைந்தார். திருவுள்ளத்திலுண்டான ஆனந்தம் வடிவிலே தொடை கொண்டது; அதனால் ஆடுவதும் பாடுவதுமாகத் தாம் ஆயினர்; இந்நிலவுலகத்தில் இங்ஙனே பகவத்குணங்களில் ஈடுபட்டுக் களித்துப் பரவச சரீரர்களாக இருப்பவர்கள் எத்தனைபேருண்டு? என்று ஆராயத் தொடங்கினர்; அன்னவர் மிகச் சிறுபான்மையராய், பகவத்குணங்களில் ஈடுபடாதபாவிகளே பெரும்பான்மையராய் இருப்பதைக்கண்டு திருவுள்ளம்மிக நொந்து, ஈடுபாடுடையாரைக் கொண்டாடியும் அஃது இல்லாதாரை நிந்தித்தும் செல்லுகிறார் இத்திருவாய்மொழியில்.

*முந்நீர் ஞாலம்படைத்த என்கிற திருவாய்மொழியில் அளவுகடந்த துயரத்தையடைந்தார்; *புகழுநல்லொருவனில் அளவுகடந்தகளிப்பையடைந்தார்; ஹர்ஷசோகங்கள் கூடாதென்று சாஸ்த்ரங்களில் மறுக்கப்பட்டிருக்கின்றதே; ஸ்ரீபாஷ்யத்தில் பக்திக்கு உறுப்பான விவேகம் முதலிய ஏழை நிரூபித்துவருமிடத்து, "அநவஸாத:, அநுத்தர்ஷ:" என்று முடிவில் இரண்டு சொல்லப்பட்டன; இவற்றுள் அநவஸாதமாவது—துயருற்றிராமை; அநுத்தர்ஷமாவது—ஹர்ஷஹேதுக்களுண்டானாலும் மிகஹர்ஷங்கொள்ளாதொழிகை; என்று விவரிக்கப்பட்டுளதன்றோ; ஆகவே ஹர்ஷசோகங்கள் கூடாதனவாயிருக்க, ஆழ்வார் அவற்றை ஏன் கொள்ளுகிறார் என்று சிலர் சங்கிக்கக்கூடும்; ப்ராக்ருதவிஷயங்களைப் பெற்றதனாலுண்டாகும் களிப்பும், அவற்றை இழப்பதனாலுண்டாகும் கவர்வும் கூடா என்பதே சாஸ்த்ரதாத்பர்யம்; பகவத் குணாநுபவத்தினாலுண்டாகும் ஆனந்தமும் அடக்கமுடியாது; அவ்வநுபவம் மற்றையோர்க்கு இல்லையேயென்று உண்டாகும் க்லேசமும் அடக்கமுடியாது என்க.

எம்பெருமானுடைய குணாநுபவம் விஞ்சினால், நின்றவிடத்தில் நிற்கமுடியாமல் ஆடுவதும் பாடுவதுமான நிலைமை பரவசமாக உண்டாகியேதீரும். முக்தர்களும் திருநாட்டில் "ஹாவுஹாவுஹாவு| அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத:|" என்று களித்துப்பாடுவர்களென்றது. நாரதமுனிவர் முதலானோரும் பகவத்ஸந்நிதியிலே வந்தவாறே ஆடுவது பாடுவதாகாநிற்பர்களென்று சொல்லப்பட்டுளது. இதுவன்றோ நம்முடைய கரசரணாதி அவயவங்களுக்குப் பயன். இப்பயன் பெறாத பாவிகளைப் பழிப்பதும் இது பெற்ற பெரியாரைப் புகழ்வதும் பகவதநுபவத்திலே ஒருவகையாதலால் அவை இத்திருவாய்மொழியிற் செல்லுகின்றன. ... . *

மொய்ம்மாம்பூம்பொழிற்பொய்கை முதலைச்சிறைபட்டுநின்ற*
கைம்மாவுக்கருள்செய்த கார்முகில்போல்வண்ணன்கண்ணன்*
எம்மானைச்சொல்லிப்பாடி யெழுந்தும்பறந்துந்துள்ளாதார்*
தம்மால்கருமமென்சொல்லீர் தண்கடல்வட்டத்துள்ளீரே. (க)

தண் கடல் வட்டத்து உள்ளீர்	குளிர்ந்த கடல்சூழ்ந்த பூமண்டலத்திலுள்ளவர்களே!,	கார் முகில் போல் வண்ணன்	காளமேகச்யாமளனை
மொய்	நெருங்கின	கண்ணன் எம்மானை	ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவை
மா	பெரிய	சொல்லி பாடி	புகழ்ந்துபாடி
பூ பொழில்	பூஞ்சோலைகளையுடைய	எழுந்தும்	இருந்தவிடத்திலிராமல் எழுந்தும்
பொய்கை	தடாகத்தில்	பறந்தும்	பூமியில் கால் பாவாதபடி அலைந்தும்
முதலை	முதலையினால்	துள்ளாதார் தம்மால்	களித்துக்கூத்தாடாதவர்களால்
சிறை பட்டு	கவ்வப்பட்டு	என் கருமம்	என்ன பயன்?
நின்ற	கரையேறமாட்டாது வருந்தி நின்ற	சொல்லீர்	சொல்லுங்கள்.
கை மாவுக்கு	கஜேந்திராழ்வானுக்கு		
அருள் செய்த	க்ருபைபண்ணின		

* * * [மொய்ம்மாம்பூம்பொழில்.] ஸ்ரீகஜேந்திராழ்வானை ரக்ஷித்தருளின எம்பெருமானுடைய இந்த ஆச்ரித வாத்ஸல்யத்தை யநுஸந்தித்தும் விகாரமடையாதிருப்பாருடைய பிறப்பு வீண் என்கிறார்.

மஹாவிஷ்ணு பக்தனான கஜேந்திரன் அர்ச்சனைக்காகப் பூப்பறிக்க ஒரு பெரிய பொய்கையிற் சென்றிழிந்ததும் அங்கு முதலையின்வாயில் அகப்பட்டு வருந்தியதும், பிறகு 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அங்கு எழுந்தருளித் தனது சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத்துணித்து யானையை அதன்வாயினின்று விடுவித்து இறுதியில் அதற்கு முக்தியளித்ததும் ப்ரஸித்தம்.

கஜேந்திராழ்வான் தானிருக்கின்றவனத்திலே நெடுநாள் மழைபொழியாமையால் தாமரைக்குளங்களெல்லாம் வறண்டமைபற்றி எங்குந்தாமரைமலர் கிடைக்கப்பெறாமல் சிலநாளாக அர்ச்சனை தவிர்ந்து அதனாலாகிய வருத்தத்தினால் உணவுகொள்ளாமற் பட்டினிகிடந்து ஏங்கி மலர்தேடுகின்றபோது தெய்விகமாக ஒரு நறுமணத்தை மோப்பஞ்செய்து அதனையே பிடித்துக்கொண்டு அதுவந்த வழியால் விரைந்து செல்லுகையில் ஒரு மலையின்மீது திவ்யமான ஒரு சோலையையும் அதன் நடுவே ரமணீயமான ஒரு தடாகத்தையுங்கண்டு அதில் நிறைந்திருக்கின்ற தாமரைமலர்களைப் பார்த்ததனால் மிகமகிழ்ந்து அவற்றினிடத்திற் கொண்ட ஆதராதிசயத்தினால் அம்மடுவில் முதலையிருப்பதைப்பாராமலே விரைந்திறங்கி மலர் கொய்வதாயிற்றென்பது விளங்க "மொய்ம்மாம்பூம் பொழிற்பொய்கை முதலைச்சிறைபட்டு நின்ற கைம்மா" என்றார்.

அருள்செய்த = "பெண்ணுலாஞ்சடையினனும் பிரமனும் முன்னைங்காண்பான் எண்ணிலாவூழியூழித் தவஞ்செய்தார் வெள்கிநிற்ப, விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கு அன்றருளையீந்த" என்று (திருமாலையில்) தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய பாசுரங்காண்க. ஆழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் "க்ராஹக்ரஸ்த முஜேந்த்ர ஸம்ப்ரம ஹிதே நாதம் வரதஸ்ய ஸம்ஸ்ப்ரஷ்டவிஉ காருணீஷா = ஆஜக்முஷஸ் தவ கஜேந்த்ரமப்ரும்ஹிதேந பாதம் பராமம்ருசுஷோபி ச கா மநீஷா?" என்றார். அதாவது—கஜேந்திராழ்வானுடைய கூக்குரல் செவிப்பட்டவாறே பதறிப் பொய்கைக்கரைக்கு வந்ததுமன்றி, முதலைவாய்ப்பட்டுப் புண்பட்ட அதன் காலைத் திருக்கைகளினால் தடவி உபசாரங்கள் செய்தபடியும் கூறப்பட்டதாயிற்று; இதுவே கைம்மாவுக்குச்செய்த கனத்த அருள்.

இங்ஙனே எம்பெருமானுடைய பேரருள் பொலிவுபெறும் இந்தச்சரித்திரத்தை அநுஸந்தித்தால் மனமொழிமெய்கள் விகாரப்படாதிருக்கவொண்ணுமோ? எம்மானைச்சொல்லிப்பாடியெழுந்தும் பறந்தும் துள்ளவேண்டும்படியாகுமே; அங்ஙனம் ஆகப்பெறாதவர்கள் இவ்வுலகில் ஜனிப்பதனாலும் இருப்பதனாலும் என்ன பலன்?.

இங்கே நம்பிள்ளையீடு;— "பட்டர் இவ்விடத்தை அருளிச்செய்யாநிற்கச் செய்தே 'அவன் நாறுயிரஞ் செய்தாலும் விக்ருதராகாமைக்கு நாமேவேணும்; நமக்கொரு ஆபத்து உண்டானால் இருந்த விடத்திலே இருக்கமாட்டாதே விக்ருதனாகைக்கும் அவனேவேணும்' என்றருளிச்செய்தார்". என்பதாம். எம்பெருமானைப்போன்ற பரமதயாளு இல்லை; அவனது தயையில் ஈடுபடமாட்டாத நம்மைப்போன்ற வன்னெஞ்சருமில்லை என்றபடி. ... ... (க)

தண்கடல்வட்டத்துள்ளாரைத் தமக்கிரையாத்தடிந்துண்ணும்*
திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமாலை*
பண்கள்தலைக்கோள்ளப்பாடிப் பறந்துங்குனித்துழலாதார்*
மண்கோளுலகிற்பிறப்பார் வல்வினைமோதமலைந்தே. (உ)

தண் கடல் வட்டத்து உள்ளாரை	குளிர்ந்த கடல் சூழ்ந்த பூமண்டலத்திலுள்ள ஜனங்களை	பண்கள் தலைக்கொள்ள பாடி	இசை மிகும்படி பாடி
		பறந்தும்	உயரக்கிளம்பியும்
தமக்கு இரை ஆ	தங்களுக்கு உணவாக	குனித்து	ஆடியும்
தடிந்து உண்ணும்	கொன்று தின்கிறவர்களும்	உழலாதார்	எங்குந்திரியாதவர்கள்
திண் கழல் கால்	திண்ணிய வீரக்கழல்களையணிந்த காலையுடையவருமான	மண் கொள் உலகில்	மண்ணுலகத்தில்
		வல் வினை மலைந்து மோத	கொடிய பாவங்கள் மேலிட்டு நலியும்படியாக
அசுரர்க்கு	ஆஸுரப்ராக்ருதிகளுக்கு		
தீங்கு இழைக்கும் திருமாலை	அநர்த்தங்களை விளைவிக்கின்ற திருமாலை	பிறப்பார்	பிறப்பார்கள் [நித்திய ஸம்ஸாரிகளாய்க் கிடப்பார்களென்றபடி].

[தண்கடல் வட்டத்து.] ஸகல ஜகத்தினுடையவும் துன்பங்களைப்போக்கிக் காத்தருளுமியல்வினனான திருமாலினது இச்சீர்மையில் ஈடுபடமாட்டாதவர்கள் ஸம்ஸார மண்டலத்தில் மேன்மேலும் பிறந்து படுவர்களென்கிறது. பாட்டில் கடல்சூழ்ந்த மண்ணுலகிலுள்ளவர்களைச் சொன்னது அங்கு இரையாகத்திரியும் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு அசக்தங்களை விளைக்கின்ற எம்பெருமான் விஷயமாக இரைகளைப்பாடி நெஞ்சுகளித்து கூத்தாடுங் களிப்பெருகவர்கள் ஒருநாளும் கழிக்கப்போகாத கொடிய பாவங்கள் மேலிட்டுத் துன்புறுத்தும்படி மீண்டுமீண்டும் பிறந்துஇறந்தும் போருவர்களென்றதாயிற்று.

அசுரர்க்கு என்றது ஆஸுரஜாதியிற் பிறந்தவர்களுக்கு என்றபடியன்று; பகவத்கீதையில் பதினாறாவது அத்யாயத்தில் "[illegible] த்வௌ பூதஸர்கௌ லோகேஸ்மின் தைவ ஆஸுர ஏவ ச." என்று சொல்லப்பட்டிருப்பதுகாண்க. பகவத் பாகவத விஷயங்களில் நன்மைபுரிவாரடங்கலும் தேவப்ரக்ருதிகள் என்றும், தீமைபுரிவாரடங்கலும் ஆஸுரப்ரக்ருதிகளென்றும் கொள்ளக்கடவர்கள்.

தீங்கிழைக்கும் திருமாலை என்றவிடத்து, திரு என்றது குறிக்கொள்ளத்தக்கது; "ஸஹதர்மசரீம் சௌரேஸ் ஸம்மந்த்ரித ஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம்." (யதிராஜஸப்ததி.) என்கிறபடியே நிக்ரஹமென்பதைக் கனவிலுமறியாத பிராட்டியுங்கூட எம்பெருமானோடு சேர்ந்து நிக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றும்படி தீமைகளைச் செய்கின்றனராம் ஆஸுரப்ரக்ருதிகள்.

ஆஸுரப்ரக்ருதிகளைத் தொலைத்து தேவப்ரக்ருதிகளைக் காத்தருளுமெம்பெருமான்திறத்து ஈடுபடாதவர்கள் நித்யஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போவர்கள் என்றதாயிற்று. .... (௨)

மலையையெடுத்துக்கன்மாரிகாத்துப் பசுநிரைதன்னை*
தொலைவுதவிர்த்தபிரானைச் சொல்லிச்சொல்லிநின்றெப்போதும்*
தலையினோடாதனந்தட்டத் தடுகுட்டமாய்ப்பறவாதார்*
அலைகொள்நரகத்தழுந்திக் கிடந்துழைக்கின்றவம்பரே. (௫)

மலையை	கோவர்த்தன மலையை	சொல்லி சொல்லி	பலகாலுஞ் சொல்லி
எடுத்து	குடையாகத் தூக்கி	எப்போதும்	எப்பொழுதும்
கல் மாரி	கல் மழையை	நின்று	நிலைநின்று
காத்து	தடுத்து	ஆதனத்தோடு தலை தட்ட	தரையிலே தலைபடும்படியாக
பசு நிரை தன்னை	பசுக்கூட்டத்தை	தடுகுட்டம் ஆய்	தலைகீழாக
தொலைவு தவிர்த்த பிரானை	துன்பந்தவிர்த்த எம்பெருமானை	பறவாதார்	ஸம்ப்ரமியாதவர்கள்

அலைகொள் நரகத்து	துக்கப்படுத்துவதையே இயல்வாகவுடைய நரகத்தில்	அழுந்தி இடந்து உழைக்கின்ற வம்பர்	அழுந்தியிருந்து வருந்துகின்ற வீணராவர்.

* * * [மலையையெடுத்து] இடையர்கள் இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பலபல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜைப் பொருள்களையும் அமைப்பதைக்கண்ட கண்ணபிரான் அவற்றை இந்திரனுக்கு இடவொட்டாது தடுத்துக் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லி, பிறகு தான் அம்மலையில் ஆவேசித்து அவற்றையெல்லாம் தானே யமுது செய்திட, பின்பு பூஜையிழந்த இந்திரன் சீற்றமுற்று எழுநாள் விடாமழை பெய்வித்தபோது அம்மலையையே பிடுங்கிக் குடையாகத்தூக்கித்தாங்கி, கோகுலத்தைச் சேர்ந்த ஸகலப்ராணிகளையும் அதன்கீழ் அழைத்துக்கொண்டு சிறிதும் அபாயமின்றிக் காப்பாற்றியருளின பெருங்குணத்தில் ஈடுபட்டு விக்ருதராகாதவர்கள் நித்ய ஸம்ஸாரிகளாயொழிவர்களென்கிறார்.

"தலையினோடு ஆதனம் தட்டத் தடுகுட்டமாய்" என்றது தலைகீழாகத் துள்ளும்படியைக் கூறியவாறு. "ஆதனத்தோடு தலைதட்ட" என்று உருபு பிரித்துக் கூட்டியுரைப்பர்கள். இங்கு ஆதனமென்று தரையைச் சொன்னபடி. இங்ஙனே ஆடுகிற கூத்து குணலைக் கூத்து என வழங்கப்படும். "கோத்துக் குழைத்துக் குணலையாடித்திரிமினே" என்ற பெரியாழ்வார் திருமொழியுங் காண்க.

அலைகொள்நரகத்து=அலை என்று நீரில் தோன்றும் அலைக்கும் துக்கத்திற்கும் பெயர். அவ்விருபொருளும் இங்குப்பொருந்தும். "[illegible]—கர்ப்பஜந்மஜராம்ருதிக்லேச கர்மஷடூர்மிக:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின்படியும் "[illegible] = தம் வீக்ஷ்ய ஸேது மதுநாபி சரீரவந்த: ஸர்வே ஷடூர்மி பஹுலம் ஜலதிம் தரந்தி." என்கிற தேசிக ஸ்ரீஸூக்தியின்படியும் இந்த ஸம்ஸாரஸாகரம் ஆறுவகையான அலைகள் நிரம்பப்பெற்றதென்னுமிடம் அறியத்தக்கது. இங்கு நரகமென்றது ப்ரத்யக்ஷநரகமாகிய ஸம்ஸாரத்தையே சொன்னபடியாகலாம்.

வம்பர்—புதுமை மாறாதவர்கள்; (அதாவது) நலிகின்ற யமபடர்கட்கு அப்பொழுதைக்கப்பொழுது புதியராகவே யிருப்பவர்களென்கை. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்:—"முனநாள் நலிந்தால் பிற்றை நாள் வந்து தோற்றினால் 'முனநாள் நாம் நலிந்தவன்' என்று க்ருபைபண்ணாதே மோம்பழம் பெற்றாற் போலே 'வாரீரோ! உம்மையன்றோ தேடித்திரிகிறது' என்னும்படியாவர்." (௩)

வம்பவிழ்கோதைபொருட்டா மால்விடையேழுமடர்த்த*
செம்பவளத்திரள்வாயன் சிரீதரன்தொல்புகழ்பாடி*
கும்பிடுநட்டமிட்டாடிக் கோகுகட்டுண்டுழலாதார்*
தம்பிறப்பால்பயனென்னே சாதுசனங்களிடையே. (ரு)

வம்பு அவிழ் கோதை பொருட்டா	நறுமணம் மிக்க பூமாலையணிந்துள்ள நப்பின்னைக்காக	பாடி	வாயாரப்பாடி
மால் விடை ஏழும் அடர்த்த	பெரிய ரிஷபங்களேழையும் வலியடக்கினவனும்	கும்பிடு நட்டம் இட்டு ஆடி	தலைகீழாகக் கூத்தாடி
செம் பவளம் திரள் வாயன்	சிவந்த பவளம் போன்று திரண்ட அதரத்தையுடையவனுமான	கோகு உகட்டுண்டு	அடைவுகேடு தலையெடுத்து
சிரீதரன்	திருமாலினது	உழலாதார்	ஸம்ப்ரமியாதவர்கள்
தொல் புகழ்	நிஜமான புகழை	சாது சனங்கள் இடையே	ஸாத்விக ஜனங்களின் நடுவிலே
		தம் பிறப்பால்	ஜனிப்பதனால்
		என் பயன்	என்ன பயனோ!

* * * [வம்பவிழ்கோதை.] கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளாஎன்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழுதிருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன் என்ற இவ்வரலாற்றை அழகாகப்பாடிக்கொண்டு தலைகீழாகக் கூத்தாடி அடைவுகெட ஆரவாரஞ்செய்து திரியாத பாவிகள் ஸாத்விககோஷ்டிகளின் நடுவே தாங்களும் சிலராய்ப் பிறந்து திரிவது ஏனோ என்று வெறுத்துரைக்கின்றார்.

வம்பவிழ்கோதை—கோதையென்று பூமாலைக்குப் பெயர்; அதனையணிந்துள்ள மயிர்முடிக்கு இலக்கணை. பரிமளம்மிகுந்த அளகபாரத்தையுடைய நப்பின்னையென்று பொருள்படுதலால் அன்மொழித்தொகை.

செம்பவளத்திரள்வாயன்— விரோதி நிரஸநஞ்செய்து திருமணம் புணர்ந்த உவப்பினால் முறுவல்செய்து நின்றநிலை ஆழ்வார்க்கு ப்ரத்யக்ஷஸமமாயிருக்கிறபடி. தொல்புகழ்—அந்த எருதுகளின் வலிமையடக்கினது ஈ எறும்பு கொசு முதலியவற்றை நசுக்குவதுபோலே கண்ணபிரானுக்கு ஆயாஸமறச் செய்த செயலாதலால் அதனைத் தொல்புகழென்கிறாரல்லர்; அப்பெருமானுடைய ஸௌலப்ய ஸௌசீல்யங்களே இங்குத் தொல்புகழாம்.

கோகுஉகட்டுண்டு=கோகு—அடைவுகேடு, (அதாவது) அக்ரமம்; அது மேலிட்டு; "ஸத்ஸங்கீர்த்யமாநோ ந ஶாஸ்த்ரம் நைவச க்ரம:—அத்யந்தபக்தி யுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவச க்ரம:" என்கிறபடியே பக்தியின் மிகுதி சொன்னவாறு. வில்லிபுத்தூரார் பாரதத்தில், விராடபருவம்—நிரைமீட்சிச் சருக்கத்தில்

(68) "வருகின்ற பெரிராசயானை பெயர்க்கைந்து, கோகுதட்டிடு துனஞ்சய னிலையிலை கூறும்" என்ற செய்யுளில் "கோகுதட்டிடு" என வருதலுங்காண்க.

"பயவெல்லே சாதுசனங்களிடையே" என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—

> "திருப்புன்னைக்குக் கீழே ஒருவரிருக்குமிடத்திலே நம்முதலிகள் பத்துப் பேர்கூட நெருங்கிக்கொண்டிருக்கச் செய்தே, க்ராமணிகள் மயிரெழுந்த பிசல்களும் பெரியவடிவுகளும் போலே சுற்றின இரட்டைகளுமாய் இடையிலே புகுந்து நெருங்குமாபோலே காண்! என்று பிள்ளைப்பிள்ளை."
> என்பதாம்.

இதன் கருத்தாவது—திருவரங்கப் பெரிய கோயிலில் திருப்புன்னைமரத்தின் கீழே நம்முதலிகள் இருந்து சாஸ்த்ரார்த்த விசாரங்கள் செய்தருளாநிற்பர்கள்; அவற்றைக் கேட்டுக் களிக்கவேணுமென்கிற ஆசையினால், நெருக்கமான அவ்விடத்திலும் பல ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவர்மேலொருவராக நெருங்கிக்கொண்டு நின்று கேட்பர்களாம்; ஸ்ரீவைஷ்ணவர்கள் எத்தனைபேர்கள் நெருங்கினாலும் வருத்தமில்லை; அந்த நெருக்கத்தைக்கண்டு ஸாமாந்ய ஜனங்களும் அங்குத் தங்களுக்கு ஏதோ லாபம் கிடைப்பதாக மயங்கி, மொசமொசவென்று மயிர்கள் நெருங்கிய தோள்களும் ஸ்தூலதேஹமும் தலைப்பாகையுமாய் அங்கே புகுந்து நெருக்குவது வழக்கமாம்; அது எப்படி அஸஹ்யமோ, அப்படியே ஸாத்விக ஜநங்களிடையே பாபிகள் பிறந்திருப்பதும் அஸஹ்யமென்றதாயிற்று. பிள்ளைப் பிள்ளை யென்பவர் கூரத்தாழ்வான் திருவடிகளில் ஒருவர். ... . (௪)

சாதுசனத்தைநலியுங் கஞ்சனைச்சாதிப்பதற்கு*
ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த*
வேதமுதல்வனைப்பாடி வீதிகடோறுந்துள்ளாதார்*
ஓதியுணர்ந்தவர்முன்னா என்செவிப்பார்மனிசரே. (௫)

சாது சனத்தை நலியும்	ஸாத்விகர்களைத் துன்பப்படுத்தின	பாடி	வாயாரப்பாடிக் கொண்டு
கஞ்சனை	கம்ஸனை	வீதிகள் தோறும்	எல்லா வீதிகளிலும்
சாதிப்பதற்கு	தண்டிக்கும்பொருட்டு	துள்ளாதார்	களித்துத் திரியாதவர்கள்
ஆதி அம் சோதி உருவை	நித்தியமாய் அப்ராக்ருத தேஜோரூபமான திருவுருவை	ஓதி உணர்ந்தவர் முன்னா	சாஸ்த்ரங்களை ஓதி நன்கறிந்த மாஞானிகள் முதற்கொண்டு [எப்படிப்பட்ட வித்வான்களாயிருந்தாலும்]
அங்கு வைத்து இங்கு பிறந்த	பரமபதத்திலுள்ள படியே ஸ்வீகரித்துக் கொண்டு இந்நிலத்தில் வந்து பிறந்தவனும்	என் சவிப்பார்	(அவர்கள்) ஜபம் செய்வது என்னோ?
வேதம் முதல்வனை	வேதங்களினால் மூலப்பொருளென்று ஓதப்படுபவனுமான எம்பெருமானை	மனிசரே	(அவர்கள்) மநுஷ்ய கோடியிற் சேர்ந்தவர்களோ?

* * * [சாதுசனத்தை] அடியார்களின் விரோதிகளைத் தொலைப்பதற்காகத் தன்னுடைய அஸாதாரணதிவ்யரூபத்தோடு கூடவே வந்து திருவவதாரம் பண்ணின ஸ்ரீக்ருஷ்ணனைத் அநுஸந்தித்து ஈடுபடாதவர்கள் செய்கிற ஜபம் தபம் முதலியவையெல்லாம் உபயோகமற்றவை யென்கிறார்.

எம்பெருமான் தன்னளவிலே ஆஸுரப்ரக்ருதிகள் எத்தனை அபசாரப்பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீறமாட்டான்; தன்னடியவர்பக்கல் அபசாரப்படுமளவில் அவ்வபராதிகளைப் பங்கப்படுத்தியே தீருவன் என்பது நாற்கொள்கை. "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயருளிச்செய்வர்" என்று ஸ்ரீவசநபூஷணத்திற் பாசுரம். அதாவது — ஸங்கல்பமாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னை அழியமாறி இதரஸஜாதீயனும் அவதரித்துக் கைதொடனும் நின்றுசெய்த ஹிரண்ய ராவண கம்ஸசிசுபாலாதி நிரஸநரூபமான அதிமாநுஷக்ருத்யங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹரிஷிகள் வஸுதேவதேவகிகள் முதலான பாகவதர்திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே என்று நஞ்சீயர் அருளிச்செய்வராம். இவ்வர்த்தமே இப்பாட்டில் "சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு" என்பதனால் தெரிவிக்கப்படுகிறது.

எம்பெருமான் தன்னளவிலே நீரக்கழிய அபராதப் படுமவர்களைப் பற்றி ஒன்றும் கணிசியான்; ஆச்ரிதர்திறத்தில் ஸ்வல்பாபராதம் பண்ணுவானுண்டாகிலும் அவனை அப்போதே தலையறுத்துப் போகவிடுவானென்பது இதிஹாஸ புராணப்ரஸித்தம். "[வ்யஸநி ஸஹஸாவஹே கிம் காயேந ஸீதயா உ—த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம.]" இராமபிரானெழுந்தருளியிருக்கச் செய்தே இராவணன் கோபுரசிகரத்திலே வந்து தோற்றினவாறே 'ராஜத்துரோகியான இப்பயல் பெருமாள் திருமுன்பே நிற்கையாவதென்'? என்று ஸுக்ரீவ மஹாராஜர் அவன்மேலே பாய்ந்து வென்று வந்தபோது அவரை நோக்கிப் பெருமாள் இங்ஙனே அருளிச் செய்கிறார்;—நீர் மஹாராஜரான தரம்குலைய [உம்மைத் திரஸ்கரித்து] அந்த ராக்ஷஸப்பயல் ஒருவார்த்தை சொன்னானாகில் அல்லது ஒரு சிறிய சேஷ்டை செய்தானாகில் பிறகு ஸீதைதானும் எனக்கு எதுக்கு? என்றார். ஆச்ரிதவிஷயத்திலே எம்பெருமானுடைய பக்ஷபாதம் இப்படியன்றோ இருப்பது. தன் உயிர்நிலையான பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், தனக்குத் தீங்குநேரும்போது பிறக்கும் சீற்றம் அற்பமென்னும்படி சீற்றம் பெருகிச் செல்லும். இதற்கு நிதர்சநம்—தான் ஸமுத்ரராஜனை சரணம்புகச் செய்தேயும் அவன் முகங்காட்டிற்றிலனாக "கோபமாஹாரயத் தீவ்ரம் — கோபமாஹாரயத் தீவ்ரம்" என்னும்படி சீற்றத்தை வரவழைத்துக் கொண்டார் பெருமாள்: பின்பு இராவணனாலே அநுமான்

கோவப்பட்டபோது "ததோ ராவணோ ஹாஜா: ராவணெந க்ருதவ்ரணம்! த்ரு ஷ்டா ப்லவகமார்தூலம் கோபஸ்ய வமமெயிவாந்—ததோ ராமோ மஹாதேஜா: ராவணேந க்ருதவ்ரணம், த்ருஷ்ட்வா ப்லவக சார்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்." என்னும்படி கோபமிட்ட வழிகாணேர். இங்ஙனேயிறே பாகவத விஷயத்திலே எம்பெருமானுக்குள்ள பரிவின் மிகுதியிருப்பது. இப்பாசுரத்தில் ஆழ்வார் "சாதுசனத்தை நலியும்" என்றதனால் அந்தப் பரிவுதன்னையே விளக்கு கின்றாரென்க. பகவத்கீதையில் நான்காமத்யாயத்தில் அவதாரப்ரயோஜநம் சொல்லுமிடத்து "பரித்ராணாயஸாதூநாம்—பரித்ராணாய ஸாதூநாம்" என்று ஸாது பரித்ராணத்தை ப்ரதமப்ரயோஜநமாகப் பகவான் அருளிச்செய்திருக்கை யாலே அதற்குச் சேர இப்பாட்டில் முதலடி அமைந்தது என்றுங் கொள்க.

சாதிப்பதற்கு—சாவிப்பதற்கு என்றபடி; சாஸ என்னும் வடமொழித் தாதுவடியாப்பிறந்த சொல் இது. "தம்மிடையே பொய்யானால் சாதிப்பார் ஆரினியே" என்ற நாச்சியார் திருமொழிப் ப்ரயோகமும் இவ்வகையாலே அமைந்தது. இவ்விடத்து ஈட்டில் "கம்ஸனை ஸாதிக்கைக்காக" என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுதலால் 'சாதிப்பதற்கு' என்கிறஇச்சொல் 'ஸாதநம்' என்கிற வட சொல்லடியாகவே பிறந்ததென்று கொள்வதே பொருந்தும். கிராதார்ஜுநீய காவ்யத்தில்(14—17) "ஸஹஸா ததஸ்ய வ்ரதிகாயஸாதநம்" என்கிற ப்ரயோகமும், அவ்விடத்து மல்லிநாத வியாக்கியானத்தில்— "வ்ரதிகாயஸ்ய வ்ரதிவக்ஷஸ்ய, ஸாதநம்—வத:, ஸாதநம் நிவ்ருத்தௌ ஹெஜெ, ஸெனைந்து ஷிக்ஷளவியெ ம தளஷை திவிப:." என்றுள்ள நிரூபணமும் காணத்தக்கன, ஆகவே "கம்ஸனைஸாதிக்கைக்காக" என்கிற ஈட்டு ஸ்ரீஸூக்தியை "கம்ஸனை ஸாதிக்கைக்காக" என்று சிலர் திருத்துவது அவசியமற்றது என்றதாயிற்று. ஸாதநம் என்பது போலே ஸாதநம் என்கிற ஒரு வட சொல்லுமுண்டு; அவஸாதநம் என்றபடி. அந்தச் சொல்லடியாக இங்கு "சாதிப்பதற்கு" என்கிற ப்ரயோகம் என்றும் கொள்வதற்கு இடமுண்டு; ஈட்டிலுள்ளபடியே நன்கு பொருந்தும்.

ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குப்பிறந்த=தன்னுடைய அஸாதாரணமான அப்ராக்ருத சோதிவடிவைப் பரமபதத்திலே வைத்திட்டு ப்ராக்ருத ரூபத்தோடே இங்குவந்து பிறந்த=என்று சிலர் பொருள் கூறுவது செவியிலும் ஏற்கத்தகாதது. அங்குவைத்து என்பது ஒரு சொல்வடிவாம்; அங்குள்ள படியே கொண்டு என்பது பொருள். கீதையில் (4—6) "அஜோபிஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபிஸந் ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா=அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா." என்ற விடத்து பாஷ்யத்தில்— "ஸ்வாம் ப்ரக்ருதிம் ஸ்வமேவ ஸ்வபாவம் அதிஷ்டாய ... ஸ்வேநைவ ரூபேண ஸ்வேச்சயா ஸம்பவாமீத்யர்த:...... ஸ்வமேவ ரூபம் ஸர்வேச்வரத்வாதிகம் ஸர்வம்

ரூபம் தேவமநுஷ்யாதி ஸஜாதீயஸம்ஸ்தாநம் குர்வந் ஸ்வஸங்கல்பேந தேவாதிரூபேண ஸம்பவாமி" என்று எம்பெருமானார் அருளிய ஸ்ரீஸூக்திகள் குறிக்கொள்ளத்தக்கன. "அங்கிருந்தபடியே வைத்துக்கொண்டு இங்கே வந்து பிறந்த" என்கிற இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தியுங் காண்க.

வேதமுதல்வனைப்பாடி="அஜாயமாநோ பஹுதா விஜாயதே" இத்யாதி வேதவாக்கியங்கள் இங்கு விவக்ஷிதம். (ஈட்டுஸ்ரீஸூக்தி:—"இக்ஷ்வாகுவம்சத்திலே யுவநாச்வன் என்பானொருவன் மந்த்ரபூதமான ஜலத்தைப் பானம் பண்ண அவன் வயிற்றிலே கர்ப்பமுண்டாயிற்றிறே ஒரு சக்தி விசேஷத்தாலே; மிதுநமாய் ஸம்ஸர்க்கித்துப் பிறந்தமையில்லையிறே அங்கு; அப்படியே இங்கும் ஸர்வசக்தி யோகத்தாலே (சுக்லத்தில் அந்வயமில்லாமையாகிற) இவ்வர்த்தம் உபபந்நமாகத் தட்டில்லையிறே; இதில் ப்ரமாணம் "அஜாயமாந:" என்ற ச்ருதியிறே; அத்தைச் சொல்லுகிறார் வேதமுதல்வனை யென்று.")

ஓதியுணர்ந்தவர்முன்னா="சாஸ்த்ராப்யாஸயுக்தரான ஜ்ஞாநாதிகர் ஸந்நிதியிலே" என்றார் பன்னீராயிரவுரைகாரர். இங்கு மற்ற வ்யாக்யாதாக்களின் திருவுள்ளம் வேறு; அதாவது—ஓதியுணர்ந்தவர் தொடங்கி என்பது பிள்ளான் நம்பிள்ளை முதலான ஆசாரியர்களின் திருவுள்ளம். வேத முதல்வனைப்பாடி வீதிகள் தோறும் துள்ளாதவர்கள் ஓதியுணர்ந்தவர்களாயிருந்தாலும் அவர்களையும் விடாது இந்த நிந்தை; அவர்களுக்குத்தான் முந்துற நிந்தை; "விசேஷாதிக்ருதே தண்டோபவேத்" என்று சாஸ்த்ரமாதலால் அவர்களுக்கே முந்துறமுன்னம் நிந்தை என்றபடி. "ஓதியுணர்ந்துவைத்தும் ஜ்ஞாநபலமில்லாமையாலே அவர்கள் நிஷித்தரில் வ்யவஹாரிகளென்று கருத்து" என்ற ஒன்பதினாயிரப்படியும் காண்க.

என் சவிப்பார்—என்ன ஜபம் பண்ணுவது? பகவத்பக்தியில் சிறந்தவர்கள்போல அபிநயங்கொண்டு மூக்கைப்பிடிப்பதும் கையை மூடிக்கொண்டு மௌன மௌன வென்பதுமாக இருந்தாலும் அதுகண்டு ப்ரமிக்கவேண்டா என்கிறார். ஜபிப்பர் என்பதே சவிப்பர் என்று கிடக்கிறது.

மனிசரே=அவர்கள் மநுஷ்ய கோடியில்தான் சேர்வர்களோ? "மானிடவரல்லரென்று என்மனத்தேவைத்தேனே" என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்திற்கு இதுவே மூலம். (௬)

மனிசரும்மற்றும்முற்றுமாய் மாயப்பிறவிபிறந்த*
தனியன்பிறப்பிலிதன்னைத் தடங்கடல்சேர்ந்த பிரானை*
கனியைக்கரும்பினின்சாற்றைக் கட்டியைத்தேனையமுதை*
முனிவின்றியேத்திக்குனிப்பார் முழுதுணர்நீர்மையினரே. (௭)

மனிசரும் மற்றும்	மநுஷ்ய யோநியாயும் தேவயோநியாயும்	இன் கரும்பின் சாற்றை	மதுரமான கருப்பஞ் சாறுபோன்றவனும்
முற்றும் ஆய்	மற்றுமுள்ள ஸகல யோனியாயும்	கட்டியை	கற்கண்டுபோன்றவனும்
மாயம் பிறவி பிறந்த	ஆச்சரியமான பிறவிகளில் பிறந்தருளின	தேனை	தேன்போன்றவனும்
தனியன்	ஒப்பற்றவனும்	அமுதை	அம்ருதம் போன்றவனுமான எம்பெருமானை
பிறப்பு இலி தன்னை	கருமமடியான பிறப்பு இல்லாதவனும்	முனிவு இன்றி	வெறுப்பு இல்லாமல் [மிக்க உவப்புடனே]
தடம் கடல் சேர்ந்த பிரானை	விசாலமான திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளும் பெருமானும்	ஏத்தி	துதித்து
கனியை	கனிபோன்றவனும்	குனிப்பார்	நர்த்தனம் செய்பவர்கள்
		முழுது உணர் நீர்மையினார்	ஸர்வஜ்ஞர்களென்று கொண்டாடத் தக்கவர்கள்.

* * * [மனிசரும்மற்றும்.] மநுஷ்யாதி ரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளின எம்பெருமானுடைய பரமபோக்யதையை அநுஸந்தித்துப் பரவசராயிருக்குமவர்கள் தாம் எல்லா அறிவின்பலனும் கைவந்திருக்குமவர்களென்கிறாரிப்பாட்டில். மநுஷ்யரும் மற்ற தேவஜாதியும் அல்லாத திர்யக் ஜாதியுமெல்லாமாய்க் கொண்டு ஆச்சர்யமான அவதாரங்களைப் பண்ணி, எல்லாரோடும் ஸஜாதீயனாயிருக்கச் செய்தே மிகவும் விலக்ஷணனான அத்விதீயனாய், அந்த வைலக்ஷண்யத்திற்கு ஹேதுவான கர்மாதீந ஜந்மராஹித்யத்தையுடையனாய், அவதாரார்த்தமாக விசாலமான திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளுமவனாய், கோதற்ற இனிய கருப்பஞ்சாறும் கற்கண்டும் தேனும் அமுதமும்போலே போக்யதை தானே வடிவெடுத்தவனை எம்பெருமானை உகந்து துதித்துக் கூத்தாடுமவர்கள் ஸகலசாஸ்திரங்களின் ஸாரப் பொருள்களையும் அறிந்தவர்களென்று கொண்டாடுதற்குரியர் என்றதாயிற்று.

ஆழ்வானருளிச் செய்த வரதராஜஸ்தவத்தில் "ஸுரஸு மநுஜேஷ்வந்யேஷு ... ஸஜாதீயதயா ... விபவாவதாரம் ..." இத்யாதி ஸ்ரீஸூக்தி இந்தப் பாசுரத்தின் ஒருபகுதியை உட்கொண்டது என்னலாம்.

இரண்டாமடியில் பிறப்பிலிதன்னை என்றிருப்பது முதலடிக்கு விருத்தமாயிருக்கின்றதே! என்று சிலர் சங்கிக்கக்கூடும்; பிறக்கின்றானென்று சொல்லிக்கொண்டே பிறப்பிலியென்கைக்குக் கருத்து யாதெனில்;—நாமெல்லாம் கருமமடியாகப் பிறப்பது போலே பிறவாதவன்—தன்னுடைய அநுக்ரஹமே காரணமாகப் பிறப்பவனேயன்றிக் கருமமடியாகப் பிறவாதவன் என்கை. (அன்றியே) 'எங்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய் இமையோர் தலைவா" என்கிறபடியே நமக்காகப் பல பல பிறவிகளெடுத்தும் பரிச்ரமங்கள் பட்டும் நம்மிடத்துள்ள வ்யாமோஹாதிசயத்தினால் 'இவர்களுக்குநாம் ஒன்றுஞ் செய்யவில்லையே, நாம் ஒரு பிறவி

யும் பிறக்கவில்லையே' என்று நினைப்பவனாகையாலே அப்படிப்பட்ட அவன் கருத்தாலே பிறப்பிலி யென்றதாகவுமாம்.

தனியன் என்பதற்கு ஈட்டிலருளிச் செய்யும்பொருள் பரமபோக்யம்; அவ்விடத்து ஸ்ரீஸூக்தி காண்மின்; — "[தனியன்.] இப்படி யவதரித்தால் போமன்று உடுத்த வொலியலோடே யாயிற்று போவது. இவ்வவதார பரம்பரைகளில் ராமாவதாரமொன்றிலும் நாலிரண்டுபேர் கூடப்போனார்களென்று நீட்டோமித்தனை. இவன் நமக்காகப் பிறந்தானென்று நினைக்கைக்கும் ஒருவருமில்லாதிருக்கிறதிறே; பிறந்தானென்று அதுதன்னையே குற்றமாக உபபாதிப்பாரேயிறே யுள்ளது" என்பதாம்.—எத்தனை அவதாரங்களெடுத்தும் என்ன சேஷ்டிதங்கள் செய்தும் தன்பாலீடுபட்டுத் தன்னோடு இணங்குவாரில்லாமே தான் தனியாயே நிற்பவன் என்று தாற்பரிய மருளினாராயிற்று.

தடங்கடல் சேர்ந்தபிரானை யென்பதற்கு ஈடு—"இவர்கள் பிறவியென்னும் பெருங்கடலைப் போக்குகைக்கிறே அவன் கடலிலேவந்து கிடக்கிறது."

முனிவு இன்றி = பகவத் குணங்களைக் கேட்டால் பொறாமைப்படுவார் பலருண்டு; "கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியுமாகப் பெற்றான், பற்றியுரலிடையாப்பு முண்டான் பாவிகாளுங்களுக் கேச்சுக்கொலோ" என்று ஆண்டாளருளிச் செய்கிறபடி சிசுபாலன் பிறந்த லக்னத்திலே பிறவாமல் என்றபடி. 'முனிவின்றி' என்பதற்கு முநித்வமில்லாமல் என்றும் பொருள் பணிப்பர். முநித்வமாவது மநநசீலத்வ பர்யாயமாகையாலே ஒருவகையான அங்க சேஷ்டையும் செய்யாதிருத்தலைச் சொன்னபடியாகும். அது இன்றி என்றது—அங்க சேஷ்டைகளைச் செய்துகொண்டு என்றவாறு. ஜ்ஞாநாதிக்யத்திற்குப் பலன் பகவத் குணங்களிலீடுபட்டு ஸம்ப்ரமிப்பதேயாம் என்பதை முழுதுணர் நீர்மையினாரே என்பதனால் காட்டினர். ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றவர்களாயிருந்தாலும் பகவத் குணாநுபவத்தில் விகாரமடையா திருந்தார்களாகில் அவர்களே அஜ்ஞர்கள். ஒரு சாஸ்த்ரமும் கற்றிலராயினும் பகவத் குணாநுபவத்தில் மனமொழி மெய்களால் விகாரப்படுவார்களாகில் அவர்களே ஸர்வஜ்ஞர்கள்—என்பது ஆழ்வாருடைய ஸித்தாந்தமென்க. ... ... (கூ)

நீர்மையில்நூற்றுவர்வீய ஐவர்க்கருள்செய்துநின்று *
பார்மல்குசேனையவித்த பரஞ்சுடரைநினைந்தாடி *
நீர்மல்குகண்ணினராகி நெஞ்சம்குழைந்துநையாதே *
ஊன்மல்கிமோடுபருப்பார் உத்தமர்கட்கென்செய்வாரே? (எ)

நீர்மை இல்	ஈர நெஞ்சு இல்லாதவர்களான	அருள் செய்து நின்று	கிருபை பண்ணி
நூற்றுவர்	துரியோதனன் முதலிய நூறுபேரும்	பார் மல்கு சேனை அவித்த	பூபாரமாயிருந்த சேனைகளைத் தொலைத்தருளின
வீய	மாளும்படியாக,		
ஐவர்க்கு	பஞ்ச பாண்டவர்களுக்கு	பரம் சுடரை	பரஞ்சோதியான பெருமானை

நினைந்து	தியானம் பண்ணி
ஆடி	கூத்தாடி
நீர் மல்கு கண்ணினர் ஆகி	ஆனந்தக் கண்ணீர் நிறைந்த கண்களை யுடையவராகி
நெஞ்சம் குழைந்து நையாதே	நெஞ்சுருகி நையாமல்
ஊன் மல்கி	உடல் தடித்து
மோடு பருப்பார்	வயிறு பருப்பவர்கள்
உத்தமர்கட்கு	பாகவதோத்தமர்களுக்கு
என் செய்வார்	யாது செய்வார்?

• • • [நீர்மையில்.] அடியவர்களான பாண்டவர்களின் விரோதிகளைப்போக்கின எம்பெருமானுடைய திருக்குணங்களை அநுஸந்தித்து ஈடுபடமாட்டாதவர்கள் *பெற்றதாயர் வயிற்றினைப்பெருநோய் செய்யவே பிறந்தவர்களென்கிறு ரிப்பாட்டில், கண்ணபிரான் மூந்துறமுன்னம் ஸஞ்ஜயனை யனுப்பிப் பின்பு தான் நேரிற் சென்று பாண்டவர்களையும் கௌரவர்களையும் சேரவிடலாமோ என்று பார்த்தவிடத்து, அந்த நூற்றுவர் ஒருபடியாலும் இசையாதே 'எங்கள் உறவினரும் ஜீவித்து நாங்களும் ஜீவிப்பதென்பதில்லை; அவர்களுக்கு ஒரு குடியிருப்பும் கொடுக்கமாட்டோம்; நாங்கள் பலராகையாலே பூமிப்பரப்படங்கலும் எங்களுக்கே இடம்போருமத்தனை; அவர்களுக்கு க்ருஷ்ணனும் தருமமும் உண்டு; அதற்குப் பலனான ஸ்வர்க்கத்தை அவர்கள் அநுபவிக்கக் கடவர்கள்; நாங்கள் பூமியை ஆள்வோம்' என்று வெட்டொன்று துண்டிரண்டாக வார்த்தை சொல்ல, ஒருபடியாலும் அவர்கள் இசையக் காணாமையாலே இனி இவர்களைத் தொலைப்பது தவிர வேறு வழியில்லையென்றுகொண்டு நூற்றுவர் வீய ஐவர்க்கு அருள்செய்து நின்றான் கண்ணபிரான்; அது இங்கு முதலடியிற் கூறப்பட்டது.

"பந்துக்களும் ஜீவித்து நாங்களும் ஜீவிப்பதென்பது கிடையாது" என்று நூற்றுவர் சொல்லவே அதுவே காரணமாக அவர்கள் நிக்ரஹத்திற்கு இலக்காயினர்; பாண்டவர்களோ வென்னில் "பந்துக்கள் ஜீவித்தாலொழிய நாங்கள் ஜீவிக்கமாட்டோம்" என்று சொன்னவர்களாதலால் அதுவே காரணமாக அவர்கள் அநுக்ரஹத்திற்கு இலக்காயினர் என்றுணர்க.

பார்மல்கு சேனை அவித்த = பூமிக்கு ஸர்வம்ஸஹா என்று பெயர் இருந்தாலும் புண்யாத்மாக்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும் அவர்களையெல்லாம் தாங்குவது பஞ்சுச் சுருளையைத்தாங்குவது போன்றிருக்கும்; பாபிகளைத்தாங்குவது இரும்பு மூட்டைகளைத் தாங்குவது போன்றிருக்கும் என்று நூல்கள் கூறுதலால் துரியோதனாதியர் பூமிக்குப் பெரும் பொறையாக இருக்கவே அவர்களைத் தொலைத்துப் பூமிக்கு உதவி செய்தமை இங்கு அறியத்தக்கது

[பரஞ்சுடரை] ஆச்ரிதவிரோதிகளைத்தொலைத்ததனால் திருமேனி புகர்பெற்று விளங்கினபடி. அல்லது, * பற்றலர்வீயக் கோல்கையில்கொண்டு பார்த்தன்றன் தேர்முன்நின்றகாலத்து ஸாரத்ய வேஷத்தின் வைலக்ஷண்யத்தில் திருவுள்ளஞ் சென்று பரஞ்சுடரை என்றுரென்னவுமாம். முமுக்ஷுப்படியில் சரம ச்லோகத்திலுள்ள மாம் என்ற பதத்தை வியாக்கியானித்தருளுமிடத்து—"கையும் உழவு கோலும் பிடித்தசிறுவாய்க்கயிறும் ஸேநாதூளி தூஸரிதமான திருக்குழலும்

தேருக்குக்கீழேகாற்றின திருவடிகளுமாய் நிற்கிற ஸாரத்ய வேஷத்தை மா மென்று காட்டுகிறான்" என்றருளிய ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை நினைப்பதாவது "இவனுடைய ஆச்ரித பாரதந்த்ரியம் இருந்தவாறு என்னே!" என்று நெஞ்சுளுத்துக் கிடப்பதாம். அங்ஙனம் அநுஸந்தித்தவாறே உடல் இருந்தவிடத்தே யிருக்கமாட்டாமல் ஆடும்; கண்களினின்று நீர் வெள்ளமிடும்; நெஞ்சு குழைந்து கரையும். இங்ஙனமாகாமே மாம்ஸ பர்வதமென்னும்படி சரீரத்தைப் பருக்கடித்துத் திரியுமவர்கள் அந்த வுடல்கொண்டு லோகோபகாரம் என்ன செய்யப்புகுகிறார்கள்!

உத்தமர்கட்கு என் செய்வாரே?=எப்போதும் பகவத் குணங்களை அநுஸந்தித்துக்கொண்டு வார்ந்து வடிந்த சரீரங்களையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பகவத்குணாநுபவத்திலே உசாத் துணையாயிருக்கப் போகிறார்களோ? "𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍—மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்" என்று கீதையிற் சொன்னபடி ஒருவர்க்கொருவர் உசாவிப் போதுபோக்குவதன்றோ பிறவிக்குப்பயன்; அந்தப்பயனைப் பெறமாட்டாத பாவிகளாவதே! என்று வெறுத்துரைக்கிறபடி. இங்கே நம்பிள்ளையீடு;— "ஜன்மத்துக்குப்ரயோஜநம் வைஷ்ணவர்களுக்கு உறுப்பாமதுவே யென்றிருக்கிறார்; ஈச்வரன் தன்னையும் தன்விபூதியையும் ததீய சேஷமாக்கியிறே வைப்பது" என்பதாம்.

இங்கேயொரு இதிஹாஸமும் அருளிச்செய்யப்படுகிறது. அதாவது— கூரத்தாழ்வானும் பெரியநம்பியும் சோழராஜஸபைக்கு எழுந்தருளி "ஶிவாத் பரதரம் நாஸ்தி" என்றதற்கு "த்ரோணமஸ்தி தத:பரம்" என்று கையெழுத்திட்டபோது பெரியநம்பிக்கு ப்ராணாந்தமான ஆபத்து நேர்ந்தது. அப்போதுசிலர் 'அநாதப்ரேத ஸம்ஸ்காரம் பண்ணப்பெற்றால் மிக்கஸுக்ருதமுண்டு' என்ற கேள்வியறிவினால் பெரியநம்பிக்கு ஸம்ஸ்காரம் செய்து ஸுக்ருதம் பெறலாமென்றெண்ணி அவ்விடத்தேவந்து பார்க்கையில், அங்கு ஆழ்வானெழுந்தருளி யிருப்பது கண்டு தங்களுக்கு அங்குக்காரியமொன்று மில்லாமையுணர்ந்து திரும்பிப்போகையில், ஒருவரையும் ஒரு குறைசொல்லியறியாத கூரத்தாழ்வான் அவர்களை நோக்கி இங்ஙனே கூறினாராம்—"பயல்களே! வைஷ்ணவனுமாய் ஒருவனுமில்லாதானொருவனைத் தேடி ஸம்ஸ்காரம் பண்ணப் பார்க்கிறீர்களோ நீங்கள்? ஈச்வரனும் ஈச்வரவிபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித்கரிக்கவிருக்க, வைஷ்ணவனுமாய் ஒருவனுமில்லாதானுமா யிருப்பானொருவனை எங்ஙனே தேடிப்பெறுவீர்கள்?" என்றாராம்.

இந்த இதிஹாஸம் இங்கு எதற்காக அருளிச் செய்யப்பட்டதென்னில்; உத்தமர்கட்கு என்செய்வாரே என்ற விடத்திற்கு வியாக்கியான மருளிச்செய்யா நின்ற நம்பிள்ளை "ஈச்வரன் தன்னையும் தன்விபூதியையும் ததீய சேஷமாக்கியிறே வைப்பது" என்றருளிச் செய்தார்; அவ்வர்த்தத்திற்கு ஆப்தஸம்வாதமாக ஆழ்வானுடைய வார்த்தையை உதாஹரிக்கவேண்டி இந்த ஐதிஹ்யத்தையருளிச்

செய்தாரென்க. "ஈச்வரன் தன்னையும் தன்விபூதியையும் ததீய சேஷமாக்கி வைக்கிறான்" என்கிற. இதனையருளிச்செய்யத்தான் மூலத்தில் என்ன ப்ரஸக்தியுள்ளதெனில்; "ஞானமல்கி மோடுபெருப்பார் உத்தமர்கட்கு என்செய்வாரே" என்றதில் தொனிக்கும்பொருள் அது. உத்தமர்கட்கு எம்பெருமானே தானும் தன் விபூதியுமாய்க் கிஞ்சித்கரிக்க ஸஜ்ஜனாயிருக்க, சிலபாபிகள் அந்த பாக்யமிழந்தார்களாவதே! என்ற அநுதாபத்தின்மேல் அது வக்தவ்யமாயிற்று. (எ)

வார்புனலந்தணருவி வடதிருவேங்கடத்தெந்தை *
பேர்பலசொல்லிப்பிதற்றிப் பித்தரென்றேபிறர்கூற *
ஊர்பலபுக்கும்புகாதும் உலோகர்சிரிக்கநின்றாடி *
ஆர்வம்பெருகிக்குனிப்பார அமரர்தொழப்படுவாரே. (அ)

வார் புனல் அம் தண் அருவி	சிறந்த தீர்த்தங்களையுடையதும் அழகிய குளிர்ந்த அருவிகளையுடையதுமான	புகாதும்	அங்குப் புகாமலும் [பலபேர்களுடைய ஸன்னிதானத்திலும் அஸன்னிதானத்திலும் என்றபடி.]
வட திரு வேங்கடத்து	வடக்குத் திருமலையில் நிற்கிற	உலோகர் சிரிக்க	உலகர்கள் சிரிக்கும்படியாக
எந்தை	எப்பெருமானுடைய	ஆடி நின்று	நர்த்தனஞ் செய்து கொண்டிருந்து
பல பேர்	பல திருநாமங்களையும்	ஆர்வம் பெருகி	ஆசை விஞ்சி
சொல்லி பிதற்றி	வாய்வந்தபடி சொல்லி	குனிப்பார்	கோலாஹலஞ் செய்பவர்கள்
பித்தர் என்றே பிறர் கூற	'அவர்கள் பைத்தியக்காரர்கள்' என்றே பிறர் சொல்லுமாறு	அமரர்	நித்யஸூரிகளாலே
ஊர் பல புக்கும்	பல ஊர்களிலே புகுந்தும்	தொழப் படுவார்	வணங்கப்படுவர்கள்.

* * * [வார்புனல்] ஸம்ஸாரபூமியில் இருந்துவைத்து எப்போதும் திருவேங்கடமுடையானுடைய திருக்குணங்களில் ஈடுபடுமவர்கள் * அயர்வறுமமரர்களிலும் சீரிய ரென்கிறார். இங்குத் திருவேங்கடத்தை யெடுத்தது திவ்யதேசங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணமாகும். "அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி: ப்ரீணிஷே ஹ்ருதயாளுபிஸ் தவ ததச் சீலாஜ் ஜடீயூயதே = அர்ச்ச்யஸ் ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி: ப்ரீணிஷே ஹ்ருதயாளுபிஸ் தவ ததச் சீலாஜ் ஜடீயூயதே." (ஸ்ரீரங்கராஜஸ்தவம்.) என்கிறபடியே சீலகுணத்திற்கு எல்லை நிலமான அர்ச்சாவதார நிலைமைகளில் ஈடுபட்டு, பித்தரென்றே பலரும் பேசும்படியான நிலைமையை யடைந்து ஒவ்வொரு திவ்யதேசத்து எம்பெருமான்களின் திருநாமங்களையும் வாயாரச் சொல்லி ஸம்பிரமித்துக் கூத்தாடுமவர்கள் நித்யாநுபவபரரான நித்யஸூரிகளுக்கும் கௌரவிக்க வுரியர்கள் என்றதாயிற்று.

பேர்பல சொல்லிப்பிதற்றி = புகழுநல் லொருவனென்கிற கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகள் விஷயமாகத் தாம்

பேசின பாசுரங்களெல்லாம் வகைவகையாக ஒவ்வொருபக்தர்களின் வாயிலும் வெளிவர வேண்டுமென்பது கருத்து.

பித்தரென்றே பிறர்கூற = "பேயரேயெனக்கு யாவரும் யானுமோர் பேயனே" என்ற குலசேகராழ்வார் பாசுரமும், "அத்தா அரியே யென்றுன்னை யழைக்கப், பித்தாவென்று பேசுகின்றார் பிறரென்னை" என்ற திருமங்கை யாழ்வார் பாசுரமும் இங்குக் காணத்தக்கன. "பித்தரென்றே பிறர்கூற" என்று இதை ஒரு விஷயமாக அருளிச் செய்யவேணுமோ வென்னில்; ஸ்ரீவைஷ்ணவர்கள் 'இவன் நம்முடையவன்' என்று அங்கீகரிப்பதிற்காட்டிலும் அவைஷ்ணவராயிருப்பவர்கள் வசைகூறிக் கைவிடுவதே மிகவும் உத்தேச்யமென்பது பெரியோர்களின் கொள்கை. "வைஷ்ணவர்களுடைய விஷயீகாரத்திலும் அவைஷ்ணவர்கள் இகழுகையே புருஷார்த்தமென்று கருத்து" என்றார் நஞ்சீயரும் ஒன்பதினாயிரப்படியில். ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸ்ரீராம கோஷ்டியில் தனக்கு விஷயீகாரம் கிடைக்காமற் போனாலும் அரக்கர் திரளில் தனக்குத் திரஸ்காரம் கிடைத்ததே பரம பாக்யம் என்று நினைக்கும்படியா யிருந்தது.

மிளகாழ்வான்விஷயமான ஒரு இதிஹாஸம் இங்கு சுட்டில் காட்டப்பட்டுள்ளது; அதாவது—அரசன் பலபேர்களுக்கு க்ராமபூமிகள் தானம் செய்வதாக மிளகாழ்வான் கேள்விப்பட்டுத்தாமும் தானம் பெறச் சென்றாராம். உமக்குத் தானம் கொடுப்பதில்லை யென்று அரசன் சொல்ல, அது கேட்ட மிளகாழ்வான் "ப்ரபுவே! எனக்குமாத்திரம் கொடுக்கமுடியாதென்கைக்குக் காரணமென்ன? வேதமோ சாஸ்த்ரமோ எதில் பரீக்ஷை பண்ணினாலும் நான் பரீக்ஷை கொடுக்க ஸஜ்ஜனாயிருக்கிறேன்" என்றாராம். அது கேட்ட அரசன் "உமக்கு அந்த யோக்யதைகள் இல்லையென்று நான் குறைசொல்லவில்லை" என்றான். 'ஆகில் ஏன் தானம் செய்யமாட்டேனென்கிறாய்?' என்று மிளகாழ்வான் கேட்க, "நீர் ஸ்ரீவைஷ்ணவராகையாலே உமக்குக் கொடுக்க நான் விரும்புகின்றிலேன்" என்று அரசன் சொல்ல, உடனே மிளகாழ்வான் பரமானந்தமடைந்து கூத்தாடினாராம். வைஷ்ணவத்வம் ஹேதுவாக அந்த அவைஷ்ணவன் கைவிட்டதுதானே தமக்குப் பரமபுருஷார்த்தமா யிருந்ததாகக் கருதினராம்.

ஊர்பலபுக்கும் புகாதும் = 'குனிப்பார்' என்பதிலே இதற்கு அந்வயம். பலமனிதர்களின் எதிரிலும், ஒருவருமில்லாத விடத்திலும் களித்துக் கூத்தாடுமவர்கள் என்றபடி. பலமனிதர்களின் எதிரில் ஆடுவது எதற்காகவென்னில்; அவர்கள் கண்டு சிரிக்கவேணுமாம்; அந்தச் சிரிப்பே தாளமாகக் கூத்தாடவேணுமாம். அவர்கள் சிரிக்கச் சிரிக்க இவர்களுடைய ஸம்ப்ரமந்ருத்தம் மீதூர்ந்து நடைபெறுமென்க. "ஆர்வம் பெருகி" என்பதனாலும் இது ஸூசிதமென்க.

அமரர் தொழப்படுவோர் = அமரர்களால் தொழப்படுவாரென்றபடி; அமரர்களென்றது இங்கு நித்யஸூரிகளை; அவர்களால் தொழப்படுவரென்றது—அவர்களிற்காட்டில் மிகவும் சிறந்தவர்களென்று கூறும் ஸ்தானத்தில் வந்தது. பிரதி

பந்தகங்கள் பல பல நிறைந்த இவ்வுலகிலிருந்து கொண்டு பகவதநுபவம் செய்யுமவர்கள் பிரதிபந்தகம் யாதுமில்லாத நிலத்தில் அநுபவிக்கின்றவர்களிற் காட்டில் சிறந்தவர்களென்பதில் ஸந்தேஹமில்லையன்றோ. "விண்ணுளாரிலுஞ் சீரியரே" என்ற திருவிருத்தமுங் காண்க. ... ... (௮.)

அமரர்தொழப்படுவானை அனைத்துலகுக்கும்பிரானை *
அமரமனத்தினுள்யோகுபுணர்ந்து அவன்தன்னோடொன்றாக *
அமரத்துணியவல்லார்களொழிய அல்லாதவரெல்லாம் *
அமரநினைந்தெழுந்தாடி அலற்றுவதேகருமமே. (௯)

அமரர்	நித்யஸூரிகளினால்	துணிய வல்லார்கள் ஒழிய	கருதுமவர்களான கைவல்ய நிஷ்டர்களைத் தவிர
தொழப் படுவானை	ஸேவிக்கப்படுகிறவனும்	அல்லாதவர் எல்லாம்	மற்ற பேர்களெல்லாரும்
அனைத்து உலகுக்கும் பிரானை	ஸகல லோகங்களுக்கும் சேஷியுமான ஸர்வேச்வரனை	அமர	அநந்யப்ரயோஜனராய்க் கொண்டு
மனத்தினுள் அமர	நெஞ்சிலே ஊன்றியிருக்கும்படி	நினைந்து எழுந்து ஆடி	(அவனை) நெஞ்சிலே யநுஸந்தித்து எங்கும் பரந்து கூத்தாடி
யோகு புணர்ந்து	யோகாப்யாஸத்தைப் பண்ணி	அலற்றுவதே	(துதிகளை) வாய் பிதற்றுவதே
அவன் தன்னோடு ஒன்றாக அமர	(முக்தி தசையில்) அவனோடு இவ்வாத்மவஸ்து ஸமானம் என்னும்படியாக	கருமம்	செய்ய வுரியது.

* * * [அமரர் தொழப்படுவானை] இப்பாசுரத்திற்குப் பொருளுரைக்கும் வகையில் பன்னீராயிரப்படியுரைகாரரான அழகிய மணவாளச்சீயர்தவிர மற்ற வியாக்கியான கர்த்தாக்களியாவரும் ஒரு மிடறாயிருப்பர்கள். உரைகாரர்மாத்திரம் வேறுவகையாக உரையிடுகின்றார். அவ்வகையைப் பின்னர் எடுத்துரைப்போம்.

கைவல்யபுருஷார்த்தத்தில் ஊன்றியிருப்பவர்கள் தவிர மற்றையோரெல்லீரும் ப்ரேமபரவசராய் எம்பெருமானுடைய குணநுபவம் பண்ணிக் களித்துக் கூத்தாடுவதே செய்யத்தக்கது என்கிறாரிப்பாட்டில்—என்கிறவிதுவே திருக்குருகைப் பிரான் பிள்ளான் முதலான ஆசிரியர்களின் திருவுள்ளம்.

ஆறாயிரப்படி ஸ்ரீஸூக்தி காண்மின்;—"அயர்வறுமமரர்களதிபதியாய் ஸர்வலோகேச்வரனாயிருந்த எம்பெருமானைக் கைவல்யார்த்தமாக ஆச்ரயிக்கும் அந்த க்ஷுத்ரரானவர்களொழிய அல்லாதாரெல்லாம் இப்படி யெம்பெருமானை அநுஸந்தித்து ஸம்ருத்திமதராம்படியாக அவனை ஆச்ரயியுங்களென்கிறார்" என்பதாம்.

அமரர்களால் தொழப்படுகின்றவனும் ஸகலலோகங்களுக்கும் சேஷியாயுமிருக்கின்ற எம்பெருமானை நெஞ்சிலே ஊன்றியிருக்கும்படி யோகாப்யாஸத்தைக் கனக்கப்பண்ணி, கடைசியில் அவனோடுஸாம்யம் பெறவேணுமென்று ஆத்மமாத்ரத்தையே விரும்பும் ஸாஹஸிகர்களை யொழிய—கைவல்யத்தில் அகப்படாதே

பகவத்குணங்களுக்குத் தோற்றவர்களெல்லாரும் பகவத்குணங்களை நெஞ்சிலே யுற்றிருக்கும்படி ஸ்வயம் ப்ரயோஜநமாக அநுஸந்தித்துக் கிளர்ந்தாடியலற்றுவதே கர்த்தவ்யம்—என்றாராயிற்று.

“அவன்தன்னோ டொன்றாக அமரத்துணியவல்லார்க ளொழிய” என்ற வளவுக்குப் பொருளுரைப்பதில்தான் அபிப்ராய பேதமுள்ளது. அவன்தன்னோடு ஒன்றாக— அவனோடு ஸாம்யம் பெறும்படியாக; ஆத்மவஸ்து அவனோடொத்த சுத்தியை யுடைத்தாக— என்றபடி.

உரைகாரர் பொருள் கொண்டபடி எங்ஙனே யென்னில்; அவன்தன்னோ டொன்றாக = “நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி” என்று ஓதப்பட்ட பரம ஸாம்யாபத்தியைப் பெறும்படி; அமரத்துணியவல்லார்கள்—நிலைநின்ற அத்யவஸாயத்தைப்பண்ணவல்ல பக்திமான்களும், [ஒழிய] அவர்கள் மாத்திரமேயல்லாமல், அல்லாதவரேல்லாம்— மற்றவர்களுங்கூட என்பதாக. ... ... (௯.)

கருமமுங்கருமபலனுமாகிய காரணன்தன்னை *
திருமணிவண்ணனைச்செங்கண்மாலினைத் தேவபிரானை *
ஒருமைமனத்தினுள்வைத்து உள்ளம்குழைந்தெழுந்தாடி *
பெருமையும்நாணும்தவிர்ந்து பிதற்றுமின்பேதைமைதீர்ந்தே. (௧௦)

கருமமும்	ஸாதந ரூபமான கர்மங்களும்
கரும பலனும்	அக்கருமங்களால் ஸாதிக்கப்படும் பலன்களும்
ஆகிய	தானிட்ட வழக்காம்படி யுள்ள
காரணன் தன்னை	ஜகத்காரண பூதனும்
திரு மணி வண்ணனை	அழகிய மணிபோன்ற வடிவை யுடையவனும்
செம் கண்	செந்தாமரைக் கண்களை யுடையனும்
மாலினை	ஆச்ரித வாத்ஸல்யமே வடிவெடுத்தவனும்
தேவபிரானை	தேவர்களுக்குப் பிரானுமான எம்பெருமானை
ஒருமை	உபாய உபேயங்களில் பேதம் பிறவாதபடி ஒருமைப்பட
மனத்தினுள் வைத்து	நெஞ்சிலே வைத்து
உள்ளம் குழைந்து	மனமுருகி
பெருமையும் நாணும் தவிர்ந்து	அஹங்காரமும் வெட்கமும் இன்றிக்கே
எழுந்து ஆடி	கிளம்பிக் கூத்தாடி
பேதைமை தீர்ந்து	அவிவேகமு மொழிந்து
பிதற்றுமின்	(அவன் குணங்களை) வாய்வந்தபடி சொல்லுங்கள்.

* * * [கருமமும்.] பகவத்குணங்களைக் கேட்டால் விகாரப்படாமலிருக்கு மிருப்பாகிற அவிவேகத்தைத் தவிர்ந்து எல்லீரும் அவனது திருக்குணங்களை யநுஸந்தித்துப் பரவசராய் லஜ்ஜாபிமானங்களைவிட்டு அவனை ஏத்துங்கோ ளென்கிறார் இப்பாட்டில்.

புண்யபாபரூபமான கருமங்களுக்கும் அவற்றின்பலன்களுக்கும் நியாமகனாய் ஸகலஜகத்காரணபூதனாய் நீலமணிவண்ணனாய்ப் புண்டரீகாக்ஷனை எம்

பெருமானை, ப்ரயோஜநாந்தரருசி கலசாத நெஞ்சையுடையராய்ப் பரமபக்தியுக்தராய் அஹங்காரம் முதலிய தோஷங்களற்றவராய் விஷயாந்தரப்பற்று அற்றவர்களாய்க் கொண்டு ஏத்துங்கள் என்றுராயிற்று.

கருமமும் கருமபலனுமாகிய = கருமமென்று புண்யபாபரூப கர்மங்களைச் சொன்னபடி. அவை எம்பெருமான் தானேயாயிருக்கையாவது என்னென்னில்; அக்கருமங்களை அனுஷ்டிப்பவர்கட்கு அந்தர்யாமியாயிருந்து கர்மநிர்வாஹகனாயிருக்கையாம். **கருமபலனும்** தானேயாயிருக்கையாவது—கருமங்களை அனுஷ்டித்தாலும் அவை அசேதநக்ரியையாகையாலே தாமே பயனளிக்கமாட்டாமைபற்றிப் பயனளிப்பவன் பரமசேதநனான தானேயாயிருக்கை.

[**ஒருமைமனத்தினுள் வைத்து**] ஒரு ப்ரயோஜனத்துக்காக வன்றிக்கே நெஞ்சிலேயிருக்கைதானே ப்ரயோஜனமாக நெஞ்சிலேவைத்து—என்று ஈடு. ஒருமை—ஒருபடிப்பட என்றபடி.

பெருமையும்நாணும் தவிர்ந்து = பகவத்குணங்களைக் கேட்டு விகாரப்படுதல் நமக்குத் தகுதியோ என்றிருக்கு மஹங்காரமும், 'பிறரறிய நாம் விகாரமடைவது எங்ஙனே?' என்றிருக்கிற வெட்கமும்தவிர்ந்து என்றபடி. **பேதைமை தீர்ந்து** = பகவத்குணங்களுக்குத் தோற்று விகாரப்படுவதை ஹேயமாகநினைத்திருக்கையாகிற அவிவேகம் நீங்கியென்றபடி. ... (௧௦)

தீர்ந்தவடியவர்தம்மைத் திருத்திப்பணிகொள்ளவல்ல *
ஆர்ந்தபுகழச்சுதனை அமரர்பிரானையெம்மானை *
வாய்ந்தவளவயல்சூழ் தண்வளங்குருகூர்ச்சடகோபன் *
நேர்ந்த வோராயிரத்திப்பத்து அருவினைநீறுசெய்யுமே. (௧௧)

தீர்ந்த	தனக்கே அற்றுத்தீர்ந்த	அமரர் பிரானை	தேவர்களுக்கு ப்ரபுவுமான
அடியவர் தம்மை	பக்தர்களை	எம்மானை	எம்பெருமானை
திருத்தி	விரோதிகள் அற ஸ்வீகரித்து	வாய்ந்த	கிட்டின
பணி கொள்ள வல்ல	(அவர்கள் மூலமாக) நித்ய கைங்கரியத்தைக் கொள்ள வல்லவனும்	வளம் வயல் சூழ் தண் வளம் குருகூர் சடகோபன்—;	
ஆர்ந்த புகழ்	நிறைந்த புகழுடையவனும்	நேர்ந்த	அருளிச் செய்த
அச்சுதனை	அச்யுத னென்னும் திருநாமமுடையவனும்	ஓர் ஆயிரத்து	ஆயிரத்துள்
		இ பத்து	இத்திருவாய்மொழி
		அரு வினை	போக்கவரிய பாவங்களை
		நீறு செய்யும்	பஸ்மமாக்கிவிடும்.

* * * [தீர்ந்தவடியவர்.] இத்திருவாய் மொழிகற்றார்க்கு பகவத்குணாநுஸந்தானத்தினால் ஒரு விகாரம் பிறவாமையாகிற மஹா பாபத்தை இதுதானே போக்குமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. உபாயமும் உபேயமும் அவனே என்கிற திண்ணிய அத்யவஸாய முடையவர்கள் தீர்ந்தவடியவர் எனப்படுவார்.

அவர்களைத் திருத்திப்பணிகொள்ளுகையாவது—விரோதிகளைப் போக்கி அடிமை கொள்ளுகையாம்.

கீதையில் "தேஷாம் ஸததயுக்தாநாம்" என்றவிடத்திற்கு பாஷ்யமருளிச் செய்யாநின்ற எம்பெருமானார்—[ஸததயுக்தாநாம்] எப்போதும் கூடியிருக்க விரும்புகின்றவர்களுக்கு என்று அர்த்தமருளிச் செய்தார்; அது போலவே இங்கும் தீர்ந்தவடியவர்தம்மை என்பதற்கு "தனக்கே அற்றுத்தீரவேணுமென்று ஆசை கொண்டிருக்கின்ற அடியவர்களைத் திருத்தி அடிமை கொள்ளுமவன் என்றுமாம்.

ஆர்ந்தபுகழ் அச்சுதனை = ஆச்ரிதரக்ஷணம் பண்ணித் தான்படைத்தபுகழ் ஒருநாளும் நழுவப்பெறாதவன் என்றபடி. அமரர்பிரானை எம்மானை = தானொருவனுளன் என்று மறியாதவனை * அயர்வறுமமரர்களோடொக்க அடிமை கொண்டவனென்றவாறு. அம்மானை என்று பன்னீராயிரப்படியில் பாடம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக ஆழ்வாருளிச்செய்த ஆயிரத்துள் இப்பதிகம் பகவத்குணாநுஸந்தானத்தினால் விக்ருதராகாதபடி பண்ணும் மஹாபாபங்களை நீறுபடுத்து மென்றாயிற்று. ... ... (௧௧.)

ஐந்தாம் திருவாய்மொழியுரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

𑌗𑍍𑌰𑌾𑌹𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍇𑌭𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌸𑍁𑌰𑌰𑌿𑌪𑍁𑌮𑌥𑌨𑍇 𑌗𑍋𑌕𑍁𑌲𑌤𑍍𑌰𑌾𑌣𑌕𑌾𑌰𑍍𑌯𑍇
[illegible]
[illegible]
[illegible]

1. க்ராஹக்ரஸ்த இபமோக்ஷே. * முதலைச் சிறைப்பட்டுநின்ற கைம்மாவுக்கருள்செய்த * முதலையினால் பிடியுண்ட கஜேந்திராழ்வானைக் காத்தருள்வதிலும்.

2. ஸுரரிபுமதநே. * திண்கழற்காலசுரர்க்குத் தீங்கிழைக்குந்திருமால் * அசுரர்களைத் தொலைப்பதிலும்.

3. கோகுலத்ராணகார்யே. * மலையையெடுத்துக் கன்மாரி காத்துப் பசுநிரை தன்னைத் தொலைவுதவிர்த்த பிரானை * கோகுலத்தைக் காத்தருள்வதாகிற காரியத்திலும்.

4. கோதார்த்த உக்ஷஅவமர்த்தே * வம்பவிழ்கோதை பொருட்டாமால் விடையேழுமடர்த்த. * நப்பின்னைப்பிராட்டிக்காகப் பண்ணின வ்ருஷபமர்த்தநத்திலும்; (இங்கே கோதா என்கிறபிரயோகம் எங்ஙனே பொருந்தும்? ஆண்டாளுக்கன்றோ கோதா என்று திருநாமம். ஆண்டாளைப்பற்றின ப்ரஸ்தாவம் இங்குக் கிடையாதே. நப்பின்னைப்பிராட்டிக்கு கோதாஎன்று திருநாமமில்லையே. மூலத்தில் கோதைபொருட்டா என்றிருப்பதனால் தேசிகன் (மோஹாய) என்று ப்ரயோகித்தருளினார் என்று ஸமாதானம் சொல்வது ஏலாது; மூலத்திலுள்ள கோதைஎன்ற சொல்லுக்கும் மோஹா என்கிற வடசொல்லுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை யென்பதை பிராமாணிகர்களான விவேகிகள் உணர்வர்கள். (நீளாய) என்று அருளிச் செய்திருக்கக்கூடும்; அது (மோஹாய) என்று பாடம் மாறியிருக்கக்கூடும் என்றே மஹான்கள் திருவுள்ளம் பற்றுகின்றார்கள். நப்பின்னைக்கு நீலா என்று திருநாமமிறே.)

5. ஸத்அஹிதமதநே. * சாதுசனத்தை நலியுங்கஞ்சனைச் சாதிப்பதற்கு.* பாகவத விரோதியான கம்ஸனைக் கொன்றொழித்ததிலும்.

6. ஸிந்து பர்யங்கயோகே. * தடங்கடல் சேர்ந்தபிரானை.* திருப்பாற்கடலில் அரவணையில் கண்வளர்ந் தருளினதிலும்.

7. க்ஷோணீபார வ்யபோஹே * ஐவர்க்கருள் செய்துநின்று பார்மல்கு சேனையவித்த, * பாண்டவ பக்ஷபாதியாய் நின்று நூற்றுவரைப் போக்கி மண்ணின் பாரம் நீக்கினதிலும்.

8. க்ஷிதிதரவஸதௌ. * வட திருவேங்கடத் தெந்தை.* திருமலையிலே நின்றருளினதிலும்.

9. நிர்ஜர ஆராத்யதாயாம், * அமரர்தொழப் படுவானை. * அமரர்களாலே ஆராதிக்கப் பெறுகையிலும்.

10. விச்வஆரம்பே ச. * காரணன்றன்னை. * ஸ்ருஷ்டிக்குக் கடவனாயிருக்குமதிலும் [illegible] எம்பெருமான் தன்னுடைய திவ்யமங்களவிக்ரஹ காந்தியாலே பக்தர்களை உந்மத்தராக்கும்படியை ஆழ்வார் ஐந்தாந்திருவாய் மொழியிலருளிச் செய்தாரென்பதாயிற்று.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸ்துத்யேந தாஸ்யவிதிநா ஸ்வரஸோபநீத
ஹர்ஷப்ரகர்ஷவிவஶ: ஸ்வயமேவ ஸ: ।
அக்ஷைரவிக்ருதாந் விநிந்த்ய ஸத்வாந்
ஶௌரேர்குணௌகைர்விக்ருதாந் ப்ரஶஶம்ஸ ஸத்ய: ॥ 25.

(கருத்து.) புருஷார்த்தங்களில் தலைநின்றதாயும் கீழ்த்திருவாய்மொழியில் செய்யப்பட்டதாயுமிருக்கிற வாசிகமான அடிமையினாலே பரமானந்த பரவசரான ஆழ்வார், ஆனந்த ஹேதுக்களான பகவத்குணங்களாலே சிறிதும் விகாரமடையாத மூர்க்கர்களை நிந்தித்தும், விகாரமடைகின்ற ஸத்துக்களை மிகக் கொண்டாடியும் போந்தார் ஐந்தாந்திருவாய்மொழியில் என்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்துவப்பால்
அன்பாலாட் செய்பவரை யாதரித்தும்—அன்பிலா
மூடரை நிந்தித்தும் மொழிந்தருளு மாறன்பால்
தேடரிய பத்திநெஞ்சே செய்.

மொய்ம்பு ஆரும் மாலுக்கு	மிகுந்த ஆற்றலையுடைய ஸர்வேச்வரனுக்கு	அன்பு இலா மூடரை நிந்தித்தும்	பக்தியற்ற மூர்க்கர்களைத் தூஷித்தும்
முன் அடிமை செய்த உவப்பால்	முன் திருவாய்மொழியில் வாசிகமான கைங்கரியம் பண்ணப்பெற்ற ஸந்தோஷத்தினால்,	மொழிந்தருளும்	அருளிச் செய்த
(இதற்கு மொழிந்தருளு மென்பதோடே அந்வயம்.)		மாறன் பால்	ஆழ்வார் விஷயத்தில்
		நெஞ்சே	மனமே!
அன்பால் ஆள் செய்பவரை ஆதரித்தும்	அன்புடனே அடிமை செய்பவர்களைக் கொண்டாடியும்	தேட அரிய பத்தி	வேறு எங்கும் காண முடியாததான [மிகச் சிறந்ததான] பக்தியை
		செய்	செய்யக் கடவை.

* * * புகழுநல்லொருவனென்கோ என்கிற கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானுக்குத் தாம் வாசிகமான கைங்கரியம் செய்யப் பெற்றதனாலுண்டான களிப்பே இந்தத் திருவாய்மொழியாக வடிவெடுத்தது என்னலாம். அந்தக்களிப்பினால் ஆழ்வார் செய்ததாவது— தம்மைப்போலவே எல்லாரும் பகவத்குணங்களில் ஈடுபடவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அப்படி ஈடுபடாதவர்களை நிந்தித்தார்; ஈடுபடுமவர்களைக் கொண்டாடினார். இப்படிப்பட்ட ஆழ்வார்பக்கலில் பக்தி பண்ணவேணுமென்று தமது திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்தாராயிற்று.

செய்த + உவப்பால் = செய்தவுவப்பால் என்று சந்தியாக வேண்டுவது 'செய்துவப்பால்' என்றானது தொகுத்தல்; "தொகுத்தல் வருஞ் செய்யுள் வேண்டுழி" என்பது நன்னூல். ... ... (உரு)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி மூன்றாம்பத்து—ஆறாந் திருவாய்மொழி

செய்யதாமரைக்கண்ணனாய்.

உரையவதாரிகை. — கீழ்த் திருவாய்மொழியில், எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களை நினைந்து கரைந்துருகி நின்றவிடத்தில் நிற்கமாட்டாமே கீர்த்தனம் முதலியன செய்து இதுவே போதுபோக்காக இருக்கும் மஹான்களைக் கொண்டாடியும், இந்நிலைக்கு மாறாக இருக்கின்றவர்களை நிந்தித்தும் பேசினார். அங்ஙனம் தம்மால் நிந்திக்கப்பட்ட பாபிகளையும் கைவிடமாட்டாத மிக்க கருணை வாய்ந்தவரன்றோ ஆழ்வார், அக்கருணையினாலே அந்தப் பாபிகளையும் வழிப்படுத்திக்கொள்ள வேணுமென்று திருவுள்ளம்பற்றி, அன்னவர்களுடைய கல்நெஞ்சிலும் நன்கு பதியுமாறு எம்பெருமானுடைய சிறந்த திருக்குணங்களை எடுத்துக்கூற விரும்பிய ஆழ்வார் இத் திருவாய்மொழியில் அப்பெருமானது ஸௌலப்ய குணத்தை யெடுத்துரைக்கின்றார்.

முதற்பத்தில் * பத்துடை யடியவர்க்கெளியவன் என்ற திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஸௌலப்யகுணம் பேசப்பட்டிருந்தாலும் இப்போது இங்குப் பேசும் ஸௌலப்யகுணம் அதனிலும் விலக்ஷணமானது. அங்குச் சொன்னது விபவாவதார ஸௌலப்யம்; இங்குச் சொல்வது அர்ச்சாவதார ஸௌலப்யம். இந்த வாசியை மணவாளமாமுனிகளும் நூற்றந்தாதியில் விளக்கியுள்ளார்; "பத்துடையோர்க்கென்றும் பரனெளியனாம் பிறப்பால்" என்றதையும், "செய்யபரத்துவமாய் ... இந்நிலத்தில் அர்ச்சாவதார மெளிதென்றான்" என்றதையும் நோக்குக.

பகவத் விஷயத்தில் விமுகரானவர்களுங்கூட அபிமுகர்களாகவேணுமென்னும் நசையினால் உபதேசம் செய்ய வொருப்படுகின்ற ஆழ்வாருடைய கருணையின் திறம் மிகவும் பாராட்ட வுரியது. ஆசார்ய ஹ்ருதயத்தில்—"நண்ணாதார் மெய்யிலூனைச் நிர்வேதத்தோடே ஆஸ்திக்யமாத்ரவாதிகள் விஞ்சின ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம் ஸ்வாவயவர்க்கு உளங்கொள் பேசுமளவன்றென்னுமர்த்தத்தை * வம்மின் விரோதமீனச் சொல் எவ்வுயிர்க்கு மறிபவென்று அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்றாமையும் மிக்க க்ருபையுமிறே. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது." என்றருளிச்செய்துள்ள சூர்ணிகைகளின் பொருள் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

இப்பதிகத்திற்கு உயிரான பாசுரம் "தஞ்சமாகிய தந்தைதாயொடு" என்பதாம். அர்ச்சாவதார வைலக்ஷண்யத்தை நிரூபிக்கும் பாசுரம் அதுவேயாம்.

இங்கே அநுஸந்திக்கவுரிய ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—“பரத்வமே தொடங்கி அவதாரங்களிலேவா அவன் குணங்களைச் சொல்லிக்கொண்டு போந்து அர்ச்சாவதார பர்யந்தமான ஸௌலப்ய காஷ்டையை உபதேசிக்கிறார். இப்போது ஸௌலப்யமாகிலுபதேசிக்கப் புகுகிறது, பரத்வமே தொடங்கி உபதேசிக்க வேண்டுவானென்னென்னில்; ‘மேன்மையையுடையவன் தாழநின்றான்’ என்றாலிறே குணமாவது; தாழ்வு ப்ரக்ருதியானவன் தாழநின்றால் ஸ்வரூபமாயித்தனையிறே. இப்படித் தாழநிற்கிறவன் மேன்மையையுடையவனென்கைக்காகச் சொல்லிற்று. உபாயங்களில் ப்ரபத்திபோலே ஸௌலப்யங்களில் அர்ச்சாவதார ஸௌலப்யம். ஜநநிக்கும் ஸ்த்ரீ ஸாமாந்ய மொத்திருக்கச் செய்தே பண்ணுகிற உபகாரங்களை ப்ரத்யக்ஷிக்கையாலும் சாஸ்த்ரஞ் சொல்லுகையாலுமிறே கௌரவிக்கிறது. அப்படியே ப்ராமாணிகனானவனுக்கு ஆச்ரயணீயஸ்தலம் அர்ச்சாவதார மல்லது இல்லையென்று இவ்வளவான ஸௌலப்ய காஷ்டையை உபதேசிக்கிறார்.”

செய்யதாமரைக்கண்ணனாய் உலகேழுமுண்டவவன்கண்டீர் •
வையம்வானம்மனிசர்தெய்வம் மற்றும்மற்றும்மற்றும்முற்றுமாய் •
செய்யசூழ்சுடர்ஞானமாய் வெளிப்பட்டிவைபடைத்தான் • பின்னும்
மொய்கொள்சோதியோடாயினான் ஒருமூவராகியமூர்த்தியே. (க)

செய்ய தாமரை கண்ணன் ஆய்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடையனாய்
உலகு ஏழும்	ஸகலலோகங்களையும்
உண்ட அவன்	(ஒரு சமயத்தில்) திருவயிற்றிலே வைத்து நோக்கினவனாய்
வையம்	பூமியும்
வானம்	விண்ணுலகங்களும்
மனிசர் தெய்வம்	(முறையே அவற்றில் வாழ்கின்ற) மனிதரும் தேவதைகளும்
மற்றும்	மற்ற விலங்குகளும்
மற்றும்	மற்ற ஸ்தாவரங்களும்
மற்றும்	மற்றுள்ள பஞ்ச பூதங்களும்
முற்றும் ஆய்	மற்றுமுள்ள ஸகலமும் (காரணதசையில்) தன்னுள்ளே அடங்கப்பெற்றவனாய்
செய்ய சூழ் சுடர் ஞானம் ஆய்	சிறந்ததும் வியாபகமும் ஒளிமயமுமான ஸங்கல்பஜ்ஞானத்தை யுடையனாய்
வெளிப்பட்டு	ஸ்ருஷ்டியை உத்தேசித்துத் தோற்றி
இவை	முன்சொன்ன இவையெல்லாவற்றையும்
படைத்தான்	ஸ்ருஷ்டித்தவனாய்
பின்னும்	அதற்குமேலும்
மொய் கொள் சோதியோடு ஆயினான்	செறிந்த தேஜோமயமான பரமபதத்தை நிலயமாகவுடையனாயிருக்கின்ற எம்பெருமான்
ஒரு மூவர் ஆகிய மூர்த்தி கண்டீர்	ப்ரஹ்ம விஷ்ணு சிவரூபியாய் நின்று ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிப்பவன் காண்மின்.

* * * [செய்யதாமரைக் கண்ணன்.] புண்டரீகாக்ஷத்வம் ஜகத் காரணத்வம் முதலிய குணங்களையுடைய எம்பெருமானே ஆச்ரயணீய னென்கிறார். இரண்டாம் பாட்டில் “பங்கயத்தடங் கண்ணனைப் பரவுமினோ” என்று வினைமுற்று உள்ளது; அதுவே இப்பாட்டிலும் மாநஸமாக அநுஸந்தேயமாய் இரண்டு பாட்

டுஞ் சேர்ந்து ஏகக்ரியாந்வயி என்பாருமுண்டு; அன்றியே, இப்பாட்டில் வினைமுற்று இல்லையென்று அதனை மேற்பாட்டிலிருந்து வருவித்துக் கொள்ளவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; பகவத்குணங்களில் ஈடுபட்டுப் பேசும்போது வினைமுற்று இல்லாத விடங்களில் ஈடுபாடாகவே கொள்ளுதல் வேண்டும் என்பாருமுண்டு. இந்த ஈடுபாட்டிலிருந்து பரோபதேசம் அர்த்தாத் ஸித்தமாகும்.

இத்திருவாய்மொழி எம்பெருமானுடைய ஸௌலப்யகுணத்தை நிருபணம் செய்யப்பிறந்ததாயினும் முதலில் பரத்வமே பேசப்பட்டு வருகின்றது; பரத்வமுடையவனுடைய ஸௌலப்யமே பாராட்ட வுரியதாகு மென்பதுபற்றி.

சாந்தோக்ய உபநிஷத்தில் “தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ” என்றதைத் திருவுள்ளத்திற் கொண்டு “செய்யதாமரைக் கண்ணனாய்” என்கிறார். மேலெடுத்துக்காட்டிய உபநிஷத் வாக்யத்தின் சீரிய பொருளை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளிச் செய்யாநின்ற எம்பெருமானார் * கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ம்ருஷ்டநால ரவிகரவிகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண: ” என்றருளிச் செய்தார். கப்யாஸம் புண்டரீகம் என்பதற்கு மூன்று வகையாகப் பொருள் கொள்வது ஆசிரியர் உவந்ததாம்.

அதன் விவரணம் வருமாறு:—[கப்யாஸம்.] கம்பிபதீதி கபி:, கபிநா [ஸூர்யேண] அஸ்யதே—விகாஸ்யதே இதி கப்யாஸம். கம் என்று ஜலத்திற்குப் பெயர். அதைப் பானம் பண்ணுகிறவன்—கபி: ஸூர்யன் என்றபடி. அவனாலே மலர்த்தப்படுவது கப்யாஸம்; அப்படிப்பட்ட புண்டரீகம் போன்ற திருக்கண்களை யுடையவன் என்பது ஒரு பொருள். இது எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியில் “ரவிகரவிகஸித” [ரவிகரவிகஸித] என்ற மூன்றாவது விசேஷணத்தினால் காட்டப்பட்ட பொருளென்க.

(இனி இரண்டாவது பொருள்.) முன்னே காட்டிய வ்யுத்பத்தியில் கம்பிபதீதி கபி: (கம் பிபதீதி கபி:) என்கிற வரையில் வ்யுத்பத்தியை அங்ஙனமே கொண்டு “கபௌ ஆஸ்தே இதி கப்யாஸம்” [கபௌ ஆஸ்தே இதி கப்யாஸம்] என்று கொள்வது. இப்போது கபி: என்பதற்கு ஸூர்யன் என்று பொருளில்லை; நாளம் என்பது பொருள்; தாமரையின் நாளமும் ஜலத்தைப் பானம் பண்ணுவதாதலால் அதுவும் கபி: என்னத்தக்கதே; அதன்னில் இருப்பது என்ற பொருளில் கப்யாஸம் என்கிறது. அப்படிப்பட்ட புண்டரீகம் போன்ற திருக்கண்களை யுடையவன் என்றதாயிற்று. நாளத்திலிருந்து பறிக்கப்பட்ட புண்டரீகத்திற்காட்டிலும் நாளத்திலேயே உள்ளதான தாமரை மலர்க்கு ஶோபாதிஶயம் உள்ளதாதல் அறிக. இப்பொருள் எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியில் “ஸம்ம்ருஷ்டநால” [ஸம்ம்ருஷ்டநாள] என்ற இரண்டாவது விசேஷணத்தினால் காட்டப்பட்டது.

(இனி மூன்றாவது பொருள்.) „கே, $ ஹ்ராஸ்தே” ஜலத்தில், ப்யாஸ்தே—இருக்கின்றது என்று பொருள். ஜலத்தை விட்டு நீங்கின தாமரைமலர் ஒளிகுன்றத் தொடங்குமாதலால் அங்ஙனன்றியே ஜலத்திலேயே இருக்கின்றதென்று விசேஷிக்கப்பட்டது. இப்படிப்பட்ட புண்டரீகம் போன்ற திருக்கண்களை யுடையவன் என்றதாயிற்று. இது எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியில் „கம்பீராம்பஸ்ஸமுத்பூத” [கம்பீராம்பஸ் ஸமுத்பூத] என்ற முதல் விசேஷணத்தினால் காட்டப்பட்ட பொருளென்க.

இங்ஙனே உபநிஷத்ஸித்தமான திருக்கண்களுடைமை பரத்வத்திற்கு முக்கியமான சான்றாதலால் "செய்யதாமரைக்கண்ணனாய்" என்று பாசுரந் தொடங்கினரென்க.

வடிவழகில் புண்டரீகாக்ஷத்வம் எப்படியோ, அப்படி ஆத்ம குணங்களில் ப்ரளயாபத்ஸகத்வம் சிறந்ததாதலால் அதனை உலகேழுமுண்டவவன் என்றதனால் அருளிச்செய்கிறார். „அத்தா சராசரக்ரஹணாத்” என்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் பொருள் இங்கே உணரத்தக்கது.

[வையம்வானமித்யாதி.] பூமியும் மேலுள்ள லோகங்களும் அவற்றில் வஸிக்கின்ற மநுஷ்யரும் தேவதைகளும் திர்யக்குக்களும் ஸ்தாவரங்களும் மற்றும் பஞ்ச பூதங்களும் மஹதாதி ஸமஷ்டியும் உண்டாம்படி உபாதாகமாய் என்றபடி.

செய்யசூழ் சுடர் ஞானமாய் = ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டிப்பதற்கு உபயுக்தமான பகவத் ஸங்கல்பத்தின் பெருமை இத்தால் கூறப்படுகிறது. வருத்தமின்றிக்கே வியாபியாநின்ற விசததமமான தன்னுடைய ஸங்கல்பரூபஜ்ஞானத்தாலே படைத்தானென்கை.

வெளிப்பட்டு என்பதை எம்பெருமானோடு அந்வயிப்பதுமுண்டு; இவை என்பதனோடேயே அந்வயிப்பதுமுண்டு; முந்தினபக்ஷத்தில் வெளிப்பட்டு—ஸ்ருஷ்டிக்கு அபிமுகனாய் நின்று தோற்றி என்றபடி. பிந்தின பக்ஷத்தில், வெளிப்பட்டிவை— வெளிப்பட்ட இவற்றைப் படைத்தானென்கை. ப்ரமாண ப்ரதிபந்தங்களான இவற்றை என்றபடி. தொகுத்தல் விகாரம்.

பின்னும் மொய்கொள் சோதியோடாயினான் = செறிந்த தேஜோமயமான திவ்ய தேசத்திலிருப்பைச் சொல்லுகிறது. பரமபத நிலயன் என்றவாறு. [ஒரு மூவராகிய மூர்த்தி.] பிரமனுக்கும் ருத்ரனுக்கும் அந்தர்யாமியாய் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைப் பண்ணி ஸ்வேநரூபேண பாலனத்தைப் பண்ணும் ஸர்வேச்வரன்; பிரமன் ருத்ரன் இந்திரன் ஆகிய மூவரையும் மூர்த்தியாக வுடையவன் என்னவுமாம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானே ஸர்வ ஸமாச்ரயணீயன் என்று காட்டினாராயிற்று. ... ... (க)

$ „வஷ்டி பாகுரிரல்லோபமவாப்யோருபஸர்க்கயோ:” என்ற வியாகரணத்தின்படி (அவி) என்கிற உபஸர்க்கத்தில் முதலெழுத்து லோபித்துள்ளது.

மூவராகியமூர்த்தியை முதல்மூவர்க்கும்முதல்வன்தன்னை *
சாவமுள்ளனநீக்குவானைத் தடங்கடல்கிடந்தான்தன்னை *
தேவதேவனைத்தென்னிலங்கை யெரியெழச்செற்ற வில்லியை *
பாவநாசனைப் பங்கயத்தடங்கண்ணனைப்பரவுமினோ ! (உ)

மூவர் ஆகிய மூர்த்தியை	மூவரும் தானே என்னலாம்படியுள்ளவனாய்	தேவதேவனை	தேவாதி தேவனாய்
முதல் மூவர்க்கும்	(நூல்களில் ஆங்காங்கு முதல்வராகச் சொல்லப்படுகின்ற அந்த இந்திரன் பிரமனீசன் என்ற மூவர்க்கும்	தென் இலங்கை	தென்னிலங்கையில்
முதல்வன் தன்னை	காரண பூதனாய்	எரி எழ	அக்னி தலையெடுக்கும்படி
சாவம் உள்ளன நீக்குவானை	(அவர்களுக்கு நேரும்) துன்பங்களை யெல்லாம் போக்குபவனாய்	செற்ற	பகைவரை அழித்த
தட கடல்	விசாலமான திருப்பாற்கடலில்	வில்லியை	சார்ங்கத்தையுடையவனாய்
கிடந்தான் தன்னை	கண்வளர்ந்தருள்பவனாய்	பாவநாசனை	பரம பாவனனாய்
		பங்கயம் தட கண்ணனை	தாமரை போன்று பரந்த திருக்கண்களையுடையவனான எம்பெருமானை
		பரவுமின்	புகழ்ந்து பாடுங்கள்.

* * * [மூவராகிய மூர்த்தியை.] கீழ்ப்பாட்டில் நிரூபித்த பரத்வத்தைக் கேட்டவர்கள் 'இப்படிப்பட்ட பராத்பரனானவனை நாங்கள் ஆச்ரயிக்க எங்ஙனே கூடும்?' என்று சங்கிக்க, உப்படிப்பட்டவன்தானே உங்களோடு ஸஜாதீயனாய் சக்ரவர்த்தி திருமகனாய் வந்து அவதரித்தான் என்று அவதார வெளிமையை இப்பாட்டில் உணர்த்துகின்றார்.

"மூவராகிய மூர்த்தியை" என்பது கீழ்ப்பாசுரத்தின் அநுபாஷணம். இது அந்தாதித் தொடைக்குச் சேர அமைந்த அநுபாஷணமென்று கொள்ளவேண்டா; "மூவராகிய மூர்த்தி" என்றதனால் ஸ்வரூபைக்யம் சொல்லுகிறது என்று சிலர் மயங்குதற்கு இடமுண்டாதலால் அந்த மயக்கத்திற்கு இடமறும்படி அருளிச் செய்வதற்காகவே அநுபாஷணம் செய்கிறபடி. "முதல் மூவர்க்கு முதல்வன்தன்னை" என்று அடுத்தபடியாக ஸ்பஷ்டமாயருளிச்செய்கையாலே மூவராகிய என்றவிடத்துள்ள அபேத நிர்த்தேசம் கார்யகாரணபாவ ப்ரயுக்தமென்று தெளிபக்கடவது.

முதல் மூவர் = அரி அயன் அரன் என்ற மூவர்; அயனுக்கும் அரனுக்கும் முதல்வன் என்றால் ஒக்கும்; அரியையும் சேர்த்து அவனுக்கும் முதல்வன் என்றால் எங்ஙனே பொருந்தும் என்று ஒரு சங்கையுண்டாகும்; இங்கே நம்பிள்ளை அருளிச்செய்கிறார் காண்மின்;—"தான் இவர்களுக்குக் காரணபூதனானவோபாதி தனக்கு அவ்வருகு காரணாந்தரமின்றிக்கே யிருக்குமென்றபடி; * ஆதிதேவாய என்கிறபடியே."—தனக்கும் தானே காரணபூதனென்றதனால் தனக்கு வேறு காரணபூதனில்லை யென்பது பெறப்படும் என்றதாயிற்று.

அன்றியே, „ வஸுஹாவஸபிவஷேஷு: ” என்ற பிரமாணத்தின்படி இந்திரனைக் கூட்டி மூவர் என்றதாகக் கொண்டால் சங்கைக்கே உதயமில்லை.

சாபமுள்ளன நீக்குவானை = அம்மூவர்க்கும் நேர்ந்த கஷ்டங்களைப் போக்குமவன் என்கை. பிரமன் வேதங்களைப் பறிகொடுத்துத் தவித்துநிற்க அவ்வாபத்தைப் போக்கினதும், சிவன் தகப்பன் தலையைக் கிள்ளியெறிந்த பாவத்தினால் தடுமாறிநிற்க அவ்வாபத்தைப் போக்கினதும், இந்திரன் அஸுர பாதையினால் வருந்திநிற்க அவ்வாபத்தைப் போக்கினதும் இங்கு அநுஸந்தேயம்.

எம்பெருமான் ஆதிகாலத்தில் நான்முகனைப் படைத்து, பிரளயகாலத்தில் மறைந்துகிடந்த வேதங்களைப் பிரகாசப்படுத்தி அவனுக்கு உபதேசித்து அநுக்ரஹிக்க, அப்பிரமன் அந்த வேதங்களைக் கண்ணாகக்கொண்டு விச்வஸ்ருஷ்டியைச் செய்ய ஆரம்பித்தபொழுது பகவானிடத்தினின்று ரஜஸ்தமோ குணங்களின் வடிவமாகத்தோன்றிய மதுகைடபர்களென்னும் இரண்டு அஸுரர்கள் அந்த வேதபுருஷர்களை அபஹரித்துக்கொண்டு கடலினுட்புகுந்து பாதாள லோகத்திற்குப் போய்விட்டார்கள்; வேதங்களைப் பறிகொடுத்த நான்முகன் இன்னது செய்வதென்று தோன்றாது திகைத்து நெடுங்காலம் ‘கண்ணிழந்தேன் தனமிழந்தேன்’ என்று கதறியழுது பிறகு சிறிது தெளிந்து எம்பெருமானைத் துதிக்க, ஹயக்ரீவ ரூபியாக எழுந்தருளிப் பாதாளத்திற் சென்று மதுகைடபர்களை ஸம்ஹரித்து வேதங்களை மீட்டுக்கொணர்ந்து பிரமனுக்கு அளித்தனன் என்பது முதலான இதிஹாஸங்களினால் பிரமனது கஷ்டத்தைப் போக்கினமை உணரத்தக்கது.

ஒருகாலத்திலே பரமசிவன், தன்னைப்போலவே பிரமனும் ஐந்துதலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குவதற்கு இடமாயிருக்கின்றதென்று நினைத்து அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன் கையில் ஒட்டிக்கொள்ளுதலும், அவன் ‘இதற்கு என் செய்வது?’ என்று கவலைப்பட, தேவர்களும் முனிவர்களும் ‘இப்பாவந் தொலையப் பிச்சை யெடுக்க வேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறையுமோ அன்றைக்குத்தான் இது கையை விட்டு அகலும்’ என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ் சென்று பிச்சை யேற்றுக்கொண்டே வருந்தித்திரிந்தும் அக்கபாலம் நீங்காதாக, பின்பு ஒருநாள் பதரிகாச்ரமத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள நாராயண மூர்த்தியை யடைந்து வணங்கி இரந்தபோது அப்பெருமான் ‘அக்ஷயம்’ என்று பிச்சையிட, உடனே அது நிறைந்து கையை விட்டகன்றது— என்பதுமுதலான இதிஹாஸங்களினால் சிவபிரானது கஷ்டத்தைப் போக்கினமை உணரத்தக்கது. இந்திரனுடைய கஷ்டங்களைப் போக்கின வரலாறுகள் எண்ணிறந்தவை.

தடங்கடல் கிடந்தான் தன்னை = இன்னமும் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் யார்க்கேனும் நேர்ந்தால் விரைந்துவந்து காரியஞ்செய்தற்காகக் கடலிலிடங்

கொண்டானாயிற்று. அந்தக் கிடையழகில் ஈடுபட்டுப் பிரமன் முதலிய தேவர்கள் அங்கு வந்து துதிக்கின்றமை பற்றித் தேவதேவனை என்றார்.

தென்னிலங்கை யெரியெழச் செற்ற வில்லியை = அக்கியான்று ராவண பயத்தாலே புகமாட்டாமலிருந்த ஊரிலே அந்த அக்கியைத் தான் நினைத்தபடி வியாபரிக்கப் பண்ணவல்ல வில்வலியை யுடையவனென்கை.

பாவநாசனை = கையும் வில்லுமாயிருக்கிற படியைக் கண்டவளவிலே அனைவருடைய பாவமும் தொலையுமென்க. உத்தர ஸ்ரீராமாயணத்தில் அகஸ்த்யர் ஸ்ரீராமபிரானை நோக்கி „ வாவஅ லஸவ-லோகாநாம் கூவெவ ரவாநஜந— பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந " என்று சொன்னது இங்கு அறியத்தக்கது.

பங்கயத்தடங்கண்ணனைப் பரவுமின் = பாவங்களைத் தொலைப்பவனன்றியே பாவங்களை வளர்ப்பவனானாலும் திருக்கண்ணழகுக்குத் தோற்க வேண்டும்படியன்றோ உலகமெல்லாமிருப்பது; அப்படிப்பட்ட பெருமானைத் துதித்துத் தொழுங்கள் என்றாராயிற்று. ... ... (உ)

பரவிவானவரேத்தநின்ற பரமனைப்பரஞ்சோதியை *
குரவைகோத்தகுழகனை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
அரவமேறிஅலைகடலமரும் துயில்கொண்டவண்ணலை *
இரவுநன்பகலும்விடாது என்றுமேத்துதல்மனம்வைம்மினே. (ஙு)

வானவர்	தேவர்கள்	அலை கடல்	அலையெறிகின்ற திருப்பாற்கடலில்
பரவி ஏத்த நின்ற	வாயாரத் துதிக்கும்படி அமைந்த	அமரும் துயில் கொண்ட	பொருத்தமான நித்திரையைக் கொண்டவனை
பரமனை	பராத்பரனாய்	அண்ணலை	பெருமானை
பரம் சோதியை	மேலான ஒளியுருவனாய்	நல் இரவும் பகலும்	நல்ல இரவும் பகலும்
குரவை கோத்த	(கோபிமார்களோடு) ராஸக்ரீடை செய்த	விடாது	இடையறாமல்
குழகனை	ரஸிகனாய்	என்றும் ஏத்துதல்	என்நாளும் தோத்திரம் பண்ணுதலில்
மணி வண்ணனை	நீலமணிவண்ணனாய்	மனம் வைம்மின்	சிந்தை செலுத்துங்கள்.
குடக்கூத்தனை	குடக்கூத்தாடினவனாய்		
அரவம் ஏறி	சேஷசயனத்தின் மீதேறி		

* * * [பரவிவானவர்.] கீழ்ப்பாசுரத்தில் ப்ரஸ்தாவித்த இராமபிரானிற்காட்டிலும் எளியனாய்வந்து திருவவதாரம் பண்ணியருளின கண்ணபிரானை ஆச்ரயிக்கப் பாருங்களென்கிறார்.

க்ருஷ்ணவதாரத்திற்கு ஹேதுவாகத் தேவர்கள் பண்ணின தோத்திரத்தைத் திருவுள்ளம்பற்றிப் பரவி வானவரேத்தநின்ற என்றருளிச் செய்கிறார். பூமிதேவிக்குத் தன்மீது ஸஜ்ஜனங்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும்

அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பதுபோல் வருத்தமற்றிருக்கும்; ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல் மிக வருத்தமாம்; ஆதலால் த்வாபரயுகத்தில் இப்பூமியின்கண் பிறந்திருந்த கம்ஸன் சிசுபாலன் முதலிய அசுரர்களின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் பூமிப்பிராட்டி கோரூபத்தைத் தரித்து மேருமலையினுச்சியிலுள்ள தேவர்களின் ஸபையையடைந்து, அச்சபை நடுவில் வீற்றிருக்கும் நான்முகனை வணங்கித் தனது துயரத்தை முறையிட்டு இவ்வஸுரர்களைத் தொலைத்துத் தன்னை ஸுகப்படுத்த வேணுமென வேண்டிக்கொள்ள, அதற்கு நான்முகன் சிறிதுகாலம் யோசித்து 'இது நம்மாலாகாது, ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தனாய் ஸர்வலோக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு அறிவித்து அவர் மூலமாக இக்காரியத்தை நிறைவேற்றுவிக்கவேணும்' எனக்கருதி அந்தப்பூமியும் மற்றுமுள்ள தேவர்களையுங் கூட்டிக் கொண்டுபோய்ப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமனைத்தொழுது துதித்தனர்; பின்பு திருமால் அருள்புரிந்த சிந்தைகொண்டு அவர்கட்குக் காட்சிதந்து யோக க்ஷேமங்களை விசாரித்து அவர்கள்வந்த வரலாற்றை யுணர்ந்தருளி அவர்கட்கு வாக்கு அளித்தபடியே இந்நிலத்தில் கண்ணபிரானாய் வந்து திருவவதரித்தனனென்றுணர்க.

குரவைகோத்த குழகனை = க்ருஷ்ணாவதாரத்தில் அற்புதமாக நடந்த ராஸக்ரீடையை அநுஸந்திக்கிறபடி. கண்ணபிரான் தன்னிடத்து விருப்பமுற்ற ஆயர் மாதருடைய ஆவலைத் தீர்க்கக்கருதி சரத்காலத்தில் இரவில் யமுனைக் கரையில் நின்று வேணுநாதஞ் செய்ய, அதனைக் கேட்ட இடைப் பெண்களெல்லாரும் மாமியார் மாமனார் முதலியோரையும் மதியாமல் காவல்கடந்து புறப்பட்டுச் சென்று க்ருஷ்ண கோஷ்டியில் அந்வயிக்க, அன்றிரவு அவர்களுடன் பரம போக்யமாகக் குரவைக் கூத்தாடினன். குரவையாவது — ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகப் பல வடிவெடுத்து நின்று மண்டலித்தாடும் ராஸக்ரீடை.

குழகன்— ஒரு நீராகக் கலப்பவன்.

குடக்கூத்தனை = பிராமணர்க்குச் செல்வம் விஞ்சினால் யாகஞ் செய்வதுபோல, இடையர்க்குச்செல்வம் விஞ்சினால் அதனாலுண்டாகுஞ் செருக்குக்குப் போக்குவீடாக அவர்களாடுவது குடக்கூத்து: தலையிலே அடுக்குக்குடமிருக்க இரு தோள்களிலும் இரு குடங்களிருக்க இரு கையிலும் குடங்களை யேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுகிற கூத்தாக இதனைக் கூறுவர்கள். இதனைப் பதினோராடலி லொன்றென்றும், அறுவகைக் கூத்திலொன்றென்றுங் கூறி, "குடத்தாடல் குன்றெடுத்தோனாட லதனுக், கடைக்குப வைந்துறுப்பாய்ந்து" என்று மேற்கோளுங் காட்டினர் சிலப்பதிகார வுரையில் அடியார்க்கு நல்லார். குடக்கூத்தனை என்ற இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"திருக்குரவையில் அந்வயிதார்க்குயாம் இழக்க வொண்ணாதபடி மன்றிலே தன்னுடைய வடிவழகை முற்றூட்டாக அநுபவிப்பிக்குமவனை."

அரவமேறி யித்யாதி. "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: । நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்"—ஏஷ

நாராயணம் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதநः, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்.'' என்கிறபடியே சேஷசயனத்தில் நின்றும் இறங்கிவந்து திருவவதாரம் பண்ணி வியாபாரங்களை முடித்துக்கொண்டு மீண்டும் அந்த சேஷசயனத்திலேறித் துயிலமர்ந்தனனென்பது இங்கு விவக்ஷிதம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை இரவும்பகலும் விடாது துதிக்கப் பாருங்களென்றாயிற்று (௩)

வைம்மின்நும்மனத்தென்று யானுரைக்கின்றமாயவன்சீர்மையை *
எம்மனோர்களுரைப்பதென்? அதுநிற்கநாள்தோறும் * வானவர்
தம்மையாளுமவனும் நான்முகனும்சடைமுடியண்ணலும் *
செம்மையாலவன்பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரே. (௪)

நும் மனத்து	'உங்கள் நெஞ்சிலே
வைம்மின் என்று	வையுங்கள்' என்று
யான் உரைக்கின்ற	என்னால் சொல்லப்படுகின்ற
மாயவன்	மாயோனுடைய
சீர்மையை	சீல குணத்தை
எம்மனோர்கள்	என்னைப் போன்றவர்கள்
உரைப்பது என்	சொல்லுவது என்னே?
அது நிற்க	அது கிடக்க;
வானவர் தம்மை ஆளுமவனும்	தேவர்களை ஆள்பவனான இந்திரனும்
நான்முகனும்	பிரமனும்
சடை முடி அண்ணலும்	ஜடாதரக் கடவுளான சிவனும்
செம்மையால்	முறைமை தவறாது
அவன்	அவ்வெம்பெருமானுடைய
பாதபங்கயம்	திருவடித் தாமரைகளை
நாள்தொறும்	எப்போதும்
சிந்தித்து	சிந்தனை செய்து
ஏத்தி	துதித்து
திரிவர்	இதுவே காரியமாக இருப்பர்.

* * * [வைம்மின்நும்மனத்து.] மிகவும் அபிமாந யுக்தர்களான பிரமன் சிவன் முதலானோரும் தடையின்றியே வந்து பணியலாம்படி யிருக்கிற எம்பெருமானுடைய சீலாதிசயத்தைப் பேசுகிறார். "சிந்தியுங்கோள்!!" என்று அடிக்கடி நான் சொல்லிக்கொண்டு வருகிற எம்பெருமானுடைய சீலத்தை நான் சொல்லுவது ஒருபுறமிருக்கட்டும்; தங்களையே கடவுளராக மதித்திருக்கின்ற இந்திரன் பிரமன் உருத்திரன் முதலானோருங்கூடத் தங்களுடைய செவ்வைக் கேட்டை விட்டு ருஜுப்ரக்ருதியுடனே அப்பெருமானுடைய பாதாரவிந்தங்களைப் பணிகின்றார்கள்; அன்னவர்களும் வந்து பணியலாம்படி அவன் தன்னை அமைத்துக் கொடுக்கின்றானென்றால் இது எப்படிப்பட்ட சீலமென்று பாருங்கள்; நானெடுத்துரைக்க வேண்டுவதோ இது! என்கிறார்.

என்று + யான் என்றியான்; "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல் விதி. எம்அனோர்கள்—எம்மனையவர்கள்; எம்மைப் போன்றவர்கள் என்றபடி. (௪)

திரியும்காற்றோடகல்விசும்பு திணிந்தமண்கிடந்தகடல் *
எரியும்தீயோடிருசுடர்தெய்வம் மற்றும்மற்றும்முற்றுமாய் *
கரியமேனியன்செய்யதாமரைக்கண்ணன் கண்ணன்விண்ணோரிறை *
சுரியும்பல்கருங்குஞ்சி எங்கள்சுடர்முடியண்ணல்தோற்றமே. (௫)

கரிய மேனியன்	சாமளமான வடிவை யுடையனுய்
செய்ய தாமரை கண்ணன்	செந்தாமரை மலர் போன்ற திருக்கண்களை யுடையனுய்
விண்ணோர் இறை	நித்யஸூரி நாதனுய்
சுரியும் பல் கரு குஞ்சி	சுருண்டு அலகலகாய்க் கருமையாகிய குழற்கற் றையையுடையனுய்
சுடர் முடி	ஒளி பொருந்திய திரு முடியையுடையனுய்
எங்கள் அண்ணல்	எமக்கு ஸ்வாமியான
கண்ணன்	கண்ணபிரானுடைய
தோற்றம்	விளக்கமானது,
திரியும்	இடையருது உலாவு கின்ற
காற்ரேடு	வாயு வென்ன
அகல்	விசாலமான
விசும்பு	ஆகாசமென்ன
திணிந்த	கடினமான
மண்	பூமியென்ன
கிடந்த	கரைகடவாமல் கிடந்த
கடல்	ஸமுத்ரமென்ன
எரியும்	ஜ்வலிக்கிற
தீயோடு	அக்னி யென்ன
இரு சுடர்	சந்திர ஸூரியர்களென்ன
தெய்வம்	(மற்றுள்ள) தேவதைகளென்ன
மற்றும்	மற்றுள்ள மானிடர்களென்ன
மற்றும்	மற்றுள்ள திர்யக் ஸ்தாவரம் முதலியவைகளென்ன (ஆகிய)
முற்றும் ஆய்	ஸகலஸ்வரூபமாயிருக்கும்.

* * * [திரியுங்காற்ரேடு.] எம்பெருமானுடைய விபூதிவிஸ்தாரங்களை அநுபவித்துப்பேசுகிருர். திரியுமென்று தொடங்கி "எரியுந்தீயோடு'' என்னுமளவும் பஞ்ச பூதங்கள் பேசப்பட்டன. இப்பஞ்ச பூதங்களும் எம்பெருமானிட்ட வழக்கு. சந்திரன் ஸூர்யன் முதலான தேவர்களும் மனிதர்களும் விலங்குகளும் மற்றுமுள்ள யாவையும் அப்படியே. ஆக முன்னடிகளால் எம்பெருமானுடைய ஜகதாகாரத்வம் சொல்லப்பட்டு, மேல் அஸாதாரண விக்ரஹயுக்தனு யிருக்கு மிருப்பு சொல்லப்படுகிறது.—கரியமேனியன் செய்யதாமரைக்கண்ணன் விண்ணோரிறை சுரியும்பல்கருங்குஞ்சி எங்கள் சுடர்முடியண்ணல் கண்ணன் தோற்றம் —திரியுங்காற்ரேடகல்விசும்பு திணிந்தமண்கிடந்த கடல் எரியுந் தீயோடிரு சுடர் தெய்வம் மற்றும் மற்றும் முற்றுமாய் என்று அந்வயக்ரமம். முற்றுமாய் என்றது 'முற்றுமாம்' என்றபடி.

ஆருயிரப்படியை நோக்குமிடத்து, பாசுரமுள்ளபடியே அந்வயக்ரமத்தைப் பிள்ளான் திருவுள்ளம் பற்றினதாகப் புலப்படுகின்றது: அண்ணல் தோற்றமே—"எம்பெருமானை நான் காணப்பெற்றேன்'' என்பது ஆருயிரம். ... (ரு)

தோற்றக்கேடவையில்லவனுடையான் அவனொருமூர்த்தியாய் *
சீற்றத்தோடருள்பெற்றவனடிக்கீழ்ப் புகநின்றசெங்கண்மால்*
நாற்றத்தோற்றச்சுவையொலி உறலாகிநின்ற * எம்வானவ
ரேற்றையேயன்றி மற்ருெருவரையானிலேனெழுமைக்குமே. (சு)

தோற்றம் கேடு அவை	ஜனன மரணங்களாகிய அவைகள்
இல்லவன்	இல்லாதவனும்
உடையான்	அவற்றையுடையவனும்

அவன்	ப்ரமாண ப்ரஸித்தனும்,
ஒரு மூர்த்தி ஆய்	ஒப்பற்ற நரசிங்கமூர்த்தியாய்
சீற்றத்தோடு அருள் பெற்றவன்	சீறியிருக்கும் நிலைமையிலேயே கருணைக்கு இலக்கான ப்ரஹ்லாதன்
அடி கீழ் புக நின்ற	தன் திருவடிவாரத்தில் கூசாது நிற்கப்பெற்றவனும்,
செம் கண் மால்	சிவந்த திருக்கண்களையும் ஆச்ரித பக்ஷபாதத்தையுமுடையவனும்
நாற்றம் தோற்றம் சுவை ஒலி உறல் ஆகி நின்ற	கந்தம் ரூபம் ரஸம் சப்தம் ஸ்பர்சம் என்கிற பஞ்ச விஷயங்களுமாய் நிற்பவனும்
எம் வானவர் எற்றையே அன்றி	தேவாதி தேவனுமான எம்பெருமானையேயன்றி
எழுமைக்கும்	எல்லாக் காலத்திலும்
மற்று ஒருவரை	வேறொருவரை
யான் இலேன்	நான் புகலாகவுடையேனல்லேன்.

* * * [தோற்றக்கேடவை.] ஆச்ரித விஷயத்தில் எல்லைகடந்த வாத்ஸல்யமுடைய நாரஸிம்ஹ மூர்த்தியையொழிய மற்றொருவரை யானுடையேனல்லேனென்கிறார். தோற்றமாவது உத்பத்தி; கேடாவது விநாசம்; இவையிரண்டும் பகவத்ஸ்வரூபத்திலில்லாமையாலே தோற்றக்கேடவையில்லவன் என்றது. இவை ஸ்வரூபத்திலில்லாவிடினும், * அஜாயமாநோ வஹுதா விஜாயதே * என்றும் * எக்கின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் * என்றும் சொல்லுகிறபடியே ஸ்வேச்சையாலே பரிக்ரஹிக்கும் திருமேனிகளுக்கு உத்பத்தி விநாசங்கள் உள்ளனபோல் தோற்றுகையாலே 'உடையான்' என்றும் சொல்லிற்று. தோற்றக் கேடவையுடையான் என்றபடி. இப்பொருளைவிட, உடையான் என்பதற்கு ஸ்வாமியென்கிற பொருள் சிறக்கும்: இதுவே ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றினதுமாகும். "[உடையான்.] தோற்றக் கேடுள்ள பதார்த்தங்களை யடையத் தனக்கு சேஷமாக வுடையான். நிருபாதிக சேஷி." என்பது ஈடு.

அவனொரு மூர்த்தியாய் = கருமம் காரணமான பிறப்பு இல்லாதவன் அடியார்களுக்காக விக்ரஹ பரிக்ரஹம் செய்பவனாய் என்றபடி.

சீற்றத்தோடு அருள்பெற்றவன் = இது ப்ரஹ்லாதாழ்வானைச் சொன்னபடி; நாரஸிம்ஹபகவானுக்கு இரணியன்மேல் அளவு கடந்த சீற்றம் ஒருபுறம் செல்லாநிற்க, ப்ரஹ்லாதாழ்வான் குளிர்ந்த நோக்கத்திற்குப் பாத்திரமாயினன்.—எம்பெருமானாரைச் சிலர் கேட்டார்களாம்; நரசிங்கமூர்த்திக்குச் சீற்றம் அளவுமீறிப்பொங்கிச் செல்லுகையில் சிறுக்கன் எங்ஙனே அணுகிநிற்கவல்லவனாயினன்? என்று.—அதற்கு அவர் அருளிச்செய்த விடை "ஸிம்ஹம் ஆனைமேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி யிருக்குமிறே" என்றாம். இவ்விடத்திற்குப் பொருத்தமாக "இழவு தரியாத தோரீற்றுப்பிடி யிளஞ்சீயந் தொடர்ந்து முடுகுதலும், குழவியிடைக் காலிட்டெதிர்ந்து பொருங் கோவர்த்தன மென்னுங் கொற்றக்குடையே" என்ற பெரியாழ்வார் திருமொழி நோக்கத்தகும்.

செங்கண்மால் = இரணியன் பக்கல் சீற்றத்தாலும் கண் சிவந்திருக்கும்; ப்ரஹ்லாதாழ்வான் பக்கல் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கும். மால் = "மாலே பெருமை கருமை மையலுமாம்" என்ற நிகண்டின்படி பெருமையும் மையலும்

இங்குக் கொள்ளத்தகும்: இரணியன் பக்கலில் பெருமை காட்டப்பட்டது; ப்ரஹ்லாதாழ்வான் பக்கலில் மையல் காட்டப்பட்டது. (மையல்—வியாமோஹம்; அன்பு)

நாற்றத்தோற்றமித்யாதி. சப்தாதி விஷயங்கள் ஸம்ஸாரிகளுக்கு வேறாயிருக்கும்; தமக்கு அவையெல்லாம் எம்பெருமானேயா யிருப்பன் என்கிறது. (சு)

எழுமைக்குமெனதாவிக்கு இன்னமுதத்தினையெனதாருயிர் *
கெழுமியகதிர்ச்சோதியை மணிவண்ணனைக்குடக்கூத்தனை *
விழுமியவமரர்முனிவர்விழுங்கும் கன்னற்கனியினை *
தொழுமின்தூயமனத்தராய் இறையும்நில்லாதுயரங்களே. (எ)

எழுமைக்கும்	எல்லா நிலைமைகளிலும்	முனிவர்	முனிவர்களாலும்
எனது ஆவிக்கு	என் ஆத்மாவுக்கு	விழுங்கும்	அநுபவிக்கப்படுகிற
இன் அமுதத்தினை	இனிய அம்ருதம் போன்றவனும்	கன்னல் கனியினை	கன்னற்கனி போன்றவனுமான எம்பெருமானை
எனது ஆர் உயிர்	என்னுடைய அருமையான உயிரோடே	தூய மனத்தர் ஆய்	அழுக்கற்ற மனமுடையீர்களாய்
கெழுமிய	கலந்து நிற்கிற	தொழுமின்	தொழுங்கள்; (தொழுதால்)
கதிர் சோதியை	பரஞ்சோதியுருவனும்		
மணி வண்ணனை	நீலமணி நிறத்தனும்	துயரங்கள்	துன்பங்களானவை
குடக் கூத்தனை	குடக்கூத் தாடினவனும்	இறையும்	சிறிதேனும்
விழுமிய அமரர்	சிறந்த தேவர்களாலும்	நில்லா	நிற்கமாட்டா.

• • • [எழுமைக்கும்.] எம்பெருமான் இப்படி ஆச்ரித ஸுலபனுகையாலே அவன் பக்கலில் நீங்கள் பண்ணின துர்லபத்வசங்கையைத் தவிர்ந்து அவனை ஆச்ரயியுங்கள்; உங்கள் துயரங்கள் தொலைந்துபோம் என்கிறார்.

[எனதுஆவிக்கு எழுமைக்கும் இன்னமுதத்தினை] பகவத்விஷய ரஸமறியாமல் விஷயாந்தரங்களில் மண்டிக்கிடந்த என்னெஞ்சுக்கு இனிமேலுள்ள காலமெல்லாம் பரம போக்யனுயிருப்பவனை யென்றபடி. எழுமைக்கும் என்றது காலமுள்ளதனையும் என்றவாறு. [எனது ஆருயிர் கெழுமிய கதிர்ச்சோதியை] எம்பெருமானும் ஆழ்வாரோடே கலந்தபின்பே ஒளிமல்கப் பெற்றுனென்க. இங்கே பரமபோக்யமான ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"தாம் கிட்டுகை அத்தலைக்கு நிறக்கேடென்றிருந்தாரிவர்; அது மற்றைப்படியாய், தம்மைச் செறியச் செறிய தீப்தனுயிருந்தான்"

விழுமியவமரர் முனிவர்விழுங்கும் கன்னல்கனியினை = கன்னல்கனியென்று உலகில் ஒரு கனி கிடையாது; ஆழ்வார் எம்பெருமானுடைய விலக்ஷண போக்யதையை நோக்கி இங்ஙனே அபூர்வமாகப் பேசுகிறார். கன்னல் என்பது அக்காரக்கட்டி; அதைச் செடியின் ஸ்தானத்திலேயாக்கி அதில் பழுத்தபழம் ஒன்று இருக்குமாகில் அது எவ்வளவு போக்யமாயிருக்குமோ அவ்வளவு போக்

யன் எம்பெருமான் என்றவாறு. இந்தக் கனியை உண்ணவல்ல அதிகாரிகளும் விலக்ஷணர் என்கிறது "விழுமிய வமரர்முனிவர் விழுங்கும்" என்பதனால்.

தூயமனத்தராய்த் தொழுமின் = 'எம்பெருமான் எளியனோ அரியனோ!, இவனைப் பற்றுவோமோ அல்லது பிரயோஜநாந்தரங்களைக் கொண்டு அகன்று போவோமோ!' என்று இங்ஙனே அலையாமல் நிஷ்களங்கமநஸ்கர்களாய் ஆச்ரயியுங்கள் என்றபடி. ... ... (எ)

துயரமேதருதுன்பவின்பவினைகளாய் அவையவல்லனாய் *
உயரநின்றதோர்சோதியாய் உலகேழும்உண்டுமிழ்ந்தான் தன்னை *
அயரவாங்குநமன்தமர்க்கு அருநஞ்சினைஅச்சுதன் தன்னை *
தயரதற்குமகன்தன்னையன்றிமற்றிலேன் தஞ்சமாகவே. (அ)

துயரமே தரு	பரிதாபத்தையே தரக்கடவதான	அயர வாங்கும்	மோஹிக்கும்படி உயிரை அபஹரிக்கின்ற
துன்பம் இன்பம் வினைகள் ஆய்	புண்ய பாபரூப கருமங்களுக்கு நியாமகனாய்	நமன் தமர்க்கு	யமபடர்களுக்கு
அவை அல்லன் ஆய்	அவற்றுக்குத் தான் வசப்படாதவனாய்	அரு நஞ்சினை	மீட்க முடியாத விஷமாய்
உயர நின்றது ஓர் சோதிஆய்	உயர்ந்த நிலமாகிய பரமபதத்தி லெழுந்தருளி யிருக்கின்ற விலக்ஷண தேஜோமய விக்ரஹ யுக்தனாய்	அச்சுதன் தன்னை	(தன்னைப் பணிந்தாரை) நழுவ விடாதவனாய்
உலகு எழும்	எல்லா வுலகங்களையும்	தயரதற்கு மகன் தன்னை அன்றி	சக்ரவர்த்தி திருமகனான எம்பெருமானை யல்லது
உண்டு உமிழ்ந்தான் தன்னை	(பிரளயத்தில்) உண்டு (மீண்டும்) வெளிப்படுத்தி ரக்ஷிப்பவனாய்	மற்று	மற்றொரு தெய்வத்தை
		தஞ்சம் ஆக இலேன்	சரணமாக வுடையேனல்லேன்.

* * * [துயரமே தரு] மற்றுள்ளாரும் தம்முடைய பக்ஷத்தை யறிந்து ருசி பண்ணுகைக்காக 'நா[illegible] சக்ரவர்த்தி திருமகனை யல்லது மற்றொருவரை ஆபத்தனமாகப் பற்றியிரேன்' என்று தமது உறுதியை வெளியிடுகிறார்.

தயரமே தரு என்கிற அடைமொழி துன்பவினையிற் போலவே இன்பவினையிலும் அந்வயிக்கும். பாபம் போலவே புண்யமும் துயரம் தரக்கூடியதேயாகும். பாபத்திற்காட்டிலும் புண்ணியம் நன்றாயிருந்ததேயாகிலும் மோக்ஷமார்க்கத்திற்கு இடையூறாகுந்திறத்தில் இரண்டும் ஒக்குமாதலாலும், "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று உபநிஷத்தும் ஓதுகையாலும் புண்ய பாபங்களிரண்டுமே தொலையக்கடவனவாம். புண்ணியங்களுக்குப் பலனாக ஸ்வர்க்காநுபவம் முதலிய ஆபாஸ புருஷார்த்தங்கள் கிடைக்கும்; பாவங்களுக்குப் பலனாக நரக வேதனைகள் கிடைக்கும்; பரம புருஷார்த்தத்தை விரும்பி நிற்பார்க்கு ஸ்வர்க்க நரகங்களிரண்டும் பரியாயமாதலால் புண்ய பாபங்களிரண்டும் தொலையவேணுமென்று

சாஸ்த்ரம் சொல்லாநின்றது என்றாணர்க: இதனை ஸ்ரீதேசிகனும் வரதராஜ பஞ்சாசத்தில் * ஸத்யஸ் த்யஜந்தி * என்ற ச்லோகத்தினால் உரைத்தருளினர். புண்ணியம் பொன்விலங்கு போன்றது; பாவம் இரும்பு விலங்கு போன்றது என்பது இந்த ச்லோகத்தின் தேர்ந்த கருத்து. யதேஷ்டமாக ஸஞ்சரிக்க விரும்புகின்றவர்களை இரும்பு விலங்கினால் கட்டிவைத்தா லென்ன? பொன் விலங்கினால் கட்டிவைத்தாலென்ன? இரண்டும் துக்க ஹேதுவேயாகு மென்ற வாறு.

இவ்விடத்தில் ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—'துன்ப வினையோடு இன்ப வினையோடு வாசியற இரண்டும் துக்கத்தையே பண்ணித்தரும்......... பகவச் சேஷத்வ விரோதியாய்க் கொண்டு பந்தகமாகை இரண்டுக்கு மொக்குமிறே; * வா"ணரௌவாவெ விய-ஞய * என்னக்கடவதிறே."

"துன்பவின்ப வினைகளாய்" என்கிற ஸாமாநாதிகரண்யம்—துன்பவின்ப வினைகளைச் செய்விப்பவன் என்ற கருத்திலேயாயிற்று; * வஷவாவ வாய" கஉ-ல் காரயதி...... வஷவாவ சுவாய"கஉ-ல் காரயதி * என்ற சுருதியும் காண்க.

அவையல்லனாய் = தான் கர்மவச்யனல்லன் என்றபடி.

'தயரதன் மகன்தன்னை' என்னாதே "தயரதற்கு மகன்தன்னை" என்றதற்கு நம்பிள்ளை யருளிச்செய்யும் தாத்பர்ய விசேஷமாவது—"ஒருகால் வெற்றிலைச் செருக்கிலே 'ராஜ்யத்தைத் தந்தேன்' என்று, புரிந்து ஸ்த்ரீ பரதந்த்ரனாய் 'நான் தந்திலேன், நீ காடேறப் போ,' என்று, இப்படி சொல்லலாம்படி அவனுக்கு இஷ்ட விநியோகார்ஹனான புத்ரனை." என்பதாம். மகன் என்றது ஸர்வாத்மநா விதேயன் என்ற பொருளிலேயாயிற்று; இப்பொருளை 'தயரதற்கு' என்று ஸ்பஷ்டமாக நிற்கின்ற வேற்றுமையுருபு தெரிவிக்கின்றது என்பது நம்பிள்ளை திருவுள்ளம்.

இங்கு ஈட்டில் சில அருமையான திவ்ய ஸூக்திகள் உள்ளன;—

"எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப்போருவதொரு பிள்ளையிறே; இங்ஙனே யிருக்கச்செய்தே ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தி திருமகனை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து கொடுத்தாராய், அவரைப் பார்த்து '* மாமேகம் சரணம் வ்ரஜ என்று தேவையிடாதார் எழுந்தருளினார்' என்றாராம்.—ஆபி முக்யத்தாலே பெறலாமென்றால் அவ்வாபி முக்யந்தானும் பரமபக்தி யோபாதி அரிதாயிருக்குமிறே இச் சேதநனைப் பார்த்தால். 'இத்தலையில் ஆபி முக்யத்திற்கு மேற்பட வேண்டா' என்று சொல்லுகிறவை யெல்லாம் சரண்யனுடைய நீர்மையைப்பற்றச் சொல்லுகிறது. இவனுக்கு வேண்டுவது சொல்லப்புக்கால் * மஹா விச்வாஸ பூர்வகம் என்ன வேண்டும்படியாயிருக்குமிறே. ஒரு சிறாயை விச்வஸித்து ஆறு மாஸத்துக்கு வேண்டும் சோறும் தண்ணீரும் ஏற்றிக்கொண்டு கடலிலே யிழியாநின்றான்; அவ்வோபாதி விச்வாஸமாகிலும் வேண்டாவோ பகவத் விஷயத்தைப் பற்றுவார்களுக்கு என்றருளிச்செய்வர்."—என்று. (ரு)

தஞ்சமாகியதந்தைதாயொடு தானுமாயவையல்லனாய் *
எஞ்சலில்அமரர்குலமுதல் மூவர்தம்முள்ளுமாதியை *
அஞ்சிநீருலகத்துள்ளீர்கள் ! அவனிவனென்றுகூழேன்மின் *
நெஞ்சினால்நினைப்பான்யவன் அவனாகும்நீள்கடல்வண்ணனே. (௧)

உலகத்து உள்ளீர்கள்	உலகத்தவர்களே!,	நீர்	நீங்கள்
தஞ்சம்ஆகிய	ரக்ஷிக்குந் தன்மை பொருந்திய	அஞ்சி	மேன்மை கண்டு கலங்கி
தந்தையொடு	தந்தையும்	அவன் இவன் என்று	எல்லை கடந்த மஹிமையையுடைய அந்த எம்பெருமான் வேறு, இந்த அர்ச்சாரூபியான எம்பெருமான் வேறு என்று கொண்டு
தாய்தானும்ஆய்	தாயுமாய்		
அவை அல்லன் ஆய்	அவ்வளவோடும் நில்லாத ஸகலவித பந்துவுமாய்	கூழேல்மின்	கலங்கியிருக்க வேண்டா;
எஞ்சல் இல்	(பகவதநுபவத்தில்) குறைதல் இல்லாத	நெஞ்சினால்	நெஞ்சாலே
அமரர் குலம்	நித்யஸூரிகளின் திரளுக்கு	நினைப்பான் யவன்	நினைந்து உகந்தருளிக்கப்பட்டவன் யவன்
முதல்	தலைவனாய்	அவன்	அவனே
மூவர் தம் உள்ளும்	மும்மூர்த்திகளுள்ளும்	நீள் கடல் வண்ணன் ஆகும்	விசாலமான கடல் போன்ற நிறத்தையுடைய ஸர்வேச்வரனவன்.
ஆதியை	முதல்வனான எம்பெருமானைக்குறித்து		

* * * [தஞ்சமாகிய] 'எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்திலெழுந்தளியிருக்குமிருப்பு எங்களுக்கு உபயோகப்படுவதன்று; ராம க்ருஷ்ணாதி அவதாரங்கள் பண்ணின காலத்தில் நாங்கள் அணுகியிருந்து வாழப்பெற்றிலோம்; ஆனபின்பு எங்ஙனே அவனைக் கண்டு ஆச்ரயிக்கும்படி?' என்று ஸம்ஸாரிகள் வினவுவதாகக் கொண்டு, அவர்களுக்கு உத்தரமுரைக்கிறார்;—நீங்கள் ஏதேனுமொருபடி உகந்தருளப்பண்ணி ஆச்ரயிப்பது; அத்திருமேனியையே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தானமாக விரும்பியருளக் குறையில்லை யென்கிறார். இப்பதிகத்திற்கு இப்பாசுரமே உயிராயிருக்கும். இப்பாட்டின் ப்ரமேயத்திற்கு அவதாரிகை போன்றனவே கீழ்ப்பாசுரங்கள்.

தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்— இவ்விடத்து ஈட்டு ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யங்கள்; அவை வருமாறு.— "புறம்புள்ளார் 'தாய் தமப்பன்' என்றுபேராய், இவனுக்கு ஓரிடர் வந்தவாறே பொகட்டுப் போவர்கள்; இவனுக்கு ஏதேனுமோரிடர்வந்தாலும் அப்போது முகங்காட்டிரக்ஷிப்பான் இவனொருவனுமேயாயிற்று. மாதாபிதாக்கள் 'இவன்பிறந்த முஹூர்த்தம்பொல்லாது' என்று நாற்சந்தியிலே வைத்துப் போவாரும் அறவிற்(று)ட்டு ஜீவிப்பாருமாயிருக்கும். அவர்களைப்போலன்றிக்கே, தங்களை அழியமாறியும் நோக்கும் தாய் தந்தையுமாய்.—இவர்களோடுண்டான பந்தந்தான் கர்மமடியாக வந்ததாகையாலே அக்கர்மம் க்ஷயிக்க க்ஷயிக்கும்; இங்ஙனன்றிக்கே * பூதாநாம் யோவ்யய: பிதா * [பூதாநாம் யோவ்யய: பிதா] * ஸர்வேஷாமேவ லோ

கா நாம் பி தா மா தா ச மாதவஃ * [ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவஃ] என்கிறபடியே ஸத்தாயோகி ஸகலபதார்த்தங்களுக்கும் பிதாவாயிருக்கும்; அது தன்னிலும் இழவுக்குக் கண்ணநீர்பாய வேண்டாத பிதாவாயிருக்கும்.''

எம்பெருமானை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்பது பிள்ளையுலகாசிரியருடைய ப்ரபந்நபரித்ராணம் என்கிற ரஹஸ்ய க்ரந்தத்திலும் பரக்க அருளிச் செய்யப்பட்டுளது; அங்குக் கண்டுகொள்க.

ஆசார்யஹ்ருதயம் இரண்டாவது பிரகரணத்தில் "வித்யை தாயாகப் பெற்று" என்கிற சூர்ணையில் "திருமகள்போலவளர்த்த தஞ்சமாகிய தந்தை" என்றுள்ளவிடத்தில் தஞ்சமாகியதந்தை யென்பதற்கு ஆசார்யன் என்றுபொருள் அருளிச்செய்யப்பட்டுளது; தந்தை, ஆகிய தந்தை, தஞ்சமாகிய தந்தை என்று யோஜித்து, தந்தையென்று சரீரோத்பாதகனானபிதாவைச் சொல்லுகிறதென்றும், ஆகியதந்தை யென்று ஆபத்காலங்களிலே கைவிடும் பிதாவைப்போலன்றிக்கே ரக்ஷணத்திலே தீக்ஷிதனாயிருக்கும் எம்பெருமானாகிற பிதாவைச் சொல்லுகிறதென்றும், தஞ்சமாகிய தந்தையென்று—ஸ்வரூபோத்பாதகனாய் ஒருதசையிலும் கைவிடாதே ஹிதைஷியாய், ஸம்ஸாரமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாயிருக்கும் எம்பெருமானாகிற பிதாவைப்போலுமன்றிக்கே உஜ்ஜீவநைகபரனாய்க்கொண்டு மோக்ஷைக ஹேதுவாயிருக்கிற ஆசார்யனாகிற பிதாவைச் சொல்லுகிறதென்றும் வியாக்கியானிக்கப்படுகிறது. "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து" என்றும் "ஸாக்ஷாந்நாராயணோ தேவஃ க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா—ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா" என்றும் சொல்லுகிறபடியே ஆசார்யனாகவும் எம்பெருமான்தானே வந்துபிறந்தருளினனாதலால் இங்கு எம்பெருமானைத் தஞ்சமாகிய தந்தை யென்று ஆசார்யவாசகபதத்தினால் சொல்லுவதிலும் குறையில்லையென்றுணர்க.

தானுமாய்— தந்தையானவன் தாயாகமாட்டான்; தாயானவள் தந்தையாகமாட்டாள்; இவர்களிருவரும் இவன்தானாகமாட்டார்கள்; இவன்தான் இவர்களிருவருமாகமாட்டான்; இவர்களெல்லாமாயிருப்பன் எம்பெருமான் என்கிறது. "ஸர்வவிதபந்துவாய் ஸர்வஸ்வாமியான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைப் பற்ற இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது" என்று அஸ்மதாசார்யர் அருளிச்செய்தபடி. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"[தானுமாய்.] மாதாபிதாக்கள் பொகட்டுப்போனவன்றும் 'நான்ஜீவிக்கவேணும், எனக்கு நன்மையுண்டாகவேணும்' என்றிறேதானிருப்பது; இப்படி தனக்கு நன்மைபார்க்கும் தானுமாய்."

அவையல்லனாய்— தந்தைதாய் தான் என்னுமிவ்வளவுமாத்திரமேயல்லாமல் "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயணஃ—மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:," "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே

யினி யாவாரே'' என்கிறபடியே ஸர்வோபகாரகனும் ஸர்வவித பந்துவும் அவனே யென்கிறது. இப்படியிருக்கிறவன் யாவனென்ன, நித்ய ஸூரிகளுக்கு ஜீவநஹேது, வானவனென்கிறார் எஞ்சலிலமரர்குலமுதல் என்று.

மூவர்தமுள்ளுமாதியை என்றதற்கு, பிரமன் முதலிய மூன்று மூர்த்திகளிலும் வைத்துக்கொண்டு பிரதானனுக வுள்ளவன் என்றும், 'மூவர் தம்' என்றவிடத்தில் தம் என்பதை தாம் என்பதன் குறுக்கலாகக்கொண்டு, மூவர்தாம்— பிரமன் சிவன் இந்திரனுகிய மூவரும், உள்ளும்—தியானிக்கிற, ஆதி என்றும் பொருள் கொள்ளலாம்.

அஞ்சி = கீழ்ச் சொன்னதெல்லாம் பயப்படுவதற்கு ஹேதுவாயிருக்கும்; ஜகத்துக்கு ஸகலவித பந்துவுமாயிருக்கிறவனை நம்மாலே கிட்டப்போமோ? நித்ய ஸூரிகளுக்கு ஸத்தா ஹேதுவாயிருக்கிறவனை நம்மாலே கிட்டப்போமோ? ப்ரஹ்மருத்ரர்களுக்கு நிர்வாஹகனுயிருக்கிறவனை நம்மாலே கிட்டப்போமோ? என்று அஞ்சக்கூடுமே; அப்படி அஞ்சவேண்டா வென்கிறார் மூன்றுமடியினல். அவன் இவனென்று கூழேன்மின் = நித்யஸூரி நாதனுன எம்பெருமான்படியையும், நாம் ஏறி யருளப்பண்ணும் அர்ச்சாரூபியான பெருமானுடைய படியையும் பார்த்து, தேசகால வஸ்து பரிச்சேதரஹிதனுப் அஸாதாரண விக்ரஹத்தோடே நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யனுய்க் கொண்டிருக்கிற அப்பெருமான், தேசகால வஸ்துக்களால் பரிசின்னனுப் நாமுகந்ததொரு த்ரவ்யத்தைத் திருமேனியாகக் கொண்டு நம்முடைய புத்திக்கு அதீநனுயிருக்கின்ற இம்மூர்த்தியாக எப்படியிருக்கக்கூடும் என்று சங்கிக்கவேண்டா என்பது தேர்ந்த கருத்து. கூழ்ப்பு—ஸம்சயம்; கூழேன்மின்—எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்று. நெஞ்சினல் நினைப்பான்யவன் அவனுகும் = யாதொன்றை அவனுக்கு ரூபமாக நினைக்கின்றீர்கள், அதுதன்னையே அவன் திவ்யரூபமாகக் கொண்டருளு மென்றபடி. "* प्रतिमास्वप्रबुद्धानाम् (ப்ரதிமாஸ்வப்ரபுத்தாநாம்) என்னும் ரிஷிகளைப் போலே தம்வாயாற் சொல்லமாட்டாமையாலே அவனிவ னென்கிறார்" என்ற நம்பிள்ளை யீடு காண்க. .... (கூ)

கடல்வண்ணன்கண்ணன் விண்ணவர்கருமாணிக்கமெனதாருயிர் *
படவரவினணைக்கிடந்த பரஞ்சுடர் பண்டுநூற்றுவர் *
அடவரும்படைமங்க ஐவர்கட்காகிவெஞ்சமத்து * அன்றுதேர்
கடவியபெருமான் கனைகழல்காண்பதென்றுகொல்கண்களே? (கo)

கடல் வண்ணன்	கடல் போன்ற நிறத்தை யுடையவனுயும்
கண்ணன்	கண்ணபிரானுயும்
விண்ணவர்	பரமபதத்திலுள்ளவர் கட்கு
கரு மாணிக்கம்	நீலமணிபோலே போக்யனுயும்
எனது ஆர் உயிர்	எனது அருமையான உயிராயும்

படம் அரவு இன் அணை கிடந்த	படங்களையுடைய ஆதிசேஷனுகிற இனிய படுக்கையில் சயனித்த
பரம் சுடர்	பரஞ்சோதியாயும்
பண்டு	முன்பொருகால்
அட	கொல்வதற்காக
வரும்	திரண்டு வருகின்ற
நூற்றுவர் படை	துரியோதனுதிகளின் சேனை

மங்க	தொலையும்படியாக
ஐவர்கட்கு ஆகி	பாண்டவ பக்ஷபாதியாகி
வெம் சமத்து	கொடிய பாரத யுத்தத்தில்
அன்று	பகைவர் மேலிட்டுவந்த அந்நாளில்
தேர் கடவிய	(அர்ஜுனனுக்குத்) தேர் செலுத்திய
பெருமான்	பெருமானுமிருக்கின்ற எம்பெருமானுடைய
கனை	(வீரதண்டையினுல்) ஒலிக்கின்ற
கழல்	திருவடிகளை
கண்கள் காண்பது	(என்) கண்கள் ஸேவிக்கப்பெறுவது
என்று கொல்	என்றைக்கோ].

* * * [கடல்வண்ணன்கண்ணன்·] ஆழ்வார்தாம் உபதேசிக்கத் தொடங்கின ஸௌலப்ய காஷ்டையை அர்ச்சாவதார பர்யந்தமாக அருளிச் செய்து முடித்து, தாம் அகப்பட்ட துறையான க்ருஷ்ணாவதாரத்தை அநுபவிக்க ஆசைப்படுகிறுரிப்பாட்டில். இவ்வாழ்வார் அர்ச்சாவதார ஸௌலப்ய மறிந்திருக்கச் செய்தேயும் க்ருஷ்ணாவதாரத்திலே எத்திறம்! என்று மோஹிக்கு மியல்வினராதலால் அவ்வவதாரந்தன்னிலேயே இப்போதிவர் ஈடுபட்டுப் பேசுவதும் பொருந்தும்.

பரிச்சேதிக்க வொண்ணுத மஹிமையை யுடையனாய் * அயர்வறுமமரர்களுக்கு இனியனாய், நாகபர்யங்கசாயியா யிருந்துவைத்து வஸுதேவ க்ருஹத்தில் அவதரித்தவனாய் எனக்குப் பிராணனாய், துரியோதனன் முதலானோர் படையொடும் மாளும்படியாகப் பாண்டவ பக்ஷபாதியாய்ப் பார்த்தஸாரதியாயிருந்த எம்பெருமானுடைய திருவடிகளை என்னுடைய கண்கள் ஸேவிக்கப் பெறுவது என்றைக்கோ என்கிறார்.

ஸேநாதூளியும் உழவுகோலும் பிடித்த சிறுவாய்க்கயிறும் தேருக்குக் கீழே தொங்கவிட்ட திருவடிகளும் அதிலே சாத்தின சிறு சதங்கையுமாய் ஸாரத்ய வேஷத்தோடே நின்றபோதைத் திருவடிகளில் ஆபரணத்வநி செவிப்படவும் அவ்வடிவைக் காணவுமாயிற்று இவர்க்குண்டான ஆசை. ... (கo)

கண்கள்சாண்டற்கரியனாய்க் கருத்துக்குநன்றுமெளியனாய் *
மண்கொள்ஞாலத்துயிர்க்கேல்லாம் அருள்செய்யும்வானவரீசனை *
பண்கொள்சோலைவழுதிநாடன் குருகைக்கோன்சடகோபன்சொல் *
பண்கொளாயிரத்திப்பத்தால் பத்தராகக்கூடும்பயிலுமினே. (கக)

கண்கள் காண்டற்கு	கண்களால் பார்ப்பதற்கு
அரியன் ஆய்	அருமைப்பட்டவனாகி
கருத்துக்கு	தியானத்திற்கு
நன்றும் எளியன் ஆய்	மிகவும் சுலபனாய்
மண் கொள் ஞாலத்து	பூமண்டலத்திலுள்ள
உயிர்க்கு எல்லாம்	பிராணிகளுக்கெல்லாம்
அருள் செய்யும்	(அர்ச்சாவதாரமுகத்தாலே) க்ருபை பண்ணுகிற
வானவர் ஈசனை	தேவாதிதேவனைக் குறித்து,
பண் கொள் சோலை	(வண்டு முதலியவற்றின்) இசைமிருந்த சோலைகளையுடைய
வழுதி நாடன்	திருவழுதி நாட்டையுடையராய்

குருகை கோன்	திருநகரிக்குத் தலைவரான	இப்பத்தால்	இப்பதிகத்தினால்
சடகோபன்	ஆழ்வார்	பத்தர் ஆக கூடும்	பக்தியையுடையவராகக்கூடும்;
சொல்	அருளிச் செய்த		(ஆதலால்)
பண் கொள் ஆயிரத்து	ராகப்ரதாநமான இவ்வாயிரத்தினுள்ளும்	பயிலுமின்	(இப்பதிகத்தை) அப்யஸியுங்கோள்.

* * * [கண்கள்காண்டற்கு.] இத்திருவாய்மொழியை ஓத, பழுதில்லாத பக்தியுடையராகை திண்ணம்; ஆனபின்பு இத்திருவாய்மொழியை ஓதுங்கள் என்கிறார்.

காணப்பெறாத க்லேசத்தோடே அருளிச் செய்கிறார் கண்கள்காண்டற்கு அரியனாய் என்று. பகவத் தத்வம் ஒருநாளும காணக்கிடைக்க மாட்டாதது என்று மறந்து பிழைக்கலாமே, அப்படியும் பிழைக்கவொண்ணாதபடி நெஞ்சுக்கு முன்னிலையாயிருக்கும் படியை "கருத்துக்கு நன்றுமெளியனாய்" என்றவிதனால் அருளிச் செய்கிறார்.

ஆழ்வார்க்கு விச்லேஷமாவது—பாஹ்ய ஸம்ச்லேஷா பேக்ஷயாலே மாநஸாநுபவத்துக்கு வரும் கலக்கம்; ஸம்ச்லேஷமாவது—ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமான ஜ்ஞாந ஸாக்ஷாத்காரம் என்றுணர்க.

மண்கோள்ஞாலத்து இத்யாதி. நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யனாயிருப்பது போலவே, ஸமஸாரிகளென்று வாசி வையாதே அர்ச்சாவதார முகத்தாலே வந்து ஸுலபனானவன் என்றபடி. ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக ஆழ்வாரருளிச் செய்த ஆயிரத்திப்பததால், எல்லாம் கிடைக்கினும் கிடையாததான பகவத்பக்தியும் கிடைக்கும்; ஆதலால் இப்பதிகத்தை அப்யஸியுங் கோள் என்றாராயிற்று.

பண்கொள்சோலை என்றவிடத்து ஈட்டில் "முக்கோட்டைபோலேகாணும் சோலையிருப்பது" என்றுள்ளது. (அதாவது) மலையாளத்தில் முக்கோட்டை என்று ஓரிடமாம்; அது மூகாம்பிகையின் கோயில் என்பர்கள்; அவ்விடத்தில் ஊமைகள் சென்றாலும் அக்கிலமிதியால் வெகு அழகாகக் கவி பாடுவார்களாம். (இது முற்கால வழக்கம்போலும்.) பெரிய திருமொழியில் (8-10-9) "பாட்டினாலுன்னை யென்னெஞ்சத் திருந்தமை காட்டினாய்" என்றவிடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் "இவரைப்பாடுவித்த முக்கோட்டையிருந்தபடி" என்றுள்ள ஸ்ரீஸூக்தியும் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

பத்தராகக்கூடும் என்றவிடத்து ஈடு;—"பரத்வஜ்ஞானத்துக்கு அடியான ஸுக்ருதமாதல் சாஸ்த்ரஜ்ஞானமாதல் ஸதாசார்யோபதேசமாதல் நிர்ஹேதுக பகவத் கடாக்ஷமாதல் இவையனைத்துமில்லாதார்க்கும் அர்ச்சாவதார ஸௌலப்யத்தை யநுஸந்திக்கவே பகவத்பக்தி யுண்டாகக் கூடும்; அவாப்த ஸமஸ்த காமனான ஸர்வேச்வரன் ஆச்ரித வாத்ஸல்யத்தாலே இவனுகந்த தொன்றைத் திருமேனியாக விரும்பி இவனமுதுசெய்வித்ததை அமுது செய்து,

அகங்கள்தோறும் புக்கு விடமாட்டாதே யிருந்தால் 'இவன் நம்மை விடமாட்டாதேயிருந்த பின்பு நாமும் இவனுக்கு ஸ்நேஹித்தாலாகாதோ' என்னக்கூடுமிறே. 'சிதி இங்கே யுண்டு' என்று சொல்லக் கற்பர்களிறே; அப்படியே 'பக்தி யுண்டாம்' என்ன அப்பவிப்பர்களென்று அருளிச் செய்கிறார்."

பத்தர்—பக்தர். ... ... (கக)

ஆறுந் திருவாய்மொழி உரை முற்றுப்பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

பத்மாக்ஷீம் பாபஹந்த்ரீம் மணிருசிம் அமராதீஶ சிந்த்யாங்க்ரிபத்மாம்
தத்தாத்ருக்குந்தலஶ்ரீஸங்கடிதமகுடாம் ப்ராபகப்ராப்யபாதாம்।
ஶுத்தாஸ்வாத்யஸ்வபாவாம் [illegible] வ்ருத்திஸேவ்யாம்
நிர்வ்யாஜாஶ்லிஷ்டவ்ருத்திம் ஹரிதநும் அவதந் நிர்மலார்சாநுரக்த:॥

(நிர்மல அர்ச்சாஅநுரக்தஃ ஹரிதநும் பத்மாக்ஷீம்.................அவதத் = அர்ச்சாவதாரத்தில் அன்பு கொண்டவரான ஆழ்வார் எம்பெருமானுடைய திருமேனியை *செய்யதாமரைக் கண்ணனுமென்கிற திருவாய்மொழியில் இவ்வனே பேசினார்; எங்ஙனே யென்னில்;)

1. பத்மாக்ஷீம். *செய்யதாமரைக் கண்ணனாய்* செந்தாமரை போன்ற திருக்கண்களை யுடையதாகவும்.

2. பாபஹந்த்ரீம். *பாவநாசனை.* பாவங்களையெல்லாம் போக்கடிக்க வல்லதாகவும்.

3. மணிருசிம். *குரவைகோத்த குழகனை மணி வண்ணனை.* நீல மணிபோன்ற சிறந்தை யுடையதாகவும்.

4. அமராதீச சிந்த்ய அங்க்ரிபத்மாம். *வானவர் தம்மை யாளுமவனு மித்யாதி.* தேவாதிபதிகளான பிரமன் சிவனிந்திரர்களாலே சிந்திக்கத்தக்க திருவடித்தாமரைகளை யுடையதாகவும்.

5. தத்தாத்ருக்குந்தளஸ்ரீஸங்கடிதமகுடாம். *சுரியும் பல்கருங்குஞ்சி யெங்கள் சுடர்முடியண்ணல்.* அழகிய திருக்குழலின் சோபையோடே சேர்ந்த திருவபிஷேகத்தை யுடையதாகவும்.

6. பாவகப்ராப்யபாதாம். *சிற்றத்தோடருள் பெற்றவனடிக் கீழ்ப்புக நின்ற செங்கண்மால.* பக்தனை ப்ரஹ்லாதாழ்வான் வந்து கிட்டலாம்படியான திருவடிகளை யுடையதாகவும்.

7. சுத்தஆஸ்வாத்யஸ்வபாவாம். *விழுமியவமரர் முனிவர் விழுங்குங் கன்னற்கனியினை.* தூய அமரர் முனிவர்களால் கன்னற்கனிபோல் அநுபவிக்க வுரியதாகவும்.

8. யமபடமதநீம். * அபரவாங்கு நமன்தமர்க்கு அருநஞ்சினை.* யமபடர்கள் அணுக அஞ்சும்படி அவர்களைத் தொலைக்கவல்லதாகவும்.

9. பக்ததீவ்ருத்திபவ்யாம். * நெஞ்சினால் நினைப்பான் யவனவனாகும்.* அடியவர்கள்நெஞ்சில் பாவித்தபடியே பவ்யமாகின்றதாகவும்.

10. நீசஉச்சஅபீஷ்டவ்ருத்திம் * கடல்வண்ணன் கண்ணணித்யாதி.* நிம்னோந்நதமான யதேஷ்ட வ்யாபாரத்தை யுடையதாகவும். அதாவது—திருப்பாற்கடலில் திருக்கண் வளர்வதாகிற உத்துங்கமான செயலையும், பார்த்தனுக்குத் தேர் செலுத்துவதாகிற தாழ்ச்சியான செயலையும் செய்தமையைச் சொன்னவாறு.—ஆக இப்படிப்பட்ட தன்மைகளை யுடையதாக [ஹரிதநும் அவதத்.] எம்பெருமானது திருமேனியை ஆழ்வார் பேசியருளினார்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய் *
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள் — எய்துமவர்க்கு
இந்நிலத்தி லர்ச்சாவதார மெளிதென்றான் *
பன்னுதமிழ் மாறன் பயின்று

செய்ய பரத்துவம்ஆய்	விலக்ஷணமான பரமபதத்திலிருப்பாய்	எய்துமவர்க்கு	ஆச்ரயிப்பவர்களுக்கு
சீர் ஆர்	மேன்மை பொருந்திய	இந்நிலத்தில்	இவ்விபூதியிலே
வியூகம் ஆய்	க்ஷீராப்தியிலிருப்பாய்	அர்ச்சாவதாரம்	அர்ச்சாவதாரமே
துய்ய	பரிசுத்தமான	எளிது என்றான்	ஸுலபம்என்று அருளிச் செய்தார்;
விபவம் ஆய்	ராமக்ருஷ்ணாதி அவதாரமாய்		(அவர்யாரென்னில்)
தோன்று	(இங்ஙனே சாஸ்த்ரங்களினால்) காணப்படுகின்ற	பயின்று பன்னு தமிழ் மாறன்	ஆராய்ந்து அருளிச் செய்யப்பட்ட தமிழ் வேதத்தையே நிரூபகமாகவுடைய ஆழ்வார்.
இவற்றுள்	இந்நிலைமைகளுள்,		

பரமபதத்திலே யெழுந்தருளியிருந்து நித்ய முக்தர்கட்குக் காட்சி தரும் நிலைமை யென்ன, திருப்பாற்கடலிலே வ்யூஹீபவித்திருக்கும் நிலைமை யென்ன, ஸ்ரீராமக்ருஷ்ணாதி ரூபேண அவதரித்த விபவாவதார நிலைமை யென்ன—ஆகிய இவற்றை யெல்லாம் விட, அர்ச்சாவதாரமாகக் காட்சி தந்தருளும் நிலைமையே இவ்வுலகில் பக்தர்களுக்கு மிகவும் எளிய தென்னுமிடத்தை ஆழ்வார் இத் திருவாய்மொழியினால் அருளிச் செய்தாரென்றாயிற்று.

எம்பெருமானுடைய நிலைமைகளுள் அந்தர்யாமித்வமும் சேர்ந்திருக்க அதனை இங்கு எடுத்துக்கூறாதது அதில் ஆச்ரயண ப்ரஸக்தி யில்லாமை பற்றி யென்று கொள்ளலாம். உபலக்ஷண விதத்தினால் அதுவும் இங்குக் கொள்ளத் தக்கதே யென்பாருமுளர்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

தாந்நிந்திதாந் நவி விஹாதுமவஶோ நயஜ்ஞ:
ஶௌரேர்து³ராபதயா விமுகாந் விசார்ய ।
அர்சாவதாரஸுலபத்வகு³ணம் ச தேஷாம்
ஸம்வம்ச தேஷு விமுகேஷு ஸம்பதாச ஷஷ்டே ॥

(கருத்து.) கீழ்த் திருவாய்மொழியில் தம்மால் நிந்திக்கப்பட்ட பாவிகளையும் விடமாட்டாத பரமகருணை வாய்ந்த ஆழ்வார் அன்னவர்களையும் சேர்த்துக் கொள்ளக் கருதினர்; அவர்கள் எம்பெருமான் திறத்தில் எதனால் விமுகர்களாக இருக்கின்றார்களென்பதைப் பற்றி ஆராய்ந்ததில், எம்பெருமான் துர்லபன் என்கிற காரணத்தினால் என்றறிந்து, அப்பெருமானுடைய அர்ச்சாவதார ஸௌலப்யத்தை இத் திருவாய்மொழியினால் அருளிச் செய்தார். இங்ஙனமருளிச் செய்தவளவிலும் அவர்களுடைய வைமுக்யம் மாறாமையினாலே திருவுள்ளம் வருந்தியும் நின்றார்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி மூன்றாம்பத்து
ஏழாந் திருவாய்மொழி—பயிலுஞ்சுடரொளி.

உரையவதாரிகை:—கீழ்த் திருவாய்மொழியில் அர்ச்சாவதார ஸௌலப்யத்தை அருளிச் செய்தவிடத்திலும் நெஞ்சில் நெகிழ்ச்சியின்றியே விஷயப்ரவணராயிருக்கின்ற ஸம்ஸாரிகளின் இயல்வைக்கண்டு வெறுத்து, அவ் வெறுப்புக்குப் பரிஹாரமாகத் தாம் ஒரு மஹாநந்தத்தை அநுபவிக்க விரும்பி ஸ்வஸ்வரூபகாஷ்டையான பாகவத சேஷத்வத்தை அநுஸந்தித்து அம்முகத்தாலே தாம் இனியராகிறார்.

ஒருவன் ஒரு வஸ்துவினிடத்தில் அன்புவைத்தால் அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால் அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல் அதனோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம்தம் அநுபவத்தாலறிவர். அப்படியே பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் எல்லைநிலமாக உண்டாமது. பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். ஸ்வாமியினுடைய பாதுகைகளிலே நாம் ஆதரம் வைத்து அவற்றைக் கண்களில் ஒற்றிக்கொள்வதும் தலைமீது அணிந்துகொள்வதும் அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம்; இதனால் நமக்கு ஸ்வாமி

யிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதன்றோ வெளியாகின்றது. அதுபோலவே இங்கும் "அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியாரடியோங்களே" இத்யாதிகளால் பாகவத சேஷத்வாதிசயத்தைப் பேசவதெல்லாம் பகவச் சேஷத்வத்தின் உறைப்பையே பேசினபடியாகும்.

திருமந்திரத்தில், அஹங்காரமும் மமகாரமும் நீங்கப்பெற்று பகவத் சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற நமஸ்ஸிலே அந்த பகவத் சேஷத்வத்தின் எல்லைநிலமான பாகவத சேஷத்வம் அநுஸந்திக்கப்பட வேணுமென்பது சாஸ்த்ரார்த்தம். இந்த பாகவத சேஷத்வம் திருமந்திரத்திலுள் ப்ரணவத்தின் உள்ளீடான அகாரத்திலே தோற்றுமென்று சிலரும் உகாரத்திலே தோற்றுமென்று சிலரும் சொல்லுவது முண்டு. எங்ஙனே யெனில், அகாரத்தின்மேல் ஏறிக்கிடந்து லோபமடைந்துள்ள சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவத் சேஷத்வம் சொல்லப்படுகையாலே அந்த சேஷத்வத்தின் எல்லையான பாகவத சேஷத்வத்தை அகாரத்திலே அநுஸந்திக்கலா மென்பர் சிலர்; அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு எல்லை பாகவத சேஷத்வமாகையாலே அந்த அநந்யார்ஹத்வத்தைச் சொல்லுகிற உகாரத்திலே அதன் எல்லையான பாகவதசேஷத்வத்தை அநுஸந்திக்கலா மென்பர் சிலர். அர்த்தாத் ஸித்தமாக அநுஸந்திக்க வேண்டுவதை எந்த இடத்தில் அநுஸந்தித்தாலும் குறையில்லையாகிலும் அஹங்காரமமகாரங்கள் கழிவதைக் காட்டுகின்ற நமஸ்ஸிலே அதனை அநுஸந்திப்பது மிகப் பொருந்து மென்பது நம் ஆசாரியர்களின் திருவுள்ளம்.

திருமந்திரத்திற்கு முக்கியமான பொருள் பாகவத சேஷத்வமே யென்பதை * மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த மங்கையர் கோன் தமது திருமொழியில் "மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங் கற்று நான்—உற்றதுமுன்னடியார்க்கடிமை" என்ற பாசுரத்தினால் தெளிய வைத்தார் என்பது இங்கு அறியத்தக்கது.

பயிலும்சுடரொளிமூர்த்தியைப் பங்கயக்கண்ணனை *
பயிலவினிய நம்பாற்கடல்சேர்ந்தபரமனை *
பயிலும்திருவுடையார் யவரேலுமவர்கண்டீர் *
பயிலும்பிறப்பிடைதோறு எம்மையாளும்பரமரே (க)

பயிலும் சுடர் ஒளி மூர்த்தியை	செறிந்த சுடர்ச் சோதி யுருவனாய்
பங்கயம் கண்ணனை	தாமரை போன்ற திருக் கண்களை யுடையனாய்
பயில இனிய	பழகப்பழகப் பரம போக்யனாய்
நம் பால் கடல் சேர்ந்த பரமனை	நமக்காகத் திருப்பாற் கடலில் துயில் கொண்டருளும் பரம புருஷனை எம்பெருமானை
பயிலும் திரு உடையார்	நிரந்தராநுபவம் பண்ணுகையாகிற செல்வமுடையவர்கள்
யவர் எலும்	* எதுபிறப்பு எதியல் வாக நின்றவரானாலும்
அவர்	அவர்களே
பயிலும் பிறப்பிடை தோறு	மேன்மேலும் நேர்கின்ற பிறவிகள் தோறும்
எம்மை	நம்மை
ஆளும்	அடிமை கொள்ளவல்ல
பரமர் கண்டீர்	மஹான்களாவர்.

• • • [பயிலுஞ்சுடரொளி.] எம்பெருமானுடைய வடிவழகிலும் திருக்கல்யாண குணங்களிலும் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆரேனுமாகிலும் எனக்கு ஸ்வாமிகள் என்கிருர். *இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:—இச்சாக்ருஹீதாபிமதோருதேஹ:" என்கிறபடியே அடியவர்களுக்காக ஸ்வஸங்கல்பத்தாலே பரிக்ரஹித்தருளும் திருமேனி தேஜோராசி மயமாயிருக்கும்படியைச் சொல்லுகிருர் பயிலுஞ்சுடரொளிமூர்த்தியை என்பதனுல். இவ்விடத்தில் * கநகமரதகாஞ்ஜநத்ரவாணாம் மதநஸமுத்திதஸாரமேலநோத்தம் । ஜயதி கிமபி ரூபமஸ்ய தேஜ:—கநகமரதகாஞ்ஜநத்ரவாணும் மதநஸமுத்திதஸாரமேலநோத்தம், ஜயதி கிமபி ரூபமஸ்ய தேஜ:" என்கிற ஆழ்வானுடைய திவ்யஸூக்தியும், "த்ருதகநகஜகிரிபரிமிலததிப்ரசலிதலஹரிவத் அஹமஹமிகயா । ஸ்நபயதி ஜநம்மபஹரதி தப: பணிசயமரதகமணிகிரணகண:—த்ருதகநகஜகிரிபரிமிலததிப்ரசலிதலஹரிவத் அஹமஹமிகயா, ஸ்நபயதி ஜநம்மபஹரதி தப: பணிசயமரதகமணிகிரணகண:" என்கிற பட்டர் திவ்யஸூக்தியும் அநுஸந்திக்கத்தகும். சுத்தஸத்வமயமாய் ஸ்வரூபப்ரகாசகமான திவ்ய விக்ரஹத்திலீடுபட்டவர்கள் எமக்கு ஸ்வாமிகள் என்கை.

பங்கயக்கண்ணனை=கீழ்ச் சொன்ன வடிவழகிலுங்கூட அகப்படாதாரையும் அகப்படுத்திக் கொள்ளவல்ல திருக்கண்ணழகிலே யீடுபட்டு "கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி, நீண்டவப் பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே." என்றாற்போலே பேசுமவர்கள் எமக்கு ஸ்வாமிகள் என்கை. "க: புண்டரீகநயந: புருஷோத்தம: க:" என்கிறபடியே திருக்கண்ணழகே பரத்வ ஸூசகமாகையாலே அந்தப் பரத்வத்திலே யீடுபட்டவர்கள் எமக்கு ஸ்வாமிகள் என்றவாறு.

பயிலவினிய='பயிலப்பயில வினிய' என்றபடி. பகவத் விஷயத்தில் இடைவிடாத பரிசயம் பண்ணினுலும் இனிமை [—போக்யதை] ப்ரதிபத்தி விஷயமாகுமேயல்லது வைரஸ்யம் ஒருபோதும் தோற்ருதென்று கருத்து. இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"இப்படி வடிவழகும் கண்ணழகும் கண்ணழிவற்றிருக்கையாலே இனியதாயிருக்குமிறே. இதர விஷயங்கள் கிட்டுந்தனையும் ஒன்றுபோலேயாய், கிட்டினவாறே அகல வழி தேடும்படியாயிருக்கும்." என்று,—* எப்பொழுதும் நாள்திங்களாண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுத மென்னும்படியான நித்யாபூர்வமான விஷயமாகையாலே எனை யூழிகாலம் இடையருத பரிசயம் பண்ணினுலும் ஸாரஸ்யமே அதிகரித்துச் செல்லும் விஷய மென்றபடி.

நம்பாற்கடற்சேர்ந்த பரமனை=நம்போன்ற அடியவர்களின் ஆர்த்தத்வநி செவிப்படுகைக்காகவும், செவிப்பட்டவுடனே பதறி யெழுந்துவந்து பரித்ராணம் செய்தருள்வதற்காகவும் திருப்பாற்கடலில் சாய்ந்தருளும்படியை வாயாரப்பேசி அந்தக் கிடையழகிலே யீடுபட்டிருக்குமவர்கள் எமக்கு ஸ்வாமிகள் என்றபடி. பரமன் என்பதற்கு—தன்னிற்காட்டில் மேற்பட்டாரில்லாதவன் என்று பொருள். [அஸ்மாத் பர இதி வ்யுத்பத்தி:—; அஸ்மாத்—இவனிற் காட்டில், பர:—மேற்

பட்டவன், மா— இல்லை என்றபடி. இந்த வ்யுத்பத்தியைத் திருவுள்ளம்பற்றி நம் பிள்ளை யருளிச் செய்கிறார் காண்மின் ;—“ [பரமனை] வடிவழகாலும் குணங்களாலும் அல்லாதாரைக் கழித்து இங்கே ஓர் ஏற்றம் சொன்னீர் ; மேன்மைக்கு இவனுக்கு அவ்வருகேதான் ஒரு விஷயமுண்டோ வென்னில் ; மேன்மைக்கும் இவனுக்கவ்வருகு ஒரு விஷயமில்லை.” என்று.

பரமனைப்பயிலுந் திருவுடையார = எம்பெருமானோடு இடைவிடாது பழகுவதையே பெருஞ் செல்வமாக வுடையவர்கள். அற்ப பலன்களுக்காக எம்பெருமானை அனுகுபவர்களாயிருந்தால் அப்பலன் கை புகுந்தவாறே விலக நினைப்பர்கள் ; அங்ஙனல்லாமல் அவன்தன்னையே ப்ரயோஜனமாகக் கொண்டு நெருங்கினவர்கள் விலக வழியில்லையே ; ஆகவே “பரமனைப் பயிலுந் திருவுடையார்” என்றது எம்பெருமானையே ஸ்வயம் ப்ரயோஜனமாகப் பற்றின சீமான்கள் என்றபடி. திருவுடையார் என்றதனால், பரமனிடத்து நெஞ்சு குடிகொண்டிருத்தலே சிறந்த செல்வமென்று தெரிவித்தவாறும். இளைய பெருமாள் “வநிதாவிடகாயாஸ்—கநித்ரபிடகாதர:” என்கிறபடியே மண்வெட்டியும் புட்டக்கூடையுமாய்க் காட்டுக்குப் புறப்படுகையில் அவரிடத்து என்ன செல்வ மிருந்தது ; அப்போது “லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:” என்று பேசப்பட்டிருக்கின்றார் ; பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியிலே ஒழிவில்கால மெல்லாமுடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யப்பெற வேணுமென்று பாரிப்புக் கொண்டிருந்தாரே, அதைவிட்டுத்தான் அப்போது லக்ஷ்மிஸம்பந்ந ரென்று பேசப்பட்டார். விபீஷணாழ்வான் ராவண கோஷ்டியில் நின்றும் தூரத்தப்பட்டு ஸ்ரீராம கோஷ்டிக்கும் ஆளாகப் பெறுமல் த்ரிசங்கு ஸ்வர்க்கமாக ஆகாசத்தில் நின்றிருந்த காலத்து “அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்” எனப்பட்டான்; அப்போது அவனிடத்திருந்த ஸ்ரீயாவது என்ன? ‘நாம் ஸ்ரீராம கோஷ்டியில் அந்வயிக்கப் பெறுதொழியினும் இனி அரக்கர் திரளிலே புகுவதென்பது கிடையாது’ என்று கொண்டிருந்த அத்யவஸாயமே அவற்குச் சிறந்த செல்வமாயிற்று. கஜேந்திராழ்வான் முதலை தன்னுடைப் புண்டு துடித்துக்கிடந்த காலத்து “ஸ து நாகவர: ஸ்ரீமாந்” எனப்பட்டான் ; அப்போது அவற்கு இருந்த ஸ்ரீ யாது கொல்? உயிர் போகுந் தருணத்திலும் கையிற் பூ செவ்வி யழியாமே எம்பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட வேணுமென்று கொண்டிருந்த குதூஹலமேயாயிற்று ஸ்ரீ எனப்பட்டது : ஆக இவ்வகையிலே பக்த கோஷ்டிகளில் ப்ரஸித்தமான செல்வமே இங்குத் திரு என்பதனால் விவக்ஷிக்கப்படுகின்றதென்க.

யவரேலும் = பரமனைப் பயிலுந் திருவுடையவர்கள் பிறந்த வருணம் எதுவாகவுமாம், அவர்களுடைய அறிவு, தொழில் முதலியவை எப்படிப்பட்டதாகவுமாம், அவற்றைக் கணிசிக்கத் தேவையில்லை ; அவர்களிடத்துப் பரமனைப்பயிலுந் திரு உள்ளதா என்பதொன்றே பார்க்கத்தக்கது என்றபடி.

அவர்கண்டீர் பயிலும்பிறப்பிடைதோறு எம்மையாளும்பரமர் = பகவானுக்கு நாங்கள் ஆட்பட்டவர்களல்லோம் ; அத்தகைய பாகவதர்கட்கே ஆட்பட்டவர்கள் என்கிறார். மேன்மேலும் பிறப்பது எமக்கு ஹேயமேயாயினும்

பாகவதர்கட்கு ஆட்பட்டிருத்தலாகிற பெருஞ்செல்வம் கிடைக்கப் பெறுவதாமாகில் எத்தனை பிறப்புக்கள் நேர்ந்தாலும் உத்தேச்யமே என்கிற கருத்து "பயிலும் பிறப்பிடை தோறு" என்பதில் உய்த்துணரத் தக்கது. இங்கு இருபத்தினாலாயிரப்படியில் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி காண்மின் ;— "• தின்பன்மா மாயப் பல்பிறவியென்று நிந்தித்த ஜன்மத்தையும் அநுமதி பண்ணுகிருர் ததீய சேஷத்வ ரஸத்தாலே." என்று. ... ... (க)

ஆளும்பரமனைக்கண்ணனை ஆழிப்பிரான்தன்னை *
தோளுமோர்நான்குடைத் தூமணிவண்ணனெம்மான்தன்னை *
தாளும்தடக்கையும்கூப்பிப் பணியுமவர்கண்டீர் *
நாளும்பிறப்பிடைதோறு எம்மையாளுடைநாதரே. (உ)

ஆளும் பரமனை	ஆள்கின்ற பரம புருஷனையும்	எம்மான் தன்னை	எம்பெருமானை
கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணனையும்	தாளும் தடக்கையும் கூப்பி	கால்களையும் கைகளையும் கூப்பி
ஆழி பிரான் தன்னை	திருவாழியாழ்வானையுடைய உபகாரகனையும்	பணியும் அவர்	நமஸ்கரிப்பவர்கள்
ஓர் நான்கு தோளும் உடை	ஒப்பற்ற நான்கு புஜங்களை யுடையவனையும்	பிறப்பிடை தோறு	ஜன்மந்தோறும்
தூ மணி வண்ணன்	பரிசுத்தமான நீலமணி போன்ற நிறத்தை யுடையவனுமிருக்கின்ற	நாள் தோறும்	தினந்தோறும்
		எம்மை	எங்களை
		ஆள் உடை நாதர் கண்டீர்	ஆட்கொள்ளும் அடிகளாவர்

• • • [ஆளும்பரமனை.] எம்பெருமானுடைய திவ்யாவயவ ஸௌந்தர்யத்தால் வசீகரிக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் எனக்கு ஸ்வாமிகளென்கிருர். கீழ்ப்பாட்டில் * பரமனைப்பயிலுந் திருவுடைய ஸ்ரீவைஷ்ணவர்களே எம்மையாளும் பரமர் என்று சொல்லிவைத்து இப்பாட்டில் "ஆளும்பரமனை" என்ருல் இது தகுதியோ? பாகவதர்களன்றோ ஆளும்பரமர் ; இப்போது எம்பெருமானை ஆளும்பரமனைச் சொல்லலாமோ வென்னில் ; சொல்லலாம் ; எம்பெருமான் தன் திருவடிகளின் கீழ் வந்து புகுந்தவர்களைப் பாகவத சேஷபூதர்களாக ஆக்கி ஆள்கின்ருனென்பதுவே இங்கு விவக்ஷிதம். "அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்" என்ற திருப்பாணாழ்வார் பாசுரம் இங்கு அநுஸந்திக்கத்தகும்.

கண்ணனை = பாகவத சேஷத்வத்தை ஸ்வாநுஷ்டான முகத்தாலே காட்டி யருளினவன் கண்ணபிரான் ; எங்ஙனே யென்னில், பாகவதர்களில் தலைவனை நம்பிமூத்தபிரானுக்கு [—பலராமனுக்கு]ப் பின்பிறந்து "பலதேவற்கோர் கீழ்க்கன்ருய்" என்னும்படி அவனளவிலே பாரதந்திரியத்தைக் காட்டினபடி காண்க.

ஆழிப்பிரான்தன்னை = திருவவதரிக்கும்போதே கையுந்திருவாழியுமாய்த் திருவவதரித்து, பிறகு பாரதப்போரில் 'ஆயுத மெடேன்' என்று சொல்லிவைத்தும் ஆச்ரித பக்ஷபாதத்தாலே ஆயுத மெடுத்தும் காரியம் செய்தருளினவன்.

தோளுமோர்நான்குடை = "𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌦𑌾𑌤𑌾 𑌦𑍇𑌵𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌃 — சதுர்ணாம் புருஷார்த்தாநாம் தாதா தேவச் சதுர்ப்புஜ:" என்கிறபடியே அடியார்களுக்கு நால்வகைப் புருஷார்த்தங்களையும் கொடுத்தருள்வதற்கு நான்கு திருக்கைகள் படைத்தவன். பட்டர் திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும்போது அனந்தாழ்வான் திவ்ய தேசயாத்திரையாக அங்கு எழுந்தருளினர்; அப்போது அவர் பட்டரை நோக்கி "பரமபதத்தில் எம்பெருமான் சதுர்ப்புஜனாய் எழுந்தருளியிருக்கிறானோ? த்விபுஜனாய் எழுந்தருளியிருக்கிறானோ?" என்று கேட்க, ஸர்வஜ்ஞரான அனந்தாழ்வானுக்கு நாம் ஸந்தேஹ நிராஸம் செய்ததாக ஆகவொண்ணாதென்று கருதிய பட்டர், "த்விபுஜன் என்று தேறினால் பெரிய பெருமாளாக அநுஸந்திக்கிறோம்; சதுர்ப்புஜன் என்று தேறினால் நம்பெருமாளாக அநுஸந்திக்கிறோம்" என்றாராம். இதன் கருத்து யாதெனில்; பெரிய பெருமாள் "கையினார் சுரிசங்கனலாழியர்" என்ற திருப்பாணாழ்வார் பாசுரத்தின்படி சதுர்ப்புஜராயிருக்கவும் அறிவிலிகளான நமக்கு த்விபுஜராகத் தோற்றுவதுபோல் பரமபதநாதனும் சிலருடைய அறிவுக்கு த்விபுஜனாகத் தோற்றக்கூடும்; மந்தோதரி புலம்பும்போது "𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌮𑍋 𑌧𑌾𑌤𑌾 𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌧𑌰𑌃 — தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:" என்று பேசியிருக்கிறாளாகையாலே பரமபதநாதன் அவளுக்குச் சதுர்ப்புஜனாகத் தோற்றினமை ஸ்பஷ்டம்; அதுவே ப்ரமாண கதிக்குச் சேரும் என்பதாம். இவ்விஷயம் இவ்விடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் விசதமாகக் காணத்தகும்.

தூமணிவண்ணனம்மான்தன்னை = சிறந்த ரத்னம்போலே ஒளிமல்கியிருப்பவனென்றபடி. ரத்னத்தின் ஸ்வபாவம்போன்ற ஸ்வபாவமுடையவன் என்னவுமாம். (அதாவது:—) ரத்னம் எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி யிருக்கும்; எம்பெருமானும் பரத்வத்தை மறைத்து ஸௌலப்யத்தையே காட்டுவன். ரத்னம் கடல், மலை முதலிய இடங்களிலுள்ளது; எம்பெருமானும் "மலைமேல்நிற்பாய் கடல்சேர்ப்பாய்" என்கிறபடியே திருப்பாற்கடல் திருமலை முதலான விடங்களிலுள்ளன். ரத்னமானது இடையில் ஒரு புருஷனைக் கொண்டே வாங்கப்படும்; எம்பெருமானுமப்படியே; புருஷகாரமின்றிப் பெறமுடியாதே எம்பெருமானை. "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்றன்றோ பெரியார் பாசுரமிருப்பது. ரத்னமானது சிலசில ஆச்ரயங்களில் அதிகமான மதிப்புப் பெறும்; எம்பெருமானுமப்படியே; ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளிலேயிறே எம்பெருமானுக்கு மதிப்பு அதிகம். ரத்னம் ஒளியைவிட்டு இராது; எம்பெருமானும் பிராட்டியை விட்டு இரான்; "𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌹𑍇𑌯𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀 — தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ." இத்யாதிகள் காண்க. ரத்னமானது ஒளியால் மேன்மை பெறும்; எம்பெருமானும் பிராட்டியால் ஏற்றமுடையான்; "𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌦𑍇𑌵𑍋 𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌹𑌾𑌯𑌿𑌤" என்றான் வேத புருஷன். இராவணன் மாரீசனிடம்வந்து 'இராமனை அடர்க்க நீ துணைநிற்கவேணும்' என்று இரக்க, "𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 — அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய

னா ஜநகாத்மஜா” என்றன்றோ விடை கூறினது. ‘ஸீதா பிராட்டியைக் கைப்பிடித்தவனன்றோ இராமபிரான்; அவனை அடர்க்கலாகுமோ?’ என்றான். ரத்னமானது தன்னை யிழந்தவனைக் கதறிக்கதறி யழப்பண்ணும். எம்பெருமானுமப்படியே: ஸ்ரீராமரத்னத்தை யிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறி யழுதமை ஸ்ரீராமாயணத்தில் ப்ரஸித்தம். “பழுதேபலபகலும் போயின” என்று கதறியழுவர் விவேகமுடையார். “இன்பத்தை யிழந்த பாவியேன் எனதாவி நில்லாதே” “எழில்கொள் நின் திருக்கண்ணிணை நோக்கந்தன்னையும் இழந்தேனிழந்தேனே” “உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கி யழுவன்” என்றபடி யெல்லாம் கதறுவர்கள்.—இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானைத் தாளும்தடக்கையுங்கூப்பிப் பணியுமவர்கள் யாவரேலும் அவர்களே பிறவிதோறும் எம்மை ஆட்கொள்ளவல்ல நாதர்கள் என்றாராயிற்று.

தாளுந்தடக்கையுங்கூப்பி என்றவிடத்தில் ஒரு நுட்பம் கண்டறியத் தக்கது; தாள் கூப்புகையாவது என்ன? கை கூப்புகையாவது என்ன? என்று ஆராயவேணும். இவையிரண்டாலும் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் தெரிவிக்கப்பட்டவாறும்: தாள்களைக் கூப்பிவிட்டால் வேறெங்கும் எனக்குப் போக்கிடமில்லை யென்று ஸூசனையாதலால் அதனால் அநந்யகதித்வம் தெரியும்; கை கூப்பிவிட்டால் என்கையில் ஒன்றுமில்லை என்கிற ஸூசனையாதலால் அதனால் ஆகிஞ்சந்யம் தெரியும். ஆக, அஹங்காரமமகாரங்கள் அற்றபடியைக் கூறினவாறு. ... ... (உ)

நாதனைஞாலமும்வானமுமேத்தும்நறுந்துழாய்ப்
போதனை * பொன்னெடுஞ்சக்கரத்து எந்தைபிரான்தன்னை *
பாதம்பணியவல்லாரைப் பணியுமவர்கண்டீர் *
ஓதும்பிறப்பிடைதோறு எம்மையாளுடையார்களே　(ரு)

நாதனை	ஸ்வாமியாய்	பாதம் பணிய வல்லாரை	திருவடிகளில் வணங்க வல்லவர்களை
ஞாலமும் வானமும் ஏத்தும்	உபய விபூதியிலுள்ளாரும் ஏத்துதற்குரியவனாய்	பணியும் அவர்	வணங்குமவர்கள்,
நறு துழாய் போதனை	பரிமளமுள்ள திருத்துழாய் மலர்மாலையை யுடையனாய்	ஓதும்	பேசப்படுகிற
பொன் நெடு சக்கரத்து	அழகினால் உயர்ந்த திருவாழியை யுடையனான	பிறப்பிடை தோறு	ஜன்மங்கள்தோறும்
எந்தை பிரான் தன்னை	எம்பெருமானை	எம்மை	எங்களை
		ஆள் உடையார்கள் கண்டீர்	அடிமை கொள்பவர்களாவர்.

* * * [நாதனைஞாலமும்.] எம்பெருமானுடைய தோளும் தோள் மாலையுமான அழகிலே தோற்றவர்களான பாகவதர்களுக்கும் பக்தராயுள்ளவர்கள் எனக்கு

ஸ்வாமிகளென்கிறார். நாதன் என்பதற்கு யாசிக்கப்படுபவன் என்றும் யாசிப்பவன் என்றும் இருவகையாகவும் பொருள் கொள்ள வியாகரண சாஸ்த்ரம் இடந்தரும். அடியவர்களாலே யாசிக்கப்படுபவனாக இருப்பது போலவே அடியவர்களை எம்பெருமான்தான் யாசிப்பவனாகவும் இருக்கையாலே இருவகைப் பொருளும் பொருந்தும். சரணாகதிகத்யத்தில் "ஸ்வாமி—கருணாகர—அர்த்திகல்பக!" என்கிறவிடத்திற்கு வியாக்கியானமருளின ஆசிரியர்கள் இவ்விருவகைப் பொருளும் விளங்க வியாக்கியானித் தருளினார்கள்.

ஞாலமும்வானமுமேத்தும் = "நறுந்துழாய்ப்போதனை" என்ற ஸமயில் யாஹார ஸ்வாரஸ்யத்தால், தோளும் தோள் மாலையுமான வழகைக் கண்டால் நித்ய ஸூரிகளோடு நித்ய ஸம்ஸாரிகளோடு வாசியற அனைவரும் புகழும்படியாயிருக்குமென்கிற பொருள் கிடைக்கும். பகவானைப் பழிக்கவேணுமென்கிற கருத்துடையாரும் திருத்துழாய்மாலை யணிந்திருக்குமழகைக் கண்டவாறே ஏத்தாதிருக்க முடியாதன்றோ.

பொன்னேடுசக்கரத்து எந்தைபிரான்தன்னை = மேற்சொன்ன திருத்துழாய் மாலையில் ஈடுபடாதவர்களையும் கையும் திருவாழியுமான வழகாலே ஈடுபடுத்திக் கொள்பவனாயிற்று. "இன்னாரென்றறியேன் அன்னே! ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன்" என்று மதிமருளப் பண்ணவல்ல திவ்யாயுதங்களெல்லாவற்றிற்கும் உபலக்ஷணம்.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகளைப்பணிகின்ற அடியவர்கள் யாவரோ, அவர்களே எக்காலத்தும் நமக்கு சேஷிகள் என்றாராயிற்று.

இப்பாசுரத்தின் ஈட்டில் ஒரு ஐதிஹ்யமுளது.—(அதாவது) முற்காலத்தில் பிள்ளையாத்தான் என்பாரொருவர் ஆசார்ய பும்ஸ்த்வமுடையார் பொலியநிற்பவராகையாலே க்ருஹஸ்தர்களான ஆசார்யர்களிடத்திலே பணிந்திருந்து அர்த்த விசேஷங்கள் கேட்கத் திருவுள்ளமில்லாதவராய நஞ்சீயர் பக்கலிலே வந்து 'எனக்கு ஒருருரு திருவாய்மொழி அருளிச்செய்ய வேணும்' என்று கேட்க, 'நம்பிள்ளை பக்கலில் கேட்டால்தான் விசதமாகும்; அங்கே சென்று கேளும்' என்று நஞ்சீயர் அருளிச் செய்ய, அது கேட்ட அவர் 'நம்பிள்ளையினிடத்தில் கேட்பதானால் அவரை நான் தண்டன் ஸமர்ப்பிக்க வேண்டியதாகுமே; அதற்கு இறாய்த்தன்றோ ஸ்வாமி பக்கலில் ப்ரார்த்திக்கிறேன்' என்றுகூற, அது கேட்ட நஞ்சீயர் "அப்படி ஒரு நிர்ப்பந்தமில்லை"; என்று சொல்லிக்கொண்டே நம்பிள்ளையை வரவழைத்து 'இவனுக்குப் பாங்கானபடி ஒருருரு திருவாய்மொழி சொல்லும்' என்று நியமித்தருள, நம்பிள்ளையும் ஆசார்ய நியமனத்தை சிரஸா வஹித்து அப்படியே அருளிச் செய்துவர, இத்திருவாய்மொழியளவும் கேட்டு வந்த அவர் பாகவதர்களின் பெருமை இப்படியன்றோ இருப்பதென்று தேறி, அதுவரையில் தாமிருந்த நிலைமைக்கு மிகவும் அநுதபித்து அன்று முதலாக நம்பிள்ளையினிடத்திலே அளவுகடந்த ப்ராவண்யம் காட்டிப்புக, நம்பிள்ளை

அதற்கு இசையா தொழியவே அவர் நஞ்சீயரிடத்திற் சென்று "பாகவத வைபவம் தெரியாமலே முன்பு அப்படிச் சொன்னேன்; க்ஷமித்தருள வேணும்; இனி அடியேன் அநுவர்த்திக்கும்படிகளுக் கெல்லாம் நம்பிள்ளை இசைந்திருக்குமாறு ஸ்வாமி நியமித்தருள வேணும்" என்று நிர்ப்பந்தித்துப் போந்தார் என்பதாக. ... ... (௩)

உடையார்ந்தவாடையன் கண்டிகையன்உடைநாணினன் *
புடையார்பொன்னூலினன் பொன்முடியன், மற்றும்பல்கலன் *
நடையாவுடைத்திருநாரணன் தொண்டர்தொண்டர்கண்டீர் *
இடையார்பிறப்பிடைதோறு எமக்கெம்பெருமக்களே. (ச)

உடை ஆர்ந்த ஆடையன்	திருவரைக்குத் தகுதியான திருப்பரிவட்டத்தை யுடையவனும்	மற்றும் பல் கலன்	மற்றும் பலவகைப்பட்ட ஆபரணங்களையும்
கண்டிகையன்	கண்ட பூஷணத்தை யுடையவனும்	நடையா உடை	இயற்கையாக வுடையவனுமான
உடை நாணினன்	திருப்பரிவட்டத்தின் மேல் சாத்தின திருவரை நாணை யுடையவனும்	திரு நாரணன்	ஸ்ரீமந்நாராயணனுக்கு
புடை ஆர்	ஸந்நிவேசமமைந்த	தொண்டர் தொண்டர்	அடியாராணுக்கும் அடியாரானவர்
பொன் நூலினன்	பொற்பூணூலை யுடையவனும்	இடை ஆர்	நிரந்தரமான
பொன் முடியன்	அழகிய திருமுடியை யுடையவனும்	பிறப்பிடை தோறு	பிறவிதோறும்
		எமக்கு	எங்களுக்கு
		எம் பெருமக்கள் கண்டீர்	எவ்வளவோ சிறந்தவர்களாவர்.

* * * [உடையார்ந்தவாடையன்.] திருவரை பூத்தாற்போலே யிருக்கிற திருப்பீதாம்பரத்தை யணிந்தவனாய், திருக்கழுத்திலே சாத்தும் திவ்யாபரணங்களை யுடையனாய், அழகிய அரைநூல்மாலையை யணிந்தவனாய், ஒரு பக்கத்திற்கு வேறொரு ஆபரணம் வேண்டாதபடி தானே போருமாய், காளமேகத்திலே மின்னினைப்போலே யிருக்கிற யஜ்ஞோபவீதத்தை யுடையவனாய், ஆச்ரிதரக்ஷணத்திற்கு முடிகவித்திருப்பவனாய், மற்றும் எண்ணிறந்த திருவாபரணங்களை இயற்கையாகவே அணிந்துள்ளவனான ஸ்ரீமந்நாராயணனுக்கு தாஸாநுதாஸர்களாயிருக்குமவர்கள் பிறவிதோறும் எமக்கு அஸாதாரண சேஷிகளாவர்கள் என்றாயிற்று.

"உடையார்ந்த வாடையன்" என்றவிடத்து "தாஸாமாவிரபூச் சௌரி: ஸ்மயமாநமுகாம்புஜ: । பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத:— தாஸாமாவிரபூத் சௌரி: ஸ்மயமாநமுகாம்புஜ:, பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷாந்மந்மதமந்மத:" என்கிற ஸ்ரீபாகவத ச்லோகத்தை நம்பிள்ளை வெகு அழகாக வியாக்கியானித்தருளுகிறார்.

கண்டிகையன் என்றவிடத்து ஈடு:—"கூறையுடையழகு மேலே யெழவீசிப் போகாசிற்க, நடுவே வழிப்பறித்துக் கொள்ளும் திருக்கழுத்திலாபரணம். இவரை மடிபிடித்துக் கொண்டு போய்க் கழுத்தளவு ஸௌந்தர்யத்திலே நிறுத்

திற்று." என்பதாம். இந்த ஸ்ரீஸூக்தியின் சுவை ரஸிகர்களால் சுவைக்கத் தக்கது.

"கண்டிகையன்" என்று திருக்கழுத்தினழகிலே யீடுபட்டு அநுபவியா நிற்க "உடைநாணினன்" என்று மீண்டும் கீழேயிறங்கி அநுபவிக்கும்படி எங்ஙனே? என்று சங்கைபிறக்க, அதற்கு நம்பிள்ளை அருளிச் செய்கிறார் காண்மின்—"கழுத்தே கட்டளையாக அநுபவியா நிற்க கணாழமான ஸௌந்தர்ய தரங்கங்கள் கீழே போரவீச, நடுவே நின்று அநுபவிக்கிறார்" என்று. "புடையார் பொன்னூலினன்" என்றவிடத்து—"இந்த ஸௌந்தர்ய ஸாகரத்தின் நடுவே அலையப்புக்கவாறே தமக்கு ஆலம்பனமாக ஒருநூலைப் பற்றினார்காணும்" என்றருளியுள்ள ஸ்ரீஸூக்தி பரம போக்யம். ... ... (௪)

பெருமக்களுள்ளவர்தம்பெருமானை * அமரர்கட்கு
அருமையொழிய அன்றாரமுதூட்டியவப்பனை *
பெருமைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் *
வருமையுமிம்மையும் நம்மையளிக்கும்பிராக்களே. (௫)

பெரு மக்கள் உள்ளவர் தம் பெருமானை	பெருமக்கள் என்னப் படுகின்ற நித்யஸூரிகட்குத் தலைவனும்	பெருமை	(அவனது) பெருமைகளை
அமரர்கட்கு	சாவாமை வேண்டியிருக்கும் தேவர்களுக்கு	பிதற்ற வல்லாரை	அடைவின்றியே சொல்லுமவர்களான பாகவதர்களை
அருமை ஒழிய	அருமைப்படாதபடி	பிதற்றுமவர்	அடைவின்றியே சொல்லித் துதிக்குமவர்கள்
அன்று	முன் பொருகாலத்தில்	வருமையும் இம்மையும்	இஹலோக பரலோகங்களிரண்டிலும்
ஆர் அமுது ஊட்டிய	பூர்ணமாக அம்ருதத்தைப் புஜிப்பித்தவனுமான	நம்மை அளிக்கும் பிராக்கள் கண்டீர்	நம்மை உஜ்ஜீவிப்பிக்கும் ஸ்வாமிகளாவர்.
அப்பனை	எம்பெருமானை உத்தேசித்து		

* * * [பெருமக்கள்.] ப்ரயோஜநாந்தர பரர்க்குங்கூட அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டிக் கொடுத்தருளு மெம்பெருமானுடைய ஔதார்யத்திலே தோற்றவர்களான பாகவதர்களுக்குத் தோற்றிருக்குமவர்கள் எனக்கு ஸ்வாமிகள் என்கிறார். [பெருமக்களுள்ளவர்தம் பெருமானை] பெரியோர்கள் என்று யாவருளரோ அவர்களெல்லார்க்கும் பெரியோன் என்றபடி: "யாங்கடவு ளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும் ஆங்கடவுள் நீயென்றால் அஃதுனக்கு வியப்பாமோ?" என்ற பிள்ளைப் பெருமாளையங்கார் பாசுரங் காண்க. "பெருமக்களுள்ளவர்தம் பெருமான்" என்றதற்கு "ப்ரஹ்மேசாநாதி ஸர்வ தேவர்களுக்கும் ஈச்வரன்" என்பது ஆறாயிரப்படி வியாக்யானம். "நித்யஸூரிகளுக்கு நாதன்" என்று மற்ற வியாக்யானங்கள்.

அமரர்கட்கு ஆரமுதூட்டிய வரலாறு:—முன்னொரு காலத்தில், இவ்வண்ட கோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச்சென்று திருமகளைப் புகழ்ந்துபாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப் பெற்ற ஒரு வித்யாதரமகள்

மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன்கை வீணையில் தரித்துக்கொண்டு பிரமலோக வழியாய் மீண்டுவருகையில் துர்வாஸ மஹாமுனி எதிர்ப்பட்டு அவனை வணங்கித் துதிக்க அவன் அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டான். அதன் பெருமையை யுணர்ந்து அதனைச் சிரமேற் கொண்ட அம்முனிவன் ஆனந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது அங்கு வெகு உல்லாஸமாக ஐராவத யானையின் மேற் பவனிவந்து கொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக் கொடுக்க, அவன் அதனை மாவட்டியினால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில், அம்மதயானை அதனைத் துதிக்கையாற் பிடித்திழுத்துக் கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது. அது கண்டு முனிவரன் கடுங்கோபங் கொண்டு இந்திரனை நோக்கி 'இவ்வாறு செல்வச் செருக்குற்ற உன்னுடைய ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக் கடவன' என்று சபிக்க உடனே தேவர்களின் செல்வம் யாவும் ஒழிந்தன. ஒழியவே அசுரர்வந்து பொருது அமரரை வென்றனர். பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளை யிட்டபடி அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகி யென்னும் மஹா நாகத்தைக் கடை கயிறாகப் பூட்டிப் பாற்கடலைக் கடையலாயினர். அப்பொழுது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமை வடிவமெடுத்து அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளி யிருந்தனன். இப்படி ஸ்ரீமந்நாராயணன் அக்கடலினிடையே மஹா கூர்மமாய் மந்தர பர்வதத்திற்கு ஆதாரமாய் எழுந்தருளியிருக்க, வாஸுகியின் வாலைப் பிடித்துக் கொண்ட தேவர்களும் தலையைப் பிடித்துக் கொண்ட அசுரர்களும் ஆகிய இருதிறத்தாரும் அதனை வலியப் பிடித்திழுத்துக் கடையவல்ல வலிமை யில்லாதவராய் நிற்க, அது நோக்கி அத்திருமால்தான் ஒரு திருமேனியைத் தரித்துத் தேவர்கள் பக்கத்திலேயும் வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலேயும் நின்று வாஸுகியின் வாலையும தலையையும் பிடித்து வலமும் இடமுமாக இழுத்துக் கடைந்தனன். அப்பால் அந்த ஸ்ரீமஹாவிஷ்ணு தந்வந்தரி யென்னும் தேவரூபத்தைத் தரித்து அம்ருத பூர்ணமான கமண்டலத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அந்த க்ஷீரஸமுத்ரத்திலிருந்து தோன்றினன். அப்பொழுது அசுரர்கள் தந்வந்தரியின் கையிலிருந்த அமருத கலசத்தை பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்ள அந்த எம்பெருமான் ஜகன்மோஹனமான ஒரு பெண் வடிவத்தைத் தரித்து அசுரர்களை மயக்கி வஞ்சித்து அமுதத்தைக் கைக்கொண்டு அமரர்களுடைய கோஷ்டிக்கு மாத்திரம் ப்ரஸாதித்தனன்.

[இப்படி எம்பெருமான் மோஹினீரூபத்தால் அசுரர்களை மயக்கித் தேவர்கட்கே அமிருதத்தைப் பங்கிட்டுக் கொடுத்து வருகையில், ராஹுவென்னும் ஓர் அசுரன் தான் இருக்கவேண்டிய அசுரர் கூட்டத்தை விட்டுத் தந்திரமாகத் தேவ கோஷ்டியினிடையிலே புகுந்து கையேற்று அமிருதத்தை வாங்கியுண்ண, அதனை ஸூர்ய சந்திரர்கள் குறிப்பித்த மாத்திரத்தில், எம்பெருமான் அவனை அதப்பை

யாலடித்துத் தலைவேறு உடல்வேறாக்க, அமிருத முண்டதனால் உயிர் நீங்காத அந்தத் தலையும் உடலும் விஷ்ணுவின் அநுக்ரஹத்தால் ராஹு கேதுக்கள் என் இரண்டு க்ரஹங்களாகி ஸூர்யன் முதலிய ஏழு க்ரஹங்களோடு சேர்ந்து, தம் மேற் கோள்சொன்ன ஸூர்யசந்திரர்க்குப் பகையாய்ச் சிற்சில காலத்தில் அவர்களைப் பிடித்துக் கொள்ளுகின்றன. அதுவே க்ரஹண மெனப்படுகின்றது— என்பதும் இங்கு அறியத்தக்கது]

வேறொரு பலனையும் விரும்பாமல் எம்பெருமானையே பரம ப்ரயோஜனமாக விரும்ப வேண்டுவது ஸ்வரூப ப்ராப்தம். அங்ஙனம் தன்னை விரும்பாமல் வேறொரு அற்பபலனை விரும்பி அது பெறுவதற்காகத் தன்னைவந்து பணிவாருண்டாகில் ‘ இவர்கள் நம்மையே பரமப்ரயோஜனமாகக் கொள்ளும் உத்தமாதிகாரிகளாக இல்லாவிட்டாலும், வேறொரு பலனை விரும்பினார்களாகிலும், அப்பலனைப் பெறுவதற்கு வேறொரு க்ஷுத்ர தேவதையைத் தேடி ஓடாமல் நம்மிடம் வந்தார்களே; நம்மை உபேயமாகக் கொள்ளாவிடினும் உபாயமாகவாவது கொண்டார்களே ’ என்று திருவுள்ளமுவந்து அருமையான காரியங்களைச் செய்து அவர்களது மனோரதத்தை நிறைவேற்றுபவன் எம்பெருமான்—என்பது இந்தச் சரிதையினால் விளங்கும். இப்படிப்பட்ட பெருமையைப் பிதற்றுமவர்கள் யாவர், அவர்களுடைய பெருமையைப் பிதற்றுமவர்கள் இஹலோக பரலோகங்களிரண்டிலும் நம்மை யுஜ்ஜீவிப்பிக்கும் ஸ்வாமிகள். இஹலோகத்திற் பண்ணுமுபகாரமாவது * நாட்டாரோடு இயல்வொழித்தல்; பரலோகத்திற் பண்ணுமுபகாரமாவது * அடியார்கள் குழாங்களிலே உடன் கூட்டுவது. ... (௫)

அளிக்கும்பரமனைக்கண்ணனை ஆழிப்பிரான்தன்னை *
துளிக்கும்நறுங்கண்ணித் தூமணிவண்ணனெம்மான்தன்னை *
ஒளிக்கொண்டசோதியை உள்ளத்துக்கொள்ளுமவர்கண்டீர் *
சலிப்பின்றியாண்டெம்மைச் சன்மசன்மாந்தரம்காப்பரே. (௬)

அளிக்கும் பரமனை	உபகரிக்குமிடத்தில் தனக்கு மேலில்லாதபடி உபகரிக்குமவனும்
கண்ணனை	க்ருஷ்ணனாகவந்து அவதரித்தவனும்
ஆழி பிரான் தன்னை	திருவாழியைக் கையிலேந்தி மஹோபகாரங்கள் செய்பவனும்
துளிக்கும் நறு கண்ணி	தேன் வெள்ளமிடாநின்று நறுமணம் மிக்க மாலையை யணிந்துள்ளவனும்
தூ மணி வண்ணன்	அழுக்கற்ற மாணிக்கம் போன்ற வடிவை யுடையவனும்
ஒளி கொண்ட சோதியை	அளவற்ற தேஜோரூபமான விக்ரஹத்தை யுடையவனுமான
எம்மான் தன்னை	எம்பெருமானை
உள்ளத்து கொள்ளுமவர்	நெஞ்சிலே தாங்குமவர்கள்
எம்மை	எம்மை
சலிப்பு இன்றி ஆண்டு	ஒருகாலும் கைவிடாமே அடிமை கொண்டு
சன்மம் சன்மாந்தரம் காப்பர் கண்டீர்	எத்தனை ஜன்மமானாலும் ரக்ஷிக்குமவர்களாவர்.

• • • [அளிக்கும்பரமனை.] ப்ரயோஜநாந்தரங்களை விரும்பாமல் அநந்ய ப்ரயோஜநரா யிருப்பார்க்குத் தன் வடிவழகை அநுபவிப்பிக்கும் உஜ்ஜ்வல ஸ்வபாவனை

எம்பெருமானை அநுபவிப்பார் நமக்கு ரக்ஷகரென்கிறார். அளிக்கும் பரமன் என்றது—அளிக்கும் விஷயத்தில் தனக்கு மேற்பட ஒருவனுமில்லாதவன் என்றபடி. அதாவது— உலகத்தில் ரக்ஷகர் என்று பேர் சுமப்பவர்கள் பலருண்டாகிலும் எம்பெருமானை அத்விதீயரக்ஷகன் என்பது கருத்து: (அல்லது) பிறர்க்குக்கொடுக்கும் விஷயத்தில் தனக்கு மேலில்லாதவன்—தன்னையே கொடுப்பவன் என்றுமாம். தன்னையே கொடுப்பதுமுண்டோ வென்ன, கண்ணனை என்கிறார். கண்ணனாய்த் திருவவதரித்து ஒவ்வொருவர்க்கும் தன்னை முற்றாட்டாகக் கொடுத்தமை உணர்க.

ஆழிப்பிரான்தன்னை = பிறர்க்குத் தன்னையே கொடுப்பதுபோலத் தனது திவ்யாயுதத்தையும் அவர்களுக்கே தந்து உபகரிப்பவன். ஸூர்ய வம்சத்தவனான அம்பரீஷ சக்ரவர்த்தி ஸ்ரீகுலசேகரப் பெருமாளைப்போலே ராஜ்ய போகம் முதலியவற்றில் பரமவிரக்தனும் பகவத்பாகவத ப்ராவண்யனுமாயிருக்க, அதனால் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான் தனது திருவாழியாழ்வானை அவ்வரசனது மாளிகையில் இருந்துகொண்டு அவனுக்கு ரக்ஷை பண்ணிக் கொண்டு போரும்படி நியமித்திருந்தான். இப்படி யிருக்கையில் அவ்வரசன் ஸம்வத்ஸர ஸாத்யமான ஒரு த்வாதசீவ்ரதத்தை அநுஷ்டிக்க விரும்பி அப்படியே ஓராண்டளவும் அநுஷ்டித்து ஸம்வத்ஸராந்த த்வாதசி திதியில் எண்ணிறந்த அந்தணர்கட்கு தக்ஷிணை கொடுத்து அவர்களது அநுமதி பெற்றுப் பாரணைபண்ணப் புகுமளவில் துர்வாஸாவென்னும் முனிவர் காட்சி தந்தார். மாமுனிவர் அதிதியாக வந்தாரே யென்று பெருமகிழ்ச்சி கொண்ட அம்பரீஷர் அவரை நல்வரவேற்றுப் பாரணைக்கு எழுந்தருள வேண்டினார். அம்முனிவர் அதற்கு இசைந்து 'இதோ மாத்யாஹ்நிகாநுஷ்டானம் முடித்துவருகிறேன்' என்று சொல்லி யமுனைக்குச் சென்றவர் நெடும்போது த்யானத்தில் இருந்துவிட்டார்; த்வாதசிதிதி முடிவதற்குள் பாரணை பண்ணாவிடில் விரத லோபம் நேர்ந்துவிடுமே யென்றும், அதிதியை உபேக்ஷித்துப் பாரணை பண்ணிவிட்டால் பெரும்பாதகம் நேருமே என்றும் சிந்தித்து இன்னது செய்வதென்று தோன்றாமல் துடித்துக் கொண்டிருக்கின்ற அம்பரீஷர் தர்மசாஸ்திர நிபுணர்களைத் திரட்டி மேல் செய்ய வேண்டுவதைப்பற்றி ஆராய்ந்தவளவில் "அபோச்நாதி தந்நைவாசிதம் நைவாநசிதம்" என்ற வேதவாக்கியத்தைக் கொண்டு ஜலபாரணை பண்ணுவதென்று நிஷ்கர்ஷித்து, தீர்த்தமாத்ர பானத்தாலே விரதத்தைத் தலைக்கட்டி அந்நபாரணைக்காக அம்முனிவரின் வரவை எதிர்பார்த்திருந்தார். ஸாவகாசமாக அனுட்டானங்களை முடித்துவந்த முனிவர் 'அரசர் தலைவன் தீர்த்தபாரணை பண்ணிவிட்டான்' என்றறிந்து மிக்க சீற்றமுற்றுத் தமது சிரஸ்ஸில் நின்றும் ஒரு சடையை யெடுத்து அதனால் காலாக்நிக்கு ஒத்த ஸமானவொரு க்ருத்யையை உண்டாக்கி, அதனை அம்பரீஷரைக் கொல்லுமாறு ஏவினார். தன்னைக் கொல்வதாகவந்த அந்த க்ருத்யையைக் கண்டும் ராஜா சிறிதும் சலிக்கவில்லை. அவ்வரசனது ரக்ஷைக்காக எப்போதும் க்ருஹத்திலேயே ப்ரதிஷ்டிதராயிராநின்ற திருவாழியாழ்வான் ஒரு நொடிப்பொழுதில் அந்த க்ருத்யையை தஹித்துவிட்டு அந்த துர்வாஸாவையும் நலிவதாக மிக்க பிரதா

பத்துடன் அவரைத் துரத்திக்கொண்டு செல்ல, அஞ்சியோடுமவர் எங்குப் போயும் சரணம் பெறாது எம்பெருமானைச் சரணம் புகுந்த வளவிலும் 'அம்பரீஷர் காலிலே விழுந்தாலன்றி இந்த ஆபத்து நீங்காது' என்றறிந்து அவர் காலிலே விழுந்து க்ஷாமணம் பண்ணிக்கொண்டு உயிர்தப்பினர் முனிவர் என்ற கதையினால் எம்பெருமான் திருவாழியை அன்பர்க்கு ஆக்கிக் காத்தருளுந் திறம் அறியத்தக்கது.

இப்படியாக ஆச்ரிதரக்ஷணம் செய்தற்கென்றே தனிமாலை யிட்டிருப்பவ னென்கிறது துளிக்கு-நறுங்கண்ணி யென்பதனால். இங்ஙனே ஆசிரிதரக்ஷணம் செய்வதுதானே காரணமாக அவனது திருமேனி புகர்பெற்று விளங்கும்படியை அருளிச்செய்கிறார் தூமணி வண்ணன், ஒளிக்கொண்ட சோதியை என்பவற்றால். —ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை உள்ளத்துக் கொள்ளுமவர் ஒரு சலனமில்லாதபடி எம்மையாண்டு இந்த ஜன்மத்தோடு ஜன்மாந்தரங்களோடு வாசியற என்ஞான்றும் ரக்ஷிக்குமவர்கள் என்றாராயிற்று.

சன்ம சன்மாந்தரம்—வடசொல் தொடர். ... ... (கூ)

சன்மசன்மாந்தரம்காத்து அடியார்களைக்கொண்டுபோய் *
தன்மைபெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க்கொள்ளுமப்பனை *
தொன்மைபிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கண்டீர் *
நன்மைபெறுத்தெம்மை நாளுய்யக்கொள்கின்றநம்பரே. (எ)

சன்மம் சன் மாந்தரம் காத்து	மாறிமாறிப்பல பிறப்பும் பிறவாதபடி காத்து	தொன்மை	இயற்கையான ஔதார்ய குணத்தை
அடியார்களை	அடியவர்களை	பிதற்ற வல்லாரை	வாய்வந்தபடி சொல்லித் திரியும் பாகவதர்களை
கொண்டுபோய்	(நித்ய விபூதியிலே) கொண்டுபோய்	பிதற்றுமவர்	வாய்வந்தபடி புகழுமவர்கள்
தன்மை பெறுத்தி	ஸ்வஸ்வரூப ப்ராப்தியைப் பண்ணிக் கொடுத்து	எம்மை	நம்மை
தன் தாள் இணை கீழ்	தனது திருவடிகளின் கீழே	நன்மை பெறுத்து	நன்மை பெறும்படி பண்ணி
கொள்ளும்	அடிமை கொண்டருள்கின்ற	நாள்	ஆத்ம தத்துவமுள்ள வரையில்
		உய்யக் கொள்கின்ற	உஜ்ஜீவிப்பிக்க வல்லவர்களாக
அப்பனை	ஸ்வாமியினுடைய	நம்பர் கண்டீர்	நம்பப்படுமவர்களாவர்.

* * * [சன்ம சன்மாந்தரம்.] அடியவர் திறத்து அவன் செய்தருளும் மஹோபகாரங்களை அநுஸந்தித்து அப்படிகளைப் பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர்கள் கிடீர் எனக்கு என்றைக்கும் ஸ்வாமிகளென்கிறார். அவரவர்கள் செய்துபோந்த கருமங்களுக்குப் பலனாக எத்தனையோ ஜன்மங்கள் நேர வேண்டியிருக்கும்; இருந்தாலும் ஸ்வல்பமான ஆபிமுக்கியத்தையே கணக்கக்கொண்டு அந்த ஜன்மாந்தரங்கள் விளையாதபடி பரிஹரித்துத தந்தருள்வன் எம்பெருமான்.

இங்கே சுட்டு ஸ்ரீஸூக்திகள் இன்சுவையே வடிவெடுத்திருப்பனவாதலால் அவை எண்டெடுத்துக் காட்டப்படுகின்றன:—" [கொண்டுபோய் இத்யாதி.]

'மரணமானால்' என்கிறபடியே சரீரவிச்லேஷத்தளவும் பொறுத்திருந்து அந்திம ஸ்ம்ருதியும் பக்தியும் இவர்களுக்குப் பணியாக்காதே "அஹம் ஸ்மராமி" என்கிற படியே தானே நினைத்து, வழி தெரியாதபடியிருக்கிற சதாதிகையான காடியாலே 'ஹார்த்தாநுக்ருஹீத:' என்கிறபடியே தான் கூடக்கொண்டு புறப்பட்டு, அந்த சரீரவிச்லேஷ ஸமயத்தில் இவன்பட்ட க்லேசமெல்லாம் தீரும்படியாக அவ் வளவிலே ஒரு பரமாத்ம ப்ரவேசத்தைப் பண்ணுவித்து, சிறு ப்ரஜைகள் நொந் தால் தாயானவள் சிசிரோபசாரம் பண்ணுமாபோலே அவ்வளவிலே மேல்வழி போகைக்குத் தரிப்புண்டாம்படி பண்ணி "உயிர்கொண்டுடலொழிய வோடும் போதோடி, அயர்வென்ற தீர்ப்பான்" என்கிறபடியே சென்று முகங்கொடுத்து, கர்ம ஸம்பந்தமறச் செய்தேயும் வித்யாமாஹாத்ம்யத்தாலே விரஜையளவும் ஸூக்ஷ்மசரீரம் நிற்கும்படி பண்ணி, அர்ச்சிராதி கணங்களோடொக்க ஆனிட் டிராதே 'நயாமி' என்கிறபடியேதானே வந்து 'மாதவன்றன் துணையா நடந் தாள்' என்கிற * கள்வன் கொல்லில் பிராட்டியைப்போலே தன்சிறகின் கீழே கொண்டு, வழியிலுள்ளார் சிரஸா வஹிக்கும்படி இவ்வருகுள்ளவற்றைக் கழித் துப் பரமபதத்திலே கொண்டுபுக்கு, 'ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே' என்கிறபடியே ஸ்வஸ்வரூப ப்ராப்தியைப் பண்ணிக் கொடுத்து, பின்னையும் விடாதே வாசோவயாநமாகத் தன் திருவடிகளின் கீழே யிட்டுக்கொண்டு, இதுதான் இவனுக்கு உபகரித்தானாயிருக்கை யன்றிக்கே தன் பேறாக நினைத் திருக்கும் மஹோபகாரகனை."

தோன்மையிதற்றவல்லாரை = தொன்மை—இயற்கையான குணம் என்ற படி. அதாவது இங்கு ஔதார்யகுணம். முன்னடிகளில் ஔதார்யம் பேசப் பட்டதாதலால் அதுவே யிங்குக்கொள்ளவுரியது. அக்குணத்திலே யீடுபட்டுப் புகழுமவர்களைப் புகழுமவர்கள் பாகவத சேஷத்வபர்யந்தமான பகவத் சேஷத்வஸ ம்பந்தத்தையுண்டாக்கி நமக்கு அவன் திருவடிகளில் கைங்கரியத்தை என்றென்றும் நடத்தக்கடவ பெரியார் என்றதாயிற்று. (எ)

நம்பனைஞாலம்படைத்தவனைத் திருமார்பனை *
உம்பருலகினில்யார்க்கு முணர்வரியான்தன்னை *
கும்பிநரகர்களேத்துவரேலு மவர்கண்டீர் *
எம்பல்பிறப்பிடைதோறு எம்தொழுகுலம்தாங்களே. (அ)

நம்பனை	நம்பப்படுமவனும்
ஞாலம் படைத்தவனை	(தன்னை ஆச்ரயித்து அநுபவிக்கைக்குறுப்பாக) ஜகத்ஸ்ருஷ்டியைப் பண்ணுமவனும்
திரு மார்பனை	பிராட்டியைத் திருமார்பிலே உடையவனும்
உம்பர் உலகினில்	மேலுலகங்களில்
யார்க்கும்	எப்படிப்பட்டவர்களுக்கும்
உணர்வு அரியான் தன்னை	அறியமுடியாத பெருமையையுடையவனுமான எம்பெருமானை
ஏத்துவர்	துதிக்குமவர்கள்
கும்பி நரகர்கள் ஏலும்	கும்பீபாக நரகவாஸிகளே யானாலும்
அவர் தாங்கள்	அவர்கள்
எம்	எமது
பல்	பலவகைப்பட்ட
பிறப்பு இடை தோறு	ஜன்மாவகாசந் தோறும்
எம் தொழு குலம் கண்டீர்	யாம் தொழும்படியான குலீநராவர்.

* * * [நம்பனை] அவனுடைய ஸகலஸம்பத்துக்கும் நிதானமான ச்ரியஃபதித்வத்தை அநுஸந்தித்து அதிலே யீடுபட்டிருக்குமவர்கள் குலம் குலமாக எனக்கு நாதர் என்கிறார். எப்படிப்பட்ட நிலைமையிலும் சேதநர்க்குத் தஞ்சமாக நம்பப்படுமவனும், ஜகத்தையெல்லா முண்டாக்குவதுஞ் செய்து இந்நீர்மைக்கு அடியான ச்ரியஃபதித்வத்தை யுடையவனும், மேலானவுலகங்களில் எத்தனையேனும் மேம்பாடுடைய பிரமன் முதலியோர்க்கும் உணரமுடியாதிருப்பவனுமான எம்பெருமானை ஏத்துமவர்கள் கும்பீபாக நரகத்திற்குச் செல்லுதற்குரிய பாவங்களைச் செய்தவர்களாயிருந்தாலும் அவர்கள் எமது தொழுகைக்கு உரிய சிறந்த குலத்திற் பிறந்தவர்களாகக் கொள்ளப்படுவர்கள் என்றதாயிற்று.

கும்பீநரகர்கள் என்பதற்கு இரண்டுவகையாகப் பொருள்கூறுவதுண்டு; ஆறாயிரப்படியில் "கும்பீநரகபாதநாநுபவாநுகுண பாபங்களைப் பண்ணினரேயாகிலும்" என்றருளிச்செய்திருக்கிறபடியே, கும்பீபாக நரகத்தில் துன்பங்களை யநுபவித்தற்கீடான பாவங்களைச் செய்தவர்கள் என்பது ஒருபொருள்; இப்பொருளில், அவர்கள் இவ்வுலகத்திலேயே யுள்ளவர்கள் என்பது பெறப்படும். 'கும்பீபாக நரகத்திலே கிடப்பவர்கள்' என்பது மற்றொருபொருள். "கும்பீபாகத்திலே துக்கானுபவம் பண்ணா நிற்க, திருநாமத்தைச் சொல்லக்கூடுமோ வென்னில்; க்லேசாதிசயத்தாலே அம்மே! அப்பா! என்னக் கூடாதோ வென்று காணும் இவர்க்கு நினைவு." என்ற ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்க. "மஹாபாப பலமான கும்பீபாகநரகத்திலே கிடந்தும் அங்கே திருநாமத்தைச் சொல்லுவர்களாகில்" என்பது இருபத்தினாலாயிரப்படி யருளிச்செயல். கும்பீபாக நரகத்திலுள்ளவர்களை ஆழ்வார் எங்ஙனே தொழக்கூடும்? என்று கேள்விபிறக்கும்; அவர்கள் திருமார்பனை ஏத்தினர்களா இல்லையா என்பதை ஆழ்வார் எங்ஙனே தெரிந்துகொள்வது? என்றும் கேள்விபிறக்கும். பாகவதர் திறத்தில் ஆழ்வார்க்குள்ள ப்ரதிபத்தி விசேஷத்தைத் தெரிவிப்பது மாத்திரத்தில் விச்ராந்தமான இந்த வசநவ்யக்திகளில் கேள்விகேட்கலாகா தென்பர் பெரியோர். (8)

குலம்தாங்குசாதிகள் நாலிலும்கீழிழிந்து* எத்தனை
நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும் *
வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுஉள்
கலந்தார் * அடியார்தம்அடியார் எம்மடிகளே. (௯)

குலம் தாங்கு	ஸகல குலங்களுக்கும் ஆதாரமான
சாதிகள் நாலிலும்	பிராம்மணாதி ஜாதிகள் நான்கிலும்
கீழ் இழிந்து	கீழே போந்து
எத்தனை நலம் தான் இலாத	மிகவும் தாழ்வின் எல்லையிலே நின்ற
சண்டாளர் சண்டாளர் ஆயினும்	சண்டாளரினும் கடைகெட்ட சண்டாளர்களே யானாலும்,
வலம் தாங்கு சக்கரத்து	வலத்திருக்கையில் ஏந்தப்பட்ட திருவாழியையுடைய
அண்ணல்	ஸ்வாமியால்
மணி வண்ணற்கு	நீலமணி நிறத்தனான எம்பெருமானுக்கு
ஆள் என்று	சேஷப்பட்டிருக்கின்றோமென்று
உள் கலந்தார்	உண்மையான ஸ்வரூபஜ்ஞான முடையவர்களுக்கு
அடியார் தம்	அடிமைப்பட்டவர்களுக்கு
அடியார்	அடிமைப்பட்டவர்கள்
எம் அடிகள்	எமக்குத் தலைவராவர்.

* * * [குலந்தாங்குசாதிகள்.] கையுந்திருவாழியுமான அழகைக்கண்டு அடிமை புக்கவர்களுடைய அடியார் எனக்கு ஸ்வாமிகளென்கிருர். ப்ராஹ்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களென்று நான்கு ஜாதிகள் ப்ரஸித்தங்களாகவுள்ளன; அவற்றிலும் கீழிழிந்த சண்டாளர்களிலும் மிக நீசரான சண்டாளர்களாயிருந்தாலும் அவர்கள் "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்று திருவாழியாழ்வானோடுண்டான சேர்த்தியில் ஈடுபட்டுப் பல்லாண்டு பாடுமவர்களாகில் அவர்களின் தாஸாநுதாஸர்கள் எமக்கு ஸ்வாமிகள் என்ருராயிற்று.

இப்பாசுரத்தைப்பற்றிக்கொண்டு இக்காலத்தவர்கள் சில ஆக்ஷேபங்கள் கூறுவர்கள்: "எத்தனை நலந்தானிலாத சண்டாள் சண்டாளர்களாகிலும்" என்று ஆழ்வார் அருளிச்செய்திருப்பதை நோக்கினல் ஆழ்வாருளிச் செயலில் அன்புடையார் இதை அநுஷ்டாநபர்யந்தமாகக் கொண்டுவர வேண்டியது ஆவச்யகமல்லவா? இங்ஙனே ஆழ்வார் அருளிச்செய்ததற்கு அர்த்தமுண்டா இல்லையா? இல்லையென்னில், ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை அவமதித்தபடியாகும். உண்டென்னில், அதன்படியே அனுட்டானத்திற் காட்டவேணுமல்லவா? என்று பலபல பேசுகிருர்கள். இவற்றுக்குப் பெரியோர் அருளிச்செய்யும் ஸமாதாநமாவது:—"அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதித், தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேனும், நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோ ரளவிலாங்கே, அவர்கள் தாம் புலையர் போலும் அரங்கமாநகருளானே!" என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்கிருர்; 'சிறந்த பிராமணர்களாயிருந்தாலும் அவர்கள் பாகவத நிந்தனை செய்பவர்களாயிருந்தால் அவர்கள் சண்டாளரேயாவர்' என்று இப்பாசுரத்திலை சொல்லப்படுகிறது; அப்படிப்பட்ட பாகவத நிந்தகர்கள் எத்தனையோபேர்கள் இவ்வுலகில் காணப்படுகிருர்கள்; சண்டாளரைக் கண்டால் விலகுமாபோலே அவர்களைக்கண்டால் விலகவேணுமே; அப்படி யாரேனும் விலகுவாருண்டோ! அந்தப்பாசுரத்தின் பொருள் அனுட்டானத்திற்கு வருமாகில் இந்தப்பாசுரத்தின் பொருளும் அனுட்டானத்திற்குவரும்—என்று சிலபெரியோர்கள் கூறுகின்ருர்கள்.

மற்றுஞ்சிலர் கூறுவதாவது—"கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன" என்று நம்மாழ்வார் அருளிச்செய்கிருர்; கேசவா! என்று ஒருகால் திருநாம ஸங்கீர்த்தனம் பண்ணினமாத்திரத்திலே இடர்கள் யாவும் தொலைந்து போகின்றனவாக இதனுல் ஏற்படுகின்றது; இது திருநாமஸங்கீர்த்தனத்தின் பெருமையைப் புகழ்ந்து கூறினபடியேயல்லது வேறில்லையன்ருே; அது போலவே இங்கும் பாகவதர்களின் பெருமையைப் புகழ்ந்து கூறுகிறபடியேயல்லது வேறில்லை. கேசவாவென்ன மாத்திரத்தாலேயே இடராய வெல்லாம் கெடுமாகில் ஸந்தியாவந்தனம் முதலிய கருமங்களினுல் பாபநிபர்ஹணம் செய்து கொள்வது எதற்கு? என்று கேள்விபிறந்தால். என்னவிடை? சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட வர்ணாச்ரமதருமங்களை அனுட்டித்தே தீரவேண்டும் என்று விடையாகில், பிரகிருதத்திலும் அதுவேவிடையாகும். "മനീഷീ വൈദികാചാരം മനസാപി ന ലംഘയേത്—மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத்" என்றும் "[illegible]—லங்கயர் சூலமாரோஹேத்" என்றும், "[illegible]

ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ—தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ" என்றும், "ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே। ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:—ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ் தாமுல்லங்க்ய வர்த்ததே, ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:." என்றுமுள்ள பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் சாஸ்த்ரங்களுக்கும் அவற்றிற்காட்டிலும் பிரபலமான சிஷ்டாசாரங்களுக்கும் மாறாக நடந்துகொள்ள இயலாது—என்பதாம்.

திருமழிசைப்பிரான், திருப்பாணாழ்வார், நம்பாடுவான் போல்வாரான பரம விலக்ஷணாதிகாரிகளை உத்தேசித்தே அவதரித்த பாசுரங்களைக் கொண்டு லோக க்ஷேபம் செய்ய நினைக்கலாகாது என்று அஸ்மதாசார்யர் அருளிச் செய்யக் கேட்டிருக்கை. விலக்ஷண பாகவதர்களுக்குப் பண்டைக் குலம் தவிர்ந்து 'தொண்டக்குலம்' என்று ஒரு சிறந்த நற்குலம் உண்டாகின்றதென்பது உண்மை. ... ... (௯)

அடியார்ந்தவையமுண்டே ஆலிலையன்னவசஞ்செய்யும் *
படியாதுமில்குழவிப்படி எந்தைபிரான்தனக்கு *
அடியாரடியார்தம்மடியாரடியார் தமக்கு
அடியாரடியார்தம் * அடியாரடியோங்களே. (௰)

அடி ஆர்ந்த வையம்	(த்ரிவிக்ரமாவதார காலத்தில்) தன் திருவடியோடு ஸம்பந்தம் பெற்றதான வுலகை	குழவிப் படி	சிறு குழந்தைப் பருவமுடைய
உண்டு	(பிரளயகாலத்தில்) திருவயிற்றிலே வைத்து	எந்தை பிரான் தனக்கு	எம்பெருமானுக்கு,
ஆல் இலை	ஆலந்தளிரில்	அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்கள்	எழுதலைமுறையளவான அடிமையின் எல்லையிலே நிற்பவர்களுக்கு நாங்கள் அடிமைப்பட்டவர்கள்.
அன்னவசம் செய்யும்	திருக்கண் வளர்ந்தருள்கின்ற		
படி ஆதும் இல்	சிறிதும் உபமானமில்லாத		

• • • [அடியார்ந்தவையமுண்டே.] இவ்வுலகத்தை ஒருகால் அளந்தருளி ஒருகால் உண்டருளி ஆலிலையில் கண்வளர்ந்தருளின பெருமானுடைய திருக்குணங்களுக்குத் தோற்று அடிமையாயிருப்பாருடைய தாஸாநுதாஸ சரமாவதிதாஸன் அடியேன் என்கிறார்.—அடியார்ந்தவையமுண்டே= எம்பெருமான் அமுது செய்தவுலகம் அவன்றனது திருவடியளவேயானது என்று ரஸோக்தியாகச் சொல்வதற்குப் பாங்காக அருளிச் செய்கிறபடி. "தன்படிக்குக் காற்கூறும் போராதத்தையிறே அமுது செய்தது" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்க. பிரளயங் கொள்ளாதபடி உலகங்களைத் திருவயிற்றிலே வைத்து நோக்கி ஓர் ஆலந்தளிரிலே கண் வளர்ந்தருள்வதாக நூற் கொள்கையாதலால் ஆலிலையன்னவசஞ்செய்யும் என்றார். வயிறார உண்டதனால் வரும் உறக்கம் அன்னவசம் எனப்படும்.

படிஆதுமில்குழவிப்படி = ஆலமாமரத்தினிலைமேல் துயின்ற பாலகனுக்கு எசோதை யிளஞ்சிங்கமும் ஒப்பன்று என்பர். அக்கடித கடநாஸாமர்த்தி

யத்தில் ஒப்பில்லாமை கூறியவாறு. இங்கு "ஊஹஶிஶாவடிகுரெ ஶயிதோ திதுநா துநா ஜகஜி விஹ்ருஷெ ஸவிகாஸஜெவ। வெஶஜீஜாம்து தவ ஶக்ஜதகிதவ்யாஜவ்யாஜதஃ வூயயவெஸ கிஜிஹாவதீணஃ—முக்தச் சிசுர் வடதளே சயிதோதிதந்வா தந்வா ஜகந்தி பிப்ருஷே ஸவிகாஸமேவ, ஐசிமிமாம் து தவ சக்திமதர்க்கிதவ்யாம் அவ்யாஜதஃ ப்ரதயஸே ஜிமிஹாவதீர்ண:." என்ற அதிமாநுஷஸ்தவ திவ்யஸூக்தி அநுஸந்திக்க வுரியது.

எந்தைபிரான்தனக்கு= இந்த அகடிதகடநாஸாமர்த்தியத்தைக் காட்டி என்னை யீடுபடுத்திக்கொண்ட எம்பெருமானுக்கு என்றபடி. [அடியார் இத்யாதி] எம்பெருமான் சேஷித்வத்தின் எல்லையிலே நிற்பதுபோல, தாம் சேஷத்வத்தின் எல்லையிலே நிற்க விருப்புகிறார். "தவ்ஹ்ருத்யஹ்ருத்ய பரிசாரக ஹ்ருத்யஹ்ருத்யஸ்ய ஹ்ருத்யஜதி ஜாம் ஸ்மர லோகநாத—த்வத்ப்ருத்யப்ருத்யபரிசாரகப்ருத்யப்ருத்யப்ருத்யஸ்ய ப்ருத்ய இதி மாம் ஸ்மர லோகநாத!" என்ற முகுந்தமாலையும் காண்க. இப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி வேதாந்த தேசிகன்பாதுகா ஸஹஸ்ரத்தில் "பஸவவவவ்யாதந்தாம் ஶெஷவ காஷ்ட்ஹஜநாரோ:—பவ் ஸப்தபர்வவ்யவதாநதுங்காம் சேஷத்வகாஷ்டாமபஜந்முராரே:" என்ற ச்லோகமருளிச் செய்தாரென்றுணர்க.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி :—இப்போதும் தம்முடைய ருசிக்கு அவதியுண்டாய் இவ்வளவிலே நின்றாரல்லர்; சந்தஸ்ஸில் இதுக்கு அவ்வருகு போகவொண்ணுமே நின்றதித்தனையிறே."—செய்யுளின் நிர்ப்பந்தத்தை நோக்கி இவ்வளவிலே தலைக்கட்டினாரத்தனை யல்லது 'இவ்வளவு சேஷத்வம் நமக்குப் போதும்' என்றெண்ணி முடித்தாரல்லர் என்றவாறு.

"இப்படி வைஷ்ணவர்களை விரும்பினால் இது லௌகிகரோடு சேராதிருந்ததாகில் ஆழ்வார் விரும்பினத்தை விச்வஸித்தோமாகிறோம்" என்று ஜீயரருளிச் செய்யும்படி" என்பது ஈடு முப்பத்தாறுயிரம். இதன் கருத்து யாதெனில்; இந்தப்பதிகத்தில் ஆழ்வார் அருளிச் செய்தபடியே நாம் அநுஷ்டிப்பதாகக் கொண்டால் லோகவிருத்தமாகுமே; "எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்" இத்யாதிகளால் அருளிச் செய்யப்படுகின்ற அர்த்தம் லோகாநுஷ்டானத்திற்கு அமையாதே என்கிற சங்கையின்மீது அருளிச்செய்கிறபடி. நாம் அநுஷ்டிக்கும்படியான பாக்கியம் பெறுதொழியினும் 'இங்ஙனே ஆழ்வார் பாரித்திருந்தார்' என்று விச்வாஸத்தோடே அநுஸந்தித்தாலும் போதும் என்றபடி. ... ... (௧௦)

அடியோங்குநூற்றுவர்வீய அன்றைவர்க்கருள்செய்த
நெடியோனை * தென்குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள் *
அடியார்ந்தவாயிரத்துள் இவைபத்தவன்தொண்டர்மேல்
முடிவு * ஆரக்கற்கிற்கில் சன்மம்செய்யாமைமுடியுமே. (௧௦)

அடி ஒக்கு } தங்களுடைய ராஜ்யப் ரதிஷ்டை உயர்த்து வரும்படியான	நூற்றுவர் வீய	} (துரியோதனன் முதலானோர்) நூறுபேர்களும் முடியும்படி

அன்று	முன்பொருகால்	அவன் தொண்டர் மேல் முடிவு	பாகவத விஷயத்தில் முடிவான
ஐவர்க்கு	பஞ்சபாண்டவர்களுக்கு	இவை பத்து	இப்பதிகத்தை
அருள் செய்த	க்ருபை பண்ணின	ஆர	நெஞ்சிலே பொருந்த
நெடியோனை	திருமாலை நோக்கி,	கற்கிற்கில்	கற்கவல்லாராகில்
தென் குருகூர் சடகோபன் குற்றேவல்கள்	அழகிய திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய கைங்கரிய ரூபமாய்	சன்மம்	பிறப்பு
அடி ஆர்ந்த	ஸகலலக்ஷண ஸம்பந்நமான	செய்யாமை	மறுபடியும் உண்டாகாதபடி
ஆயிரத்துள்	ஆயிரம் பாசுரத்திலுள்ளும்	முடியும்	முடிந்து போம்.

• • • [அடியோங்கு.] இத்திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் இனி ஒருகாலும் பிறவார் என்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. பாண்டவர்களை அரக்குமாளிகையில் அகப்படுத்தியும் சூதிலே தோற்பித்தும் வநவாஸாதிகளைப் பண்ணுவித்தும் இவ்வழிகளாலே தங்களுடைய ராஜ்யப்ரதிஷ்டை உயர்ந்து வரும்படியான துரியோதநாதியர் நூற்றுவரும் முடியும்படி பஞ்ச பாண்டவர்களுக்குப் பலவகை யுபகாரங்களைப் பண்ணின எம்பெருமானைக்குறித்து ஆழ்வார் அருளிச்செய்த வாசிக கைங்கர்ய ரூபமான ஆயிரத்திலுள்ளும் பாகவத சேஷத்வ பர்யந்தமாகப் பேசின இத்திருவாய்மொழியை நெஞ்சிலே படியும்படி கற்க சக்தராகில் பாகவத சேஷத்வத்திற்கு இடையூறான பிறவி அடியறும் என்றாராயிற்று.

ஈற்றடியில் ஆர என்பதற்கு 'நெஞ்சிலே படியும்படி' என்று பொருள் கொள்வதிற் காட்டிலும் 'ஒரு பாட்டும் நழுவவிடாமே பூர்த்தியாக' என்று பொருள் கொள்வது சிறக்கும். "அடியார்தம்மடியாரெம்மடிகளே" என்ற ஒன்பதாம் பாசுரமானவுடனே, நிபுணர்களான அத்யாபகர்களுங்கூட "அடியார்ந்தவையமுண்டு" என்ற பத்தாவது பாசுரத்தை மறதியினால் விட்டிட்டு "அடியோங்கு நூற்றுவர்வீய" என்ற பதினோராம் பாசுரத்தை யநுஸந்திப்பதுண்டாதலால் ஸர்வஜ்ஞரான ஆழ்வார் 'அப்படி ஒரு பாசுரத்தை நழுவவிட வேண்டா; ஆரக் கற்க வேணும்' என்று உத்போதனம் செய்தருளுகிறார் போலும்.

இதில் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானைப் பற்றின ப்ரஸங்கமும் ப்ரபலமாக வுண்டாகிலும் அது உபஸர்ஜந கோடியிலேயாய் பாகவத சேஷத்வ ப்ரதிபாதனத்திலேயே பர்யவஸாநம் என்பது தோன்ற "தொண்டர்மேல் முடிவு" எனப்பட்டது. 'கற்க கிற்கில்' என்ற இரண்டு சொற்கள் சேர்ந்து 'கற்கிற்கில்' என்று ஒரு சொற்றன்மையதாயிற்று. ... ... (*)

ஏழாந் திருவாய்மொழி உரை முற்றுப்பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஸ்பீதாலோகாதிபூம்நா ப்ருதுபஹுபுஜயா திவ்யமால்யாஸ்த்ரபாஜா
ஸத்வஸ்த்ராகல்பக்லுப்த்யா த்ரிதசரஸக்ருதா ரக்ஷணைகாக்ர்யவத்யா ।
முக்தைருத்தம்ஸிதாங்க்ர்யா ஸ்திரத்ருதரமயா ச்யாமயா நித்யஸத்யா
ஸௌரே꞉ காந்த்யா ஜிதாநாம் ஸ்வவசமுதஜநஸ்ஸூரிதாஸநம் ஸ்து ॥

[இந்தச்லோகத்தில் முதல்மூன்று பாதங்களிலுமுள்ள த்ருதீயாந்த பதங்கள் பத்தும் நான்காமடியிலுள்ள காந்த்யா என்பதற்கு விசேஷணங்கள். ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொருவிதமாக விசேஷிக்கப்பட்ட பகவத் காந்தியில் ஈடுபட்ட பாகவதர் திரத்திலே யீடுபட்டவர்களை ஆழ்வார் தமக்கு சேஷிகளாக அருளிச் செய்தாரென்று கருத்துக் காண்க.

1. ஸ்பீதாலோகாதிபூம்நா. * பயிலுஞ் சுடரொளி மூர்த்தியை * செழிப்புடையதான சோதியின் அதிசயத்தை யுடையதுமாய்.

2. ப்ருதுபஹுபுஜயா. * தோளுமோர் நான்குடை * பெரிய பல (நான்கு) திருத்தோள்களை யுடையதுமாய்.

3. திவ்யமால்யஅஸ்த்ரபாஜா. * நறுந்துழாய்ப் போதனைப் பொன்னெடுஞ் சக்கரத் தெந்தைபிரான்தன்னை * திவ்யமான திருத்துழாய் மாலையும் திரு ஆயுதங்களையு முடையதுமாய்.

4. ஸத்வஸ்த்ராகல்பக்லுப்த்யா. * உடையார்ந்த வாடையன்.* அழகிய திருப்பீதாம்பரத்தையும் திருவாபரணங்களையு முடையதுமாய்.

5. த்ரிதசரஸக்ருதா. * அமரர்கட்கு அருமை யொழிய அன்றாரமு தூட்டியவப்பனை.* தேவர்களுக்கு போக்யமான அமுதத்தைக்கொடுப்பதுமாய்.

6. ரக்ஷணைக்முக்யவத்யா. * அளிக்கும் பரமனைக் கண்ணனை.* அடியார்களைக் காத்தருள்வதில் ஊக்கமுடையதுமாய்.

7. முக்தை꞉ உத்தம்ஸிதஅங்க்ர்யா. * அடியார்களைக் கொண்டுபோய்த் தன்மை பெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க் கொள்ளுமப்பனை.* தன்னாலே முத்தி பெறுவிக்கப்பட்ட அடியார்களாலே சிரோபூஷணமாக்கிக் கொள்ளப்பட்ட திருவடிகளை யுடையதுமாய்.

8. ஸ்திரத்ருதரமயா. * திருமார்பனை.* சாச்வதமாகத் திருமார்விலே தாங்கப்பட்ட பிராட்டியை யுடையதுமாய்.

9. ச்யாமயா. * சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கு.* நீலமணிபோலே சாமளமுமாய்.

10. நித்யஸத்யா. * ஆலிலையன்னவசஞ் செய்யும் படியாதுமில்குழவிம் படி.* பிரளயகாலத்திலும் இருப்பதுமான.

[சௌரே: காந்த்யா.] எம்பெருமானது திருமேனியொளியினால். [ஜிதாநாம்] தோற்கடிக்கப் பட்டவர்களுக்கு. திருமேனியழகில் ஈடுபட்டவர்களுக்கு என்றபடி. [ஸ்வபஹுமதஜநஸ்வாமிநாம் அங்வமம்ஸ்த.] தம்மாலே கொண்டாடப்பட்ட ஜநங்களுக்கு ஸ்வாமிகளாயிருக்குந்தன்மையை ஆழ்வார் இசைந்தருளினார் என்றபடி. இதனால் ஸ்ரீவைஷ்ணவ தாஸதாஸ தாஸாநுதாஸத்வத்தை இத் திருவாய்மொழியில் ஆழ்வார் அநுஸந்தித்தார் என்றதாயிற்று. ... (*)

தாப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பயிலுந் திருமால் பதந்தன்னில், நெஞ்சம்
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு—இயலுடனே
ஆளானார்க் காளாகும் மாற னடியதனில்
ஆளாகார் சன்மம்முடியா.

பயிலும்	அடியவர்களோடு கலந்து பழகுந் தன்மையனான	ஆள் ஆகும்	அடிமை செய்யப்பெற்ற
திருமால்	எம்பெருமானுடைய	மாறன்	ஆழ்வாருடைய
பதம் தன்னில்	திருவடிகளில்	அடி அதனில்	திருவடிகளில்
நெஞ்சம் தயலுண்டு நிற்கும்	மனம் பதித்து நிற்கிற	ஆள் ஆகார்	அடிமை செய்யப் பெறாதவர்களுடைய
ததியர்க்கு	பாகவதர்களுக்கு	சன்மம்	பிறவி
இயலுடனே ஆள்ஆனார்க்கு	முறையே அடிமையாயிருக்குமவர்களுக்கு	முடியா	(ஒருகாலும்) முடிவடைய மாட்டாது.

எம்பெருமானது திருவடிகளில் ஹ்ருதயம் அவகாஹித் திருக்கப்பெற்ற பாகவதர்களுக்கு தாஸாநுதாஸராகத் தம்மை அநுஸந்தித்த நம்மாழ்வாருடைய திருவடிகளில் அடிமைபூண்டிருக்கும் பாக்கியமற்றவர்களுடைய பிறவித்துயர் ஒருநாளும் முடிவு பெறமாட்டாது; அவர்கள் நித்ய ஸம்ஸாரிகளாகவே நிகழ்வர்கள் என்றபடி.

"ஆளாகார் சன்மம் முடியா" என்றது ஆளாகுமவர்களுடைய சன்மம் உடனே முடிந்துவிடு மென்ற குறிப்பு. சன்மம் முடிவதாவது முக்திஸாம்ராஜ்யம் பெறுவதாம்.

பயிலுந்திருமால் = 'பயிலும்' என்பது திருவுக்கும் விசேடணமாகலாம், திருமாலுக்கும் விசேடணமாகலாம். திருவுக்கு ஆகில், இணைபிரியாதிருக்கின்ற திருவினிடத்தில் மால்கொண்டவன் என்றபடியாம். [தயலுண்டு] 'தையல்' என்னுஞ் சொல் 'தயல்' என்று மருவிக்கிடக்கிற தென்றும், பதிந்திருத்தல் என்பது அதன்பொருள் என்றும் ஆன்றோர் கூறுவர். ததீய: என்னும் வடசொல் ததியரென விகாரப்பட்டது. .... (௨௭)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

தத்வாசுபராஞ்சிவிஷயெ ஹரிணா ப்ரஸாதாச்
ஆவிஷ்க்ருதாத் ஸுக3ணவைஷ்ணவஸௌபா4க்3யாத் ।
ஆனந்த்3ய வைஷ்ணவஜனான் ஸ்வநிராக்ருதார்தான்
ஆஹ்லாய தானதிஜஹர்ஷ ஸ ஸப்தமே ஸ: ॥

(கருத்து.) கீழ்த் திருவாய்மொழியில் அர்ச்சாவதார ஸௌலப்யத்தை யருளிச் செய்து இப்படி ஸுலபமான விஷயத்திலே யீடுபடுவாரில்லையே யென்று வருந்தின ஆழ்வாருடைய வருத்தத்தைத் தீர்த்தருள்வதற்காக எம்பெருமான் பேரருள் கொண்டு சில ஸ்ரீவைஷ்ணவர்களை ஆழ்வார்க்குக் காட்டியருளினன்; அவர்கள் எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் அநுபவிப்பதையே இயற்கையாக வுடையராயிருந்தனர். அப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களை ஆழ்வார் ஸேவித்து அவர்களையே தமக்குக் குலநாதராகக் கூறி ஏழாந் திருவாய்மொழியில் மிகவும் மகிழ்ந்தார் என்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—மூன்றாம்பத்து,
எட்டாந் திருவாய்மொழி—முடியானே.

உரையவதாரிகை.—கீழ் ஆறாந் திருவாய்மொழியான * செய்யதாமரைக் கண்ணனில் "அன்று தேர்கடவிய பெருமான் கனைகழல் காண்பதென்றுகொல் கண்களே," என்று பகவத் விஷயத்திலே தமக்கு உண்டான விடாயை வெளியிட்ட ஆழ்வார்க்கு எம்பெருமான் ஸ்ரீவைஷ்ணவர்களைக் காட்டிக் கொடுத்து ஒருவாறு ஸமாதானம் பண்ணினபடி கீழ்த் திருவாய்மொழியில் சொல்லிற்று. அதில் ஸ்ரீவைஷ்ணவர்களை அநுபவித்துப் போந்த ஆழ்வார் அவர்களுகந்த விஷயமான பகவத் விஷயத்தின் சீர்மையையும் பாசுரந்தோறும் முன்னடிகளால் அநுபவித்துவந்தாராகையாலே அவ்வநுபவம் பழைய விடாயை அதிகரிக்கச் செய்தது. "என்றுகொல் கண்கள் காண்பதுவே" என்னும்படி கண்களுக்கு மாத்திரம் உண்டாகியிருந்த விடாய் மற்றையிந்திரியங்களெல்லாவற்றுக்குமாயிற்று. அதுதானும் ஒரு விலக்ஷணமான படியிலேயாயிற்று. அதாவது என்னென்னில்; ஒரு இந்திரியத்தினுடைய வ்ருத்தியை மற்றோரிந்திரியம் ஆசைப்படும்படியாயும் சேர்ந்து, தம்மிலும் விடாய்த்த கரணங்களும் கரணங்களினும் விடாய்த்த தாமுமாய் இப்படியொரு விலக்ஷணமான நிலைமையைப் பெறும்படியாயிற்று.

பஹு குடும்பியானவொருவன் க்ஷாமகாலத்திலே தன்பசிக்கு ஆற்றமாட்டாதே மக்கள் பசிக்கு ஆற்றமாட்டாதே அவற்றின் வாயில் சோற்றைத் தான்பறித்து உண்பது தன்வாயில் சோற்றை அவை பறித்துண்பதாய், 'என் பசிக்கு என் செய்வேன்? என் மக்கள் பசிக்கு என் செய்வேன்' என்னுமா போலே தாமும் தம்முடைய கரணக்ராமமுமாக நோவுபட்டுக் கூப்பிடுகிறபடியை இத்திருவாய்மொழி பேசுகின்றது.

இப்பதிகத்தினால் ஆழ்வாருடைய பக்தி பரமவிலக்ஷணம் என்பது பெறப்படும். ஆசார்ய ஹ்ருதயத்தில் (இரண்டாம் பிரகரணத்தில் "அவேக்ஷ்ய மென்னுமது கரும்பேட்டை எரியாயுலர்த்த வென்னப்பட, சித்தம் சித்தாய் அல்லலென்று நீங்க, கரணங்கள் முடியானேயிலவையாக, உடலம் ஆத்ம தர்மங்கொள்ள, காற்றுங் கழியுங் கட்டியழக் கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமை நூல்வரம்பில்லையே." என்ற சூர்ணிகை இங்கு அநுஸந்திக்க உரியது.

ஆழ்வானுடைய வரதராஜஸ்தவத்தில் "த்வக் ச த்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ। நாஸிகா த்வயி கரீச தத்தேதி ப்ராப்நுயாம் கதமிமாம் ஸ்விதவஸ்தாம்"—த்வக் ச த்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ, நாஸிகா த்வயி கரீச! தத்தேதி ப்ராப்நுயாம் கதம் இமாம் ஸ்விதவஸ்தாம்." (24) என்ற ச்லோகமும் இங்கு நினைக்கத் தக்கது.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—" இந்த்ரியங்களும் தனித்தனி சேதந ஸமாதியாலே விடாய்க்கும்படியாயிற்று பகவத் விஷயத்தில் இவர்க்குப் பிறந்த வாஸனை. இதர விஷயங்களில் வாஸனை விடாயைப் பிறப்பியாநின்றால் குணாதிக விஷயத்திற் சொல்ல வேண்டாவிறே........ஒரு இந்த்ரியத்தின் வ்ருத்தியை இந்த்ரியாந்தரம் ஆசைப்படக்கூடுமோ வென்னில், சக்ஷுஶ்ரவா: (பாம்பு) கண்ணாலே காண்பதுஞ் செய்து கேட்பதுஞ் செய்யாநின்றதிறே. அதுவுமவன் கொடுத்ததே. அது நமக்குத் தட்டென்ன அவன் தந்தால்? ஒரு தேசவிசேஷத்திலே தன்னை யநுபவிப்பார்க்குக் கொடாநின்றானிறே தம்மையே யொக்க அருள வேண்டுகையாலே. * தூதுசெய் கண்கள் கொண்டொன்று பேசித் தூமொழியிசைகள் கொண்டொன்று நோக்கியிறே அவன்றன்படி. ஆறு கிண்ணக மெடுத்தால் பல வாய்த்தலைகளாலும் போகச் செய்தேயும் கடலில்புகும் அம்சம் குறைவற்றுப் போமாப்போலே இவருடைய அபிநிவேசாதிசயம் இவருடைய கரணங்களாகிற வாய்த்தலைகளாலே பெருகுகிறபடி." ... (*)

முடியானே மூவுலகும் தொழுதேத்துஞ்சீ
ரடியானே * ஆழ்கடலைக்கடைந்தாய் புள்ளூர்
கொடியானே * கொண்டல்வண்ணா! அண்டத்தும்பரில்
நெடியானே * என்றுகிடக்குமென்னெஞ்சமே. (க)

என் நெஞ்சம்	எனது மனமானது;
முடியானே	(உபய விபூதி நாயகத்வ லக்ஷணமான) திருவபி ஷேகத்தை யுடையவனே!
மூ உலகும் தொழுது ஏத்தும் சீர் அடியானே	மூவுலகத்தவர்களும் வணங்கித் துதிக்கப் பெற்ற சிறப்புள்ள திருவடிகளை யுடையவனே!
ஆழ் கடலை கடைந்தாய்	(தேவர்களுக்கு அமுதமளிப்பதற்காக) ஆழமான கடலைக் கடைந்தவனே!
புள் ஊர் கொடியானே	கருடப் பறவையை ஊர்தியாகவும் கொடியாகவு முடையவனே!
கொண்டல் வண்ணா	நீலமேகம் போலும் நிறத்தை யுடையவனே!
அண்டத்து உம்பரின் நெடியானே	பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளுக்கு மஹா புருஷனே!
என்று கிடக்கும்	என்று அநுஸந்தித்து உருகிக் கிடக்கின்றது.

* * * [முடியானே.] தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானைக் காணவேணு மென்று ஆசைப்பட்டுப் பெறாமையாலே நிர்வேதம் கொண்டு கிடக்கிறபடியை அருளிச் செய்கிறார். "என்று" என்பதை முடியானே...! இத்யாதியான ஒவ்வொரு விளியோடும் கூட்டுக: என் நெஞ்சம் முடியானே யென்று கிடக்கும், மூவுலகும் தொழுதேத்தும் சீரடியானே என்று கிடக்கும் — என்றிங்ஙனே தனித்தனி வாக்கியமாக யோஜிப்பது. ஏழுலகுக்கும் தனிக்கோல் செலுத்துமவன் என்பதைக் கோட்சொல்லித் தரக்கடவதான திருவபிஷேகமும் தானுமான வழகை யநுபவிக்க நெஞ்சு பாரித்திருக்கின்றமையை முடியானே! என்பதனால் தெரிவிக்கிறார்.

மூவுலகும் தொழுதேத்தும் சீரடியானே! என்று கிடக்கும் என்னெஞ்சம் = 'குணமுள்ளவர்களைக் கைப்பற்றுவது, தோஷமுள்ளவர்களைக் கைவிடுவது' என்கிற கொள்கை கொளாமையில்லாதவனாதலால் குணவான்களோடு துஷ்டர்களோடு வாசியற அனைவரும் வந்துபணிந்து ஏத்தப்பெற்ற திருவடிகளை யுடையவன் எம்பெருமான்; அந்த நிலைமையிலே தமது திருவுள்ளம் ஈடுபட்டிருக்கும் படியைக் கூறினாராயிற்று. "முடியானே—சீரடியானே" என்ற சேர்த்தியழகு நோக்கத்தக்கது. * பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்றமைக்கு லக்ஷணமாகக் கவித்த திருவபிஷேகத்திலே கண்ணைச் செலுத்தினால் உடனே திருவடிகளிலே விழும்படியாயன்றோ இருப்பது.

அங்ஙனம் திருவடிகளிலே விழுமவர்களுக்குத் தன் திருமேனி நோவவும் ஆனைத்தொழில் செய்து உதவிபுரியும் பெருங்குணம் காட்டப்படுகின்றது ஆழ் கடலைக் கடைந்தாய்! என்று. திருவடிகளின் போக்யதையிலேயே நெஞ்சு ஆழங்காற்பட்டுக் கிடக்க வேண்டியது ப்ராப்தமாயிருந்தும் அங்ஙனன்றிக்கே அதைமறந்து ப்ரயோஜநாந்தரத்திலே நெஞ்சு சென்றார்க்கும் உடம்பு நோவக் காரியம் செய்துதரும் பெருங்குணத்திலே தமது திருவுள்ளம் ஈடுபட்டிருக்கும் படியைக் கூறியவாறு.

புள்ளூர் கொடியானே! = திருவடிவாரத்திலே வந்து தொழமாட்டாதவர்கள் இருக்குமிடங்களிலே யெழுந்தருளிக் காட்சி தருவதற்குப் பாங்காகப் பெரிய திருவடியைக் கையாளாக வுடையனாயிருக்கும் பெருமையிலே யீடுபட்டபடி.

"அருளாழிப் புட்கடவீரவர்வீதி யொருநாள்" என்று விரும்புவார் விருப்பத்தின்படியே நிறைவேற்றுதற்குப் பாங்காக வேதாத்மாவான விஹகேச்வரனை வாஹனமாகவும் த்வஜமாகவும் உடையவனே! என்று என்னெஞ்சு கிடக்குமென்கிறார்.

ஊர்தி என்கிற சொல் ஊர் என்று கடைக் குறைத்தலாய்க் கிடக்கிறதென்னலாம். (ஊர்தி—வாஹனம்.)

கொண்டல்வண்ணா! = பெரிய திருவடியை நினைத்தவாறே அவன்மீது எம்பெருமான் எழுந்தருளியிருக்கும்படியும் நினைவுக்கு வந்து தீருமே; பொன்னிறவண்ணனான புள்ளரையன்மீது கார்முகில்வண்ணனான பெருமான் காட்சி தரும்போதைப் பரபாக சோபையிலே நெஞ்சைப் பறிகொடாதிருக்க முடியாதே. "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்" என்று அநுபவிப்பவரிறே இவ்வாழ்வார்.

அண்டத்தும்பரில் நெடியானே! = பறவையரையன்மீது பொலியும் பெருமானைச் சேவித்தவாறே 'இவனே பராத்பரன்' என்று அறுதியிட வேண்டும்படியன்றோ இருக்கும்; "பறவையேறு பரம்புருடா" என்பரே பெரியாழ்வாரும் இவ்விடத்தில். "கேசித் தத்த்வவிசோதநே பசுபதௌ பாரம்யமாஹு: பரே வ்யாஜஹ்ரு: கமலாஸநே நயவிதாம் அந்யே ஹரௌ ஸாதரம் । இத்யேவம் சலசேதஸாம் கரத்ருதம் பாதாரவிந்தம் ஹரே: தத்த்வம் தர்சயதீவ ஸம்ப்ரதி ந்ருணாம் தார்க்ஷ்ய: ச்ருதீநாம் நிதி:—கேசித் தத்வவிசோதகே: பசுபதௌ பாரம்யமாஹு: பரே வ்யாஜஹ்ரு: கமலாஸநே நயவிதா மந்யே ஹரௌ ஸாதரம், இத்யேவம் சலசேதஸாம் கரத்ருதம் பாதாரவிந்தம் ஹரே: தத்வம் தர்சயதீவ ஸம்ப்ரதி ந்ருணாம் தார்க்ஷ்ய: ச்ருதீநாம் நிதி:." என்று திருக்கடிகை, ஸ்ரீ தொட்டையாசார்ய ஸ்வாமியருளிய ச்லோகரத்னம் நினைக்கத்தகும். (இதன் கருத்தாவது :—பெரிய திருவடி தனது இரண்டு கைகளிலும் எம்பெருமானது திருவடிகளை ஏந்திக்கொண்டு காட்சி தருவது எங்ஙனே உத்ப்ரேக்ஷிக்கலாம்படியிராநின்ற தென்னில்; பரதத்துவம் ஏது என்பதை நிஷ்கர்ஷிக்கப் புகுந்தவர்களில் சிலர் பரமசிவனையும், சிலர் நான்முகனையும், சிலர் ஸ்ரீமந்நாராயணனையும் பரமபுருடனாகச் சொல்லுகையாலே ஒருவகையான நிஷ்கர்ஷமில்லாமல் தடுமாறவேண்டி யிருக்கின்றதே! என்று நிலை தளும்பி யிருக்குமவர்கள் திண்ணிய தெளிவு பெறுமாறு வேதஸ்வரூபியான விஹகராஜன் ஸ்ரீமந்நாராயணனொருவனே பரதத்துவம் என்று உணர்த்துவான் போன்று அப்பெருமானது திருவடிகளைத் தன்கைகளில் ஏந்திக்கொண்டிருந்து காட்டுகின்றான் என்னலாம்படி யுள்ளது என்கை.)

என்றுகிடக்கும் என்னெஞ்சமே = எம்பெருமானது படிகளை இங்ஙனம் ஒவ்வொன்றாகச் சொல்லி என்னெஞ்சம் அலமருகின்றது; இதற்கு என் செய்வேன்! என்கிறார். அப்பெருமான்றானே வந்து காட்சி தந்தாலன்றி அவனைக் காணமுடியாதென்று அறிந்திருந்தும் அந்தோ! நெஞ்சு அலைபாயாநின்றதே! என்கிறார். ... ... (க)

நெஞ்சமேநீணகராக இருந்தவென்
தஞ்சனே! * தண்ணிலங்கைக்கு இறையைச்செற்ற
நஞ்சனே! * ஞாலம்கொள்வான் குறளாகிய
வஞ்சனே! * என்னுமெப்போதுமென்வாசகமே. (உ)

என வாசகம்	எனது வாக்கானது,
நெஞ்சமே நீள் நகர் ஆக இருந்த என் தஞ்சனே	மனத்தையே பெரிய நகரமாகக் கொண்டு அதிலே தங்கியிருக்கின்ற எனது நற்றுணைவனே!
தண் இலங்கைக்கு இறையை செற்ற நஞ்சனே	தண்ணிதான இலங்காபுரிக்குத் தலைவனாயிருந்த இராவணனைத் தொலைக்கும் விஷயத்தில் நஞ்சானவனே!
ஞாலம் கொள்வான் குறள் ஆகிய வஞ்சனே	(மாவலியிடமிருந்து) பூமியைக் கொள்ளும் பொருட்டு வாமன மூர்த்தியான வஞ்சகனே!
என்னும் எப்போதும்	என்று எப்போதும் சொல்லாநின்றது.

* * * [நெஞ்சமே.] வாக்கானது எம்பெருமானை நோக்கி 'ஸ்வாமின்! நெஞ்சு தேவரீரை நினைக்க அதற்கு அருள் செய்தாப்போலே நானும் தேவரீரை நினைக்க அருள் செய்யவேணும்' என்று அலற்றாநின்றது என்கிறார். நெஞ்சுக்கு அருள் செய்தது போல எனக்கும் அருள் செய்ய வேணுமென்று வாக்கு விரும்புவதாகப் பாசுரத்தில் எங்குள்ளது? என்னில்; "நெஞ்சமே நீணகராகவிருந்த" என்பதில் இவ்வர்த்தம் உய்த்துணரத்தக்கது. 'என்றென்றும் நெஞ்சிலேயிருந்து போய்த்தனையோ? என் பக்கலிலும் ஒருகால் இருக்கலாகாதோ?' என்ற கருத்து இதில் அமைந்துளது. "பிறர் அகத்திற்கே போகின்றவரே!" என்று ஒருவனைக் குறித்துச் சொன்னால் "எம் அகத்திற்கும் ஒருநாள் வந்தாலாகாதோ" என்கிற கருத்து கிடைப்பதுபோல. 'நெஞ்சமே' என்ற ஏகாரத்தினால்—வேறு இந்திரியங்களிலும், பரமபதம் திருப்பாற்கடல் முதலியவற்றிலும் எம்பெருமான் விருப்புற்றிருக்குந்தன்மை பெறுவிக்கப்படும். "கல்லுங் கனைகடலும் வைகுந்தவானாடும், புல்லென் றொழிந்தன கொல் ஏபாவம்—வெல்ல நெடியான் நிறங்கரியான் உள் புகுந்து நீங்கான், அடியேனதுள்ளத்தகம்." என்ற பெரிய திருவந்தாதிப்பாசுரம் இங்கு அநுஸந்திக்க வுரியது.

என் தஞ்சனே! = இப்பாசுரம் வாக்குறுப்பு சொல்லுவதேயானாலும் நெஞ்சின் உதவியில்லாமல் அது தனியே சொல்ல முடியாததலால் நெஞ்சும் இதில் அந்வயித்திருக்கின்றதென்றே கொள்ளவேணும்; அந்த நெஞ்சின் ஸமாதியாலே என் தஞ்சனே! என்கிறது; அதாவது, தன்னையே நீணகராகக் கொண்டு இருக்கப் பெற்ற உபகாரத்தை நினைத்துச் சொல்லுகிறபடி—என்று சிலர்

சொல்லுவர்கள்; அதில் ஸ்வாரஸ்யமில்லை; என்தஞ்சனே! என்றவிதில் என் என்பது வாக்கையே குறிப்பிடும்; அவனையே தான் கூப்பிடும்படி பண்ணின உபகாரத்தை நினைத்துத் தஞ்சனே! என்கிறது. இங்கே ஈடு:—"இப்படி கூப்பிடப் பண்ணின உபகாரகத்வத்தை நினைத்துச் சொல்லுகிறார்; ஸம்ஸாரிகளில் இப்படி கூப்பிடுகிறாரில்லையிறே." என்பதாம்.

இங்கே "அழுநீர் துளும்பக் கடலும் மலையும் விசும்பும் துழாய் திருமாலென்றும் எங்கே காண்கேனென்றும் இவரலமாப்பு அவர்களுக்குப் புத்ரவியோகத்திலே" என்ற ஆசார்யஹ்ருதயஸூக்தி அநுஸந்தேயம். (இதன் கருத்தாவது—எம்பெருமானைப் பிரிந்த வருத்தத்தினால் கண்ணுங் கண்ணீருமாய்க் கடலோடு மலையோடு ஆகாசத்தோடு வாசியற எங்குந்தேடி நெஞ்சு கலங்கி 'திருமாலே!' என்று கூப்பிட்டு 'எங்கே காண்கேன் ஈன்துழாயம்மான் தன்னை' என்று இவ்விதமாக ஆழ்வார்படும் ஆற்றாமை யெல்லாம் ரிஷிகளுக்குப் புத்ரவியோகத்திலேயாயிருக்கும்: வஸிஷ்ட பகவான் புத்திரனிறந்த வருத்தத்தினால் மரணத்தை விரும்பி மலையிலேறி விழுவது நெருப்பிலே குதிப்பது, கழுத்தில் கல்லைக் கட்டிக்கொண்டு கடலிலே விழுவது ஆகவிப்படியெல்லாம் தடுமாறினாரென்பதும், வேதவ்யாஸ பகவான் புத்திரவியோகம் பொறுக்கமாட்டாமல் 'புத்திரனே!' என்று வாய்விட்டுக் கூப்பிட்டு அழுதுகொண்டு காணப் பெறாமையால் அலமந்து திரிந்தாரென்பதும் புராணப்ரஸித்தம்.)

தண்ணிலங்கைக்கு இறையைச் செற்ற நஞ்சனே! = தண்மையாவது—குளிர்ச்சியும் நிஹீனத்தன்மையும் அறிவில்லாமையுமாம். இப்பொருள்கள்யாவும் இலங்கைக்குச் சேரும். குளிர்ச்சியைச் சொன்னது போக்யதையைச் சொன்னவாறு; இலங்காபுரியின் போக்யதையை மஹாவிரக்தனான திருவடியே கொண்டாடினான்; "ஸ்வர்கோயம் தேவலோகோயம் இந்த்ரஸ்யேயம் புரீ பவேத். ஸித்திர்வேயம் பரா ஹி ஸ்யாதித்யமந்யத மாருதி:— ஸ்வர்க்கோயம் தேவலோகோயம் இந்த்ரஸ்யேயம் புரீ பவேத், ஸித்திர் வேயம் பரா ஹி ஸ்யாத் இத்யமந்யத மாருதி:." என்றது காண்க.

வாக்கானது தண்ணிலங்கைக்கிறையைச் செற்றநஞ்சனே! என்று சொல்லுவதன் கருத்து யாதெனில்; மஹாபாபியான இராவணனையும் நோக்கி தேவரீர் ஹிதமான பல வார்த்தைகள் அருளிச் செய்ததுண்டே; அப்படி என்னையும் நோக்கி ஏதேனுஞ் சில ஸ்ரீஸூக்திகள் அருளலாகாதோ? என்ற குறிப்பாம்.

ஞாலங்கொள்வான் குறளாகிய வஞ்சனே! = மாவலியாலே கொள்ளை கொள்ளப்பட்டிருந்த பூமியை மீட்டுக்கொள்ளும் உபாயம் அறியுமவனே!. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி:—"ராவணனைப்போலே தலையை அறுவிட்டது ஔதார்ய மென்பதொரு குணலேசமுண்டாகையாலே, இவன் கையிலே ஒரு தர்மாபாஸமுண்டாயிருந்ததென்று இவனை யழியாதே ஸர்வாதிகனான தன்னை அர்த்தியாக்கி இந்திரனுக்கு ராஜ்யத்தை வாங்கிக் கொடுத்த விரகு." என்பதாம். இங்கே "தைத்யௌதார்யேந்த்ரயாச்ஞாவிஹதிமபநயந் வாமநோர்த்தீ— தைத்யௌதார்யேந்த்ரயாச்ஞாவிஹதி மபநயந் வாமநோர்த்தீ

த்வமாஸீ:" (ஸ்ரீரங்கராஜஸ்தவம்) என்ற பட்டர் ஸ்ரீஸூக்தி அநுஸந்தேயம்: ஸ்ரீராமக்ருஷ்ணாதி அவதாரங்களில் ஆச்ரிதர்களுடைய இஷ்ட ப்ராபணத்திற்கும் அநிஷ்ட நிவாரணத்திற்கும் எம்பெருமான் யாசகவ்ருத்தியை அவலம்பிக்கவில்லையே; இந்த அவதாரத்தில் மாத்திரம் அதை ஏன் அவலம்பித்தார்? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக இஃது உள்ளது: மஹாபலியானவன் மற்ற அரக்கரசுரர்களைப் போலன்றிக்கே ஔதார்ய மென்று ஒரு சிறந்த குணமுடையனாயிருந்ததனால் அந்தக் குணத்தையும், இந்திரன் பக்கலிலுள்ள யாசகத்வத்தையும் குறிக்கொண்டு அவ்விரண்டையும் ஸபலமாக்குவதற்காக தேவரீர்தாமே பிக்ஷுகராய்ச் சென்றீர் என்றவாறு.

வாக்கானது ஞாலங்கொள்வான்குறளாகிய வஞ்சனே! என்று சொல்வதன் கருத்து யாதெனில்; மூவடிவேண்டி மாவலியிடஞ் சென்றபோது தேவரீர் அவ்வசுரனை நோக்கி அழகிய பேச்சுக்கள் பேசிற்றாமே; அங்ஙனே என்னோடும் சிறிது பேசலாகாதோ என்பதாம்.

என்னும் எப்போதும் என் வாசகமே = எனது வாக்கின் வ்ருத்தி எப்போதும் இதுவேயாயிற்று; வாமநாவதாரத்தின் வஞ்சன சாதுரியத்தை நினைத்த பின்பு ராமாவதாரத்தின் செவ்வையிலும் செல்லுகிறதில்லை. ... (௨)

வாசகமேயேத்தவருள்செய்யும் வானவர்தம்
நாயகனே! * நாளிளந்திங்களைக் கோள்விடுத்து *
வேயகம்பால்வெண்ணெய்தொடுவுண்ட ஆனாயர்
தாயவனே! * என்றுதடவுமென்கைகளே. (௩)

என் கைகள்	எனது கைகளானவை,	வேய் அகம் பால் வெண்ணெய் தொடு உண்ட	மூங்கிலால் செய்த வீடுகளில் வெண்ணெயைக் களவு செய்து அமுது செய்த
வாசகமே ஏத்த அருள் செய்யும் வானவர் தம் நாயகனே	வாக்கு மாத்திரமே துதிக்கும்படியாக அதற்கு அருள் செய்கின்ற தேவாதி தேவனே!	ஆன் ஆயர் தாயவனே	கோபால க்ருஷ்ணனே!
நாள் இள திங்களை கோள்விடுத்து	புதிய இளைய உதய சந்திரன் போலப் பற்களின் ஒளியைப் பரவவிட்டு	என்று தடவும்	என்று தடவுகின்றன.

* * * [வாசகமேயேத்த.] தமது கைகளுக்கு வாக்கின் வ்ருத்தியிலும் தம் வ்ருத்தியிலுமுண்டான சாபலத்தை அருளிச் செய்கிறார். "வாசகமே யேத்த அருள் செய்யும்" என்றவிடத்து வாசகமே என்ற ஏகாரம்—வாக்கு மாத்திரமே தேவரீரை ஏத்தும்படியிருக்க வேணுமோ? (கைகளாகிய) நாங்களும் ஏத்தும்படி அருளலாகாதோ? என்ற கருத்தைக் காட்டும். 'வானவர்தம் நாயகனே!' என்ற அடுத்த விளியின் சேர்த்தியையும் நோக்கி நம்பிள்ளை அழகாக அருளிச் செய்கிறபடி பாரீர்—"நித்யஸூரிகள் ஏத்தவிருக்கிற உனக்கு வாக்கு ஏதேனும் பச்சையிட்டதுண்டோ?" என்று. ஆழ்வாருடைய திருவாக்கு ஏத்துகிறாப்போலவும் நித்யஸூரிகளின் வாக்கு ஏத்துகிறாப்போலவும் நாங்களும் ஏத்தும்படியருள் செய்ய வேணுமென்று கைகளின் ப்ரார்த்தனை போலும்.

நாளிளந்திங்களைக் கோள்விடுத்து— இதற்கு ஆபாத ப்ரதீதியில் ஒரு பொருள் தோன்றும்; அதாவது, சந்திரனுக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்கின வரலாறு ஒன்று உண்டாதலால் அது இங்கு அநுஸந்திக்கப்படுகின்றதாக. (சந்திரன் தக்ஷமுனிவனது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்ரங்களையும் மணஞ்செய்து கொண்டு அவர்களுள் ரோஹிணி யென்பவளிடத்து மிகவுங் காதல் கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங்கூடி வாழ்ந்திருக்க மற்றை மகளிரின் வருத்தத்தை நோக்கிச் சினங்கொண்ட அம்முனிவன் 'க்ஷய மடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தால் சந்திரன் பதினாறுகலை வடிவாக வுள்ள தனது உடல் நாளடைவில் குறைபவனாகி அங்ஙனம் தனக்கு விரைவில் நேரக்கடவதான அழிவைப் போக்கிக் கொள்ளுதற்கு வேறுபுகலிட மொன்றுங் காணாமல் சிந்தித்து ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை யடைந்து அங்குள்ள நவதீர்த்தங்களில் ஒன்றும் கோயிலின் வடபுறத்தே யுள்ளதுமான புண்ய தீர்த்தத்தில் நீராடி அதன்கரையில் ஒரு புன்னைமரத்தின் நிழலில் இருந்து ஸ்ரீரங்கநாதனைக் குறித்துத் தவஞ்செய்ய, அந் நம்பெருமாள் அவனுக்குப் பிரத்யக்ஷமாகி, மீண்டும் கலைகள் நாள்தோறும் வளர்ந்து வரும்படி அநுக்ரஹித்தனன்: அத்திவ்ய தீர்த்தம் இதனால் சந்திரபுஷ்கரிணி யென்று பெயர் பெற்றது. "தேம்பலிளந்திங்கள் சிறைவிடுத்து" என்கிறார் திருமங்கை யாழ்வாரும். சீவக சிந்தாமணியிலும் "கோள்வாய் மதியம் நெடியான் விடுத்தாங்கு" என்று திருமால் சந்திரனுக்குக் கோள் விடுவித்ததாகக் கூறுதல் காண்க.) இந்தப் பொருள் இங்கு ஆபாதப்ரதீதியில் தோன்றக்கூடுமாயினும், இங்கு இதுவன்று பொருள். "அபிநவ பூர்ண சந்த்ரகிரணம் போலே திருமுத்தினொளி புறப்படும்படி திருப்பவளத்தைத் திறந்து" என்பது ஆறுயிரப்படி யருளிச் செயல். இப் பொருளையே ஸகல ஆசாரியர்களும் அருளிச் செய்துள்ளார்கள். இதுவே ரஸவத்தரம். இங்கு உபமேயமான வஸ்து சொல்லப்படாதிருப்பினும் திங்கள் என்னும் உபமாந வாசகம் திருமுத்தாகிற உபமேயத்தையே லக்ஷணையினால் தெரிவிக்கும். "தாவி வையங் கொண்ட தடந்தாமரைகட்கே" என்றவிடமும் காண்க.

நாளிளந்திங்களைக் கோள்விடுத்தது எப்பொழுது என்னில், வேயகப்பால் வெண்ணெய் தொடுவுண்ட காலத்தில் என்க. அதாவது—கண்ணபிரான் "படலடைத்த சிறுகுரம்பை நுழைந்து புக்குப் பசுவெண்ணெய் களவுகாணப் புகுமிடத்தில் தன்நிறத்தின் இருட்சியாலும் அவ்விடத்தின் இருட்சியாலும் வெண்ணெயிருக்குமிடம் தெரியாமல் தடவாநிற்கையில் யாத்ருச்சிகமாகக் கையிலே வெண்ணெய்த்தாழிகள் தட்டின உவப்பினால் பல்லைத்திறந்து சிரிக்க நேரும்; பூர்ணசந்திரனுடைய கிரணம்போலே திருமுத்துக்களின் ஒளி புறப்படவே அந்த வொளியையே கைவிளக்காகக் கொண்டு அமுது செய்வன் என்றுணர்க. "உறியார்ந்த நறுவெண்ணெயொளியால் சென்று அங்குண்டானை" என்ற பெரிய திருமொழியிலும் 'ஒளியால்' என்றதற்கு இங்ஙனமே பொருளுரைக்கப்பட்டது காண்க. கண்ணபிரானுடைய திருமுத்துக்கள் நாளிளந்திங்களை யொத்திருக்குமென்பது "செக்கரிடை நுனிக்கொம்பில் தோன்றும் சிறு பிறைமுளைப்போல, நக்க செந்துவர்வாய்த் திண்ணைமீதே நளிர் வெண்பல் முளையிலக" என்ற பெரி

யாழ்வார் திருமொழியினுலும் அறியத்தக்கது. கோள் விடுத்து—தேஜஸ்ஸைப் புறப்படவிட்டு என்றபடி.

தொடுஉண்ட = களவினால் உண்ட: "மாயை தொடு பட்டிமை வஞ்சனை யாகும்" [பிங்கலந்தை—பண்பிற் செயலிற் பகுதி வகை—135.] என்றது காண்க.

என்றுதடவும் என்கைகள் = அவன் வெண்ணெய் களவு செய்யப்புகுந்த விடத்தே வழியைக்கட்டிப் பிடித்துக்கொள்ளத் தேடுகின்றன என்கைகள் என்று ரஸோக்தியாகப் பொருள் கூறுவர். (ங)

கைகளாலாரத் தொழுதுதொழுதுன்னை *
வைகலும்மாத்திரைப்போதும் ஓர்வீடின்றி *
பைகொள்பாம்பேறி உறைபரனே! * உன்னை
மெய்கொள்ளக்காண விரும்புமென்கண்களே. (ச)

என் கண்கள்	எனது கண்களானவை,	வைகலும்	நாள்தோறும்
பை கொள் பாம்பு ஏறி உறை பரனே	படங்கொண்ட திருவனந்தாழ்வான் மீதேறி உறையும் பரம புருஷனே!	மாத்திரை போதும் ஓர் வீடு இன்றி	க்ஷணகாலமும் இடைவிடாமல்
உன்னை	தேவரீரை	உன்னை மெய் கொள்ளகாண	உன்னை மெய்யாகவே காண்பதற்கு
கைகளால் ஆர தொழுது தொழுது	கையாரப் பரிபூர்ண நமஸ்காரஞ் செய்து	விரும்பும்	விரும்புகின்றன.

* * * [கைகளாலார.] கண்களானவை 'கைகளுடைய பரிமாற்றமும் வேணும், தம் வ்ருத்தியான காட்சியும் வேணும்' என்னுகின்றன வென்கிறார். "கண்கள் கைகளாலாரத் தொழுது காணவிரும்பும்" என்று மூலமுள்ளது. கைகளால் தொழவேணுமென்பதைக் கண்கள் ஆசைப்படுவது எங்ஙனே என்று விமர்சிக்க வேணும்; விமர்சித்தால், கைகளின் வ்ருத்தியையும் கண்கள் ஆசைப்பட்டமை விளங்கும்.

"மாத்திரைப்போதும் ஓர் வீடின்றிவைகலும்" என்பது மத்யமதீபந்யாயத்தாலே முதலடியிலும் ஈற்றடியிலும் அந்வயிக்கும்: அநவரதமும் கைகளால் தொழவேணுமென்றும், அநவரதமும் காணவேணுமென்றும் விரும்புகின்றவாறு.

"கைகளாலாரத் தொழுது தொழுது" என்றுள்ளதனால் ஸக்ருத்ப்ரணாமஸம்ப்ரதாயம் பொருத்தமற்றது என்று சிலர் சொல்லப்பார்த்தார்கள். இங்கு நாம் ஸாரமாகச்சிலவிஷயங்கள் தெரிவிக்க விரும்புகிறோம். ஸம்ப்ரதாயங்களில், ஒவ்வொரு பிரமாணத்தில் நோக்காக ஒவ்வொரு ஆசாரமும் நெடுநாளாகவே நிகழ்ந்து வருகின்றது எந்த ஆசாரத்தையும் பழிக்க நாம் விரும்புகின்றிலோம். * ஸகலப்ரவ்ருத்தி விரோதிஸர்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியிலே உத்கடமான ஊற்றமுடைய வொருவகுப்பும், நிவ்ருத்தியிலன்றிக்கே ப்ரவ்ருத்திகளிலேயே உத்கடமான ஊற்றமுடைய மற்றொரு வகுப்பும் எம்பெருமானுருடைய தர்சனத்திலேயுள்ளது. பக்தியில் தலைநின்ற ஆழ்வார் போல்வாருடைய திவ்ய வாக்குகளில்

"கைகளாலாரத் தொழுது" என்கிற இந்த ஸ்ரீ ஸூக்தி போலவே "தொழக் கருதுவதே துணிவது சூதே" "தொழுது மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு எழுது மென்னுமிது மிகை" இத்யாதி ஸ்ரீஸூக்திகளும் காணப்படா நின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கே பர்யாலோசித்து ஸமந்வயப்படுத்த வேண்டுவது நிபுண நிரூபகர்களின் கடமை.

ஆழ்வார்களுக்கு பக்தி அதிகமென்றும், ஆசாரியர்களுக்கு ஞானம் அதிக மென்றும், அஸ்மதாதிகளுக்கு அஜ்ஞானம் அதிகமென்றும் ஒரு பாகுபாடு ஆசிரியர்களால் [ஸ்ரீவசநபூஷணத்தில்] ஏற்படுத்தப்பட்டுள்ளது. பக்தியில் முதிர்ந்தவர்களின் உக்தியின்படியும் அநுட்டானத்தின்படியும் நாம் ஒழுக இயலாது. நமஸ்காரம் ஒரு தடவை செய்யவேணுமா, இரண்டு தடவை செய்ய வேணுமா, நான்கு தடவை செய்யவேணுமா என்கிற விசாரம் மஹா பக்தர் களுக்கு உண்டாவதில்லை. "அத்யந்தபக்தியுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:—அத்யந்தபக்தியுக்தாநாம் ந சாஸ்த்ரம நைவ ச க்ரம:." என்னும்படியாக வுள்ளதத்தனை. ஆசார்ய ஹ்ருதயத்தில் (இரண்டாம் ப்ரகரணத்தில்) "அவேக்ஷ மென்னுமது" என்கிற சூர்ணிகையில் (பத்திமை, நூல்வரம்பில்லையே) என்று இவ் வர்த்தமே உபபத்திகளுடன் மூதலிக்கப்பட்டது. பக்தி தலைமண்டை கொண்டு மெய்மறந்து தொழுமவர்கள் நமஸ்கார ஸங்க்யையிலே நோக்குடையராகார்கள். இப்பாசுரத்தின் வியாக்கியானத்திலே எடுத்தாளப்படுகிற "நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவ வாதிந:—நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா: நம இத்யேவ வாதிந:." என்ற ப்ரமாணத்தின்படியே யிருக்கின்றவர்களைப் பற்றியாவது, இருக்க நினைப்பவர்களைப் பற்றியாவது யாதொரு விசாரமுமில்லை.

நம்மேர்ல்வார் அநுட்டித்து வருகிற நமஸ்காரமானது எந்த முறையிலே அமைந்துளதென்றால், "நந்த்ருநந்தவ்யபாவோயம் நப்ரயோஜநபூர்வக: நீசோச்சயோ: ஸ்வபாவோயம் நந்த்ருநந்தவ்யதாத்மக:—நந்த்ருநந்தவ்யபாவோ யம் நப்ரயோஜநபூர்வக:, நீசோச்சயோ: ஸ்வபாவோயம் நந்த்ருநந்தவ்யதாத்மக:." என்கிற பகவச் சாஸ்த்ர வசனத்தின்படி, பெரியோர்களைக் கண்டால் சிறியோர் கள் தங்களுடைய சிறுமைக்கும் எதிர்த்தலையின் பெருமைக்கும் தகுதியாக நமஸ் காரம் செய்ய வேணுமென்கிற முறையைத் தழுவி அமைந்துளது. ஆகவே, நமது நமஸ்காரத்திற்கு நைச்யத்தைக் காட்டிக்கொள்வது தவிர வேறொரு பலன் கிடையாது; ஒரு முறை தொழுதமாத்திரத்தினால் அப்பயன் நிறைவேறு கிற்கையாலே இதுபோதும் என்பது மஹான்களுடைய திருவுள்ளம்.

'ஒருமுறை நமஸ்கரிப்பது கூடாது' என்று வாய்திறந்து சாஸ்த்ரம் நிஷேதித்திருக்குமானால் ஸக்ருத்ப்ரணாமம் சாஸ்த்ர விருத்தம் என்னலாம். அத்தகைய நிஷேதம் எங்கும் காணப்படவில்லை. ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசி கனும் அடிக்கடி உதாஹரித்தருளும் பிரமாணங்களில் "ஒற்றைக்கையால் நமஸ் கரிப்பது பாபம், ஒருதடவை பிரதக்ஷிணம் செய்வது பாபம்" என்கிற வசநங்கள் உள்ளனவேயன்றி வேறில்லை. அன்றியும், ஏகப்ரணாம ஸாதகவசனங்களையே பெரும்பாலும் தேசிகன் காட்டியருளுகிறார். "நமோ நமோவாங் மநஸாதிபூமயே"

பாஷ்யத்திலே அந்த வசனங்களைக் கைகொள்களியாகக் காணலாம். "𑌏𑌕𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑍀𑌰𑌸𑍍𑌯 𑌦𑍇𑌶𑌿𑌕𑌃—ஏக: க்ருஷ்ணநமஸ்காரோ முக்தி தீரஸ்ய தேசிக:." இதுபோன்ற நாலைந்து வசனங்களை ஸ்ரீதேசிகன் உதாஹரித்துக் காட்டிவிட்டு, இப்படியிருக்க இங்கு நமோநம: நமோநம: என்று பலகால் அருளிச் செய்வானேன்? என்று சங்கித்துக் கொண்டு தாமே அழகாக ஸமாதானமும் அருளியுள்ளார். அதாவது இரண்டு வகையாக ஸமாதானம் திருவுள்ளம்பற்றுகிறார். அதிப்ராப்தமான பக்தியில் தலைநின்று ஸாதிக்கிறார் என்பது முதல் ஸமாதானம். "அத்யந்தபக்தியுக்தாநாம் ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:" என்றதில் நோக்காக இந்த ஸமாதானம் அவதரித்தது. இரண்டாவது ஸமாதானமாவது—'𑌪𑍍𑌰𑌶𑌂𑌸𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌲𑌾𑌪𑍇 𑌤𑌰𑍍𑌜𑌨𑍇𑌽𑌪𑌿 𑌚। 𑌭𑌯𑍇 𑌚 𑌵𑌿𑌜𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌪𑍌𑌨𑌃𑌪𑍁𑌨𑍍𑌯𑌮𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌿𑌃—ப்ரசம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரலாபே தர்ஜநேபி ச, பயே ச விஜயே சைவ பௌந:புந்யம் அலங்க்ருதி:" என்கிற ஒரு காரிகையை எடுத்துக் காட்டி முடித்தது.

இந்த காரிகையின் பொருளை அறிஞர்கள் ஆராய வேண்டும். இதன் பொருள் யாதெனில்; ஸ்தோத்ரம் செய்யும்போதும் பிரதிஜ்ஞை செய்யும் போதும் அழும்போதும் வெருட்டும்போதும் அச்சந்தோற்றச் சொல்லும் போதும் வெற்றிதோற்றச் சொல்லும்போதும் ஒரு சொல்லையே அடுத்தடுத்துச் சொல்வதானது அலங்காரமாகும் என்பதே இதன் பொருள். ஒருமுறை நமஸ்கரிப்பது கூடாதென்கிற திருவுள்ளம் ஸ்ரீதேசிகனுக்கு இருந்திருக்குமாயின் இந்த காரிகையை இங்கெடுத்துக் காட்ட ப்ரஸக்தியே யிராது. பின்னை எங்ஙனே சொல்லியிருக்கவேணுமென்னில், "சாஸ்த்ரங்கள் ஸக்ருத்ப்ரணாமத்தை நிஷேதித்து அநேகவார ப்ரணாமத்தை விதிக்கையாலே அதற்கிணங்க 'நமோநம: நமோநம:' என்கிறார் என்று தேசிகன் அருளிச் செய்திருக்கவேண்டும். அப்படி அருளிச் செய்யாததோடு அந்த அபிப்ராயத்திற்கு நேர் எதிராகவும் அருளிச் செய்துள்ளார். ஒருவன் அழுகிறகாலம் அஞ்சுகிறகாலம் முதலானவற்றில் ஒன்றையே திருப்பித்திருப்பிச் சொல்வதை நாம் காண்கிறோம். 'பாம்பு பாம்பு பாம்பு' என்று பலமுறை சொன்னாலும் உள்ளது ஒரு பாம்பேயல்லது பல பாம்புகள் வந்துவிடமாட்டா; அங்குப் பலமுறை சொல்வதோடு இங்கு நமோ நம: என்று பலமுறை சொல்வதோடு வாசியில்லை யென்பதை தேசிகன் ஸ்பஷ்டமாகக் காட்டியருளினர்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ள வேண்டுவதொன்றே. "என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு" என்றவிடத்து ஈட்டில் "தேவரீர்க்ருபைக்குத் தண்ணீர்த்துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோ?" என்று நம்பிள்ளை யருளிச் செய்தது ஊன்றி நோக்கத்தக்கது. ஸ்வப்ரவ்ருத்திகளை அதிகப்படுத்திக் கொள்வதானது தாராளமாக ப்ரஸரிக்கக்கூடிய பகவத்க்ருபைக்கு ப்ரதிபந்தகமாகுமோ என்கிற சங்கை எம்பெருமானுடைய படியை நன்குணர்ந்த ஆசாரியர்கட்கு உண்டு. "பிறர்களுக்கு அரிய வித்தகன்" என்றவிடத்து ஈட்டில் "நம்முடையவர்கள்

எம்பெருமானையே உபாயமாகப்பற்றுநிற்க, அல்லாதார் அசேதநக்ரியாகலாபங்களைப் பற்றுகிறாப்போலேயிறே துர்யோதனன்நிலை" என்றருளிச் செய்கிறார். இவற்றையும், "காம்பறத் தலை சிரைத்து உன்கடைத் தலையிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்திபோலுஞ் சூழ்புனலரங்கத்தானே!" என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரம் முதலியவற்றையும் ஊன்றி நோக்குமிடத்து, "ஸாத்யமானவரையில் ஸ்வப்ரவ்ருத்தி பாஹுள்யத்தைக் குறைத்துக்கொள்வது நலம்" என்று ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றினார்களென்பது விளங்காநின்றது.

நம்முடைய ஆர்த்தியின்கனத்தைக் கண்டாலல்லது எம்பெருமானுக்குக் கருணைபிறவாதென்றும், ஸ்வப்ரவ்ருத்தி பாஹுள்யத்தை யிட்டே ஆர்த்தியின் கனத்தைக்காட்ட வேணுமென்றும் கருதிய மஹான்கள் அக்கருத்துக் கிணங்க நடந்துகொள்ளுகிறார்கள். உபயஸம் ப்ரதாயங்களிலுமுள்ள அநுஷ்டானங்களை ஆராயுமிடத்து, ஒரு சாரார் பரஸ்வரூபத்திலே நோக்காகவும், மற்றொரு சாரார் ஸ்வஸ்வரூபத்திலே நோக்காகவும் நடந்துகொள்வதாகத் தேறுகின்றது.

"இத்தலையைப்பார்த்தால் கணக்கற்செய்ய வேண்டியிராநின்றது; அத்தலையைப்பார்த்தால் செய்வதத்தனையும் மிகையாயிராநின்றது" என்று பட்டருளிச் செய்வாராதலால், இத்தலையைநோக்கி ஒருஸம்ப்ரதாயமும் அத்தலையைநோக்கி ஒரு ஸம்ப்ரதாயமும் நடந்துவருவதாகக் கொள்வதே அழகியது. ஆகவே பரஸ்பரம் இகழ்ச்சியின்றியே யிருக்க ப்ராப்தம்.

தொழுது தொழுது என்ற இவ்விடத்தில் ஈடு— "ப்ரயோஜநாந்தரத்துக்காகத் தொழில் ப்ரயோஜநத்தளவிலே மீளுநம்; ஸாதநபுத்த்யா தொழில் ஸாத்ய ஸித்தித்தவளவிலே மீளும். அங்ஙனன்றிக்கே இதுவே யாத்ரையாய்" என்பதாம்.

மெய்கொள்ளக்காண என்றவிடத்து ஈட்டில் "பத்தும்பத்தாக மெய்யேகாண" என்கிற ஸ்ரீஸூக்திகாண்கிறது. பத்தும் பத்தாக என்றது 'உள்ளது உள்ளபடியாக' என்றபடி. அச்சொற்றொடர்க்கு இப்பொருள் எங்ஙனே கிடைக்குமென்னில், கேண்மின்; அருளிச்செயல்களில், பாணாஸுரனுடைய தோள்களைத் துணித்தவரலாறும் அநுஸந்திக்கப்படுகிறது; இராவணன் தலைகளையறுத்த வரலாறும் அநுஸந்திக்கப்படுகிறது; முந்தினதைப் பேசுமிடங்களில் "வாணனாயிரந் தோள் துணித்த" என்றும் "வாணனீரைஞ்ஞூறு தோள்களை துணித்த" என்றும் அருளிச்செய்யக்காண்கிறோம். பிந்தினதைப் பேசுமிடங்களில் "கதிர்நீண் முடிபத்து மறுத்து" என்றும் "தென்னிலங்கைக்கிறைவன் சிரங்கள் ஐயிரண்டும்" என்றும் அருளிச்செய்யக் காண்கிறோம். முந்தினதில் ஆயிரந்தோள் துணித்ததாகச் சொன்னதில் உண்மையில் ஆயிரமில்லை; பரமசிவனது ப்ரார்த்தனையினால் சில தோள்களைத்துணியாதே விட்டிட்டதாகப் புராணங்கள் கூறுதலால் இங்கு ஆயிரமென்றது சிறிது குறைந்த தொகையையே காட்டும். இராவணன் தலைகள் பத்து மறுத்தானென்றதில் இங்ஙனே குறை கொள்ளவேண்டியதில்லை; பத்தும் பத்தாகவே கொள்ளத்தகும். இதிலிருந்தே "பத்தும் பத்தாக" என்ற வழக்கச்சொல் ஏற்பட்டது. 'உள்ளது உள்ளபடியேயாக' என்கிற கருத்துத் தேறிநின்றது. இந்த நுட்பமறியாத சிலர் (பழைய ஸ்ரீகோசங்களில்) "பற்றும் பற்றாக" என்று மாறுபாடாகப் பதிப்பித்துள்ளார்கள்; இது திருத்திக் கொள்ளத்தக்கது. ... (ச)

கண்களால்காண வருங்கொலென்றாசையால் *
மண்கொண்டவாமனன் ஏறமகிழ்ந்துசெல் *
பண்கொண்டபுள்ளின் சிறகொலிபாவித்து *
திண்கொள்ளவோர்க்கும் கிடந்தென்செவிகளே. (ரு)

என் செவிகள்	எனது காதுகளானவை,	புள்ளின்	கருத்மானுடைய
கண்களால் காண வரும் கொல் என்று ஆசையால்	கண்களால் காணும்படி வருவனோ வென்று ஆசையினால்,	பண் கொண்ட	ஸாம, வேத, ஸ்வர ப்ரசுரமான
மண் கொண்ட வாமனன் ஏற	(மாவலியிடம்) பூமியைக் கவர்ந்த வாமனன் (தன்மீது) ஏறுதலால்	சிறகு ஒலி	சிறகின் தொனியை
மகிழ்ந்து செல்	மகிழ்ச்சியோடு செல்கின்ற	பாவித்து	நினைத்து
		கிடந்து	பரவசமாய்க் கிடந்து
		திண் கொள்ள ஓர்க்கும்	உறுதியாக நிரூபிக்கின்றன.

* * * [கண்களாற்காண.] காணவும் வேணும், கேட்கவும் வேணுமென்று செவிகள் ஆசைப்படுகின்றன வென்கிறார். இப்பாசுரத்தில் செவிகள் எழுவாயாதலால் முதலடியிற் கூறப்பட்டுள்ள ஆசை செவிகளுக்குண்டான ஆசையாகவே கொள்ளத்தக்கது. செவிகளானவை தமக்குக் கண்கள் முளைக்கவேணுமென்றும் அவற்றாலே காணவேணுமென்றும் ஆசைப்படுகிறபடி. அன்றியே, தாமே கண்களாக மாறி ஆசைப்படுகிறபடியுமாம். கண்ணாரக் கண்டுகளிக்க எழுந்தருள்வனோ வென்கிற நசையாலே, செவிகளானவை, எம்பெருமான் பெரிய திருவடியின்மீது ஏறிக்கொண்டு எழுந்தருள்வதாகவும், எம்பெருமானைச் சுமந்து கொண்டு பெரியதிருவடி மகிழ்ச்சியாலே சிறகுகளையடித்துக்கொண்டு விரைந்து ஓடி வருவதாகவும் பாவனை கொண்டு அந்தச் சிறகொலியைக் கேட்க அதிலேயே ஊற்றமுற்றிருக்கின்றன வென்கிறார்.

மண்கொண்ட வாமனன் ஏற = வாமநமூர்த்தியாவது த்ரிவிக்ரமமூர்த்தியாவது பெரியதிருவடியின் மீது ஏறி யெழுந்தருளினதாக எங்கும் ப்ரஸித்தியில்லை; அப்படியிருக்க "வாமனன் ஏற" என்று இங்கு அருளிச்செய்தது என்? என்னில்? வாமநன் என்கிற வ்யக்தியில் நோக்காக அருளிச்செய்வதன்று; அவனுடைய செயலில் மாத்திரமே இங்கு நோக்கு; தன்னுடைமையைப் பெறுதற்குத்தான் இரப்பாளனாய்ச் செல்லுதல் என்னும் குணவிசேஷத்தையுடையனை எம்பெருமான் என்றபடி. 'பெரிய திருவடியின் மீது ஏறிக்கொண்டு எம்பெருமான் ஆங்காங்கு யாத்திரை செல்வதானது தன்னுடைமையைத் தான் இரந்து பெறுதற்கு' என்று ஆழ்வாருடைய நினைவு போலும்.

செல் என்பது புள்ளுக்கு அடைமொழி; செல்கின்ற புள் என்றபடி.

பண்கொண்ட புள் = வாஹநபரிஷ்காரங்களையுடைய புள் என்றும், ப்ருஹத், ரதந்தரம் முதலிய ஸாமங்களை வடிவாகக் கொண்ட புள் என்றும் இருவகையாகப் பொருள்படும், இரண்டாவது பொருள் மிகச்சிறக்கும். "வேதாத்மா விஹகேஶ்வர:— வேதாத்மா விஹகேஶ்வர:" என்றார் ஆளவந்தார். "ஸுபர்ணோஸி கருத்மாந் த்ரிவ்ருத்தே ஶிர:" இத்யாதி வேத

வாக்கியத்தினால் கருத்மானுடைய வேதமயத்வம் நன்கு உணரத்தக்கது. பிள்ளைப் பெருமாளையங்காரும் திருவரங்கத்து மாலையில் (88) "சிரஞ் சேதனன்விழி தகஞ் சிறையின் சினைபதங்கள், கரந்தோள்களொரு வடிவம் பெயரேசர் சாமமுமாம், பரந்தே தமதடியார்க்குள்ள பாவங்கள் பாற்றிபருள், சுரந்தேயளிக்கு மரங்கர்த மூர்த்திச் சுவணனுக்கே." என்ற செய்யுளினால் விவரித்தனர்.

சிறகு ஒலி பாவித்து = ஆழ்வார்க்கு எம்பெருமான் மீதும் ஞாபகமில்லை, அவனைத் தாங்கிவருகிற பெரியதிருவடியின்மீதும் ஞாபகமில்லை, அப்பெரியதிருவடியின் சிறகின் மீதும் ஞாபகமில்லை; சிறகின் ஒலியொன்றிலேயே ஞாபகம் செல்லாநின்றது போலும். இங்கு "பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும், சார்ங்கவில் நாணொலியும் தலைப்பெய்வது என்றுகொலோ" என்ற நாச்சியார் திருமொழிப்பாசுரம் அநுஸந்திக்கவுரியது. ருக்மிணிப்பிராட்டிக்கு ஒரு ஒலியிலே ஞாபகம்; ஸீதாபிராட்டிக்கு ஒரு ஒலியிலே ஞாபகம், பராங்குசநாயகிக்கு ஒரு ஒலியிலே ஞாபகம் என்று அஸ்மதாசார்யர் சமத்காரமாக உபந்யஸித்தருளக் கேட்டிருக்கை. கண்ணபிரானையன்றி மற்று எவனையும் கனவிலும் கருதாதிருந்த ருக்மிணிப்பிராட்டிக்கு ஶிஶுபாலனோடு விவாஹம் நடப்பதாகக் கோடித்து ஸித்தமாயிருந்த ஸமயத்தில் கண்ணபிரானது வரவை எதிர்பார்த்திருந்த அவளது மனம் முறிந்துபோய் இனி நாம் உயிர் துறப்பதே நல்லுபாயமென்று நிச்சயித்திருந்த க்ஷணத்தில் கண்ணபிரான் பதறி ஓடி வந்து புறச் சோலையிலே நின்று தன் பாஞ்சஜந்யத்தை ஊதியருள அதன் ஒலி ருக்மிணிப்பிராட்டியின் செவியிற் புகுந்து பேரின்பம் பயந்தது; இராவணன் ஸீதையிடம் வந்து இராமபிரான் இறந்தானாக ஒரு பொய்க் கூற்றுக்கூறி மாயாஶிரஸ்ஸைக் காட்டினபோது அப்பிராட்டி வருந்திக்கிடக்கும் க்ஷணத்திலே இராமபிரான் கடற்கரையிலே நின்று தனது சார்ங்கவில்லை ஒலிப்பிக்க, அவ்வொலியானது ஸீதையின் செவியிற்புகுந்து பேரின்பம் பயந்தது; இவைபோல இவ்வாழ்வார்க்குப் பெரியதிருவடியின் சிறகொலியே பேரின்பம் பயப்பதாம். சிறகொலி பாவித்தலாவது—சிறகின் ஒலியே செவியில் பட்டுக்கொண்டிருப்பதாக நினைத்தலும், சிறகொலி எப்போது செவியில்படும் என்று அதுவே ஞாபகமாயிருத்தலுமாம்.

திண்கொள்ள ஓர்க்கும் = எதிரே நின்று யாரேனும் எதாகிலும் பேசிக்கொண்டிருந்தாலும் அதைச் சிறிதும் செவியேற்காமல் புள்ளின் சிறகொலி செவியிற் படுவதையே குறிக்கொண்டிருக்கும்படியைக் கூறியவாறு. வேறொன்றில் நெஞ்சு செலுத்தாமல் ஒன்றிலேயே அவதானம் வைப்பது திண்கொள்ள வோர்த்தலாம். இவ்விடத்து இருபத்தினாலாயிரப்படியில் "பரதாழ்வான் கிலிகிலா ஶப்தத்துக்குச் செவிமடுத்துக்கொடு கிடந்தாப்போலே" என்றருளியது காண்க. ... ... (ரு)

செவிகளாலார நின்கீர்த்திக்கனியென்னும்
கவிகளே * காலப்பண்தேன் உறைப்பத்துற்று *
புவியின்மேல் பொன்னெடுஞ்சக்கரத்துன்னையே *
அவிவின்றியாதரிக்கும் எனதாவியே. (சு)

எனது ஆவி	என் பிராணனானது,
நின்	உன்னுடைய
கீர்த்தி கனி என்னும் கவிகளே	கீர்த்தியாகிய பழம் என்னலாம்படியான கவிகளையே
காலம்	காலத்திற்கு ஏற்ற
பண்	பண்களாகிற
தேன்	தேனிலே
உறைப்ப	மிகவும் செறிய
துற்று	கலந்து
செவிகளால் ஆர	காதுகளால் பூர்ணமாக அநுபவிக்க
புவியின் மேல்	பூமியின்மீது
பொன் நெடு சக்கரத்து உன்னையே	அழகிய பெரிய திருவாழியையுடைய தேவரீரையே
அவிவு இன்றி	இடையறாமல்
ஆசிக்கும்	விரும்பாநிற்கும்.

* * * [செவிகளாலார.] என்னுடைய ஆவியானது உன்னுடைய கீர்த்தியைக் கேட்கவேணுமென்று விரும்புகின்றதென்கிறார். இப்பாசுரத்தில் ஆவி என்பது எழுவாயாதலால் 'செவிகளாலார' என்று கூறப்பட்ட ஆசை ஆவிக்கு உண்டான ஆசையாகக் கொள்ளத்தக்கது. ஆவியானது தனக்குச் செவிகள் முளைக்க வேணுமென்றும் அவற்றாலே எம்பெருமானது கீர்த்திக் கவிகளைக் கேட்கவேணு மென்றும் ஆசைப்படுகிறபடி. அன்றி, தானே செவியாக மாற ஆசைப்படுகிற படியுமாம். 'செவிகளாலார' என்றது செவிகள் வயிறு நிறையும்படியாக என்றபடி. கீர்த்தியாவது கொண்டாடிக் கூறப்படும் திருக்குணங்களாம்; அவற்றைப் பற்றிப் பரமரஸிகர்களான பக்தர்கள் இயற்றும் கவிகள் பரமபோக்யமாக இருக் குமாதலால் "கனியென்னுங் கவிகள்" என்றார். "கனியென்னுங் கனிகள்" என்று சொல்லவேண்டிய முறை ப்ராப்தமாயிருக்க அங்ஙனம் கூறாது "கனி யென்னுங் கவிகள்" என்றது கனிகளினும் மிக்க போக்யதாதிசயம் கவிகளில் இருக்கும்படியைக் காட்டுதற்காம். இங்கு ஈடு காண்மின்;— "கவி கனிபோலி ருக்கையன்றிக்கே கனி கவியாயிற்றென்கிறது இதிறே போக்யதாதிசயத்தாலே."

காலப்பண் தேனுறைப்பத் துற்று = கனிகள் இயற்கையிலே மதுரங்க ளாகவேயிருந்தாலும் செருக்கர் தேனிலே தோய்த்து உண்பர்கள்; அதுபோலே பகவத்ஸ்துதிக் கவிகளைக் காலாநுரூபமான பண்ணாகிற தேனிலே தோய்த்துச் சுவைக்க விரும்புகின்றபடி. வண்டுகள், குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் என் னும் பண்களைப் பாடுமாபோலே பக்தர்கள் பலவகைப்பட்ட பண்களிலே துதி மொழிகளைப்பாடி உள்ளங் குளிரப் பெறுவர்களென்க. கீழ் * மொய்ம்மாம் பூம்பொழிலில் "பண்கள் தலைக்கொள்ளப்பாடி" என்றருளிச் செய்ததுங் காண்க. இப்படிப்பட்ட அநுபவம் "ஸதா பஶ்யந்தி ஸூரய:" இத்யாதிப்படியே திரு நாட்டில் எளிதாயினும் இந்நிலத்திலேயே அது வாய்க்கவேணுமென்னும் பாரிப் பைப் புவியின்மேல் என்பது காட்டுகின்றது. "எங்கேனும் விடாய்த்தாரை எங்கேனும் விடாய் தீர்க்கவொண்ணாது; பசித்தவிடத்தே சோறிடவேணும்" என்பது ஈடு.

"பொன்னெடுஞ் சக்கரத்துன்னையே" என்றதனால் திருநாட்டில் காட்சி தந்தருளும்படியையே இங்கு அநுபவிக்கப் பெற்றேனாகவேணுமென்கிறது. "தமஸ: பரமோ தாதா ஶங்க சக்ரகதாதர:" என்ற பிரமாணத்தில் நோக்கு. .... (சு)

ஆவியே ஆரமுதே ! என்னையாளுடை *
தூவியம்புள்ளுடையாய் ! சுடர்நேமியாய் ! *
பாவியேன்நெஞ்சம் புலம்பப்பலகாலும் *
கூவியும்காணப்பெறேன் உனகோலமே. (எ)

ஆவியே	என் உயிராயிருப்பவனே !	சுடர் நேமியாய்	ஒளிமிக்க திருவாழியையுடையவனே !
ஆர் அமுதே	அருமையான அமுதம் ! போன்றவனே !	உன கோலம்	உனது வடிவழகை
என்னை ஆள் உடை	என்னை அடிமை கொண்ட	பாவியேன்	பாவியாகிய நான்
அம் தூவி புள் உடையாய்	அழகிய சிறகுள்ள கருத்மானை வாஹனமாக வுடையவனே !	நெஞ்சம் புலம்ப பலகாலும் கூவியும்	மனம் துடிக்கப் பலகால் கூப்பிட்டும்
		காண பெறேன்	கண்டு அநுபவிக்கப் பெற்றிலேன்.

* * * [ஆவியே ஆரமுதே.] பஹுபாபியாகையாலே நெஞ்சின் விடாய் தீர்க்கவும் பெற்றிலேனான நான் நெடுநாள் கூப்பிட்டவிடத்திலும் உன்னுடையவழகு காணவும் பெற்றிலேன் என்கிறார். அதாவது—கரணங்களை யொழியத் தம்முடைய இழவு சொல்லுகிறபடி. —"ப்ரஜைகளின் இழவும் பசியும் சொன்னார் கீழ்; தம்மிழவும் பசியும் சொல்லுகிறார் மேல்." என்பது ஈடு.

உயிரைவிட்டுப் பிரிந்து தரித்திருக்கவொண்ணுமோ? உயிர்க்கும் உயிரான உன்னைவிட்டு எங்ஙனே தரித்திருக்க வல்லேன் என்கிறார் ஆவியே! என்றதனால். உயிராயிருப்பதோடுகூட போக்யதையும் அளவற்றிருப்பதனால் தரிக்கமுடியாமையை ஆரமுதே! என்பதனால் தெரிவிக்கிறார்.

என்னையாளுடை என்பதைப் புள்ளுடையானுக்கும் அடைமொழியாக்கலாம், புள்ளுக்கும் அடைமொழியாக்கலாம். பகவத் விஷயத்தில் அடிமையிற் காட்டிலும் பாகவத விஷயத்தில் அடிமையே சிறக்குமாதலால் புள்ளுக்கு அடைமொழியாக்குதல் சிறக்குமென்க. சுடர் நேமியாய்!—போக்யதைக்கும் விரோதிநிரஸநத்திற்கும் அமைந்த திருவாழியை யுடையவனே! என்றபடி.

பாவியேன் நெஞ்சம்= நெஞ்சு பகவத்விஷயத்தில் ஈடுபடாதிருந்தால் இழக்கவேண்டுமேயல்லது ஈடுபட்ட பின்பும் இழக்கக் காரணமில்லை; "லாப⁴ஸ்தேஷாம் ஜயஸ்தேஷாம் குதஸ்தேஷாம் பராப⁴வ:। யேஷாமிந்தீ³வரஶ்யாமோ ஹ்ருத³யே ஸுப்ரதிஷ்டி²த:— லாபஸ் தேஷாம் ஜயஸ் தேஷாம் குதஸ் தேஷாம் பராபவ:, யேஷாமிந்தீவரச்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித:." என்கிறபடியே இழவு வரமாட்டாது; அப்படியிருக்க என்னெஞ்சு இழவு பட்டிருப்பது—அது எனக்குக் கரணமாகப் பெற்ற பாவத்தினாலே போலும் என்கிறார். புலம்ப= நெஞ்சானது காணப்பெறாத இழவோடே கூப்பிடுகிறபடி. "நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக்கமலந்தன்னை அயன்" என்னுமா போலே * நெஞ்சத்துப் பேராது நிற்கும் பெருமானையன்றோ நெஞ்சு காணப் பெறாமல் கூப்பிடுகின்றது. பலகாலும்= ஒருகால் கூப்பிட்டாலும் இழக்க வேண்டாத விஷயத்திலே பலகால் கூப்பிடவேண்டியதாயிற்று; அப்படிப் பல

-னால் கூப்பிட்டும் உன கோலம் காணப்பெறேன். என்னுடைய ஸ்வரூபத்தை யிழந்தும் பேறுபெற்றிலேன் என்கை. 'அவன்றானாகவே வந்து அருள் செய்த போது செய்திடுக' என்று கொண்டு கூவாதேயிருக்க வேண்டுவது ஸ்வஸ்வரூபம்; ஆற்றாமையினாலே கூவினேனாதலால் ஸ்வரூபஹாநி பெற்றேன்; ஆயினும் பேறு பெற்றதில்லையே! என வருந்துகிறபடி.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யங்கள்;—"ஒன்று அபிமதம் பெற்றேனல்லேன், ஸ்வரூபம் பெற்றேனல்லேன் என்கிறார். (தத்ரைவ) ஸஹஸ்ர ஸம்ஹவெஸ—தத் தன்ய ஸத்ருஸம் பவேத்' என்றிருக்கப் பெற்றேனல்லேன்; மடலூர்ந்தார் பெற்றபேற்றைப் பெற்றேனல்லேன். என் ஸ்வரூபத்தையுமழித் தேன், அவன் ஸ்வரூபத்தையுமழித்தேன். அவன் நீர்மையையுமழித்தேன், என் சேஷத்வத்தையுமழித்தேன். அவனீச்வரத்வத்தையுமழித்தேன், என்னுடைய ஈப்ஸிதவ்யத்வமும் போயிற்று இனிக்கொள்ள விருக்கிறாரார்? கொடுக்கவிருக்கிறாரார்? (உன கோலமே.) இரண்டு தலையையுமழித்துப் பெறவேண்டும் விஷயவை லக்ஷண்யம் சொல்லுகிறது. வ்யதிரேகத்தில் கண்ணுறங்குதல் சூது சதுரங்கங்களோடே போது போக்குதல் செய்யலாம் விஷயமாகப் பெற்றோமோ? * உண்டோ கண்கள் துஞ்சுதல் * என்றும் * என்னினைந்து போக்குவரிப்போது * என்றும் கண்ணுமுறங்காதே போது போக்கவுமரிதாயிறே யிருப்பது." .... (எ)

கோலமேதாமரைக்கண்ணதோர் அஞ்சன
நீலமே * நின்றெனதாவியை ஈர்கின்ற
சீலமே * சென்றுசெல்லாதன முன்னிலாம்
காலமே * உன்னையெந்நாள்கண்டுகொள்வனே. (அ)

கோலமே	அழகுதானே வடிவெடுத்தாற் போன்றவனே!	ஈர்கின்ற	ஈடுபடுத்துகின்ற
தாமரைக் கண்ணது	தாமரை போன்ற திருக்கண்களையுடையதாகிய	சீலமே	சீலகுணமே வடிவெடுத்திருப்பவனே!
ஓர் அஞ்சனம் நீலமே	ஒப்பற்ற அஞ்சனமலை போன்ற நீலநிறமுடையவனே!	சென்று செல்லாதன முன்னிலாம் காலமே	இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலம் என்னும் முக்காலங்களுக்கும் நியாமகனே!
நின்று	நிலை நின்று	உன்னை	உன்னை
எனது ஆவியை	என் ஆத்மாவை	என்நாள்	என்றைக்கு
		கண்டு கொள்வன்	கண்டு அநுபவிப்பேன்.

* * * [கோலமே.] "பலகாலும் கூவியுங் காணப்பேறேனுன கோலமே" என்ற தம்மைக் குறித்து எம்பெருமான் 'உம்முடைய அபேக்ஷிதம் பூர்த்தி செய்கைக்கீடான காலம் வரவேண்டாவோ?' என்று அருளிச் செய்ததாகக் கொண்டு, 'காலமும் நீயிட்ட வழக்கன்றோ? நான் இழக்கத் தகுமோ?' என்கிறார்.

கோலமே!— கோலம் என்று அழகுக்குப் பெயர்; அழகியவனே! என்று சொல்லவேண்டி யிருக்க அழகே! என்றது—'அழகுதானே ஒரு வடி

வெடுத்தது' என்னலாம்படி யிருக்கையாலே. இவ்விடத்தில் * **தத்³கு³ணஸார ஸ்வாத்து தத்³வ்யபதே³ஶ: ப்ராஜ்ஞவத்** * என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தின் பொருள் அறியவுரியது. * **ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம** * என்ற உபநிஷத்வாக்யம் பரமாத்மாவை ஜ்ஞாநம் என்று கூறினதும் * **விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே** * என்ற உபநிஷத்வாக்யம் ஜீவாத்மாவை விஜ்ஞானம் என்று கூறினதும் ஜ்ஞாந குணமே மிகுத்திருக்கையாலே, என்பது ஸூத்ரத்தின் தாற்பரியம். "அழகே விஞ்சி அத்தையிட்டு நிரூபிக்க வேண்டும்படி யிருக்கையாலே கோலமே யென்கிறார்" என்ற ஈடும் காண்க.

தாமரைக்கண்ணதோர் அஞ்சனநீலமே !— கீழ்ச் சொன்ன அழகுக்கு ஆச்ரயம் திருமேனி ; அந்தத் திருமேனிக்குள்ளே மிகச் சிறந்தது கண்ணழகு ; அதனை யநுபவிக்கிறபடி. "**ஸ்வேதாப்³ஜநயந:**—க: புண்டரீகநயந:" என்னலாம்படி யன்றோவிருப்பது. **அஞ்சனநீலமே** என்பதை இரண்டு வகையாக நிர்வஹிப்பர்கள். அஞ்சனமே, நீலமே ! என்று இரண்டு விளியாகப் பிரித்தல் ; அஞ்ஜன த்ரவ்யத்தின் நீலநிறந்தான் வடிவானவனே ! என்னுதல்.

நின்று எனதாவியை ஈர்கின்ற சீலமே !— கீழ் "வளவேழுலகின்முதலாய" என்கிற திருவாய்மொழியில் தாம் நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலப்புக, அப்போது கலந்து பரிமாறின சீலகுணத்தை அநுஸந்திக்கிறபடி. அல்லது, * செய்யதாமரைக் கண்ணனில் "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்ற அர்ச்சாவதாரத்தின் நீர்மையை அநுஸந்திக்கிறபடியாகவுமாம்.

இப்படி அழகும் குணங்களுமுண்டானாலும் பெறுமிடத்தில் இன்னகாலமென்றில்லையோ வென்ன, **சென்று சேல்லாதன முன்னிலாங்காலமே !** என்கிறார். பூதகாலம் பவிஷ்யத்காலம் வர்த்தமானகாலம் என்றுள்ள காலமும் நீயிட்ட வழக்கன்றோ என்றபடி. மஹா பாரதத்தில் (உத்யோகபர்வத்தில்) திருதராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன் கூறுகிறான்—"**காலசக்ரம் ஜக³ச்சக்ரம் யுக³சக்ரஞ்ச கேஶவ: । ஆத்மயோகே³ந ப⁴க³வாந் பரிவர்த்தயதே(அ)நிஶம் ॥ காலஸ்ய ச ஹி ம்ருத்யோஶ்ச ஜங்க³மஸ்தா²வரஸ்ய ச । ஈஶதே ப⁴க³வாநேக: ஸத்யமேதத்³ ப்³ரவீமி தே ॥**" என்று.

உனனை எந்நாள் கண்டுகோள்வனே ?— "பூர்ணே சதுர்த்தஶே வர்ஷே" என்று பரதாழ்வானுக்கு நாளிட்டுக் கொடுத்தாப்போலே எனக்கும் ஒருநாள் குறிப்பிட வேணுமென்கிறார். .... (அ)

கோளவனனாஆன்மாவலி மூவடிதாவேன்ற
கள்வனே * கஞ்சனைவஞ்சித்து வாணனை
உள்வன்மைதீர * ஓராயிரம்தோள் துணித்த
புள்வல்லாய் * உன்னைஎஞ்ஞான்று பொருந்துவனே. (கூ)

மாவலி	'மஹாபலியே !
நான்	நான்
மூ அடி	மூன்றடி நிலத்தை
கொள்வன்	ஏற்றுக் கொள்வேன்,
தா	கொடுப்பாயாக'
என்ற	என்று சொன்ன
கள்வனே	வஞ்சகனே !.
கஞ்சனை	கம்ஸனை
வஞ்சித்து	தொலைத்து
வாணனை	பாணாஸுரனை

உன் வன்மை தீர	மன வுறுதியானது அழியும் படி
ஓர் ஆயிரம் தோள் துணித்த	ஆயிரம் புயங்களையும் அறுத்த
புள் வல்லாய்	கருடவாஹனனே !
உன்னை	உன்னை
எஞ்ஞான்று	எக்காலம்
பொருந்துவன்	அடையப் பெறுவேன் ?

* * * [கோள்வன்நான்] அடியவர்களைக் காத்தருளு முபாயத்தை நன்குணர்ந்தவனும் ப்ரதிகூல நிரஸநத்தில் வல்லவனுமான உன்னை நான் சேருவது என்றைக்கு ? என்கிறார்.

கோள்வன் நான் மாவலி மூவடிதாவென்ற கள்வனே !—குறியமாணுருவாகி மாவலிபக்கல் யாசகனாய்ச் சென்றகாலத்து முந்துறமுன்னம் 'கொள்வன் நான்' என்றானாம்; யாசகன் உதாரனைப் பலபடியாகப் புகழ்ந்து பேசிவிட்டு 'இன்ன பொருள் எனக்கு நீ தரவேணும்' என்று யாசிக்க வேண்டுவது முறைமையாயிருக்க, வாமனன் அங்ஙனம் ஒன்றும் புகழ்ந்து பேசாதே வாய்திறந்து பேசும்போதே 'கொள்வன் நான்' என்றானாம் : என்றைக்கும் யாசித்தறியாதவனாதலால் இன்னபடி சொல்ல வேணுமென்று அறிந்திலன் போலும்.

வாமன மூர்த்தியின் மிக அழகிய வடிவத்தைக் கண்டு இவனுக்கு ஏதாவது தானம் பண்ணியே யாகவேணுமென்று குதூஹலங்கொண்ட மாவலி 'இவன் நம் பக்கலில் தானம் பெறுவனோ மாட்டானோ' என்று ஸந்தேஹித்திருக்க, அந்த நிலைமையைக்கண்ட வாமனன் அவனுடைய சங்கைதீரக் "கொள்வன நான்" என்றானாகவுமாம்.

மாவலி !— அணைமைவிளி. பெரியோனைப் பெயர்சுட்டிச் சொல்லலாகாது என்பது வாமன மூர்த்திக்குத் தெரியாதோ ? 'மஹாப்ரபோ !' என்று சிறப்பாகவன்றோ சொல்லவேணும் ; 'மாவலி !' என்று பெயரையிட்டுச் சொன்னது ஏன் ? என்று சங்கித்துக் கொண்டு நம்பிள்ளை யருளிச் செய்வன காண்மின்; "பிறந்தவன்றே பிக்ஷையிலே அதிகரிக்கையாலே பிரபுக்களை உபசரித்து வார்த்தை சொல்லி யறியானே; முன்பு சிலர்பாடே தாழ்வு சொல்லியறியான் ; பிறந்த பின்பு வாஸனை பண்ணுகைக்கு நாளில்லை; அத்தாலே மாவலி யென்கிறான். எல்லாரும் தன்னை உயரச் சொல்லுமதொழிய இப்படி சொல்லக் கேட்டறியாமையாலே 'இவனொரு பாலன் நம் முன்பேநின்று சிறு பேரைச் சொல்லி யழைத்தான்' என்று இனியனாய் முகத்தைப் பார்த்து 'உனக்கு வேண்டுவதென் ?' என்றான் ; 'மூவடி' என்று விடை கூறினான் வாமனன். (அது கேட்ட மாவலி) தன்பக்கல் யாசிக்க வருமவர்களில் இப்படி சிறுக அர்த்திப்பாரில்லாமையாலே அநாதரித்திருந்தான் ; அநபரதை பண்ணாதே தா என்கிறான்."

என்றகள்வனே!=‘இந்திரனோ சரணம்புக்கு நின்றான்; உதாரனாயிருப்பானொருவன் அவனுடைய ராஜ்யத்தைப் பறித்துக் கொண்டான்; இவன்றான் ஔதார்ய மென்றொரு தர்மாபாஸத்தை ஏறிட்டுக் கொண்டிருக்கையாலே ராவணாதிகளைப்போலே இவனை யழிக்கும் வழியில்லை; என்ன செய்வது?’ என்று பார்த்து, தன்னை யாசகனாக்கி, ‘இவன் தேவகாரியம் செய்ய வந்தான்’ என்று சுக்கிரன் முதலானோர் சொல்லி மறுக்கச் செய்தேயும் அவன் நெஞ்சில் படாதபடி அவனை வடிவழகாலும் பேச்சழகாலும் வாய்மாளப் பண்ணின வஞ்சனங்களெல்லாவற்றையும் நினைத்துக் **கள்வனே!** என்கிறார்.

கஞ்சனை வஞ்சித்து= வஞ்சனை செய்வதென்பது தோஷமேயல்லது குணமன்றே; குணக்கடலான எம்பெருமான் வஞ்சித்தானென்றால் அழகாகுமோ? என்கிற ஶங்கையிலே நம்பிள்ளையருளிச் செய்கிறார்—“கம்ஸன் கோலின வஞ்சனத்தை அவன்றன்னோடே போக்கினவனே!” என்று. கம்ஸன் கண்ணபிரானுக்கு மாதுலனாகையாலே நேர்கொடுநேரே வந்து தீங்கு செய்யமாட்டாமல் பல க்ருத்ரிம வழிகளையும் செய்து பார்த்தான்; ‘ஐயோ என்னுடைய மருமகன் இறந்துவிட்டானே’ என்று கண்ணீர்விட்டு அழவேணுமென்று ஸமயம் பார்த்திருந்தான்; அவன் இங்ஙனே கோலியிருந்த வஞ்சனத்தை அவனோடே போம்படி பண்ணினானாயிற்று கண்ணபிரான்.

வாணனையோராயிரந்தோள்துணித்த வரலாறு:— பலி சக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷை யென்பவள், ஒரு நாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில்மிகுந்த ஆசை பற்றியவளாய், தன் உயிர்த் தோழியான சித்திரலேகைக்கு அச் செய்தியைத் தெரிவித்து அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்னனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்து கொண்டு ‘அவனைப் பெறுதற்கு உபாயஞ் செய்ய வேண்டும்’ என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக் கொண்டுவந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அனுபவித்துவர, இச் செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப்பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப் போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக்காணாமல் யாதவர்களெல்லாரும் கலங்கியிருந்தபோது, நாரதமுனிவனால் நடந்தவரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ண பகவான், பெரிய திருவடியை நினைத்தருளி, உடனே வந்துநின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக் கொண்டு பலராமன் முதலானோரோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்திற் கெழுந்தருளும்போதே, அப்பட்டணத்தில் ஸமீபத்தில் காவல் காத்துக் கொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களை யெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வர தேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை

யுண்டாக்கி அதன் ஶக்தியினாலே அதனைத் தூக்கிவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரராகையாற் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடெதிர்த்துவர, அவர்களையும் நாசஞ்செய்து பாணாஸுரனோடு போர் செய்யத்தொடங்க அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவன் ஒன்றுஞ் செய்யாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படி செய்து ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் அநேகாயிரம் ஸூர்யர்க்கு ஸமானமான தனது சக்ராயுதத்தை யெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன தன்னைத் தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க அதன்பின் மீண்டுவந்தனன் என்பதாம். .... (௯).

பொருந்தியமாமருதினிடைபோய எம்
பெருந்தகாய்! * உன்கழல்காணியபேதுற்று *
வருந்திநான் வாசகமாலைகொண்டு * உன்னையே
இருந்திருந்து எத்தனைகாலம்புலம்புவனே? (௧௦)

பொருந்திய	ஒன்றோடொன்று பொருந்தி நின்ற	காணிய	காணும் பொருட்டு
மா மருதின் இடை	பெரிய மருதமரங்களின் நடுவே	பேதுஉற்று	ஈடுபாடுடையேனாய்
போய	தவழ்ந்து சென்று அவற்றைத் தள்ளி முறித்த	வருந்தி	துக்கித்து
		வாசகம் மாலை கொண்டு	சொல் மாலைகளைக் கொண்டு
		உன்னையே	உன்னையே நோக்கி
எம் பெரும் தகாய்	எம்பெருமானே!	இருந்து இருந்து	இடைவிடாது
நான்	அடியேன்	எத்தனை காலம்	எவ்வளவு காலம்
உன் கழல்	உனது திருவடிகளை	புலம்புவன்	கதறுவேன்!

* * * [பொருந்திய.] உன்னுடைய குணங்களுக்குத் தோற்று உன்னைக் காணப்பெறாத வ்யஸனத்தாலே துக்கப்படுகிற நான் இன்ன மெத்தனை காலம் துக்கப்படக் கடவேனென்கிறார்.—தம்மில் தாம் செறிந்துநிற்கிற பெரிய மருதமரங்களின் நடுவே சென்று அவற்றை முறித்து உன்னை யெங்களுக்கு ஸ்வாமியாகத் தந்த பெரியவனே! உன்னுடைய திருவடிகளைக் காணவேணுமென்கிற ஆவலை உடையேனாய் அது நிறைவேறப் பெறாமையாலே மிகவருந்தி உன்னுடைய திருக்குணங்களுக்கு வாசகமான ஶப்த ஸந்தர்ப்பத்தைக் கொண்டு உன்னையே நோக்கி யிருந்திருந்து எத்தனை காலம் கூப்பிடக்கடவே னென்கிறார்.

கண்ணன் குழந்தையா யிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றில் கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில் முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேரபுத்திரர் இருவரும் சாபம் தீர்ந்து சென்றனர். இந்தக் குபேரபுத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பல அப்ஸரஸ் ஸ்த்ரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்து கொண்டிருந்தமையில் நாரதமாமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடை யெடுத்து உடுத்து நீங்க, இந்த மைந்தர் மாத்திரம் மதுபான மயக்கத்தினால் வஸ்த்ரமில்லாமலே யிருக்க, நாரதர் கண்டு கோபங் கொண்டு 'மரங்கள் போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபிக்க, உடனே அவர்கள் வணங்கி வேண்டிக் கொண்டதற்கு இரங்கி 'நெடுங்காலஞ் சென்ற பின்பு திருமால் உங்களருகே நெருங்குஞ் சமயத்தில் இவ்வடிவ மொழிந்து முன்னைய வடிவம் பெற்று நீள்வீர்' என்று சாபவிடை கூறிப் போயினர். இப்படி சாபத்தினால் மரங்களான இவற்றில் கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அஸுரர்களும் ஆவேசித்துக் கிடந்தனர் என்றும் புராணம் கூறுகின்றது. "ஒருங்கொத்தவிணை மருதமுன்னியவந்தவரை" என்றும், "பொய்ம்மாயமருதான வசுரரை" என்றும் பெரியாழ்வாரு மருளிச் செய்தனர்.

பொருந்திய மாமருதின்= மருது, மாமருது, பொருந்திய மாமருது என வகுத்துக் கொள்க. அதன் அருகே செல்வதும் அபாயத்திற்கு இடமாயிருக்க அதனிடையே தவழ்ந்து சென்றனே! என்று இன்று வயிறு பிடிக்கிறாராழ்வார். "மருதினிடைபோய எம் பெருந்தகாய்! உன்கழல் காணிய பேதுற்று" என்றது யமளார்ஜுந மத்யத்திலே தவழ்ந்து செல்லுகிற போதைத் திருவடி யழகை யநுபவிக்க ஆழ்வார் ஆசை கொண்டிருக்கும்படியைக் காட்டும். மருதினிடை போனதைப் பேசின பராசர மஹர்ஷி (ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்) "**யமளார்ஜுநயோர்மத்யே ஜகாம கமலேக்ஷண:**—யமலார்ஜுநயோர் மத்யே ஜகாம கமலேக்ஷண:" என்றார்; கண்ணனுடைய திருக்கண்ணழகிலே தோற்றார் அவர்; திருவடி யழகிலே தோற்கிறார் ஆழ்வார். இங்கே ஈடு;—["ஜகாம **கமலேக்ஷண:**] புரிந்து பார்த்த கண்களைக் காண வாசைப்பட்டான் ரிஷி; தவழ்ந்து போகிறபோதைத் திருவடிகளைக் காண வாசைப்படுகிறாரிவர்."

காணிய— காண்கைக்காக என்றபடி. **பேதுற்று**=பேது—பைத்தியம்; அறிவு கலங்கி யென்றபடி.

வருந்தி நான் வாசகமாலை கொண்டு= ஒரு சொல் எடுப்பது ஒரு மலையெடுக்குமாபோலே யிருக்கிறதாம் ஆழ்வார்க்கு. .... (கூ)

புலம்புசீர்ப் பூமியளந்தபெருமானை *
நலங்கொள்சீர் நன்குருகூர்ச்சடகோபன் * சொல்
வலங்கொண்டவாயிரத்துள் இவையுமோர்பத்
திலங்குவான் * யாவருமேறுவர் சொன்னாலே. (கக)

புலம்பு சீர்	(அனைவரும்) கொண்டாடுதற்குரிய திருக்குணங்களையுடையனாய்	ஆயிரத்துள்	ஆயிரம் பாசுரங்களுள்
பூமி அளந்த பெருமானை	பூமியை அளந்தவனான எம்பெருமானைக் குறித்து	இவை ஓர் பத்தும்	இப்பத்துப் பாசுரத்தையும்
நலம் கொள் சீர்	ஞானபக்தி முதலிய சிறப்பு வாய்ந்த	சொன்னால்	ஓதினால்
நன் குருகூர் சடகோபன்—;		யாவரும்	(இன்னார் இனையார் என்னும் வாசியற) எல்லாரும்
சொல்	அருளிச்செய்த	இலங்கு வான்	சோதிமயமான பரமபதத்தை
வலம் கொண்ட	மிக்க ஆற்றலையுடைய	ஏறுவர்	ஏறப்பெறுவர்.

* * * [புலம்புசீர்.] இத்திருவாய்மொழியின் இயல்மாத்திரத்தைத் தரித்தவர்கள் ஆரேனுமாகிலும் இதில் ஆசம்ஸித்தபடியே யநுபவிக்கையில் தட்டில்லாத பரமபோக்யமான திருநாட்டிலே செல்வரென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது. உலகமெல்லாம் கொண்டாடும்படியான திருக்குணங்களையுடையனாய்க் கொண்டு, பூமியையளந்த ஸர்வேச்வரனைக் குறித்து ஆழ்வாரருளிச்செய்த ஆயிரத்துள் இவையுமோர் பத்து சொன்னால் யாவரும் இலங்குவான் ஏறுவர்.

இங்கு ஆழ்வார்க்கு நலங்கொள் சீர் என்று விசேஷணமுள்ளது; கரணங்களும் சேதநஸமாதியாலே விடாய்த்து, ஓர் இந்திரியத்தின் வ்ருத்தியை மற்றோரிந்திரியம் ஆசைப்பட்டு, இவையெல்லாவற்றின் வ்ருத்தியையும் தாம் ஆசைப்பட்டு இப்படி பகவத்விஷயத்திலே விடாய்க்கும் படியான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையரான ஆழ்வார் என்றபடி.

வலங்கொண்ட வாயிரம்= வலம் என்றது வலியும் என்றபடி; ப்ரதிபாத்யவஸ்துவை உள்ளபடி ப்ரதிபாதிக்கவல்ல ஸாமர்த்தியத்தையுடையதென்றவாறு.

இயலில் "இவையுமோர்பத்திலங்குவான்" என்று நிறுத்துவது பொருட்சேர்த்திக்குப் பொருந்ாது.

பரமபதத்தில் நித்யஸூரிகளுக்கே ஸம்பவிக்கக்கூடிய நிலைமையை இத்திருவாய் மொழியில் ஆழ்வார் ஆசைப்பட்டதனால் "இங்கு வான் ஏறுவர்" என்று தேசவிசேஷப்ராப்தியைப் பயனுரைத்துத் தலைக்கட்டினாரென்க. .... (கக)

எட்டாந் திருவாய்மொழி உரை முற்றுப்பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

சித்தாக்ருஷ்டிப்ரவீணைரபிலபநஸஹை: ஸ்பர்ஶவாஞ்சாம்
துஹாநை:
ஆதந்வாநைர்த்ருக்ஷாம் ஶ்ருதிஹிதமஹிதைராத்மநித்யாதரா
ர்ஹை: ।
விஶ்லேஷாக்ரோஶக்ருத்பி: ஸ்மரத்ரதிகரைஸ்தத்ஸாயுஜ்யஸங்
கை:
குர்வாணைர்பாலலீலாம் ஶ்ரிதகுணகணமந்தே நிர்திஶ
த்ருஶ்யம் ஶடாரி: ॥

இந்த ச்லோகத்திலுள்ள த்ருதீயாந்த விசேஷணபதங்களெல்லாம் குணகணை: என்கிற விசேஷ்யத்திலே அந்வயிப்பன. பகவத் குணங்களின் ஒவ்வொருவகையானதன்மை ஒவ்வொரு பாசுரத்திலும் பேசப்பட்டதென்கிறார்.

1. சித்தஆக்ருஷ்டிப்ரவீணை:— * என்றுகிடக்குமென்னெஞ்சமே. * நெஞ்சை ஆகர்ஷிப்பதில் ஸமர்த்தங்களாய் ;

2. அபிலபநஸஹை:— * என்னு மெப்பொது மென்வாசகமே. * வாக்கினால் சொல்லவேணுமென்கிற இன்பத்தையுண்டுபண்ணுமவையாய் ;

3. ஸ்பர்சவாஞ்சாம் துஹாநை:— * என்று தடவு மென்கைகளே. * கைகளால் தழுவவேணுமென்கிற ஆசையை வளர்ப்பனவாய் ;

4. த்ருக்ஷாம் ஆதந்வாநை:— * மெய்கொள்ளக் காணவிரும்புமென் கண்களே. * காண வேணுமென்கிற விருப்பத்தை விளைப்பனவாய்.

5. ச்ருதிஹிதமஹிதை:— * நின்கொள்ள வோர்க்கும் கிடந்தென் செவிகளே. * செவிக்கு இனியவையாய் (அதனவ) மஹிதங்களாய் ;

6. ஆத்மநித்யாதரார்ஹை:— * உன்னையே அவின்றியாதரிக்கு மெனதாவியே. * ஆவி எப்பொழுதும் ஆதரிக்கவுரியனவாய் ;

7. விச்லேஷாக்ரோசக்ருத்பி:— * பாவியேன் நெஞ்சம் புலம்பப் பல காலும் கூவியுங்காணப்பெறேன் * பிரிவுகாலங்களில் கதறப்பண்ணுமவையாய் ;

8. ஸ்மரத்அரதிகரை:— * நின்று எனதாவியையீர்கின்ற சீலமே. * நினைப்பவர்களுக்கு சைதில்யத்தை விளைப்பனவாய் ;

9. தத்ஸாயுஜ்யஸங்கை:— * உன்னை யென்னொன்று பொருந்துவனே * தன்னோடு பொருந்துவதில் விருப்பத்தை விளைப்பனவாய் ;

10. பாலலீல்யம் குர்வாணை:—*பொருந்திய மா மருதினிடைபோய* மருதினிடையே தவழ்ந்து செல்லுதல் முதலிய சிறுச்சேவகங்களைச் செய்யும

வையாய் ; ஆக இப்படிப்பட்ட [மிலிதகுணகணை:] க்ஷீரஶர்க்கராநயாயத்தாலே ஒன்றோடொன்று கூடி இனியவையான குணஸமூஹங்களினால், [நித்யத்ருஶ்யஅங்கம்] எப்போதும் காண வேணுமென்று விரும்பத்தக்க திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனாக [ஆஹ] ஆழ்வார் எம்பெருமானையருளிச் செய்தார்.

நாப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஷஷ்டே ஸம்ஶ்லிஷ்டநேதா ஹரிரவதரணாஸாரா
ஜாதா ஸ்வேநாய தத்யஜநாவலோகாஸ் ।
உத்தஸ்தா ஸ்மாரணௌகோ காருணிகீ
ஶோகாதிரேகஜநநீ வ்யநக்ஷ் ஶைஹஞ்ஜ ॥

(கருத்து.) கீழ் * செய்யதாமரைக்கண்ணனாய் என்கிற ஆறாந்திருவாய்மொழியில் “ அன்று தேர் கடவிய பெருமான் கனைகழல்காண்பதென்றுகொல் கண்களே ” என்று கட்கண்ணாலே தன்னைக் காண்பதற்குக் கிளர்ந்த ஆசையை ஒருவாறு அடக்கப்பார்த்த எம்பெருமான் * பயிலுஞ்சுடரொளியில் கிழலுமடிதாறுமான ஸ்ரீவைஷ்ணவர்களைக் காட்டிக் கொடுக்க, அநந்தரம் ப்ராப்தமான பாகவத ஸம்ஶ்லேஷம் * ஸ்வாபயஞ்ச வ்யவஸாயம் பண்ணித் தரிக்கைக்கு உடலன்றிக்கே பகவத் குணங்களுக்கு ஸ்மாரகமாய்க் கீழ்ப்பிறந்த விடாய்க்கு உத்தம்பகமாகவே அங்ஙனம் கரைபுரண்ட காதலானது கரணக்ராமங்களையும் விடாய்க்கச் செய்து மிகுந்த அவஸாதத்தை விளைத்ததாய்த்து எட்டாந் திருவாய்மொழியில்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

முடியாத வாசைமிக முற்று கரணங்கள் *
அடியார்தம்மைவிட் டவன்பால்—படியா *
ஒன்றோன்றின் சேயல்விரும்ப உள்ளதேல்லாம் தான்விரும்ப *
துன்னியதே மாறன்றன் சொல்.

முடியாத ஆசை மிக	ஆராதகாதல் அதிசயிக்க
மூன்று காரணங்கள்	எல்லா இந்திரியங்களும்
அடியார் தம்மை விட்டு	பாகவதர்களை விட்டு
அவன் பால்	அவ்வெம்பெருமான் பக்கலிலே
படியா	படிந்து
ஒன்று ஒன்றின் செயல் விரும்ப	ஒரு கரணம் மற்றொரு கரணத்தின் வ்ருத்தியை ஆசைப்பட
உள்ளது எல்லாம் தான் விரும்ப	கரணங்களின் வ்யாபாரம் முழுவதையும் ஆழ்வார் தாமுடையராதலை விரும்ப
மாறன் தன் சொல்	ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி
துன்னியது	(வருத்தத்தினால்) நெருக்க மூற்றது.

* செய்யதாமரைக்கண்ணனாய் என்கிற திருவாய்மொழியில் "என்று கொல் கண்கள் காண்பதுவே" என்று கிளர்ந்த ஆசை * பயிலுஞ்சுடரொளியில் தணியாதே அதிகரிக்க, பாஹ்யம் ஆப்யந்தரம் என்னும் வாசியின்றிக்கே ஸகல காரணங்களும் * எம்மையாளும்பரமர் * எம்மையாளுடைநாதர் * எம்மையாளுடையார்கள் * எம்பெருமக்கள் * எம்மையளிக்கும் பிராக்கள் * எம்மைச் சன்மசன்மாந்தரங் காப்பர் * எம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பர் * எம் தொழுகுலந்தாங்கள் * அடியா ரெம்மடிகள் * அடியார் தம்மடியாரடியோங்கள் * என்றிப்படி ஸகல ப்ரகாரத்தாலும் சேஷிகளாக அநுஸந்திக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களைவிட்டு எம்பெருமான் பக்கலிலே யவகாஹித்து, [கரணங்களும் தாமும் தத்விஷயத்திலே ப்ரவணராய்] ஓர் இந்திரியத்தினுடைய வ்ருத்தியை மற்றையிந்திரியங்களுமாசைப்பட்டும் அவையெல்லாவற்றினுடைய வ்ருத்தியையும் தாமாசைப்பட்டும் ஆழ்வார் அவஸாதத்தோடே அருளிச் செய்யும்படியாயிற்று என்றபடி.

"முடியாதவாசைமிகு" என்றும் பாடமுண்டு; அப்போது கரணங்களுக்கு அடைமொழியாக அந்வயிக்கும். படியா—செய்யா வென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்; படிந்து என்றபடி. 'துன்னியது' 'துன்றியது' என இருவகையான பாடமும் காண்கிறது. பொருள் ஒன்றே; நிர்வேதம் மிக்கது என்றபடி.

மூன்றாமடியில் 'தாம் விரும்ப' என்ற பாடம் ஈற்றடியிலுள்ள மாறன் என்ற ஒருமைக்குச் சேராது; தான் என்பதே பொருத்தம். .... (உ அ)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து—ஒன்பதாந் திருவாய்மொழி

சொன்னால் விரோதம்.

உரையவதாரிகை:—ஆழ்வார் சில ஸமயங்களில் தம்முடைய இழவுக்கு வருந்துவர்; சில ஸமயங்களில் ஸம்ஸாரிகளின் இழவுக்கு வருந்துவர். கீழ்த் திருவாய்மொழியில் தமமுடைய கிலேசங்களுக்குக் கதறினர்; இத் திருவாய் மொழியில் ஸம்ஸாரிகளின் கிலேசங்களுக்குக் கதறுகிறார். கவி பாடும்படி யான திறமையைப் பெற்றுவைத்து அந்தத் திறமையை பகவத் விஷயத்திலே செலுத்தாமல் க்ஷுத்ர பலன்களை விரும்பி அற்ப மனிதர் விஷயத்திலே செலுத்தி 'நரஸ்துதி செய்பவர்கள்' என்று இழிவான பெயரைப் பெற்று உலாவுவாரைக் கண்டு வருந்தி, அவர்களையும் உபதேசத்தாலே திருத்தி பகவத் விஷயத்தில் கவிபாடுகின்றவர்களாக ஆக்கி உய்விப்பான் வேண்டி அவர்களை விளித்து 'இப்படி நீங்கள் உங்களுடைய வாக்கை நிஹீந விஷயங்களில் உபயோகித்து அதோகதியடைவது தகுதியன்று; * உயர்வறவுயர்நல முடையவனை எம்பெருமான் விஷயத்திலே உங்கள் கவன சாதுரியத்தைச் செலுத்துவதே நன்று—என்று உபதேசித்தருளுகிறார் இத்திருவாய்மொழியில்.

உலகத்தில் ஜ்ஞாதாக்களாக இருப்பது அரிது; அது வாய்த்தாலும் கவி பாடும்படியான ஸாமர்த்தியம் பெறுவது மிகவும் அரிது. அந்த ஸாமர்த்தியம் பெற்றவர்கள் வகுத்த விஷயத்தில் தங்கள் வாக்கை விநியோகப்படுத்தாமல் க்ஷுத்ர நரஸ்துதிகளிலே விநியோகிப்பது மிகவும் அருவருக்கத்தக்கதாகும். வடமொழியில் ப்ரதாபருத்ரீயம் என்கிற ஒரு க்ரந்தம் மிகவும் ப்ரஸித்தமானது. இதை இயற்றிய கவியின் பாண்டித்யமும் கவித்திறமும் மிக வியக்கத்தக்கதே. ஆயினும் இந்த க்ரந்தம் எம்பெருமானுடைய குண கீர்த்தனத்தில் அமைந்திருந்தால் அழகிதாயிருக்கும். அங்ஙனன்றியே, அல்ப ப்ரயோஜனத்தைக் கணிசித்து ஒரு க்ஷுத்ர ப்ரபுவை விஷயீகரித்து இந்த நூல் பிறந்ததால் பகவத்பக்தர்கள் ஜுகுப்ஸைப் படும்படியாகவுள்ளது. இப்படிப்பட்ட கர்ஹணீய க்ரந்தங்கள் உலகிற் பலபலவுள்ளன. இத்தகைய நூல்களை இயற்றும் கவிகள் பக்கலில் ஆழ்வார்க்குண்டாகும் சீற்றம் அபாரம்.

ஆழ்வார், தம்முடைய திருவாக்கு பகவத் விஷயத்திலே உபயோகப் படுகின்ற வளவுக்கு உகந்து, மற்றையோர் எக்கேடு கெட்டாலும் அதைப்பற்றிச் சிந்தியாமல் "ஆரானுமாதானுஞ் செய்ய, அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே!" என்று பெரிய திருவந்தாதியில் தாமே அருளிச் செய்தபடி ஸம்ஸாரிகளைப்பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்கலாம்; அப்படி யிருக்கும் ப்ரக்ருதியன்று ஆழ்வாரது.

ஆசார்ய ஹ்ருதயத்தில் (மூன்றும் பிரகரணத்தில்) "நண்ணாதார் மெய்யில்..............அடைவுகெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறவிது ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்றாமையும் மிக்க க்ருபையுமிறே." என்கிற சூர்ணிகையினால் விமுகரான ஸம்ஸாரிகளுக்கும் ஆழ்வார் உபதேசித்தருள்வதற்குக் காரணங்கள் நிரூபிக்கப்பட்டன காண்க.

ஆழ்வார்தாம் அநுபவிக்கும் பகவத் விஷயம் தனியே அநுபவிக்கக் கூடிய தல்லாமையாலே „𑌮𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾 𑌮𑌦𑍍𑌗𑌤𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌬𑍋𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌮𑍍—மச்சித்தா மத்கதப்ராணா: போதயந்த: பரஸ்பரம்" என்று கீதாசார்யன் பணித்தபடியே பிறரோடு உசாவியே போதுபோக்கித் தரிக்க வேண்டியவரான தாம் அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பெறுதற்காக நாற்புறமும் கண்வைத்துப் பார்த்தார். எல்லாரும் ஸம்ஸாரிகளா யிருந்தனர். நரஸ்துதியிலே ஊன்றி அல்ப ப்ரயோஜனங்களைப் பெற்று ஒழிபவர்களா யிருந்தனர்; அன்னவர்களைக் கண்டவாறே ‡ வாளேறு காணத் தேளேறுமாயுமாப்போலே தம் இழவை மறந்தார். பிறர்படும் அநர்த்தங் கண்டால் அத்தைப் பரிஹரித்துப் பிறகு தம் இழவைப் பரிஹரித்துக் கொள்ள நினைக்குமவராகையாலே உபதேசத்தாலே அவர்களையும் திருத்திக் கைக்கொள்ளப் பார்க்கிறார். உபதேசித்தவளவிலும் அவர்கள் திருந்தக்காணமையாலே 'இவர்களைப்போலன்றியே நான் எம்பெருமானையே கவிபாடப் பெற்றேனே!' என்று தம்மைப்பற்றின உகப்போடே தலைக்கட்டுகிறார். .... (*)

சொன்னால்விரோதமிது ஆகிலும்சொல்லுவன்கேண்மினோ *
என்னாவிலின்கவி யானொருவர்க்கும்கொடுக்கிலேன் *
தென்னாதெனாவென்று வண்டுமுரல்திருவேங்கடத்து *
என்னானையென்னப்பன் எம்பெருமானுளனாகவே. (க)

இது	இப்போது நான் சொல்லும் ஹிதவார்த்தையானது	வண்டு	வண்டுகளானவை
சொன்னால்	சொல்லப்படுமாகில்	தென்னா தென்னா என்று	தென்னா தென்னா வென்று ஆளத்தி வைத்து
விரோதம்	உங்களுக்கு அநிஷ்டமாக இருக்கும்;	முரல்	ரீங்காரஞ் செய்யப் பெற்ற
ஆகிலும்	ஆனாலும்	திருவேங்கடத்து	திருமலையிலே
சொல்லுவன்	(உங்கள் அநர்த்தத்தைப் பொறுத்திருக்கமாட்டாமையினால்) சொல்லியே தீர்வேன்;	என் ஆனை	என்னுடைய யானை போன்றவனும்
கேண்மின்	காது கொடுத்துக் கேளுங்கள்;	என் அப்பன்	எனக்குமஹோபகாரகனுமான
		எம்பெருமான்	ஸ்வாமி

‡ ஒருவன் தேள் கொட்டி நொந்துவாரா நிற்க எதிரே யொருவன் வாளால் வெட்டுப்பட்டு நொந்துவந்தால் அந்தப் பெரு நோவைக் கண்டவாறே தேள் கொட்டின சிறு நோவு தணியுமாபோலே என்றபடி.

உளன் ஆக	என் கவிக்கு இலக்கா யிருக்கும்போது	யான்	நான்
		ஒருவர்க்கும்	வேறொருவர்க்கும்
என் நாவில் இன் கவி	எனது நாவினின்று உண்டான மதுரமான கவிகளை	கொடுக்கிலேன்	கொடுக்கமாட்டேன்.

* * * [**சொன்னால்விரோதமிது.**] வேறு சிலரைக் கவி பாடுகின்றவர்களுக்கு ஹிதமுரைக்க இழிந்த ஆழ்வார், அவர்களுக்கு ருசி பிறக்கைக்காகத் தம்முடைய மதத்தை முந்துறமுன்னம் அருளிச் செய்கிறார். தொடங்கும்போதே '**சொன்னால்விரோதமிது**' என்கிறார்—நீங்கள் சில ப்ரயோஜனங்களை நினைத்து நரஸ்துதி செய்யாநிற்க, அதைத் தவிருமாறு நான் உரைக்குமிது உங்களுக்கு விரோதமாகவே யிருக்கும் என்றபடி. மூலத்தில் "சொன்னால் விரோதம்" என்றுள்ளதே யல்லது, இன்னார்க்கு விரோதம் என்று ஸ்பஷ்டமாக இல்லை; 'உங்களுக்கு விரோதமாகும்' என்பது போலவே 'சொன்னால் எனக்கு விரோதமாகும்' என்பதாகவும் கொள்ளலாம். இவர்க்கு என்ன விரோதம் என்னில்; நரஸ்துதியைப்பற்றி நெஞ்சினால் நினைப்பதும் வாயினால் சொல்வதுமே தமக்கு ஸ்வரூப விரோதம் என்று இவர் திருவுள்ளம்.

ஆகிலும் சொல்லுவன்= சொன்னால் விரோதமேயாகிலும் நீங்கள்படும் அநர்த்தம் பொறுத்திருக்க மாட்டாமையாலே சொல்லாதிருக்க கில்லேன்.—தன் பக்கலிலே விபரீத புத்தியைப் பண்ணிநிற்கிற பாபிஷ்டனான ராவணனைக் குறித்துப் பிராட்டி ஹிதோபதேசம் பண்ணினாப் போலவும், பாபிகளில் தலைவனான இரணியனைக் குறித்தும் அஸுரபுத்திரர்களைக் குறித்தும் ப்ரஹ்லாதாழ்வான் ஹிதோபதேசம் பண்ணினாப் போலவும், தன்னைத் திரஸ்கரித்த ராவணனைக் குறித்து விபீஷணாழ்வான் ஹிதோபதேசம் பண்ணினாப் போலவும் விமுகரானவரையுங் குறித்து ஆழ்வார் ஹிதோபதேசம் பண்ணுகிறார் அவர்களையும் விடமாட்டாத நசையாலே.

கேண்மினோ= பால்குடிக்கக் கால் பிடிப்பாரைப் போலே அவர்களுடைய ஸ்வரூபலாபத்திற்குத் தாம் யாசகராய் நிற்கிறார். நான் சொல்வதைக் கேட்டபின் அப்படியே அநுஷ்டிக்க வேண்டிவருமே என்று நீங்கள் சிந்திக்க வேண்டா: அநுஷ்டிக்கவுமாம், அநுஷ்டியா தொழியவுமாம்; என் பேச்சுக்குக் காது கொடுத்தால் போதும் என்கிறார். கடலோசைக்குக் காது கொடுக்கிற நீங்கள் அப்படியே என்வார்த்தைக்கும் காது கொடுக்கலாகாதோ வென்கிறார்.

"ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்று அவர்களுக்கு ஏதோ ஹிதமருளிச் செய்பவர்போலத் தொடங்கின ஆழ்வார் (அடுத்த அடிகளில்) அவர்கள் செய்யவேண்டியதை அருளிச்செய்யாமல் தம்முடைய நிலைமையைப் பேசுகிறார்; 'நாங்கள் இருக்கவேண்டிய நிலைமையைப்பற்றி நீர் ஏதுக்குச் சொல்லுகிறீர்?' என்று அவர்கள் சீறுவர்களோ வென்கிற அச்சத்தினால் போலும். வழிதவறிப் போமவர்கள் வழியே போவானொருவனைக் கண்டால் நாமுமப்படியே போகவேணு மென்று ஆசைப்பட வேண்டாவோ? நான்

இருக்கிறபடி கண்டீர்களே; இப்படியே யன்றோ நீங்களுமிருக்கவேணும் என்கைக்காகச் சொல்லுகிறபடி.

என்னுவில் இன்கவி= ஆழ்வாருடைய கவியானது விஷய வைலக்ஷண்யத்தாலே தம்மையும் ஈடுபடுத்துகிறதாயிற்று. "பாலேய்தமிழரிசைகாரர் பத்தர்பரவுமாயிரம்" "ஆயிரத்துளிப்பத்துங் கேட்டு ஆரார்வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" "யானாய்த் தன்னைத் தானபாடித் தென்னுவென்னுமென்னம்மான்" என்று தமிழ்ப்பண்டிதர்கட்கும் இசைகாரர்கட்கும் பக்திமான்களுக்கும் நித்யஸூரிகட்கும் எம்பெருமானுக்கும் போக்யமாகிற முகத்தாலே ஆழ்வார்தமக்கும் (தம் கவி) போக்யமாவது குற்றமன்று.

யான் ஒருவர்க்கும் சோடுக்கிலேன்= எம்பெருமானொருவனையே துதிகக்ப் பிறந்த நான் வேறொருவரையும் துதிக்கமாட்டேன் என்றபடி. 'எம்பெருமானையே துதிப்பேன்' என்று அந்வயமுகத்தாலே சொல்லாமல் இப்படி வ்யதிரேக முகத்தாலே சொல்லுவதில் ஒரு கருத்து விசேஷமுண்டு; எம்பெருமானைத் துதியாமலிருந்தாலுமிருக்கலாம், பிறரைத் துதிக்கலாகாது என்பதாம். "மறந்தும் புறந்தொழாமாந்தர்" என்றும் "கடன்மல்லைத் தலசயனத்துறைவாரை எண்ணாதே யிருப்பாரை இறைப்பொழுது மெண்ணோமே" என்றும், "கண்ணன் கண்ணமங்கை நகராளன்கழல்சூடி யவனை யுள்ளத்து, எண்ணாத மானிடத்தை யெண்ணாதபோதெல்லா மினியவாறே" என்றுமுள்ள பாசுரங்கள் காணத்தக்கன.

திருவேங்கட முடையானே என் கவிக்கு விஷயமாகக் கூடியவன் என்கிறார் பின்னடிகளால். எம்பெருமானை வருணிப்பதோடு அவன் எழுந்தருளியிருக்கும் தலத்தை வருணிப்பதோடு, அங்குள்ள சேதநாசேதநங்களை வருணிப்பதோடு வாசியற எல்லாம் தமது கவிக்குப் பரமோத்தேச்யம் என்னுமிடத்தைப் பின்னடிகளில் ஆழ்வார் காட்டியிருக்குமழகு காணத்தக்கது.

என் ஆனை= அநுபவ ரஸிகர்களான ஆழ்வார்கள் எம்பெருமானை யானையாகப் பலவிடங்களிலும் பேசுவர்கள். யானைக்கும் எம்பெருமானுக்கும் பல படிகளாலே ஸாம்யமுண்டு;—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வவஸ்து போலவேயிருந்து பரமாநந்தம் பயக்கும்; எம்பெருமானும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தொறும், அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதமே" என்னும்படி யிருப்பன்.

2. ஆனையின் மீது ஏற வேண்டியவன் ஆனையின் காலைப்பற்றியே ஏற வேண்டும்; எம்பெருமானிடம் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேரவேண்டும்.

3. ஆனை தன்னைக் கட்டத் தானே கயிறு எடுத்துக்கொடுக்கும்; "எட்டினோடிரண்டெனுங் கயிற்றினால்" (திருச்சந்த விருத்தம்) என்கிறபடியே எம்

பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்தானே தந்தருளு வன். „ஸ்வவது ஸக்ஷிஜவி ஸ்ரயஸூஜெ." "மதிநலமருளினன்."

4. யானையை நீராட்டினாலும் அடுத்த க்ஷணத்திலே அழுக்கோடே சேரும்; எம்பெருமான் சுத்த ஸத்வமயனாய்ப் பரமபவித்திரனாயிருக்கச் செய்தேயும் *பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்குமழுக்குடம்பு முடைய நம் போல்வாரோடே சேரத் திருவுள்ளமாயிருப்பன் வாத்ஸல்யத்தாலே. „ஸ்வம் ஸம்ஸ்ருதஜ்ராவிஜவெஜஸ-ஒதைஜ: ஸாஜ்ஜம் ஜஷ்மஜெஜஜ-ஸ்ரி நீகரோதி। ஸ்ரீரங்கஜ உ:, கஜஸ்ம் கணவ ஸ்ராஜவாவி யஜஸ்ரீவஸிகம் நிஜெஷஜ."

என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ ச்லோகத்தின்படியுமாம்.

5. யானையைப் பிடிக்கவேண்டில் பெண் யானையைக்கொண்டே பிடிக்க வேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

6. யானை, பாகனுடைய அநுமதியின்றித் தன்பக்கல் வருமவர்களைத் தள்ளிவிடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" என்கிறபடியே பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

7. யானையின் பாஷை யானைப் பாகனுக்கே தெரியும்; எம்பெருமானுடைய பாஷை திருக்கச்சிநம்பி போல்வார்க்கே தெரியும். (பேரருளாளப் பெருமாளோடே பேசுமவரிறே நம்பிகள்.)

9. யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரம் எறும்புகளுக்கு உணவாகும்; எம்பெருமான் அமுது செய்து சேஷித்த ப்ரஸாதத்தாலே பலகோடி பக்தவர்க்கங்கள் உஜ்ஜீவிக்கக் காண்கிறோம்.

10. யானைக்குக் கைநீளம்; எம்பெருமானும் * அலம்புரிந்த நெடுந் தடக்கையனிறே. "நீண்ட அத்தக்கருமுகிலை யெம்மான்றன்னை." (பெரிய திருமொழி. 2—5—2.)

11. யானை இறந்த பின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் ப்ரஸாதித்துத் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளின பின்பும் இதிஹாஸ புராணங்கள் அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதைகளை உணர்த்தி உதவுகின்றானிறே.

12. யானைக்கு ஒரு கையேயுளது; எம்பெருமானுக்கும் கொடுக்கும் கையொழியக் கொள்ளுங் கை இல்லையிறே. „சயிதாயவாரிதா நதீஷி தழ."

13. பாகனுக்கு ஜீவனங்கள் ஸம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகப்ரப்ருதிகளுக்கு.

இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களுங் கண்டு கொள்க.

இப்பாசுரத்தில் திருவேங்கடமுடையானைச் சொன்னது பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரரூப பஞ்சப்ரகாரவிசிஷ்டனான எம்பெருமானைச் சொன்னபடி. .... (க)

உளனாகவேயெண்ணித் தன்னையொன்றாகத்தன்செல்வத்தை *
வளனாமதிக்கும் இம்மானிடத்தைக்கவிபாடியென்? *
குளனார்கழனிசூழ் கண்ணன்குறுங்குடிமெய்ம்மையே *
உளனாயவெந்தையை எந்தைபெம்மானையொழியவே. (உ)

குளன் ஆர்	குளங்கள் நிறைந்த	உளன் ஆகவே	ஸத்தானவனாகவே கொண்டு
கழனி சூழ்	கழனிகளால் சூழப்பட்ட	ஒன்று ஆக எண்ணி	ஒரு பொருளாக நினைத்து
கண்	இடமகன்ற	தன் செல்வத்தை	தன்னதாக அபிமானித்த அற்ப செல்வத்தை
நன்	விலக்ஷணமான	வளன் ஆ	மிகவும் மேம்பாடாக
குறுங்குடி	திருக்குறுங்குடியிலே	மதிக்கும்	எண்ணியிருக்கிற
மெய்ம்மை	ஸௌலப்யம் முதலிய குணங்களோடு கூடி உண்மையாக	இ மானிடத்தை	இந்த அற்ப மனிதர்களை
உளன் ஆய	உறைபவனான	கவி பாடி என்	கவிபாடுவதனால் என்ன பலன்?
எந்தையை எந்தை பெம்மானை ஒழிய	என் குலநாதனைத் தவிர.—		
தன்னை	அஸத்கல்பனான தன்னை		

* * * [உளனாகவே யெண்ணி] உண்மையாயும் பரிபூர்ணமாயுமுள்ள கல்யாணகுண ஸம்பத்துக்களையுடையனாயிருந்துள்ள எம்பெருமானை விட்டு அஸத்கல்பராய் அற்ப ஸம்பத்துக்களையுடையரானவர்களைக் குறித்துக் கவி பாடுவாரை நிந்திக்கிறார்.

எல்லையில்லாத பெருஞ் செல்வத்தையுடையனாய் * உயர்வற வுயர்நலமுடையனாயிருந்த எம்பெருமானை யொழிய, தன்னையும் ஒரு வஸ்துவாகப் பார்த்துத் தன் செல்வத்தையும் ஒரு செல்வமாக மதித்திருக்கிற இவ்வற்ப மனிதர்களைக் கவிபாடி என்ன பலன் பெறலாகுமென்று கர்ஹிக்கிறார்.

உளனாகவேயெண்ணி— பிறருடைய கவிக்கு விஷயபூதரான அற்ப மனிதர்களின் எண்ணத்தைக் கூறுவது இது. “அஸந்நேவஸபவதி” என்னுங் கணக்காலே, இல்லை யென்னலாம்படியிருக்கிற தங்களை உள்ளவர்களாக ப்ரமித்திருக்கின்றார்களாம். ப்ரஹ்மஜ்ஞான முண்டாகிலன்றோ “ஸந்தமேநம் ததோவிது:” என்கிறபடியே உள்ளவர்களாவர். அப்படிப்பட்டவர்கள் பாகவதோத்தமர்களாதலால் அன்னவர்களைத் துதிப்பது ஸ்வரூபாநுரூபமேயாகும்; அது நரஸ்துதிக் குற்றத்தின்பாற் படாதென்றுணர்க.

தனசெல்வத்தை வளனாமதிக்கும்— தானே இல்லையாம்போது தன் செல்வமென்று ஒன்றுண்டோ? இல்லாத செல்வத்தை இருப்பதாக நினைத்தது மல்லாமல் அதுதனைப் போரப் பொலியவும் நினைப்பதே! என்று கர்ஹிக்கிறபடி. வளன்— வளம்; மகரனகரப் போலி.

இவ்விடத்து ஈட்டில் ஓர் ஐதிஹ்ய மருளிச் செய்கிறார்; கல்ப்ரஹ்ம தேசத்திலே கரிக்கால் சோழப்ரஹ்மராயன் என்கிறவொரு ப்ரபு இருந்தான்; இவன் திருவாய்மொழிக்கு ஒரு வியாக்கியானம் எழுதிக் கொண்டுவந்து நஞ்சீய

ரிடம் காட்டி மதிப்புரை வாங்கப் பார்த்தான்; அவன் எழுதினது நன்றாக இல்லாமற் போனாலும் வெகு நன்றாயிருக்கிறதென்றே சொல்லியாக வேண்டும்; இல்லாவிடில் அவன் ப்ரபுவாகையாலே ஏதேனும் தீங்கிழைக்க நினைப்பனோ வென்றாசங்கித்தார் நஞ்சீயர்; உத்தமாச்ரமியான நாம் இதில் அகப்பட்டுக் கொள்வானேன் என்றெண்ணி நம்பிள்ளையை நோக்கி 'நீர் இவ்வுரையைக் கேட்டு ஸம்பாவனை பண்ணும்' என்று நியமிக்க, ஜீயருடைய திருவுள்ளத்தைப் புணர்ந்த பிள்ளைதாமும் அங்ஙனே அவ்வுரையை வாசிக்கக்கேட்டு அவனுடைய மனம் உகக்குமாறு கொண்டாடிக் கூறவேணுமென்று கருதி, "இவ்வுரை ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்துக்குப் பொருத்தமாகவே மிக நன்றாக அமைந்திருக்கின்றது" என்று அருளிச் செய்ய, அது கேட்ட அவ்வுரைகாரன் [ராயன்] "ஆழ்வார் வேறொரு காரியமுமில்லாமல் பிரபந்தம் பேசினார்; நான் கிராம காரியங்கள் பலவற்றையும் நோக்கிக் கொண்டே இடையிடையில் இது எழுதினேன்; ஆதலால் ஆழ்வார்க்கும் எனக்கும் எவ்வளவு வாசியுண்டென்று ஆலோசித்தருளவேணும்" என்றானாம். "தன்னை யொன்றாகத் தன் செல்வத்தை வளனுமதிக்கும்" என்றவிடத்திற்கு இது மிகவும் பொருத்தமான ஸம்வாதம்.

இம்மானிடரை என்னவேண்டுமிடத்து "இம்மானிடத்தை" என்று அஃறிணையாகச் சொன்னது அலக்ஷ்யதா புத்தியினால். இங்கு ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"(இம்மானிடத்தை) மநுஷ்யரென்று சொல்லவும் பாத்தம் காண்கிறிலர்காணும். அசேதநங்களைச் சொல்லும்படியிலே சொல்லுகிறார். தன்னை மெய்யாகவறியாதவன் அபிப்ராயனிறே."

இம்மானிடத்தைக் கவிபாடி என்?— அற்ப மனிதர்களிடத்தில் உள்ள குற்றங்களை மறைத்து இல்லாத நற்றங்களை ஏறிட்டுக் கவிபாடுவதனால் கவிபாட்டுண்கிறவர்களுக்கு ஓர் அவமானம் தேறுமேயல்லது வேறில்லை; ஏனென்னில், கூறப்படுகிற நற்றம் உண்மையாகவிருந்தால் குறையில்லை; குற்றம் நிறைந்திருக்குமிடத்திலே ஏறிட்டுக் கூறப்படும் நற்றமேயாதலால் இந்த நற்றங்களைப் பிறர் கேட்குப்போது உண்மையான குற்றமே நினைவுக்கு வரும்; அங்ஙனம் குற்றம் நினைவுக்கு வருவதற்காகவே கவிபாடினதாகத் தேறுகின்றமையால் இதனால் அவமானமேயாயிற்று பலிப்பது; ஆக, கவிபாடுகிற வியாஜத்தினால் அவர்களை அவமானப்படுத்தி வைப்பதில் என்ன லாபம்? என்கிறாராழ்வார்.

பின்னை யாரைக் குறித்துக் கவிபாடவேணுமென்ன, திருக்குறுங்குடியெம்பெருமானைக் குறித்துக் கவிபாடவேணுமென்கிறார் பின்னடிகளில். திருக்குறுங்குடி யென்றது ஸகல திவ்ய தேசங்களுக்கும் உபலக்ஷணம். பரவாஸுதேவனையும் க்ஷீராப்தி நாதனையும் ராமக்ருஷ்ணாதியவதாரங்கள் செய்தவனையும் ஸர்வாந்தர்யாமியையும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலிய திவ்யதேசங்களில் கோயில் கொண்டெழுந்தருளி யிருப்பவனையுமுள்ள ஸர்வேச்வரனொருவனையே கவிபாட வேணுமென்றவாறு.

குறுங்குடி = பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டினுள் ஒன்று. குறுகியவனான வாமனனது க்ஷேத்ரமாதலால் இத்தலத்திற்குக் குறுங்குடியென்று பெயர் வந்ததென்பர். இத்தலத்திலுள்ள எம்பெருமான்களுள் ஒரு எம்பெருமான் ஸ்ரீபாஷ்யகாரர் (உடையவர்) பக்கலிலே திருமண்காப்பு சாத்திக் கொண்டு வேதாந்தார்த்தமுங் கேட்டு சிஷ்யனாய் 'நாமும் நம்பி ராமாநுசனையுடையோம்' என்கையாலே அப்பெருமானுக்கு வைஷ்ணவநம்பி யென்று திருநாமம். ஆனதுபற்றியே வைஷ்ணவவாமந க்ஷேத்ரம் என்றும் இத்தலம் வழங்கப்படும். "வைஷ்ணவவாமநத்தில் நிறைந்த நீலமேனியின் ருசிஜநக விபவ லாவண்யம் பூர்ணம்" என்ற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தி காண்க. நம்மாழ்வாருடைய திருவவதாரத்திற்குக் காரணமாயிருந்தவரும் இத்தலத்து நம்பியே.

கண்ணன் குறுங்குடி = கண்ணபிரானாகிய ஸர்வேச்வரன் 'என்னது' என்று அபிமானித்து நித்யவாஸம் செய்யப்பெற்ற குறுங்குடி என்று ஆசார்யர்கள் திருவுள்ளம் பற்றின பொருள். "**கண், நன், குறுங்குடி** என்று வியாக்கியானம் பண்ணினார்கள் தமிழர்" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியும் காண்க. 'கண்ணனுடைய குறுங்குடி' என்று பொருள் கொள்ளுமிடத்தில் ஸ்வல்பம் அநுபபத்தியுண்டு; "தேவதத்தனுடைய க்ருஹத்திலுள்ள தேவதத்தன்" என்று வ்யவஹரிக்க வொண்ணாதாப்போலே 'ஸர்வேச்வரனுடைய குறுங்குடியிலுள்ள ஸர்வேச்வரன்' என்கிற வ்யவஹாரமும் ஒண்ணாதாகையாலே **கண்**, நன் என்று பிரித்து விசேஷணமாக்கிப் பொருள் கொள்வதே பொருந்தும் என்று சிலர் கருதக்கூடும்; அப்படியில்லை; '**கண்ணன்குறுங்குடி**' என்றே ப்ரஸித்தியென்று வைத்துப் பொருள் கொள்வதில் ஆசார்யர்களின் நோக்கு என்றுணரவேணும்.

குளன்—குளம்; மகரனகரப்போலி. .... (உ)

ஒழிவொன்றில்லாத பல்லூழிதோறூழிநிலாவ * போம்
வழியைத்தரும் நங்கள்வானவரீசனைநிற்கப்போய் *
கழியமிகநல்ல வான்கவிகொண்டுபுலவீர்காள்! *
இழியக்கருதி ஓர்மானிடம்பாடலென்னாவதே? (௩)

ஒழிவு ஒன்று இல்லாத	ஒழிவு சிறிதுமில்லாத	போய்	அவனையுபேக்ஷித்து
பல் ஊழி ஊழி தோறு	காலதத்துவமுள்ளதனையும்	கழிய மிக நல்ல	மிகவும் இனிய
நிலாவ	நிலைநின்று அநுபவிக்கும்படி	வான் கவி கொண்டு	திவ்யமான கவிகளைக் கொண்டு
போம்	செலவுக்கடவதான	புலவீர்காள்	பண்டிதர்களே!
வழியை	வழிபாடாகிய கைங்கர்யத்தை	இழிய கருதி	அதோகதியையடைய நினைத்து
தரும்	தந்தருள்கின்ற	ஓர் மானிடம்	அற்ப மனிதர்களை
நங்கள் வானவர் ஈசனை நிற்க	நமது தேவாதி தேவனான பெருமானிருக்க,	பாடல்	பாடுதலால்
		ஆவது என்	(உங்கட்கு) உண்டாகும் பயன் யாது?.

* * * [ஒழிவொன்றில்லாத.] பரமவிலக்ஷணனாய் மஹோபகாரகனான எம்பெருமானிருக்க அவனைவிட்டு அற்பமனிசரைக் கவிபாடி என்ன பலன்? என்கிறார். ஒரு விச்சேதமில்லாதபடி யாவதாத்மபாவியான காலமெல்லாம் நிலைநின்று அநுபவிக்கும்படி செல்லக் கடவதாயுள்ள வழிபாடான கைங்கரியத்தைத் தந்தருளி நம்மை ஆட்கொள்பவன் எம்பெருமான்; இங்ஙனே கைங்கரியம் செய்கிற நித்ய ஸூரிகளை ஒரு நாடாகவுடையவன்; இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயத்தில் எத்தனையூழிகாலம் கவிபாடினாலும் ஏற்றிருக்கும்; பாடுவதற்கும் மெய்யான திருக்குணங்கள் எல்லைகடந்தவையுண்டு; பாடுகிறவர்களுக்கும் ஸகல புருஷார்த்த ஸித்தியுண்டு; பாட்டுக்கும் மிக்க சிறப்புண்டு; இப்படியிருக்க, தகாத விஷயங்களைத் தேடித்திரிந்து மானிடம் பாடி அதோகதியை யடையப் பார்க்கிறீர்களே, இதுவென் கொல்! என்கிறார்.

வழியைத்தரும் என்பதற்கு அர்ச்சிராதி மார்க்ககதியைக் கொடுத்தருள்கின்ற என்று பொருள் கொள்வாருமுளர்.

வானவரீசனை நிற்க— வானவரீசனைவிட்டு என்றபடி. இனி, 'ஈசனை' என்ற ஐகாரத்தைச் சாரியையாக வைத்து முதல் வேற்றுமைப் பொருள் கொள்ளுதலுமொன்று. "இவன் நம்மை நோக்கி ஒரு கவிபாடுவனோ" என்று எம்பெருமான் ஆசையோடிருக்க— என்று ரஸமயமான பொருள்கூறுவர் நம்பிள்ளை.

நிற்கப்போய் என்றவிடத்து, 'போய்' என்பதற்கு ஈட்டில், "புறம்பே பாடுகைக்கு விஷயம் தேடிப்போய்" என்று அருளிச்செய்து விட்டு மேலே பணித்த ஸ்ரீஸூக்திகள் பரமரஸம்;— "இவன் கவி பாடி (ட) வாராநின்றான் என்று கேட்டவாறே கழியப்போம்— இவன் கவி கேட்டு ஏதேனும் தனக்குக் கொடுக்க வேண்டுகிறதாகக் கொண்டு; இவனும் அவன் புக்கவிடம்புக்கு இத்தைக் கேட்பித்து ஒன்று பெற்றேனாய் விடவேணும் என்று தொடர்ந்து போமே; ஆக, அவன் போக இவன் போக, போகா நிற்குமித்தனை."— ஒரு அற்பனை மஹா தனிகனாக நினைத்து ஒரு கவிபாணவன் அவன் விஷயமாக ஒரு துதிநூல் எழுதி அதை அந்த ப்ரபுவினிடத்தில் வாசித்துக் காட்டி ஏதேனும் வெகுமதி பெற வேணுமென்றெண்ணிப்போக, இதனையறிந்த அந்தப்ரபு 'இக்கவியின் கண்ணின் நாம் தென்பட்டால் அவன் தனது நூலை வாசித்துக்காட்ட அவகாசம் கொடுக்க நேர்ந்துவிடும்; பிறகு ஏதேனும் காசு கொடுக்கவும் வேண்டிவரும்; ஆதலால் நாம் இவனுக்குப் புலப்படாமே அப்பால் போய்விடுவதே நலம் என நினைத்துத் தன்னை மறையப்பார்ப்பன்; அவனை விடாமல் பிடிப்பதே கருமம் என்று கவியும் தொடர்ந்து செல்வன்; ஆக அவன் போவதும் இவன் போவதுமாய், போக்கேயாயிருக்குமென்றதாயிற்று.

கழியமிகநல்ல— "சாலஉறுதவ நனிகூர்கழி மிகல்" என்ற நன்னூற் சூத்திரப்படிக்கும், "கழியக்கதோர் காதலள்" இத்தியாதிப் ப்ரயோகங்களின் படிக்கும் கழிய என்பதற்கு 'மிகவும்' என்கிற பொருள் ப்ரஸித்தம்; கழியமிக—

அத்யந்தம் என்றபடி. இப்பொருள் கிடக்க, நம்பிள்ளை ரஸமாக வேறொரு பொருளும் அருளிச் செய்கிறார்;— (ஈட்டில்) "[கழியமித்யாதி.] கவிபாட்டுண்கிறவனுக்கு இல்லாத நன்மைகளையிட்டுச் சொல்லுகையாலே அவனுக் கடங்காததாயிருக்குமிறே; இவன் ஆரைச் சொல்லுகிறது, நம்மையன்று போலும் என்று ப்ரமித்திருக்குமிறே; ஆகையாலே இவனைவிட்டுக் கழிய." என்கிற ஸ்ரீஸூக்திகள் காண்க. "[illegible]—ஆர்பத்ராதத் குணோக்தி: பகவதி ந, ததுக்தர்வு சௌர்யை: பரேஷாம் ஸ்துத்யத்வாத்." என்ற ஸ்ரீரங்கராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியின்படியே பகவானைப்பற்றிச் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் அற்பமனிசர் திறத்திலே ஏறிட்டுச் சொன்னால் அவை அந்த வ்யக்திகளை விட்டுக் கழிந்து போவது ப்ராப்தமேயாம்.

வான்கவி— திவ்யமான கவி என்றபடி. 'கவி' என்கிற சொல்—பாடல்களை இயற்றும் பண்டிதரையும், அப்பண்டிதரால் இயற்றப்படும் பாடல்களையும் சொல்லும்; "இன்கவி பாடும் பரமகவிகளால்" என்ற பாசுரத்தில் 'கவிபாடும்' 'கவிகளால்' என்றவற்றாலும் இதனையறியலாம்.

புலவீர்காள்!— நீங்கள் விவேகிகளல்லவோ? நல்லபாடல்களை அற்பர்கள் விஷயத்திலே உபயோகப்படுத்தலாகாதென்று அறியீர்களோ? அஸ்தானத்திலே அருமருந்தன்ன வாக்கைச் செலுத்தலாமோ? என்பது குறிப்பு.

இழியக்கருதி= நாஸ்துதிகளினால் நீங்கள் ஏதோ உயர்நிலை அடைய வேணுமென்று கருதினாலும் உண்மையில் அதோகதியையடையக் கருதுவதாகவே எனக்குப் புலப்படுகிறது என்று காட்டுகிறபடி. "அறிவுடையரானால் நின்ற நிலைக்கு மேலே ஓர் ஏற்றம் தேடிக்கொள்ளுமதொழிய, கீழேபோய் அவஃவதிக்கத் தேடுவாருண்டோ?" என்பது ஈடு.

ஓர் மானிடம்பாடல் என்னாவது?= ஒரு அற்பனைப்பாடுகை உங்களுடைய விவேகத்திற்குச் சேருமோ? அதனால் உங்களுக்குத்தான் ஒரு ப்ரயோஜனமுண்டோ? கவிக்குத் தான் ஏற்றிருக்கிறதோ? எதற்காக அந்யாயமாய்ப் பாடுகிறீர்கள் என்றவாறு. ... ... (௫)

என்னாவதெத்தனைநாளைக்குப்போதும்? புலவீர்காள்! *
மன்னுமனிசரைப் பாடிப்படைக்கும்பெரும்பொருள் *
மின்னார்மணிமுடி விண்ணவர்தாதையைப்பாடினால் *
தன்னாகவேகொண்டு சன்மஞ்செய்யாமையும்கொள்ளுமே. (௬)

புலவீர்காள்	பண்டிதர்களே!	பெரும் பொருள்	பெருஞ் செல்வம்
மன்னு	அல்பாயுஸ்ஸுக்களான	என் ஆவது	யாதாவது?
மனிசரை	மனிதர்களை	எத்தனை நாளைக்கு போதும்	(அது) எத்தனை நாளைக்குப் பற்றும்?
பாடி	கவிபாடி		
படைக்கும்	(அதனால்) நீங்களடைகின்ற		

மின் ஆர்	ஒளி நிறைந்த	தன் ஆகவே கொண்டு	தனக்கு அடிமையாகவே கொண்டு
மணி முடி	மணிமகுடத்தை யுடையனை		
விண்ணவர் தாதையை	தேவாதி தேவனை	சன்மம் செய்யாமையும் கொள்ளும்	இனிப் பிறவிகள் உண்டாகாதபடியாகவும் அங்கீகரித்தருள்வன்.
பாடினால்	கவிபாடினால் (அப்பெருமான் உங்களை)		

* * * [என்னுவது.] கவிபாடினார்க்கு ஸகலவரிசைகளும் கொடுக்கவல்லவனான எம்பெருமானைவிட்டு, இன்றிருப்பார் நாளையிரார் என்னும்படியான அஸ்திரர்களைக் கவிபாடுவதில் என்ன பயனுண்டென்கிறார்.

என்னுவது— அற்பர்களைக் குறித்து நீங்கள் கவிபாடுவதனால் உங்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது? என்றார்; அது கேட்டவர்கள், 'கவிபாடினால் ஒன்றும் கிடைக்காமற் போகுமோ? கவிபாடுவாரும் பாடினவர்களுக்குக் கொடுப்பாருமாய்க் காணப்படவில்லையோ? என்றார்கள்; அதற்கு மேல் எத்தனை நாளைக்குப் போதும்? என்கிறார். கவிபாடப் பரிச்ரமப்பட்ட நாள்களோ பலபல இருக்கும்; அந்நாட்களுள் ஒரு நாளைய ஜீவனத்திற்குக் காணுமோ அவன் கொடுக்கும் பொருள்— என்றபடி. அந்த அற்பபலனுக்கும் அவகாசமில்லையாம்படி அல்பாயுஸ்ஸுக்களாகவன்றோ அவர்கள் தாமிருப்பது என்கிறார் மன்னு மனிசரை என்பதனால். ஒருவன் விஷயமாக ஒரு வருஷகாலம் வெகு பரிச்ரமப்பட்டு ஒரு புத்தகமெழுதி முடித்து அதை அவனிடம் கொண்டுபோய்ப் படித்துக்காட்டிப் பரிசுபெற வேணுமென்றெண்ணிப் புறப்படும்போதே 'அவன் மாண்டான்' என்று எதிரே ஆள்வரும்படியாகவன்றோ இருப்பது. "பாண்டேன் வண்டறையுங் குழலார்கள் பல்லாண்டிசைப்ப, ஆண்டார் வையமெல்லாமரசாகி முன்னாண்டவரே மாண்டார் என்றுவந்தாரந்தோ." என்ற பெரியதிருமொழிப் பாசுரம் இங்கு நினைக்கத்தகும்.

பின்னை, யாரைப்பாடவேணுமென்ன, நித்யஸூரிநாதனைப்பாடவேணுமென்கிறார் மூன்றாமடியினால்.

மின்னார் மணிமுடி என்பது விண்ணவர்க்கும் விசேஷணமாகலாம், விண்ணவர்தாதையான எம்பெருமானுக்கும் விசேஷணமாகலாம். விண்ணவர்க்கு விசேஷணமானபோது, அவர்கள் எம்பெருமானைத் துதித்துத் துதித்து முடிபெற்றவர்கள் என்றதாகிறது. விண்ணவர்தாதைக்கு விசேஷணமானபோது, கவிபாடுமவர்கட்குப் பரிசளிக்க ஸஜ்ஜமான முடியையுடையவன் என்றதாகிறது.

எம்பெருமானுக்குத்தான் முடியுண்டு; விண்ணவர்கட்கு முடியுண்டோ வென்கிற சங்கைக்குப் பரிஹாரமாக "முடியுடைவானவர்" (10-9-8) என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை நினைப்பது.

தன்னாகவே கொண்டு— தனக்கே அநந்யார்ஹ சேஷபூதராக அடிமைகொண்டு என்றபடி. * [illegible]

ஸாம்யம் ஸாஜூஸ்யமேதி * தம்மையே நாளும்வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்கவருள் செய்வர் * என்கிறபடியே தன்னோடொக்கப்பண்ணி என்றும் பொருள் கூறுவர்.

சன்மம் செய்யாமையுங் கொள்ளும் = நீசரைக் கவிபாடுகைக்கு அடியான சரீரஸம்பந்தத்தையும் தொலைத்தருள்வன். சன்மம் ஏற்பட்டால் பசியும் ஏற்படுகிறது; அதனால் அற்பரிடம் சென்று துதிக்க நேருகின்றது; சன்மமே யில்லையாகில் நரஸ்துதியாகிற நாசமும் இல்லையாமென்று ஜன்ம ஸம்பந்தத்தையே போக்கியருள்வன் எம்பெருமான். ... ... (௪)

கொள்ளும்பயனில்லைக் குப்பைகிளர்த்தன்னசெல்வத்தை *
வள்ளல்புகழ்ந்து நும்வாய்மையிழக்கும்புலவீர்காள்! *
கொள்ளக்குறைவிலன் வேண்டிற்றெல்லாம்தரும்கோதில் * என்
வள்ளல்மணிவண்ணன்தன்னைக் கவிசொல்லவம்மினோ. (௫)

கொள்ளும் பயன் இல்லை	நீங்கள் பெறும் பலன் சிறிதுமில்லையாம்படி	கொள்ள குறைவு இலன்	நீங்கள் பாடுகிற துதி மொழிகளைப் பொருத்தமாகக் கொள்ளவல்ல பூர்த்தியை யுடையவனும்
குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை	குப்பையைக் கிளறினாற் போல் குற்றம் குறைகளே தோற்றும்படியான செல்வமுடைய அற்பரைக் குறித்து	வேண்டிற்று எல்லாம் தரும்	வேண்டிய எல்லாவற்றையும் தந்தருள்பவனும்
		கோது இல்	குற்ற மற்றவனும்
வள்ளல் புகழ்ந்து	உதாரனே! என்று கொண்டாடி	என் வள்ளல்	என் விஷயத்தில் மஹோபகாரங்கள் செய்தவனும்
நும் வாய்மை இழக்கும்	உங்களுடைய ஸத்யத்தை இழக்கின்ற	மணிவண்ணன் தன்னை	நீலமணி வண்ணனுமான பெருமானை
புலவீர்காள்	புலவர்களே!,	கவி சொல்ல வம்மின்	கவிபாட வாருங்கள்.

* * * [கொள்ளும்பயனில்லை] ஹேயகுணம் மலிந்த நீசரைவிட்டு, ஸமஸ்த கல்யாண குணாத்மகனும் நம் அபேக்ஷித மெல்லாம் தரவல்லனுமான எம்பெருமானைக் கவிபாட வாருங்கோளென்கிறார். பிறரைக் கவிபாடுவது ஒரு பிரயோஜனத்திற்காகவேயன்றி ஸ்வயம் ப்ரயோஜனமாகவன்றே; அப்படி நீங்கள் கருதுகிற பிரயோஜனம் பெறுவதில்லை என்று முந்துறமுன்னம் அருளிச் செய்கிறார்— பாவிகளின் உள்ளத்திற் பதிவதற்காக.

பயனில்லை யென்பது மாத்திரமன்று; இழவுமுண்டு என்கிறார் மேல். [குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை வள்ளல்புகழ்ந்து நும் வாய்மை யிழக்கும் புலவீர்காள்!] நீங்கள் வாய்பெற்ற பேற்றை இழக்குமத்தனையே யுள்ளது என்கிறார். குப்பைகளைக் கிளறினால் கெடுதலான அம்சங்கள் தென்படுமேயல்லது நன்றானதொன்றும் தென்பட மாட்டாது; அதுபோல நீசர்களின் சரிதைகளைக் கவிபாடப் புகுந்தால் மறைந்து கிடக்கும் மாசுகள்தாம் வெளிவரும் என்று அநுபவத்திற்குப் பொருத்தமாக அருளிச் செய்கிற அழகு காண்மின்.

செல்வத்தை வள்ளல் புகழ்ந்து— அற்பமான செல்வத்தைக் கனத்ததாகப் பாடியென்று தாற்பரியம். "ஸம்பத்தையுடைய க்ஷுத்ரஜாதியை மஹோதாரையாகப் புகழ்ந்து" என்பது பன்னீராயிரம். வாய்மை யிழத்தலாவது—பொய் சொல்லுபவர்கள் என்கிற அபக்யாதி பெறுதல்.

பகவத் விஷயத்தில் கவிபாடினால் விளையும் நன்மைகளைப் பின்னடிகளில் அருளிச் செய்கிறார் ;—

கொள்ளக் குறைவிலன் = இதற்கு ஸாமாந்யமாகத் தோன்றும் கருத்து ஒன்றுண்டு; மிக அற்பமான செல்வமுடைய அற்பர்களிடத்திலே நாம் பலன்கொள்ளக் கொள்ள, அவர்களுக்கு அது குறைந்துபோம்; அங்ஙனன்றிக்கே எம்பெருமான் அழியாப்பெருஞ் செல்வமுடையனாதலால் நாம் அவன்பக்கலில் எவ்வளவு செல்வம் கொண்டாலும் அங்குச்சிறிதும்குறை ஏற்படாது என்பதாக.—நம் ஆசாரியர்கள் அருளிச்செய்வது இங்ஙனேயன்று ; (ஈடு காண்மின் ;—) "நீங்கள் யாவை யாவைசில ஏற்றங்களையிட்டுக் கவிபாடினிகோள் அவற்றை ஸ்வீகரிக்குமிடத்தில் ஒருகுறையுடையனல்லன் ; ஸமஸ்தகல்யாண குணாத்மகன்."— அற்பமனிசர்விஷயத்திலே ஏற்றங்களை ஏறிட்டுக் கவிபாடினால் அவற்றைக் கொள்ளும் யோக்யதை அவர்களுக்குக்கிடையாது ; எம்பெருமான் விஷயத்தில் எவ்வளவு ஏற்றமாகக் கவி பாடினாலும் அந்த ஏற்றமெல்லாம் அங்கே மிகவும் பொருத்தமாக அந்வயிக்கக் குறையில்லை யென்றவாறு.

வேண்டிற்றெல்லாம் தரும் = நீச மனிசர்கள் ஒருவனுக்கு ஒன்றைக்கொடுத்தால் கொள்ளுகிறவனுக்கு மற்றொன்று தேவையானால் அதைக்கொடுக்க அவர்கள் அசக்தரேயாவர்; இங்கு அபேக்ஷிப்பார்தாழ்வாலே இழக்கில் இழக்குமித்தனை; எம்பெருமான் தாமரட்டாக சொன்றில்லை. ஸ்ரீவிஷ்ணுதர்மத்தில் மாங்கள்யஸ்தவத்தில—" [illegible]—தேவேந்த்ரஸ் த்ரிபுவநம் அர்த்தமேகபிங்க: ஸர்வார்த்திம் த்ரிபுவநகாம் ச கார்த்தவீர்ய:, வைதேஹ: பரம பதம் ப்ரஸாத்ய விஷ்ணும் ஸம்ப்ராப்தஸ் ஸகல பலப்ரதோ ஹி விஷ்ணு:" என்ற ச்லோகம் இங்கு அநுஸந்தேயம். [ஏகபிங்க:—குபேரன்.]

கோது இல்—கொடுக்குமிடத்தில் கோதாவது— 'கொடுத்தோம்' என்றிருக்கையும், கைம்மாறு கருதிக்கொடுக்கையும், அளவுபடக் கொடுக்கையும் முதலியன ; எம்பெருமானது ஔதார்யத்தில் இவை யித்தனையுமில்லை. 'என் வள்ளல்' என்கையாலே எம்பெருமானது ஔதார்யத்தின் சிறப்பு ஆழ்வார்க்கு ஸ்வாநுபவஸித்த மென்பது விளங்கும்.

மணிவண்ணன் — எம்பெருமானிடத்தில் ஔதார்யமில்லை யென்றே கொண்டாலும் வடிவழகொன்று போதுமே கவிபாடுகைக்கு என்றவாறு. ... (ரு)

வம்மின்புலவிர் ! நும்மெய்வருத்திக்கைசெய்துய்ம்மினோ *
இம்மன்னுலகினில் செல்வரிப்போதில்லைநோக்கினோம் *
நும்மின்கவிகொண்டு நும்நுமிட்டாதெய்வமேத்தினால் *
செம்மின்சுடர்முடி என்திருமாலுக்குச்சேருமே. (௬)

புலவீர்	புலவர்களே !
வம்மின்	(நரஸ்துதியை விட்டு) வாருங்கள் ;
நும் மெய்	உங்களது உடலை
வருத்தி	சிரமப் படுத்தி
கை செய்து	தொழில் செய்து
உய்ம்மின்	ஜீவியுங்கோள் ;
மன்	(ப்ரவாஹரூபேண) நித்யமாயிருக்கின்ற
இ உலகினில்	இந்த லோகத்தில்
செல்வர்	(உங்களுக்குப் போதுமானவை கொடுக்க வல்ல) ஸ்ரீமான்கள்
இல்லை	கிடையார் ;
இப்போது நோக்கினோம்	(இதனை) இப்போது ஆராய்ந்து அறிந்தோம் ;
நும்	உங்களுடைய

இன் கவி கொண்டு	மதுரமான கவிகளைக் கொண்டு
நும் நும்	உங்களுங்களுடைய
இட்டா தெய்வம்	இஷ்ட தெய்வத்தை
ஏத்தினால்	துதி செய்தால்
	(அந்தத் துதிமொழிகளிற் கூறும் குணங்கள் அவர்களிடத்து இல்லாமையாலே அவை)
செம் மின் சுடர் முடி	செவ்வனே மின்னுகின்ற வொளி பொருந்திய திருமுடியையுடைய
என் திருமாலுக்கு	எனக்கு ஸ்வாமியான லக்ஷ்மீநாதனுக்கு
சேரும்	அந்வயிக்கும்.

* * * [வம்மின்புலவீர்] ஜீவனம் உஜ்ஜீவனம் என்று இரண்டுண்டு ; எம்பெருமான் திறத்துக் கவிபாடினால் உஜ்ஜீவிக்க வழியுண்டெனினும், ஜீவிக்கவழி தேடுகிற நாங்கள் நரஸ்துதிகளிலே இழிகிறோம் என்று சிலர் சொல்லுவதாகக் கொண்டு, நீசரைக் கவிபாடி ஜீவிப்பதிற் காட்டிலும் உடம்பு நோவத் தொழில் செய்து ஜீவித்தல் நன்று என்கிறார்.

வம்மின்— காட்டுத்தீயில் அகப்பட்டவர்களை மடுவைக்காட்டியழைப்பாரைப் போலே வாருங்களென்கிறார். புலவீர் !— நீங்கள் விவேகிகளாகையாலே நான் அழைக்கிறவாசியறிந்து வரலாமேயென்கிறார்.

ஆழ்வீர் ! எங்களை நீர் அழைக்கிறதென் ? எங்கள் ஜீவனத்திற்கு நாங்கள் வழிதேட வேண்டாவோ ? பிறரைக் கவிபாடியாகிலும் எங்கள் தேஹயாத்திரையை நாங்கள் நடத்திப் போருகிறோம் என்று அவர்கள் சொல்ல, மெய்யே; ஜீவிக்க வேண்டுமானாலும் உங்கள் தரங்குலைய ஜீவிக்கவேணுமோ ? உங்கள் தரம் குலையாமல் ஜீவிக்கலாகாதோ ? உங்கள் சரீரத்தை வருத்தியும் கைத்தொழில் செய்தும் ஜீவிக்கப் பாருங்கோளென்கிறார். “நும் மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினோ” என்கிறவிடத்திற்கு “கோட்டை குயந்தும் புல் சீவி விற்றும் ஜீவிக்கப் பார்க்கலாகாதோ ?” என்று பணிப்பராம் எம்பார்.

க்ருஷி முதலியவை ஆபாஸ ரூபமாகையாலே அவை செய்வதிற் காட்டிலும் ஸ்ரீமான்களான மனிசர்களைக் கவிபாடி ஜீவித்தல் நலமன்றோ வென்ன,

உங்களுக்கு வேண்டுவன கொடுக்கும் ஸ்ரீமான்கள் இவ்வுலகினில் உளரோ வென்று பார்த்தோம்? பார்த்தவிடத்தில் ஒருவரு மில்லையாயிருந்தது என்கிறார் இரண்டாமடியினால். ஆழ்வார் ஸம்ஸாரயாத்ரையில் கண்வைக்கு மவரல்லர்; இவர்களுக்காக இப்போது கண்வைத்து ஆராய்ந்து பார்த்தார் என்னுமிடம் 'இப்போது நோக்கினோம்' என்பதனால் தெரிகின்றது.

ஸ்ரீமான்களான மனிசர்கள் இல்லையாகில் இந்திரன் முதலான தேவர்களை ஏத்தினாலோ வென்ன, உங்களுடைய ஆற்றிய கவிகளைக்கொண்டு உந்தம் இஷ்ட தேவதைகளை நீங்கள் ஏத்தினாலும் பின்னையும் அதெல்லாம் அந்த இந்திராதி தேவதைகளுக்கு அந்தராத்மபூதனாய் ச்ரியப்பதியாயிருந்த எம்பெருமான திருவடிகளிலேயே சென்று சேரும்; ஆனபின்பு நேர்கொடு நேரே எம்பெருமான் றன்னையே ஏத்துங்களென்கிறார் பின்னடிகளால். உலகில் கவிபாடுகிறவர்கள் சில சிட்டாக்கள் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம்; புண்டரீகாக்ஷன் என்றும் ஸ்ரீமான் என்றும் மஹோதாரன் என்றும் ஸகலஸத்குணநிதி என்றும் இப்படிச் சில விசேஷணங்களைத் திரட்டி வைத்துக்கொண்டிருந்து துதிப்பர்கள்; இத்துதிமொழிகளை மனிதர் விஷயத்திலோ தேவதாந்தரங்கள் விஷயத்திலோ பிரயோகித்தால் உண்மையாக அர்த்தமுள்ள விடத்திலேயே சப்தமும் சென்று சேருமாதலாலும், முற்கூறிய விசேஷணங்களின் பொருத்தம் எம்பெருமானொருவனுக்கே யுள்ளதாதலாலும், இந்திரன் சந்திரன் என்று நாம விசேஷங்களை யிட்டுப்பாடினாலும் அபர்யவஸாந வ்ருத்தியினால் அந்தர்யாமியளவும் செல்லுகையாலும் எம்பெருமானையே கவி பாடிற்றாகக் கொள்ளத் தகுமாதலால் 'என் திருமாலுக்குச் சேருமே' என்றது நன்கு பொருந்தும். .... (சு)

சேரும்கொடைபுகழ் எல்லையிலானை * ஓராயிரம்
பேருமுடையபிரானையல்லால் மற்றியான்கிலேன் *
மாரியனையகை மால்வரையொக்கும்திண்டோளென்று *
பாரிலோர்பற்றையைப் பச்சைப்பசும்பொய்கள்பேசவே. (எ)

சேரும்	தனக்குத் தகுதியான	மற்று ஓர் பற்றையை	வேறொரு அஸார பதார்த்தத்தைக் குறித்து
கொடை புகழ்	ஔதார்யத்தினாலாகிய புகழுக்கு	கை மாரி அனைய என்று	'கைகள் மேகம்போல் உதாரங்கள்' என்றும்
எல்லை இலானை	எல்லை யில்லாதிருப்பவனும்	திண் தோள்	'உறுதியான புயங்கள்
ஓர் ஆயிரம் பேரும் உடைய	ஆயிரந் திருநாமங்களை யுடைய உபகாரகனுமான	மால் வரை ஒக்கும் என்று	பெரிய மலைபோல்வன' என்றும்
பிரானை அல்லால்	எம்பெருமானை யன்றி	பச்சை பசும் பொய்கள் பேச	மெய் கலவாத புதுப் பொய்களைப் பேசுதற்கு
பாரில்	பூமியில்	யான் கில்லேன்	நான் சக்தனல்லேன்.

* * * [சேருங்கொடைபுகழ்.] கீழ் ஆறுபாசுரங்களினால் பரோபதேசம் செய்தருளின ஆழ்வார், தம் உபதேசம் கேட்டு ஒருவரும் திருந்தக் காணாமையாலே வெறுத்து அவர்களைவிட்டு, எம்பெருமானை யொழிய வேறுசிலரைக் கவிபாடுகை

யாகிற பாவம் எனக்கு இல்லையாகப் பெற்றதே! என்று தம்மளவிலே தாம் உகந்து பேசுகிறார். "வழிபறிக்கும் நிலத்தில் தன்கைப்பொருள்கொண்டு தப்பினவன் உகக்குமாபோலே, இவர்களைப் போலன்றியே பகவத் விஷயத்தையொழிய வேறு சிலரைக் கவிபாடுகைக்கு நான் க்ஷமனன்றிக்கே யொழியப்பெற்றேனென்று ப்ரீதராகிறார்." என்பது நம்பிள்ளையீடு.

சேருங்கொடை புகழெல்லையிலானை = உலகத்தில் கொடையாளிகள் பலர் இருப்பினும் 'இன்னான் இன்னது கொடுத்தான்' என்று சொன்னால் 'அதை நான் நம்புகின்றிலேன்' என்பாருண்டு; எம்பெருமான் உபய விபூதியையும் ஒருவனுக்குக் கொடுத்தருளினானென்றாலும் 'இது அஸம்பாவிதம்' என்பாரில்லை; கொடைபுகழ் பொருந்தியிருக்குமாயிற்று எம்பெருமானுக்கு. இத்தால்-கவிபாடுகிறவர்களுக்கு விசாலமான விஷயங்களுண்டென்றதாகிறது.

ஓராயிரம்பேருமுடையபிரானை = "ஓராயிரமாயுலகேழளிக்கும் பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்" என்கிறபடியே மஹாவைபவம் பொருந்திய ஆயிரந் திருநாமங்களையுடையவனாதலால் எந்த விருத்தத்திலும் எளிதாகத் திருநாமங்களையிட்டுக் கவிபாடுதற்குரியன் என்று காட்டுகிறபடி. அப்படிப்பட்ட திருநாமங்களை யெல்லாம் தமக்குப் பிரகாசிப்பித்தருளின மஹோபகாரத்தை நினைத்துப் பிரான் என்கிறார். [பிரான்—உபகாரகன்.] ஆக இப்படிப்பட்ட எம்பெருமானை யல்லது மற்றொரு க்ஷுத்ர புருஷனை என் வாயினால் நான் துதிக்க மாட்டேன்; அவரவர்கள் நரஸ்துதி செய்வதெல்லாம் பச்சைப்பசும் பொய்யே யல்லது வேறில்லையென்று காட்டுகிறார் பின்னடிகளில்.

கொடுக்கைக்குக் கைம்முதல் சிறிதுமில்லாத வொருவனை நோக்கி "மாரியனைய கையாளிவன்" என்றும், கொடையை நினைத்துத் தேய்புகிற தோளுடையானைக் குறித்து "மால்வரையொக்கும் திண்டோளனிவன்" என்றும் கவிபாடுவதெல்லாம் மெய்யுரை சிறிதுங் கலசாத பொய்யுரையேயாம்; இத்தகைய பொய்யுரைகளில் நான் பிரவேசிக்க சக்தனல்லேன் என்கிறார்.

[மாரி அனைய கை.] மேகமானது கைம்மாறு கருதாமல் தாராளமாக வர்ஷிக்கின்றபடியால் உலகில் உதாரர்களுக்கு மேகத்தை உவமையாகச் சொல்லுவர்.

அஸாரமான த்ருண விசேஷத்திற்குப் பற்றை யென்று பெயர். அது போன்றவனென்னாதே அதுவாகவே சொன்னது முற்றுவமை. "முளைத்தெழுந்து தீய்ந்துபோவன சில சிறுதூறு உண்டாயிற்று; அதுபோல, பிறந்தவன்று தொடங்கி முடிந்துபோமளவும் ஒரு காரியத்திற்கும் உதவாதவர்களைப் பற்றை யென்கிறது." என்பர் ஆசிரியர்.

பாரில் என்று ஏழாம் வேற்றுமையாகக் கொள்ளாமல் பார் இல் என்று பிரித்து, 'தங்குவதற்கு ஓரிடமுமில்லாத வொரு க்ஷுத்ரனை' என்று பொருள் கூறுதலுமுண்டு. ... ... (எ)

வேயின்மலிபுரைதோளி பின்னைக்குமணாளனை *
ஆயபெரும்புகழ் எல்லையிலாதனபாடிப்போய் *
காயம்கழித்து அவன்தாளிணைக்கீழ்ப்புகும்காதலன் *
மாயமனிசரை என்சொல்லவல்லேன்என்வாய்கொண்டே ? (அ)

வேயின் மலி புரை தோளி	மூங்கிலைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்ற தோள்களையுடையளான
பின்னைக்கு	நப்பின்னைப் பிராட்டிக்கு
மணாளனை	மணவாளனை கண்ணபிரானைக் குறித்து
எல்லை இலாதன	நிரவதிகமாயும்
ஆய	ஆராய்தற்கு உரியனவுமான
பெரும் புகழ்	பெரிய கீர்த்திகளை
பாடி	கவிபாடி
போய்	நெடுங்காலம் நடந்து
காயம் கழித்து	இவ்வுடலை யொழித்து
அவன் தாள் இணை கீழ்	அவ்வெம்பெருமானது திருவடியிணையில்
புகும் காதலன்	அந்வயிக்க வேணுமென்கிற ஆசையையுடைய நான்
மாயம் மனிசரை	ப்ராக்ருதர்களான மனிசர்களை
என் வாய் கொண்டு	(எம்பெருமானையே துதிக்கக் கண்ட) எனது வாக்கைக் கொண்டு
என் சொல்ல வல்லேன்	என்ன கவி பாடுவேன் ? [யாதொன்றும் பாடமாட்டேன்.]

* * * [வேயின் மலிபுரை.] நப்பின்னைப் பிராட்டியின் ஸம்ச்லேஷ விரோதிகளைத் தொலைத்து அவளை அடிமை கொண்டது போல என் விரோதிகளையும் தொலைத்து என்னை அடிமை கொள்பவனை எம்பெருமானை யொழிய வேறு சில நீசரைக் கவிபாட நான் நினைத்தாலும் என்வாய் அதுக்குப் பாங்காகாது என்கிறார். எம்பெருமானை வருணிக்கப்புகுந்து 'நப்பின்னைகேள்வன்' என்று சொல்லி அந்த நப்பின்னையைப் பல பாசுரங்களால் வருணிப்பது, அவளது தோள்முலைகளைப் பல பாசுரங்களால் வருணிப்பது இப்படி எத்தனை யுககாலம் பாசுரம்பாட நினைத்தாலும் விஷயங்கள் விசாலமாயிருக்க, இதர விஷயங்களைப் பாட என்ன ப்ரஸக்தி? என்று காட்டுகிறார் முதலடியினால்.

கும்பனென்னும் இடையர் தலைவனது மகளாய், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியைக் கண்ணபிரான் திருவாய்ப்பாடியில் மணம் புணர்ந்தனனாதலால் "பின்னை மணாளன்" என்று கண்ணபிரானுக்கு ப்ரஸித்தி.

"ஆய பெரும்புகழெல்லையிலாதன பாடிப்போய்க் காயங்கழித்து" என்ற சொற்றொடர் மிக இனிமையானது: எல்லையில்லாத பகவத் குணங்களை இடைவிடாது பாடிக்கொண்டிருந்து அதனையே யாத்திரையாய் உடலை விடவேணுமென்கிற பாரிப்பை ஆழ்வார் தெரிவிக்கின்றனர். இந்த ரீதியிலே சரீரம் கழிந்தால் ஸ்வர்க்கமோ நரகமோ செல்ல ப்ராப்தியில்லையே; அவனது திருவடி நிழலில்தானே பொருந்தும் பாக்கியமுண்டாகும்: அதனை மூன்றாமடியி

றற் பேசினர். இங்கே ஈட்டுஸ்ரீஸூக்தி காண்மின் ;—“சரீரத்தைக் கழித்த வனந்தரம் ஸ்வாநுபவம் பண்ணியிருத்தல் ப்ரயோஜநாந்தரங்களைக் கொள்ளுதல் செய்பவிராதே அடிமைக்குப் பாங்கான சரீரத்தைப் பெற்று, தாய்முலைக் கீழே யொதுங்கும் ஸ்தநந்தய ப்ரஜைபோலே திருவடிகளின்கீழே யொதுங்குவே னென்னும் அபிநிவேசத்தையுடைய நான்.”

மாயமனிசர்— பிரகிருதிக்கு வசப்பட்ட மனிதர்கள் என்றபடி : “உத்பத்தியோடே வ்யாப்தமான விநாசத்தை யுடையவர்களை ; அதாவது—பாடத் தொடங்கின கவி முடிவதற்கு முன்னே முடியும் மநுஷ்யரை.” என்பது ஈடு.

என்வாய்கொண்டு என்சொல்லவல்லேன்= வேறு சிலர் வாக்காலே பாடினால் பாடலாம் ; கழுத்துக்கு மேலே சொல்லுவோமென்றாலும் வாய் இசைகின்ற தில்லை ; எம்பெருமான் விஷயத்திலே காதலைப்பண்ணி, புறம்பே சிலரைக் கவிபாட வொண்ணுமோ ? ... ... (அ).

வாய்கொண்மோனிடம்பாடவந்த கவியேனல்லேன் *
ஆய்கொண்டசீர்வள்ளல் ஆழிப்பிரானெனக்கேயுளன் *
சாய்கொண்டவிம்மையுஞ்சாதித்து வானவர்நாட்டையும் *
நீகண்டுகொள்ளென்று வீடுந்தரும்நின்றுநின்றே. (கூ)

வாய் கொண்டு	(அருமையான) வாக்கைக் கொண்டு	எனக்கே உளன்	என் வாக்குக்கே இலக்காக வுள்ளான் ; (அப்பெருமான்)
மானிடம்	அற்ப மனிதர்களை	சாய் கொண்ட	அழகிய
பாட வந்த	பாடப் பிறந்த	இம்மையும்	இந்த லோகத்து அர்ச்சாவதார அநுபவத்தையும்
கவியேன் அல்லேன்	கவி நானல்லேன் ;	சாதித்து	உண்டாக்கித் தந்து
ஆய	(வேதாந்தங்களினால்) ஆராயப்பட்ட	வானவர் நாட்டையும் நீ கண்டு கொள் என்று	பரமபதாநுபவத்தையும் நீ பெறுவாயாக என்று சொல்லி
சீர் கொண்ட	திருக்குணங்களையுடைய	வீடும்	மோக்ஷ சுகத்தையும்
வள்ளல்	உதாரனாகிய	நின்று நின்று	அடைவு பட
ஆழி பிரான்	சக்கரக்கையனான பெருமான்	தரும்	கொடுத்தருள்வன்.

* * * [வாய்கொண்டு.] பரமோதாரனான எம்பெருமானாலே தன்னைக் கவிபாடுகையே ஸ்வபாவமாகப் பண்ணப்பெற்ற வெனக்கு இதரஸ்துதிகளில் அதிகாரமில்லை யென்கிறார். “ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முரரிபும்—ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முராரியும்.” என்றும் “நா வாயிலுண்டே நமோ நாரணவென்று வோதுவார்க்கு முரையுண்டே” என்றும் சொல்லுகிறபடியே அவன்தன்னைத் துதிக்கைக்காகவே படைக்கப்பட்ட வாயைக் கொண்டு நீசரைக் கவிபாடப் பிறந்தவனல்லேன் நானென்கிறார் முதலடியில்.

ஆழ்வீர்! அனேக மஹர்ஷிகளும் மற்றும் முதலாழ்வார்கள் போல்வாரும் துதித்த எம்பெருமானையே நீரும் துதித்தால் என்னரஸமுண்டு? வெவ்வேறு விஷயமாகவன்றோ கவிபாடவேணும் என்று சிலர் சொல்ல, ஆய்கொண்ட சீர்வள்ளலாழிப்பிரா னெனக்கேயுளன் என்கிறார். எம்பெருமானை நான் பேசுவது மற்றையோர் பேசினது போலவோ? "பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேலொருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம், ஒருவர் நம் போல்வருங் கேழ்பவருளரே" (திருவிருத்தம்) என்னும்படி தன் கடாக்ஷத்தை என்பக்கலிலேயே ஒருமடை செய்ததுபோலத் தன்னைப்பற்றிக் கவிபாடுவதையும் என்னொருவனுக்கே உரியதாக்கி யருளின னெம்பெருமான் என்றவாறு. எனக்கே என்ற ஏகாரத்தில்—இப்படி எம்பெருமான் விஷயீகரித்தது என்னைத் தவிர வேறொருவரையுமில்லை யென்பது தெரிவிக்கப்பட்டதாம். "வலக்கையாழி யிடக்கைச் சங்கமிவையுடைய மால்வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு மாறுளதோ விம்மண்ணின் மிசையே" என்பர் மேலும்.

உபயவிபூதிநாதனான எம்பெருமானுடைய உபயவிபூதியும் அடியார்களின் ஆளுகைக்கென்றே ஏற்பட்டனவாதலால், பொறுக்கப் பொறுக்க உபயவிபூதி கலங்களையும் எம்பெருமான் தமக்குத் தந்தருளுகிறபடியைப் பின்னடிகளால் அருளிச்செய்கிறார். [சாய்கொண்ட விம்மையுஞ்சாதித்து] ஛ாயா என்னும் வடசொல் சாய் என்று குறைந்துகிடக்கிறது. [சாய் கொண்ட]—ஒளிபெற்ற என்றபடி. * இருள்தருமாஞாலத்திற் பிறவியை இகழ்ந்து கூறுகின்ற ஆழ்வார் தமது திருவாக்கினால் "சாய்கொண்ட விம்மையும் சாதித்து" என்றருளிச் செய்யலாமோ? ஐஹிக லாபம் இவர்க்கு எதுக்கு? என்று சிலர் சங்கிக்கக்கூடும். கேண்மின்; — * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங் கருவிகண்ட வின்பமாகிய சப்தாதி விஷய லாபமன்று இங்குக் கூறப்படுவது; "இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" என்னும்படி இவ்வுலகத்திலேயே இடையூறின்றி பகவத் குணானுபவம் பண்ணப்பெறில் அந்தலாபம் பரமோத்தேச்யமாதலால் அதனையே இங்கு "சாய்கொண்டவிம்மை" என்பதனால் குறிக்கின்றார். திருவிருத்தத்தில் "வேதனை வெண்புரிநூலனை" (79) என்ற பாசுரத்தில் "ஈதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ் சீரியரே" என்றருளிச் செய்தமைகாண்க. எம்பெருமானை இந்நிலத்திலிருந்துகொண்டே இடைவிடாது வணங்கி அநுபவிப்பவர் யாரோ, அவர்கள், பரமபதத்தில் வாழும் நித்யமுக்தர்களிற்காட்டிலும் சிறந்தவர் என்றனர். இடைவிடாது எம்பெருமானை அநுபவிப்பதற்கென்றே வாய்த்த இடமான பரமபதத்தில் பகவதநுபவத்திற்கு எவ்வகையான இடையூறுமில்லையாதலால் அங்கிருந்துகொண்டு அவனையநுபவித்தல் வியப்பன்று; உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலம் பகவதநுபவத்திற்கு நேர்விரோதியாதலால் அப்படிப்பட்ட இந்த இருள்தருமாஞாலத்திலிருந்து கொண்டே அனவரதம் நித்யாநுபவம் செய்யும்படியான ஒரு தன்மை வாய்க்குமாகில் அது பரமபதாநுபவத்திற் காட்டிலும் மிகச்சிறந்ததென்றே கொள்ளத் தட்டில்லையென்க. பெரிய திருவந்தாதியிலும் "ஒன்றுண்டு செங்கண்மால்" (58) என்னும் பாசுரத்தில் "நின்புகழில்வைகும்

தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீயவர்க்கு வைகுந்தமென்றருளும் வான்" என்றருளியது நோக்கத்தக்கது. இப்போது லித்தமான குணநுபவத்திற்காட்டிலும் இனிமேல் லித்திக்கக் கடவதான வைகுந்தத்திலநுபவம் சிறந்ததல்ல கிடாய் என்றூராயிற்று. ஆகவே "சாய்கொண்ட விம்மையும் சாதித்து" என்றது நன்கு பொருந்தும். இவ்விடத்திலே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின் ;—"மோக்ஷ ஸாகத்திலும் நன்றாம்படி ஐஹிகத்திலே ஸ்வாநுபவமே யாத்ரையாம்படி பண்ணித்தருகை."

இப்படி இந்நிலத்தில் ஸ்வாநுபவத்தைக் குறையறத்தந்தருளி, நாளடைவிலே நித்யவிபூதியின் அநுபவத்தையும் தந்தருளும்படியை யருளிச்செய்கிறார் "வானவர் நாட்டையும்" என்று தொடங்கி. எம்பெருமான் பரமபதத்தை நித்யமுக்தர்களிட்ட வழக்காம்படி அவர்களுக்கு விதேயமாக்கி, அவ்விடத்தில் தான் பிறர்மனையில் குடியிருப்பவன்போல இருக்கின்றானென்று தோன்றுமாறு "வானவர்நாடு" என்கிறார். "வானவரசு வைகுந்தக்குட்டன்" என்றார் பெரியாழ்வாரும். „தேவாநாம் பூரயோத்யா" என்று சுருதியும் பரமபதத்தை நித்யமுக்தர்களினுடையதாகவே ஓதிற்று.

வானவர்நாட்டையும் நீகண்டுகொள்என்று= இராமபிரான் காட்டில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸரிலே பரதாழ்வான் ஸ்ரீபண்டாரத்தை வளர்த்து வைத்து, மீண்டெழுந்தருளின இராமபிரானை நோக்கி „அவேக்ஷதாம் ஹவாந் கோஸம் கோஷ்டாகாரம் புரம் பலம் | பவதஸ் தேஜஸா ஸர்வம் க்ருதம் தஸகுணம் மயா" (அவேக்ஷதாம் பவாந் கோஸம் கோஷ்டாகாரம் புரம் பலம், பவதஸ் தேஜஸா ஸர்வம் க்ருதம் தஸகுணம் மயா.) என்று காட்டிக் கொடுத்தாப்போலே ஸ்ரீவைகுண்டநாதனும் முக்தர்களாய் வருமவர்களை நோக்கி 'நீகண்டுகொள்' என்று ...டுக்கிறான்போலும்.

நின்றுநின்றேவீடும்தரும்= ப்ராப்தகாலத்திலே மோக்ஷ ஸாம்ராஜ்யத்தையும் கொடுப்பன் என்று சிலர் பொருள் கூறினராம். நின்றுநின்று என்பதற்கு— 'ஸாத்மிய ஸாத்மிய' என்று பொருள் கொள்வது சிறக்குமென்று நம்பிள்ளை திருவுள்ளம். குளப்படியிலே கடலைப் புகநாற்போலன்றிக்கே, வந்த நன்மை செய்தாலும் பொறுக்கப் பொறுக்கச் செய்தருள்வது எம்பெருமானியல்பு. "ஆற்றநல்ல வகைகாட்டுமம்மான்" என்பர் மேலும். "கலைந்துபிரிந்து ஜ்ஞான பக்திகளை வளர்த்துக் கரைபுரளாமிடக் காது பொறுக்குதலும் மாம்ஸாபாவலி போஜனப் புஷ்பூச்சர்போலே ஆற்றநல்ல வகைகாட்டு ஸிரப்படி" என்ற ஆசார்ய ஹ்ருதய திவ்யஸூக்தியும் காண்க. ... ... (௯)

நின்றுநின்று பலநாளுய்க்கும் இவ்வுடல்நீங்கிப்போய் *
சென்றுசென்றாகிலும்கண்டு சன்மம்கழிப்பானெண்ணி *
ஒன்றியொன்றியுலகம்படைத்தான் கவியாயினேற்கு *
என்றுமென்றுமினி மற்றொருவர்கவியேற்குமே ? (௰)

பல நாள்	அனேக காலம்	எண்ணி	திருவுள்ளம் பற்றி
நின்று நின்று	இருந்து	ஒன்றி ஒன்றி	(ஒருகாலும் சோம்பிக் கைவிடாமல்) மேன்மேலும் ஊக்கங் கொண்டு
உய்க்கும்	சேதனனைத் தன் வசத்திலே யாக்குகின்ற		
இ உடல்	இந்தச் சரீரத்தை	உலகம் படைத்தான்	உலகங்களைப் படைத்து வருகின்ற எம்பெருமானுடைய
நீங்கி போய்	விட்டொழிந்து போய்		
சென்று சென்று ஆகிலும்	இப்படியே பல பல ஜனன மரணங்கள் நடந்த பின்பாகிலும் (ஏதேனுமொரு காலத்தில்)	கவிஆயினேற்கு	கவியாக அமைந்த எனக்கு
		இனி என்றும் என்றும்	இனி எக்காலும்
கண்டு	தன்னைக் கண்டு	மற்று ஒருவர் கவி	வேறொருவரைக் கவி பாடுதல்
சன்மம்	பிறவியை		
கழிப்பான்	கழிக்கக்கூடுமென்று	ஏற்குமே	தகுமோ? (தகாது.)

* * * [நின்றுநின்று.] தன்னைத் துதிப்பதற்கென்றே கரணகளேபரங்களைக் கொடுத்தருளினவனான எம்பெருமான் திறத்திலே கவிபாடப்பெற்றவெனக்கு மற்றொருவரைக் கவிபாடுதல் ஏலாது என்கிறார். உலகில் க்ருஷி செய்பவன் தான் செய்த க்ருஷி பழுதுபட்டொழிந்தாலும் 'இன்னமும் ஒரு தடவை செய்து பார்ப்போம்' என்றுகொண்டு மீண்டுமீண்டும் ஆசையாலே க்ருஷிதன்னையே செய்து பார்ப்பன்; அதுபோல, எம்பெருமானும் "பத்தி யுழவன்" என்று திருமழிசைப்பிரான் அருளிச் செய்தபடியே பக்திக்ருஷி செய்பவனாதலால் அந்தக்ருஷி எத்தனை தடவை முட்டுப்பட்டாலும் 'இன்னொரு தடவையிலாகிலும் பலிக்கமாட்டாதோ' என்று கொண்டு மீண்டுமீண்டும் பிரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்தருள்வனென்கிறது இரண்டாமடிகளால்.

நின்றுநின்று பலநாளுய்க்குமிவ்வுடல் = இதனால் நம்முடைய சரீரத்தின் கொடுமையைக் காட்டினபடி. காலமுள்ளதனையும் ஆத்மாவைத் தன் வசத்திலேயே இழுத்துக்கொண்டுசென்று அனர்த்தங்களுக்கு ஆளாக்குமதான சரீரம் என்றவாறு. இவ்வுடல் என்றது இந்த ஜன்மத்திலுள்ள ஒரு சரீரத்தை மாத்திரம் சொன்னபடி யன்று; ஜன்ம பரம்பரைதோறும் தொடர்ந்துவருகிற வுடல் என்றபடி.] இவ்வுடல் நீங்கிப்போய்ச் சென்று சென்றாகிலுங் கண்டு] ஆத்மாவானவன் சரீரத்தில் நின்றும் கிளம்பினவாறே போகக்கூடிய வழிகள் நான்கு உண்டு; மஹா—ம தி, யாஸ்ய ம தி, ய—ஏ ம தி, அ—ர்ச்சிரா தி ம தி (1. கர்ப்பகதி, 2. யாம்ய கதி, 3. தூமகதி, 4. அர்ச்சிராதிகதி) என்பனவாம். அர்ச்சிராதிகதியாகச் சென்று பரமபதத்தை யடைந்து தன்னை யநுபவிக்கப் பெறவேணுமென்று எம்பெருமான் பாரித்திருந்தும் இவர்கள் அந்தக் கதியிற் செல்லாமல் மற்ற மூன்று கதிகளிலேயே செல்லுகிறார்கள். அது கண்டு எம்பெருமான் 'நம்முடைய மனோரதம் ஈடேறப் பெறவில்லையே, இனி, பிரபஞ்ச ஸ்ருஷ்டியை நிறுத்திப் பொகட்டுவிடலாமா' என்று நினைத்தருளாமல் "இங்ஙனமே கடந்து போரும் அனேக ஜன்ம பரம்பரைகளினுள்ளே ஏதேனுமொரு ஜன்மத்திலாகிலும் இவர்கள் அர்ச்சிராதி கதிக்கு வாராமற் போவார்களா? என்றேனுமொருநாள் வரக்கூடும்" என்

றெண்ணி மேன்மேலும் உலகம் படைக்கின்றானும். "சோம்பாது இப்பல் லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா" என்றார் பெரிய திருவந்தாதியிலும்.

உலகம் படைத்தான் கவியாயினேற்கு = இங்ஙனே மேன் மேலும் கை வாங்காமல் ஒரு நகையாலே உலகத்தைப் படைத்துக்கொண்டே வந்த எம் பெருமானுடைய க்ருஷி என்னொருத்தனளவிலே பலித்ததனால் அவனையே கவி பாடும்படியான பாக்கியம் பெற்றேனென்றவாறு. "அவன் எதிர் சூழல்புக்குத் திரிந்து பண்ணின க்ருஷிபலித்து அவனுக்குக் கவியாகப் பெற்ற வெனக்கு" என்பது ஈடு.

என்று மென்றுமினி மற்றொருவர் கவி யேற்குமே? = எம்பெருமானது கவி யாக வாய்க்கப்பெற்ற நான் இனி மற்றொரு நீசனையும் கவிபாடி நின்றேனாகில் எம் பெருமானுக்கு பலித்தக்ருஷி வீணாகுமன்றோ; ஆதலால் அத்தகைய செய்கையில் பிரவர்த்தித்தல் எனக்கு ஸ்வரூபவிருத்த மென்று தலைக்கட்டினாராயிற்று.

"உலகம்படைத்தான் கவியாயினேற்கு" என்றவிடத்திற்கு ஆசார்யஹ்ரு தயத்தில் ஒரு விசேஷார்த்தம் அருளிச் செய்யப்பட்டுள்ளது குறிக்கொள்ளத் தக்கது. அதாவது—"படைத்தான் கவியென்றபோதே இதுவும் யதாபூர்வ கல்பனமாமே" என்பது முதல்பிரகரணத்தில் நாற்பத்தெட்டாவது சூர்ணிகை: 'பிரளயங் கொண்டவுலகத்தை முன்பு போல ஸ்ருஷ்டித்த ஈச்வரனுடைய கவி நான்' என்னும் பொருள் தோன்ற 'ஒன்றி யொன்றியுலகம் படைத்தான் கவியா யினேற்கு' என்று ஆழ்வார்தாம் அருளிச்செய்த பாசுரத்தை நோக்குமிடத்து, ஸ்ருஷ்டிதோறும் சந்திரன் ஸூர்யன் முதலிய ஸகல பதார்த்தங்களும் யதாபூர்வ கல்பனமாய் வருமாபோலே இந்த த்ராவிட வேதமும் ஸ்ருஷ்டிதோறும் யதா பூர்வகல்பனமாய் வருமென்று தோற்றுமிறே என்பது இந்த சூர்ணிகையின் கருத்து. ... ... (கo)

ஏற்கும்பெரும்புகழ் வானவரீசன்கண்ணன் தனக்கு *
ஏற்கும்பெரும்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஏற்கும்பெரும்புகழ் ஆயிரத்துளிவையுமோர்பத்து *
ஏற்கும்பெரும்புகழ் சொல்லவல்லார்க்கில்லைசன்மமே. (கக)

ஏற்கும் பெரு புகழ்	தனக்கு ஏற்றிருக்கின்ற மிக்க புகழையுடையனாய்
வானவர் ஈசன்	நித்ய ஸூரி நாதனான
கண்ணன் தனக்கு	கண்ணபிரான் விஷயமாக,
ஏற்கும் பெரும்புகழ் வண் குருகூர் சடகோபன்—;	
சொல்	அருளிச்செய்த
ஏற்கும் பெரும் புகழ்	ஏற்ற பெரும்புகழை யுடைய
ஆயிரத்துள்	இவ்வாயிரத்தினுள்
ஏற்கும் பெரும் புகழ்	தகுதியான சிறந்த புகழை யுடைத்தான
இவை ஓர் பத்தும்	இந்தத் திருவாய் மொழியை
சொல்ல வல்லார்க்கு	ஓத வல்லவர்களுக்கு
சன்மம் இல்லை	மறுபிறப்பு இல்லை.

* * * [ஏற்கும் பெரும்புகழ்.] இத்திருவாய்மொழி கற்றார்க்கு, பிறரைக்கவிபாடுதற்குரிய நீசப்பிறவி நேராதென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். இப்பாசுரத்தில் நான்கு அடிகளிலும் ஏற்கும்பெரும்புகழ் என்ற விசேஷணம் அமைந்திருக்கு மழகு நோக்கத்தக்கது. எம்பெருமானை உபயவிபூதிநாதன் என்று சொன்னால் ஏற்றிருக்குமாபோலே ஆழ்வாரை 'எம்பெருமான் கவி இவர்' என்றால் அப்படியே ஏற்றிருக்கும். 'அவ்வெம்பெருமானை உள்ளபடியே புகழும் வேதம் திருவாய்மொழிதான்' என்றால் இதுவும் ஏற்றிருக்கும். 'ஸ்வரூபநாசமாகப்பிறரைக்கவிபாடாமல் ஸ்வரூபம் நிறம்பெற எம்பெருமானையே கவிபாடுமாறு நியமித்த இப்பதிகமே இவ்வாயிரத்தினுள்ளும் சிறந்தது' என்றால் இதுவும் ஏற்றிருக்குமாயிற்று. ... ... (கக)

ஒன்பதாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

1. ரம்யஸ்தாநாதியோகாத். * தென்னாதெனா வென்று வண்டு முரல் திருவேங்கடத்து * ரமணீயமான திருமலை முதலானவற்றில் எழுந்தருளியிருக்கு மிருப்பைச் சொன்னபடி.

2. அமிதவிபவதঃ * குளனார் கழனிசூழ் கண்ணன் குறுங்குடி * செல்வம் மிகுந்திருக்குமிருப்பைச் சொன்னபடி.

3. ஸத்பதப்ராபகத்வாத். * போம் வழியைத்தரும் நங்கள் வானவரீசன் * அர்ச்சிராதி மார்க்கத்தை யடைவிக்கும் படியைச் சொன்னபடி.

4. ஸம்யக்ஸாயுஜ்யதாநாத். * தன்னாகவே கொண்டு சன்மஞ் செய்யாமையுங் கொள்ளுமே.* தன்னோடு பரமஸாம்யத்தைத் தந்தருளுமாற்றைச் சொன்னபடி.

5. அநகவிதரணாத். * வேண்டிற்றெல்லாந் தருங்கோதிலென்வள்ளல் * வேண்டினார்க்கு வேண்டினபடியே கொடுத்து ஒன்றுங்கொடுத்ததாக எண்ணாத ஔதார்யத்தைச் சொன்னபடி.

6. ஸர்வஶேஷித்வசிஹ்நாத். * செய்மின் சுடர்முடியென் திருமாலுக்கு * ஸர்வஸ்வாமித்வஸூசகமான திருவபிஷேகத்தையும் லக்ஷ்மீபதித்வத்தையுமுடைமை சொன்னபடி.

7. ப்ரக்யாத ஆக்யாஸஹஸ்ரை:. * ஓராயிரம் பேருமுடையபிரானை.* துதிப்பதற்கு உரிய ஆயிரத்திருநாமங்களுடைமை சொன்னபடி.

8. அவதரணரஸை:. * பின்னைக்கு மணாளனை.* விபவாவதாரத்தில் செய்த விஹாரத்தைச் சொன்னபடி.

9. புக்திமுக்த்யாபிமுக்யாத். * சாய்கொண்டவிம்மையும் சாதித்து வானவர் நாட்டையும் நீ கண்டு கொள்ளென்று வீடுந்தரும்.* இவ்விருந்து செய்யும் குணாநுபவத்தையும் அங்குப்போய் அநுபவிக்கும் முக்திஸாம்ராஜ்யத்தையும் க்ரமேண கொடுத்தருளுமதைச் சொன்னபடி.

10. த்ரைலோக்யோத்பாதகாச்ச. *ஒன்றியொன்றியுலகம்படைத்தான்* சேதநர்கள் ஒருஜன்மமல்லா வொருஜன்மத்திலாகிலும் ஈடேறவேணுமென்றெண்ணி ஒருநாளும் பின்வாங்காமல் உலகங்களைப்படைக்கும்படியைச் சொன்னபடி.—ஆக இப்படிப்பட்ட காரணங்களாலே [அஜம்] பிறப்பிலியான எம்பெருமானை [ஸ்துதிவிஷயம்] துதிப்பதற்கு போக்யனாக [வ்யாஹரத்] (ஆழ்வார்) அருளிச்செய்தார். [நிந்திதஅந்ய:] இங்ஙனம் எம்பெருமானைத் துதிக்கவில்லாத பிறரை நிந்திப்பதுஞ் செய்தாரென்றபடி. "ஸ்துதிவிஷயதநும்" என்றும் பாடமுண்டு.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சொன்னாவில் வாழ்புலவீர் சோறு கூறைக்காக
மன்னாத மானிடரை வாழ்த்துதலால் — என்னாகும்
என்னுடனே மாதவனை ஏத்துமெனுங்குருகூர்
மன்னருளால் மாறுஞ்சன் மம். (உகூ)

நாவில்	"நாக்கிலே
சொல்	இனிய கவி மொழிகள்
வாழ்	விளங்கப் பெற்ற
புலவீர்	பண்டிதர்களே !
சோறு கூறைக்கு ஆக	சோற்றுக்கும் துணிக்குமாக
மன்னாத மானிடரை	நிலை நின்று ஜீவித்திருக்க மாட்டாத மனிசர்களை
வாழ்த்துதலால்	கவிபாடிப் புகழ்வதனால்
என் ஆகும்	என்ன பயனுண்டாகும் ? (ஒன்றுமில்லையாம் :)
என்னுடனே	என்னுடன் கூடி
மாதவனை	திருமாலை
ஏத்தும்	ஏத்துங்கள் "
எனும்	என்று உபதேசித்த
குருகூர் மன்	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய
அருளால்	கிருபையினாலே
சன்மம் மாறும்	பிறவித்துயர் தொலையும்.

வாக்கிலே கவனசாதுரிய முடையவர்களாய், அந்தக் கவித்திறமையை பகவத்விஷயத்திலே செலுத்தாமல் அல்பாயுஸ்ஸுக்களான நீச மானிசர்களிடத்திலே செலுத்தி * காசுங்கறையுடைக்கூறைக்குமங்கோர் கற்றைக்குமாசையினால் அவர்களைத் துதித்துக்கொண்டுதிரியும் புலவர்களை விளித்து, அந்தோ! நீங்கள் இங்ஙனம் பயனற்றசெயலைச் செய்துதிரிவதுதவிர்ந்து என்னோடேகூட எம்பெருமானைத் துதித்து வாழ்ந்து போங்கள் என்று ஆழ்வார் உபதேசித்தருளினபடியைக்கூறி, அப்படிப்பட்ட ஆழ்வாருடைய திருவருளுக்கு நாம் இலக்காகப்பெற்றோமாகில் நம்முடைய பிறவித்துயர் நீங்குமென்று அருளிச்செய்தாராயிற்று. .... (உகூ).

ஜீயர் திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(கருத்து) பிறர்களைத்துதித்துக் கவிபாடி அதனால் பேறுபெறவிரும்பிய சில புலவர்களைப்பார்த்து அவர்கள் படும் அநர்த்தத்தை விமர்சித்தவாறே ஆழ்வார் தம்முடைய பகவத்விரஹவ்யஸநம் ஒருவாறு தணியப்பெற்றவராய், பரமகிருபையினாலே அவர்களை நோக்கிஉபதேசம் செய்யப்புகுந்து நரஸ்துதியில் நின்றும் அவர்களை மீட்கப்பார்த்தும் அவர்கள் மீளக்காணமையாலே, அவர்களைத் திருத்தப்பாடுபடுவதில் நின்றும்கையொழிந்து, அவர்களைப்போலே தாம் நரஸ்துதியில் ஒருப்பட்டு அநர்த்தப்படாமைக்கு உகந்துபேசித் தலைக்கட்டினாரென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—பத்தாந் திருவாய்மொழி, சன்மம்பலபலசெய்து.

அவதாரிகை :—கீழ்த் திருவாய்மொழியில்—துதிப்பதற்கு வாய்த்த ஸ்வரூப ரூப குணவிபூதி சேஷ்டிதங்களையுடையனான எம்பெருமானைத் துதிப்பது தவிர்ந்து க்ஷுத்ரநரஸ்துதிகளிலே வாய்செலுத்தித் திரியுமவர்களை உபதேசத்தாலே திருத்தப்பார்த்தும் அவர்கள் திருந்தக்காணாமையாலே, இவர்களைப் போலே நாமும் நரஸ்துதியிலே யிழிந்து அநர்த்தப்படாதிருக்கப் பெற்றோமே! என்று தம் உகப்போடே தலைக்கட்டினார். அந்த உகப்பே விசேஷித்துப் பெருகுகிறது இத்திருவாய்மொழியில். நரஸ்துதிகளில் செல்லப்பெறாதமாத்திரமேயன்றியே எம்பெருமான் விஷயத்திலே பரிபூர்ணமாக அவகாஹித்துத் தாம் அநுபவிக்கப்பெற்ற பரிசைப்பரக்கப்பேசி, குறைமுட்டு பரிவு இடர் துயர் துன்பம் அல்லல் துக்கம் தளர்வு கேடென்றும் தமக்கில்லாமையை உள்குழைந்து பேசுகிறார். ... ... (*)

சன்மம்பலபலசெய்துவெளிப்பட்டுச் சங்கொடுசக்கரம்வில் *
ஒண்மையுடையவுலக்கை ஒள்வாள்தண்டுகொண்டுபுள்ளூர்ந்து * உலகில்
வன்மையுடையவரக்கர் அசுரரைமாளப்படைபொருத *
நன்மையுடையவன்சீர்பரவப்பெற்ற நானோர்குறைவிலனே. (க)

பல பல	பல பல வகைப்பட்ட
சன்மம்	அவதாரங்களை
செய்து	பண்ணி
வெளிப்பட்டு	ஸம்ஸாரிகளின் கண்ணுக்கும் புலப்பட்டு
சங்கொடு சக்கரம்	சங்கு சக்கரங்களையும்
வில்	சார்ங்கத்தையும்
ஒண்மை உடைய	ஒளி பொருந்திய
உலக்கை	முஸலத்தையும்
ஒள் வாள்	அழகிய நந்தக வாளையும்
தண்டு	கௌமோதகி யென்னும் கதையையும்
கொண்டு	ஏந்திக்கொண்டு
புள் ஊர்ந்து	பக்ஷிராஜனை வாஹனமாகக் கொண்டு
உலகில்	உலகத்திலுள்ள
வன்மை உடைய	கடினமான மனமுடைய
அரக்கர்	அரக்கர்களும்
அசுரர்	அசுரர்களும்
மாள	மாண்டொழியும்படி
படை பொருத	ஆயுதப்பிரயோகம் பண்ணிப் போர்செய்து தொலைத்த
நன்மை உடையவன்	நன்மைமிக்கவனான எம்பெருமானுடைய
சீர்	திருக்குணங்களை
பரவ பெற்ற நான்	துதிக்கப்பெற்ற அடியேன்
ஓர் குறைவு இலன்	ஒரு குறையுமுடையேனல்லேன்.

* * * [சன்மம் பலபல] திவ்யாயுதங்களோடே எம்பெருமான்வந்து அவதரிக்கும்படியை அநுஸந்திக்கப்பெற்றவெனக்கு ஒருகுறையுமில்லையென்கிறார். சன்மம் பல பல செய்து—'பிறப்பிலி' என்று பேர்பெற்றிருக்கிற தான் கர்மவஶ்யனன்றியே க்ருபாவஶ்யனாய்ப் பல பல யோனிகளிலும் பிறக்கிறபடியை அநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார். கர்மவஶ்யர்களான நம்முடைய பிறவிகட்கு எல்லைகாணமுடியும்; அவனுடைய அவதாரங்கட்கு எல்லை காணப்போகாது; ஏனெனில், கருமத்திற்கு அவதியுண்டு; அநுக்ரஹத்திற்கு அது கிடையாதே: ஆதலால் "சன்மம் பலபல" என்றார்.

"நவக்ஷுஷா வஶ்யதி கஶ்சநைநம்" என்றும் "நஜாம்ஸவக்ஷுர்விவீக்ஷதேதம்" என்றும் "என்றேனும் கட்கண்ணாற் காணாத அவ்வுரு" என்றுஞ் சொல்லுகிறபடியே புலப்படாத திருவுருவத்தைப் புலப்படுத்துகிறபடியை அநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையில்லை யென்கிறார் வெளிப்பட்டு என்பதனால்.

[சங்கோடு சக்கரமித்யாதி.] ஒரு கற்பகத்தருபணைத்துக் கணுத்தோறும் அரும்பினாற்போலே யுள்ள திவ்யாயுதச் சேர்த்தியழகை யநுஸந்திக்கின்றவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார். ஒரு தேசவிசேஷத்திலே நித்யஸூரிகளே அநுபவிக்கக் கடவதான இவ்வழகை இங்குள்ளாரும் அநுபவிக்கும்படி தோளிலே யமர்ந்து ஆங்காங்குத் திரிபவன் பெரியதிருவடியாதலால் "காய்சினப் பறவையூர்ந்து பொன்மலையின் மீமிசைக் கார்முகில்போல்" என்று அநுபவிக்க அழகியதான அந்தச் சேர்த்தியைப் புள்ளூர்ந்து என்பதனால் அநுபவிக்கிறார்.

அழகுக்கு இலக்காய் வாழமாட்டாதே அம்புக்கு இலக்காய் முடிந்து போவதற்கென்று இட்டுப்பிறந்த அஸுரராக்ஷஸர்களை ஆயுதங்களாலே முடித்தருளும் வீரத்தை அநுஸந்திக்கிறவெனக்கு ஒரு குறையுமில்லையென்கிறார் பின்னடிகளால். வன்மையுடைய=எம்பெருமானது வடிவழகுகண்டும் நெஞ்சு நெகிழமாட்டாத கடுநெஞ்சினர் என்றபடி. மாளப்படைபொருத நன்மையுடையவன்=பிறரைக்கொல்வது தீமையாயினும் 'ஆச்ரிதவிரோதிகள்' என்னுங்காரணத்தினால் அரக்கர்களையும் அசுரர்களையுங்கொல்வது நன்மையே யென்று காட்டுகிறபடி. ஸங்கல்ப மாத்திரத்தினால் ப்ரபஞ்சஸ்ருஷ்டி முதலிய ஸகலகாரியங்களையும் நிர்வஹிக்கவல்லவனான தான் அந்த ஸங்கல்பத்தைக் கொண்டே அரக்கரசுரர்களையும் மாளச்செய்யலாமாயிருக்க, அங்ஙனம் செய்யாது அதற்காகத்தனியே ஒரு பயணமெடுத்துவிட்டு [அவதரித்து]ச் செய்ததை நன்மையாகக் கூறுகிறாராகவுமாம். "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச்செய்வர்" என்பது ஸ்ரீவசனபூஷணம். பாகவதர்கள் பக்கலிலே எம்பெருமான் வைத்திருக்கும் ஆசாபாசம் வியக்கத்தக்கதென்று தேறினபடி.

சீர்பரவப்பெற்ற நான் ஓர் குறைவிலன் = ஆஸுரப்ரக்ருதிகளாய்ப்பிறந்து முடிந்து போவாரும், மனிசர்களாயே பிறந்துவைத்து நரஸ்துதிமுதலியவற்றில்

இழிந்து ஸ்வரூபநாசம் பெற்றுப்போவாருமான இவ்வுலகில் நாமொருவனே குறையற்றவன் என்று தம்முடைய நன்மைக்குத் தாம் உகந்து பேசினாராயிற்று. .... (க)

குறைவில்தடங்கடல்கோளரவேறித் தன்கோலச்சேந்தாமரைக்கண் *
உறைபவன்போலவோர்யோகுபுணர்ந்த ஒளிமணிவண்ணன்கண்ணன் *
கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி அசுரரைக்காய்ந்தவம்மான் *
நிறைபுகழேத்தியும்பாடியுமாடியும் யானொருமுட்டிலனே. (உ)

குறைவு இல்	குறையற்ற [பரிபூர்ணமான]	கறை அணி மூக்கு உடை	கறையை அணிந்த மூக்குடையவனான
தட கடல்	விசாலமான திருப்பாற்கடலிலே	புள்ளை	பக்ஷி ராஜனை
கோள் அரவு ஏறி	மிடுக்கனான திருவனந்தாழ்வான் மீது ஏறி	கடாவி	நடத்தி
தன்	தன்னுடைய	அசுரரை காய்ந்த	அசுரர்களை முடித்தவனுமான
கோலம்	அழகிய	அம்மான்	எம்பெருமானுடைய
செம் தாமரை கண்	செந்தாமரை போன்ற திருக்கண்கள்	நிறை புகழ்	நிறைந்த புகழை
உறைபவன் போல	துயிலப் பெற்றவன் போல	யான்	நான்
ஓர் யோகு புணர்ந்த	யோக நித்திரை செய்தருள்கின்ற	ஏத்தியும்	துதித்தும்
ஒளி மணி வண்ணன்	அழகிய நீலமணி போன்ற நிறத்தனும்	பாடியும்	இசையில் அமைத்துப் பாடியும்
கண்ணன்	கண்ணனாய்த் திருவவதரித்தவனும்	ஆடியும்	கூத்தாடியும்
		ஒரு முட்டு இலன்	(எம்பெருமானை யனுபவிப்பதில்) ஒரு தடையு முடையேனல்லேன்.

* * * [குறைவில்தடங்கடல்.] இந்நிலத்தில் வந்து திருவவதாரம் பண்ணுதற்கு அடியாகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளிப் பிறகு வஸுதேவர் திருமகனாய் வந்து பிறந்தருளி ஆச்ரிதவிரோதிகளைத் தொலைத்தருளின கண்ணபிரானுடைய கீர்த்தியைப் பலபடியும் அநுபவிக்கப்பெற்றநான் மேன்மேலும் இங்ஙனம் அனுபவிப்பதில் யாதொருதடையு முடையேனல்லேனென்கிறார்.

குறைவில் தடங்கடல்= கீழே தமக்குக்கூறிய குறைவில்லாமையை இங்குத் தடங்கடலுக்குங் கூறுகின்றார், தடங்கடலும் நானுமே குறைவில்லாதவர்கள் என்கிற கருத்துப் போலுமாழ்வார்க்கு. "மாலுங் கருங்கடலே! என்னோற்றாய், வையகமுண்டாலிலைத் துயின்றவாழியான், கோலக் கருமேனிச் செங்கண்மால் கண்படையுள், என்றுந் திருமேனி நீ தீண்டப்பெற்று" என்ற பொய்கையார் பாசுரத்தின்படியே கடலின் குறைவில்லாமை காண்க. "தன் தாளுந் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி—கிடந்தான்" என்கிறபடியே எம்பெருமான் தனது திவ்யாவயவங்களை ஸங்கோசமறப்பரப்பிக் கொண்டு கண்வளர்ந்தருளுகைக்குப் பர்யாப்தமான இடமுடையகடல் என்பார் 'தடங்கடல்' என்கிறார். அப்படிப்பட்ட கடலிலே, மிடுக்குடைய திருவனந்

தாழ்வான்மீது திருக்கண்வளர்பவன்போல உலகங்களை ரக்ஷித்தருளும்படியைச் சிந்தைசெய்து கொண்டிருக்கின்றானாயிற்று.

“ ஓர் யோகுபுணர்ந்த வொளிமணி வண்ணன் கண்ணன் ” என்ற சொற்சேர்த்தியழகை நோக்கி ஈட்டில் நம்பிள்ளையருளிச்செய்த ஸ்ரீஸூக்திகள் இன்சுவையே வடிவெடுத்தவை காண்மின் ;—“ ஸகலப்ராணிகளும் நம்மைக்கிட்டிக் கரைமரஞ் சேர்ந்ததாம் விரகு ஏதோவென்று இவற்றினுடைய ரக்ஷணோபாய சிந்தை பண்ணினால் அவ்வநுஸந்தானம் பொறுமையாலே நாக்கு உலரும்; அப்போது கற்பூரநிகரம் வாயிலேயிடுவாரைப்போலே * ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் * என்று தன்னைத்தானே அநுஸந்தியாநிற்கும்: இப்படி அநுஸந்தித்தவாறே ரக்ஷணோபாயம் தோற்றுமே (ஒளிமணிவண்ணன் கண்ணன்) ரக்ஷ்யவர்க்கத்தைத் தன்வடிவழகாலே கரைமரஞ் சேர்க்கைக்காக க்ருஷ்ணனாய் வந்தவதரித்தவன்” என்பன ஈட்டுஸ்ரீஸூக்திகள். உலகத்தை ரக்ஷிக்கச் சிந்தனை செய்தவளவில், ‘அழகிய வுருவத்துடனே உலகிற் சென்று அவதரித்து சேதனர்களை ஈடுபடுத்துவதே நலம்’ என்று தேறி அப்படியே கண்ணனாக வந்து பிறந்தானென்றவாறு.

இந்நிலத்தில் அவதரித்து ஆச்ரிதவிரோதிகளைத் தொலைத்தபடி சொல்லுகிறது மூன்றாமடி. பெரியதிருவடியின்மீது ஏறிச் சென்று பகைவரைப் பாற்றின வரலாறுகள் பலவுண்டு: “பொருந்தாவரக்கர் வெஞ்சமத்துப் பொன்ற வன்று புள்ளூர்ந்து, பெருந்தோள் மாலிதலைபுரளப் பேர்ந்தவரக்கர் தென்னிலங்கை, இருந்தார்தம்மையுடன் கொண்டு அங்கெழிலார் பிலத்துப் புக்கொளிப்பக், கருந்தாள் சிலைகைக்கொண்டான்” (பெரிய திருமொழி 8-6-2) என்பது முதலிய பாசுரங்கள் காண்க.

கருடன் தனது மூக்கினாலேயே பகைவரைக் குத்திக் கொன்று, அதனால் மூக்கிலே கறையேறிக்கிடக்கும்: அக்கறைகழுவ அவகாசமில்லாமல் அதுவே ஆபரணமாயிருக்குமாம் மூக்குக்கு; அதனைப்பற்றியே “ கறையணி மூக்குடைப்புள் ” என்றார். மற்றொருவகையாகவும் கூறுவதுண்டு; கருடன முட்டையாயிருக்கும் பருவத்திலே புத்திரனுடைய முகத்தைக்காணவேணுமென்கிற விரைவினால் தாய் குத்திப்பார்க்கையில் அப்போது மூக்கிலேபட்டு ஓரடையாளம் பிறந்து அது எம்பெருமானுக்கு ஸ்ரீவத்ஸம்போலே மறுவாக ஆயிற்றென்றும், அது தோன்றவே ‘ கறையணி மூக்குடைப்புள் ’ என்றது என்றும் அருளிச் செய்வர்.

இப்படியாக எம்பெருமான் அடியாரை ரக்ஷித்துப்படைத்த பெரும் புகழ்களைத் துதிக்கும் இசையிலே வைத்துப்பாடியும் ஆடியும் திரிகிற நான் இடைவிடாத பகவதநுபவத்தையுடையேன் என்றாயிற்று. .... (௨)

முட்டில்பல்போகத்தொருதனிநாயகன் மூவுலகுக்குரிய *
கட்டியைத்தேனையமுதை நன்பாலைக்கனியைக்கரும்புதன்னை *
மட்டவிழ்தண்ணந்துழாய்முடியானைவணங்கி அவன்திறத்துப்
பட்டபின்னை * இறையாகிலும் யானென்மனத்துப்பரிவிலனே. (௩)

முட்டு இல்	இடையூறொன்று மில்லாத
பல் போகத்து	பலவகையான போகங்களை யுடையவனும்
ஒரு தனி நாயகன்	ஒப்பற்ற தலைவனும்
மூ உலகுக்கு உரிய	மூவுலகத்தவர்கட்கும் பொதுவிலே போக்யமான
கட்டியை	கருப்பங்கட்டி போன்றவனும்
தேனை	தேன் போன்றவனும்
அமுதை	அமிருதம் போன்றவனும்
நல் பாலை	நல்ல பால்போன்றவனும்
கனியை	கனி போன்றவனும்
கரும்பு தன்னை	கரும்பு போன்றவனுமாய்
மட்டு அவிழ்	மது பெருகப்பெற்ற
தண் அம் துழாய் முடியானை	குளிர்ந்தழகிய திருத்துழாய மாலையைத் திருமுடியிலணிந்தவனுமான எம்பெருமானை
வணங்கி	நமஸ்கரித்து
அவன் திறத்து	அவன்விஷயத்திலே
பட்ட பின்னை	ஆட்பட்டேனாதலால்
யான்	இப்படிப்பட்ட அடியேன்
இறை ஆகிலும்	சிறிதளவும்
என் மனத்து	என் மனத்தில்
பரிவு இலன்	பீடையையுடையே னல்லேன்.

* * * [முட்டில் பல் போகத்து.] எம்பெருமானுடைய போக்யதையை அநுஸந்தித்து அவனுக்கு அடிமை செய்வதிலேயே ஊன்றியிருக்குமெனக்கு ஒரு துக்கமுமில்லை யென்கிறார்.

நாமும், நம்மில் மேற்பட்டவர்களான தேவர்களும், அவர்கட்கும் தலைவரான இந்திரன் பிரமனீசன் முதலாயினோரும் பலவகைப்பட்ட போகங்களை அநுபவிப்பது உண்டாயினும் ஒவ்வொருவருடைய போகமும் அளவுபட்டதாயும், ஒரு காலத்திலே அழியக் கூடியதாயுமிருக்குமத்தனையல்லது ஸ்திரமாய் அளவு கடந்ததாயிருக்கும் போகம் எம்பெருமானொருவனுக்கேயாகுமென்பது விளங்க "முட்டில் பல் போகத்து" என்றார். "யாங்கடவுளென்றிருக்கு மெவ்வுலகிற் கடவுளர்க்கும் ஆங்கடவுள் நீ யென்றால் அஃதுனக்கு வியப்பாமோ?" (திருவரங்கக்கலம்பகம்—௧.) என்றபடி ஈச்வராபிமானிகளெல்லார்க்குள்ளும் தனி நாயகன் ஸ்ரீமந்நாராயணனேயாவன் என்பது தோன்ற "ஒரு தனிநாயகன்" என்றார். 'மூவுலகுக்குரிய' என்பது தனிநாயகனுக்கு அடைமொழியாகும். 'மூவுலகுக்குரிய கட்டியை' என்று மேலோடே அந்வயித்தலுமுண்டு. ஒவ்வொரு உலகத்தவர் ஒவ்வொன்றை போக்யவஸ்துவாகக் கொண்டவராயினும் ஸர்வஸாதாரண போக்யதை எம்பெருமானொருவனுக்கேயாகும். இரண்டாமடி முழுவதாலும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்திலுள்ள போக்யதை பேசப்பட்டது. மூன்றாமடியில் "மட்டவிழ்தண்ணந்துழாய் முடியானை" என்பதனால் திவ்யமங்கள விக்ரஹத்தின் போக்யதை அநுபவிக்கப்பட்டது. கட்டியை என்று தொடங்கி (கட்டி, தேன், அமுது, பால், கனி, கரும்பு என்று) ஆறு சுவைப்பொருள்களைக் கூறியது ஆழ்வார்தமக்கு எம்பெருமானே அறுசுவையடிசில் என்று காட்டினபடியாம்.

"ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்தீபவதி" என்று உபநிஷத்திற் கூறியபடியே ஒரு தேசவிசேஷத்திலே சென்று பெறவேண்டிய அநுபவம் எனக்கு

இந்நிலத்திலேயே கிடைத்து விட்டதனால் ஒரு குறையுமுடையேனல்லேன் என்றாராயிற்று. .... (௩)

பரிவின்றிவாணனைக்காத்துமென்று அன்றுபடையோடும்வந்தெதிர்ந்த *
திரிபுரம்செற்றவனும்மகனும் பின்னுமங்கியும்போர்தொலைய *
பொருசிறைப்புள்ளைக்கடாவியமாயனை ஆயனைப்பொற்சக்கரத்து
அரியினை * அச்சுதனைப்பற்றி யானிறையேனுமிடரிலனே. (ச)

அன்று	முன்பொருகாலத்தில்,	பொரு சிறை புள்ளை கடாவிய	பொருகின்ற சிறகையுடைய பக்ஷிராஜனை நடத்திய
வாணனை	பாணாசுரனை	மாயனை	ஆச்சர்ய சக்தியுக்தனும்
பரிவு இன்றி	வருத்தமின்றியே	ஆயனை	கோபாலக்ருஷ்ணனாய் அவதரித்தவனும்
காத்தும் என்று	காக்கக்கடவோம்' என்று அபிமானித்து	பொன் சக்கரத்து	அழகிய திருவாழியையுடையவனும் கொண்டு
படையொடும்	ஆயுதங்களோடுகூட	அரியினை	விரோதிகளை அழியச் செய்பவனும்
வந்து எதிர்ந்த	வந்து எதிரிட்ட	அச்சுதனை	அடியார்களைக் கைவிடாதவனுமான எம்பெருமானை
திரிபுரம் செற்றவனும்	த்ரிபுரதஹநம் செய்தவனான சிவபிரானும்	பற்றி	அடைந்து
மகனும்	அவன்மகனான ஆறுமுகனும்	யான்	அடியேன்
பின்னும்	அதற்குமேலே	இறையேனும்	சிறிதளவும்
அங்கியும்	அக்நியும்	இடர் இலன்	இடைஞ்சலுடையேனல்லேன்.
போர்	போர்க்களத்திலே		
தொலைய	பங்கமடையும்படி,		

* * * [பரிவின்றி.] தேவதாந்தரங்களைப் பற்றினவர்களுக்கு அவர்கள் ரக்ஷக ரல்லர் என்பதையும், தன்னைப் பற்றினவர்களைத் தான் கைவிடுவதில்லையென் பதையும் நன்கு காட்டிக்கொடுத்த எம்பெருமானைப் பற்றினவெனக்கு ஒரு குறையுமில்லை யென்கிறார்.

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனக் கண்டு அவனிடத்தில் மிகுந்த காதல் கொண்டவளாய், தன் உயிர்த்தோழி யான சித்திரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப் பெறுவதற்கு உபாயம் செய்ய வேண்டும்' என்று அத்தோழியையே வேண்ட, அவள் தன் யோகஸித்தியின் மகிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டுவந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களையநுபவித்துவர, இச் செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப்பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினால் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக்காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்த

போது, நாரதமுனியால், நடந்தவரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீகிருஷ்ணபக வான் பெரிய திருவடியை நினைத்தருளி உடனே வந்து நின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானாரோடுகூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் சமீபத்திற் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வர தேவதை மூன்றுகால்களும் மூன்றுதலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு போர்புரிய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி அதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரர்களும் வாணனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்தவர்களுமான அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ் செய்து பாணாஸுரனோடு போர் செய்யத்தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவ பெருமானும் ஸுப்ரம்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவபிரான் ஒன்றுஞ்செய்யமாட்டாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்துபோம் படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் அநேகமாயிரஞ் சூரியர்க்குச் சமானமான தனது சக்கராயுதத்தையெடுத்துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாகவிருக்கையில், பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத்தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம் புரிவிக்க, அதன்பின் மீண்டுவந்தனன்—என்பது இப்பாசுரத்திற் குறித்த வரலாறு.

திரிபுரஞ் செற்றவனும் என்றதிலடங்கிய வரலாறு வருமாறு:—முற்காலத்தில் தாரகாசுரனுடைய புத்திரர்களாகிய வித்யுந்மாலி தாரகாக்ஷன் கமலாக்ஷன் என்னும் மூவரும் மிக்க தவஞ்செய்து பிரமனிடம் பெருவரம் பெற்று, வானத்துப்பறந்து செல்லுந் தன்மைவாய்ந்த மூன்று பட்டணங்களையடைந்து மற்றும்பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்தவிடங்களிற் பறந்துசென்று பல விடங்களின்மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வருகையில், அத்துன்பத்தைப் பொறுக்கமாட்டாது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் சிவபெருமான் பூமியைத் தேராகவும் சந்திர ஸூர்யர்களைத் தேர்ச்சக்கரங்களாகவும் நான்கு வேதங்களை நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் மஹாமேருவை வில்லாகவும் ஆதிசேஷனை வில்நாணியாகவுங் கொள்ள, வாயுவாகிய சிறகமைந்த அக்னியை முனையாகவுடைய அம்பின் ஸ்தானத்திலே விஷ்ணு நிற்க, இவ்வளவு அமைப்புடனே யுத்தஸந்நத்தனாய்ச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து, அச்சிரிப்பில் நின்று உண்டான நெருப்பினால் அவ்வசுரர்களை அந்நகரங்களுடனே எரித்திட்டனன்.

இந்த த்ரிபுரஸம்ஹாரஞ் செய்தது சிவனேயாகிலும் இது நிறைவேறியதற்கு முக்கியகாரணம் திருமாலே யென்க. மஹாபாரதத்தில் கர்ணபருவத்தில் இருபத்தினாலாமத்தியாயம் முதலாக நான்கு அத்தியாயங்களில் இவ்வரலாறு விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அங்கு "चिन्तयित्वा हरिं विष्णुमव्ययं यज्ञवाहनम्। शरं सङ्कल्पयाञ्चक्रे विश्वकर्मा महामनाः॥" [சிந்தயித்வா ஹரிம் விஷ்ணுமவ்யயம் யஜ்ஞவாஹநம், சரம் ஸங்கல்பயாஞ்சக்ரே விச்வகர்மா மஹாமநா:] என்றும், "विष्णुरात्मा भगवतो भवस्यामिततेजसः। तस्माद्धनुर्ज्यासंस्पर्शं स विषेहे शरस्य वै॥" [விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ:, தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்சம் ஸ விஷேஹே சரஸ்ய வை] என்றுமுள்ள ச்லோகங்கள் காண்க. எம்பெருமான் ருத்ரமூர்த்திக்கு அந்தராத்மாவாக இருந்ததனாலும் அம்பாக அமைந்ததனாலும் இக்காரியம் எளிதாகக் கைகூடிற்றென்கை. கீழே முதற்பத்தில் முதற்றிருவாய் மொழியில் எட்டாவது பாசுரத்தில் "புரமொரு மூன்றெரித்து" என்று த்ரிபுரதஹனத்தை எம்பெருமானுடைய காரியமாகவே ஆழ்வாரருளிச் செய்ததும் இதுபற்றியே.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின் ;—"கடல் கடைகிறபோது எட்டுவடிவு கொண்டு நின்று கடைந்தாப்போலே த்ரிபுரதஹந ஸமயத்திலே வில்லுக்குமிடுக்காயும் நாணிக்குத் திண்மையாயும் அம்புக்குக் கூர்மையாயும் தனக்கு அந்தராத்மாவாயும் எதிரிகளைத் தலை சாயும்படி பண்ணி த்ரிபுரத்தையழித்துக் கொடுத்தான். அத்தையறியாதே அஜ்ஞானவர்கள் இத்தை அவன் தலையிலே வைத்துக் கவிபாட இத்தைத் தானுங்கேட்டு, மெய்யிறேயென்று மயங்கி 'அது செய்த நமக்கு இவனை வெல்லத்தட்டேன்?' என்று வந்து எதிரிட்டானாயிற்று.—இத்தால் சொல்லிற்றாயிற்று ருத்ரன் தன்னை அபாச்ரயமாகப் பற்றினாரை ஆபத்து வந்தவாறே காட்டிக்கொடுத்து ஓடுமென்னுமிடமும், ஸர்வேச்வரன் தன்னைப்பற்றினாரை எல்லாவளவிலும் ரக்ஷிக்குமென்னுமிடமும்."

"பற்றி யான்இறையேனுமிடரிலனே" என்றவிடத்து ஈடு: — பேரன் என்றிருக்கையாலே அநிருத்தாழ்வானுக்கு நாலுநாள் சிறையிலிருக்க வேண்டிற்று; அடியேனென்று பற்றினவெனக்கு அதுவும் வேண்டிற்றில்லை." (௪)

இடரின்றியே யொருநாளொருபோழ்தில் எல்லாவுலகும்கழிய *
படர்புகழ்ப்பார்த்தனும்வைதிகனும் உடனேறத்திண்டேர்கடவி *
சுடரொளியாய்நின்றதன்னுடைச்சோதியில் வைதிகன்பிள்ளைகளை *
உடலொடும்கொண்டுகொடுத்தவனைப்பற்றி ஒன்றும்துயரிலனே. (௬)

ஒரு நாள்	ஒருநாளிலே	படர் புகழ் பார்த்தனும்	பரம்பினபுகழையுடைய அர்ஜுநனும்
ஒரு போழ்தில்	ஓர் அவஸரத்திலே	வைதிகனும்	வைதிகப்பிராமணனும்
எல்லா உலகும் கழிய	எல்லா வுலகங்களுக்கும் அப்பால் போம்படியாக,	உடன் ஏற	கூடவேஏறிவரும்படி

இடர் இன்றியே	இடைஞ்சல் ஒன்றுமின்றி
திண் தேர் கடவி	திடமான திருத்தேரைச் செலுத்தி,
சுடர் ஒளி ஆய் நின்ற	மிகவும் சிறந்த தேஜோமயமாயிராநின்ற
தன்னுடை சோதியில்	தன்னுடையதாய், பரஞ்சோதியெனப்படுமதான திருநாட்டிலே
வைதிகன் பிள்ளைகளை	அந்த வைதிகனுடைய பிள்ளைகள் நால்வரையும்
உடலொடும்	அவ்வுடம்போடே
கொண்டு கொடுத்தவனை	மீட்டுக்கொணர்ந்து கொடுத்தருளின பெருமானை
பற்றி	அடைந்து (அதனால்)
ஒன்றும் துயர் இலன்	சிறிதும் துயரமுடையேனல்லேன்.

* * * [இடரின்றியே.] வைதிகன் பிள்ளைகளைக் கொணர்ந்து கொடுத்த அதிமாநுஷ சேஷ்டிதத்தை அநுஸந்தித்து, இங்ஙனே அரியன செய்தும் அடியார்களைக் காத்தருளவல்ல பெருமானைப்பற்றின வெனக்கு யாதொரு துயருமில்லை யென்கிறார்.

ஒரு பிராமணனுக்கு முறையே பிறந்த மூன்று பிள்ளைகள், பிறந்த அப்பொழுதே பெற்றவர்களுமுட்பட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்னவிடத்திலே போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது போய்விடுகையாலே, நான்காம் பிள்ளையை மனைவி ப்ரஸவிக்கப் போகிறவளவிலே அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளையையாயினும் தேவரீர் பாதுகாத்துத் தந்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, கிருஷ்ணன் 'அப்படியே செய்கிறேன்' என்று அநுமதி செய்த பின்பு, ஒரு யாகத்திலே தீக்ஷிதனாயிருந்த கண்ணபிரான் எழுந்தருளக் கூடாதென்பதுபற்றி அர்ஜுநன் நானே போய் ரக்ஷிக்கிறேனென்று பிரதிஜ்ஞை பண்ணி, பிராமணனையுங் கூட்டிக்கொண்டு போய், பிரஸவிக்கிற கிருஹத்தைச்சுற்றும் காற்றுமுட்படப்பிரவேசிக்க வொண்ணாதபடி சரக்கூடங்கட்டிக் காத்துக்கொண்டு நிற்கையில், பிறந்த பிள்ளையும் வழக்கப்படியே பிறந்தவளவிற் காணவொண்ணாது போய்விடவே, பிராமணன் வந்து அர்ஜுநனை மறித்து 'க்ஷத்ரியாதமா! உன்னாலன்றோ என்பிள்ளை போம்படியாயிற்று; கிருஷ்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்' என்று நிந்தித்துக் கிருஷ்ணன் பக்கலிலே இழுத்துக்கொண்டுவர, கண்ணபிரான் கண்டு புன்சிரிப்புக்கொண்டு 'அவனை விடு, உனக்குப் பிள்ளையை நான் கொணர்ந்து தருகிறேன்' என்றருளிச்செய்து, பிராமணனையும் அர்ஜுநனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அர்ஜுநனைத் தேர்செலுத்தச் சொல்லி, அத்தேர்க்கும் அவர்கட்கும் திவ்யசக்தியைத் தனது ஸங்கல்பத்தாற் கல்பித்து இவ்வண்டத்துக்கு வெளியே நெடுந்தூரமளவுங் கொண்டுபோய், அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தேஜோரூபமான பரமபதத்திலே தன்னிலமாகையாலே தானே போய்ப்புக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் ஸ்வாதந்திரியம் காட்டுகைக்காகவும் கண்ணபிரானது திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண்டு களிக்கைக்காகவும் அழைப்பித்துவைத்த அந்தப்பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் பூர்வரூபத்தில் ஒன்றுங்குலையாமற் கொண்டுவந்து கொடுத்தருளினனென்ற வரலாறு இப்பாசுரத்திலடங்கியது.

மீளாவுலகமாகிய பரமபதத்திற் சென்றவர்கள் மீண்டனரென்பது எங்ஙனே கூடுமென்கிற சங்கைக்குப் பெரியோர்கள் இங்குப் பலிதமாக ஸமாதானங் கூறுவர்கள்: அர்ச்சிராதிமார்க்கத்தாற் சென்றவர்கள் திரும்பிவருதலில்லையென்றும், அதுவும் அவர்களுடைய சுதந்திரமான இச்சையினால் இல்லையென்றும் இங்கு முக்கியமாக வுணர்க.

"**உடலோடுங் கொண்டு கொடுத்தவனை**" என்றவிடத்தை பட்டர் உபந்யஸித்தருளும்போது "பூசின மஞ்சளும் உடுத்தின பட்டும் இட்ட சவடிப்பூணூலும் இட்ட சாதுப்பணி"களுமான வொப்பனையில் ஒன்றுங் குறையாதபடி கொண்டுவந்து கொடுத்தவனென்றருளிச் செய்தாராம்: அது கேட்டவர்கள் "இப்பிள்ளைகள் பிறந்தக்ஷணத்திலேயே கொண்டுபோகப்பட்டார்களாகவன்றோ சொல்லுகிறது; அப்போது இவையெல்லாம் இருக்க ப்ரஸக்தி யில்லையே" என்று பட்டரிடம் விஜ்ஞாபிக்க, "ரிஷிபுத்திரர்களாகையாலே பிறக்கிறபோதே அவற்றோடே பிறப்பர்காணும்" என்றருளிச் செய்தாராம். ரஸோக்தி யிருந்தபடி. .... (௫)

துயரில்சுடரொளிதன்னுடைச்சோதி நின்றவண்ணம்நிற்கவே *
துயரில்மலியும்மனிசர்பிறவியில் தோன்றிக்கண்காணவந்து *
துயரங்கள்செய்துதன்தெய்வநிலையுலகில் புகவுய்க்குமம்மான் *
துயரமில்சீர்க்கண்ணன்மாயன்புகழ்துற்ற யானோர்துன்பமிலனே. (௬)

துயர் இல்	துன்பமற்றதும்
சுடர் ஒளி	சிறந்த தேஜோரூபமுமான
தன்னுடை சோதி	தன்னுடைய விக்ரஹமானது
நின்ற வண்ணமே நிற்க	அங்கு இருக்கும்படியிலொன்றுங்குறையாமே நிற்கும்படியாக,
துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றி	துக்கத்திலேயழுந்தின மனிதருடைய யோனிகளிலே பிறந்து
கண் காண வந்து	(அனைவரும்) கண்ணாற் காணும்படியாக வந்து
துயரங்கள் செய்து	(அனைவரையும்) ஈடுபடுத்தி
தன் தெய்வம் நிலை	தன்னுடைய அப்ராக்ருத ஸ்வபாவத்தை
உலகில்	இவ்வுலகத்தின் கண்
புக உய்க்கும்	பிரசுரப்படுத்தின
அம்மான்	ஸ்வாமியாய்
துயரம் இல் சீர்	ஹேய குணங்கள் இன்றிக்கே கல்யாண குணமயனாய்
மாயன்	ஆச்சர்ய சக்தியுக்தனான
கண்ணன்	கண்ணபிரானுடைய
புகழ்	கீர்த்திகளை
துற்ற யான்	அநுபவிக்கப்பெற்ற நான்
ஓர் துன்பம் இலன்	ஒரு துன்பமுமுடையேனல்லேன்.

* * * [துயரில் சுடரொளி.] தன்னுடைய அப்ராக்ருதமான திவ்யமங்கள விக்ரஹத்தை இதரஸஜாதீயமாக்கி ஸம்ஸாரிகளின் கட்புலனுக்கு இலக்காக்கி வைத்த கண்ணபிரானுடைய திருக்குணங்களை அநுபவிக்கப் பெற்றவெனக்கு ஒரு துன்பமுமில்லை யென்கிறார்.

எம்பெருமான் மத்ஸ்யகூர்மாதி அவதாரங்களையும் ராமக்ருஷ்ணாதி அவதாரங்களையும் செய்தருளினகாலத்து ஏற்றுக்கொண்ட திருமேனியானது நம்

போன்றவர்களின் உடல்போல மாம்ஸாதிமயமாகத் தோன்றியிருந்தாலும் உண்மையில் அப்படிப்பட்டதன்று; பரமபதத்தில் அப்ராக்ருதமாகவுள்ள திவ்யமங்கள விக்ரஹத்திற்கும் விபவாவதாரங்களில் பரிக்ரஹிக்கப்பட்ட திருமேனிக்கும் சிறிதும் வேற்றுமையில்லை—என்னுமிடம் முன்னடிகளிற் கூறப்பட்டது. கீழும் (3-5-5) "ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த" என்றருளிச் செய்தது நினைக்க. பகவத்கீதையிலும் நான்காமத்யாயத்தில் "ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி— ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி" என்றது காண்க.

"மனிசர்பிறவியில்" என்றதை உபலக்ஷணமாகவுங் கொள்ளலாம்; எந்நின்ற யோனியுமாய்ப் பிறப்பவனாதலால்.

எம்பெருமானார் பெரும்பாலும் இந்தப் பாசுரந்தன்னையே திருவுள்ளத்திற் கொண்டு கீதாபாஷ்ய ப்ரவேசத்தில் "ஸகலமநுஜநயந விஷயதாம் கத:" இத்யாதி ஸ்ரீஸூக்திகளை யருளிச் செய்தாரென்றுணர்க.

துயரங்கள் செய்து= துயரங்களைத் தீர்ப்பதற்காக வந்து அவதரித்திருக்கச் செய்தே 'துயரங்கள் செய்து' என்னலாமோ வென்னில்; இங்கே நம்பிள்ளை யீடு காண்மின்; "அநுகூலரை அழகாலே நோவுபடுத்தியும், ப்ரதிகூலரை ஆயுதத்தாலே நோவுபடுத்தியும்."

உலகில் தன்தேய்வநிலை புகவுய்க்கு மம்மான் = பரமபதத்திலே நடையாடுகின்ற ஸ்வபாவத்தை ஸம்ஸாரிகளுக்குத் தெரிவித்தவன் என்றபடி. ஆது போயும் தேரோட்டியாயிருந்தும் தன்படியைத் தெரிவித்தவன் என்னவுமாம். இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களை நெருங்க அநுபவிக்கப் பெற்ற எனக்கு எவ்வகைத் துன்பமுமில்லை யென்றாராயிற்று.

இற்ற— அற்றிய என்றபடி. .... (௬)

துன்பமுமின்பமுமாகிய செய்வினையாயுலகங்களுமாய் *
இன்பமில்வெந்நரகாகி இனியநல்வான் சுவர்க்கங்களுமாய் *
மன்பல்லுயிர்களுமாகிப் பலபலமாயமயக்குக்களால் *
இன்புறுமிவ்விளையாட்டுடையானைப்பெற்று ஏதுமல்லலிலனே. (௭)

துன்பமும் இன்பமும் ஆகிய	துக்கத்திற்கும் சுகத்திற்கும் காரணமாகக்கூடிய
செய் வினை ஆய்	புண்ய பாபரூப கருமங்களுக்கு நிர்வாஹகனாய்
உலகங்களும் ஆய்	உலகங்களுக்கும் நிர்வாஹகனாய்
இன்பம் இல் வெம் நரகு ஆகி	இன்பமற்ற கொடிய நரகலோகத்திற்கும் நிர்வாஹகனாய்
இனிய நல் வான் சுவர்க்கங்களும் ஆய்	மிகவும் நன்றாய்ச்சிறந்த ஸ்வர்க்க ப்ரதேசங்களுக்கும் நிர்வாஹகனாய்
மன் பல் உயிர்களும் ஆகி	நித்யரான பல பிராணிகளுக்கும் நிர்வாஹகனாய்
பல பல மாயம் மயக்குக்களால்	பலவகைப்பட்ட ப்ரக்ருதி விகாரரூபமான மோஹ விகாரங்களாலே

இன்பு உறும் இ விளையாட்டு உடையானை	ரஸாவஹமான விளையாடல்களையுடையவனை எம்பெருமானை	பெற்று	அநுபவிக்கப் பெற்றதனால்
		ஏதும் அல்லல் இலன்	சிறிதும் துக்கமுடையேனல்லேன்.

* * * [துன்பமுமின்பமுமாகிய.] புண்யபாப ரூபகருமங்களுக்கும், அவற்றைச் சம்பாதிப்பதற்குரிய இடமான லோகங்களுக்கும், அவற்றின் பலன்களை யனுபவிக்குமிடமான லோகங்களுக்கும், அப்பலன்களை அனுபவிக்குமவர்களான ஆன்மாக்களுக்கும் நியாமகனாய் லீலாரஸமநுபவிக்கின்ற எம்பெருமானை யுடையப் பெற்றதனால் ஒருவகையான அல்லலும் எனக்கில்லை யென்கிறார்.

"துன்பமுமின்பமுமாகிய செய்வினை" என்றது—துக்கங்களுக்குக் காரணமாயும் இன்பங்களுக்குக் காரணமாயுமுள்ள செய்வினை என்றபடி. துக்க ஹேதுவான பாபங்களையும், ஸுக ஹேதுவான புண்யங்களையும் சொன்னவாறு. புண்யபாபங்கள் எம்பெருமானிட்டவழக்கு என்றாராயிற்று. யசு ஸுதியம் தகிஹ வுணுவெணுஉருஸ—யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம் அபுண்யமந்யத்" (அதிமாநுஷஸ்தவம்) என்றார் கூரத்தாழ்வான்.

உலகங்களுமாய்= புண்யபாபங்களை ஆர்ஜிக்குமிடங்களும் எம்பெருமானிட்டவழக்கு என்றபடி.

பாபங்களின் பலன்களை யநுபவிக்குமிடமான நரகமும், புண்யங்களின் பலன்களை யனுபவிக்குமிடமான ஸ்வர்க்கம் முதலியலோகங்களும் எம்பெருமானிட்ட வழக்கு என்கிறது இரண்டாமடி. வான்—சிறந்த என்றபடி. நரகு—நரகஃ என்ற வடசொற்சிதைவு.

மன்பல்லுயிர்களுமாகி = புண்யபாப ரூபகருமங்களைச் செய்பவர்களும், பிறகு அவற்றின் பலன்களை யனுபவிப்பவர்களுமான உயிர்களும் அவனிட்ட வழக்கு என்கை. மன் என்றது ஆத்மாக்களின் நித்யத்வத்தைச் சொன்னபடி. பல் என்றது அவர்களின் எண்ணிறந்தமையைச் சொன்னபடி.

பலபலமாயமயக்குக்களால்இன்புறு மிவ்விளையாட்டுடையான் = "வணங்குந்துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி, அவையவை தோறு அணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்திபரப்பிவைத்தாய்" (திருவிருத்தம்) என்கிறபடியே பலவகைப்பட்ட உபாயங்களையும் வேறு வேறு மதங்களையும் நானாவகைத் தெய்வங்களையுமுண்டாக்கி வைத்து இங்ஙனே லீலாரஸங் கொண்டாடுகின்ற எம்பெருமானுடைய லீலைகளை யனுபவிக்கப் பெற்றதனால் ஒரு கிலேசமுமுடையேனல்லேன் என்றாராயிற்று.

"இன்புறு மிவ்விளையாட்டுடையான்" என்றவிடத்து "லோகவத்து லீலாகைவல்யம்" என்ற ப்ரஹ்மஸூத்ரம் ஸ்மரிக்கத்தக்கது. .... (எ)

அல்லலிலின்பமளவிறந்தெங்கும் அழகமர்சூழொளியன் *
அல்லிமலர்மகள்போகமயக்குக்கள் ஆகியும்நிற்குமம்மான் *
எல்லையில்ஞானத்தன்ஞானமஃதேகொண்டேஎல்லாக்கருமங்களும்செய்
எல்லையில்மாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானோர்துக்கமிலனே. (அ)

அல்லல் இல் இன்பம்	வருத்தம் சிறிதுங் கலசாத ஆனந்தகுணம்
அளவு இறந்து	அளவில்லாமல் இருக்கப்பெற்று
எங்கும் அமர்	எங்கும் பரம்பின
அழகு சூழ் ஒளியன்	ஸௌந்தர்யத்தோடு சேர்ந்த லாவண்யத்தையுடையவனாய்,
அல்லி மலர் மகள்	தாமரைமலரில் தோன்றிய பெரிய பிராட்டியோடு
போகம்	ஆனந்தாநுபவத்தினாலுண்டாகிய
மயக்குக்கள் ஆகியும் நிற்கும் அம்மான்	வியாமோஹமே வடிவெடுத்திருக்கின்ற பெருமானாய்,
எல்லை இல் ஞானத்தன்	எல்லையில்லாத ஞான விளக்கத்தையுடையனாய்
ஞானம் அஃதே கொண்டு	அந்த ஞானத்தையே கருவியாகக் கொண்டு
கருமங்கள் எல்லாமும் செய்	காரியவுலகங்களை யெல்லாம் உண்டாக்குமவனாய்
எல்லை இல் மாயனை	எல்லையில்லாத ஆச்சரிய சேஷ்டிதங்களையுடையவனை
கண்ணனை	ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவை
தாள் பற்றி	திருவடிதொழுது
யான் ஓர் துக்கம் இலன்	நான் ஒரு துக்கமுமுடையேனல்லேன்:

* * * [அல்லலிலின்பம்] முன்னிரண்டடிகளால் — திருநாட்டில் எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிருப்பையும், பின்னடிகளால்—அவன் இந்நிலத்திற் செய்தருளுஞ் செயல்களையும் பேசி, இப்படிப்பட்ட எம்பெருமானையடையப் பெற்றதனால் எனக்கு யாதொரு துக்கமுமில்லையென்கிறார்.

ஸ்வர்க்கலோகத்தில் ஸுகமுண்டு என்றாலும், அது துக்கம் கலந்த ஸுகமேயல்லது நிஷ்க்ருஷ்டமான ஸுகமன்று; ஏனெனில்; "ஸ்வர்க்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:—ஸ்வர்க்கேபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர் நாஸ்தி நிர்வ்ருதி:" என்கிறபடியே, மற்றொருவன் புண்யபலன்களையனுபவித்து முடிந்தவாறே தலைகீழாகக் கீழே தள்ளப்படுவதைக் காணுமளவில் அனுபவிக்கின்ற இன்பமும் துன்பமாகவே தோற்றுமன்றோ. ஆதலால், அல்லலோடுகூடின இன்பமே சுவர்க்கம் முதலிய உலகங்களிலுமுள்ளதாம். திருநாட்டிலானந்தம் அப்படியன்றிக்கே நிஷ்க்ருஷ்டமான ஆனந்தமாயிருக்கும்படியை "அல்லலிலின்பமளவிறந்து" என்றதனால் கூறினர். இங்கே நம்பிள்ளையீடுகாண்மின்;—"ஸம்ஸாரிகளிற்போல து:க்கமிச்ரமாய்ப் பரிச்சிந்நமாயிராதே து:க்கஸம்பந்தரஹிதமாய் ஸுகைகதாநமாய் அபரிச்சிந்நமான ஆனந்தத்தையுடையவன்."

எங்குமழகமர் சூழொளியன்= திருநாடடங்கலும் வெள்ளங்கோத்துப் பெருகுகின்ற காந்தியையுடையவன் என்றபடி. அவயவசோபையென்றும் ஸமுதாய சோபையென்றும் அழகு இருவகைப்படும்; அவைடவே, ஸௌந்தர்யமென்றும் லாவண்யமென்றும் வழங்கப்பெறும். இங்கு, அழகு ஒளி என்றவிவற்றால் அவை விவக்ஷிதம். "எங்குமழகமர் சூழொளியன்" என்பதற்கு—திருவடி தொடங்கித் திருமுடியீறாக ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனி நோக்குமளவில் 'இங்கே அழகு குடிகொண்டது, இங்கே அழகு குடிகொண்டது' என்னலாம்படி ஒவ்வோரிடத்திலே பரிஸமாப்தமான அழகுடையவன் என்றும் பொருள் கூறுவர்.

இவ்வழகு காட்டிலெறித்த நிலாவாகாதபடி அனுபவிப்பார் உண்டென்கிறது இரண்டாமடி. புஷ்பத்திற் பரிமளந்தானே ஒருவடிவு கொண்டாற்போலேயிருப்பவளான பிராட்டியோடே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணி அதனுலுண்டாகிய ஆனந்தமே வடிவெடுத்தாற் போன்றுளன் எம்பெருமான்—என்றவாறு. இயற்கையான ஆனந்தத்திற்கு மேலே இதுவும் ஒரு பரமானந்தம். ஈடு:—"தன்னுடைய ஆனந்தத்துக்கு மேலே ச்ரிய:பதித்வத்தால் வந்த ஆனந்தத்தை யுடையனாயிருக்கும்."

எல்லையில்ஞானத்தன் = அந்தப் பிராட்டியோடு கலந்து பரிமாறுவதற்குப் பர்யாப்தமான ஞானபூர்த்தியை யுடையவன் என்றபடி. [ஞானமஃதே கொண்டே இத்யாதி.] பிராட்டியும் தானுமான சேர்த்தியிலே அவள் இங்கிதம் காட்ட அதை யுணர்ந்து அவளுடைய உகப்புக்காகப் பிரபஞ்சத்தைப் படைக்கின்றானெம்பெருமான் என்று ரஸோக்தியாக அருளிச் செய்கிறபடி. „𑌯𑌸𑍍𑌯𑌾 𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌮𑍁𑌖𑌂 𑌤𑌦𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌪𑌰𑌾𑌧𑍀𑌨𑍋 𑌵𑌿𑌧𑌤𑍍𑌤𑍇𑌽𑌖𑌿𑌲𑌂— "யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்." என்று ஆழ்வானும் ஸ்ரீஸ்தவத்திலருளிச் செய்தது இப்பாசுரம் நோக்கியே போலும்.

எல்லையில்மாயனைக்கண்ணனை= ஸங்கல்பரூப ஜ்ஞானத்தாலே ஸ்ருஷ்டி முதலிய ஸகலத்தையும் நிர்வஹிக்க வல்லவனாயிருந்துவைத்து, ஸ்ரீக்ருஷ்ணனாய் நேர்கொடுநேரே வந்து பிறந்து அனைவரையும் மோஹிப்பித்த பெருமானைப் பற்றினவெனக்கு ஒரு துக்கமுமில்லை யென்றாராயிற்று. .... (௫)

துக்கமில்ஞானச்சுடரொளிமூர்த்தி துழாயலங்கல்பெருமான் *
மிக்கபல்மாயங்களால்விகிர்தம்செய்து வேண்டுமுருவுகொண்டு *
நக்கபிரானோடயன்முதலாக எல்லாருமெவையும் * தன்னுள்
ஒக்கவொடுங்கவிழுங்கவல்லானைப்பெற்று ஒன்றும்தளர்விலனே. (௬)

துக்கம் இல் ஞானம்	அஜ்ஞானம் கலசாத ஞானத்தையுடையனாய்	அயன்	பிரமனும்
சுடர் ஒளி மூர்த்தி	மிகுந்த தேஜோரூபமான விக்ரஹத்தையுடையனாய்	முதல் ஆக	முதலாக
துழாய் அலங்கல் பெருமான்	திருத்துழாய் மாலையணிந்த பெருமானாய்,	எல்லாரும்	சேதநர்களெல்லாரையும்
மிக்க பல் மாயங்களால்	மிகப் பலவகைப்பட்ட ஆச்சரிய சக்திகளாலே	எவையும்	அசேதனங்களெல்லாவற்றையும்
வேண்டும் உருவு கொண்டு	இஷ்டமான உருவங்களைப் பரிக்ரஹித்து	ஒக்க	ஒரு சேர
விகிருதம் செய்து	விலக்ஷணசேஷ்டிதங்களைச் செய்யுமவனாய்,	தன்னுள் ஒடுங்க	தனக்குள்ளடங்குமாறு
நக்கபிரானோடு	நிகம்பரச் சாமியான சிவபெருமானும்	விழுங்க வல்லானை பெற்று	(பிரளய காலத்தில்) விழுங்கி ரக்ஷிக்கவல்லவனான எம்பெருமானை யடைந்ததனால்
		ஒன்றும் தளர்வு இலன்	சிறிதும் தளர்ச்சியுடையேனல்லேன்

* * * [**துக்கமில்ஞானம்.**] எவ்விதமான ஹேயமுமில்லாதவனாய் ஸர்வஜ்ஞனாய் மாசுமறுவற்ற தேஜோமய திவ்யரூபனாய், அதற்குமேலே திருத்துழாய் மாலையு

மணிந்து தன் பெருமையெல்லாம் தோற்ற விளங்குமவனாய், தன்னுடைய விசித்ர சக்திகளாலே தனக்கு விருப்பமான திவ்யரூபங்களைப் பரிக்ரஹித்து அற்புதமான திவ்ய சேஷ்டிதங்களைச் செய்து போருமவனாய், "நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும், தனிரொளியிமையவர் தலைவனுமுதலா யாவகையுலகமும் யாவருமகப்பட, நிலநீர்த்தீகால் சுடரிருவிசும்பும் மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மங்க, ஒரு பொருட் புறப்பாடின்றி முழுவது மகப்படக் கரந்து, ஓராலிலைச்சேர்ந்த எபபெருமாமாயன்" (திருவாசிரிய) என்கிறபடியே சிவன் பிரமன் முதலாய எல்லாரையும் மற்றுமெல்லாப் பொருள்களையும் பிரளயங் கொள்ளாமே திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்குமவனை எம்பெருமானை நான் அடையப் பெற்றதனால் ஒரு தளர்வு முடையே னல்லேன் என்றாராயிற்று.

இரண்டாமடியை "மிக்கபன்மாயங்களால் வேண்டுமுருவு கொண்டு விகிருதஞ் செய்து" என்று அந்வயிப்பது. விகிருதம் என்றது விலக்ஷண சேஷ்டைகள் என்றபடி. வட சொல்.

நககன் + பிரான், நக்கபிரான். நக்ந என்ற வடசொல் நக்கனெனத் திரிந்தது. .... (கூ)

தளர்வின்றியேயென்றுமெங்கும்பரந்த தனிமுதல்ஞானமொன்றாய் *
அளவுடையைம்புலன்களறியாவகையால் அருவாகிநிற்கும் *
வளரொளியீசனைமூர்த்தியைப் பூதங்களைந்தையிருசுடரை *
கிளரொளிமாயனைக்கண்ணனைத்தாள்பற்றி யானென்றும்கேடிலனே.

என்றும்	எக்காலத்திலும்
எங்கும்	எவ்விடத்திலும்
தளர்வு இன்றியே	ஆயாஸமில்லாமல்
பரந்த	வியாபித்திருக்குமவனாய்,
தனி முதல் ஞானம் ஒன்று ஆய்	அத்விதீயமாய் ஸமஸ்த காரணமான ஞானமே வடிவெடுத்தவனாய்,
அளவு உடை	அளவுபட்ட
ஐம்புலன்கள்	இந்திரியங்கள் ஐந்தினாலும்
அறியா வகையால்	அறியக் கூடாதபடி
அரு ஆகி நிற்கும்	நிரவயவஸ்வரூபனா யிருக்குமவனாய்,
வளர் ஒளி ஈசனை	வளர்கின்ற வொளியை யுடைய ஸ்வாமியாய்
மூர்த்தியை	விலக்ஷண விக்ரஹயுக்தனாய்
பூதங்கள் ஐந்தை	பஞ்சபூத நிர்வாஹகனாய்
இரு சுடரை	சந்த்ர ஸூர்ய நிர்வாஹகனாய்,
கிளர் ஒளி மாயனை	ஒளிபொருந்தி மேன் மேலும் கிளர்கின்ற ஆச்சர்ய சேஷ்டைகளை யுடையனை
கண்ணனை	கண்ணபிரானை
தாள் பற்றி	திருவடி தொழப்பெற்றதனால்
யான் என்றும் கேடு இலன்	யான் ஒருகாலும் கேடு உடையேனல்லேன்.

* * * [தளர்வின்றியே.] அனைவர்க்கும் அந்தராத்மபூதனான ஸ்ரீக்ருஷ்ணனைப் பற்றின நான் ஒரு அழிவையுடையேனல்லேனென்கிறார். "தளர்வின்றியே யென்று மெங்கும் பரந்த" என்றது எம்பெருமானுக்கு விசேஷணம். எல்லாக்

காலத்திலும் எல்லாவிடத்தும் தன்னுடைய ஸ்வாமித்வசக்திக்குத் தளர்த்தியில்லாத பூர்த்தியோடே வியாபித்திருக்குமவன் என்றபடி. "தனிமுதல் ஞானமொன்றாய்" என்றது—ஸகலப்ரபஞ்சஸ்ருஷ்டிக்கும வேறொருகருவி வேண்டாதபடி ஸங்கல்பரூப ஜ்ஞானமொன்றையே அத்விதீய ஸாதனமாகவுடையவன் என்றபடி.. தனிமுதல் என்பதையும் எம்பெருமானுக்கே அடைமொழியாக்குதலுமுண்டு. ....

செவி வாய் கண் மூக்குடலென்னும் ஐம்புலன்கள் அற்பவிஷயங்களை க்ரஹிக்கவல்லவையேயன்றி, அபரிச்சின்ந விஷயமான எம்பெருமானை க்ரஹிக்க முடியாதவை.. உழக்காலே கடலை முகக்க வொண்ணாதாப்போலே ஐம்புலன்களால் அறிய வொண்ணாதபடி அவற்றுக்கு அவிஷயமாயிருப்பன் என்கிறது இரண்டாமடியால். அளவுடையைம்புலன்களென்றது—அளவுபட்ட விஷயங்களை க்ரஹிக்கவே ஏற்பட்ட பஞ்சேந்திரியங்களென்றபடி.

சேதநா சேதநங்களோடே கலசியிருக்கச் செய்தேயும் அவற்றின் தோஷங்கள் தன்பக்கலில் தட்டாமல் ஒளிமல்கி யிருக்கும்படியைக் கூறுவது "வள்ரொளியீசனை" என்பது. அஸாதாரண திவ்ய விக்ரஹமுடைமை சொல்லுகிறது மூர்த்தியை என்று. .... (கo)

கேடில்விழுப்புகழ்க்கேசவனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
பாடலோராயிரத்துள் இவையுமோருபத்தும்பயிற்றவல்லார்கட்கு * அவன்
காடுநகரமும்நன்குடன்காண நலனிடையூர்திபண்ணி *
வீடும்பெறுத்தித்தன்மூவுலகுக்கும்தரும் ஒருநாயகமே. (கக)

- கேடு இல் — ஒருநாளுமழிவில்லாத
- விழு புகழ் — சிறந்த புகழையுடைய
- கேசவனை — எம்பெருமான் விஷயமாக
- குருகூர் சடகோபன் சொன்ன—;
- பாடல் ஓர் ஆயிரத்துள் — ஓராயிரம் பாசுரங்களினுள்ளே
- இவையும் ஒரு பத்தும் — இப்பதிகத்தை
- பயிற்ற வல்லார்கட்கு — ஓதவல்லவர்களுக்கு
- அவன் — அந்த எம்பெருமான்,
- காடும் நகரமும் — சிறியார் பெரியாரென்கிற வாசியின்றிக்கே அனைவரும்

- நன்குடன் காண — நன்றாகக் காணும்படி
- நலன் இடை ஊர்தி பண்ணி — பகவத் பாகவத விஷயத்தில் அடிமைச் செல்வத்தோடே நடக்கும்படி பண்ணி
- வீடும் பெறுத்தி — மோக்ஷானந்தத்தையும் அடைவித்து
- தன் மூஉலகுக்கும் — தன்னுடையதான மூவுலகங்கட்கும்
- ஒரு நாயகம் — ஏகாதிபதியாயிருக்கும் சிறப்பையும்
- தரும் — தந்தருள்வான்.

* * * [கேடில்விழுப்புகழ்.] இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். நித்யஸித்த கல்யாணகுண பூர்ணனான எம்பெருமான் விஷய

மாக ஆழ்வாரருளிச் செய்த ஆயிரத்தில் இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கட்கு உபயவிபூதி ஸாம்ராஜ்யமும் குறையற உண்டாம்படி எம்பெருமான் அநுக்ரஹம் செய்தருள்வன் என்றாராயிற்று.

பயிற்றவல்லார்—தாங்கள் ஓதுமவர்கள், பிறரை ஓதுவிக்குமவர்கள் என்ற இருவகைப் பொருளும் கூறுவர். .... (கக)

பத்தாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

திருவாய்மொழி மூன்றாம்பத்து முற்றுப் பெற்றது.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி

प्रादुर्भावानुभावात् परिजनविभवात् पावनालङ्क्रियत्वात्
जैत्रव्यापारयोगादघटितघटनाद्दैवसंभावनीयात् ।
[illegible]
[illegible] ॥

1. ப்ராதுர்ப்பாவாநுபாவாத். * சன்மம்பலபலசெய்து வெளிப்பட்டு * அடியார்களைக் காத்தற்பொருட்டுப் பலபல அவதாரங்களைச் செய்தருளுஞ் சீர்மையைச் சொன்னபடி.

2. பரிஜநவிபவாத். * குறைவில்தடங்கடல்கோளரவேறி—கறையணி மூக்குடைப்புள்ளைக்கடாவி.* திருவனந்தாழ்வானைப் பள்ளியாகவும் பெரிய திருவடியை ஊர்தியாகவுங் கொள்ளுகைமுதலான பரிஜந ஸம்ருத்தியைச் சொன்னபடி.

3. பாவநஅலங்க்ரியத்வாத். * மட்டவிழ் தண்ணந்துழாய் முடியானை * திருத்துழாய்மாலையாகிற பரிசுத்தமான அலங்காரமுடைமை சொன்னபடி.

4. ஜைத்ரவ்யாபாரயோகாத். * பரிவின்றி வாணனைக் காத்துமென்று இத்யாதி.* வாணாசுரனை ஆயிரந்தோளும் பொழிகுருதிபாயப் பங்கப்படுத்தின வெற்றித்தொழில் வல்லமையைச் சொன்னபடி.

5. அகடிதகடநாத். * வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுத்தவனை * பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்

இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்த அகடிதகடந ஸாமர்த்தியத்தைச் சொன்னபடி.

6. தேவபாவப்ரஸித்தே:. * தன் தெய்வநிலையுலகில் புகவுய்க்குமம்மான்.* தன்னுடைய அப்ராக்ருதமான தெய்வத்தன்மையை நிலவுலகத்தில் கீதோபதேசம் முதலியவற்றால் பிரசுரப்படுத்தினமையைச் சொன்னபடி.

7. ஆச்சர்யக்ரீடநத்வாத். * இன்புறு மிவ்விளையாட்டுடையானை * அற்புதமான ஜகத்வ்யாபாரங்களை லீலையாகக் கொண்டிருக்குந் தன்மையைச் சொன்னபடி.

8. ஸரஸிஜநிலயாநந்தநாத். * அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான். * பெரிய பிராட்டியாரைத் தான் உகப்பிப்பதும் அவளால் தான் உகப்பதுமான ஸாம்ராஜ்யம் சொன்னபடி.

9. சந்தவ்ருத்தே:. * வேண்டுமுருவு கொண்டு * இஷ்டமான திருவுருவங்களைப் பரிக்ரஹிக்குந் தன்மை சொன்னபடி.

10. ஐச்வர்யவ்யக்திமத்த்வாத். * தளர்வின்றியேயென்று மெங்கும்பரந்த இத்யாதி. * எல்லாவற்றிலும் அந்தராத்மாவாய் வியாபித்திருக்கை, ஸகலஜகத்காரணமாயிருக்கை, சேதநாசேதநங்களோடு கூடியிருக்கச் செய்தேயும் அவற்றின் தோஷங்கள் தன்பக்கலில் தட்டப்பெறாதிருக்கை முதலான சிறப்புடைமை சொன்னபடி. ஆக இப்படிப்பட்ட தன்மைகளினால், [கேசவம்] எம்பெருமானை. [அகசமநதநும்] பாவங்களைத் தீர்க்கும் திருமேனியை யுடையவனாக [வ்யாஜஹார] ஆழ்வார் இப்பதிகத்திலே அருளிச் செய்தாரென்றவாறு.

ஸௌந்தர்யஸ்ஜகந்நிர்மிதஜகத்ஸௌபாக்யயோகாத்
ஸ்வேச்சாஸேவ்யாக்ருதித்வாத் நிகிலதநுதயா நாதநாஹதகாந்த்யா।
வ்யாப்த்யா ஸேவ்யத்வாதாநாத் வ்யக்ததிவ்யத்வமுக்த்யா
ஸர்வாத்ரஸாம்யாதநந்தம் வ்யாஜஹார த்ருதீயே॥

மூன்றாம்பத்தில் ஒவ்வொரு திருவாய் மொழியினுடையவும் ப்ரமேயத்தை ஸங்க்ரஹித்துக் கூறுவது இந்த ச்லோகம்.

[1. ஸௌந்தர்யபூம்நா.] * முடிச்சோதியில் அழகர் வடிவழகிலே யீடுபட்டமை. [2. தநுவிஹித ஜகத்க்ருத்யஸௌபாக்யயோகாத்.] * முந்நீர்ஞாலத்தில் தன்திருமேனியில் நின்றும் ஜகத்ஸ்ருஷ்டி முதலியவற்றைப் பண்ணினமை சொன்னபடி. [3. ஸ்வேச்சா ஸேவ்யாக்ருதித்வாத்.] * ஒழிவில் காலத்தில் தாம் நினைத்தபடியே ஸௌலப்யனைத் திருமலையில் ஸங்கிஹிதனனமை சொன்னபடி. [4. நிகிலதநுதயா] * புகழுநல்லொருவனில் ஸர்வசரீரகத்வம் சொன்னபடி. [5. உந்மாததாநார்ஹகாந்த்யா] * மொய்ம்மாம்பூம்பொழிலில்

"எம்மானைச் சொல்லிப்பாடி யெழுந்தும் பறந்தும்" இத்யாதியிற்படியே அடியார்களைப் பிச்சேற்றவல்ல அழகுடைமை சொன்னபடி. [6. ஸப்யார்ச்சாவையவத்வாத்] * செய்யதாமரைக் கண்ணனில் "நெஞ்சினால் நினைப்பான்யவனவனாகும்" என்றதில் நோக்காக அர்ச்சாவதார ஸௌலப்யமநுஸந்தித்தமை சொன்னபடி. [7. குணரஸிகருணோத்கர்ஷணாத்] * பயிலுஞ்சுடரொளியில், தன்னுடைய குணங்களில் ஈடுபட்ட பாகவதர்களை ஸர்வோத்க்ருஷ்டராகப் பண்ணுமவனெம்பெருமான் என்றதைச் சொன்னபடி. [8. அக்ஷக்ருஷ்ட்யா.] * முடியானேயில், ஸகல இந்திரியங்களையும் ஆகர்ஷிக்குமவனென்றதைச் சொன்னபடி. [9. ஸ்துத்யத்வாத்.] * சொன்னால் விரோதநதில், எம்பெருமானொருவனே துதிக்க வுரியவனென்றதைச் சொன்னபடி. [10. பாபபங்காத்.] * சன்மம்பலபலவில், குறைமுட்டுப் பரிவிடர் துயர்துன்பமல்லல் துக்கந்தளர்வு கேடுகளில்லாமையைச் சொன்ன முகத்தால் பாபங்களைப் போக்குமவனென்றதைச் சொன்னபடி.—ஆக ஒவ்வொரு பதிகத்திலும் இத்தகைய தன்மைகளை அருளிச்செய்ததனால் மூன்றாம்பத்தில் எம்பெருமானுடைய ஸாஹஸாஹமத்தாகவும் சொல்லிற்றாயிற்று. அநந்தகுணநிதி திவ்யரூபனென்று ப்ரதிபாதிக்கையிலே மூன்றாம்பத்துக்கு முழுநோக்கிறே. .... (*)

காப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸத்யோவதீர்ய ஸஹஸா விபவை: ஸ்வகீயம்
ஸந்த்ருஶ்யதாமவிரதம் ஸ்வகுணானனந்தாந் ।
ஸ்வாத்மா ஊதி: ஸ்வசரிதாநுகதயா நகிஞ்சித்
ஊனம் உபேத்ய திதராம் ஸம்ஜகாத ॥

(கருத்து.) எம்பெருமான் பலகாலும் இந் நிலவுலகில் திருவவதரித்துத் தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் திருக்கல்யாண குணகணங்களையும் ஸாக்ஷாத்கரிப்பிக்கும்படியை ஆழ்வார் பேசித்துதித்து, இவ்வகையாலே தாம் க்ருதார்த்தராகப் பெற்றமையால் தமக்கு யாதொரு குறையுமில்லையென்னுமிடத்தை மூன்றாம் பத்தின் பத்தாந் திருவாய்மொழியில் கூறிக் களித்தாரென்றதாயிற்று. .... (*)

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும்
நன்மையுடை மால்குணத்தை நாடோறும்—இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றே னெனுமாறனை யுலகீர்!
நாத்தழும்ப வேத்துமொரு நாள்.

பதவுரை.

தான் பல சன்மம் செய்து	தானாகவே பல திருவவதாரங்களைப் பண்ணி
இ உலகு	இந் நிலவுலகத்தை
அளிக்கும்	காத்தருளுகையாகிற
நன்மை உடை	நன்மையை யுடையவனான
மால்	எம்பெருமானுடைய
குணத்தை	திருக்கல்யாண குணங்களை
இம்மையிலே	இப்பிறப்பிலே
நாள் தோறும்	அநுக்ஷணமும்
ஏத்தும் இன்பம்	புகழ்ந்து பேசும்படியான இன்பத்தை
பெற்றேன் எனும்	பெற்றேனென்று அருளிச் செய்த
மாறனை	ஆழ்வாரை
உலகீர்	உலகர்களே!
ஒரு நாள்	ஒருநாளாகிலும்
நா தழும்ப	நாக்குத் தடிக்கும்படி
ஏத்தும்	நீங்கள் துதிப்பீர்களாக.

எம்பெருமான், கருமங்களுக்கு வசப்படாதவனாயினும் கருணைக்கு வசப்பட்டவனாதலால் அது காரணமாக “அஜாயமானோ பஹுதா விஜாயதே” என்றும், “எந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்” என்றும் சொல்லுகிறபடியே பலபல திருவவதாரங்களைச்செய்து இவ்வுலகத்தைக் காத்தருள்கின்றானென்பது முதலான அவனுடைய திருக்கல்யாணகுண ஸம்ருத்தியை இம்மையிலேயே வாயாரப்புகழ்ந்து பேசும் பாக்கியத்தை யான் பெற்றேனென்று பேரானந்தம் பொலியவருளிச்செய்த நம்ஆழ்வாரை, ஸம்ஸாரிகளே! நீங்கள் ஒருநாளாகிலும் நன்கு துதிப்பது நன்று என்றருளிச்செய்தாராயிற்று. .... (௩௦)

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்தின் அடிவரவு.

1. முடிகட்டுரைக்கில் பரஞ்சோதி மாட்டா வருந்தா தொழுவார் வாழ்த்து வார் மாருணை, மழுங்கா மறையா வியப்பாய முந்நீர்.

2. முந்நீர் வன்மா கொல்லா சூழ்ச்சி, வந்தாய் கிற்பன் என்னொன்று மேவு, கூவித் தலைப்பெய் உயிர்களொழிவில்.

3. ஒழிவி லெந்தை யண்ண லீசன், சோதி வேங்கடம் சுமந்து குன்றம், ஓயும் வைத்தநாள் தாள்பரப் புகழும்.

4. புகழுங் கூவுமா பங்கயச் சாதி, அச்சுதன் பாலெஃகோ வானவ ரொளி மணி, கண்ணனை யாவையுங் கூடிவண் மொய்ம்மா.

5. மொய்ம்மாந் தன்கடல் மலையை வம்பவிழ், சாது மனிசரும் நீர்மையில் வார்புனல், அமரர் கருமமும் தீர்ந்தவடி செய்ய.

6. செய்ய மூவர் பரவி வைம்மின், திரியும் தோற்ற வெழுமைக்குந் துயரமே. கஞ்சமா கடல்வண் கண்கள் பயிலும்.

7. பயிலு மாளும் நாதனை யுடையார், பெருமக்க ளளிக்கும் சன்மசன்ம நம்பனை, குலந்தாங் கடியார்த்த வடியோங்கு முடியான்.

8. முடியான் நெஞ்சமே வாசகம் கைகளால், கண்களால் செவிகளால் அவியே கோலமே, தொல்வனைப் பொருந்திய புலப்புசீர் சொன்னால்.

9. சொன்னா லுளனா வொழிவொன் றென்னை, கொன்னுயிர் வாய்மின் வேயுவோயின், வாய்கொண்டு நின்றுநின் றேற்குஞ் சன்மம்.

10. சன்மங் குறை புட்பப் பவிடர் ஆயர் ஆன்பாலை அந்தகன் அனாது கேடிலொருநாயகம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும்
நன்மையுடை மால்குணத்தை நாடோறும்—இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றே னெனுமாறனை யுலகீர்!
நாத்தழும்ப வேத்துமொரு நாள்.

பதவுரை.

தான் பல சன்மம் செய்து	தானாகவே பல திருவவதாரங்களைப் பண்ணி	நாள் தோறும்	அநுக்ஷணமும்
இ உலகு	இந் நிலவுலகத்தை	ஏத்தும் இன்பம்	புகழ்ந்து பேசும்படியான இன்பத்தை
அளிக்கும்	காத்தருளுகையாகிற	பெற்றேன் எனும்	பெற்றேனென்று அருளிச் செய்த
நன்மை உடை	நன்மையை யுடையவனான	மாறனை	ஆழ்வாரை
மால்	எம்பெருமானுடைய	உலகீர்	உலகர்களே!
குணத்தை	திருக்கல்யாண குணங்களை	ஒரு நாள்	ஒருநாளாகிலும்
இம்மையிலே	இப்பிறப்பிலே	நா தழும்ப	நாக்குத் தடிக்கும்படி
		ஏத்தும்	நீங்கள் துதிப்பீர்களாக.

எம்பெருமான், கருமங்களுக்கு வசப்படாதவனாயினும் கருணைக்கு வசப்பட்டவனாதலால் அது காரணமாக "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றும், "எங்கின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்" என்றும் சொல்லுகிறபடியே பல பல திருவவதாரங்களைச்செய்து இவ்வுலகத்தைக் காத்தருள்கின்றானென்பது முதலான அவனுடைய திருக்கல்யாணகுண ஸம்ருத்தியை இம்மையிலேயே வாயாரப்புகழ்ந்து பேசும் பாக்கியத்தை யான் பெற்றேனென்று பேரானந்தம் பொலியவருளிச்செய்த நம்ஆழ்வாரை, ஸம்ஸாரிகளே! நீங்கள் ஒருநாளாகிலும் நன்கு துதிப்பது நன்று என்றருளிச்செய்தாராயிற்று. .... (௩௦)

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.




திருவெள்ளக்குளம் ஸ்ரீநிவாசப்பெருமாள்



திருக்காவளம்பாடி கண்ணன்



காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தாம் ஸ்தாபித்த நம்பிள்ளை ஸந்நிதியில் நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளின் கீழ் சேவை சாதிக்கும் திருக்கோலம்.



காஞ்சீ ப்ரதிவாதிபயங்கரம் மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தாம் ஸ்தாபித்த நம்பிள்ளை ஸந்நிதியில் நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளின் கீழ் சேவை சாதிக்கும் திருக்கோலம்.

Released By Maaran’s Dog Toronto, Canada